அழகான தவறு நீ.....

பகுதி – 1.

சென்னையின் மத்தியில், விஐபிக்கள் மட்டுமே குடி இருக்கும் பகுதியில், கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்திருந்தது அந்த அழகான வீடு. அதை வீடு எனச் சொல்வதை விட, பங்களா எனச் சொல்வதை விட, இரண்டடுக்கு மாளிகை..., என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

சேகர் டெக்ஸ்டைல்ஸ்..., சேகர் ஜவுளி மாளிகை, சேகர் எலக்ட்ரானிக்ஸ்..., சேகர் ஸ்டோர்ஸ்..., என சென்னையில் கொடிகட்டிப் பறக்கும் முக்கிய புள்ளியின் வீடென்றால் சும்மாவா...?

காலை நேர பரபரப்பு அந்த வீட்டை தொற்றிக் கொண்டிருந்தது. வீட்டைச் சுற்றிலும் இருந்த புல்வெளிகளை மூவர் சீர்படுத்திக் கொண்டிருக்க, தோட்டத்தில் இருவர் வேலை செய்ய, அங்கே பூத்திருந்த பூக்கள், அந்த இடத்தையே ரம்யமாக்கியது.

தோட்டத்தைச் சுற்றி அமைக்கப் பட்டிருந்த நடை பாதையில், வியர்வை வழிய ஓடிக் கொண்டிருந்தான் அந்த வீட்டின் இரண்டாம் வாரிசு குணா என அனைவராலும் அழைக்கப்படும் குணசேகர்.

"மாட்டேன்..., குளிக்க மாட்டேன்..., ஸ்கூல்க்கு போக மாட்டேன்...", தன் காதில் வந்து மோதிய வார்த்தைகளைக் கேட்டவனின் ஓட்டம் தடைபட, 'இவனுக்கு தினமும் இதே வேலையா போச்சு...', அலுப்பாக எண்ணியவன் மீண்டும் ஓட்டத்தை தொடர்ந்தான்.

இது அந்த வீட்டில் வழக்கமான ஒன்றுதான் என்பதை, வேலை செய்பவர்களின் வேலை தடைபடாததில் இருந்தே, மற்றவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

"போ..., என்னை தொடாதே..., நான் வர மாட்டேன்...", வழக்கத்துக்கு மாறாக, ராஜாவின் குரல் அந்த வீட்டையே அதிர வைத்துக் கொண்டிருந்தது.

'ஏன் இப்படி...?', தன் அறையில் கிளம்பிக் கொண்டிருந்த அந்த வீட்டின் மூத்த வாரிசு, தனா என அனைவராலும் அழைக்கப்படும் தனசேகர்..., வேகமாக சட்டை பட்டனை போட்டவாறு அறையில் இருந்து வெளியேறினான்.

"இங்கே என்ன சத்தம்...? ராஜா..., ஏன் இப்படி கத்துற? வள்ளி..., ராஜா ஏன் இப்படி அழறான்?", காலை நேர இதம், தினமும் பறிபோவதால் உண்டான எரிச்சல் அவன் குரலில் அப்பட்டமாய் தெரிந்தது.

"ஐயா..., தம்பி பள்ளிக்கூடம் போக மாட்டேன்னு அடம் பண்றார்...", சற்று நடுக்கமாகவே உரைத்தாள்.

"ம்ச்..., இதென்ன வர வர புதுசா...? இதைச் சொல்லத்தான் நீ இங்கே இருக்கியா? முதல்ல அவனைக் கிளப்பு...", அவளிடம் சாடினான்.

"நான் போக மாட்டேன் போ...", ராஜா முரண்ட, "என்னது போக மாட்டியா..., உன்ன...", வேகமாக அவனை அடிக்கப் பாய, சட்டென ராஜாவை தன் பக்கம் இழுத்துக் கொண்ட வள்ளி, "ஐயா நீங்க போங்க..., நான் தம்பியை கிளப்பறேன்...", அவனிடம் மன்றாடினாள்.

"இல்ல...", சிறுவன் மேலே என்ன சொல்லியிருப்பானோ..., வேகமாக அவனை கைகளில் அள்ளிக் கொண்டவள், அங்கே இருந்த மற்றொரு அறைக்குள் சென்று மறைந்தாள்.

அவள் முதுகை வெறித்த தனாவுக்கு..., மனதுக்குள் ஒரு பாரம் ஏறி அமர்ந்து கொண்டது மட்டும் உண்மை.

'இவனை எப்படி வளர்க்கப் போகிறோம்...?', தன்னை சீராட்டி, பாராட்டி வளர்த்த தாயும், தோள்தட்டி, உற்சாகப்படுத்தி, தொழில் கற்றுக் கொடுத்த தந்தையும் கண்களில் நிழலாட, அவன் இமைகள் நனையும் உணர்வு. எப்பொழுதும் அவன் மனதில் பூதாகரமாக எழும் வினா, இன்றும் எழுந்து அவனை மிரட்டியது.

ஆனாலும்..., அங்கே சோர்ந்து அமர முடியாமல், அவனுக்காக காத்திருக்கும் வேலைகள் நினைவிற்கு வர, தான் விட்டுவந்த வேலைகளைப் பார்க்கப் போனான்.

அதன் பிறகும், ராஜாவின் அடாவடி, புலம்பல்கள், அடம்..., என அனைத்தையும் கடந்து, அவனுக்கு யூனிஃபாமை அணிவித்த வள்ளி, சாப்பாட்டு மேஜைக்கு கூட்டி வந்து அமர வைத்தாள். அப்பொழுதும், இருக்கையில் அமராமல் நழுவி இறங்க முயன்றவன், ஓடுவதிலேயே குறியாக இருந்தான்.

தன் காலை ஒட்டத்தை முடித்துவிட்டு, சுலோ பாட்டி கொடுத்த காபியை நிதானமாக அருந்திக் கொண்டிருந்த குணா, அப்பட்டமாக முகத்தில் எரிச்சலைத் தேக்கியவாறு, ராஜாவைத்தான் முறைத்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வையை உணர்ந்த சுலோ பாட்டிக்கு, இன்று இப்பொழுது என்ன நடக்கப் போகிறதோ? கவலை தொற்றிக்கொள்ள, சற்று முரடனான அவனிடம் எதையும் சொல்ல முடியாமல் கிச்சனுக்கு திரும்பி நடந்தார்.

தன் முதுமையின் காரணமாக ராஜாவின் அடாவடிகளுக்கு ஈடுகொடுக்க அவரால் முடியவில்லை, எனவே சற்று ஒதுங்கிப் போனார். இல்லையென்றாலும் தான் ராஜாவிடம் பேசுவதைப் பார்த்தாலே, 'அவனுக்கு செல்லம் கொடுத்து கெடுக்காதீங்க...' சொல்லி வைத்தாற்போல் தனாவும், குணாவும் அவரிடம் எகிறுவார்கள் என்பதால், ராஜாவை சமாதானம் செய்யச் செல்லவில்லை.

ராஜாவின் பிடிவாதத்தைப் பார்த்த தனா தன் கோபத்தை கட்டுபடுத்திக் கொள்ள, அவ்வளவு நேரமாக ராஜாவின் அடாவடியை கவனித்துக் கொண்டிருந்த குணா, "டேய்..., சொன்னால் கேக்க மாட்டியா...? எவ்வளவு நேரம்தான் அவளும் பாப்பா...?", விருட்டென இருக்கையில் இருந்து எழுந்து வந்தவன், ராஜா சுதாரிக்கும் முன்பே, அவன் கன்னத்தில் அறைந்தே விட்டான்.

"சின்னையா...?", வள்ளி தேம்ப, சுலோ பாட்டியோ.., "தம்பி...", பதறிப்போய் குரல் கொடுத்தவர், அவனது உக்கிர பார்வையில் கப்பென வாய் மூடிக் கொண்டார். ராஜாவோ விக்கித்துபோய் ஒரு நொடி நின்றவன், அடுத்த நொடி, தன் முழுத் தொண்டையும் திறக்க கத்தி கூப்பாடு போட்டான். " குணா..., என்னடா பண்ற...?", தனா, தம்பியை அதட்டினான். சற்று முன்பு தானும் இதைத்தான் செய்ய இருந்தோம் என எண்ணியவனுக்கு, மனம் கலங்கிப் போனது.

"பின்ன..., இவனை கொஞ்சச் சொல்றியா? வெளியே தலை காட்ட முடியலை..., ச்சே..., என்ன வாழ்க்கைன்னு வெறுப்பா இருக்கு...", நெருப்பாய் அவன் வார்த்தைகளை உமிழ, ராஜாவோ பெருங் குரலெடுத்து அழவே துவங்கி விட்டான்.

கிச்சனுக்குள் இருந்த சுலோச்சனா பாட்டி கைகளைப் பிசைய, வள்ளியும் அழுகைக்குத் தயாராக, ராஜாவோ..., கேட்பாரற்று கதறிக் கொண்டிருந்தான்.

"வள்ளி..., அவனை கூட்டி போ...", தனா உத்தரவிட, இது போதும் என அவனை கிட்டத்தட்ட இழுத்துக்கொண்டு அவன் அறைக்குள் நுழைந்தாள்.

அவர்கள் செல்லவே, " டேய்..., அவன் குழந்தைடா..., அவன்கிட்டே உன் வெறுப்பை காட்டற..?", தனா குமுற, "ஆமா..., பொல்லாத குழந்தை..., நீதான் மெச்சிக்கணும்...", வெறுப்பை உமிழ்ந்துவிட்டு விடு விடுவென படிகளில் ஏறினான் குணா.

"ராஜா..., அழாதே..., அடம் பிடிக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்கேன் தானே...,", வள்ளி அவனை சமாதானம் செய்ய முயன்றாள்.

"ஆ..., அம்மா...", அவன் அலற, எங்கே மீண்டும் குணா வந்துவிடுவானோ என அவள்தான் பயந்து போனாள்.

"ராஜா..., குணா ஐயா வந்துடப் போறாங்க..., மெதுவா...", அவள் வயதுக்கு, அவளுக்கு அதைத்தான் சொல்ல முடிந்தது.

அந்த பேச்சு அவனை சற்று தேக்கினாலும், முழுதாக அவனை அடக்கவில்லை. அவளை அவன் அடிக்க, அந்த அடிகளைக் கூட சுகமாகவே தாங்கிக் கொண்டாள் அந்த பத்து வயது சிறுமி.

"என் செல்லம் இல்ல..., பட்டுல்ல..., நீ செய்தது தப்பு தானே..., ஏன் இப்படி பண்ற...? ஸ்கூல்க்கு போகணும் தானே...", அவள் அவனுக்கு புரிய வைக்க முயல, அவளது ஸ்கூல் என்ற வார்த்தை அவனை மீண்டும் அழத் தூண்டியது.

அவள் வயதுக்கு ஏன் பள்ளி செல்ல மறுக்கிறாய் என அவளுக்கு கேட்கத் தெரியவில்லை. வள்ளி வேறு யாரும் இல்லை..., தனாவின் வீட்டில் மேல் வேலை செய்யும் லட்சுமியின் மகள்தான். வள்ளி..., அரசாங்க பள்ளியில், ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு காலையில் ஒன்பது மணிக்குதான் பள்ளிக்கூடம் என்பதால், ராஜாவை பள்ளிக்கு அனுப்பிய பிறகுதான் அவள் பள்ளிக்கு கிளம்பிச் செல்வாள்.

பெண் பிள்ளைகளுக்கென்றே பொறுப்பு தானாக வந்துவிடுமா? இல்லையென்றால், அவளிடம் கொடுக்கப்படும் பொறுப்பை சரியாகச் செய்தே ஆகவேண்டும் என கடவுள் அவர்களுக்கு மட்டும் தனியான வல்லமை கொடுத்திருக்கிறானா? இல்லையென்றால்...., தன்னை தான்தான் கவனித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையில், அதற்கேற்ப அவர்கள் பழகி விடுகிறார்களா? ஏதோ ஒன்று....

வள்ளியிடம் எதேச்சையாக ஒரு நாள் ராஜாவின் பொறுப்பு ஒப்படைக்கப்பட, அடுத்த நாள் முதல், அவளாகவே அந்த வேலையை செய்யத் துவங்கி விட்டாள்.

வேலைக்காரர்களை ஒரு அளவுக்கு மேல் அனுமதிக்காத அந்த வீட்டில், வயோதிகம் காரணமாகவும், பதினைந்து வயதில், இளம் விதவை பட்டத்தோடு அவர்கள் வீட்டுக்கு வந்த சுலோச்சனா ஒரு விதி விலக்கென்றால்..., ராஜாவுக்காக என்று வள்ளியும் அங்கே கொஞ்சம் சுதந்திரமாக அனுமதிக்கப் பட்டாள்.

அதுவும், அவன் அறை அளவுக்கு மட்டுமே. குணா அவளைக் கண்டாலே எரிந்து விழுவான..., எனவே அவனென்றால் அவளுக்கு சற்று நடுக்கம்தான். தனா அவளிடம் இணக்கத்தையோ, கோபத்தையோ காட்டுவதில்லை என்பதால..., அவனிடம் பயம் கலந்த மரியாதை உண்டு.

தம்பியை கண்டிக்க முடியாத தன்மையும், ராஜாவின் அழுகையும் சேர்ந்து கொள்ள, பசியே மரத்துப் போனது தனாவுக்கு.

இருக்கையில் இருந்து அவன் எழ முயல, வேகமாக அங்கே வந்த சுலோச்சனா, " ஐயா..., உக்காருய்யா..., சாப்புட உக்காந்துட்டு

எழுந்து போறியே..., ஒருவா சாப்பிடுய்யா...", பல வருட பழக்கம், உரிமையாய் அவன் கை பிடித்து அமர வைத்தது.

"எனக்கு வேண்டாம் சுலோம்மா..., பசியே இல்லை....", மறுப்பாக உரைத்தான்.

"அதெப்படி பசியில்லாமல் போகும்னேன்..., சாப்பிடு...", தட்டை வைத்தவர், அதில் மூன்று இட்லிகளை எடுத்து வைத்துவிட்டு, சாம்பார், சட்டினி, இட்லி பொடி என அனைத்தையும் வைத்தார்.

அவனுக்கோ..., சாப்பிட முடியாமல் ராஜாவின் அழுகை தேக்கியது. "ராஜா...", அவன் தயங்க, " அதை அந்த வள்ளி பொண்ணு பாத்துக்கும். வேண்ணா நான் போய் இட்லி கொடுத்துட்டு வரேன்..., ஆனா..., நீ சாப்டுதான் போகணும்...", கண்டித்தவர், மற்றொரு தட்டில் ஒரு இட்லியும், சாம்பாரையும் ஊற்றிக்கொண்டு அவனைத் தேடிச் சென்றார்.

"போ..., நீ போ..., அம்மா...", அவன் பெருங்குரலை விடாமல் தொடர, சுலோச்சனா பாட்டி பதறிப் போனார்.

"ஆத்தாடி..., ஐயா..., என் ராசா..., சத்தம் போடாதையா..., அழுவாதையா...", பாட்டி அவனை சமாதானப்படுத்த, ராஜாவின் அம்மா என்ற அழுகை தனாவை மனதுக்குள் துடிக்கச் செய்தது.

முயன்று இட்லிகளை காலி செய்தவன், வேகமாக கை கழுவிவிட்டு, "ராஜா...", என்ற அழைப்போடு அங்கே பிரசன்னமானான்.

அவனைக் காணவே..., ராஜா, சட்டென வள்ளியின் முதுகின் பின்னால் ஒளிந்தவன், அவனை பயப் பார்வை பார்த்தான். எங்கே அவனும் தன்னை அடித்துவிடுவானோ என்ற பயத்தில், அவன் அழுகை கூட சட்டென நின்று போனது.

'வாடா...', கை நீட்டி, பார்வையால் அவனை அழைக்க, வள்ளியின் முதுகின் பின்னால் இருந்து எட்டிப் பார்த்தவன், மறுப்பாக தலை அசைத்தான்.

அவனது பயப்பார்வையும், மறுப்பும்..., தனாவை கொன்று கூறு போட, ' எப்படி இருக்க வேண்டியவன்...' நினைவே அவன் கால்களை துவளச் செய்ய, அவன் உயரத்துக்கு கீழே மண்டியிட்டான்.

"வா ராஜா...", வார்த்தையாலும் அழைக்க,

"ஐயா கூப்பிடுறாங்கல்ல போ...", வள்ளி அவன் கை பிடித்து முன்னால் இழுத்தாள்.

தனாவின் முகத்தில் என்ன கண்டானோ..., தாவி வந்து அவன் கழுத்தை கட்டிக் கொண்டான்.

தானும் அவனை வாரி அணைத்துக் கொண்டவன், சற்று நேரம் எதையும் பேசும் நிலையில் இருக்கவில்லை. தனாவின் கண்கள் தாமாக கலங்க, அதைப் பார்த்த சுலோ பாட்டி, "எய்யா.., என்ன இது, சின்ன புள்ளையாட்டம் கண்ணெல்லாம் கலங்கிட்டு..., அவன் குழந்தையா..., சொன்னா கேட்டுக்குவான்...", தன் கண் கலங்குவதை பொருட்படுத்தாமல் உரைக்க,

அவன் தோளில் சாய்ந்திருந்த ராஜா, நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தவன், தன் பிஞ்சுக் கையால் அவன் கண்ணீரை துடைத்தான்.

"நான் ஸ்கூல் போறேன்...", சின்னக் குரலில் என்றாலும், தனாவின் அழுகை பிடிக்காமல் வேகமாக உரைத்தான். ராஜாவின் இந்த புரிதலும் தனாவை உடைக்க, "ராஜா...", அவனை மீண்டுமாக இறுக்கியவன், சற்று குலுங்கியே விட்டான்.

அதைப் பார்த்த ராஜா..., மீண்டும் அழுகைக்குத் தயாராக, "தனா..., புள்ள மறுபடியும் அழப்பாக்கான் பார். கண்ணைத்

துடை..., பள்ளிக்கூடத்துக்கு நேரமாவுது. முதல்ல பானுவைப் பாத்துட்டு, கிளம்பி போ...", கிட்டத்தட்ட அவனை கைபிடித்து எழுப்பாத குறையாக உலுக்கினார்.

"ஆண்டவா..., ஏன் இந்த புள்ளைங்களை சோதிக்க...", வாய் விட்டே புலம்பியவர், அடுத்து சொல்ல வந்த வார்த்தைகளை தன் நிலை கருதி அடக்கிக் கொண்டார்.

என்னதான் அந்த வீட்டில் ஒன்றாக கலந்துவிட்டாலும், எந்த சூழலிலும் தன் இடத்தை மறந்துவிடக் கூடாது என்பது வாழ்க்கை அவருக்கு கற்றுக் கொடுத்த பாடம்.

தன்னை மீறி தான் உடைந்ததை உணர்ந்த தனாவும், சட்டென தன்னை மீட்டுக் கொண்டவனாக, ராஜாவை கைகளில் அள்ளிக்கொண்டு எழுந்தவன், " நான் முதல்ல அம்மாவை பாத்துட்டு வரேன். நீங்க இவனுக்கு இட்லியை ஊட்டுங்க...", அவனை தூக்கி வந்து, சாப்பாட்டு மேஜை மேல் அமர்த்திவிட்டு விலகிச் சென்றான்.

அவன் செல்லவே..., ' இந்த காலத்தில் இப்படி ஒரு புள்ளையா...?', சுலோ பாட்டியால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. அதற்காக, அவன் எத்தனைநாள் இப்படியே தனிமரமாக இருக்க முடியும்? என எண்ணியவருக்கு, அதற்கான விடைதான் இல்லை.

ஒரு பெருமூச்சை வெளியிட்டவர், தன் வேலையைப் பார்க்கப் போனார். பானுமதி அம்மாவுக்கு காலை வேளை கஞ்சி கொடுக்க வேண்டி அதை தயாரிக்க முனைந்தார்.

ராஜாவுக்கு இதற்குமேல் அடம் பிடிக்கும் தைரியம் இருக்கவில்லையா? அல்லது தனாவின் அழுகை அவனை தேக்கியதா? ஏதோ ஒன்று அவனை அமைதியாக இருக்கச் செய்ய, இட்லியை வள்ளி கொடுக்க, மறுக்காமல் அதை உண்டு முடித்தான்.

தாயை காணச் சென்ற தனாவின் கால்கள், அவர் அறைக்கு முன்னால் சற்று தேங்கியது.

அவரை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? அவர் கேள்விக்கு எத்தனை நாள் மறுப்பாகவே பதில் அளிக்க முடியும்? மரணத்தின் பிடியில் இருக்கும் அவரை கஷ்டப்படுத்தவும் அவனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

அதற்காக..., அவர் சொல்லுவதை தன்னால் செய்துவிட முடியுமா? எண்ணியவனுக்கு பெருமூச்சு ஒன்று எழுந்தது மட்டும் உண்மை.

கதவைத் திறந்தவன், தயக்கமாக உள்ளே நுழைய, ஒரு நோயாளி இருக்கும் அறைக்கே உரிய மருந்தின் நெடியும், வெறுமையான சூழலும், மாத்திரைகள் அடங்கிய டிரே என அவனை வரவேற்க, அறைக்கு நடுவில், படுக்கையில், எலும்புக் கூட்டுக்கு, போர்வை போர்த்தியது போல், கசங்கிபோய் படுத்திருந்த தாயப் பார்த்தவனுக்கு, துக்கம் தொண்டையை அடைத்தது.

இந்த வீட்டில் ஒரு மகாராணியைபோல் வலம் வந்தவர்..., அவர் மேனியை எப்பொழுதும் தழுவியிருக்கும் மெல்லிய பட்டுப் புடவையும், கை, காது, கழுத்து, மூக்கு என அனைத்திலும் டாலடிக்கும் வைர நகைகளுமாக வலம் வந்தவர், படுக்கையில்..., கட்டிலோடு கட்டிலாக சுருண்டு போனதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

வெடிக்கப்பார்த்த அழுகையை, அங்கே இருக்கும் செவிலியைக் கருதி அடக்கியவன், கால்களை எட்டிப் போட்டான்.

அவன் வரவைப் பார்த்த செவிலி கலா, வேகமாக தன் இருக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.

தனா அவளை ஏறிட்டவன், "அம்மா இப்போ எப்படி இருக்காங்க?", அவளிடம் வினவ,

"ரெண்டு நாளா அவங்களுக்கு வயிறு சரியில்லை. அதனால் ரொம்ப டயடா இருக்காங்க. பேச்சு ரொம்ப குறைஞ்சுடுச்சு. சில நேரம் ஞாபக மறதி அதிகமா இருக்கு...", ஒவ்வொன்றாக உரைத்தவள், இறுதியாக எதையோ சொல்லத் தயங்கி நிறுத்தினாள்.

"என்ன...? சொல்லுங்க...", அவளைத் தூண்ட,

"சாலிட் அயிட்டம் எதுவும் அவங்களால் சாப்பிட முடியலை. ஒன்லி லிக்விட் தான். இப்படியே போனால்...", மேலே சொல்லாமல் நிறுத்த, அவள் சொல்லாமல் விட்டதையும் அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஐந்து வருடமாக படுக்கையில் இருக்கும் அவரிடம் பெரிதாக எந்த முன்னேற்றத்தையும் அவன் எதிர்பார்க்கவில்லைதான். ஆனால்..., மரணம் என்பதையும் அவ்வளவு சுலபமாக அவனால் ஏற்க முடியவில்லை.

தன்னை தேற்றிக்கொள்ள சற்று நேரமெடுத்தவன், "தூங்கறாங்களா?", இதை கேட்கையில் அவன் குரல் கமறியது.

"நைட் சரியா தூங்கலை..., அதனால் இப்போ தூங்கறாங்க. ஆனால், நீங்க வந்தால் கண்டிப்பா எழுப்பணும்னு சொன்னாங்க சோ...", அவன் தாயை எழுப்ப முயன்றாள்.

"இல்ல..., நான் பாத்துக்கறேன்..", அவன் உரைக்க, ' நீங்க பேசுங்க...', என்ற விதத்தில் உரைத்தவள், அந்த அறையை விட்டு, அவளுக்காக ஒதுக்கியிருக்கும் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அவள் செல்லவே, தாயின் அருகில் அமர்ந்தவன், அவர் கையைத் தொட்டு, " அம்மா...", மெதுவாக அழைத்தான். ஒரு வேளை.., ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தால் அதை கலைக்க வேண்டாமே என எண்ணியே அவ்வாறு செய்தான்.

"தனா...", அந்த அழைப்பிற்கே கண்விழித்தவர், குரல் நடுங்க அவனை அழைத்தார்.

அவர் பார்வை அவன் முதுகின் பின்னால் பாய, அதை உணர்ந்தவன், "ராஜா வரலம்மா... நீங்க மாத்திரை எல்லாம் ஒழுங்கா சாப்பிடறீங்களா? நர்ஸ் உங்களை நல்லா கவனிச்சுக்கறாங்களா? எதுவும் பிரச்சனை இல்லையே...", அவரது தேடலுக்கு பதில் கொடுத்தவன், அவரைப் பற்றி விசாரித்தான்.

பானுமதியோ..., ஒரு வார்த்தை கூட பேசாமல், கண்கள் கலங்க, கண்ணீரை வடித்தார்.

"ம்ச்..., என்னம்மா இது...? இதுக்குத்தான் நான் உங்களைப் பாக்க வரதே கிடையாது. எப்போ பார்த்தாலும் அழுகை..., நிம்மதியா இருங்க. எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்...", அவருக்கு நம்பிக்கை அளிக்க முயன்றான்.

"ராஜா..., நீ..., நீ..., வாழ வேண்டியவன் தனா..., என்னால்...", மேலே சொல்ல முடியாமல், அவரது வயோதிகம் அவரைத் தேக்க, அவர் சொல்ல வருவதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

"ம்மா..., இப்போ எதுக்கு இந்த பேச்சு..., விடுங்க...", அவர் கையை பற்றிக் கொண்டான்.

"நீ..,கல்யாணம்... பண்ணிக்கோ... தனா...", வார்த்தைகள் ஒவ்வொன்றையும் உதிர்த்தார். சாவோடு போராடும் தாயிடம் அச்சாணியமாக மறுக்க முடியாமல்,

"அம்மா..., கொஞ்ச நாள் போகட்டும்...", சம்மாளிக்க முயன்றான்.

'உனக்கு முப்பத்தைந்து வயது ஆகிறது...' அவரது பார்வை அவனிடம் உரைக்க, இதற்கு என்ன பதில் சொல்வது என அவனுக்குத் தெரியவில்லை.

அவன் கையை மேலும் அழுத்தமாக பற்றியவர், "நான் கண்ண மூட முன்னாடி, உனக்கு ஒரு நல்லது பண்ணிப் பார்க்க ஆசைப்படுறேன் தனா. இனிமேல் ரொம்ப நாள் நான் இருப்பேன்னு எனக்குத் தோணலை...", முயன்று பேசினார்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, தாய் அதிகமாக பேசியதை அவனும் உணர்ந்து கொண்டான். அணையப்போகும் விளக்கின் சுடரா இது? அவன் மனம் அதிர்ந்தது.

"கண்டிப்பா பண்ணிக்கறேம்மா...", அதற்குமேல் யோசிக்க எதுவும் இல்லாமல் வாக்கு கொடுத்தான்.

இது நாள் வரைக்கும் தன்னை சம்மாளித்து மட்டுமே வந்த மகன், முதல் முறையாக அளித்த ஒப்புதல், பானுமதியை தன் தள்ளாமையை மறக்கச் செய்ய, படுக்கையில் இருந்து எழ முயன்றார்.

தாயின் முயற்சி புரிய, " அம்மா..., வேண்டாம்..., படுத்துக்கோங்க...", அவன் குரலில், பக்கத்து அறையில் இருந்த கலா வேகமாக உள்ளே வந்தவள், பானுவை கைத்தாங்கலாக பிடித்து, சற்று சாய்த்தாற்போல் அமர வைத்தாள்.

தன் அருகில் அமர்ந்திருந்த அவன் தலையில், ஆசீர்வதிக்கும் விதமாக தன் கையை வைத்தவர், "உன் நல்ல மனசுக்கு, எல்லாம் நல்லபடியா நடக்கும் தனா....", அந்த ஆசீர்வாதம் தனாவை சிலிர்க்க வைத்தது.

"சரிம்மா..., இன்னைக்கு ரொம்ப பேசிட்டீங்க..., படுத்துக்கோங்க...", அவன் உரைக்க, சோபையாக தன் கண்களை மூடிக் கொண்டார்.

"பாத்துக்கோங்க...", கலாவிடம் உரைத்தவன், அறையிலிருந்து வெளியேறுகையில், ' இன்று ஏதோ நடக்கப் போகிறது...', அவன் மனம் உறுதியாக நம்பியது.

ஆனால் அது நல்லதா..., கெட்டதா என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை.

INFAA ALOCIOUS

பகுதி - 2.

ராஜாவை அழைத்துக்கொண்டு காரில் ஏறிய தனா..., தாங்கள் கிளம்பி வரும் வரைக்குமே, தன் அறையை விட்டு வெளியே வராமல் இருக்கும் தம்பி குணாவை எண்ணிப் பார்த்தவனாக காரைக் கிளப்பினான்.

ராஜாவின் பள்ளி, அவர்கள் வீட்டில் இருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்தில் இருக்க, போக்குவரத்து நெரிசலில் நீந்திக் கொண்டிருந்தவன்..., தன் அருகில் மிகவும் அமைதியாக அமர்ந்திருக்கும் ராஜாவைத் திரும்பிப் பார்த்தான்.

எப்பொழுதுமே அவன் கலகலப்பானவன் கிடையாதுதான்..., தன் வேலையை பார்த்துக் கொண்டு, அமைதியாக இருந்துகொள்ளும் சுபாவம் உடையவன், கடந்த சில வாரங்களாக பள்ளி செல்லத் தயங்குவதை எண்ணிப் பார்த்தவன், அவனிடம் பேசிப் பார்க்க முடிவெடுத்தான்.

"ராஜா...", மென்மையாக அழைக்க, தனாவை திரும்பிப் பார்த்தவன், மீண்டும் சாலையின் ஓரம் வேடிக்கைப் பார்க்கத் துவங்கினான்.

"கூப்ட்டா என்னன்னு கேக்க மாட்டியா...?", மென்மையாக கடிந்துகொள்ள,

"என்ன...?", வேகமாகக் கேட்டான்.

அவனது அந்த செய்கையே..., இந்த பாடத்தையே அவனுக்கு இதுவரை யாரும் சொல்லிக் கொடுத்ததில்லை எனப் புரிந்தது. அவன் புரிதலில், சந்தோசம் கொள்ள முடியாமல், மனதை ஒருவித பாரம் அழுத்த, அதை ஒதுக்கியவன், மீண்டும் அவன் பக்கம் கவனத்தை திருப்பினான்.

"ஏண்டா ராஜா ஸ்கூல் போக அடம் பிடிக்கற? உனக்கு ஸ்கூல் பிடிக்கலையா? யாராவது ஏதாவது சொன்னாங்களா?", தன்மையாகக் கேட்டான்.

முதல் முறையாக தன்னிடம் மனம் விட்டு பேசும் தனாவை விழி விரியப் பார்த்தவன், மறுப்பாக தலை அசைத்தான்.

"என்ன ராஜா...? எனக்குப் புரியலை, வாயைத் திறந்து பேசு..."

"எங்க மிஸ் என்னை திட்றாங்க..., அடிக்கறாங்க..., எனக்கு எழுதவே தெரியலையாம்..., எல்லார் முன்னாடியும் திட்றாங்க...", இதைச் சொல்லும் முன்பே, அவன் இதழ்கள் அழுகையில் துடித்தது.

"என்ன..., உன்னை அடிச்சாங்களா? யார் அடிச்சா? எழுதலன்னா அடிப்பாங்களா? வா..., நான் என்னன்னு கேக்கறேன்...", அவன் பள்ளியை அடைந்தவன், கேஜி வகுப்புகள் வரை மட்டுமே இருக்கும் அந்த சிறிய ப்ளாக்கின் முன் தன் காரை நிறுத்தி இறங்கினான்.

வழக்கமாக வாசலிலேயே விட்டுவிட்டு சென்று விடுபவன், அன்று ராஜாவை அழைத்துக் கொண்டு அவன் வகுப்பறையை நெருங்கினான்.

"யார்டா உன்னை அடிச்சது? எந்த மிஸ் அடிச்சாங்க சொல்லு...", திடுமென வாசலில் கேட்ட அழுத்தமான குரலில், கையில் இருந்த புத்தகத்தை கீழே வைத்துவிட்டு, வாசலைப் பார்த்தாள் சுஜாதா.

"என்ன ஆச்சு...? ஏன் இப்படி சத்தம் போடறீங்க? சொல்ல வந்ததை கொஞ்சம் நிதானமா சொல்லுங்க...", சற்று அழுத்தமாகவே அவளும் உரைத்தாள்.

காலையில் இருந்த டென்ஷன்..., ராஜாவைப் பற்றிய கவலை, அதிலும் ராஜா பள்ளிக்கு வரவே அடம் பிடிக்கும் நிலை..., என அனைத்திலும் சற்று குழப்பமான மனநிலையில் இருந்த தனா, தவறும் செய்துவிட்டு, தன்னிடமே எதிர்த்து பேசும் அவளைப் பார்த்து இன்னும் கொந்தளித்துப் போனான்.

"என்ன ஆச்சா? உங்க ஸ்கூல்ல பிள்ளைங்க படிக்கலன்னா உடனே

அடிப்பீங்களா? உங்களுக்கு யாருங்க அந்த அதிகாரத்தைக் கொடுத்தது. போலீஸ்ல கம்பிளெயின்ட் பண்ணா என்ன ஆகும் தெரியும்ல...", எகிறினான்.

அவனது முதல் பேச்சுக்கே.., அங்கே குழந்தைகளை விட வந்த சில பெற்றவர்கள் நின்று வேடிக்கை பார்க்க, இப்பொழுது உடன் வேலை பார்க்கும் ஆசிரியர்களும் கூடி விட்டார்கள்.

"சார்..., விஷயம் என்னன்னு கேட்டால்..., உங்க பாட்டுக்கு பேசிட்டே போறீங்க. ஏன்.., உங்களுக்கு மட்டும்தான் போலீஸ் தெரியுமா? எங்களுக்குத் தெரியாதா?", அவள் நக்கலாக கேட்க, அவனுக்கு எரியும் நெருப்பில் பெட்ரோல் வார்த்தது போல் ஆனது.

"உங்ககிட்டே எனக்கென்னங்க பேச்சு..., யார்கிட்டே பேசணுமோ நான் அவங்க கிட்டே பேசிக்கறேன். எங்கே உங்க பிரின்ஸிபல்...", கேட்டவன், ராஜாவை அழைத்துக்கொண்டு அலுவலக அறையைப் பார்க்கப் போனான்.

"என்ன மிஸ் இது...? உங்ககிட்டே வந்து சத்தம் போட்டுட்டு போறார்? நீங்க இல்லன்னு சொல்ல வேண்டியது தானே...", உடன் பணி புரியும் சாந்தி மிஸ் கேட்க,

"என்னை பேச விட்டால் தானே. என்ன விஷயம்னு கேட்டதுக்கே பதில் சொல்லாமல் எகிறினால் நானும் என்னதான் செய்ய? சரி.., இந்த கிளாசையும் கொஞ்சம் பாருங்க.., நான் இப்போ வரேன்...", உரைத்தவள் தானும் அலுவலக அறைக்குச் சென்றாள்.

அலுவலக அறைக்கு முன்பாக, ராஜா, தனாவிடம் எதையோ சொல்ல முயல்வதையும், அதை அவன் சட்டையே செய்யாமல் இருப்பதையும் ஓர விழியில் கவனித்தவாறே உள்ளே நுழைந்தாள்.

அங்கே இருந்த அலுவலகப் பெண் வேகமாக எழுந்து காலை வணக்கம் சொல்ல, அதை ஒற்றை தலையசைப்பில் பெற்றுக் கொண்டவள்,

பிரின்சிபால் என பெயர் பலகையிட்ட அறைக்குள் சென்று இருக்கையில் அமர்ந்து, மேஜைமேல் இருந்த அழைப்பு மணியை அழுத்தினாள்.

உடனே அங்கே இருந்த பெண் எழுந்து உள்ளே செல்ல, "வெளியே ஒருத்தர் நிக்கறார்...., அவரை உள்ளே வரச் சொல்லுங்க...", உரைத்தவள், இருக்கையில் அமர்த்தலாக அமர்ந்து கொண்டாள்.

வெளியே சென்றவள், "சார்...., மேடம் கூப்படறாங்க...., நீங்க உள்ளே போகலாம்...", அவள் உரைக்கவே, ராஜாவை அழைத்துக்கொண்டு, பிரின்சிபால் அறைக்குள் நுழைந்தவன், அங்கே அவளை எதிர்பாராமல் சற்று திகைத்தாலும் உடனே சம்மாளித்துக் கொண்டான்.

அதை அவளும் குறித்துக் கொண்டவள், "டேக் யுவர் சீட்...", தன் எதிரில் இருந்த இருக்கையைக் காட்ட, சற்று கோபமாகவே அமர்ந்து கொண்டான்.

"ஓ...., ஸ்கூல் உங்களோடதா இருந்தால் என்ன வேண்ணா செய்வீங்களா?", அவன் பொரியத் துவங்க, அவளுக்கு கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது.

"சார் ஒரு நிமிஷம்...., நீங்க சொல்ல வந்த விஷயத்தை நிதானமா சொன்னால்தான், என்ன செய்ய முடியும்னு என்னால் யோசிக்க முடியும். அதை விட்டு...., இப்படி கத்திகிட்டே இருந்தால் நான் என்ன நினைப்பது?", அவள் கேள்வியில் இருந்த நியாயம் புரிய, சற்று அமைதி ஆனான்.

ஆனாலும்...., ராஜாவை அவர்கள் எப்படி அடிக்கலாம்...? என்பதிலேயே மனம் உழல, "அதெப்படிங்க...., குழந்தை படிக்கலன்னா உடனே நீங்க அடிப்பீங்களா?", விஷயத்தைச் சொல்லாமல், மீண்டும் அவன் நின்ற இடத்திலேயே இருக்க, இது வேலைக்கு ஆகாது என உணர்ந்தவள்,

மேலும்...., அவன் தான்தான் சின்னவனை அடித்து விட்டதாக எண்ணுவதையும் புரிந்து கொண்டவள், அவனை விடுத்து, சிறியவனிடம்

திரும்பி, "உன் பேர் என்னம்மா...?", கேட்டவள், தன் மேஜைமேல் இருந்த சிறிய டப்பாவில் இருந்து ஒரு சாக்லேட்டை எடுத்து நீட்டினாள்.

கண்கள் மின்ன சாக்லேட்டை பெற்றுக் கொண்டவன், "ராஜா...", சின்னக் குரலில் பதில் கொடுத்தவன், உடனடியாக அதைப் பிரித்து உண்ண முயன்றான்.

அவர்கள் பேச்சைக் கேட்ட தனாதான் இப்பொழுது திகைத்துப் போனான். 'இவங்களுக்கு இவன் பெயரே தெரியவில்லை என்றால்...?' சட்டென எண்ணியவன்,

"ராஜா..., உன்னை இவங்க அடிக்கலையா...?", தனா மென் குரலில் ராஜாவிடம் வினவ, சட்டென சுஜாதாவை நிமிர்ந்து பார்த்த ராஜா,

"இல்லை..., இவங்க எங்க மேம்..., மிஸ் இல்லை..., அவங்க வேற..., நான் சொல்ல வந்தேன்..., நீங்கதான் என்னை சொல்லவே விடலை...", அவன் வேகமாக உரைத்துவிட்டு, சுஜாதாவை பார்த்து சிநேகமாக புன்னகைத்தான்.

"இவங்க இல்லையா...?", வெளிப்படையாகவே கேட்டவன், அவளை பார்க்கவே சங்கடபட்டான்.

இப்பொழுது தனாவுக்குத்தான் தன் முகத்தை எங்கே கொண்டுபோய் வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை. ஒரு சங்கடமான முகபாவத்தோடு அவளை ஏறிட்டவன், "சாரி..., ராஜாவை அடிச்சுட்டாங்க என்ற கோபத்தில் பேசிட்டேன். எதையும் மனசில் வச்சுக்காதீங்க...", தயங்கினாலும் மன்னிப்பை வேண்டினான்.

சுஜாதாவின் முகத்தில் ஒரு மெச்சுதல் வந்து போனது. இங்கே வரும் சில பெற்றவர்கள், தங்கள் குழந்தைமேல் தவறே இருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளாமல் நிர்வாகத்தை குறை சொல்வதைத்தான் இதுவரை பார்த்திருக்கிறாள்.

முதல் முறையாக..., உடனடியாக மன்னிப்பை வேண்டும் அவனைப் பார்த்தவள், மென்மையாக புன்னகைத்துவிட்டு, "ஒரு நிமிஷம்...", அவனிடம் உரைத்தவள், மேஜையில் இருந்த இழுப்பறையில் இருந்து ஒரு நோட்டை எடுத்து, அவன் முன்பாக விரித்து, அதில் ஒரு பக்கத்தை எடுத்து, அவனிடம் கொடுத்தாள்.

அவன் கேள்வியாக நோக்க..., "பாருங்க..., உங்களுக்கே புரியும்...", அவள் உரைக்கவே, அதில் பார்வையை செலுத்தியவனது புருவங்கள் கேள்வியாய் சுருங்கி, பின்னர் சிறு அதிர்ச்சிக்குப் போனது.

"இந்த ரிப்போட்டே உங்க பையன் ராஜாவைப் பற்றி உங்களுக்குப் புரிய வைத்திருக்கும்னு நினைக்கறேன்...", அவள் நிறுத்த, தனா வேகமாக அவளை நிமிர்ந்து பார்த்தவன், ராஜாவைத் திரும்பிப் பார்க்க, அவன் பார்வையை உணர்ந்தவள்,

தன் மேஜைமேல் இருந்த மணியை ஒலிக்கவிட, உள்ளே வந்தவளிடம், "ராஜாவை கொஞ்சம் வெளியே இருக்கும் ஆயாவிடம் பாத்துக்க சொல்லுங்க...", அவள் உரைக்கவே, அவ்வாறே செய்தாள்.

"மிஸ்டர்...", அவள், அவன் பெயரைத் தெரிந்துகொள்ள நிறுத்த, "தனா...", அவன் உரைக்கவே,

"மிஸ்டர் தனா..., உங்க கோபம் நியாயமானதுதான். எந்த அப்பாவுக்கும் தன் குழந்தையை அடித்தால் வர நியாயமான கோபம்தான். ஆனா பாருங்க..., ராஜாவின் ரிப்போட்டை பார்த்தாலே தெரியும்..., எந்த ரைட்டிங் பரீட்ச்சையிலும் அவன் ஒரு மார்க்குக்கு மேல் வாங்கவே இல்லை...", அவள் பேச்சு அவனுக்குள் ஏற்படுத்திய தாக்கத்தை அவள் அறியவே இல்லை.

"அது கூட கிரேஸ் மார்க் தான். ஏற்கனவே அவன் எல்கேஜி படிக்கவில்லை என்றாலும், அவன் வயசு ஐந்து ஆகிறது என்ற ஒரே காரணத்துக்காகத் தான்..., எங்க அம்மா அவனுக்கு அட்மிஷன் கொடுத்தாங்க.

“அது மட்டும் இல்லை..., ஒரே மாதத்தில் அவனுக்கு ஏ பி சி டி நீங்க கத்துக் கொடுத்து விடுவேன்னு ப்ராமிஸ் செய்ததால் மட்டும்தான் அவனுக்கு எந்த என்ட்ரன்ஸ்சும் வைக்காமல் இங்கே சேர்த்துக் கொண்டோம். இப்போ மூன்று மாதம் முடிந்த பிறகும், அவனது படிப்பில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றால்..., ஆசிரியர் கொஞ்சம் கடுமையாகத்தான் நடந்துகொள்ள வேண்டி இருக்கும்.

“ஒரு வேளை..., அப்படியாவது அவன் படிக்க மாட்டானா என்ற எதிர்பார்ப்புதான் இதற்கு காரணமாக இருக்க முடியும். இப்போ சொல்லுங்க..., தப்பு... யார் பக்கம்...?”, அவள் கேட்க, அமைதியைத் தவிர அவனிடம் வேறு பதில் இருக்கவில்லை.

ஆனாலும்..., அவள் தன் பதிலுக்காக காத்திருப்பது புரிய, “என்னால் அவனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க முடியவில்லை, நேரமும் இல்லை”, அவன் தயங்க,

“அவங்க அம்மாவை சொல்லிக் கொடுக்கச் சொல்லுங்க. லெட்டர்ஸ் சொல்லிக் கொடுக்க யாராலும் முடியும்...”, அவள் அழுத்தமாக உரைத்தாள்.

“அவங்க அம்மா...”, அவனால் அதற்குமேல் சொல்ல முடியவில்லை.

அவன் தயக்கத்தைப் பார்த்தவள், “சரி..., அவங்க அம்மாவை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க...”, அவள் முடித்துவிட, அப்பொழுதும் ஒருவித அலைப்புறுதலோடு அவளை ஏறிட, அவன் பார்வை அவளை ஏதோ செய்தது மட்டும் உண்மை.

‘ச்சே..., என்ன மனுஷி நான்...? திருமணமாகி..., ஐந்து வயது குழந்தையின் அப்பாவின் பார்வைக்கு இப்படி தடுமாறுகிறேனே..?’, தன்னையே மானசீகமாக குட்டியவள், அவனை திடனாக ஏறிட்டாள்.

வேகமாக அடுத்த ஒரு ஃபயிலை எடுத்தவள், அதில் இருந்த ராஜாவின் பயோடேட்டாவை பார்வையிட்டாள். அதில் இருந்த அவன் பின்புலம்

தெரியவர, ஒரு நொடி சிந்தித்தவள்,

"சரி..., உங்க மனைவிக்கு பாடம் சொல்லிகொடுக்க முடியவில்லை என்றால், நீங்க ஒரு ஹோம் டியூஷன் அவனுக்கு ஏற்பாடு செய்யலாமே..., அது உங்களால் முடியும்னு நினைக்கிறேன்...", அவள் உரைக்க, ஒரு நொடி சிந்தித்தவனது முகம் பிரகாசமாக, "நிச்சயம் முடியும்..., தேங்க்ஸ்...", இருக்கையில் இருந்து எழுந்தான். அவன் பார்வை அளவுக்கு அதிகமாக அவள்மேல் நிலைக்க, குழம்பித்தான் போனாள்.

அவனோடு தானும் எழுந்தவள், அறையை விட்டு வெளியேறப் போன நிமிடம், அவன் வாசலில் தேங்கியதை உணராமல், அவன்மீது மோதி தடுமாறினாள்.

"ஹேய் பாத்து...", எங்கே விழுந்து விடுவாளோ என்ற பயத்தில் அவள் கையைப் பிடித்து நிறுத்த,

தன் செய்கையாலும், அவன் செயலாலும் சற்று விதிர்த்துப் போனவள், இரண்டடி பின்னால் நகர, "சாரி..., சாரி...", அவளிடம் மன்னிப்பு வேண்டியவன், "ராஜாவை இனிமேல் அடிக்க வேண்டாம்னு அவங்க மிஸ்கிட்டே சொல்லிடறீங்களா? ஸ்கூல்க்கு வர ரொம்ப அடம் பண்றான்...", அவன் குரலில் இருந்த வருத்தம் அவளை தாக்கியது. 'இதென்ன புது விதமாக...?' அவளுக்கு புரியவில்லை.

"கண்டிப்பா சொல்றேன்...", உரைத்தவள், அவன் வெளியேறியதை உறுதி செய்த பிறகு வெளியே வர, ராஜாவோ..., இவர்களைப் பார்த்துவிட்டு, இவர்கள் அருகில் ஓடி வந்தான்.

"கிளாஸ்க்கு போ ராஜா...", சுஜாதா உரைக்க,

"நான் அங்கே போக மாட்டேன்...", சட்டென அடம் பிடித்தவன், "நான் உங்க கிளாஸ்க்கு வரேன்...", அவள் அருகில் சென்று நின்று கொண்டான்.

"ராஜா...", கண்டிக்கும் குரலில் தனா அழைக்க, "இல்ல..., பரவாயில்லை, நான் என் கிளாஸ்க்கு அவனை மாத்திடுறேன்...", அவள் உரைக்கும் பொழுதே அங்கே வந்த பாலாமணி..., "சுஜா..., இங்கே ஏதோ இஸ்யூன்னு கேள்விப்பட்டு வந்தேன்..., ஏதாவது பிரச்சனையா?", பக்கத்தில் இருந்த தனாவையும், ராஜாவையும் அளவிட்டவாறே கேட்டார்.

"குட் மார்னிக் மேம்...", அவரைப் பார்த்தவுடன் ராஜா விஷ் பண்ண, அவரைப் பார்த்த தனாவும் லேசாக தலை அசைத்தான்.

அவர்கள் வாழ்த்தை பெற்றுக் கொண்டவர், சுஜாவிடம் திரும்பினார். "இல்லம்மா..., எந்த பிரச்சனையும் இல்லை...", அவள் உரைக்க, அதற்குமேல் எதையும் துருவாமல், அலுவலக அறைக்குள் சென்று மறைந்தார்.

அவர் செல்லவே..., "இவங்க தானே இங்கே பிரின்சிபால்...", அவளை ஏறிட, "ஆமா..., நான் அசிஸ்டன்ட் பிரின்சிபால் ப்ளஸ் ஒன் ஆஃப் தி டீச்சர்...", அவள் உரைக்க, "ஓ..., அப்போ சரிங்க...", அவளிடம் ஒரு தலையசைப்பில் விடை பெற்றவன், ராஜாவிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பினான்.

அவன் செல்லவே..., ராஜாவை அழைத்துக்கொண்டு தன் வகுப்புக்குச் சென்றவளுக்கு, 'தனாவை தினமும் எதிர்கொள்ள வேண்டுமா...?' என்ற வினா எழுந்து விதிர்க்கச் செய்தது.

அதே நேரம்..., அவன் தலையசைப்பில் தன்னிடம் விடைபெற்றுச் சென்றதும் நினைவிற்கு வர, ராஜாவை ஒரு இருக்கையில் அமர வைத்தவள், தலையைத் தாங்கியவாறு அமர்ந்து விட்டாள்.

'இது ஏன் இப்படி...?', அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவன்மேல் மனம் செல்வதை விட, தன் நிலை தெரிந்தும், மனம் ஆசைப்படுவதைத்தான் அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

ப்ரேயர் துவங்க..., தன்னை முயன்று சீர் செய்தவள், கடவுள்மேல்

பாரத்தைப் போட்டு, குழந்தைகளோடு ஒன்ற முயன்றாள்.

காரில் சென்று கொண்டிருந்த தனாவுக்கும் சுஜாவின் மதி முகமே நெஞ்சில் நிழலாடியது. தான் முதலில் கோபப்பட்டு கத்தியபொழுது, திடுக்கிட்டு நிமிர்ந்த அவள் தோற்றம் துவங்கி, அவளது கோபம், புரிதல், பேச்சு..., என அனைத்தையும் மனதுக்குள் ஓட்டிப் பார்த்தவனுக்கு, காலையில் மனதில் அழுத்திய பாரம் அனைத்தும் விலகிய உணர்வு.

வழக்கம்போல் காரை முதலில் ஜவுளிக் கடைக்கு செலுத்தியவன், ஒரு பூஜையை போட்டுவிட்டு இருக்கையில் அமர, மேனேஜர் வேகமாக அவனைப் பார்க்க வந்தார்.

"என்ன குமார்..., எல்லாம் நல்லபடியா போகுதா? ஸ்டாக் எல்லாம் இருக்கா? ஸ்டாக் மேனேஜர் சரியா வேலை பாக்கானா? சூப்ரவைசர் என்ன சொல்றார்...?", ஒவ்வொன்றாக வினவ, அனைத்திற்கும் பதில் கொடுத்த குமார், இறுதியாக,

"என்ன சார்..., இன்னைக்கு என்னவோ நீங்க ரொம்ப சந்தோஷமா இருக்குற மாதிரி இருக்கு...", அவன் வினவ, மற்றவர்களுக்கு தெரியும் அளவுக்கா நாம் நடந்து கொள்கிறோம்...? எண்ணியவனுக்கு, அந்த உற்சாகம் மட்டும் குறையவே இல்லை.

'ச்சே..., அவ பெயரைக் கேக்காமல் வந்துட்டோமே...', எண்ணியவுக்கு, அப்பொழுதுதான் அவளது தாய், அவளை பெயர் சொல்லி அழைத்தாரே என்பது நினைவிற்கு வர, "சுஜா..., ஆமா அதேதான்...", குரல் கொடுத்து கத்தியே விட்டான்.

"சார்..., யார் சுஜா...? என்ன...?", குமார் கேட்ட பிறகுதான், தான் டீனேஜ் பையன் போல் நடந்து கொண்டதே அவன் நினைவிற்கு வந்தது.

"என்ன சுஜா...? போய் வேலையைப் பாருங்க...", தன் தடுமாற்றத்தை மறைக்க, அவனை விரட்டினான்.

‘ஆமா..., இந்த முதலாளிங்களுக்கே இதே வேலையா போச்சு...’, அவன் மனதுக்குள் புலம்பியவாறு அங்கிருந்து நகர முயல,

அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தவனாக, “குமார்..., ராஜாவுக்கு ஹோம் டியூஷன் எடுக்க ஆள் வேணும். அதுக்கு என்ன செய்யணுமோ செய்ங்க...”, அவன் உரைக்க,

“சார்..., யுகேஜிக்கே ஹோம் டியூஷனா...?”, சற்று அதிர்வாகக் கேட்டானோ?

“சொன்னதை மட்டும் செய் குமார்...”, தனா குரல் உயர்த்த,

“நாளைக்கே ஏற்பாடு பண்றேன் சார்..”, சட்டென அடங்கிப் போனான்.

“சரி..., நீ போ...”, அவனை அனுப்பினான்.

கடையை ஒரு ரவுண்ட் அலசியவன்..., அடுத்த கடைகளை பார்க்கப் போனான். ‘இந்த குணா கொஞ்சம் வேலை செய்தால் பரவாயில்லை...’, அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

‘அவனுக்கு பொறுப்பு வர, சில கடைகளை அவன் பொறுப்பில் விட வேண்டும் என தீர்மானித்துக் கொண்டான். அன்றைய நாள் முழுவதுமே உற்சாகம் குறையாமல் அலைந்தவனைப் பார்த்து, அவனிடம் வேலை பார்த்த ஊழியர்கள் அனைவரும் அவனை வியப்பாய் பார்த்தது மட்டும் உண்மை.

அந்த நாள் மாலையை தனா மிகவும் ஆவலாக எதிர் பார்த்தான் என்பது எவ்வளவு உண்மையோ..., சுஜாதா கலக்கமாக அதை எதிர் நோக்கினாள் என்பதும் அவ்வளவு உண்மை.

ராஜாவைப் பொறுத்த மட்டில்..., எந்த ஒரு விஷயத்தையும் ஒரு முறை சொல்லிக் கொடுத்தாலே கற்பூரம்போல் கற்றுக் கொள்பவன், எழுதும் வேளையில் மட்டும் திணறிப் போனான்.

அவனுக்கு எழுத்துக்களே இப்பொழுதுதான் அறிமுகம் என்பதை அவனது செய்கை அவளுக்கு அறிவுறுத்த, ஆல்பபெட் லெட்டர் அனைத்தையும், ஒரு டிராயிங் வரைவதைபோல் அவன் வரைவதைப் பார்த்து, தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

போடில்(board) இருப்பதை அப்படியே அச்செடுத்தானே தவிர, அது என்ன எழுத்து எனக் கேட்டால் அவனுக்குத் தெரியவே இல்லை. அவனுக்கு ஸ்பெஷல் கேர் வேண்டும் என்பதை புரிந்து கொண்டாள்.

அவன் அருகில் அமர்ந்து..., எழுத்தை அவனுக்கு கற்றுக் கொடுக்க, முதல் ஐந்து எழுத்துக்களை அன்று முழுவதும் அவன் கற்றுக் கொண்டான். ஆனால்..., அன்றைய போஷனை முடிக்க முடியாமல், சுஜாதா தேங்கியது மட்டும் உண்மை.

பள்ளி பாட வேளைக்கும், டியூஷனுக்கும் இருக்கும் வித்தியாசத்தை முழுமையாக அவள் உணர்ந்த நொடி இதுவாகத்தான் இருக்கும்.

"மிஸ்..., இது என்ன லெட்டர்...", 'எஃப்'(f)ஐக் காட்டி அவன் வினவ,

"சூப்பர்டா ராஜா..., அப்படியே கற்பூர புத்தி...", உரைத்தவள், அவன் கன்னத்தில் ஆசையாக முத்தமிட்டாள். ஒரு அற்புதமான குழந்தையைப் பார்க்கையில், ஒரு ஆசிரியைக்கு ஏற்படும் பரவசம் அது.

அவன் ஆர்வம் அவளுக்கும் தொற்றினாலும், அடுத்த வேலை அவளை இழுக்க, "நாளைக்கு சொல்லித் தரேன்...", விலகிச் சென்றாள்.

முகம் சற்று சுருங்கினாலும், "ஓகே மிஸ்...", உற்சாகமாக குதித்தவனுக்கு, அவள் இதழ் முத்தம் அந்த பிஞ்சு மனதுக்குள் பெரும் மாற்றத்தை விளைவித்தது.

ஆசையாக, பாசமாக, பரவசமாக அவன் வாங்கிய முதல் முத்தம்..., அவனைத் தீண்டாமல் இருந்தால்தான் ஆச்சரியம். பகுதி - 3.

எப்பொழுதும் ராஜாவை அழைக்க சரியான நேரத்துக்கு வந்துவிடும் தனா, அன்று சற்று தாமதமாக கிளம்பினான். நிச்சயம் ராஜா தன்னை தேடுவான் என்று தெரிந்தாலும், சுஜாவை தனியாகக் காணவேண்டும் என்ற ஆவல், அவனை அவ்வாறு செய்யத் தூண்டியது.

தான் செய்வது சரியா தவறா எனத் தெரியவில்லை. ஆனால்..., தினமும் காலையில் தன்னை திருமணம் செய்யச்சொல்லும் தாயின் கோரிக்கையும், இன்றைய அவரது நிலையும், அவனை, திருமணம் செய்தாக வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளி இருந்தது மட்டும் உண்மை.

அதே நேரம்..., காலையில் பார்த்த சுஜாவின் முகம் மனதில் அழுத்தமாக பதிந்து போயிருக்க, அவளையே திருமணம் செய்வது என்ற முடிவிற்கு அவன் வந்திருந்தான். ஆனாலும்..., மனதுக்குள் ஒரு தயக்கம், நெருடல்..., ராஜாவைப் பற்றி எப்படி என்ன சொல்வது?

அதைச் சொன்னாலும் சரியான விதத்தில் புரிந்து கொள்வாளா? அவனுக்கு அன்னையாக அவள் இருப்பாளா? கேள்விகள் துளைத்தாலும், அவளிடம் பேசிப் பார்க்காமல், தானாக ஒரு முடிவிற்கு வர வேண்டாம் என எண்ணினான்.

அவளை இன்றைக்குத்தான் முதல் முதலாக பார்த்திருக்கிறோம்...., தன்னைப் பற்றி யோசிக்க அவளுக்கு நேரம் கொடுக்க வேண்டும், ராஜாவைப் பற்றி முதலில் உரைக்க வேண்டும் என்பது எதுவும் அவனுக்கு உறைக்கவில்லை.

காரை பார்க்கிங்கில் நிறுத்தியவன், சற்று வெறிச்சோடி இருந்த பள்ளிக்குள் நுழைய, "ஏன் சார்..., என்னைக்கும் சீக்கிரம் வந்துடுவீங்க..., இன்னைக்குன்னு பாத்து லேட் பண்ணிட்டீங்க..., ராஜா ஒரே அழுகை..." , எப்பொழுதும் அவனைப் பார்த்தவுடன் உரையாடும் மேரி ஆயா, அதன் ஆதங்கத்தை கொட்டிவிட்டு நகர்ந்து செல்ல, ஒரு குற்ற உணர்ச்சியோடு நடையை எட்டிப் போட்டான்.

ராஜாவின் வகுப்பை கண்டு பிடித்து, அதன் முன்பாக நின்றவன், "மிஸ்..., ராஜா...", குரல் கொடுக்க, தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்த ராஜா, அடுத்த அழுகைக்கு தயாரானான்.

"சாரிடா..., எனக்கு கொஞ்சம் வேலை இருந்தது அதான்...", மனதறிய பொய் உரைத்தவன், ராஜாவின் பின்னால் நின்ற சுஜாவை ஏறிட்டான்.

அவளோ..., குற்றம்சாட்டும் பார்வையோடு அவனை பார்த்துக் கொண்டிருந்தாள். "இல்ல.., என்னைக்குமே சீக்கிரம் வந்துடுவேன். இன்னைக்குதான்...", இழுத்தவனது பார்வையோ..., உனக்காகத்தான் என்ற செய்தியை சுமந்திருக்க, சுஜாவுக்கு காலையில் எடுத்திருந்த உறுதி அனைத்தும் சரியும் உணர்வு.

இன்னும் எதையோ தனா சொல்ல முயல, "தேங்க்யூ மிஸ்...", இடையில் ஒலித்த ராஜாவின் குரல் அதைத் தேக்க, சட்டென தன்னை மீட்ட சுஜா, ஒரு தலையசைப்பில் அவனுக்கு விடை கொடுத்தவள் திரும்பி நடந்தாள்.

சுஜாவை அழைக்க முயன்ற தனா..., அவள் தன்னை தவிர்ப்பதுபோல் தோன்ற, முதல் நாளே வேண்டாம் என முடிவெடுத்தவன், ராஜாவை அழைத்துக்கொண்டு சென்றான்.

மனதுக்குள் எழும் படபடப்பின் காரணம் அவனுக்கு புரியவே இல்லை. டீனேஜ் வயதில் இருந்தால் பரவாயில்லை. வாழ்க்கையின் முடிவுகளையும், மிகப்பெரும் பொறுப்புகளையும் சுலபமாகக் கையாளும் தான்..., அவள் விஷயத்தில் மட்டும் தடுமாறுவது விந்தையாக இருந்தது. காதல் முன்னால் அனைவரும் அப்படித்தான் என்பதை அவனுக்கு யார் சொல்லி புரிய வைப்பது?

சுஜாவுக்கோ..., தனா, ராஜாவை தாமதமாக அழைக்க வந்ததற்கு சூடாக எதையாவது சொல்லிவிட ஆசைதான். ஆனால்..., தன் மனமே அவளுக்கு எதிராக இருப்பதில், தன்மேலே கோபம் கொண்டவளாக விலகி நடந்தாள்.

அதன் பிறகு, தனாவோ, ராஜாவை வீட்டில் விட்டவனுக்கு, அடுத்திருந்த வேலைகள் தன்னை மூழ்கடித்தாலும், மனதின் ஓரம் சுஜா மிதந்து கொண்டே இருந்தாள்.

சுஜாவின் வீட்டில்..., அவள் இயல்பாக இல்லாததுபோல் தோன்ற, அவள் அருகில் அமர்ந்த பாலாமணி, "சுஜா..., என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்க?", அவள் தோள் தொட்டார்.

"ஒண்ணுமில்லம்மா..., சும்மாதான்..." , தாயின் முகம் பார்க்க மறுத்தாள்.

அதை கவனித்த பாலாமணி, "சும்மான்னு சொல்ற விஷயத்தில்தான், பெரிய விஷயங்கள் ஒளிந்திருக்கும் சுஜா..." , தன் மகளைப் பற்றி அவருக்குத் தெரியாதா?

தாய் இவ்வாறு உரைக்க, முணுக்கென சுஜாவின் கண்கள் கண்ணீரை வடிக்க, "போதும் சுஜா..., தேவையான அளவு அழுதாச்சு. இப்போ, வாழ்க்கையை ஒரு விதத்தில் நகர்த்திக் கொண்டு போகும் முடிவிற்கு வந்த பிறகு..., இன்னும் என்ன?", அவள் கரத்தை ஆதரவாக பற்றினார்.

சட்டென தாயின் மடியில் படுத்தவள், குலுங்கி அழ, தவித்துதான் போனார். "மனசுக்குள் இருப்பதை வெளியே சொன்னால்தான் தெளிவு பிறக்கும் சுஜா..., என்னன்னு சொல்லும்மா...." , அவர் மனம் மரத்துப்போன உணர்வில் இருந்தது.

காலையில்..., ஐந்து வயது சிறுவன், தனாவுடன் அவளைப் பார்த்த பொழுது, ஒரு தாயாக..., மகளை இப்படி ஒரு குடும்ப சூழலில் காண கொடுத்து வைக்க வில்லையே என அவர் மனம் ஒரு நொடி தவித்தது என்னவோ உண்மை.

ஆனால்..., தன் மகளின் நிலையும், தனாவின் உயரமும், ராஜாவின் பின்புலமும் தெரிந்த அவரால்..., தன் ஆசையை மனதோடு புதைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

சுஜாவுக்கோ..., தன்னைப் பற்றியே அவளுக்கு சிந்திக்க வேண்டி இருந்தது. தனக்கு கிடைக்கவே போவதில்லை என்ற விஷயத்துக்காக மனம் ஏங்கி, ஐந்து வயது சிறுவனின் தந்தை என்றாலும் பரவாயில்லை என மனம் நினைக்கத் துவங்கி விட்டதோ...?

அவ்வளவு பலவீனமானவளா நான்? ஒரு குடும்பத்தில் குழப்பம் விளைவிக்கும் அளவுக்கு நான், கேவலமாகிப் போனேனா? சிந்திக்க சிந்திக்க, தலைவலி பெருகியது.

இதைவிட..., ஒரு குழந்தையின் தந்தை..., அவன் எப்படி தன்னை அப்படி பார்க்கலாம்...? அவன் பார்வை தானே என்னை தடுமாறச் செய்கிறது? தனாவின்மேல் கோபம் பெருகியது.

'அவன் பார்த்தால்..., உன் புத்தி எங்கே போனது...?' மனசாட்சியின் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. இதை எப்படி தாயிடம் உரைக்க முடியும்? அவளால் அது முடியாது என்றே தோன்றியது.

தந்தையை தன்னிடமிருந்து பிரித்த விதியை லட்சம் முறையாக நொந்து கொண்டாள்.

சுஜாவின் அழுகை பெருகிக் கொண்டே செல்ல, பாலாமணியின் கண்களும் கலங்கியது.
"மனசுக்குள் என்ன குழப்பம்? குடும்பம், குழந்தை என வாழ கொடுத்து வைக்கவில்லையே என மனசு தவிக்குதா சுஜா? அதை இந்த அம்மாகிட்டே எப்படிச் சொல்லன்னு தெரியாமல் தவிக்கிறாயா?", ஒரு வேளை அப்படியும் இருக்குமோ என துடித்துப் போனார்.

"அம்மா....", அவள் கதற..., மகளோடு சேர்ந்து கதறத் துடித்த மனதை அடக்கியவர், "இப்போகூட ஒண்ணும் கெட்டுப் போகலை..., இந்த அம்மா சொல்வதை கேளேன்...", தவிப்பான அவர் குரலில், தேகம் விறைக்க நிமிர்ந்தவள், கண்ணில் நீரோடு..., 'வேண்டாம்...' என மறுப்பாக தலை அசைக்க, அடுத்த வார்த்தையை அவரால் பேச முடியவில்லை.

"நான் பாத்துக்கறேம்மா...", தொண்டை அடைக்க உரைத்தவள், ஹாலில் இருந்து எழுந்து, தன் அறைக்குள் சென்று மறைந்தாள்.

இப்பொழுது கூட, தன்னிடம் மனம் திறக்க மறுக்கும் மகளின்மேல் கோபம் கொள்ள முடியாமல், தந்தையின் தோள் சாயத் துடிக்கும் மகளை அறிந்தவராக, மனதுக்குள் துடித்துப் போனார்.

கட்டிலில் படுத்து குமுறியவளுக்கு..., தன்னை இப்படி ஆக்கிய அந்த கடவுள்மேல் கட்டுக்கடங்காத கோபம் பெருகியது. இருபத்தி நான்கு வயது, வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கும் வயதா? ஆனால்..., சூழ்நிலையும், விதியும் அவளை வெறுக்கச் செய்கிறதே.

அப்படி வெறுத்து ஒதுக்கும் நிலைக்கு தள்ளிய கடவுள், மனதில் சஞ்சலத்தை விதைப்பதேன்..., சோதிக்கவா? அப்படி சோதித்து என்ன அடையப் போகிறார்...', தன்னிரக்கத்தால் பெருகிய கண்ணீர் நிற்க மறுத்தது.

மகளின் அறைக் கதவைப்போல்..., அவள் வாழ்க்கையும் அடைபட்டுப் போனதை எண்ணி மனம் நைந்த பாலாமணி..., அங்கே இருந்த பூஜை அறைக்குள் நுழைந்தார்.

நான்கு சட்டங்களுக்குள் அரூபமாக புன்னகைத்த கணவனின் புகைப்படத்தை பார்த்தவர்..., "பாத்தீங்களா...? மக கண்ணில் ஒரு சொட்டு கண்ணீர் கூட வராமல் பாத்துகிட்டீங்க. ஆனா இப்போ..., தினம் தினம் கண்ணீர் வடிக்கறாங்க....", தன் மனக் குமுறலை கணவனிடம் இறக்கி வைக்க முனைந்தார்.

"நீங்க..., உங்களோடவே அவ சந்தோஷத்தையும் கொண்டு போய்டீங்களா? இப்போ ஆறுதல் சொல்லக் கூட வழியில்லாமல், நான் முழிக்கறேங்க.

"என்ன செய்யன்னு எனக்குத் தெரியலையே..., அவ கண்ணீரைப் பார்த்தும், எதுவும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்கேனே...",

கண்களில் கண்ணீர் வழிந்தது.

"அவ மனசுக்குள் இருக்க குழப்பத்தை கூட என்கிட்டே சொல்ல மறுக்கிறாளே..., நான் என்ன செய்யட்டும்?", அவரால் புலம்பத்தான் முடிந்தது.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தார்களோ..., முதலில் தன்னை மீட்ட சுஜாதா, இனிமேல் தனாவிடம் ஒதுங்கியே இருப்பது எனவும், அவனைப் பார்த்தால் சாதாரணமாக கடந்துவிட வேண்டும் என முடிவெடுத்த பிறகுதான் அவளால் சற்று இயல்பாக முடிந்தது.

ஆனாலும்..., மனதின் ஓரம் முணுக்கென எழும் இந்த வலி எதனால் என்பதை அவளால் இனம் காண முடியவில்லை.

அறைக்கு வெளியே வந்து, தாயை அழைத்து, பெயருக்கு உண்டதாக காட்டிவிட்டு எழுந்து அறைக்குள் புகுந்தவளுக்கு, வாழ்க்கை இனிமேல் மிகப்பெரும் வலியோடு கடந்து போகும் என்பது மட்டும் உறுதியாகத் தெரிந்தது.

அடுத்து வந்த நாட்களில், ஒருவித மோன நிலையில் அவள் இருக்க, தன் முகம் பார்க்க மறுக்கும், பேச மறுக்கும் சுஜாவை என்ன செய்து இயல்பாக்க எனத் தெரியாமல் துவண்டு போனான் தனா.

பள்ளி என்பதால், உன்னிடம் பேசியே ஆகவேண்டும் என அவளிடம் பிடிவாதம் பிடிக்கவும் அவனால் முடியவில்லை. அவன் தன்னிடம் பேச முயல்வது தெரிந்தாலும், அவன் சொல்லப்போகும் கதையை கேட்க அவள் தயாராக இருக்கவில்லை.

பணக்கார வீடுகளுக்கே உரிய, மனைவி சரியில்லை, கிளப்புகளுக்கு அலைகிறாள், குழந்தையை கவனிக்கவில்லை..., இப்படியான கதைகளைத் தவிர, பெரிதாக எதையும் சொல்லிவிடுவான் என அவள் கருதவில்லை. எனவே அவனை முனைப்பாக தவிர்த்தாள்.

ராஜாவுக்கு ஹோம் டியூஷனுக்கு ஏற்பாடு செய்திருக்க, அவனது படிப்பில்

சிறு முன்னேற்றம் ஏற்பட்டது. அனைத்தும் சுலபமாக சென்று கொண்டிருக்க, ஹோம் டியூஷனுக்கு வந்த பெண், அடுத்த மாதத்தில் இருந்து வருவதை தவிர்த்து விட்டாள்.

அவள் வராமல் போனதைப் பற்றி கூட பெரிதாக கவலைப்பட ஏதுமில்லை என்றாலும், அவள் சொல்லிப்போன காரணம்தான் தனாவை குழப்பியது.

அதைப் பற்றி அவன் ராஜாவிடம் விசாரிக்க, அதற்கு அவன் பதில் சொல்ல தயாராக இருக்கவில்லை. அவனிடம் விஷயத்தை எப்படி வாங்குவது எனத் தெரியாமல் திண்டாடிப் போனான். அவள் சொல்லிப் போனதை சாதாரணமாக தள்ளி விடவும் முடியாமல், தனாதான் குழம்பிப் போனான்.

'இதை சுஜாவிடம் சொன்னால்...?', எண்ணியவன் அதை செயல்படுத்த முனைந்தான்.

வழக்கம்போல் பள்ளி சென்றவன், ராஜாவை அழைக்க, "ராஜா..., யுவர் டேட்...", குரல் கொடுத்தவள், மற்ற குழந்தைகளின் பெற்றவர்களிடம் கவனத்தை செலுத்த, தனா தனக்குள் சிரித்துக் கொள்ள, ராஜாவோ, சுஜாவிடம் எதையோ சொல்ல முயன்றான்.

"ராஜா..., நீ கார்ல உக்காந்துக்கோ.., நான் உன் மிஸ்கிட்டே பேசிட்டு வரேன் சரியா...?", ஒரு பிஸ்கட் பாக்கெட்டை கையில் கொடுத்துவிட்டு, அவளைத் தேடி வந்தான்.

அவள் அருகில் நெருங்கியவன், "சுஜா...", அவளை அழைத்தான்.

இதுவரை பள்ளிக்குள் அவளை யாரும் மொட்டையாக பெயர்சொல்லி அழைத்தது கிடையாது. அதிலும்..., அங்கே ஆண் ஊழியர்கள் கிடையவே கிடையாது என்பதால், தன் பெயரச் சொல்லி அழைத்த, ஆண் குரலில் திடுக்கிட்டு திரும்பினாள்.

அங்கே நின்ற தனாவைப் பார்த்தவளுக்கு சட்டென மூச்சடைக்கும் உணர்வு. என்னதான், தான் அவனை தவிர்த்தாலும், தினமும், பிடிவாதமாக தன்

முகம் பார்த்து நிற்கும் அவன் தோற்றமும், எதையோ சொல்லத் துடிக்கும் அவன் பார்வையும், சில வேளைகளில் பிடிவாதமாக தன் முகம் காண வைக்கும் அவன் செய்கையும் இல்லை என அவளால் தன்னையே ஏமாற்றிக் கொள்ள முடியாதே.

'என் பெயரைச் சொல்லி அழைக்காதே...' அவனிடம் சொல்லிவிடத் துடித்த வார்த்தைகள், இதழ் தாண்டி உதிர்க்க மறுக்க, "சொல்லுங்க...", அவள் இதழ்கள் அவளுக்கு துரோகம் இழைத்து, இதைத்தான் உரைத்தது.

"பயப்படாதீங்க..., உங்க மனசுக்குப் பிடிக்காத எதையும் நான் பேச வரலை...", அவளது ஓட்டத்தை அவன் உணர்ந்து கொண்டிருக்கிறான் என்பதை, அவன் வார்த்தைகள் அவளுக்கு புரிய வைக்க, மௌனமாய் தலை கவிழ்ந்தாள்.

'நீ பேசுவது பிடிக்காது என நான் சொன்னேனா?' அவள் மனம் அவனோடு உரையாட, "நான் வெயிட் பண்றேன்...", மற்றவர்கள் முன்னால் காட்சிப் பொருளாக விரும்பாமல் ஒதுங்கி நின்றான்.

அவனது அந்த கண்ணியம் அவளை வசீகரிக்க, தன் புத்தி போகும் திசையை தடுக்க முடியாமல், குழந்தைகளை அனுப்பிவிட்டு, அவனைத் தேடி வந்தாள். அங்கே இருந்த மரத்தடியில் அவன் இருக்க, "ஆபீஸ் ரூம் போய்டலாம்...", அவனை அழைத்துக்கொண்டு சென்றாள்.

சற்று நேரம் அங்கே நிலவிய அமைதியில், 'என்ன சொல்லப் போகிறானோ?' என தடுமாறிப் போனாள்.

அவனோ..., "ராஜாவுக்கு ஹோம் டியூஷன் வைத்திருந்த லேடி டீச்சர்ன்னு நின்னுட்டாங்க. நின்னவங்க..., ராஜா ப்ராப்பரா பீகேவ் பண்ண மாட்டேங்குறான்னு சொல்லிட்டு போய்ட்டாங்க. என்ன செய்தான்னு கேட்டப்போ அதை சொல்ல மறுத்துட்டாங்க...", அவன் தயங்கி நிறுத்த,

"நீங்க ராஜாகிட்டே கேட்டீங்களா?", அவன் அப்படிப்பட்ட பையன் கிடையாதே என்ற தோரணை அவளிடம் வெளிப்பட்டது. அதே நேரம்...,

ஒரு மெல்லிய ஏமாற்றமும் இருந்ததோ?

"கேட்டேன்..., ஆனா..., சைலண்ட்டா இருந்து சாதிக்கறான். என்னால் எதுவும் செய்ய முடியலை. நீங்க கொஞ்சம்...., என்னன்னு கேட்டு சொல்றீங்களா? வர வர..., ரொம்ப கொயட்டா இருக்கான். அவன் மனசுக்குள் என்ன ஒடுதுன்னே கண்டு பிடிக்க முடியலை..", ஒரு மாதிரி வெதும்பிய குரலில் உரைத்தான்.

"கண்டிப்பா கேட்டு சொல்றேன்..", உரைத்தவள், "நீங்க ஏன் ராஜாவை பிக்னிக் அனுப்பலை...? அவன் வந்தால்..., அவனுக்கும் ஒரு ச்சேஞ்சா இருக்குமே..., கிளாஸ்ல எல்லா குழந்தைகளும் வராங்க...".

"பிக்னிக்கா..., அவன் அதைப்பற்றி என்கிட்டே எதுவும் சொல்லலையே...", அவன் தடுமாற,

"அவன் டைரியை பார்த்திருந்தால் உங்களுக்கே தெரிந்திருக்கும்...", குழந்தையை நீ கவனிக்கும் லட்சணம் இதுதான்..., என்ற கோபத்தில் அவள் உரைக்க, தனாவோ.., பதில் சொல்ல முடியாமல் தலை கவிழ்ந்தான்.

"சரி விடுங்க..., நாளைக்கு ஒன் டே பிக்னிக்..., நான் அழைச்சுட்டு போய் பேசறேன். அது மட்டும் இல்லை..., பேரன்ஸ் கூட வரலாம்...", அவனையே கூர்மையாக பார்த்தவாறு உரைக்க, தனாவின் முகம் வேதனையில் கசங்கிப் போனது.

"சாரி...", அவன் உரைக்கத் துவங்க,

"என்ன..., உங்களால் வர முடியாது..., அதானே...", அவள் கேட்க, அவன் தலை சம்மதமாக ஆடியது.

"கண்டிப்பா வந்தே ஆகணுமா?", அவன் கேட்க, "இப்போ வேலைக்கு போற பேரன்ஸால் கண்டிப்பா முடியாது..., சோ...", தோளைக் குலுக்கியவள், "நான் பாத்துக்கறேன்....", அவன் முகம் வாடியது பொறுக்காமல் வேகமாக உரைத்தாள்.

"தேங்க்ஸ்...", உணர்ந்து உரைத்தவன், அமைதியாக அவள் முகம் ஏறிட்டான்.

அவ்வளவு நேரமாக இயல்பாக இருந்த சுஜா, அவன் தன்னை அழுத்தமாக ஏறிடவே, "அவ்வளவு தானே..., வேற எதுவும் இல்லையே...", இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள்.

அவனும்..., முதலில் ராஜாவின் பிரச்சனை ஒரு முடிவிற்கு வரட்டும் என்ற எண்ணத்தில், தானும் உடன் எழுந்தவன், தன்னைத் தாண்டிச் செல்ல முயன்ற அவள் முன்னால், இடைவெளியை குறைத்து நின்றான்.

அவள் திடுக்கிட்டு நிமிர்வதை பொருட்படுத்தாமல், "இன்னும் எத்தனை நாள் இப்படி ஓடுவாய்...?", ஒற்றை புருவம் தூக்கி வினவ, நின்ற இடத்தில் உறைந்தாள் சுஜா.

அவ்வளவு நேரம் இருந்த ஒரு விரைப்புத்தன்மை தொலைந்து போக, கை கால்கள் நடுங்க, மேசையைப் பிடித்து தன்னை நிலை நிறுத்த போராடியவள், அது முடியாமல் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

'எத்தனை நாள் தப்பிக்க முடியும்? நான் தப்பிக்க நினைக்கவே இல்லையே. பேசியே ஆகணும்... ஆனால் முடியுமா?..' எண்ணியவளுக்கு, கதறத் துடித்த மனதை, இருக்கும் இடம் கருதி மறைத்தவள், அங்கிருந்து எழுந்து சென்றாள்.

மறுநாள் காலையில்..., பள்ளிப் பேருந்தில், இருபது குழந்தைகள், அவர்கள் பெற்றோர்கள் என அனைவரும் கிளம்பி விட்டார்கள். சற்று நேரம் அந்த பூங்காவை வலம் வந்தவர்கள், சிற்றுண்டியை அருந்த ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்தார்கள்.

அதே நேரம்..., குழந்தைகளிடம்..., தங்களது பெற்றோரைப் பற்றி, அவர்களுக்கு பிடித்தது, பிடிக்காதது என கேட்க, ஒவ்வொரு குழந்தையும் தங்கள் பெற்றவர்களைப் பற்றி உரைக்க, ராஜா ஒருவித ஏக்கத்தில்

அனைத்தையும் கேட்டிருந்தான்.

அவன் முகத்தில் இருக்கும் ஏக்கத்தைப் பார்த்தவளுக்கு, அது எதனால் என்பது மட்டும் புரியவே இல்லை.

இறுதியாக..., அவனை உரைக்கச் சொல்ல, சற்று நேரம் அமைதியாகவே நின்றான். சுஜாதா அவனை நெருங்கி, "ஏதாவது பேசு ராஜா...", அவன் அருகில் மண்டியிட்டு உரைக்க,

"அப்பா வெளியே கூட்டிப் போவாங்க..., பொம்மை வாங்கித் தருவாங்க, அம்மா சாப்பாடு ஊட்டுவாங்க, பாடம் சொல்லிக் கொடுப்பாங்க..., சாப்பிடலன்னா அடிப்பாங்க..., விளையாடப் போனால் திட்டுவாங்க...", வரிசையாக உரைத்துக் கொண்டிருந்தவன்,

"அம்மா அப்பான்னா இதெல்லாம் செய்வாங்களா? இப்படித்தான் இருப்பாங்களா? எனக்குத் தெரியாது...", ஒரு மாதிரி உரைத்தவன்..., "எங்க அம்மா.., அம்மா...", தேம்பித் தேம்பி அழத் துவங்கவே, அங்கிருந்த அனைவரின் கண்களும் கலங்கி விட்டது.

"ராஜா...", அவனை அள்ளிக் கொண்டவள், "ஜஸ்ட் அ மினிட்...", மற்ற ஆசிரியர்களிடம் பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டு, அவனை அழைத்துக் கொண்டு மறு பக்கம் விரைந்தாள்.

"ராஜா குட் பாயாச்சே..., இப்படி அழுவாங்களா என்ன?", அவனை தன் கைகளில் இருந்து இறக்கியவள் கேட்க, வேகமாக தன் முகத்தை கைகுட்டையால் துடைத்துக் கொண்டான்.

அங்கே இருந்த மான் கூட்டங்களை அவனுக்கு வேடிக்கை காட்டியவள், "ஏன் ராஜா..., உனக்கு அந்த டியூஷன் மிஸ்ஸை பிடிக்கலையா? அவங்க உன்னை அடிச்சாங்களோ...?", மெதுவாக விஷயம் என்னவென்று அறிய முயன்றாள்.

"இல்ல..., அவங்க என்னை அடிக்கவே இல்லையே. எனக்கு அவங்களை

ரொம்ப புடிக்கும்...", வேகமாக உரைத்தான்.

அவன் பேச்சில், அவள் சற்று குழம்பித்தான் போனாள். அதை ஒதுக்கியவள், "அவங்க ராஜாவுக்கு என்னவெல்லாம் சொல்லிக் கொடுத்தாங்க?".

"அவங்க..., ஏ பி சி டி..., அ ஆ..., ஒன் டூ திரி..., எல்லாம் சொல்லிக் கொடுத்தாங்க..., எனக்கு எல்லாமே தெரியும்...", அவ்வளவு சந்தோசம் அவனிடம்.

"வாவ்..., வெரி குட்..., அப்போ அவங்க குட் பாய் சொல்லியிருப்பாங்களே...", அவள் துருவ,

"சொன்னாங்களே...", வேகமாக உரைத்தவன், "அவங்க ஏன், உங்களை மாதிரி எனக்கு முத்தம் கொடுக்கவே இல்லை...? நான் கேட்டதுக்கு தர மாட்டேன்னு சொல்லிட்டாங்க....", ஒரு மாதிரி கோபமாக உரைக்க, சற்று திடுக்கிட்டாள்.

"என்னம்மா சொல்ற...?", தன் அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு கேட்டாள்.

"ஆமா..., அன்னைக்கு பைவ் லெட்டர் படிச்சதுக்கே நீங்க கிஸ் பண்ணீங்கல்ல..., ஆனா..., அவங்க எல்லா லெட்டரும் படிச்ச பிறகும் ஏன் கிஸ் கொடுக்கலை...?", அதை அவனுக்கு தெரிந்தே ஆகவேண்டும் என்ற வேகம்.

இதற்கு என்ன பதில் சொல்வது...? சற்று தடுமாறியவள், அவனுக்கு புரிய வைக்க முயல, அவனோ..., "நான் எனக்கு குட் போட வேண்டாம், ஒரே ஒரு முத்தம் மட்டும் குடுங்கன்னு சொன்னேன்..., அதுக்கு..., அதுக்கு..., என்னை அடிச்சுட்டாங்க...", முகம் அழுகையில் துடிக்க உரைத்தவன்,

"வள்ளி என்னை மடியில் உக்காத்தி வச்சுப்பா தானே. அவங்களை மடியில்

உக்காத்தி வச்சுக்க சொன்னா..., என்னை பேட் பாய்ன்னு சொல்லிட்டாங்க. நான் பேட் பாயா...? அதனால் தான் அவங்க இப்போ எனக்கு டியூஷன் சொல்லித்தர வரலையா...?", ஏக்கமாக அவள் முகம் பார்த்தான்.

"யார் சொன்னது..., எங்க ராஜா குட் பாயாச்சே...", அவனை தூக்கிக் கொண்டு, அங்கிருந்த சிமென்ட் பெஞ்சில் அமர்ந்தவள், அவனை மடியில் அமர வைத்துக் கொண்டாள்.

'உன் அம்மா எங்கே...?' என அவனிடம் நேரடியாகக் கேட்க முடியாமல் தடுமாறிப் போனாள்.

"நிஜமா...?", அவன் விழிகள் மின்ன கேட்க, "நிஜமாடா செல்லம்...", அவன் நெற்றியில் முட்டினாள்.

அவள் செய்கையில் கிளுக்கிச் சிரித்தவன், "நீங்க எனக்கு அம்மாவா இருந்திருக்கலாம்...", திடுமென உரைக்க, தேகம் மொத்தமும் ஒரு சிலிர்ப்பையும், பதற்றத்தையும் உணர்ந்தாள்.

"அப்படில்லாம் சொல்லக் கூடாது ராஜா. நம்ப அம்மா எப்பவுமே அம்மாதான். அதே மாதிரி..., எல்லார்கிட்டேயும் முத்தம் கேக்கக் கூடாது. அது பேட் ஹேபிட்..., அதனால்தான் உன் டியூஷன் மிஸ் உனக்கு முத்தம் கொடுக்கலை சரியா...", அவன் வயதுக்கு, அவன் அளவுக்கு சொல்லி புரிய வைக்க முயன்றாள்.

அவனோ..., முகம் தொங்கிப் போக..., "அப்போ நீங்க மட்டும் கொடுத்தீங்க", சின்னக் குரலில் வினவ,

"அதுவா..., இந்த குட்டிப் பையனை மிஸ்க்கு ரொம்ப புடிக்குமா அதான் கொடுத்தேன். உனக்கு பிடிக்கலன்னா இனிமேல் கொடுக்கலை...", அவள் முறுக்கிக் கொள்ள...,

"இல்ல..., இல்ல..., எனக்கும் உங்களை ரொம்ப புடிக்கும்...",

அவள் கழுத்தை கட்டிக் கொண்டான்.

ஒரு ஆசிரியை ஒரு குழந்தையிடம் மட்டும் தனியாக பாசம் வைக்கக் கூடாதுதான். ஆனால்..., பாசத்துக்காக ஏங்கும் குழந்தையை வாட விட முடியாமல், பெண்மைக்கே உரிய தாய்மை அவளை தூண்டியது.

அவன் பிஞ்சு கைகளுக்குள் அடங்கி இருந்தவள், "ராஜா..., உங்க அப்பா உன்னை வெளியே எங்கேயும் கூட்டி போக மாட்டாங்களா?", மென்மையாக வினவ,

அவள் பிடியில் இருந்து இறங்கியவன், "அது..., அது..., யாரை சொல்றீங்க...?", அவளிடமே கேட்டான்.

"என்னடா இப்படி கேக்குற..? அதான் தினமும் உன்னை ஸ்கூல்ல விட்டு, திரும்ப வீட்டுக்கு கூட்டி போறாரே..., அவர்தான்...".

"அது.." அவன் அடுத்து சொன்ன வார்த்தைகளைக் கேட்ட சுஜாவின் காலடியில் பூமி நழுவும் உணர்வு.

பகுதி - 4.

ராஜா சொன்னதைக் கேட்ட சுஜாவுக்கு தன் காதையே நம்ப முடியவில்லை. தான் சரியாகத்தான் கேட்டோமா? தனாவை தன் அண்ணன் என்றா சொன்னான்? ஒரு வேளை தெரியாமல் சொல்லியிருப்பானோ? இல்லையே..., அதற்கு வழி இல்லையே...,

மிகவும் தெளிவாக என் அண்ணா..., தனாண்ணா..., என அழுத்திச் சொன்னானே. அப்படியென்றால்..., உண்மையாகவே இவன் அவரது தம்பியா? அதனால்தான் அவ்வளவு தைரியமாக என்னை பார்த்தாரா? மனதுக்குள் சில்லென எதுவோ பாயும் உணர்வு.

அப்போ..., என் மனம் திருமணம் ஆன ஆணின் பின்னால் செல்லவில்லை. என் உள்ளுணர்வு உணர்த்தியது பொய்யில்லை. மனதுக்குள் அப்படி ஒரு நிறைவு..., சந்தோசம்..., உற்சாகம்..., இத்தனை நாள்

மனதை அழுத்திய ஒரு விஷயம் விடை பெற்று, மனம் லேசானது போன்ற உணர்வு.

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ராஜாவை மீண்டுமாக நெஞ்சோடு அணைத்தவள், "அவர் உங்க அண்ணாவா? அப்போ அப்பா...?", தன்னை மீட்டுக் கொண்டவள் வினவ,

"அவர் செத்துட்டார்...", குழந்தை அவனுக்கு, அதை பாலிஷாக சொல்லத் தெரியவில்லை.

"ஓ..., சற்று நேரம் விஷயத்தை உள்வாங்கியவள் அமைதியாக இருக்க..., "என் பெரியண்ணா தனசேகர்..., சின்னண்ணா குணசேகர்..., நான் ராஜசேகர்...", இயல்பாக உரைக்க...,

"ராஜா..., அப்போ அம்மா...", அவள் கேட்க, என்ன பதில் சொல்வது எனத் திணறியவன்,

"அது..., அவங்க அந்த ரூமுக்குள்ளே தான் இருப்பாங்க. என்னை அங்கே போக விட மாட்டாங்க. நான் அங்கே போனால்.., எனக்கு உடம்பு சரியில்லாமல் போயிடுமாம்...", தனக்குத் தெரிந்த வரையில் அவளுக்கு புரிய வைக்க முயன்றான்.

அவளால் புரிந்துகொள்ள முடிந்தது..., அவனது தாய் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என. "அவங்க வெளியவே வர மாட்டாங்களா ராஜா...", முழுமையாக அறிந்துகொள்ளும் வேகம் அவளிடம்.

"அது..., அவங்களால் நடக்க முடியாதாம்...", அவள் தோளில் வாகாக சாய்ந்து கொண்டான்.

"முடியாதாம்ன்னா..., நீ அவங்களை பாக்க மாட்டியா...?", அவள் கேட்க, அவன் தலை மறுப்பாக ஆடியது.

"நீ ஏன் அது உங்க அண்ணாதான்னு என்கிட்டே சொல்லவே இல்லை...?",

அவன் அதைச் சொல்ல வெகுவாகத் தயங்கியதை மனதில் கொண்டே கேட்டாள்.

"ம்..., எங்க குணா அண்ணாவுக்கு நான் அவங்களை அண்ணான்னு சொன்னால் பிடிக்காது. யாராவது வீட்டுக்கு வந்தால், என்னை என் ரூமை விட்டே வெளியே வரக் கூடாதுன்னு அடிப்பாங்க. அதான்..., எங்க தனா அண்ணாவையும் நான் அண்ணான்னு சொல்ல மாட்டேன்...", அந்த பிஞ்சு மனதின் வேதனையை, அவனை அவ்வாறு நடத்துவதன் காரணம் புரியாத குழப்பத்தை, அவன் வார்த்தைகள் வெளியிடுவதை வேதனையாய் உள் வாங்கினாள்.

"இனிமேல் அப்படிச் செய்ய மாட்டாங்க சரியா...?", இதைப் பற்றி தனாவிடம் பேச வேண்டும் என முடிவெடுத்தாள்.

சற்று நேரத்துக்கு முன்னர்..., 'நீங்க என் அம்மாவா இருந்திருக்கலாம்...' என அவன் வெளியிட்ட வார்த்தைகள்.., இப்பொழுது அவனுக்குத் தாயாகவே அவளை உணரச் செய்தது.

"மிஸ்..., உங்களை அங்கே தேடறாங்க...", மேரி ஆயா அவளைத் தேடி வர, தாங்கள் வந்து நேரமாகிவிட்டதை உணர்ந்தவள், அவரோடு சென்றாள்.

அடுத்ததாக..., அங்கே இருந்த விலங்குகள், பறவைகள், பாம்பு பண்ணை என அனைத்தையும் சுற்றி வர, அவள் கையை பற்றியபடியே சுற்றி வந்தான் ராஜா.

அங்கே இருந்த குரங்கு கூட்டத்தை பார்வையிட, தாயின் மடியை கட்டிக்கொண்டு அமர்ந்திருந்த தாய்க் குரங்கையும், தாய்க் குரங்குக்கு ஒரு வாழைப்பழத்தை எடுத்து வந்து கொடுத்த மற்றொரு குரங்கையும் பார்த்த சுஜாவுக்கு, அவ்வளவு நேரமாக இருந்த மனநிலை சட்டென மாறிப் போனது.

'இதை எப்படி நான் மறந்தேன்...? என் நிலையை நான் எந்த நேரத்திலும்

மறக்கக் கூடாதே...', மனம் வேதனையில் துடிக்க, ராஜாவின் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

'என்ன...?' என்பதுபோல் அவளை நிமிர்ந்து பார்த்தவன், அவள் கண்களில் நீரின் பளபளப்பைக் காணவே..., "மிஸ்..., அழறீங்களா?", கேட்டே விட்டான்.

"இல்லம்மா..., மிஸ் கண்ல தூசி அதான்...", வேகமாக தன் கண்களை துடைத்துக் கொண்டாள்.

மாலை வரை அவளிடம் ஒருவித அமைதி தென்பட, "என்ன மிஸ்..., ராஜா உங்களை ரொம்ப டிஸ்டப் பண்ணிட்டான் போல..., சைலண்ட்டா வரீங்க...", சாந்தி மிஸ் கேட்க, அவளுக்கு மெல்லிய புன்னகையை உதிர்த்தவள், பதில் சொல்லும் நிலையில் இருக்கவில்லை.

நான்கு மணி ஆகவே..., அனைவரும் பள்ளிக்குத் திரும்பிவிட, பெற்றவர்கள் பிள்ளைகளை கூட்டிக் கொண்டு கிளம்ப, ராஜாவை அழைத்துச் செல்ல, தனா வந்திருந்தான்.

அவன் கண்கள்..., ஒருவித ஆர்வத்துடம் அவளை மொய்க்க, 'அப்படிப் பார்க்காதே..., உனக்கு தகுதியில்லாதவள் நான்...', மனதுக்குள் அரற்றினாள்.

இரண்டு முப்பதுக்கே மற்ற பிள்ளைகள் சென்றிருக்க, பிக்னிக் வந்தவர்களும், சென்றுவிட, அங்கே இவர்கள் மட்டும் தனித்திருந்தார்கள்.

இன்று தனா டிரைவரை அழைத்து வந்திருக்க, "சண்முகம்..., ராஜாவை வீட்டுக்கு கூட்டி போய் விட்டுட்டு வாங்க...", அவன் உரைக்கவே, சண்முகம் ராஜாவை அழைத்துச் செல்ல முயல,

"மிஸ்..., நான் உங்களோடவே இன்னும் கொஞ்ச நேரம் இருக்கவா...?", தனாவை சற்று பயப் பார்வை பார்த்தவாறு, அவளிடம் வினவினான்.

சுஜா இதற்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் தடுமாற, "இன்னும் கொஞ்ச நாளில், அவங்களே நம்ம வீட்டுக்கு வருவாங்க ராஜா. இப்போ நீ போ...", தனா உரைக்க, "நிஜமா...?", ராஜா குதூகலிக்க, சண்முகம் மலர்ந்த முகத்தோடு இருவரையும் ஏறிட்டான்.

டிரைவர் முன்பு எதையும் மறுத்து பேச முடியாமல் அவள் வேறு எங்கோ பார்த்தவாறு நிற்க, "நிஜமாதாண்டா...", தனா அழுத்தி உரைக்கவே..., சுஜாவை திரும்பிப் பார்த்தவாறு, சண்முகத்தோடு சென்றான்.

அவர்கள் செல்லவே..., "நீங்க நினைப்பது நடக்காது...", அவள் வேகமாக உரைக்க,

"அதை இங்கேயே நின்னு பேசணுமா? வீட்டுக்கு போயிடலாமே...", அங்கே இருந்த ஆயாமாரின் பார்வை சுவாரசியமாக இவர்கள் மேல் படிவதை உணர்ந்தவள், "மேரி ஆயா..., கிளாஸ் ரூமை பெருக்கிட்டு..., லாக் பண்ணி, கீயை செக்கியூரிட்டி கிட்டே கொடுத்துட்டு போங்க...", உரைத்தவள், அலுவலகத்தை பூட்டிவிட்டு, பள்ளிக்கு பின்னால் இருந்த தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

அழைப்புமணியை அவள் ஒலிக்கவிட, வெளியே வந்த பாலாமணி, தன் மகளையும், அவள் பின்னால் நின்ற தனாவையும் பார்த்து சற்று குழம்பினாலும், "வாங்க...", வீட்டுக்கு வந்தவரை உள்ளே அழைத்தார்.

சுஜா தனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோல் வீட்டுக்குள் சென்று மறைய, ஹாலில் சோபாவின் அமர்ந்தவனுக்கு, அங்கே வேலை செய்யும் ராஜி, தண்ணீர் கொண்டுவந்து கொடுக்க, மறுக்காமல் வாங்கிக் குடித்தவன், பாலாமணியை ஏறிட்டான்.

"சொல்லுங்க தம்பி..., ராஜாவைப் பற்றி பேசணுமா? அப்படின்னா சுஜாவுக்குத்தான் தெரியும்...", அவளை அழைக்கப் போக,

"இல்ல..., உக்காருங்க..., நான் உங்ககிட்டேதான் பேசணும்...",

அவன் இவ்வாறு உரைக்கவே..., சற்று குழம்பியவராக, அவனது எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தார்.

"நான் சுற்றி வளைத்து எதுவும் பேச விரும்பவில்லை. உங்க பொண்ணு சுஜாவை நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் படுறேன். உங்களுக்கு எங்க குடும்பத்தைப் பற்றியும், ராஜாவைப் பற்றியும் நன்றாகவே தெரியும்", அவன் நிறுத்த...,

"என்ன தம்பி சொல்றீங்க...", நம்ப முடியாமல் கேட்டவர், அடுத்த வார்த்தை சொல்ல முடியாமல் தடுமாற,

"அம்மா..., இது சரி வராதுன்னு சொல்லிடுங்க. அவரை போகச் சொல்லுங்க...", அறையில் இருந்து புயல் வேகத்தில் வந்தவள் தாயிடம் பாய்ந்தாள்.

"சுஜா..., கொஞ்சம் பொறுமையா...?", தன் மகளின் வாழ்க்கை விடிந்து விடாதா என்ற ஏக்கம் அவரை இவ்வாறு பேசத் தூண்டியது.

"ஏன்..., என் நிலைமையை இங்கேயும் வெளிச்சம் போட்டுக் காட்டணுமா? இவரும் என்னை தூக்கிப் போட்டுட்டு போகணுமா? வேண்டாம்மா..., நான் தாங்க மாட்டேன்...", அவள் பேச்சிலேயே..., அவள் தன்மேல் கொண்டுள்ள விருப்பத்தை கண்டுகொண்ட தனா..., என்ன ஆனாலும் அவளை விடுவதில்லை என்ற முடிவிற்கு வந்தான்.

ஆனாலும்..., தன்னை திருமணம் செய்துகொள்ள முடியாத அளவுக்கு அவளுக்கு என்ன பிரச்சனை என்பதில் மனம் சுழன்றது.

"அம்மாடி..., அப்படிச் சொல்லாதே..., காலம் முழுக்க உன்னை இப்படி தனி மரமா பாக்கும் கொடுமையை இந்த அம்மாவுக்கு கொடுத்துடாதே...", தானும் அவளிடம் கெஞ்சினார்.

"என்னைப்பற்றி முழுசா தெரிந்த நீங்களே இப்படிச் சொன்னால்...", அவள் தேம்ப, இதற்கு அவரால் என்ன பதில் உரைக்க முடியும்?

“ஒரு நிமிஷம்..., உங்க பக்கம் என்ன தயக்கம்னு எனக்குத் தெரியலை. ஆனா..., என் பக்கம் ராஜா இருக்கான். அவன்...”, அவன் துவங்கவே,

“ராஜா உங்க தம்பின்னு எனக்குத் தெரியும்...” அவன் கண்களில் வியப்பைக் காணவே..., “ராஜா இன்னைக்குதான் சொன்னான்..., ஆனா..., இங்கே அது பிரச்சனையே இல்லை. நான்தான்..., எனக்குதான்..., நான் உங்களுக்கு பொருத்தமானவள் கிடையாது. நீங்க இதைப் பற்றிதான் இங்கே பேச வரீங்கன்னு தெரிந்திருந்தால், நான் உங்களை இங்கே அழைத்தே வந்திருக்க மாட்டேன்.

“போதும்..., இதற்குமேல் எதுவும் பேச வேண்டாம். அப்படியே பேசினாலும், காயங்கள்தான் மிஞ்சும்..., வேண்டாம்...”, அவள் கை கூப்பி மன்றாட, அவனால் அதற்குமேல் எதுவும் பேச முடியவில்லை.

“நாம இன்னும் பேசவே ஆரம்பிக்கலை சுஜா...”, வேகமாகத் துவங்கியவன், சுஜாவின் தாயின் கண்ணசைவை உணர்ந்து, அமைதியானான்.

“நீங்க கிளம்புங்க தம்பி...”, பாலாமணி உரைக்க, அவரிடம் விடை பெற்றவன் அங்கிருந்து வெளியேறினான்.

வீட்டுக்கு வந்தவனுக்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை. சுஜாவும், தாயும் பேசியதில் இருந்து, விஷயம் பெரிதென்பது அவனுக்கு புரிந்தது.

‘ஏதாவது சொல்ல முடியாத அளவுக்கு வியாதியா இருக்குமோ...?’
‘அப்படின்னா அதை சொல்வதில் எந்த விதமான தயக்கமும் இருக்காதே...’ பலவிதமாக எண்ணி குழம்பிப் போனான்.

அடுத்த நாள் முதல்..., ராஜாவை பள்ளிக்கு அனுப்பவும், அழைத்து வரவும் சண்முகத்தையே நியமித்தான். ஒரு வேளை தனது விலகல் அவளை தன்னிடம் கொண்டு வருமோ என்ற அவனது எதிர்பார்ப்பு, அவனை அவ்வாறு செய்யத் தூண்டியது.

அவன் ஏதோ யோசனையில் இருக்க..., அவனைக் கலைத்தது கலாவின் வருகை.
"என்ன கலா...?", அவளது பதட்டம் உணர்ந்து அவன் வினவ,

"சார்..., அம்மா மூச்சு விட முடியாமல் சிரமப் படுறாங்க..., கண்டிப்பா ஹாஸ்பிடல்ல சேர்த்தே ஆகணும்...", அவள் உரைக்கவே, அடுத்த நிமிடம், ஆம்புலன்சை வர வைத்து தாயை மருத்துவமனையில் அனுமதித்தான்.

மருத்துவர்கள் அனைவரும் கை விரிக்க..., இன்னும் ஒரு வாரம், இல்லையா இரண்டு வாரம்தான். வீட்டுக்கு கூட்டி போறதா இருந்தாலும் சரி, இல்லையென்றால் இங்கேயே இருப்பதாக இருந்தாலும் சரி..., என அவர்கள் உரைக்க, தாயை மருத்துவமனையிலேயே வைத்திருக்க தீர்மானித்தான்.

குணா, தாயை ஒரு முறை வந்து பார்த்ததோடு சரி..., அதன் பிறகு அவரை வந்து பார்க்கவில்லை. என்னதான் மருத்துவமனையில் செவிலி அவரை கவனித்துக் கொண்டாலும், முடிந்த அளவு தாயோடு இருந்தான் தனா.

அவருக்கு நினைவு வருவதும், தப்புவதுமாக இருக்க, நினைவு வரும் நேரங்களில்..., தனாவின் திருமணத்தைப் பற்றியும், ராஜாவைப் பற்றியுமே அதிகம் கவலைப் பட்டார்.
இருக்கும் சூழலில் எப்பொழுது வேண்டுமானாலும் எதுவும் நடக்கலாம் என இருக்க, ராஜாவை பள்ளிக்கு அனுப்பவில்லை.

ஒரு வாரம் கடந்த நிலையில், ராஜா பள்ளிக்கு வராமல் போகவே, சற்று தவித்துதான் போனாள் சுஜா. தனாவோடான வாழ்க்கையை ஏற்கவும் முடியவில்லை. அவன் இல்லாத வாழ்க்கையை நினைக்கவும் முடியவில்லை என்ற நிலைக்கு அவள் தள்ளப்பட்டாள்.

ராஜாவை பள்ளி மாற்றி விட்டாரோ..., இனிமேல் இங்கே வர மாட்டாரா? மனம் சற்று துவண்டுதான் போனது.

அன்று இரண்டு நாட்களுக்குப் பிறகு, பானுமதி அம்மாவுக்கு நினைவு திரும்ப, ராஜாவை பார்க்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

பொதுவாக தனா, ராஜா தாயைப் பார்க்க அனுமதிப்பதில்லை. அவரது கஷ்டம் அவனை தாக்க வேண்டாம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அவனது தாய் இவர்தான் என அவன் மனதில் அழுத்தமாக பதிய வேண்டாம் என அவன் எண்ணினான்.

இன்று அவரது கோரிக்கையை அவனால் மறுக்க முடியவில்லை. சண்முகத்திடம், ராஜாவை அழைத்துவரச் சொல்ல, மருத்துவமனைக்கு மிகுந்த பயத்தோடு வந்த ராஜா..., அந்த அறைக்குள் நுழைந்தவன், கட்டிலில் இருந்த தாயைப் பார்த்துவிட்டு, தனாவின் அருகில் போய் நின்றுகொண்டான்.

"ராஜா..." குரல் குழற அழைத்தவர், நடுங்கும் கரத்தால் அவனைத் தொட முயல, அவனோ..., தனாவை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

அவன் செய்கை பானுமதியை கலங்க வைத்தாலும், அவன் தனாவிடம் ஒட்டுதலாக இருப்பது சற்று ஆறுதலைக் கொடுத்தது. மௌனமாக அவனை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தார். அப்படியே தன் கணவனின் மறு வார்ப்பாக இருந்த அவனை கண்களில் நிறைத்தார்.

தாயைக் கண்டுகொள்ளாமல்..., "நான் ஸ்கூலுக்கு போறேன். எனக்கு எங்க மிஸ் வேணும். அவங்களை வீட்டுக்கு கூட்டி வரேன்னு சொன்னீங்க. இப்போ என்னையும் ஸ்கூல்க்கு அனுப்பவே இல்லை. பொய் சொன்னீங்க தானே..." ஒரு வாரமாக சுஜாவை பார்க்க முடியாத ஏக்கம் அவனிடம் வெளிப்பட்டது.

ராஜாவின் பேச்சில்..., பானுமதியின் கண்கள் ஒளிர, 'என்ன சொல்கிறான்?' மகனை ஏறிட்டார்.

தாயிடம் எதையும் மறைக்க விரும்பாமல், "அவமேல் ஆசைப்பட்டேன்.

ஆனா..., என்ன விஷயம்னு தெரியலை...., அவ மறுத்துட்டா...", பள்ளியில் இதுவரை நடந்ததை உரைத்தான்.

"ரா..ஜா..., நாளை..க்கு அவங்..களை வீட்டு..க்கு கூட்டி வா சரியா...."., பானுமதி ராஜாவிடம் உரைக்க, வேகமாக தலை அசைத்தான்.

"அம்மா..., அவ வருவாளா என்னன்னு தெரியலையே..."., அவன் தயங்க, "கண்டிப்பா வருவா..., அவ வீட்டு பெரியவங்களையும் வரச் சொல்..."., அவனிடம் உரைத்தவர்,

"என்னை வீட்டுக்கு கூட்டி போய்டு..."., இவ்வளவையும் பேச அவருக்கு அரைமணி நேரம் வேண்டி வந்தது.

அன்று மாலையே தாயை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டவன், மறுநாள் காலையில், ராஜாவை அழைத்துக்கொண்டு, சுஜாவின் வீட்டுக்குச் சென்றான்.

அன்று அரசாங்க விடுமுறை ஆகையால் பள்ளி விடுமுறை என்பதால், நேராக அவள் வீட்டுக்கே சென்றான்.

ஒரு வாரப் பிரிவு சுஜாவை அவன் வருகையை ஏற்க வைக்க, அவன் வந்த விஷயத்தை சொன்னபொழுது மொத்தமாக நிலை குலைந்தாள்.

"நான் வர மாட்டேன்..."., அவள் பிடிவாதமாக உரைக்க,

"என் அம்மாவின் கடைசி ஆசை..."., அவனது இந்த வார்த்தைகள் அவளை மேலே பேச விடவில்லை.

ஆனாலும்..., அங்கே சென்றால் என்ன நடக்கும் என ஓரளவு யூகித்தவள், "அம்மா..., ராஜாவை கொஞ்சம் வெளியே கூட்டி போங்க..."., அவள் உரைக்கவே, நெஞ்சம் கனக்க..., அவனை அழைத்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

"நீங்க என்ன நினைச்சுட்டு இங்கே வந்திருக்கீங்கன்னு எனக்குப் புரியுது. ஆனால்...", குரல் அடைக்க, அதைச் செருமியவள், "நான்..., என்னால்..., ஒரு குழந்தைக்கு தாயாக முடியாது....", திணறி, திண்டாடி, தவித்து..., ஒரு வழியாக விஷயத்தை உரைத்து விட்டாள்.

"ஒரு வருஷத்துக்கு முன்னாடி..., நானும் என் அப்பாவும் போன கார் விபத்துக்கு உள்ளாகி..., அப்பா...."", கேவியவள்..., நான் சீட் பெல்ட் போடாததால்..., டோர் திறந்து வெளியே விழுந்து..., அங்கே கிடந்த கம்பி..."", அவள் முகத்தை மூடிக்கொண்டு கதறி விட்டாள்.

அவளுக்குப் பின்னால் இப்படி ஒரு சோகம் இருக்கும் என்பதை உணராத தனா, இதைக் கேட்டு துடித்துப் போனான். ஆனாலும்..., அவனும் சாதாரண மனிதன் தானே..., அவனுக்கும் குழந்தை குட்டி என வாழ ஆசை இருக்கும் தானே.

அப்படி மட்டுமே அவன் எண்ணியிருந்தால்..., ஐந்து வருடங்களுக்கு முன்பே அவனுக்கு திருமணம் முடிந்திருக்கும். அவன் கையில் கைக்குழந்தையாக தவழ்ந்த ராஜாவைப் பற்றி எண்ணியதால் மட்டுமே, அவன் வாழ்க்கையைப் பற்றி எண்ணாமல், அவனுக்காக வாழ்ந்தான்.

ஆனால்..., ஒரு குழந்தையை பெண் துணை இல்லாமல் வளர்க்க முடியாது என்பதை, அவன் அறிந்த பொழுது, எத்தனையோ பெண்களை அவனும் திருமணம் முடிக்க பார்த்தான் தான். ஆனால்..., யாரும் ராஜாவின் பொறுப்பை ஏற்க தயாராக இருக்கவில்லை.

எப்பொழுது சுஜாவைப் பார்த்தானோ..., அவள், அவன்மேல் கொண்ட அக்கறையை, பாசத்தை உணர்ந்தானோ..., அப்பொழுதே..., இவள் தன் வாழ்க்கைத் துணையாக வந்தால் நன்றாக இருக்கும் என எண்ணினான். அதற்காக..., ராஜாவுக்காக என்று மட்டும் அவன் மனதை ஏமாற்ற அவன் தயார் இல்லை.

அவனது மனதுக்குள் முதல் முறையாக நுழைந்த பெண்ணை, விட்டுகொடுக்க

அவன் தயாராக இருக்கவில்லை என்பது மட்டுமே உண்மை. ராஜாவைப் பற்றி அறிந்தால் என்ன சொல்வாளோ என அவன் தவிக்க, அதையும் அவள் சாதாரணமாக எடுத்த பிறகு, அவன் கொண்ட நிம்மதிக்கு அளவில்லை.

அவள் மனதிலும் தான் இருப்பதை என்று உணர்ந்தானோ, என்றைக்காக இருந்தாலும், அவள்தான் தன் மனைவி என்பதில் உறுதியாக இருந்தான். எனவே..., இப்பொழுது அவள் உரைத்த விஷயம், சிறு அதிர்ச்சியை கொடுத்தாலும், பேரதிர்வை கொடுக்கவில்லை.

"சரி..., அதற்கும்..., நீ என்னை மறுப்பதற்கும் என்ன சம்பந்தம்...?", அவன் வெகு சாதாரணமாக கேட்க, தான் சொன்னதை அவன் சரியாக புரிந்து கொள்ள வில்லையோ என திகைத்து நிமிர்ந்தாள்.

"திருமணம் என்பது ரெண்டு மனசோட சங்கமம் தான். குழந்தை என்பது கடவுள் கொடுக்கும் வரம். எத்தனையோ தம்பதிகளுக்கு அந்த கொடுப்பனை இல்லாமல் போகுது. அப்போ.., அவங்க எல்லாம் கணவன் மனைவியா வாழ தகுதி இல்லாதவங்களா என்ன...?", அவன் நிதானமாக கேட்க, தான் கேட்பது மெய்யா, பொய்யா என உறைந்து போனாள்.

"எனக்கு நீ பிள்ளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.., என்ற நிபந்தனையில் நான் உன்னை திருமணம் செய்தால்..., என் நேசம் அங்கே தோற்றுப் போகும். என் அன்பு தோற்பதை நான் விரும்பவில்லை. இப்போ சொல்..., என்னை திருமணம் செய்ய சம்மதமா...?", அவன் கேட்க வாய் வார்த்தை இன்றி மௌனி ஆனாள்.

"ஆனா..., என்கிட்டேயும் ஒரு சிக்கல் இருக்கு. என்னை கட்டிக்கணும்னா, மத்தவங்க சொல்ற மாதிரி..., ராஜா உனக்கு இலவச இணைப்பா வருவான். அவனுக்கு நீ அண்ணியா இல்லை..., அம்மாவா இருக்க வேண்டி இருக்கும். இப்படி ஒரு குழந்தையோடு இருப்பவன் ஒத்து வருவானான்னு நீதான் யோசிக்கணும்...", வெகு இயல்பாக, அவள் குறையை அவன் கடந்து செல்ல, நம்ப முடியாமல் திகைத்தாள்.

"இன்னொரு விஷயம்..., உனக்கு ஒரு குழந்தை கண்டிப்பா வேணும்னு நீ

நினைத்தால்..., தாராளமாக நாம் ஒரு குழந்தையை தத்து எடுக்கலாம்...", அவன் உரைக்க,

"ராஜாவையே தத்து எடுத்துக்கலாம்...", அவள் வேகமாக உரைக்க, ராஜாவுக்கு முழுமையாக தாயாக மாற விரும்பும் அவளை, இப்பொழுது அதிகம் நேசித்தான்.

"உன்னை என் மனைவியா அடைய நான் புண்ணியம் செய்திருக்கணும்", அவன் சொல்ல,

"இந்த வார்த்தையை நான் சொல்லணும். உங்களுக்கு ஒரு வாரிசை பெற்று கொடுக்க முடியாதுன்னு சொன்ன பிறகும், உங்க நேசம் மாற வில்லையே..., அப்போ..., இப்படி ஒரு அன்பை பெற நான்தான் தவம் செய்திருக்கணும்...", அவள் கையெடுத்து கும்பிட்டாள்.

அதை வேகமாக தடுத்தவன், அவள் கையை இறக்கிவிட்டு, "இப்படியெல்லாம் செய்து என்னை பெரிய மனுஷன் ஆக்காதே. எனக்குள்ளும் சுயநலம் ஒட்டிக்கிட்டுதானே இருக்கு...", ராஜாவைப் பற்றிய நினைவில் அவன் உரைக்க,

"சுயநலம் இருந்திருந்தால்..., நீங்க இவ்வளவுநாள் காத்திருக்க மாட்டீங்க", அவள் பட்டென உரைக்க, உரிமையாய் அவள் கை பற்றியவன்,

"ராஜாவைப் பற்றி உன்கிட்டே சொல்லணும்...", அவன் உரைக்கவே,

"இப்போ நாம முதல்ல அத்தையை பார்க்கப் போகணும். அவங்க..., இந்த கல்யாணத்துக்கு சம்மதிப்பாங்களா?", அவள் குரலில் மெல்லிய நடுக்கம்.

அதை உணர்ந்தவன்..., "நம் அந்தரங்கத்தை யாரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டிய அவசியம் கிடையாது சுஜா...", தனா அழுத்திச் சொல்ல, இப்பொழுது அவனை இறுகத் தழுவி இருந்தாள் சுஜா.

பகுதி - 5.

தனா, சுஜாவை தன் வீட்டுக்கு அழைத்துச் செல்ல, முதல் முறையாக அந்த வீட்டின் பிரம்மாண்டம் அவளை மிரட்டியது. அவள் தனாவின் கரத்தை பற்றிக் கொள்ள, அவள் மனம் புரிந்தவனாக, "வா...", அவள் தோளில் கை போட்டு, வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்.

அங்கே வேலை செய்யும் அனைவரும் ஹாலில் குழுமி இருக்க, "என்ன ஆச்சு....? அம்மா....", கேட்டவன், சுஜாவை அழைத்துக்கொண்டு தன் தாயின் அறைக்குள் நுழைந்தான்.

அதற்கு முன்னர்..., "வள்ளி..., ராஜாவை கூட்டி போ...", கட்டளை இட்டுவிட்டே விரைந்தான்.

பானுமதியின் கட்டில் அருகில், கலா கவலை அப்பிய முகத்தோடு நின்றிருக்க, மருத்துவர் அவன் தாயை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

தனாவின் வருகையை உணர்ந்த மருத்துவர், கையில் இருந்த ஸ்டெதஸ்கோப்பை கழுத்தில் மாட்டியவர், "சாரி தனா..., ஷி இஸ் கவுண்டிங் ஹெர் மினிட்ஸ்...", அவன் தோள் தட்டிவிட்டு அகன்றுவிட்டார்.

எதிர்பார்த்த முடிவுதான் என்றாலும்..., நமக்கு பிரியமானவர்கள் இந்த உலகை விட்டுச் செல்லவதை அவ்வளவு சுலபமாக எடுக்க முடியாதே.

"சாரி சார்...", கலாவும் விலகிவிட, சுஜாவை மறந்து, தாயின் அருகில் அமர்ந்தவன்,
"அம்மா....", குரல் அடைக்க அழைத்தான்.

பாலாமணி சுஜாவைப் பார்க்க, சுஜா, அவனை நெருங்கி, அவன் தோளை

ஆதரவாக அழுத்தினாள். "அம்மா..., கண்ணைத் தொறந்து பாருங்கம்மா..., கல்யாணம் பண்ணிக்கோ..., கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்வீங்களே. நான் உங்க மருமகளை கூட்டி வந்திருக்கேன். பாருங்கம்மா...."், தாயின் கரத்தை பற்றி, நெற்றியில் அழுத்திக் கொண்டான்.

அவனது கதறல் அவரை எட்டியதோ என்னவோ..., அவன் பிடியில் இருந்த அவரது கரம் நடுங்க, விழிகளை மெதுவாக திறந்தவர், "த...னா..."், அந்த நேரத்திலும் அவனை உணர்ந்து கொண்டார்.

கடந்த மூன்று நாட்களாகவே நீர் ஆகாரம் உண்பதைக் கூட அவர் நிறுத்திவிட்டார். நினைவும் தப்பிப் போனது. அப்படி இருக்கையில்..., தன்னை கண்டுகொண்ட தாயை எண்ணி, அந்த நேரம் கூட, பெருத்த ஆறுதல் கொண்டான்.

"தனா தாம்மா..., தனா தான்..., பேசுங்கம்மா..., ஏதாவது பேசுங்கம்மா..."், உணர்ச்சிவசப் பட்டான்.

அதைப் பார்த்த பாலாமணி..., "தம்பி..., நிதானமா இருங்க..., பொறுமையா பேசுங்க. நிச்சயம் அவங்க இப்போ பேசுவாங்க...."், தன் கணவனின் மரணத்தை உடன் இருந்து பார்த்தவராயிற்றே..., எனவே உரைத்தார்.

"ம்..."், உரைத்த அவன் தாய், விழி மூட, "அம்மா..."், பதறிப் போனான்.

"இங்கே பாருங்கம்மா..., சுஜாம்மா..., உங்க மருமக..."், தாயின் கன்னம் தாங்கி உலுக்கினான்.

அவருக்கோ..., நினைவு எங்கோ செல்ல..., "ரா...ஜா..."், பிதற்றினார்.

சுஜா, நொடியில் வெளியேறி..., ராஜாவை அள்ளிக்கொண்டு அறைக்குள்

நுழைந்தாள். அந்த அறைக்குள் நுழையவே..., அவள் கழுத்தை கட்டிக் கொண்டவன், விழி மூடி..., அவள் கழுத்துக்குள் முகத்தை புதைத்துக் கொண்டான்.

சுஜா வந்த வேகமும், ராஜாவை அழைத்துச் சென்ற தன்மையும், வேலைக்காரர்களை, அவள் பின்னாலேயே அந்த அறைக்குள் இழுத்து வந்தது.

"இல்ல..., இங்கே வேண்டாம்..., வெளியே போகலாம்...", கிட்டத்தட்ட கத்தினான்.

"ராஜா...., நீ குட் பாய் தானே. அழக் கூடாது...", அவனை சமாதானப் படுத்தினாள்.

வழக்கமாக அவன் அங்கே வருவதை விரும்பாத தனா, தாயின் நினைவில் இருந்ததால், அவனை கண்டுகொள்ளவில்லை. ஆனால்..., ராஜாவின் குரல் அவன் தாயை எட்ட, விழிகளை சுழட்டி, ராஜாவைப் பார்த்தவரின் கண்கள் அந்த நேரத்திலும் கண்ணீரை வடிக்க,

ராஜாவை மடியில் தாங்கி, அவருக்கு மறு பக்கம் அமர்ந்த சுஜா, "ராஜா இனிமேல் என் குழந்தை..., அவனை நான் பாத்துக்கறேன்...", அவள் உரைக்க, அந்த வயதானவரின் கண்களில் அப்படியொரு நன்றி உணர்ச்சியும், சந்தோஷமும் பளிச்சிட்டது.

"க...லா...", அவர் அழைக்க முயல, அதை உணர்ந்தவள் போன்று, அறையின் ஓரத்தில் நின்ற கலா அவரை நெருங்கினாள்.

"அம்மா..., சொல்லுங்கம்மா..., என்ன வேணும்...?", அவர் விழி அசைவில், கவனித்துச் செய்யும் கலா அவரிடம் குனிந்து மென்மையாக வினவினாள்.

"பெ...பெ...டி...", அவர் சொல்வது மற்றவருக்குப் புரியவில்லை என்றாலும், கலாவுக்குப் புரிய, வேகமாகச் சென்று, கையில் ஒரு மரப்

பெட்டியோடு திரும்பினாள்.

"இப்போ எதுக்கும்மா இதெல்லாம்...", தனா குறைபட, பாலாமணி அவனை கண்ணசைவில் அடக்கினார்.

அவருக்கு இவ்வளவுக்கு செய்ய தெம்பிருக்கிறதா? என்ற வியப்போடு தனா கலங்கிய விழிகளோடு அவரை ஏறிட்டான்.

தான் கொண்டு வந்த பெட்டியை அவர் அருகில் வைத்துவிட்டு திறக்க, அதில், ஒரு மாங்கல்யமும், ஒரு லாக்கர் சாவியும், ஒரு கடிதமும் இருப்பதைப் பார்த்தார்கள்.

அவரால் சொல்ல வந்ததை சொல்ல முடியாமல், குறிப்பாய் பார்க்க, "ஐயா..., இந்த தாலியை எடுத்து இவங்க கழுத்தில் போடுங்க..., அவங்க அதைத்தான் சொல்ல நினைக்கிறாங்க...", அந்த நேரம் வேறு எதையும் எண்ண முடியாமல், மறுக்காமல், அதைச் செய்ய, அறைக்குள் வந்திருந்த வேலைக்காரர்கள் கண்கள் கண்ணீரை சொரிந்தாலும், மனமார வாழ்த்த மறக்கவில்லை.

ராஜா அப்பொழுதும் சுஜாவின் மடியில் இருக்க, அவனோ..., நடப்பது புரிந்தும் புரியாமல் தனாவையும், சுஜாவையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

தனாவின் தாயின் கண்களோ..., சந்தோஷ கண்ணீரை வடிக்க, பார்வையோ சுஜாவின் மடியில், அவள் கழுத்தை கட்டிக் கொண்டிருந்த ராஜாவின் மீதே நிலைத்திருந்தது.

சுஜா அவர் பாதம் தொட்டு வணங்க, அவரிடம் எந்த எதிர்வினையும் இல்லாமல் போகவே..., திடுக்கிட்ட தனா..., "அம்மா...", அழைக்க, அவரோ தன் மூச்சை நிறுத்தி விட்டிருந்தார்.

"அம்மா...., உங்க புள்ளைக்கு கல்யாணம் ஆயிடுச்சு என்ற சந்தோஷத்தோட போயிட்டீங்களா? ராஜாவுக்கு நல்ல எதிர்க்காலம் அமையும்னு நிம்மதியா கண்ணை மூடிட்டீங்களா?", கேட்டவன் குலுங்கி

அழ, "என்னங்க...", கணவனை அழைத்தவள், அங்கே நின்ற வள்ளியை அழைத்து, அவள் கையில் ராஜாவை கொடுத்தாள்.

"ராஜாவை அவன் ரூமிலேயே நிறுத்தி வை...", அவள் கையில் கொடுக்க, அழும் தனாவையும், படுக்கையில் இருந்த தாயையும் பயப் பார்வை பார்த்த ராஜா, மறுக்காமல் அவளோடு சென்றான்.

ராஜாவிடம் தாயின் மறைவை சொல்லி புரிய வைக்க யாரும் முயல வில்லை. அடுத்து நடந்தவை அனைத்தும் முறையாய் நடக்க, குணாவோ.., தன் தாயை ஒருமுறை பார்த்தவன், வெளியே சென்று நின்று கொண்டான்.

இடுகாட்டில் தன் தாய்க்கு முறையாக செய்ய வேண்டியதை செய்த தனா, சோர்வாக தன் அறைக்குள் நுழைந்தான். தன் ஈர உடையை மாற்றியவன், தளர்வாக அங்கிருந்த சோபாவில் அமர்ந்து விழி மூடினான்.

கடை விழியோரம் லேசாக ஈரம் கசிய, தாயின் நினைவில் மூழ்கி இருந்தவனின் நெற்றியை, இதமாக ஒரு கை அழுத்தியது.

அது யாரின் கை என உணர்ந்தவன், விழிகளைத் திறந்தான்.

"என்னங்க..., நீங்களே இப்படி உடைஞ்சு போய்ட்டா..., இந்த குடும்பத்தை யார் தூக்கி நிறுத்துவாங்க? மனசை தேத்திக்கோங்க..., வாழ்ந்து முடிச்சவங்க, நல்லபடியாதான் அனுப்பி வைத்திருக்கோம்... அதையே நினைச்சுட்டு இருந்தால்..., எழுந்து வாங்க. காபி கொண்டு வரவா?...", அவள் கேட்க,

அவள் கையைப் பிடித்து, தன் அருகில் அவளை அமர வைத்தவன், "சுயநலமா முடிவெடுத்துட்டேனா சுஜா...?", திடுமென அவன் கேட்க புருவம் சுருக்கினாள்.

அவளது புரியாத பார்வையை உணர்ந்தவன்..., "என் அம்மாவோட கடைசி ஆசைக்கு வேண்டி..., உங்க அம்மாவோட ஆசையை நசிக்கிட்டனோன்னு தோணுது. நீ ஒரே பொண்ணு..., உன்னோட கல்யாணத்தை எப்படியோ

நடத்த ஆசைப் பட்டிருப்பாங்க..., ஆனா...", அவன் நிறுத்தி, அவள் கரத்தை பற்றினான்.

இந்த நேரத்திலும், தன் வீட்டை நினைக்கும் அவன் பெருந்தன்மை புரிய, "அப்படிப் பார்த்தால் நான்தான் இதைச் சொல்லணும். சந்தர்ப்பத்தை பயன்...", வேகமாக அவள் வாயை மூடியவன்,

"இனிமேல் நீ இப்படி பேசவே கூடாது சுஜா. நான் உன்னை ஆசைபட்டுதான் கட்டிகிட்டேன். அதே மாதிரி..., நான் ஒண்ணும் பெரிய தியாகி எல்லாம் கிடையாது. அதே நேரம்..., உன் தலையில் பெரிய பொறுப்பை சுமத்தறேன் தானே...", அவன் கேட்க,

"நீங்களே அதை பொறுப்புன்னு சொல்றீங்க..., அப்போ எப்படி எனக்கு சுமையா இருக்கும்? எங்க அம்மாவைப் பொறுத்த வரைக்கும், எனக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணம் என்ற ஒன்று ஆகவே செய்யாது என்ற விரக்தியில் இருந்தாங்க. ஆனா இப்போ..., அவங்களுக்கு ஒரே நாளில் நிம்மதியை கொடுத்திருக்கீங்க...

"அதனால் இனிமேல் இப்படி யோசிக்கவே செய்யாதீங்க. உங்க குடும்பத்தின் உயரத்துக்கு..., எவ்வளவு பிரம்மாண்டமா நடந்திருக்க வேண்டிய திருமணம்னு நானும் சொல்லலாமே...", அவள் பதிலுக்குச் சொல்ல,

"இப்படியே பேசிட்டு இருந்தால் இந்த ஜென்மத்தில் இந்த பேச்சு முடியாது. இப்போ நாம ரெண்டு பேரும் ஒரே புள்ளியில் இணைந்திருக்கிறோம்..., நம்ம வாழ்க்கையை வாழ்ந்து பார்த்து விடுவோம்..., உன் மனசுக்குள் இனிமேல் இது மட்டும்தான் இருக்கணும்....", அவள் கையை இறுக்கமாக பற்றிக் கொண்டான்.

அதை அவளும் ஆமோதிக்க..., "அத்தை எங்கே...?", வெளியே பார்க்கவில்லையே என்ற அர்த்தத்தில் அவன் கேட்க,

"அது..., சொல்லிட்டு போகக் கூடாதுன்னு, சொல்லாமலே கிளம்பிட்டாங்க".

"ஓ...", சற்று நேரம் அமைதியாக இருந்தவன், "ராஜா என்ன பண்றான்...? இன்னைக்கு முழுக்க அவனை பார்க்கவே இல்லை...".

"வள்ளியோட இருக்கான்...", ஒரு மாதிரி தயங்கிய குரலில் அவள் உரைக்க, கேள்வியாக அவளை ஏறிட்டான்.

"என்னவோ சொல்ல வந்து தயங்கற..., என்ன சொல்...".

"இல்ல..., ராஜாவை நம்மளோடவே..., அதாவது..., இங்கேயே கூட்டி வரட்டுமா?", தான் கேட்பது சரியா..., தவறா எனத் தெரியாத குழப்பத்தில் வினவினாள்.

"நீ கேக்குறது எனக்குப் புரியுது. ஆனா..., ராஜா எந்த அளவு இதை ஏத்துப்பான்னு எனக்குத் தெரியலை...", குரல் சிறுத்துப் போக உரைத்தவன், அவளை சங்கடமாக ஏறிட்டான்.

அவள் பார்வையில் 'ஏன்' என்ற கேள்வி தொங்கி நிற்க,

"இதை எப்படிச் சொல்லன்னு எனக்குத் தெரியலை..., ஆனா..., உனக்கு சொல்லித்தான் ஆகணும்...", ஸோபாவில் இருந்து எழுந்தவன், ஜன்னல் அருகில் சென்று நின்றுகொண்டான்.

"எங்க சொந்தத்தில் நிறைய பேருக்கு..., ராஜாவைத் தெரியாது...", அவன் உரைக்க, அவன் சொல்வதை நம்ப முடியாமல் அவனை ஏறிட்டாள்.

"ஆமா..., எங்க அம்மாவுக்கு அவன் தன் வயிற்றில் தங்கியதே தெரியாது. அதாவது..., அவங்களோட மெனோபஸ் வயதை எட்டிவிட்டதால்..., வீட்டு விலக்கு ஆகலன்னு அசட்டையா இருந்துட்டாங்க. ஆறு வருஷத்துக்கு முன்னாடி..., சீரடி போயிட்டு, அம்மாவும் அப்பாவும் வந்த கார் விபத்துக்கு உள்ளாகிடுச்சு.

"அதில்..., அப்பா...", அவஸ்தையாக எச்சில் விழுங்கியவன், "அம்மாவுக்கும் நல்ல அடி. அவங்களை ஹாஸ்பிட்டல்ல சேர்த்த பிறகு,

அங்கே வைத்துதான் அவங்களுக்கே விஷயம் தெரிய வந்தது. அவங்க வயசு, அதைவிட..., வயிற்றில் குழந்தை ஆறுமாச வளர்ச்சியை முடித்த நிலை..., எதுவும் செய்ய முடியலை.

"எல்லாத்தையும் விட..., அப்பா இறந்த அதிர்ச்சி, முதுமை, விபத்து எல்லாம் சேர..., அவங்க அப்பொழுதே படுக்கையில் விழுந்துட்டாங்க. ராஜாவின் பிறப்பு கூட..., கொஞ்சம் காம்பிளிகேட்டடா தான் இருந்தது.

"என்னோட முப்பதாம் வயதில் அவன் பிறந்தால்..., குணாவோட இருபத்தி நாலாவது வயதில் அவன் பிறந்தான். நான் தொழிலில் அப்பொழுதே இறங்கி விட்டதால்..., ஓரளவு சம்மாளிச்சுட்டேன். குணா..., அவனால் அதை ஜீரணிக்கவே முடியலை.

"அவனோட ப்ரண்ட்ஸ் முன்னாடி அவமானமா உணர்ந்தான்..., அதோட..., சொந்தங்கள் முன்னாடி..., ராஜாவோட பிறப்பையே நாங்க மறைக்க வேண்டிய கட்டாயம். எல்லாம் சேர..., அவனை அப்படியே ஒதுக்கிட்டோம்னுதான் சொல்லணும்.

"வேலைக்காரங்க கையில்தான் அவன் வளர்ந்தான். அவன் அறைதான் அவனுக்கு உலகம். அதை விட்டு வெளியே வந்தால்..., குணாவின் அலட்சியம், கோபம்..., எல்லாத்தையும் அவன் தாங்க வேண்டி இருந்ததால், அவனும் ஒதுங்கியே பழகிட்டான்.

"அதிலும்..., அவன் அண்ணான்னு சொன்னால்..., அடிக்கும் குணா, அதை கண்டுகொள்ளாத நான்..., எல்லாம் கைமீறி போய்டுச்சு.

"எனக்கும் அப்பா விட்டுட்டு போன தொழிலை நிலை நிறுத்துவதே பிரதானமா போக, நானும் அவனை சுத்தமாக கவனிக்கவே இல்லை. ஒரு கட்டத்தில்..., அவன் நினைப்பே அழிந்து போகும் நிலை வந்தப்போதான்..., அம்மா கேட்டாங்க...

'ஏன் தனா..., உங்க தலையில் பாரத்தை சுமத்திட்டனா..., இப்படி ஒரு கஷ்டம் வரும்னு தெரிந்துதான்..., நான் செத்தாலும் பரவாயில்லை,

குழந்தையை அழிச்சுடுங்கன்னு அந்த டாக்ட்டர் கிட்டே கெஞ்சினேன்.

'அவங்க கேக்கலையே..., இப்போ..., என் கண்ணு முன்னாடியே..., என் பிள்ளை அநாதை மாதிரி இருக்குறதை பாக்க வச்சுட்டாங்களே. இதைப் பாக்கவா நான் உசுரோட இருக்கேன்...? அவன் இந்த வீட்டோட இன்னொரு வாரிசு..., உங்களால் அவனை கவனிக்க முடியலன்னா..., ஏதாவது ஆசிரமத்தில் சேர்த்துடு'ன்னு சொன்னப்போ..., நிஜமாவே நான் நொந்து போயிட்டேன்.

''என்ன செய்யன்னும் தெரியலை..., என்னால் அவன்கிட்டே பாசமா பழக முடியலை. எனக்குள்ளேயும் கோபம் இருந்ததோ என்னவோ...'', சற்று நிறுத்தியவன், தன் மனதை ஆராய்வதுபோல் நின்றான்.

''என்னங்க...?'', அவன் தோளைத் தொட,

''அதுக்குப் பிறகுதான்..., அவன்கிட்டே பேசவே ஆரம்பித்தேன். ஆனா..., அதுக்குப் பிறகுதான் தெரிந்தது..., மனதளவில் அவனை விட்டு நாங்க ரொம்ப தூரத்தில் போயிட்டோம்னு.

''அவனுக்கு வயசு போனது கூட தெரியலை. ஸ்கூல்ல சேக்கணும் என்ற நினைப்பே இல்லாமல் இருந்தேன். சுலோ பாட்டிதான் ராஜாவை ஸ்கூல்ல சேக்க சொல்லி சொன்னாங்க. அதன் பிறகு கூட..., எந்த ஸ்கூல் போறது என்ற தயக்கம்...,

''அவனை என்னன்னு சொல்லி சேர்ப்பது என்ற தடுமாற்றம்..., ஒரு வழியா உங்க ஸ்கூல்ல சேர்த்தேன். அம்மாவின் உடல்நிலை சீர்கெடவே..., அவங்க ராஜாவைப் பற்றி கவலைப் படக் கூடாது என்பதால், நானே அவன் பொறுப்பை ஏத்துகிட்டேன்.

''முழு மனசோட செய்தேனா எனக் கேட்டால்..., எனக்குத் தெரியலை. இடையில்..., திருமணம் பற்றிய பேச்சை அம்மா எடுத்தப்போ..., எனக்கு மனைவியா வரவளாவது அவனை தாயா கவனிக்கணும்னு எதிர் பார்த்தேன். வந்தவங்க எல்லாமே..., அதை முழு மனசோட செய்ய

தயாரா இல்லை.

"எடுத்து செய்ய யாரும் இல்லாத நிலை..., ஆக மொத்தம்...., எங்க வீடே கலைந்த கோலம் போல ஆயிடுச்சு. இப்போ..., அதை ஒண்ணு சேர்க்கும் பொறுப்பை உன்கிட்டே தான் தரப் போறேன்.

"குணா..., ராஜா..., நான்..., எங்க எல்லாருக்கும் நடுவில் நீ ஒரு சிறந்த பாலமா இருக்கணும். அதிலும் ராஜா..., இனிமேல் நமக்கு அவன்தான் பிள்ளை. செய்வியா...?", எதிர்பார்ப்பும், ஏக்கமும் இழையோட அவன் கேட்க, தன் கரத்தை பற்றியிருந்த அவன் கரத்தை தானும் அழுந்த பற்றிக் கொண்டாள்.

"கண்டிப்பா செய்யறேங்க..., இனிமேல் வீட்டைப் பற்றிய எந்த கவலையும் உங்களுக்கு வேண்டாம்..., எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்...", உரைத்தவள், அதை செயல்படுத்தவும் முனைந்தாள்.

தனா முதல் வேலையாக..., தங்கள் திருமணத்தை பதிவு செய்தவன், அந்த விஷயத்தை அனைத்து நாளிதழ்களிலும் பிரசுரித்தான். பெரிதாக வரவேற்பு வைக்க விரும்பினாலும், காலமும், சூழ்நிலையும் ஒத்துழைக்காத காரணத்தால்...., சென்னையில் உள்ள அனைத்து கோயில்களிலும் ஒரே நாளில் அவன் சார்பில் அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்தான்.

அத்தோடு..., தொழிற்சங்க கூட்டம்..., பார்ட்டி..., விழா..., விருந்து..., என அனைத்திலும் தன் மனைவியோடு கலந்து கொண்டான். எனவே..., சுஜாதாவை நட்பு வட்டமும், தொழில் வட்டமும..., தனாவின் மனைவியாக ஏற்றுக்கொண்டு விட்டது.

வீட்டில்..., ராஜாவின் பொறுப்பு முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டாள். அவனுக்கு உணவு ஊட்டுவது முதல், குளிக்க வைப்பது துவங்கி, உடை மாற்றுவது..., பாடம் சொல்லிக் கொடுப்பது என அனைத்தும் அவளே.

அவனிடம் எவ்வளவுதான் நெருங்க முயன்றாலும்..., சுஜாவை மிஸ் என

அழைப்பதை அவன் மாற்றிகொள்ளவே முயலவில்லை.

ஒன்று இரண்டு முறை, வள்ளியும்..., சுலோ பாட்டியும் அவனைத் திருத்த முயல, அவர்களையும் அவள் தடுத்துவிட்டாள்.

அன்றும் அப்படித்தான்..., மாலையில் சிற்றுண்டியை உண்டு கொண்டிருந்த ராஜா..., சுஜா அருகில் இருந்த இருக்கையில் வந்து அமரவே..., தன் இருக்கையில் இருந்து இறங்கியவன், தயக்கமாக அவள் அருகில் நின்றான்.

"ராஜா..., என்னப்பா..., இன்னும் பணியாரம் வேணுமா...?", அவள் வினவ,

"நான் உங்க மடியில் உக்காந்துக்கவா மிஸ்...", அவன் கேட்க, அவள் பதில் சொல்லும் முன்பாகவே...,

"என்னது மிஸ்சா..., ஒழுங்கா...", திடுமென ஒலித்த தனாவின் கோபக் குரலைக் கேட்ட ராஜா வேகமாக தன் அறைக்குள் ஓடி மறைய..., "என்னங்க..", மேலே பேசப்போன அவனைத் தடுத்தவள்,

"அவன் சின்னப் பையங்க..., அவன்கிட்டே இப்படித்தான் நடந்துப்பாங்களா...? பாருங்க..., பயத்தில் ஓடியே போய்ட்டான்...", கணவனை கடிந்து கொண்டாள்.

அவனோ..., "என்ன சுஜா இப்படிச் சொல்ற..., அவனை முழுக்க நீதான் கவனிச்சுக்கற, முறையா நீ அவனுக்கு அண்ணியாகணும், அது போகட்டும்னு பார்த்தால் கூட, அவனை நம் குழந்தையா தத்தெடுக்கணும்னு நாம முடிவு பண்ணியிருக்கோம்.

"அதற்கு ஏற்ற மாதிரியாவது அவன் மாறணுமா இல்லையா..., அதென்ன..., மூணாம் மனுஷி மாதிரி மிஸ்..., நீயும் அதை என்கரேஜ் பண்ற...?", அவளை குற்றம் சுமத்தினான்.

"அதுக்கு..., இப்படித்தான் நடந்துப்பாங்களா? எதுவாக இருந்தாலும் இயல்பா அவனுக்குள் இருந்து வரணுங்க..., அதை விட்டுட்டு இப்படி

திணிக்கக் கூடாது. உங்களுக்குத் தோன்றுவது எனக்குத் தோணாதா என்ன? நான் செய்யாமல் இருக்கேன்னா அதுக்கு ஏதாவது காரணம் இருக்கும்னு புரிஞ்சுக்கவே மாட்டீங்களா?

"எவ்வளவு ஆசையா..., மடியில் உக்காரவான்னு கேட்டான். அவனைப்போய்..., போங்க.., முதல்ல பிரெஷ் ஆகிட்டு வாங்க, காபி தரேன். இப்போ நான் அவனைபோய் பாக்கறேன்..", ராஜாவின் அறையை நோக்கிச் சென்றாள்.

ஏற்கனவே அவனை தங்கள் அறையில் வந்து இருக்கச் சொன்னதற்கே..., பேயைக் கண்டு அரண்டவன்போல்.., முடியவே முடியாது என ஒரேடியாக மறுத்து விட்டான். அத்தோடு..., தனாவை அவள் திருமணம் செய்துவிட்டாள், அவள் அவனுக்கு அண்ணி..., என வள்ளி உரைக்க, தனாவோடு சேர்த்து, அவளையும் கொஞ்சம் ஒதுக்கியே விட்டான்.

அவள் சீராட்டை ஏற்றாலும்..., ஒரு விலகல் அவனிடம் இருந்தது. 'இன்றுதான் கொஞ்சம் ஒட்டினாற்போல் இருந்தது..., அதையும் இவர் வந்து கெடுத்து விட்டாரே...' மனதுக்குள் புலம்பியவாறு அவன் அறைக்குள் நுழைந்தாள்.

ராஜாவை படுக்கையில் காணாமல் போகவே..., அவன் எங்கே என்று தேட.., அவனது டேபிளுக்கு அடியில் ஒளிந்திருந்தவனைப் பார்க்கையில், மனதுக்குள் பிசைந்தது.

அதை வெளிக்காட்டாமல்..., "ராஜா..., என்னடா இங்கே வந்து ஒளிஞ்சு இருக்க? தனா அண்ணா கோபப்பட்டாங்களேன்னா? நான் உங்க அண்ணாவை நல்லா திட்டிட்டேன். இனிமேல் என் ராஜா குட்டியை எதுவுமே சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டேன்.

அவங்களும் சரின்னு சொல்லிட்டாங்க..., நீ வெளியே வாயேன்... உங்க அண்ணா கிட்டேயே கேப்போம்...", அவனைத் தூண்டும் விதமாக பேச, அவ்வளவு நேரமாக அவன் கண்ணில் தெரிந்த கலக்கம் சற்று மறைந்தற்போல் இருந்தது.

அதைப் பார்த்த சுஜாதாவுக்கு . . . , அடுத்து தான் செய்ய வேண்டியது என்னவென்று புரிந்து போனது.

பகுதி - 6.

சுஜா வீட்டுப் பொறுப்பை முழுதாக ஏற்றுக் கொண்டாலும், பள்ளி வேலையையும் அவள் விட்டுவிடவில்லை. ஆனால். . . , அதை விட்டுவிடும் சூழ்நிலையை ராஜாவே அவளுக்கு உருவாக்கினான்.

அன்று வழக்கம்போல் பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்க, வகுப்பில் இருந்த குழந்தை ஒன்று தூங்கி விழவே, அவனை எழுப்பியவள், ரெஸ்ட்ரூம் சென்று வரச் சொல்லி பணித்தவள், அவன் சென்று வந்தவுடன் தண்ணீரை எடுத்து தானே அருந்தக் கொடுக்க, அதைப் பார்த்த ராஜாவின் முகம் சிறுத்துப் போனது.

முதலில் அதை அவள் கவனிக்கவில்லை. அடுத்த பாட வேளையில், அவர்கள் கிரவுண்டுக்குச் செல்ல, அங்கே பந்தை பிடிக்கப் போன குழந்தை ஒன்று விழுந்துவிட, அவளை விரைந்து சென்று தூக்கியவள், தானே அதற்கு முதலுதவி செய்ய, ராஜாவோ ஒரு மாதிரியாக அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதன் பிறகு அன்று முழுவதுமே ராஜா சுஜாவிடம் பேசவே இல்லை. பள்ளியில், வேலைப்பளு காரணமாக அதை கவனிக்காமல் இருந்தவள், பள்ளி முடியும் வேளையில், அவனை தன்னோடு அழைத்துக் கொண்டு செல்ல முயல, அவனோ. . . . , தன் கையை அவளிடம் கொடுக்காமல் முரண்டு பிடித்தான்.

முதல் இரண்டுமுறை அதை சாதாரணமாக எடுத்தவள், மூன்றாம் முறையும் அவன் இவ்வாறு செய்யவே. . . , புருவம் நெரித்தாள்.

“கையைப் பிடிச்சுக்கோ ராஜா. இல்லன்னா கூட்டத்தில் மிஸ் ஆகிடுவ. . .”,

அவள் பேச்சை கண்டுகொள்ளாமல், தனாவின் காரைப் பார்த்தவன், தானாகவே சென்று காரின் பின்னிருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டான்.

அவன் செய்கை அவளுக்கு வியப்பை அளிக்க, புரியாத குழப்பத்தோடு அவனை பின்தொடர்ந்தாள். ராஜாவின் வருகையும், மனைவியின் குழப்பத்தையும் பார்த்த தனா..., அவளிடம் புருவம் தூக்கி கேள்வியாக வினவ, தன் தோளைக் குலுக்கி, தனக்கு எதுவும் தெரியாது என உரைத்தவள், காரின் பின்னால், ராஜாவின் அருகில் ஏறி அமர்ந்தாள்.

அவள் பின்னிருக்கையில் ஏறவே..., மறுபக்க கதவின் ஓரம் நகர்ந்து அமர்ந்த ராஜா, ஜன்னல் பக்கமாக முகத்தை திருப்பிக் கொண்டான்.

அவன் செய்கை வித்தியாசமாக இருக்கவே..., "ராஜாவுக்கு என்மேல் என்ன கோபம்...? முகத்தை திருப்பிட்டு இருக்காங்க...", கேட்டவள்..., அவன் நாடியைப் பிடித்து திருப்பினாள்.

அவனோ..., "என்னைத் தொடாதீங்க...", வெடுக்கென அவள் கரத்தை தட்டியவன், ஒரு அழுகைக்கு தயாரானான்.

தனாவின் கண்களும், சுஜாவின் கண்களும் ரிவர்ஸ் வியூ மிரரில் சந்தித்து மீள..., கண்களால் கணவனை அடக்கியவள், "ஐயோ..., என் ராஜாவை நான் தொடக் கூடாதா..., அப்போ சரி..., நான் இனிமேல் ராக்கேஷ்..., நேத்ரா..., மித்ரா..., இவங்க கூட மட்டும் பேசறேன்...", உரைத்தவள், தானும் கோபமாக இருப்பதுபோல், மறுபக்க ஜன்னல் வழியாக சாலையை வேடிக்கை பார்த்தாள்.

சற்று நேரம் எதுவும் சத்தமில்லாமல் போக, அடுத்த நிமிடம்..., அவர்களே எதிர்பாராத விதத்தில்..., அவள்மேல் பாய்ந்தவன்..., "நீங்க அவங்க கூட பேசக் கூடாது. இன்னைக்கு நீங்க ஏன் மித்ராவை தூக்குனீங்க..., ராக்கேஸுக்கு தண்ணி கொடுத்தீங்க..., எனக்கு சாப்பாடு ஊட்டியே விடலை..., உங்க கிட்டே நான் பேச மாட்டேன்...", ஒவ்வொரு பேச்சுக்கும் அவளை சரமாரியாக அடித்தான்.

அவன் அடித்தது அவளுக்கு வலிக்கவில்லை என்றாலும்..., அவன் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கத்தில் அவள் கண்கள் தாமாகவே கலங்கியது.

தன் தாய் தனக்கு மட்டுமே வேண்டும் என்ற ஒரு குழந்தையின் உரிமைக் கோபமல்லவா அது..., அவள் கண்கள் அவள் கட்டுப்பாட்டையும் மீறி கண்ணீரை வடிக்க, அதைப் பார்த்த ராஜா, தான் அடித்ததால் வலியில் அழுகிறாளோ என எண்ணிப் பதறி..., சட்டென தான் அடிப்பதை நிறுத்தி விட்டான்.

அவள் கழுத்தை இறுக கட்டிக் கொண்டு, அவளோடு ஒட்டிக் கொண்டவன், "சாரி மிஸ்..., வலிக்குதா..., இனிமேல் அடிக்க மாட்டேன். சாரி..." விடாமல் புலம்பினான்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த தனாவின் கண்கள் கூட லேசாக கலங்கியது. எவ்வளவு சுலபமாக ராஜாவின் உலகுக்குள் தன்னை பொருத்திக் கொண்டாள்..., என்பதை எண்ணுகையில்..., தனாவுக்கு பெருமையாக இருந்தது.

"இல்லடா ராஜா..., மிஸ்க்கு வலிக்கவே இல்லை. சும்மா..., லுலுலாய்க்கு தான் செய்தேன். இங்கே பாரேன்..." அவனை தன் தோளை விட்டு நிமிர்த்தி, தன் முகம் காண வைத்தவள், பூவாய் சிரித்தாள்.

அதில் தானும் நொடியில் மலர்ந்தவன், அவள் மடியிலேயே அமர்ந்து கொண்டான்.
"ராஜா..., மிஸ் அவங்க கூட எல்லாம் பேசக் கூடாதா...? ஏன்...?" அது இன்னதென்று அவளுக்குத் தெரிந்தாலும், அதை அவன் வாயால் தெரிந்து கொள்வதில் அப்படி ஒரு எதிர்பார்ப்பு.

"நீங்க என் மிஸ்..., எனக்கு மட்டும்தான் மிஸ்..., அவங்க..., நீங்க அவங்க மிஸ்னு சொல்றாங்க. இல்லை தானே..." ஆம் என்று சொல்..., என்ற எதிர்பார்ப்பு அவன் கண்களில் வழிந்தது.

அவனுக்கு சொல்லி புரிய வைக்க அவள் விரும்பவில்லை. தான் அவனுக்கு

மட்டுமே மிஸ்ஸாக இருக்க மனம் விரும்பியதே அதற்குக் காரணம்.

"அப்போ..., நான் உனக்கு மட்டும்தான் மிஸ்சா இருக்கணுமா?", அவள் கேட்க,

"ஆமா...", அவன் குரல் உறுதியாக ஒலித்தது.

"சரி..., அப்போ..., நான் ஸ்கூல்க்கு வரலன்னா பரவாயில்லையா?", அவனைத் தூக்கி தன் பக்கமாக பிடித்துக் கொண்டாள்.

சற்று நேரம் அமைதியாக இருந்தவன்..., "அப்படின்னா..., காலையில் என்னை ஸ்கூல்க்கு கூட்டி வருவீங்களா? சாயங்காலம் வீட்டுக்கு கூட்டி போக வருவீங்களா?", கண்களில் பிரகாசத்தோடு அவன் வினவ, இந்த நிகழ்வுக்காக அவன் நிறையவே ஏங்கியிருப்பான் என்றே தோன்றியது.

"கண்டிப்பா வரேண்டா செல்லம்...", அவள் பதில் கொடுக்க, தனாவோ..., நம்ப முடியாமல் அவளை ஏறிட்டான்.

"தேங்கியூ... மிஸ்...", ராஜா அவளை கட்டிக்கொண்டு முத்தமழை பொழிந்தான். அவன் அன்பில் நனைந்து கொண்டிருந்தாள் அவள்.

தனாவுகோ..., குழந்தைகளோடு இருக்கவேண்டும் என்பதற்காகவே..., தாயோடு சேர்ந்து இந்த பள்ளியைத் துவங்கி நடத்துவது அவனுக்குத் தெரியும். அப்படி இருக்கையில், பள்ளியில் இருந்து விடுபடுவதைப் பற்றி அவள் பேசினால் வியக்காமல் அவனும் என்ன செய்வான்?

வீட்டுக்குத் திரும்பியவுடன்..., சுஜா ராஜாவோடு ஐக்கியமாகிவிட, அவள் கொடுத்த காபியை அருந்திவிட்டு தன் வேலையைப் பார்க்கச் சென்றான். அவளிடம் பேச எண்ணினாலும்..., இப்போதைக்கு அவள் ராஜாவை விட்டு வர மாட்டாள் என்பதாலேயே அவ்வாறு செய்தான்.

இரவில் ராஜா உறங்கிய பிறகு, தன் அறைக்கு வந்த மனைவியை, முதல் முறையாக கண்களில் காதலும்..., சிறு காமமும் கலக்க ஏறிட்டான்.

கடந்த நான்கு மாதங்களாக..., இருவரும் ஒரு அறையில், ஒற்றை படுக்கையை பகிர்ந்து கொண்டாலும்..., தங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளவில்லை. அது ஏனென்று இருவருக்கும் புரியவில்லை..., ஆனால் இன்று..., சுஜாவை சில உணர்வுகள் பொங்க வெறித்தான்.

ராஜாவை..., தங்கள் பிள்ளையாக தத்து எடுத்துக்கொண்ட பொழுது கூட அவன் இவ்வளவு உணர்ச்சிவசப் பட்டிருக்கவில்லை. அவனுக்கு நிஜமாகவே அவள் தாயாக மாற முயல்வதைப் பார்க்கையில்..., அவள்மேல் பாசம் பொங்கியது மட்டும் உண்மை.

சுஜா வழக்கம்போல் தன் இரவு உடையை மாற்றி வந்தவள், அவன் அருகில் அமர, அப்பொழுதுதான் அவன் பார்வை மாறுபாட்டை கண்டு கொண்டாள்.

"என்னங்க...? என்னவோ புதுசா பாக்குற மாதிரி பாக்கறீங்க?", தன் தடுமாற்றத்தை மறைத்து, முயன்று இயல்பான குரலில் கேட்டாள்.

"ஏன் சுஜா...? நிஜமாவே ஸ்கூல்க்கு போகப் போறதில்லையா? இல்லன்னா, சும்மா ராஜாவை சமாதானம் செய்ய அப்படிச் சொன்னியா...?", விடை தெரிந்த வினாவாக இருந்தாலும் கேட்டான்.

"நீங்க என்ன நினைக்கறீங்க...?", அவனிடமே திருப்பிக் கேட்க, அவளுக்கு மெல்லிய சிரிப்பையே பதிலாக்கியவன், அவளை வியப்பு நிரம்பிய விழியில் ஏறிட்டான்.

"என்ன இப்படி பாக்கறீங்க...?", அவன் தோளில் சாய்ந்து கொள்ள,

"என் பொண்டாட்டிக்கு ராஜா மேல் இவ்வளவு அன்பான்னு வியந்து போயிருக்கேன். அவன் அதிர்ஷ்டமே இல்லாத குழந்தைன்னு நினைத்திருக்கேன், வேதனைப் பட்டிருக்கேன். ஆனா..., அவனைப் பெறாத தாயா நீ கிடைத்திருப்பதை நினைத்தால், எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு...", தானும் அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.

சற்று நேரம் அமைதியில் கழிய, "சுஜா..., உனக்கு உன் வேலையும் பள்ளியும் எவ்வளவு முக்கியம்னு எனக்குத் தெரியும். எங்களோட சுயநலத்துக்காக, உன்னோட ஆசையை, விருப்பத்தை நாங்க குழிதோண்டி புதைக்க முடியாது....", தன் நெஞ்சில் புதைந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் முகம் பார்த்தான்.

"நீங்க சொல்வது நியாயம்தான்..., அது..., ஒரு தாயாக முடியாத சுஜாவோட ஏக்கம்..., ஒரு குழந்தைக்கு பதிலாக..., நூறு குழந்தை...., ஆனா..., ஆறு மணிக்கு மேலே..., அதே தனிமை..., விரக்தி. இப்போ..., எனக்கே எனக்குன்னு ஒரு குழந்தை.

"அந்த குழந்தைக்காக..., நான் எதை வேண்ணா விட்டுக் கொடுக்கவும், இழக்கவும் தயாரா இருக்கேன்...", அவள் அன்பு புரிய, மென்மையாக அவள் நெற்றியில் இதழ் ஒற்றினான்.

"அவனுக்கு இப்படி ஒரு அம்மா கிடைக்கணும் என்பது கடவுள் கொடுத்த வரம்...", நெகிழ்வாய் உரைக்க,

"அவன் என்னைக்கு என்னை அம்மான்னு கூப்பிடுவான்னு ஒவ்வொரு நிமிஷமும் ஏங்கிட்டு இருக்கேன். என்னை கூப்பிடுவான் தானே...", எதிர்பார்ப்பும், ஏக்கமுமாக கேட்டாள்.

"அவன் உன்னைக் கூப்பிடாமல்... வேற யாரைக் கூப்பிடுவான்? இன்னைக்கே உன்மேல் அவ்வளவு பொசசிவ்வா இருக்கான். கூடிய சீக்கிரம் அது நடக்கும்...", அவன் வார்த்தைகள் அவளை நிம்மதியில் திளைக்க வைத்தது.

அவன் அணைப்பு சற்று இறுகி, முதல் முறையாக அவளுக்குள் சில சலனங்களை விதைக்க, அந்த உணர்வை தாங்க முடியாமலும், தவிர்க்க முடியாமலும் திணறினாலும், வார்த்தைகள் அற்ற மௌனத்தில் அவன் அருகாமையை ரசித்தாள்.

அந்த ஏகாந்தம் தொடர, அவன் கண்கள் அவளுக்குள் இறங்கி

ஊடுருவ..., பார்வையை திருப்பிக் கொண்டவள், அவனை விட்டு விலகி, "சரி ரொம்ப நேரமாச்சு..., நாம தூங்கலாம்...", விளக்கை அணைத்து விட்டு, படுக்கையில், அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

இதயம் ஏனோ படபடத்தது. 'இன்னைக்கு இவருக்கு என்னவாயிற்று...?' மனம் சுகமாய் அதிர்ந்தது.

இருளின் பிடியில் அறை இருந்தாலும்..., உணர்வுகள் விழித்துக்கொண்டு வழி காட்டியது. தன் இடையில் படிந்த அழுத்தமான அவன் கரம்..., புது உலகுக்கு அவளை அழைக்க, அவன் இதழ்கள் அவள் பின்னங்கழுத்தில் அழுத்தமாகப் புதைந்தது.

"ம்..., என்னங்க...", அவள் குரல் குழற...,

அவளை தன் பக்கம் திருப்பியவன்..., "பையனை மட்டும் கவனித்தால் போதுமா? அவனோட அப்பாவை கவனிக்க வேண்டாமா..?", தன் இதழ்களை, அவள் கன்னத்துக்கும், இதழ்களுக்கும் இடைப்பட்ட இடத்தில் ஓடவிட, பதில் சொல்லும் நிலையில் அவள் இருக்கவில்லை.

"பதில் சொல்லு...", மீசையால் குறுகுறுப்பூட்டியவன்..., அவள் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட, அவன் சொரசொரப்பான கன்னத்தை அவள் உள்ளங்கை உணர்ந்தது.

அவள் இடையில் இருந்த கையை இன்னும் அழுத்தமாக பதித்தவன், "அப்போ பதில் சொல்ல மாட்ட...", கேட்டவன்..., அவள் இதழ்களை அழுத்தமாக கவ்விக் கொண்டான்.
முதல் முத்தம்..., கொஞ்சம் சிலிர்ப்பாய்..., கொஞ்சம் கதகதப்பாய்..., கொஞ்சம் இறுக்கமாய்..., இதழ்கள் பிரிய சற்று நேரமானது. இருளுக்கு விழிகள் பழகியிருக்க..., இருவரின் விழிகளும் ஒருவர் ஒருவரை படம் பிடித்துக் கொண்டது.

"ஓகே தானே...?" கேள்வியாக இழுத்தவன்..., அவள் இதழ்களில்

புன்முறுவலைக் காண, மொத்தமாக அவளை சுருட்டிக் கொள்ள முயன்றான்.

அவன் கரங்கள் அவள் மேனியில் எல்லை மீற..., அவன் உணர்ந்த அவள் மென்மையும், வெம்மையும்..., அவள்மேல் பித்துகொள்ளச் செய்தது. அந்த இரவு இருவருக்கும் முழுமையான இரவாக மாறிப் போனது.

குணாவுக்கோ..., வீடு என்பது ஜஸ்ட் தங்கிச் செல்லும் ஒரு இடமாக மட்டுமே இருக்க..., இதையும் தடுக்க வேண்டும் என முடிவெடுத்தவள், தனாவிடம் அதைப்பற்றி பேசினாள்.

அவனுக்கு திருமணம் செய்து வைத்து, அவனுக்கான பங்காக வரும் கடைகளையும் அவனையே பார்த்துக்கொள்ள சொன்னால், பொறுப்பு வரும் என உரைக்க, சொத்தை பிரிப்பது என்பது கவலையை அளித்தாலும், அவனுக்கு பொறுப்பு வர வேண்டும் என்பதால் அரை மனதாக சம்மதித்தான்.

குணாவின் திருமணம் பற்றி அவனிடம் பேச..., தான் ஒரு பெண்ணை விரும்புவதாக அவன் உரைக்கவே..., சற்று அதிர்ந்தாலும், அவன் விருப்பத்துக்கு குறுக்கே நிற்க தனா விரும்பவில்லை.

அடுத்த வாரமே குணா விரும்பிய பெண்ணைப் பற்றி விசாரிக்க, அவர்கள் ஆச்சாரமான குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதை அறிந்து சற்று திகைத்துத்தான் போனார்கள்.

'இது எப்படி ஒத்து வரும்....?", தனா சிந்திக்க, ஏற்கனவே தனாவின் தாத்தா இதேபோல் கலப்புத் திருமணம் செய்தவர் என்பதால்..., அவர்களுக்கு பெரிதாக எதிர்ப்பு எதுவும் இருக்கவில்லை.

ஆனால்..., அவர்களுக்கு ராஜாவைப் பற்றி சிறு முணுமுணுப்பு இருக்கவே செய்தது. குணாவின் வருங்கால மனைவி, தாரிணியின் வழியாக ராஜாவைப் பற்றி தெரிந்தவர்கள், சற்று முகம் சுருங்கவே செய்தார்கள்.

தன் குணா அண்ணாவுக்கு திருமணம் என்று சொன்னவுடன், சுஜாவைபோல்

தனக்கு இன்னொரு உறவு கிடைக்கப் போகிறார் என்ற சந்தோஷத்தில் ராஜா இருக்க, திருமண நிச்சயத்துக்கு முந்தினநாள் அவனை அழைத்த குணா, "டேய்..., அங்கே வந்து அடக்க ஒடுக்கமா ஒரு இடத்தில் இருக்கணும். அவளைபோய் அண்ணின்னு கூப்பிட்டு வைக்காதே புரியுதா?

"அங்கே வரவங்க பாதிபேருக்கு உன்னைத் தெரியாது. சோ..., நீ எங்கேயும் நான் உன் அண்ணன்னு உளறி வைக்காதே..., புரிஞ்சதா...?", அவனது கண்டிப்பில், முகம் சுருங்கிப் போனான்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சுஜாவுக்கே கண்கள் கலங்கி விட்டது. ஒரு ஓட்டுக்குள் முடங்கிப் போக முயன்ற ராஜாவை, வெளியே கொண்டுவர அவள் முயல, அதை கெடுக்கும் விதத்தில் அமைந்த குணாவின் பேச்சு..., அவளுக்கு பெரும் வருத்தத்தை அளித்தது.

ஏற்கனவே குணா என்றால் ராஜாவுக்கு நிரம்ப பயம். இதில் வருபவளாவது அவர்களை இணைக்க வேண்டுமே என..., வருபவள் அவனுக்கு தன்னைப்போல் இன்னொரு அண்ணியாக இருப்பாள்..., அவளிடமும் பழக வேண்டும்..., பேச வேண்டும் என இவள் அறிவுறுத்த, அனைத்தையும் கொட்டிக் கவிழ்த்துச் செல்லும் குணாவை தடுக்கும் வகை தெரியாமல் நின்றாள்.

ராஜாவை சமாதானம் செய்யும் விதத்தில், "உனக்குத்தான் அண்ணாவை பற்றி தெரியுமே ராஜா. அவங்க ஏதோ கோபத்தில் இருக்காங்க அதான்...", அவனை அழைத்தவள், அவனுக்கு பிடித்த விதத்தில் நேரம் செலவிடவே, அவனும் மற்றதை மறந்து விட்டான்.

அன்று குணாவின் திருமண நிச்சய விழா..., புத்தாடை கிடைத்த சந்தோஷத்திலும்..., அன்று பள்ளிக்குச் செல்லாமல் சுஜாவுடனே சுற்றலாம் என்ற ஆசையிலும் ராஜா உற்சாகமாக வளைய வர, அவன் சந்தோசம் கண்டு தனாவே ஒரு நொடி தன்னை மீறி அவனை ரசித்தான்.

"ராஜா..., புது ட்ரெஸ் புடிச்சிருக்கா...?", ஸோபாவில் அமர்ந்து, தன் ஷூவை தானே போட முயன்று கொண்டிருந்த ராஜாவிடம் வினவ, "ம்...,

எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு..., மிஸ்தான் எடுத்து கொடுத்தாங்க...", தன் 'கோட்'டை ஆசையாகத் தடவியவன், தயங்காமல் அவனிடம் உரையாடினான்.

"அடேய்..., இதை நான்தான் நம்ம கடையில் இருந்து எடுத்துட்டு வந்து கொடுத்தேன். உனக்கு சுஜா எடுத்து கொடுத்தாளா...?", ராஜாவை சீண்டினான்.

"இல்ல..., நீங்க பொய் சொல்றீங்க... நான் பாத்தேன். மிஸ்தான் எடுத்து கொடுத்தாங்க...", கிட்டத்தட்ட கத்தினான்.

ராஜா, இன்னுமே சுஜாவை மிஸ் என அழைப்பதை பொறுக்காத தனா..., "ஏன் ராஜா..., சுஜா இன்னுமே உனக்கு மிஸ் தானா...?", எங்கே சுஜா வந்து விடுவாளோ என்ற பதிப்பில், பார்வையை சுழட்டியவாறே அவனிடம் வினவினான்.

தனா கேட்ட மறு நிமிடம், ராஜாவிடம் ஒரு அசாத்திய அமைதி நிலவ, "சொல்லுடா...", அதைக் கலைத்தான் தனா.

"நான் அவங்களை அண்ணின்னு கூப்ட்டு..., அவங்களும் என்னை திட்டிட்டா...", அவனிடமே திருப்பிக் கேட்க, முதல் முறையாக தன் செய்கைக்கு நாணினான். தங்கள் செய்கை தானே..., தங்கள் கண்டிப்பு தானே..., அண்ணா என அழைக்காதே என்ற மறுப்பு தானே, அவனை இவ்வளவு தூரம் சிந்திக்க வைக்கிறது. துடித்துப் போனான்.

"அவ அப்படில்லாம் சொல்ல மாட்டாடா...", சட்டென அவனை இழுத்து அணைத்துக் கொண்டவன், ராஜா அவனை சற்று மிரண்ட பார்வை பார்க்க, "இனிமேல் அண்ணா உன்னை எதுவுமே சொல்ல மாட்டேண்டா. என்னைப் பாத்து இப்படி பயப்படாதே....", அவன் குரல் தடுமாற, ராஜா வேகமாக தலை அசைத்தான்.

ராஜாவுக்கு தனாவே ஷூவை மாட்டி விட, "மிஸ் உங்களை அடிப்பாங்கன்னு தானே எனக்கு ஷூ மாட்டி விடறீங்க..., எனக்குத் தெரியும். மிஸ்

சொன்னாங்க. இனிமேல் என்னை நீங்க திட்டினால்..., மிஸ் உங்களை அடிச்சுடுவாங்களாம்..., எனக்கு உங்களைப் பார்த்தால் பயமெல்லாம் இல்லை...", ஒரே விஷயத்தை பிடித்து வைத்துக்கொள்ளும் பக்குவம் எல்லாம் அவனுக்கு இல்லை என்பதால்..., இலகுவாக அதைக் கடந்துவிட்டான்.

தனா வாய்விட்டு சிரிக்க, "என்ன..., அப்பாவும் புள்ளையும் ரொம்ப நேரமா கொஞ்சிக்கறீங்க? என்னன்னு சொன்னால் நானும் தெரிஞ்சுப்பேன்...", அந்த அருமையான காட்சியை தனக்குள் படம் பிடித்தவளாக கேட்டாள் சுஜா.

"அது..., எங்களுக்குள்ளே ரகசியம்..., அப்படித்தானேடா...", ராஜாவிடம் தனா கேட்க,
அந்த பேச்சு ராஜாவை குதூகலிக்க வைக்க, "ஆமா..., ஆமா...", கிளுக்கிச் சிரித்தவன்,

"ஆனா..., நான் உங்களுக்கு மட்டும் சொல்றேன்...", தாவி அவள் கழுத்தை கட்டிக்கொள்ள, ராஜாவுக்கு அவள்மேல் இருக்கும் பாசத்தைக் கண்டு வியந்து போனான்.

"ஓக்கேடா ராஜ, ஆனா பாரு..., இப்போ அதுக்கெல்லாம் நேரமில்லை..., நாம போயிட்டு வந்து ரகசியம் பேசலாம் சரியா..., இப்போ வாங்க போகலாம்...", அவனை தூக்கிக்கொண்டு காருக்கு விரைந்தாள்.

தாரிணியின் வீட்டில்..., முறைப்படி சில சடங்குகளும், இன்னும் பிற சம்ப்ரதாயங்களும் நடைபெற, அவற்றை பார்க்க பெரியவர்கள் பொறுமையோடு இருந்தாலும், ஓடி விளையாடும் பருவத்தில் இருந்த ராஜாவுக்கு அது மிகுந்த சிரமமாகவே இருந்தது.

"மிஸ்...", சுஜாவின் மடியில் இருந்தவன், அவள் கரத்தைச் சுரண்ட, "என்ன ராஜா..., பசிக்குதா...?", தன் கையில் இருந்த கைப்பையில் இருந்து பிஸ்கட்டை எடுக்க முயன்றாள்.

“ம்ஹூம்...”, மறுத்தவன், “ரெஸ்ட் ரூம்...”, அவள் காதில் கிசுகிசுத்தான்.

“ஓ..., சரி வா...”, அவனை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்றவள், அங்கே இருந்த ஒரு பெண்மணியிடம், டாய்லெட் எங்கே என்று கேட்டு, அவனை அழைத்துக் கொண்டு சென்றாள்.

“நீங்க திரும்பிக்கோங்க...”, பேண்ட் ஸிப்பில் கை வைத்தவன், சிறு வெட்கம் கலந்த புன்னகையில் உரைக்க, “அட பெரிய மனுஷா போடா...”, குறும்பாக உரைத்தாலும், மறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

அதென்னவோ அவளை அனைத்து விஷயத்திலும் அனுமதிப்பவன், டாய்லெட் விஷயத்தில் மட்டும், அவளை அனுமதிப்பதில்லை. அவன் கூச்சம் உணர்ந்து, தானும் சரியாகவே நடந்து கொள்வாள்.

சில நேரங்களில்..., திரும்பப் போறேன்..., போறேன்..., திரும்பிட்டேன்..., என கூறி அவனோடு விளையாடுவதும் உண்டு. அதே நினைவில் இருந்த ராஜா..., “நீங்க திரும்பக் கூடாது..., வேண்டாம்...”, உரைத்துக் கொண்டிருந்தவன், தன் அவசரத்தை முடித்துவிட்டு, ஸிப்பை மூடியவன், “நான் ஓடிட்டேன்...”, உரைத்தவன், அவள் பிடிக்கும் முன்பே பாய்ந்து ஓடினான்.

“ராஜா வேண்டாம்..., ஓடாதே...”, புது இடத்தில் ஏதாவது வம்பாகிவிடக் கூடாதே என அவள் பதைத்தவாறு அவன் பின்னால் ஓட, அதுவே அவனுக்கு ஒரு விளையாட்டாகத் தெரிந்தது.

எனவே..., எங்கே செல்கிறோம் எனத் தெரியாமலே தாரிணியின் வீட்டு பூஜை அறைக்குள், சூ காலோடு நுழைந்துவிட, “பெருமாளே..., அபச்சாரம்..., அபச்சாரம்..., சூ காலோட பூஜை அறைக்குள் நுழைஞ்சுட்டானே கடங்காரா..., பெத்தவ வளத்தால் சொல்லி வளப்பா..., மத்தவா வளத்தா இப்படித்தான். இதுதான் தப்பி

பொறந்ததாச்சே..., முதல்ல வெளியே போடா...",

"நீதான் இவனை பாத்துக்கற ஆயாவா? அதை முதல்ல இங்கே இருந்து இழுத்துண்டு போ...", தாரிணியின் பாட்டி போட்ட கூச்சலில் மிரண்டு போனான் ராஜா.

அவரது குரல் ஒரு அதிர்வென்றால்..., சுஜாவை அவர் ஆயா என்று அழைத்ததும், அவர் தன்னை ஒழுங்காக வளர்க்கவில்லை என்று சொன்னதும், அழுத்தமாக அவன் நெஞ்சில் பதிந்து போனது.

"மன்னிச்சுடுங்க..., அவனுக்கு பதிலா நான் உங்ககிட்டே மன்னிப்பு கேட்டுக்கறேன்... வா ராஜா...", விசேஷ வீட்டில் எதுவும் பிரச்சனை ஆக வேண்டாம் என்பதால்..., ராஜாவை அழைத்துக்கொண்டு அங்கிருந்து அகன்றாள்.

அங்கே நடந்ததை பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி...,
"மாமி..., அவாளை யாருன்னு நினைச்சேள்..., அவாதான் மாப்பிள்ளையோட மன்னி. நீங்க பாட்டுக்கு பேசிட்டேளே...",

"யாரா இருந்தா என்ன...? புள்ள வளக்கறா பாரேன்... கால்ல செருப்போட யாராவது ஆத்துக்குள்ள வருவாளா?", நொடித்துக் கொள்ள, அவர் வார்த்தைகளைக் கேட்ட ராஜா, சுஜாவின் கழுத்தை கட்டிக் கொண்டவன், இதழ் துடிக்க தேம்பினான்.

அதே நேரம்..., தன் செய்கை, சுஜாவுக்கு ஒரு பேச்சை வாங்கிக் கொடுப்பதை உணர்ந்தவன், இன்னதென்று புரியா விட்டாலும், இனிமேல் மறந்தும் தவறு செய்யக் கூடாது என்ற உறுதியை அவனை எடுக்க வைத்தது.

பகுதி - 7.

"அம்மா....", வீட்டையே அதிர வைத்த ராஜாவின் குரலுக்கு, கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் வந்தார் சுஜாதா. மீசை வைத்த குழந்தையாகவே அவன், அவருக்குத் தோன்றினான். அவனது அழைப்பிலேயே..., அவன்

கோபத்தை அவரால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

அவன் 'அம்மா..' என்று அழைத்தால்..., நிச்சயம் கோபமாகவோ, அதீத சந்தோஷமாகவோ இருக்கிறான் என்று அர்த்தம். 'ம்மா...' என்று அழைத்தால்..., சாதாரண மனநிலைக்கு மாறிவிட்டான்..., தன்னிடம் கொஞ்சலாக உரையாடுகிறான் என்று அவர் உணர்ந்து கொள்வார்.

இன்னும் கூட..., ஒரு வளர்ந்த ஆண்மகனாக..., இருபத்தைந்து வயது இளைஞனாக அவனை நினைக்க முடியவில்லை. அதே குழந்தைத்தனம், அதே பிடிவாதம்..., அதே பாசம்..., அதுவும்..., அது மொத்தமும் சுஜாவிடம் மட்டுமே வெளிப்படும்.

இத்தனைக்கும்..., குடும்பத்தொழிலே அளவுக்கு அதிகமாக இருக்க, அவனோ..., தன் விருப்பப்படி, சுயமாக ஒரு கணினி நிறுவனத்தை உருவாக்கி, சிறிய அளவில் கிராபிக்ஸ் வொர்க் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறான்.

அவனது லட்சியமே..., சினிமா துறையில் நுழைந்து, மிகச்சிறந்த கிராபிக்ஸ் கலைஞன் என்ற பெயரை வாங்க வேண்டும் என்பதே. அதற்காகத்தான் அயராது உழைத்துக் கொண்டும் இருக்கிறான்.

தன்னோடு சேர்த்து பத்து பேரோடு வேலை செய்பவன், அவர்களிடம் காட்டும் முகமே வேறு. வேலையில் கண்டிப்பு..., தட்டிகொடுக்கும் விதம், கற்பனையின் வளம், வேலையில் துல்லியத்தன்மை..., என பல பரிமாணங்களை காட்டுவான்.

வேலை என வந்துவிட்டால்..., உடன் இருப்பவர்கள் அவனுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சற்று திணறித்தான் போவார்கள். பெருமையும், பூரிப்புமாக அவனைப் பற்றி எண்ணியவர்...,

அவன் கோபத்துக்கான காரணத்தையும் அவரால் புரிந்துகொள்ளவும் முடிந்தது. ஆனால்..., அதைப்பற்றி..., அவர் கொஞ்சம் கூட கவலைப்பவே இல்லை.

“என்னடா...”, படு நிதான நடையில் வந்தவர், அதைவிட நிதானமாக வினவ, தன்னால் ஆனமட்டும் அவரை முறைத்தான்.

“என்னன்னு உங்களுக்குத் தெரியாதா...?”, கோபமாக அவன் வினவ, கண்களால் அவனிடம் கெஞ்சினார்.

அவனோ..., அதைக் கண்டு கொள்ளாமல்..., “இன்னைக்கு சிக்கன் செய்யிற நாள் தானே..., ஏன் செய்யலை...? எனக்கு இப்போ சிக்கன் வேணும்...”, தட்டில் இருந்த பூரியை தள்ளி வைத்தான்.

“என் ராஜால்ல...”, “ஆமா...”, “அம்மா சொன்னா கேப்ப தானே...”, “கேப்பேனே...”, அவர் கேட்ட அனைத்துக்கும் ஒத்து ஊத...,

“அப்போ..., இன்னைக்கு மட்டும் இதை சாப்பிடு ராஜா. அம்மா உனக்கு நாளைக்கு சிக்கன் செய்து தரேன்...”, அவன் நாடியைப் பிடித்து கெஞ்சினார்.

“அம்மா..., இது உங்களுக்கே இது நல்லா இருக்கா? இப்போல்லாம்.., சனிக்கிழமை, அமாவாசை, கிருத்திகை..., அஷ்ட்டமி, நவமி..., இப்படின்னு சொல்லி பாதி நாள், நான்வெஜ் சமைக்கவே மாட்டேங்கறீங்க. இதில்..., இன்னைக்கு சமைச்சு தரேன்னு நேத்து ப்ராமிஸ் பண்ணிட்டு..., இப்போ...

“நான் வளர்ற பிள்ளைம்மா..., வாய்க்கு ருசியா சமைச்சு போடாமல், இப்படி என்னை ஏமாத்தறீங்களே..., இப்படி செய்தால் நான் எப்படி வளர்றதாம்...?”, தாயிடம் கொஞ்சினான்..., அந்த வளர்ந்த குழந்தை ராஜா.

“இதுக்குமேல் நீ வளர்ந்தால்..., வரப்போறவ உனக்கு ஸ்டூல்ல ஏறித்தான் மாலை போட
வேண்டி இருக்கும்...”, அவன் போலியாக முறைக்கவே..., சட்டென

பேச்சை மாற்றியவர்...,

"நான் எங்கேடா ஏமாத்தினேன்...? இன்னைக்கு என்னவோ அம்பாளுக்கு விசேஷமான நாளாம்..., நம்ம தாரிணிதான் வீட்டில் அசைவம் கூடவே கூடாதுன்னு சொல்லிட்டா..., நான் என்னடா செய்யட்டும்...?", அவன் தலையை கோதி..., அவனை சமாதானம் செய்ய முயன்றார்.

"ம்மா..., சத்தியமா இது போங்காட்டம்...", அவன் கெஞ்சலாக குறைபட, அவனது அழைப்பு அவர் முகத்தில் புன்னகையையும், நிம்மதியையும் ஒருங்கே தோற்றுவித்தது.

"அதென்ன..., அப்படி அசைவம் சாப்ட்டுதான் ஆகணும்னு பிடிவாதம்? இன்னைக்கு ஒரு நாள் சாப்பிடலன்னா ஒண்ணும் குடி முழுகி போய்டாது...", தாரிணியின் குரல் இடையிட, அவரை சற்று கோபமாக முறைத்தவனது முகம் சற்று இறுகித்தான் போனது.

"ம்மா..., நான் உங்ககிட்டேதான் பேசிட்டு இருக்கேன்...., அனாவசியமா அவங்களை நடுவில் வர வேண்டாம்னு சொல்லுங்க...", சுஜாவுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவன் முணுமுணுக்க,

"ம்ச்..., என்ன ராஜா இது...?", அவனை சின்னக் குரலில் உடனே கண்டித்தார்.

"ஏண்டாப்பா..., நான்தானே உன்கிட்டே பேசறேன். அதென்ன அவாகிட்டே பதில் பேசுற...? என்கிட்டேயே சொல்லு...", அவன் எதிரில் இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தாள் தாரிணி.

அவளை கண்டுகொள்ளாமல்..., "ம்மா..., எனக்கு ரெண்டு ஆம்லேட்டாவது போட்டுத்தாங்கம்மா....", சுஜாவிடம் கெஞ்சினான்.

அவனது கெஞ்சல் தாங்காமல், "ராஜா..., இன்னுமே உன்னை இருபத்து ஐந்து வயசு பையனா நினைக்கவே முடியலை. அப்படியே அஞ்சு வயசு பையன் மாதிரியே நடந்துக்கற...", அவன் கன்னம் வருடினார்.

“ம்மா..., உங்களுக்கு நான் என்னைக்குமே அதே ஐஞ்சு வயசு பையன் தாம்மா...”, ஆசையாக அவர் தோளில் சாய்ந்து கொண்டான்.

அவர்கள் அன்னியோன்னியத்தை பார்த்த தாரிணியின் கண்களில் பெரும் ஏக்கமும், சிறு கோபமும் எட்டிப் பார்த்தது.

“ம்மா..., கேட்டேனே...”, மெதுவாக சுஜாவிடம் நினைவூட்ட, “கேடிடா நீ...”, அவன் தலையில் செல்லமாக குட்டியவர், ரசித்து சிரித்தார்.

“உங்க புள்ள தானேம்மா..., அப்படித்தான் இருப்பேன்...”, வெகு இயல்பாகச் சொன்ன அவனை, நெஞ்சில் நேசம் பொங்க பார்த்தார்.

“சரி இரு..., அம்மா எடுத்துட்டு வரேன்...”, கிச்சனுக்குள் செல்லப் போனார்.

அவரது செய்கையைப் பார்த்த தாரிணி..., “என்னக்கா நீங்க..., அவன்தான் சின்னப் பையன் மாதிரி அடம் பிடிக்கறான்னா..., நீங்களும் அவனுக்கு சப்போட் பண்றேளே... இன்னைக்கு கிருஷ்ண ஜெயந்தி..., வீடு சுத்த பத்தமா இருக்க வேண்டாமா?”, சுஜாவிடம் தாரிணி வினவ, இதற்கு என்ன சொல்வது எனத் தெரியாமல் சற்று திணறித்தான் போனார்.

ராஜாவுக்கு அந்த நேரத்திலும்..., தாய் சொன்ன அம்பாளுக்கு விஷேசம் என்ற பேச்சும், தாரிணியின் கிருஷ்ண ஜெயந்தி என்ற பதமும் சிரிப்பை மூட்ட..., கூடவே..., ‘எப்படியோ..., இன்னைக்கு என் நாக்குக்கு வக்கணையா இவங்க எதையும் போடப் போறதில்லை....’, பெருமூச்சு விட்டவன், தாயை ஏறிட்டான்.

கண்களில் கெஞ்சலோடு ராஜா..., கோபத்தோடு தாரிணி..., இருவருக்கும் இடையில் சிக்கிக் கொள்வதே அவருக்கு பெரும் வேலையாகப் போயிற்று.

தாரிணியிடம் பேசுவது வீண் என உணர்ந்தவர்..., “ராஜா...,

இன்னைக்கு ஒரு நாள்...", சுஜா இப்பொழுது கெஞ்ச, கொஞ்சம் கூட இளக்கமே இல்லாமல் முறைத்தான்.

அதைப் பார்த்தவர்..., "அம்மாவுக்காக..." , அடுத்த வார்த்தையைச் சொல்ல, அப்படியே இறங்கிப் போனான். முகத்தில் இருந்த பிடிவாதம் முற்றிலும் அகல, "உங்களுக்காக..., ஓகே..., பூரிக்கு சன்னா இருக்கா..., இல்ல அதே உருளைக்கிழங்குதானா...?", தான் நகர்த்தி வைத்திருந்த தட்டை, தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

"சன்னா தாண்டா தாரிணி செய்யச் சொன்னா..., உருளைக்கிழங்குன்னா..., அதுக்கும் நீ முகத்தை தூக்கி வச்சுப்பியே..." , உரைத்தவர், கிண்ணத்தில் இருந்த சன்னாவை அவன் தட்டில் வைக்க, மறுக்காமல் உண்ணத் துவங்கினான்.

தாரிணியின் பார்வையோ..., சுஜாவின் விளக்கத்தில், அவன் முகத்தில் ஏதாவது மாற்றம் தெரிகிறதா என்பதில் நிலைத்திருந்தது. தாரிணியின் பார்வையை உணர்ந்த சுஜாவுக்கு, மனதுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால்...., கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்க்காரம் என்பதைப்போல...,

ராஜாவுக்கு அன்பு தேவையாக இருந்தபொழுது அவனை ஒதுக்கிவிட்டு..., அவன் அன்புக்காக இப்பொழுது அவள் ஏங்குவதை நினைக்கையில், சிரிப்பதா..., அழுவதா என்றே தெரியவில்லை.

ஒருமுறை..., தாரிணியின் வருத்தம் புரிந்து, ராஜாவிடம், தாரிணியிடம் சாதாரணமாகவாவது உரையாடச் சொல்ல, போலியாக தன்னால் அதைச் செய்ய முடியாது என்று திடனாக மறுத்தவன், இந்த ஜென்மத்தில் அவள் மட்டுமே அவனுக்கு அன்னையாக இருக்க முடியும் என உறுதியாக கூறியதை கேட்ட பிறகு, அவனிடம் மேலே பேச அவர் துணியவில்லை.

"ம்மா..., சன்னா சூப்பர்..., யார்..., நம்ம லட்சுமியா வச்சாங்க...?", கேட்டவன்..., அனாயசமாக பூரிகளை விழுங்க, "லட்சுமிதான் வச்சா..., ஆனா..., பக்குவம் எல்லாம்..., நம்ம

தாரிணிதான்...", அவர் உரைக்க, கடகடவென சிரித்து விட்டான்.

அவன் சிரிப்புக்கான காரணம் புரியாமல், "இப்போ சிரிக்கிற அளவுக்கு என்னடா நடந்தது...? சொல்லிட்டு சிரி...", சுஜா உரைக்க,

"பின்ன என்னம்மா..., படையப்பா படத்தில் ரஜினி சொல்ற மாதிரி..., செந்தில் தான் கல்யாண மாப்பிளை..., ஆனா..., அவன் போட்டிருக்குச் சட்டை என்னுதுன்னு சொல்ற மாதிரி இருக்கு. இப்போ என்ன..., சன்னா அவங்க பண்ணாங்க..., அதானே...

"தேங்க்ஸ் மாமி...", தன் எதிரில் இருந்த தாரிணியின் முகம் பார்க்காமல் அவன் உரைக்க, அவளுக்கோ..., தன்வினை தன்னைச் சுடும் உணர்வு.

அதை சற்று ஒதுக்கிவிட்டு..., 'பேசுங்களேன்...', கண்களால் சுஜாவிடம் தாரிணி கெஞ்ச, 'பேசுறேன்..., பொறுமை...', அவளுக்கு கண்களால் பதில் கொடுத்த சுஜா, 'இதை எப்படி இவனிடம் துவங்க...?', சிந்திக்க, தாரிணியின் நினைவோ..., இருபது வருடங்களுக்கு முன்பு பயணித்தது.

திருமணமாகி வந்த புதிதில்..., எவ்வளவு ஆசையாக..., தன்னை சின்னண்ணி..., என அழைத்துக் கொண்டு அருகில் ஓடி வந்த குட்டி ராஜா.., அவள் கண்களுக்குள் உலா போனான்.

அவ்வளவு ஆசையாக ஓடி வந்தவனை..., தான் அலட்சியப்படுத்தியதும், கணவனுக்கு அவனைப் பிடிக்கவில்லை என்பதால், வெறுத்து ஒதுக்கியதும்...., அதன் பிறகு..., வீட்டு வேலைக்காரர்கள் அவளை மாமி என அழைப்பதைப் பார்த்து, அவனும் அவ்வாறே பழகிக் கொண்டான்.

முதன் முதலில்..., அவ்வாறு அழைத்தவனை, மாற்ற முயலாமல், ஒருவித நமுட்டு சிரிப்போடு விலகியதை எண்ணிப் பார்த்தவளுக்கு, நெஞ்சம் கனத்தது.

குணாவுக்கும் - தாரிணிக்கும் திருமணம் முடிந்து, முதல் மூன்று

வருடங்கள்... குழந்தை பற்றிய நினைப்பே இல்லாமல் இருந்து விட்டார்கள். நான்காம் வருட துவக்கத்தில், சொந்தங்களில் விடாத கேள்வியில், மருத்துவரை அணுக, தாரிணியால் இயற்கையாக கருத்தரிக்க முடியாது என முதல் அறிக்கை உரைக்க, சற்று மனதொடிந்துதான் போனாள்.

ஆனால்..., அவளைத் தேற்றி..., மருத்துவ வளர்ச்சியை அவளுக்கு புரிய வைத்து, செயற்கை கருத்தரிப்புக்கு தயார் செய்தவள் சுஜா தான். அவ்வளவு நாளும்..., சுஜாவிடமும் ஒட்டாமல் இருந்தவள், அதன் பிறகே இணக்கமாக நடக்கத் துவங்கினாள்.

அதன் பிறகு..., செயற்கை கருத்தரிப்பு முறையை பின்பற்றி, சோதனை ஓட்டங்கள் துவங்க..., இரண்டு மூன்று முறை அது தோல்வியைத் தழுவியது. வீட்டுக்குள்..., தன் அறைக்குள், சோர்ந்து படுத்துக்கொள்ளும் வேளை..., சுஜாவே அவளுக்குத் துணையாகவும், ஆறுதலாகவும் இருந்தாள்.

சுஜா எங்கே இருந்தாலும்..., ராஜாவும் அங்கே தானே இருப்பான். அவளை உரசிக்கொண்டு..., அவளிடம் கதை பேசிக் கொண்டு, பள்ளி விஷயம் அனைத்தையும் ஒன்று விடாமல் ஒப்பித்துக் கொண்டிருக்கும் அவனைக் கண்டு, முதல் முறையாக அவளுக்குள் சிறு ஏக்கம் பிறந்தது.

அதற்குள்..., மேலும் ஒரு வருடம் கடந்திருக்க, முதல் முறையாக, ராஜாவின் ஒன்பதாம் வயதில், அவளுக்கு கரு வயிற்றில் தங்கியது.

நின்றால் கரு கலைந்து விடுமோ..., நடந்தால் கரு குலைந்து விடுமோ..., என பயந்தே, படுக்கையில் முழு ஓய்வில் இருந்தாள் தாரிணி. அனைத்தும் நல்லபடியாகத்தான் நடந்தது. வளைகாப்பு கூட, ஊர் மெச்ச, சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

அன்றுதான்..., சுஜாவின் வாழ்விலும் மறக்க முடியாத நாளாகிப் போனது.

வரப்போவது சேகர் குரூப்சின்..., முதல் பேரப்பிள்ளை ஆயிற்றே..., அதன் வரவை அனைவரும் ஆவலாடு எதிர்பார்த்தனர். குழந்தை பிறக்க, இன்னும் மூன்று வாரம் மட்டுமே இருக்க..., அவ்வளவு நாள் காத்திருக்க வேண்டாம்..., அடுத்த ஒரு வாரத்தில் சிசேரியன் வைத்துக் கொள்ளலாம் என மருத்துவர் நாள் குறித்தார்.

அதுவரைக்கும் கூட..., அனைத்தும் நல்லபடியாகவே சென்றது. மருத்துவமனைக்கு போக வேண்டிய நாளுக்கு..., இரண்டு நாள் முன்னர்..., திடுமென குழந்தையின் அசைவை தாரிணியால் உணர முடியவில்லை. வயிறும் சட்டென பாரமாகிப்போன ஒரு உணர்வு.

தன் நெஞ்சுகூடே காலியாகிப் போன உணர்வில் வெலவெலத்துப் போனாள். "அக்கா..." , தன் அறையின் வாயிலில் கேட்ட தாரிணியின் குரலைக் கேட்டு, நம்ப முடியாமல்..., ராஜாவுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தவள், எழுந்து வந்தாள்.

"என்ன தாரிணி...?", கேட்க, "அக்கா..., குழந்தை அசையவே இல்லை. எனக்கென்னவோ பயம்மா..." , சொல்லும் முன்பே..., கண்கள் கண்ணீரை வடித்தது.

"ஏய்..., சும்மா இரு..., எதுவும் இருக்காது. குழந்தை தூங்கறதா இருக்கும். எதுக்கும் நாம ஹாஸ்பிடல் போய்டலாம் வா..." , டிரைவரை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தனர்.

உடனடியாக அவளை பரிசோதித்த மருத்துவர், ஸ்கேன்..., குழந்தையின் இதயத்துடிப்பு உள்ளதா..., என பரிசோதித்து விட்டு, அவளை ஆப்பரேஷன் தியேட்டருக்கு அனுப்பினார்.
உடனடியாக ஆப்பரேஷன் செய்யவில்லை என்றால்..., தாரிணியின் நிலையும் கவலைக்கிடமாகப் போகும் என்பதால்..., உடனே ஆப்பரேஷன் செய்தே ஆகவேண்டும் என உரைக்க, சுஜாவோ கதறியே விட்டாள்.

எவ்வளவு ஆசையாக..., ஆர்வமாக..., எதிர்பார்ப்பை சுமந்துகொண்டு காத்திருந்த குழந்தை...., கண்ணீரோடு..., தனாவையும்,

குணாவையும், உடனடியாக மருத்துவமனைக்கு அழைக்க, குணாவோ..., விஷயமறிந்து இடிந்தே போனான்.

அவனையும் தனாதான் தேற்ற வேண்டி இருந்தது. ஏற்கனவே பலமுறை நடந்த அபாஷன்..., அதன் பிறகு தங்கிய கரு..., அதன் மரணம்..., என அடுத்தடுத்து நடந்த நிகழ்வால்..., தாரிணியின் உடல்நிலை சற்று சீர்கெட்டுத்தான் போனது.

இனிமேல் தாரிணி கருத்தரிக்கவே கூடாது என மருத்துவர் உறுதியாக கூறிவிட, தனாவும் சுஜாவும்.., அவர்களை ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்க்க அறிவுறுத்தினார்கள்.

அதென்னவோ.., இருவருமே ஒன்றுபோல் மறுத்துவிட..., தனா கொடுத்த அறிவுரையின் காரணமாக, சீக்கிரமே தன்னை தேற்றிக் கொண்டான் குணா.

தாரிணிக்குத்தான் குழந்தையின் மரணம் பெரும் அடியாக, இடியாகப் போனது. சுஜாதான்..., அவள் கூடவே இருந்தும்..., மனநல மருத்துவர் மூலமாக, அவளுக்கு கவுன்சிலிங் கொடுத்தும், அவள் அழுத்தத்தில் இருந்து வெளிக்கொண்டுவர உதவினாள்.

ஒரு வாரம் வரைக்கும் தாரிணி மருத்துவ மனையில் இருக்க, கூடவே சுஜாவும் இருந்தாள். அடுத்த நாள்..., வீட்டுக்கு வந்தார்கள்..., சுஜாவும் தாரிணியும்.

அவர்கள் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்க..., "அம்மா..., என்னை விட்டு எங்கே போனீங்க. உங்களுக்கு என்னைவிட..., இவங்கதான் பெருசா போயிட்டாங்களா...?", ஒரு வாரம் சுஜாவின் கவனிப்பு, அருகாமை கிடைக்காத ஏக்கம் அவனை இவ்வாறு பேசத் தூண்டியது.

"ராஜா..", சுஜாவின் கண்டிப்பான அழைப்பில், சட்டென தெளிந்தவன், "சாரி மாமி...", தலை குனிந்து தாரிணியிடம் மன்னிப்பை வேண்டியவன், தாயை இடையோடு கட்டிக் கொண்டான். தானும் அவனை ஒரு கையால்

அணைத்தவள், அவன் நெற்றியில் இதழ் ஒற்றினாள்.

ராஜாவின் பேச்சை விட, அவனது அம்மா..., என்ற அழைப்புதான் தாரிணியை அதிகம் தாக்கியது. அதே நேரம்..., அவர்கள் பாசம்.., முதல் முறையாக பெரும் ஏக்கத்தை அளித்தது. இரு பெண்களுக்கும்..., ராஜா, சுஜாவை 'அம்மா' என்று அழைத்த நாளை சுற்றி வந்தது.

தாரிணியின் வளைகாப்பு நாள் வரைக்கும்..., ராஜா, சுஜாவை அம்மா என அழைத்தது கிடையாது. அவள்மேல் அளவுகடந்த பாசம் இருந்தாலும், அவன் வாயை ஏதோ ஒரு தயக்கம் கட்டி வைத்திருந்தது.

அன்று..., தாரிணியின் வளைகாப்பு சடங்கில்..., சுஜா முன்னின்று ஏதோ வேலை செய்ய, தாரிணியின் பாட்டி..., "உனக்குத்தான் வயித்தில் ஒரு புழு பூச்சி தாங்கலையே..., அப்படி இருக்கச்சே..., நீ தொட்டால் விளங்குமா..., தூரப்போ..." , நேரடியாகவே சாடிவிட, துடித்துப் போனாள் சுஜா.

கூடவே..., தாரிணியின் தாயும்..., "பிள்ளை இல்லாத நீ..., என் பொண்ணுக்கு எல்லாம் செய்யறியா...? வேண்டாம்..., யார் கண்ணு பட்டுதோ தெரியலை..., என் குழந்தை பாடா பட்டுட்டா..., அவ நல்லபடியா குழந்தை பெத்துக்கணும். அதாலே..., நீ கொஞ்சம் தள்ளியே இரு..." , அவரின் பேச்சில், இன்னும் குறுகிப் போனாள்.

அவ்வளவு நாளும்.., மகளுக்கு, அவள் இருக்கும் இடத்துக்கே சென்று பால் முதல், அனைத்து உணவு வகைகள், அவள் உடைகளை துவைக்க கூட, ஆட்கள் என வைத்து, கையில் தாங்கிய சுஜாவை வெகு சுலபமாக அவர்கள் மறந்தே போனார்கள்.

எப்பொழுதும் அவளுடனே இருக்கும் ராஜாவுக்கு..., தாரிணியின் பாட்டி சொன்னது புரியவில்லை என்றாலும், சுஜாவின் அழுகைக்கு காரணம் அவர்தான் என்பது புரிந்தது. அதே நேரம்..., தாரிணியின் தாய்..., சுஜாவுக்கு பிள்ளை இல்லை..., எனப் பேசியது புரிய, பத்து வயது சிறுவனான அவனுக்கு, அந்த பேச்சு புரிந்தது.

ஏற்கனவே..., தாரிணி குணா திருமண நிச்சயத்தில் பொழுதே ஒரு பேச்சு வாங்கி இருந்ததால், அவர்கள்மேல் சிறு கோபத்தில் இருந்தவன், இப்பொழுது, இந்த பேச்சும் சேர..., "இது என் அம்மா..., நான் அவங்க புள்ளை. யார் சொன்னா..., அவங்களுக்கு பிள்ளை இல்லன்னு..., நான் இருக்கேன். வாங்கம்மா..., நாம இங்கே இருக்க வேண்டாம். இவங்க எல்லாம் கெட்டவங்க... வாங்க...", ரோஷமாக அவளை கை பிடித்து அழைத்து வந்தவன்தான்.

அதன் பிறகு..., சுஜா அழுத அழுகை..., ஆனந்த கண்ணீராக மட்டுமே இருந்தது. "ராஜா..., நான்...", அவள் சந்தோஷ அழுகையில் திணற, "நான் உங்களை அம்மான்னே கூப்பிடட்டுமா...? எனக்கு நீங்க அம்மா தானே...", அவளிடம் தயக்கமாக அனுமதி வேண்ட,

"உன் அம்மாதாண்டா நான்...", அவனை அணைத்தவள், அவன் முகம் முழுக்க முத்தமழை பொழிந்தாள். அதன் பிறகு..., ராஜா மறந்தும் கூட, தாரிணியின் வீட்டு உறவுகளிடம் பேசுவது கிடையாது.

மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்த பிறகு..., தாரிணி ராஜாவிடம் பேச முயல, பத்து வயது சிறுவனான அவனோ..., அவளை ஒரு எல்லைக் கோட்டுக்குமேல் அனுமதிக்கவே இல்லை.

அதுவே..., அவனது இருபத்தைந்து வயதிலும் தொடர, அவனை மகனாக அடைய என்ன செய்வதென்று அவருக்குப் புரியவே இல்லை. அதே நினைப்போடு இருந்ததாலோ என்னவோ..., தன் ஒன்றுவிட்ட சித்தியின் மகளை, அவனுக்கு மணம் முடித்து வைத்து, தங்கள் வீட்டு சொந்தமாக அவனை மாற்ற விரும்பினார்.

அதைப்பற்றி பேசத்தான்..., சுஜாவின் உதவியை அவள் நாடினாள். சுஜா..., தாரிணி உரைத்த விஷயத்தைப் பற்றி பேசத் துவங்கவே..., அதே நேரம்..., வாசலில் சிறு சலசலப்பு எழ, அனைவரின் கவனமும் அங்கே திரும்பியது.

வாசலில் நின்றவளைப் பார்த்த ராஜா..., "ப்ப்ப்பா....", விழிகளை ஒரு மாதிரி அழுத்தமாக மூடி..., அதே அழுத்தத்தில் உரைக்க, சுஜா சங்கடமாகவும், தாரிணி கவலையாகவும் அவனை ஏறிட்டார்கள்.

பகுதி - 8.

ராஜா தன் காலை உணவை வேகமாக உண்ண..., வாசலில் நின்ற கார்த்திகா..., துள்ளலான நடையோடு வீட்டுக்குள் வந்தாள்.

கார்த்திகா..., இருபது வயது புயல். அரைத்த மஞ்சள் நிறம்..., இயற்கையாகவே சிவந்த இதழ்கள்..., இடையைத் தொடும் கூந்தல். எப்பொழுதுமே அதை பின்னலிட்டு அடக்கியிருப்பாள்.

அலங்காரம் எதுவுமே தேவையில்லாத, திருத்தமான முகம். அதில்..., கண்களுக்கு மட்டும் மையிட்டு, வசீகரமாக்கி இருப்பாள். அவள் விழிப் பார்வை தன்னைத் தீண்டாதா என ஒவ்வொரு ஆண்மகனும் ஏங்கித்தான் போவான்.

பி.எஸ்சி பாட்டணி இரண்டாம் வருடம் படிக்கிறாள். வாயைத் திறந்தாலே உற்சாகம் குமிழியிடும். அதிலும்..., ராஜாவை பார்த்துவிட்டால் போதும்..., பசக்கென பசைபோட்டு ஒட்டிகொள்ளாத குறையாக ஒட்டிக் கொள்வாள்.

ராஜா என்றால் அவளுக்கு அவ்வளவு பிடிக்கும். ஆறடி உயரத்தில்..., அளவான உடற்கட்டில்..., கூர்மையான விழிகள், அழுத்தமான உதடுகள், எப்பொழுதும் ட்ரிம் செய்யப்பட்ட தாடி..., பொருத்தமான உடைத் தேர்வில்.., ஒரு முழு ஆண்மகனாகத் திகழும் அவனை யாருக்குத்தான் பிடிக்காது.

கண்டுகொண்டேன்...., கண்டுகொண்டேன் திரைப்படத்தில் வரும் அஜித் குமாருக்கு போட்டியாக..., சிவந்த நிறம்..., அதே டிரிம் செய்த இரண்டுநாள் தாடி..., அலையலையான சிகை..., என பெண்களை வசீகரிக்கும் திறனோடு இருந்தான் ராஜசேகர்.

அவனிடம் எப்பொழுதும் வம்பிழுக்க அவளுக்கு நிரம்பப் பிடிக்கும். வாரம் இருமுறை அவனைத் தேடி வந்து, அவனோடு விளையாடிவிட்டுச் செல்வாள். பெரியவர்கள் அனைவருக்கும், இருவரையும் வாழ்க்கையில் இணைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால்..., இருவரின் விளையாட்டுத்தனங்களை கண்டுகொள்ள மாட்டார்கள்.

"அக்கா..., நான் வந்துட்டேன்..., சுஜாக்கா..", ஓடி வந்தவள், ராஜாவை ஓரக்கண்ணால் பார்த்தவாறே, சுஜாவை இறுக கட்டிக்கொண்டு அவள் கன்னத்தில் முத்தம் வைக்க,அவனுக்குள் சுள்ளென்று எதுவோ பொங்கியது.

'அதெப்படி அவனுக்குச் சொந்தமான அவன் தாயை.., அவள் கொஞ்சலாம்...? அந்த பொறாமை குணம், இன்னுமே அவனை விட்டுச் செல்லவில்லை. அதை உணர்ந்ததாலேயே அவ்வாறு செய்தாள்.

அதை உணர்ந்த சுஜா, "ஏய் வாயாடி..., வந்த உடனே என் புள்ளையை வம்பிளுக்கணுமா?சும்மா இருக்க மாட்ட...", அவளை கடிந்துகொண்டவர், ராஜாவை பார்வையால் சீராட்டினார்.

கார்த்திகாவோ..., "இது நல்லா இருக்கே..., நான் உங்களைக் கொஞ்சினால் அவருக்கு எங்கே எரியுதாம்...? நீங்க என் அக்கா..., நான் அப்படித்தான் கொஞ்சுவேன்...", ராஜாவை பார்வையால் சீண்டியவாறே அவள் உரைக்க, ராஜாவின் வாய்க்குள் இருந்த பூரி கருகும் வாசனை காற்றில் மிதந்தது.

"அம்மா...", அவன் கோபம் வார்த்தைகளில் வெளிவர, அதைக் கண்டுகொள்ளாமல், அவன் அருகில் இருந்த இருக்கையை இழுத்துப் போட்டு பொத்தென அவன் அருகில் அமர்ந்தாள்.

அவள் அமர்ந்த வேகத்தில்..., அவன் கையில் இருந்த தண்ணீர் சற்று தளும்பி சிந்த, "ஏய் லூசு..., அங்கே அவ்வளவு இடம் இருக்குல்ல, கொஞ்சம் தள்ளிதான் உக்காரேன்...",அவளிடம் சாடினான்.

"இதுக்குமேலே தள்ளி உக்காரணும்னா...", இழுத்தவள், கண்களில் குறும்போடு அவனை ஏறிட, "போடி இவளே..., உன் பார்வையே சரியில்லை..., நீ அங்கேயே உக்காரு...", கையில் இருந்து உணவை வாயில் அடைத்துவிட்டு எழுந்தான்.

"என்னத்தான் இப்படி ஏமாத்திட்டேள்..., உங்க மடியில் உக்கார ஒரு சான்ஸ் கிடைச்சதுன்னு பார்த்தால்..., இப்படி ஏமாத்திட்டேளே...", அவள் சிணுங்கினாள்.

அத்தோடு..., அவன் எழுந்ததைப் பார்த்தவள்.., "எங்கே ஓடப் பாக்கறேள்..., உக்காந்து சாப்பிடுங்கோ..., நான் பரிமாறறேன்...", அவன் கை பிடித்து அமர வைத்தாள்.

"ஏய்..., விடு..., நான் சாப்ட்டு முடிச்சுட்டேன். நீயும் கொட்டிக்க...", அவளிடமிருந்து கையை உருவிக்கொள்ள முயன்றான்.

"நான், வீட்டிலேயே சாப்ட்டேன்..., உங்களுக்கு அம்மா பாயாசம் கொடுத்து விட்டா...,கொஞ்சம் சாப்பிடுங்கோ...", அவனை மீண்டும் இருக்கையில் அமர வைத்தாள்.

அவள் செய்கையில் திகைத்தவன், "ம்மா..., இவளைப் பாருங்க..., இவ இப்போ சும்மா இருக்கல..., என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. நீங்க, என்னன்னு கேக்காமல் இப்படி நிக்கறீங்க...", தாயை துணைக்கழைத்தான்.

"அதெல்லாம் கேக்க மாட்டாங்க. அவங்களுக்கும் சேர்த்துதான் கொண்டு வந்திருக்கேன்...",அவள் ரோஷத்தோடு உரைக்க, அவன் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

"போடி சாப்பாட்டு ராமி..., எனக்கு பாயாசமும் வேண்டாம்... ஒரு மண்ணும் வேண்டாம்...",அவள் கையை வெடுக்கென தள்ளிவிட்டு, தன் கையை உருவிக்கொண்டு சென்றான்.

அவன் வழியை மறித்தவள்..., "நான் இன்னைக்கு எப்படி இருக்கேன் சொல்லுங்கோ..., புது ட்ரெஸ் எனக்கு நல்லா இருக்கா...?", தன் சுடிதார் துப்பட்டா நுனியை இடக்கையில் பிடித்தவள், ஒரு மாடல் அழகிபோல் அவன் முன்னால் வட்டம் போட,

"ப்ப்ப்ப்பா..., அட்டகாசம் போ...", அவன் சொன்ன விதத்தில், காலை தரையில் உதைத்தவள், அவன் முதுகை வெறித்தாள்.

தாரிணியும், சுஜாவும் கார்த்திகா முகம் வாடி விடுவாள் என எதிர்பார்க்க, அவர்கள் எதிர்பார்ப்பை பொய்யாக்கிவிட்டு..., "அத்தான்....", அவன் பின்னால் ஓடினாள். அவள் செய்கையை நம்ப முடியாமல் பார்ப்பது அவர்கள் முறை ஆயிற்று.

அங்கே இருந்த 'சிங்க்'கில் கை கழுவ, கை துடைக்க டவ்வலைத் தேட, வேகமாக தன் துப்பட்டாவை அவன் முன்னால் நீட்டினாள்.

"ச்சீ போ....", அவளைத் தள்ளியவன்,

"ஆண்டவா..., ம்மா..., இந்த லூசு இதையெல்லாம் தெரிஞ்சுதான் செய்யுதா? இல்ல தெரியாமல் செய்யுதா...? இன்னும் இது சின்னப் பிள்ளை இல்லன்னு சொல்லி வைங்க...", தாயிடம் புகார் வாசித்தான்.

"அக்கா..., எல்லாம் தெரிஞ்சுதான் செய்யுதுன்னு சொல்லுங்கோ...", அவனை விட்டுவிட்டு, சுஜாவிடம் விரைந்தாள்.

"தெரிஞ்சுதான் செய்யறியா?..., அப்போ உனக்கு கிறுக்குதான் பிடிச்சிருக்கு. ம்மா..., இவ காலேஜ் போனதில் இருந்து சரியே இல்லை. மாமி..., முதல்ல இவ வீட்ல சொல்லுங்க..., அவ்வளவு தான் சொல்வேன்...", தன் அறைக்கு விரைய முயன்றாள்.

"ராஜா..., ஒரு நிமிஷம்...", சுஜாவின் குரல் அவனைத் தேக்க...

"ம்மா..., ப்ளீஸ்ம்மா..., இன்னைக்கு ஏற்கனவே கொஞ்சம் லேட்

ஆயிடுச்சு. எதுவா இருந்தாலும் சாயங்காலம் பேசலாமே...", உரைத்தவன், தன் அறைக்குச் செல்ல லிப்டில் ஏறிக் கொண்டான்.

அந்த மூன்றடுக்கு மாளிகையில்..., மூன்றாம் தளம் முழுவதும் அவனுக்குச் சொந்தமாக இருந்தது. அங்கே செல்ல லிப்ட் வசதியும் உண்டு. முடிந்த வரைக்கும் படிகளையே உபயோகிப்பான். ஏதாவது அவசரம் என்றால் மட்டுமே..., அவன் லிப்ட்டை உபயோகிப்பான் என்பதால், சுஜாவும் மேலே பேசவில்லை.

அவன் செல்லவே..., "என்னக்கா..., கார்த்திகா பத்தி அவன்கிட்டே சொல்லுங்கோன்னு சொல்லிட்டே இருக்கேன். நீங்க..", தாரிணி குறை பட்டாள்.

"தாரிணி..., இது அவசரமா சொல்லும் விஷயமா என்ன...? நிதானமா பேச வேண்டிய விஷயம்..", அவளை சமாதானப் படுத்தினார்.

"ம்ச்..., இப்படி சொல்லியே ஒரு வருஷம் ஓடிடுச்சு..", வருத்தம் தொனித்தது அவள் குரலில்.

"ஆமா..., நீங்க என்னைப்பத்தியா பேசறேள்...?", இடையில் புகுந்து கார்த்திகா சந்தேகம் கேட்க, இருவரும் அவளை திடுக்கிட்டு நோக்கினர்.

"என்னடி இப்படி கேக்கற...?", தாரிணி அதிர்ந்துபோய் கேட்க,

"அட..., நீ எதுக்குக்கா இவ்வளவு ஷாக் ஆகுற..., ப்ரீயா விடு. என்னவோ நாளைக்கே எங்களுக்கு கல்யாணம் கட்டிவைக்கப் போற மாதிரி சீனைப் போடுற..., கொஞ்சநாள் எங்களை இப்படியே விடேன்..", அசால்ட்டாக உரைத்தவள்,

"அவர்கிட்டே எதையாவது உளறி வச்சு..., இப்போ இருக்க நிலைக்கும் உலை வச்சுடாதே. உனக்கு புண்ணியமா போகும்...", தாரிணியிடம் கையெடுத்து கும்பிட்டவள்,

"அத்தான் வராங்க..., நான் அவரோடவே காலேஜ் கிளம்பறேன்..., உங்களுக்கும் பாயாசம் இருக்கு, மறக்காம எடுத்துகோங்க. பாய்..." , உரைத்தவள், துள்ளலாக கிளம்பிவிட்டாள்.

அவளை எந்த விதத்தில் சேர்க்கவென்று தெரியாமல் திகைத்துபோய் நின்றிருந்தாள் தாரிணி.

"அத்தான்..." , லிப்ட்டில் இருந்து வெளிப்பட்டவன் முன்னால் வந்து நின்றவள்,

"இன்னைக்கு என்னை காலேஜ்ல டிராப் பண்ணிடுங்க..., ப்ளீஸ்..." , தன் பேகை எடுத்துக் கொண்டாள்.

"ஆமா..., நான் மாட்டேன்னு சொன்னால் மட்டும் விட்டுடவா போற.., வா.., வா..." , அவளிடம் உரைத்தவன், "ம்மா..., நான் போயிட்டு வரேன். சாயங்காலம் சீக்கிரம் வந்துடுவேன்.

"வந்துட்டு நாம கோயிலுக்கு போகலாம்..., நீங்க கிளம்பி ரெடியா இருக்கணும்னு அவசியமே இல்லை, நான் வந்த பிறகே நிதானமா கிளம்பிக்கலாம்..., சரியா..." , தாயிடம் விரைந்தவன், அவரை தோளோடு அணைத்து, கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்.

"ரொம்ப சந்தோஷம்டா..., ராஜா..." , நெகிழ்வாய் உரைத்தவர், தானும் அவனை முத்தமிட்டு விலகினார். தான் கேட்காமலேயே..., தன் மனதை உணர்ந்து செயல்படும் ராஜா.., தான் வயிற்றில் ஒரு குழந்தையை சுமந்து பெற்றிருந்தால் கூட தன்னை இப்படி பார்த்துக் கொள்வானா என்பது சந்தேகம் என்றே அவருக்குத் தோன்றியது.

இது அங்கே தினமும் நடக்கும் நிகழ்வாகையால்..., சுற்றி நின்றவர்களோடு..., அந்த நேரம் வீட்டுக்குள் நுழைந்த தனாவும், குணாவும் கூட சாதாரணமாகவே அதைக் கடந்தார்கள்.

சாதாரணமாக வெளியே சென்றால்..., அணைத்து முத்தமிட்டு விலகிச்

செல்பவன், ஏதாவது முக்கியமான விஷயமாக வெளியே சென்றால்..., அவர் கால் தொட்டு வணங்கிச் செல்வான்.

பத்து வயதில் அவனோடு படித்த ஒரு ஹிந்திக்கார தோழன் மூலம் பழகிய பழக்கம்..., அதை மறக்காமல் இன்றும் செயல்படுத்தினான். அவன் செய்கையை யாரும் கேலி செய்வது கிடையாது. அவனிடம் வம்பு வளர்க்கும் கார்த்திகா கூட, இந்த விஷயத்தில் அமைதியையே கடை பிடிப்பாள்.

அவனுக்கும்..., சுஜாவுக்கும் இடையில் இருக்கும் புரிதல், பாசம், நேசம்..., அதையும் தாண்டிய அவனது சுஜாவோடான ஒட்டுதலை உணர்ந்ததாலேயே அவ்வாறு நடந்து கொண்டாள்.

"அப்பா..., கிளம்பறேன்...", வாசல் பக்கம் நகர்ந்தவன், தன் எதிரில் வந்த தனாவிடம் உரைத்துவிட்டு, குணாவை ஏறிட்டு கூட பார்க்காமல் வெளியேறினான்.

குணாவின் முகம் சிறுத்துப் போக, தனாவோ..., அதைக் கண்டு கொள்ளாமல் ஸோபாவில் சென்று அமர்ந்து கொண்டார். தாரிணியோ..., ஒரு அழுகைக்குத் தயாராக..., சுஜா அவளை கண்களால் அடக்கினார்.

அதென்னவோ..., தாரிணியிடமாவது மாமி என உரையாடுபவன், குணாவை சுத்தமாக ஒதுக்கிவிட்டான் என்றே சொல்லலாம். குழந்தையில் எப்படி அவனைக் கண்டாலே ஒளிந்து, அண்ணா என அழைக்கக் கூட பயந்தவனாக இருந்தானோ..., அதேபோல்..., சுத்தமாக ஒதுங்கிப் போனான்..., அவ்வளவே.

என்ன..., அவன் எப்பொழுதும் போல் இருக்க..., தங்கள் மனநிலைக்கும், சூழலுக்கும் ஏற்ப குணாவும், தாரிணியும்தான் மாறிப் போனார்கள்.

"அத்திம்பேர்..., வாக் போயிட்டு வரேளா? உங்ககிட்டே பேச நேரமில்லை. பேசிட்டு இருந்தால்..., என்னை விட்டுட்டு அத்தான் கிளம்பிடுவாங்க..., நான் வரேன். பாய்...", கிட்டத்தட்ட ஓடினாள் கார்த்திகா.

ராஜா காரை ஸ்டாட் செய்திருக்க..., வேகமாக போய் ஏறிக் கொண்டாள். கார் அவள் கல்லூரி இருக்கும் பாதையில் பயணிக்க, "அத்தான்..., இருந்தாலும் நீங்க செய்யிறது நியாயமே கிடையாது. அதென்ன..., குணா அத்திம்பேர்கிட்டே மட்டும் முகத்தை காட்டறேள்? அவா பெரியவா..., ஏதாவது தப்பு செய்தாலும் பொறுத்து போக மாட்டேளா?", படபடவென பொரிந்தாள்.

"நீ கண்டியா? எல்லாம் உனக்குத்தான் தெரியும்னு பேசக் கூடாது. சத்தியமா கடுப்பாகிடுவேன். இப்போ உன்னை இங்கேயே இறக்கி விடவா? இல்ல காலேஜில் டிராப் பண்ணவா? எது வசதி?", அவனிடம் சிறு கோபத்தைக் கண்டவள்..., கப்பென அடங்கிப் போனாள்.

"ஆமா..., ஒண்ணு சொல்லிடக் கூடாதே..., உடனே மூக்குக்கு மேல கோபம் வந்துடும்...., நான் ஒண்ணும் சொல்லலப்பா..., நீங்க ரோட்டைப் பாத்து ஓட்டுங்க....", ஜகா வாங்கினாலும்..., வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே வந்தாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன்..., "எதுன்னாலும் சத்தமா பேசு..., அதென்ன வாய்க்குள்ளேயே முனகுறது...?", அவன் சீண்ட...,

"எனக்கென்ன பயம்...? என்னைக்காவது ஒரு நாளைக்கு..., நீங்க பண்றது தப்புன்னு நீங்களே உணரத்தான் போறேள்..., அவாகிட்டே மன்னிப்பு கேக்கத்தான் போறேள்..., இப்போ அவாளுக்கும் நீங்கதானே புள்ள மாதிரி. அதை ஏன் நீங்க புரிஞ்சுக்க மாட்டேங்கறேள்..., இல்லன்னா புரிசுக்க மாட்டேன்னு அடம் பிடிக்கறேளா?",

"உங்க சுஜாம்மா வேண்ணா இதைப் பற்றி, உங்ககிட்டே பேச பயப்படலாம்? நான் பயப்பட மாட்டேன்...", படபடவென பொரிந்தாள்.

"கார்த்தி..., உங்க காலேஜ் வந்துடுச்சு..., முதல்ல இறங்கு. நாம நிதானமா சண்டை போடலாம்....", அவள் கல்லூரிக்குள் வண்டியை செலுத்தியவாறு உரைத்தான்.

“என் கேள்விக்கு என்னைக்கா இருந்தாலும் நீங்க பதில் சொல்லித்தான் ஆகணும்...”, தன் பக்க கார் கதவைத் திறந்தவள், தன் தோழிகள் கூட்டத்தைப் பார்த்து கை அசைத்து விட்டு,

“அத்தான்..., தயவுசெய்து சிரிச்ச முகமா என்னைப் பார்த்து பாய் சொல்லிட்டு போங்க. கோபமா போனீங்கன்னா, என் ப்ரண்ட்ஸ் முன்னாடி என் இம்மேஜ் டேமேஜ் ஆயிடும்..., ப்ளீஸ்...”, அவள் கண்களை சுருக்கி கெஞ்ச, அவள் கேட்டதனால் எழுந்த கோபம் வடிந்தே போனது.

“காலேஜ் வந்தாலே இந்த கிறுக்கெல்லாம் புடிக்குமோ..., எனக்கு டிரைவர் வேலை பாக்குறது போதாதுன்னு..., பாய்ப்ரண்ட் வேலை வேறையா...? எனக்குத் தேவைதான்...”, போலியாக சலித்துக் கொண்டான்.

“ஏன் சொல்ல மாட்டீங்க...., என் ப்ரண்ட்ஸ் எல்லாரையும் உங்க கடைக்குத்தான் மாசம் பொறந்தா கூட்டி வந்து ஐந்தாயிரம் பத்தாயிரம்னு பர்ச்சேஸ் பண்ண வைக்கறேன்..., இவங்களால் உங்களுக்கு எவ்வளவு லாபம் தெரியும்ல...”, அவனிடம் சடைக்க,

“ஆமா..., ஆமா...., சொன்னாங்க சொன்னாங்க...”, அவன் இதழ்கடையில் துடித்த சிரிப்போடு உரைக்க, அவள் தோழிகளோ..., “ஓ...”, என கூச்சல் போடுவது இவர்களுக்கு கேட்டது.

‘இவளுக வேற...’ மனதுக்குள் அவள் புலம்ப, “ஹப்பா..., காலேஜ்ல உனக்கு விசிறிங்க பட்டாளம் அதிகம் இருக்கும் போல...”, அவன் இரண்டாம் கேள்வியை காற்றில் விட்டவள்,

“அத்தான்..., என்னவோ நான் அவங்களை சாக்கு வச்சு..., எனக்கு ஓசியில் சுடிதார் எடுத்துக்கற மாதிரியில்ல பேசறீங்க...”, அவள் சிணுங்க, கடகடவென சிரித்தே விட்டான்.

அவன் சிரிப்புக்கான காரணம் புரிய, தன் கையில் இருந்த பேகால் அவனை மொத்தியவள், “போங்க..., நான் கோபமா போறேன்...”, கால்களை

அழுத்தமாக பதித்து அவள் நடந்து செல்ல..., "ஏய் கார்த்தி..., பாய்...", அவனது சீண்டல் குரல் அவளைத் தொடர, "ஒண்ணும் வேண்டாம் போங்க...", சிலிர்த்துக் கொண்டாள்.

சின்ன சிரிப்போடு காரைக் கிளப்பியவன், முகம் கொள்ளா புன்னகையோடு தன் அலுவலகம் விரைந்தான்.

அவள் தோழிகளின் கேலியும், கிண்டலையும் ரிவர் வியூ வழியாக பார்த்தவனுக்கு..., புன்னகை மேலும் விரிந்தது. கல்லூரிக் காலத்தின் கொண்டாட்டம் அவனும் அறிந்தது தானே...,

அலுவலகத்தின் கீழ் தளத்தில் தன் காரை நிறுத்தியவன், லேப்டாப் பேகை எடுத்துக்கொண்டு தன் அலுவலகம் இருக்கும் இரண்டாம் தளத்துக்குச் செல்ல லிப்டில் ஏறி..., எண்ணை அழுத்திவிட்டு, தன் தளத்தில் வெளியேறினான்.

ரிஷப்ஷனில் இருந்த உமா வேகமாக இருக்கையில் இருந்து எழுந்து, காலை வணக்கம் உரைக்க, அவளுக்கு பதில் உரைத்தவன், கண்களை சுழலவிட்டான்.

அவனை எதிர்கொண்டான் விநாயகம். அவனிடம் தன் பேகை கொடுத்தவன், "விநாயகம்..., நேத்து வச்ச பெண்டிங் வேலை எல்லாம் முடிஞ்சதா? இல்ல..., அப்படியே இருக்கா...?", கேட்டவன்..., தன் அறைக்குச் செல்லாமல், முதல் தளத்தில் இருந்த ஆனிமேஷன் வேலைகள் நடக்கும் இடத்துக்கு விரைந்தான்.

உமாவோ களுக்கென சிரித்து வைக்க, விநாயகம் அவளை முறைத்தவாறே ராஜாவை பின்தொடர்ந்தான்.

"டேய் மாப்ள..., என்னை விநாயக்ன்னு சொல்லுன்னு எத்தனை முறை சொல்லிட்டேன். பாரு..., அந்த உமா சிரிக்கறா...?", குறைபட்டவன், இரண்டாம் தளத்தில் இருந்து, முதல் தளத்துக்குச் செல்ல இருந்த உள் வழி வழியாக இறங்கினார்கள்.

“ஏண்டா..., நான் எதை கேக்கறேன்..., நீ எதை சொல்ற..., இப்போ உன் பேர் பிரச்சனை அவ்வளவு முக்கியமா? முதல்ல வேலையைப் பத்தி பேசுடா. அதுசரி..., விநாயகம் தானே உன் பேர்...”, அவனிடமே சந்தேகம் கேட்க, கொலைவெறியே ஆனான்.

“சத்தியமா மாப்ள..., எல்லா நேரமும் நீ நல்லாத்தான் இருக்க. ஆனா..., இந்த பொண்ணுங்க முன்னாடி மட்டும் என்னை ரொம்ப டேமேஜ் பண்றடா...”, அவன் கவலை அவனுக்கு.

“அப்படி இல்லன்னா..., உன்னை அடக்க முடியாதே ராசா...”, அவனுக்கு பதில் கொடுத்தவன், ஆனிமேஷன் வொர் நடக்கும் அறையின் திரையை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தான்.

‘ம்கும்...’, மனதுக்குள் நொடித்தவன், மேலே எதுவும் பேசவில்லை.

ராஜா அறைக்குள் நுழையவே..., அவ்வளவு நேரமாக கலகலத்துக் கொண்டிருந்த அந்த அறை மயான அமைதியில் சிக்கியது.

“என்ன ஸ்ரீதர், ரூபன்..., ரேவதி..., வேலையைவிட பேச்சுதான் அதிகமா நடக்குது போல..., எங்கே.., முடிச்ச வேலையை காட்டுங்க பார்ப்போம்...”, ஸ்ரீதரின் இருக்கைக்கு முன்னால் அமர்ந்தவன், கணினியை தன் பக்கம் திருப்பினான்.

அங்கே இருந்த கணினி அனைத்துமே ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையதாகவே இருந்தது. எந்த கணினியில் இருந்தும், அவர்கள் வேலையை தொடரவோ, கண்காணிக்கவோ முடியும்.

எனவே..., நடந்துகொண்டிருந்த வேலையை பார்வையிட்டவன்..., “ம்ச்..., ஸ்ரீதர்..., என்ன செய்து வச்சிருக்கீங்க. குழந்தையோட கையும், ‘ட்டாய்’யும்(toy) ஒத்துப்போகவே இல்லை...”, சற்று கடுப்பானான்.

“சார்..., அது ரொம்ப மைனியூட் வித்தியாசம்தான்...”, ஸ்ரீதர் உரைக்க,

“சோ..., அப்படியே விட்டுடலாம்னு சொல்றீங்களா?”, எகிறினான்.

“ஐயோ..., அப்படியில்லை..., இதோ..., இப்போ கரெக்ட் பண்ணிடுறேன் சார்...”, பதறினான்.

“ஒரு சின்ன விஷயம்.., இதைக்கூட கவனிக்க முடியலையா? சரி..., ரூபன்..., அந்த கல்யாண ஜோடியின் வீடியோ என்ன ஆச்சு..., அந்த போஷனை மட்டும் எடிட் பண்ணிட்டீங்களா? ரேவதி..., அந்த பிரபேஷோட வொர்க் எவ்வளவு தூரத்தில் இருக்கு...”, அவர்களிடம் கேட்டான்.

அவன் கோபத்தில் சற்று நடுங்கியவளாக.., “சார்..., பிரபேஷ் வொர்க்..., ஆல்மோஸ்ட் முடிஞ்சுடுச்சு சார்...”, திணறினாள்.

“ஆல்மோஸ்ட்ன்னா..., ஒரு நயன்டி பிரசண்டேஜ்...”, அவன் நிறுத்த...,

பதில் சொல்லவில்லை என்றால் நிச்சயம் கொலைவெறியே ஆவான் என்பது புரிய,
“சிக்ஸ்டி...”, அவன் மென்று முழுங்க, “அப்போ பாதி வேலைதான் முடிஞ்சிருக்குன்னு சொல்லுங்க...”, அவன் கர்ஜிக்க, தலை கவிழ்ந்தாள்.

“ரூபன்..., மேரேஜ் கப்பிள் வீடியோ முடிஞ்சதா?”, அவனிடம் கேட்க,
“முடிஞ்சது சார்..., நீங்களே பாக்கலாம்...”, அவன் போல்டரை ஓப்பன் செய்ய, அதைப் பார்த்தவன்..., குட்..., அந்த ப்ரீஸ் ஆகுற ஸ்டில் எல்லாம், பேக்கிரவுண்ட் ரொம்ப நல்லா இருக்கு...”, பாராட்டியவன்,

“நீங்க கொஞ்சம் ரேவதி வொர்க்கை என்னன்னு பாருங்க. ரேவதி..., உங்களுக்கு நான் வேற வொர்க் கொடுக்கறேன்...”, அவன் உரைக்க, ரேவதி முகத்தில் ஒரு வெளிச்சம் வந்து போனது.

ரேவதியிடம் கொடுக்கும்பொழுதே..., அவளால் அதை வேகமாக முடிக்க

முடியாது என்பது அவனுக்குத் தெரியும்தான். ஆனால்..., ரேவதியிடம் அவன் கொடுக்கக் காரணமே..., வேலையை சுலோவாக செய்தாலும், அதில் ஒரு பெர்பெக்ஷன் இருக்கும் என்பதால் தான்.

"எங்கே புகழேந்தியும்..., கிருபாகரனையும் காணோம்..., ஆபீஸ் வர இவ்வளவு நேரமா?", அவனுக்கு கோபம் ஏறிக் கொண்டிருந்தது.

அதை உணர்ந்த விநாயகம்..., "ராஜா..., புகழும், கிருபாவும் அந்த சிஜே..., அட்வர்டைசிங் கம்பெனிக்கு போயிட்டு வரதா சொன்னாங்க. எப்படியும் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துடுவாங்க...", அவனுக்கு நினைவூட்டினான்.

"ஓ..., நான் அதை மறந்தே போயிட்டேன். சரி..., அகிலா பிளேஸ்க்கு ஆள் போடணுமா? இல்ல நீங்களே மேனேஜ் பண்ணிப்பீங்களா?", சற்று இலகுவாக முயன்றான்.

"சார்....", அனைவரும் கோரசாக குரல் கொடுக்க, பெரிதாக சிரித்து விட்டான்.

"என்னங்கடா..., சவுண்டு பெருசா வருது. என்ன..., என்னவோ இருக்குற வேலையை எல்லாம் அகிலாதான் பண்ணிட்டு இருந்த மாதிரி சவுண்ட் விடறீங்க?", அவன் பேச்சே..., அவன் மலை இறங்கியதை உணர்த்த,

"சார்..., கம்பெனியே காஞ்சு போய் இருக்குற மாதிரி ஒரு பீல். இந்த அட்டு ரேவதி வேலைக்கே ஆகலை. நம்ம அகிலாவும் தப்பிச்சு ஓடிட்டா...", ஸ்ரீதர் சொல்ல...,

"ஏய் ஒட்டகம்..., உனக்கு நான் அட்டு பிகரா...? உன் மூஞ்சிய நீ கண்ணாடியில் பாத்திருக்கியா...?", அவள் எகிறிக் கொண்டு வந்தாள்.

"ஆமா..., உன்ன பிகர்ன்னு நான் எப்போ சொன்னேன்...?", அவன் விளக்கம் கேட்க,

"போடா பண்ணி..., எருமை..., தடிமாடு..", அவள் சரமாரியாக அடுக்க,

"நீ முதல்ல ஒரு முடிவுக்கு வா..", அவன் அசால்ட்டாக உரைக்க, அங்கிருந்த அனைவரும் சிரித்து விட்டார்கள்.

"ஸ்ரீதர்..., முதல்ல உன்னைத்தான் வேலையில் இருந்து தூக்கணும் போல, பேச்செல்லாம் ஒரு மாதிரி வருது..", ராஜா அவனை முறைத்தான்.

"ஐயோ சார்..., இது சும்மா..", ஸ்ரீதர் குரல் கொடுக்க,
"அடப்பாவி..., இதெப்போடா நடந்தது...?", விநாயகம் தான் அலறினான்.

"அடப்பரதேசி..., அதுக்கு நீ ஏண்டா இவ்வளவு ஷாக் ஆகுற...?", ஸ்ரீதர் ராஜாவை நோக்க, 'சம்திங் ராங்...', புருவம் நெரிய யோசித்தவன்..., ரேவதியை நோக்க..., அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

ராஜாவின் பார்வை ரேவதியின் பக்கம் திரும்பியதுமே வெடவெடத்துப் போனான் ஸ்ரீதர். ராஜாவுக்கு பெண்களிடம் வரம்பு மீறி பழகினால் பயங்கர கோபம் வரும். அதிலும்..., அந்த பெண்ணுக்கு விருப்பம் இல்லை எனத் தெரிந்தால்..., அவளுக்கு தொல்லை கொடுப்பவனை உண்டு இல்லை என செய்துவிடுவான்.

ஸ்ரீதர் இப்பொழுது ரேவதியிடம் பார்வையால் கெஞ்ச, அவளோ..., தன் முகபாவத்தை மாற்ற முயன்றாள். அவள் சட்டென தன்னை மீட்டுக் கொள்ள முயன்றாலும், ரேவதியின் முகத்தில் விரவியிருந்த கோபச் சிவப்பு இறங்க சற்று நேரமானது.

"ஓகே..., எல்லாரும் வேலையைப் பாருங்க. விநாயக்..., என்னோட வா..", அழைத்தவன் அங்கிருந்து வெளியேறினான்.

தன் அறைக்கு விரைந்தவன், தன் இருக்கையில் அமரும்வரைக்கும்

யோசனையை கலைக்கவில்லை. "விநாயக்..., ஆபீஸை கொஞ்சம் சேன்ஜ் பண்ண வேண்டி இருக்கு. லேடீஸ்க்கு இங்கேயே சில கேபின் ஒத்துக்கிட்டா நல்லா இருக்கும்னு நினைக்கறேன். நீ என்ன சொல்ற...?", ராஜாவின் கேள்வியில் சற்று யோசித்தவன், அதை ஆமோதித்தான்.

"அப்போ..., அதுக்கான ஏற்பாட்டை செய். அதேபோல்..., லோக்கல் பேப்பர்ல நம்ம கம்பெனிக்கு ஆள் வேணும்னு விளம்பரம் கொடுக்க சொல்லி இருந்தேனே..., செய்தியா? ஏதாவது அப்ளிகேஷன் வந்திருக்கா...?".

"அதை ஏன் மாப்ள கேக்க..., நாம டிப்ளமோ படிச்ச ஆளைக் கேட்டா..., பிஈ முடிச்சவன் எல்லாம் கூட அப்ளிகேஷன் அனுப்பி இருக்கான். இப்போ நீதான் முடிவெடுக்கணும்...", அவன் உரைக்க, நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரிப்பதை எண்ணி கவலை கொண்டவன்,

"பிஈ எல்லாம் நமக்கு வேலைக்கு ஆகாது. டிப்ளமோ மட்டும் பில்டர் பண்ணு. சரி..., வேலையைப் பார்...", அதன் பிறகு தன் வேலையில் மூழ்கினான்.

மாலையில்..., சுஜாவை கோவிலுக்கு அழைத்துச் செல்வதாக உரைத்திருந்தது நினைவிற்கு வர..., சரியாக நான்கு மணிக்கு வீட்டுக்கு கிளம்பினான்.

வீட்டுக்கு நான்கு முப்பதுக்கு வந்தவன்..., சுஜாவைத் தேடிச் சென்று, "ம்மா..., பைவ் தேர்ட்டி ஓகே தானே..., நான் போய் கிளம்பி வரேன். நீங்களும் ரெடி ஆகுங்க...", அவன் படிகளில் ஏற, அவனிடம் பேச வேண்டியவற்றை மனதில் உரு போட்டவாறே கிளம்பினார்.

காரில்..., தன் அருகில்..., யோசனையோடு அமர்ந்திருக்கும் சுஜாவைப் பார்த்தவன்..., "ம்மா..., உங்களுக்கு ஏதாவது என்கிட்டே கேக்கணும்..., சொல்லணும்னா பட்டுன்னு கேளுங்கம்மா. என்கிட்டே கேக்க என்ன யோசனை வேண்டிக் கிடக்கு...?", அவளைக் கலைத்தான்.

“கேட்டுடுவேன்..., பிறகு நீ மறுக்கக் கூடாது. சம்மதமா...?”, முதல் முறையாக ஒருவித உறுதியோடு பேசும் சுஜாவைப் பார்த்தவன்..., “எனக்குப் பிடிக்காத எதையும் நீங்க கேக்க மாட்டீங்கன்னு எனக்கு நூறு சதவீதம் நம்பிக்கை இருக்கு. சோ..., டன்...”, உடனடியாக அவன் சம்மதம் சொல்ல, இப்பொழுது திகைப்பது சுஜாவின் முறை ஆயிற்று.

பகுதி - 9.

கோயிலை நெருங்கும்பொழுதே..., வீதி முழுவதும் டிராபிக்கால் திணறியது. அதைப் பார்த்த ராஜா..., “ம்மா..., இந்த தெருவில் காரை நிறுத்த முடியாது. சோ..., நீங்க இங்கே இறங்கிகோங்க..., நான் காரை கொஞ்சம் தூரமா போய் நிறுத்திட்டு வரேன்...”, அவரை கோயில் முன்பாக இறக்கி விட்டுவிட்டு, விரைந்தான்.

இந்த மாதிரி விஷேஷ நாட்களில்..., கூட்டத்துக்கோ..., டிராபிக்குக்கோ கொஞ்சம் கூட சலிக்காமல்..., தன்னை அழைத்துக் கொண்டு வரும் ராஜாவை, மனதுக்குள் வியந்தவராக கோவில் நடையை தொட்டு, நெஞ்சில் வைத்தவாறு..., உள்ளே
நுழைந்தார்.

கோயிலில் கூட்டம் அலைமோதியது. கிருஷ்ண ஜெயந்தி என்பதால்..., விசேஷ பூஜைகளும்..., அலங்காரங்களும் என கிருஷ்ணர் ஜொலித்தார். நீலவண்ண மேனியில்..., அழகான பட்டு அலங்காரத்தில், கையில் புல்லாங்குழல்..., தலையில் மயில் ரெக்கை என..., பார்க்கவே கண் கோடி வேண்டும்.

கூட்டம் நெருக்கியடிக்க, வரிசையில் பின்னால் நின்றவர்..., கண் குளிர கிருஷ்ணரைக் கண்டார். அர்ச்சகர் பூஜையில் பிசியாக இருக்க..., அந்த கூட்டத்திலும்..., சுஜாவை அவர் இனம் கண்டு கொண்டார்.

அந்த பூஜைக்கு நின்ற பக்தர்களுக்கு விபூதி, குங்குமம் கொடுத்தவர், சுஜாவிடம் விரைந்தார். “அடடே..., வாங்கோ..., இன்னைக்கும் சாமி

பேர்க்குதான் அர்ச்சனையா...?", கேட்டவர்..., அவர் கையில் இருந்து அர்ச்சனைத் தட்டை வாங்கிக்கொண்டு சென்றார்.

சுஜாவின் உடலைத் தழுவியிருந்த சிந்தடிக்..., எம்பிராய்டரி புடவையும், அதில் ஜொலித்த கற்களின் பளபளப்பும்..., கழுத்திலும், கையிலும் மின்னிய வைரங்களும்..., சுற்றி இருந்தவர்களை, ஒரு நிமிடம் சாமியையும் மீறி, அவளை கவனிக்கச் செய்தது.

சுஜாவோ..., சுற்றுபுறத்தை கவனிக்காமல், மனம் உருக தெய்வத்திடம் வேண்டியவர்..., அர்ச்சகர் பூஜைத் தட்டி, ஆரத்தியோடு வர, ஆரத்தியை தொட்டு, கண்களில் ஒற்றிக் கொண்டவர், தட்டில் ஒரு ஆயிரம் ரூபாய் தாளைப் போட, அவரோ..., வாயெல்லாம் பல்லாக..., குங்குமமும், விபூதியும் கொடுத்தவர்..., கையில் தயாராக வைத்திருந்த, கிருஷ்ணருக்கு சூடிய மாலையையும் கொடுக்க, நிறைவாக பெற்றுக் கொண்டார்.

அவரோடு..., இன்னும் இரண்டு குருக்கள் அங்கே இருக்கவே..., இவர் சுஜாவோடு உரையாடினார். "என்ன..., அம்மாவோட முகம் வாடி இருக்கு? உங்களுக்கு மனசுக்குள் என்ன குழப்பம்..., எல்லாத்தையும் இவர்ட்டே விடுங்கோ..., எல்லாம் அவர் பாத்துப்பார்..."

"குழப்பம் எல்லாம் எதுவும் இல்லை. இன்னைக்கு ராஜாகிட்டே ஒரு விஷயத்தைப் பற்றி பேசணும்.., அவன், அதை எப்படி எடுத்துப்பான்னுதான் கவலையா இருக்கு...", உண்மையான வருத்தம் அவரிடம்.

"நீங்க பேசுறதுக்கு அவன் மறுத்து பேசறதா...?", வியந்தவர்...

"எங்கே.., அம்பி வரலியா...? வராமல் இருக்க மாட்டானே..., நூறாயிசு..., இதோ வந்தாச்சே..., செத்த இருங்கோ..., தம்பிக்கு தீபத்தை காட்டிண்டு வரேன்... எல்லாம் நல்லபடியா நடக்கும்", ராஜாவை பார்த்துவிட்டு, சற்று தூரத்தில் வரிசையில் நின்ற அவனை நோக்கி விரைந்தார்.

ராஜாவும் அர்ச்சனையை எடுத்துக்கொள்ள, சுஜாவும் அங்கே வரவே..., இருவரும், அவரிடம் விடை பெற்றுவிட்டு கோயிலில்..., சற்று தூரத்தில் இருந்த மண்டபத்தில்..., இருவரும் சென்று அமர்ந்தார்கள்.

பூஜை கூடையில் இருந்த தேங்காயை உடைத்து ராஜா உண்ணத் துவங்க, அதைப் பார்த்தவாறே சற்றுநேரம் அமைதியாக அமர்ந்திருந்தார்.

கேட்கபோகும் விஷயம் எந்த விளைவுகளை ஏற்படுத்தும் என்பது அவருக்குத் தெரியவில்லை. ஆனால்..., இதயம் துடிக்கும் ஓசை அவர் காதுக்குள் கேட்டது மட்டும் உண்மை. அவனிடம் எதைப்பற்றி பேசவும் அவர் தயங்குவதே கிடையாது. இது ஒன்றைத் தவிர...

முடிந்த அளவு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "ராஜா..., நீ ஏன் நம்ம கடைகளைப் போய் பார்க்கக் கூடாது...?", படபடவென கேட்டுவிட்டு, சற்று பயத்தோடு அவன் முகத்தை ஏறிட்டார்.

அவர் எதிர்பார்த்தது போலவே..., அவ்வளவு நேரமாக வெகு இயல்பாக இருந்த ராஜாவின் முகம்..., கோபத்தில் இறுகிப் போனது. அவன் தாடை அழுந்திய விதத்திலேயே..., தன் கோபத்தை கட்டுப்படுத்த அவன் முயல்வதும் புரிய,

'இதற்குமேல் இதை தள்ளிபோட முடியாது...' என தனக்குத் தானே அறிவுறுத்தியவராக... அவனை ஏறிட்டார்.

"உன் அப்பாவுக்கு வயசாகுது ராஜா. எவ்வளவு நாள்தான் அவரும் ஓடிட்டே இருப்பார்...? ஒரு கடை, ரெண்டு கடைன்னா பரவாயில்லை. ஜவுளிக்கடை..., எலக்ட்ரிக்கல் கடை..., ஸ்டோர்ஸ்..., இப்படி கிட்டத்தட்ட நாற்பது ஐம்பது கடை..., எல்லாத்தையும் ஒற்றை ஆளா மேனேஜ் செய்வதுன்னா..., ஓய்ஞ்சு போய்டறார்.

"இளமையா இருக்கும்போது அவரும் ஓடினார். ஆனா இப்போ..., பொருட்கள் வாங்குவது முதல், அதை மேனேஜ் செய்வது, இருப்பு..., வெளியேறியது..., சேல்..., டேமேஜ்..., ஹப்பப்பா...,

கேக்கவே இவ்வளவு மலைப்பா இருக்கும் விஷயத்தை..., ஒத்தை ஆளா செய்வதா இருந்தால்...?

"நீயே யோசித்துப் பார். வயசாக ஆக..., உடம்பும் மனசும், ஓய்வுக்கு கெஞ்சுது ராஜா. ப்ளீஸ்..., புரிஞ்சுக்கோ..., கோபப்படாமல்..., நிதானமா யோசி, உனக்கே புரியும்...", ஆன மட்டும் சொத்து பற்றிய விஷயத்தை பேசுவதை தவிர்த்தார்.

அவர் வாயில் தப்பித் தவறி கூட....., 'அது உன் சொத்து..., அதை நீதான் கவனிக்க வேண்டும். நீ இல்லாமல் யார் செய்வா...?' என்பன போன்ற வார்த்தைகள் வெளிவந்தால்..., அதன் விளைவுகள் படு பயங்கரமாக இருக்கும் என்பதால்..., கணவனின் உடல்நிலையை மட்டும் முன்னிறுத்தினார்.

அவர் மறைத்த விஷயங்கள் அனைத்தும், ராஜாவுக்கு தெளிவாகப் புரிய, தாயை இறுக்கமாகவே ஏறிட்டான்.

"அப்பாவுக்கு அப்படியெல்லாம் வயசாகலைம்மா...", குரல் அவனுக்கு ஒத்துழைக்க மறுத்தது.

"அதெப்படி உனக்குத் தெரியும் ராஜா...? உனக்கு இப்போ இருபத்தைந்து வயசுன்னா..., உன் அப்பாவுக்கு உன்னைவிட முப்பது வயசு அதிகம். இப்போ சொல்...", கிடுக்கிப் பிடித்தார்.

"அதுக்காகல்லாம் என்னால் அங்கே போக முடியாதும்மா. வேண்ணா இன்னும் ஆள் போட்டுக்கலாம்...", தாயிடம் மறுக்க வேண்டி இருக்கிறதே என்ற எண்ணம் அவனை மிகவும் சங்கடப்படுத்தியது.

"ஆள் போட்டால்..., உன் அப்பாவின் வேலையை அவர்தானே பார்த்தாகணும்...", இதற்கு பதில் சொல்ல முடியாமல் அமைதியானான்.

"இன்னும் எவ்வளவு நாள்..., தேவையில்லாத அந்த கோபத்தை மனசுக்குள் வச்சுட்டு இருப்ப? யாரோ..., என்னவோ

சொன்னாங்கன்னு...", அவருக்கு மனம் ஆறவே இல்லை.

"யாரோ..., சொல்லியிருந்தால் பரவாயில்லம்மா...", மனம் வலிக்க வெளிவந்தன வார்த்தைகள்.

அவனது பதினைந்தாவது வயதில்..., தாரிணியும்..., குணாவும்..., தங்களுக்கென்று ஒரு குழந்தையை பெற்றுக்கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கத்திலும்..., ராஜாவை அவர்கள்..., தங்கள் குழந்தையாக ஏற்க முயன்ற வேளையில்..., அவனோ..., அவர்களோடு ஒன்றவும் முடியாமல், விலகவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்த நேரம் அது.

தாரிணியும், குணாவும் ராஜாவிடம் தங்கள் மதிப்பை மீட்க போராட..., ராஜாவோ..., அவர்கள் பாசத்தை இயல்பாய் ஏற்க முடியாமல் போராடி, பேசியும் பேசாமலும் விலகிச் செல்ல..., தங்கள் மகளின் ஏக்கத்தை புரிந்துகொள்ளாமல் செயல்படுகிறானே..., என்ற தாரிணியின் பெற்றவளின் ஏக்கம்...

மெல்லிய கோபமாக வெளிப்பட்டு..., என்ன பேசுகிறோம் என்றே தெரியாமல்..., "ஏண்டா..., இந்த சொத்துக்கெல்லாம் ஏகபோக வாரிசாக இருக்கிறோம் என்ற திமிரா...? தாரிணி ஒரு பிள்ளையை தத்தெடுத்து வளர்த்திருந்தால்..., உன் கொட்டம் அடங்கி இருக்கும். அதைச் செய்யாமல் போனதால்..., உனக்கு இவ்வளவு திமிர்.

"பெரியவன்..., உன்னை லீகலா தத்து எடுத்துட்டான்..., அதனால் அவன் சொத்தெல்லாம் ஆட்டோமேட்டிக்கா உனக்கு வந்துடும். உன் சொத்தும் உனக்கே..., ஆக..., அந்த தலைக்கனம் தானே...

"என் மகள்..., என்றாவது ஒருநாள்..., அவள் சொத்தை எல்லாம்..., அநாதை ஆஷ்ராமத்துக்கு எழுதி வைக்கப் போகிறாள் எனத் தெரிந்தால்..., அவள் காலில் வந்து விழுவாய் பார்...", விஷமாய் அவர் கக்கிய வார்த்தைகள்..., அவன் பிஞ்சு நெஞ்சில்..., விழுந்து தகிக்கச் செய்தது.

அவர் ஏதோ கோபத்தில் பேசுகிறார் என ஏற்றுக் கொண்டாலும்..., அதை கேட்டுக் கொண்டிருந்த குணா எதுவும் சொல்லாமல் போனதுதான் அவனை அடியோடு அவனை வெறுக்கத் தூண்டியது.

தாரிணியாவது..., "சும்மா இருகோம்மா..., நீ இங்கே வந்தால்.., வந்தோமா..., போனோமான்னு இருங்கோ. அவனை எதுவும் சொல்லாதேள்..." , என பேச, அவள்மேல் சற்று சாப்ட் கார்னர் உருவானது.

சொத்து என்றோ..., பணம் என்றோ..., அவனுக்கு சிந்திக்கத் தெரியாத வயது அது. ஆனால்..., தன் தாயோடான பாசத்தை, அந்த பணத்தோடு..., சொத்தோடு முடிச்சுப் போடும் மற்றவர்களின் மனபாவத்தை தாங்க முடியாமல்..., தங்கள் சொத்துக்களையே வெறுத்தான்.

இத்தனைக்கும்..., சுஜா ஒன்றும் அவனை ஆடம்பரமாக வளர்க்கவில்லை. பணத்தின் அருமை தெரிய வைத்தே வளர்த்தார். சுஜா அந்த வீட்டுக்கு வரும் வரைக்கும்..., ராஜா, கேட்டது, கேட்காதது..., அவன் விரும்ப சாத்தியமுள்ளது என அனைத்தும் அவன் கேட்காமலே கொட்டிக் கொடுக்கப் பட்டது.

என்றைக்கு சுஜா அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தாளோ..., அதன் பிறகு, அவன் கேட்காமல் அவனுக்கு வஞ்சகமில்லாமல் வழங்கப்பட்டது அன்பு மட்டுமே.

அவன் வாயைத் திறந்து இது வேண்டும் எனக் கேட்காமல்..., அதை சுஜா வாங்கிக் கொடுத்தது கிடையாது. அவன் சிறுவனாக இருந்தபொழுது, உடன் பயிலும் மாணவர்கள், வீடியோ கேம்ஸ் வைத்திருக்கிறார்கள், ஸ்பைடர்மேன்..., பவர் ரேஞ்சர் பொம்மை வைத்திருக்கிறார்கள், தனக்கும் வேண்டும் என கேட்கும் பொழுது,

அவர்களில் யாரை அவனுக்குப் பிடிக்கும் என்ற கேள்விக்கோ..., எந்த வீடியோ கேம் வேண்டும் என்ற கேள்விக்கோ.., அவனிடம் விடை

இல்லாமல் போனால்..., உனக்கு எது வேண்டும்..., உனக்கு எது பிடிக்கும், எது விருப்பம்..., அதைச் சொல்... மற்றவர்களுக்காக எதையும் செய்யாதே என வழி நடத்தியவள் அவள்.

அதைவிட..., தனக்கு சைக்கிள் வேண்டும்..., அதுவும் இந்த பிராண்ட் தான் வேண்டும் என அவன் கேட்டபொழுது..., அது அவனுக்கு அத்தியாவசியமா, அவசியமா..., தேவையா...? ஆடம்பரமா...? என கேட்க, மாலை நேரத்தில் நண்பர்களோடு சுற்ற, ஒரு ரைட் போக மட்டுமே அவனுக்கு சைக்கில் தேவை என உரைக்க..., அவன் கேட்டதை மறுக்காமல் வாங்கிக் கொடுத்தவள்.

பத்தாம் வகுப்பு படிக்கும்பொழுதே..., ஆப்பிள் போன் வேண்டும் என கேட்க..., அது அவனது ஆடம்பர தேவைக்கு மட்டுமே என்பதை அவனையே உணரச் செய்து..., கல்லூரிக்குள் அடியெடுத்து வைக்கும் அன்று வரைக்கும் அவன் அலைபேசியை உபயோகித்ததே இல்லை.

கல்லூரிக்குச் செல்லவேண்டிய நாள் காலையில்..., அவன் கேட்ட ஆப்பிள் போன் முதல், லேப்டாப் வரைக்கும் வாங்கிக் கொடுத்து அசத்தியவர்.

அவனுக்காக என இருந்த அக்கவுண்டில் இருந்து ஆயிரம் ரூபாயை அவன் செலவழித்தால் கூட, இதற்காகச் செய்தேன் என கணக்கு கொடுக்கும் அளவுக்குத்தான் அவன் இருந்தான். அனைத்தும்..., அந்த பணம் தன் வாழ்வில் எந்த புயலையும் கிளப்பிவிடக் கூடாதே என கவனமாக இருக்கப் பழகிக் கொண்டான்.

ஏற்கனவே அவனுக்கு கணினிட் பக்கம் விருப்பம் இருந்ததால்..., அது சம்பந்தமாகவே தன்னை திருப்பிக் கொண்டான். கணினியின் பக்கம் சிதறிய தன் கவனத்தை கூட, ஆனிமேஷன்..., கிராபிக்ஸ்..., என பிசியாகி விட்டான்.

மேனேஜ்மென்ட்..., பிசினஸ் பற்றிய படிப்புக்களை விடுத்து, நியூயார்க் சிட்டியில், டிசைன் படிப்பை முடித்தவன் அவன். பணம் அவனுக்கு பிரச்சனையாக இருந்ததே இல்லை..., பணம் சம்மாதிப்பது அவனது

எண்ணமும் கிடையாது.

தொழில் வட்டாரத்தில்..., சேகரின் மகன் ராஜா என்பது கூட மற்றவர்கள் அறிந்ததே. சோ.., பெயர்..., அதனால் வரக்கூடிய புகழ்..., அது கொடுக்கும் போதை..., என மனம் எண்ணத் துவங்கியதை விட..., செய்யும் வேலையில் இருக்கும் நுணுக்கம்..., அதில் இருக்கும் கற்பனை வளம்..., அதை செயல்படுத்தும் யுக்தி..., என மனம் ஒரு அட்வன்ச்சருக்குள் புகுந்து கொண்டது.

அந்த சவாலை விட்டு அவனால் வெளியே வர முடியவில்லை. அதோடு..., அந்த கடைகளைப் பற்றி நினைத்தாலே..., சொத்து பற்றிய பேச்சுதான் அவன் நினைவிற்கு வந்து நெஞ்சை அடைத்தது.

அவனது பதினெட்டாவது வயது வரைக்கும், அவன் மனதுக்குள் இருக்கும் காயத்தை சுஜா அறிந்து கொள்ளவே இல்லை. அவன் மேஜரான அன்று, அவனது பாக சொத்துக்கள், கடைகள், அதன் மதிப்பு, வரவு செலவு என அனைத்தையும் அவனுக்கு தெரிவிக்க வேண்டி தனா, வக்கீலை அணுக,

அன்று அவரைப் பார்த்த ராஜா கொந்தளித்தே போனான். தனக்கு எதுவுமே வேண்டாம் எனவும்..., அனைத்தையும் அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும் என உரைக்க, அதைக் கேட்டு குடும்பமே அதிர்ந்து போனது.

வக்கீலை அனுப்பிவிட்டு..., சுஜா அவனிடம் தனிமையில் விசாரிக்க, அவனுக்கு..., அவர்கள் அன்பு மட்டுமே வேண்டும் எனவும், சொத்து எதுவும் வேண்டாம் எனவும், அந்த சொத்தை எப்பொழுதும் தான் உரிமை கொண்டாடப் போவதில்லை எனவும் உரைக்க, அப்போதைக்கு அதை விட்டுவிட்டார்.

அவன் தங்கள் தொழில் படிப்பை படிக்காமல் போனபொழுதே சுஜாவின் அடிவயிற்றில் கலவரம் மூண்டது. படிப்பை முடித்து வந்த பிறகு, லோன் வாங்கி நிறுவனம் துவங்க அவன் முயல, முதல் முறையாக தனாவின் கோபத்தை அவன் எதிர்கொள்ள வேண்டி வந்தது.

ராஜாவின் பெயரில்..., அவன் அக்கவுண்டில் இருக்கும் பணம் துவங்கி, அவன் பெயரில் இருக்கும் சொத்துக்கள், ஷேர் விவரங்கள்..., அதன் மதிப்பு அடங்கிய பேப்பர்கள் என அனைத்தையும் ராஜாவின் முன்னால் கொண்டு வைத்தவர்,

"நீயே லட்சம் பேருக்கு கடன் கொடுக்க முடியும். அப்படி இருக்கையில்..., நீ பேன்க் வாசல் ஏறி கடன் கேட்கப் போகிறாயா? நீ.. என் பிள்ளை இல்லை என முடிவெடுத்தால்..., உன் இஷ்டப்படி செய். இல்லை..., என் பிள்ளைதான் என்றால்..., உன் பணத்தையே உபயோகப்படுத்து..." , கோபம் கொப்பளிக்க உரைத்தவர், அனைத்தையும் அவனிடம் கொடுத்துச் சென்றார்.

அதன் பிறகு, அவரை மீறும் துணிவு அவனுக்கு இருக்கவில்லை. தன் பணத்தைக் கொண்டே தொழிலில் இறங்கி விட்டான். இப்பொழுது அவன் உபயோகிக்கும் கம்பெனி கட்டிடம் கூட, ராஜாவின் சொந்த கட்டிடமே. அதையும் தனாவே அவனுக்கு ஒதுக்கிக் கொடுத்தார்.

ராஜா தனியாக நிறுவனம் துவங்கியது தனாவுக்கு மகிழ்ச்சியே என்றாலும், பரம்பரை தொழிலை விட்டுவிட்டு..., அவன் தனியாகச் சென்றதில் தாள முடியாத வருத்தம் அவருக்கு உண்டு.

தங்கள் தொழில் ரத்தம் அவன் உடம்பில் ஓடுவதால்..., அவன் அது சம்பந்தமாக படிக்கவில்லை என்றாலும், அவனால் திறம்பட தங்கள் தொழிலை நடத்த முடியும் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே..., அவன் படிப்பைப் பற்றிய கவலையை ஒதுக்கி வைத்தார்.

ஆனால்..., மூன்று மாதங்களுக்கு முன்பு, லேசாக நெஞ்சு வலிக்கவே..., மருத்துவமனைக்குச் சென்று பார்த்தவருக்கு, இதயத்துக்குச் செல்லும் வால்வுகளில் ஒன்றில் அடைப்பு இருப்பதாகவும், அதை உடனடியாக அகற்ற வேண்டும், இல்லையென்றால்..., நிலைமை சீரியசாகும் என உரைக்கவே முதல் முறையாக பயம் கொண்டார்.

விஷயத்தை உடனடியாக சுஜாவிடமும் பகிர்ந்து கொண்டார். அவர்களுக்குள் இதுவரை எந்தவிதமான ஒளிவு மறைவும் இருந்ததில்லை என்பதாலேயே அவ்வாறு செய்தார்.

மருந்து மாத்திரையில் முடிந்த அளவு கரைக்க முயற்சி செய்தாலும், முழுமையான தீர்வுக்கு, அறுவை சிகிச்சை ஒன்றே நிரந்தர தீர்வு என உரைக்கவே..., இருவரும் சற்று ஒடிந்துதான் போனார்கள். அறுவை சிகிச்சைக்கு செல்ல வேண்டுமென்றால்..., கடைகளை யார் பார்த்துக் கொள்வார்கள்?' என்ற மிகப்பெரும் வினாதான் அவர்கள் முன்னால் இருந்தது.

குணாவுக்கு அனைத்து கடைகளையும் பார்த்துகொள்ளும் திறமை இல்லை என்பதால்..., ராஜாவே அவர்களுக்கு ஒரே நம்பிக்கை. எனவேதான் அவனிடம் பேச முடிவெடுத்தார்.

முடிந்தவரை விஷயத்தை சொல்லாமல்..., அவனை கடைக்கு செல்ல வைக்க, ஆனமட்டும் முயற்சி செய்தார். தன் முயற்சி தோல்வியைத் தழுவும் என்பது புரிய, கணவரின் நினைவில், சுஜாவின் கண்கள் கலங்கத் துவங்கவே..., பதறிப் போனான்.

'அம்மாவுக்காக இதைச் செய்...' என்றால் அவன் நிச்சயம் செய்வான்தான்..., ஆனால்..., தனக்காக என்பதை விட, அவர்கள் தொழிலுக்கு அவன் எவ்வளவு தேவை என்பதை உணர்ந்து அவனாகவே வர வேண்டும் என எண்ணினார்.

"அம்மா..., எதுக்கு அழறீங்க...? ஏன் அழறீங்க....? இப்போ உண்மையை சொல்லப் போறீங்களா இல்லையா...?", இத்தனை வருடங்களாக, தைரியமான பெண்மணியாக மட்டுமே அவளைக் கண்டவனுக்கு, அவள் அழுகை உயிரையே உலுக்கியது.

சுஜாவுக்கோ..., உண்மையைச் சொல்ல முடியாத தவிப்பு. இப்பொழுது அவனிடம் உண்மையைச் சொன்னால்..., அதை எந்த அளவு தாங்கிக் கொள்வான் என்பது அவளுக்கு சந்தேகமே.

ஒருமுறை..., தனா சென்ற கார்.., ஒரு சிறிய விபத்தில் சிக்க, கார் ஓட்டிய டிரைவரை உண்டு இல்லை என செய்ததோடு..., தனாவின் தலையில் வெளிக்காயம் இல்லை என்றாலும்..., அழுத்தமான அடி என்பதால்... உடனடியாக மருத்துவமனை சென்று..., எக்ஸ்ரே..., ஸ்கேன்..., ஒரு நாள் மருத்துவமனை ஓய்வு என ஆர்ப்பாட்டம் செய்துவிட்டான்.

அப்படி இருக்கையில்..., இதைச் சொன்னால்..., தாங்க மாட்டான் என்பதாலேயே உண்மையைச் சொல்லவில்லை.

சுஜா, மௌனமாக தன் கண்ணில் வழியும் கண்ணீரை துடைத்தாளே தவிர, வார்த்திகளை உதிர்க்கவில்லை.

"அப்போ..., விஷயம் என்னன்னு சொல்ல மாட்டீங்க...."", பதறிய மனதை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

அவர் அழுவது தாங்காமல்..., இதற்குமேல் யோசிக்க எதுவும் இல்லை என்பது போல்.., "ம்மா..., இப்போ என்ன..., நான் கடைகளை கவனிக்கணும் அதுதானே. நான் செய்யறேன் போதுமா...? ப்ளீஸ் அழாதீங்க. நான் இருக்குற வரைக்கும், உங்க கண்கள் கலங்கவே கூடாதும்மா. இதை செய்தே ஆகணும்னு ஆடர் போடுங்க..., அதை நான் செய்யறேன். அதை விட்டுட்டு...."", அவன் குரல் உணர்ச்சியின் பிடியில் கலங்கியது.

அவன் கையை சட்டென பற்றியவர்..., "உனக்கு பிடிக்காதுன்னு தெரிந்தும், அம்மா எப்படிப்பா உன்னை ஃபோர்ஸ் பண்ண முடியும்...?", அவனிடம் கேட்க,

"உங்க மனசு கஷ்டப்படுறதை விட, என்னை போர்ஸ் பண்றது ஒண்ணும் தப்பே இல்லம்மா... நாளையில் இருந்து நான் கடைக்குப் போறேன். அப்பா கிட்டே நானே பேசறேன். இப்போ உங்களுக்கு சந்தோஷமா...?", அவனது இந்த அன்பைக் கண்டு, சுஜா உருகித்தான் போனார்.

“அம்மா மேலே கோபமா ராஜா...?”.

“என்னால் அது முடியுமாம்மா...?”, அவரிடமே திருப்பிக் கேட்க, அவன் முன்னுச்சி முடியை செல்லமாக கலைத்தார்.

“இன்னொரு விஷயம்...”, கார்த்திகாவை மனதில் வைத்துக்கொண்டு அவர் துவங்கவே...,

“ம்மா..., ஒரு நாள் ஒரு விஷயம் போதும்மா. எல்லாம் ஒரே நாள்ன்னா நான் தாங்க மாட்டேன். அது மட்டும் இல்லை. இப்போ நாம வெளியே போகலன்னா..., குருக்களே வந்து துரத்தி விடுவார். வாங்க போகலாம்....”, சட்டென எழுந்தவன், சுஜாவையும் கைத்தாங்கலாக எழுப்பி விட்டான்.

‘தாரிணிக்கு என்ன பதில் சொல்வது...?’ என்ற யோசனையோடு அவனைப் பின்தொடர்ந்தார் சுஜா.

பகுதி - 10.

மறுநாள் காலையில் அலுவலகம் செல்ல கிளம்பி வந்தவன், ஷூ போட அமர்ந்தவாறு..., “ம்மா..., அப்பா எங்கே...? வாக்கிங் போயிட்டு இன்னுமா வரலை...?”, “மாமி..., இன்னைக்கு விரதம் எதுவும் இல்லையா...? நல்ல சாப்பாடு சாப்ட்டேன்...”, தாரிணியிடம் வம்புக்கு இழுக்கவும் மறக்கவில்லை.

“ஏண்டாப்பா..., இந்த மாமியை நீ விடவே மாட்டியா...? என்னவோ குத்திக் காட்டறாப்போலையே இருக்கு...”, இவ்வளவு நாட்களாக அமைதியாகவே பொருமும் தாரிணி..., அன்று அவனிடமே கேட்டுவிட்டார்.

சட்டென அங்கே ஒரு அமைதி சூழ, ராஜா சாக்ஸ் போடுவதை நிறுத்திவிட்டு, கையை பிசைந்து கொண்டான். ‘இதற்கு என்ன பதில்

உரைப்பது? அவனுக்குத் தெரியவில்லை..., சுஜாவை நிமிர்ந்து பார்க்க, 'நீயே பதில் சொல்..' என்பதுபோல் கையில் இருந்த பேப்பரை புரட்டியவாறு அமர்ந்து கொண்டார்.

"இது..., நீங்க சொல்லிக் கொடுத்தது தான்...."", அவளை நிமிர்ந்து பார்க்காமல் உரைத்தான்.

"ராஜா..., உனக்கு நான் இதைத்தான் சொல்லிக் கொடுத்தேனா?"", சுஜா கடிந்துகொள்ள,

"அக்கா..., இதை நாங்களே பேசி தீத்துக்கறோமே..."", தாரிணி இடை புகுந்தாள்.
சுஜா உடனே அங்கிருந்து அகல, "மாமி..., திஸ் இஸ் தி லிமிட்..., அவங்க என் அம்மா..., நீங்க எப்படி அவங்களை பேசாமல் இருக்கச் சொல்லலாம்?"", இருக்கையில் இருந்து எழுந்தே விட்டான்.

"நான் எங்கே அப்படிச் சொன்னேன்...?"", தாரிணி பதற,

சுஜா எதையோ சொல்லத் துவங்கவே..., "நோ'ம்மா..., உங்களையும் என்னையும் பிரிச்சு பாக்கவே கூடாது. ஊர் உலகத்தில் இருக்கும் சாதாரண புள்ளை நானும் இல்லை..., சாதாரண அம்மா நீங்களும் இல்லை. இதில் நீங்களே சொன்னால் கூட நான் கேக்கறதா இல்லை..."", கையை கோபமாக உதறிவிட்டு எழுந்து விருட்டென சென்றான்.

"ராஜா காபி கேட்டியே..."", சுஜா அழைக்க,

"போதும்மா..., நானே சூடாத்தான் இருக்கேன்...."", கோபமாகவே உரைத்துச் சென்றான்.

தாரிணியை விட, சுஜாதான் அதிகமாக வருத்தப்பட்டார். 'இருந்து இருந்து இன்றுதான் ராஜாவிடம் உரிமையாய் பேசவே துவங்கினாள்..., நாம் இடையில் புகாமல் இருந்திருக்கலாம்....', வருத்தமாக எண்ணிக் கொண்டார்.

"ரியலி சாரி தாரிணி....., இப்படி ஆகும்னு நான் எதிர்பாக்கவே இல்லை....", மன்னிப்பாக உரைக்க,

"விடுங்கோ..., எல்லாம் நான் வாங்கி வந்த வரம்..., அவனைப் பற்றி தெரிந்தும் உங்களாண்ட நான் அப்படி பேசியிருக்கப்படாது... நீங்க என்ன நினைக்கறேள்..., அவன் தெரியாம என்கிட்டே அப்படி பேசினான்னா...?

"இல்ல..., எனக்கு பதில் சொல்ல அவனுக்கு பிடிக்கலை அதான்..., விடுங்கோ..., எங்கே போய்டப் போறான்...", அவள் சாதாரணமாக உரைக்க, அதைக் கேட்டவாறே அங்கே வந்த ராஜா..., ஒரு நொடி அப்படியே நின்றுவிட்டான்.

அவனைப் பார்த்த தாரிணி..., "என்ன சொன்ன...? மாமின்னு நான்தான் சொல்லிக் கொடுத்தேன்னா...? அப்போ.., நான் என்ன சொல்லிக் கொடுத்தாலும் அப்படியே கூப்பிடுவியா? சரி..., இப்போ சொல்றேன்..., என்னை...", அவள் இடைவெளி விட்டு நிறுத்த,

"ம்மா..., அப்பா எங்கே...?", படபடத்தான்.

"என்னடாப்பா..., அவ்வளவு அவசரம்....? உனக்கு பிடிக்காத மாதிரி எல்லாம் கூப்பிட சொல்ல மாட்டேன்..., என்னை மன்னின்னு கூப்பிடு...", அவர் உரைக்க, சட்டென எதில் இருந்தோ விடுபட்ட உணர்வு.

"மன்னிக்கறதா...? நீங்களா...? நானா...?", முதலில் அவன் சொன்ன விஷயம் புரியாமல் திகைத்தவர்கள், புரிந்தபின், "படவா..., கிண்டலா பண்ற...?", தாரிணி முதல் முறையாக அவனை தொட்டு அடித்தவர், கண் கலங்க அவனைப் பார்த்து சிரித்தார்.

அவன் அழைப்பதாகவோ..., இல்லை மறுக்கவோ இல்லை. ஆனால்.., அவனது அந்த இலகுத் தன்மை அனைவரையும் இயல்பாக்கியது மட்டும்

உண்மை.

"ம்மா..., அப்பா... எங்கே...? இதே கேள்வியை டென் டைம்ஸ் கேட்டுட்டேன்...", சிறுவன்போல் குதிக்க..., உள்ளார்ந்து சிரித்தார்கள்.

"கழுதை கெட்டா குட்டிச் சுவர்..., எல்லாம் அந்த ஆபீஸ் ரூம்லதான் இருப்பாங்க போய் பார்....".

"ம்மா..., சந்தடி சாக்கில் அப்பாவை கழுதைன்னு சொல்லிட்டீங்க. இருங்க அப்பாகிட்டே சொல்றேன்... சுஜாவிடம் உரைத்தவன், "வரேன்...", தாரிணியிடம் தலையசைப்பில் உரைத்துவிட்டு விரைந்தான்.

"என்னக்கா..., உலக அதிசயமா இருக்கு... ராஜா, ஆபீஸ்ரூமுக்கெல்லாம் போறான். நேத்து இந்த விஷயத்தைதான் பேசினேள் போல...", மறைமுகமாக கார்த்திகாவின் விஷயத்தை பேசவில்லையா என கேட்டாள்.

"அது...", அவள் தயங்க, "பரவாயில்லக்கா..., எப்படியோ.., கடைக்கு போக முடிவு பண்ணியிருக்கானே...., முதல்ல இந்த விஷயம் சரியாகட்டும்..., கண்டிப்பா இந்த விஷயத்தை என்னால் சரி பண்ணவே முடியாது. எல்லாம் நல்லபடியா முடிந்தால் சந்தோசம் தான்...", அங்கிருந்து சென்றாள்.

ராஜா நல்ல முடிவாக எடுக்க வேண்டுமே என்ற வேண்டுதல் அவள் மனதுக்குள் எழ, தன் இஷ்ட தெய்வத்திடம் வேகமாக ஒரு வேண்டுதலை வைத்து முடித்தாள்.

விஷயத்தை புரிந்துகொண்ட தாரிணியை எண்ணி நிம்மதியாக மூச்சு விட்டார் சுஜா.

"ம்மா..., நீங்களும் வாங்க...", தந்தையிடம் பேசச் சென்றவன், வேகமாகத் திரும்பி வந்து அவள் முன்னால் நின்றான்.

“அதானே பார்த்தேன்..., நீயாவது மாறுவதாவது...? சரி வா...”, அவனை அழைத்துக் கொண்டு, கணவனை நாடிச் சென்றார்.

அவர் செல்லவே..., கடை விஷயமாக பேசிக் கொண்டிருந்த தனாவும் குணாவும் அவளை ஏறிட்டவர்கள்..., அவர் பின்னால் வந்த ராஜாவை வியப்பாய் பார்த்தார்கள்.

“என்ன சுஜா..., குழந்தை உன் முந்தானை பின்னாடி ஒளிஞ்சுட்டு இருக்கு...?”, அதென்னவோ இருவரையும் ஒன்றாகப் பார்த்தாலே தனா இருவரையும் கேலி செய்வார்.

“குழந்தைக்கு அப்பாகிட்டே என்னவோ சொல்லணுமாம்...., சொல்லுடா...”, முகம் கொள்ளா புன்னகையில் அவர் உரைக்க, ஆண்கள் இருவரும் அவனை ஏறிட்டார்கள்.

ஒரு நிமிடம் தயங்கியவன், “அப்பா..., நான் அடுத்த வாரத்தில் இருந்து கடைக்கு வரேன்....”, அவன் உரைக்க, தனாவும் குணாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“ராஜா..., நிஜமாவா சொல்ற...? நான் கனவு எதுவும் காணலையே...”, தன் இருக்கையில் இருந்து எழுந்தே விட்டார் தனா.

தனாவின் செய்கையைப் பார்த்த ராஜாவுக்கு..., தன் முடிவை எண்ணி மிகுந்த சந்தோஷமாக இருந்தது. ‘தன் வரவை இவ்வளவு எதிர்பார்த்தாரா? அப்பாவை நிறைய ஏங்க விட்டு விட்டோமோ...?’, தனக்குள் எண்ணியவன், தாயைப் பார்க்க..., கணவனின் மகிழ்ச்சி கண்டு, சுஜாவும் சற்று நெகிழ்ந்துதான் போனார்.

தனாவின் கண்கள்..., தன் மனைவிக்கு அளவில்லா நன்றியையும், காதலையும் வாரி வழங்கியது. சுஜா பேசாமல், அவன் இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டான் என்பது அவருக்கு உறுதியே.

குணாவும் முகம் விகசிக்க அவனை ஏறிட்டான்..., அத்தோடு...,

"அதுக்கென்னப்பா..., தாராளமா வா... இதைக் கேக்கவே எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?", தன் பங்குக்கு உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

"ராஜா..., அப்போ இனிமேல் நிர்வாகத்தை நீதான் பாத்துக்க போறன்னு எல்லார்கிட்டேயும் சொல்லிடட்டுமா? விக்னேஷ்..., தேவாரம்..., இவங்க எல்லாரையும் உன்னை வந்து பார்க்க சொல்லவா...?", தனா படபடத்தார்.

"ஹையோ அப்பா..., குருவி தலையில் பனங்காயை வைக்கிற மாதிரி..., ஒரே நாளின் எல்லா பொறுப்பையும் என்கிட்டே கொடுத்துட்டு, நீங்க ஜாலியா ஹனிமூன் போகலாம்னு பாக்கறீங்களா? அதெல்லாம் முடியாது. முதல்ல சின்னதா உங்க பொறுப்பை வாங்கிக்கறேன். பிறகு நிர்வாகத்தை பாக்கலாம்....", கிட்டத்தட்ட அலறினான்.

"ஹனிமூனா..., போய்ட்டாலும்...", சுஜாவை ஓரவிழியில் பார்த்தவாறே தனா அலுத்துக்கொள்ள, "ஆண்டவா..., குழந்தை முன்னாடி போய்...", சுஜா முகம் சிவக்க, தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

"ஹா..., ஹா....", ராஜா அதைப் பார்த்து வாய்விட்டே சிரித்தான்.

"கேட்டியாடா..., நீ இன்னும் குழந்தையாம்..., எனக்கு வாய்ச்சது அவ்வளவுதான்...", தனாவோ விடாமல் புலம்ப, ராஜாவின் சிரிப்பு அதிகரிக்க, சுஜாவோ, இப்பொழுது வெளிப்படையாக அவரை முறைத்தார்.

"அப்பாபாபா....", ராஜா சிரிப்புக்கிடையில் இழுத்தவன், "ம்மா..., அப்பாவை சுத்தமா கவனிக்கிறதே இல்லை போல..., அப்பா பாவம்...", அடக்க மாட்டாமல் சிரித்தான்.

"டேய் படவா..., இங்கே எதைப்பற்றி பேச வந்தோம்..., நீ என்ன பேசிட்டு இருக்க..., முதல்ல கடை விஷயத்தை பேசுடா....", அவனை

கண்டித்தவர், "நீங்க ரூமுக்குள்ளே வாங்க..., கவனிக்கறேன்...", கணவனிடம் காதுக்கருகில் கிசுகிசுத்தார்.

அவர்கள் பேச்சையும்..., சிரிப்பையும் கவனித்த குணாவுக்கு..., தான்மட்டும் தனியாகிப்போன உணர்வு. சிறு ஏக்கம் மனதுக்குள் எழ, அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மனைவி சொல்லவே..., கேலியை கைவிட்டு, "அதுவும் சரிதான்..., ஆனா எந்த பொறுப்பை கவனிச்சுக்கறன்னு சொன்னால் நல்லா இருக்கும். கடைக்கு வரதா முடிவு பண்ணினாலே..., என்ன செய்யணும்னு கண்டிப்பா யோசித்து இருப்பியே...", அவனை உணர்ந்தவராக கேட்டார்.

தன் அண்ணன் தன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்டு வியந்தவனாக..., "ம்..., ஒரு சின்ன ஐடியா இருக்கு..., எதுக்கும் நான் ஒரு வாரம் கழிச்சு சொல்றேனே... இப்போ என் ஆபீஸ் போக வேற டைம் ஆச்சு. இன்னைக்கு ஒரு பெயின்ட் 'ஆட்' முடிச்சு கொடுக்குறதா வேற சொல்லியிருந்தேன்....", அவன் உரைக்க, நிறைந்த மனதோடு அவனுக்கு விடை கொடுத்தார்கள்.

அவன் செல்லவே..., "இந்த மாயம் எப்படி அண்ணி...? கடைன்னு சொன்னாலே பட்டாசா பொரிவான்..., இப்போ என்னன்னா..., அவனே வந்து, கடைக்கு வரேன்னு சொல்றான்...? என்னாலும் நம்பவே முடியலை...", குணா கேட்டான்.

"உன் அண்ணி மாயம் செய்யவே வேண்டாம்...., அம்மாவுக்காக செய்டான்னா உடனே செய்வான்..., அப்படி ஒரு அம்மா கோண்டு அவன்..", குறை சொல்வதுபோல் உரைத்தாலும், குரலில் அவ்வளவு பெருமை, கர்வம்.

அதை உணர்ந்துகொண்ட குணாவுக்கு மனதின் ஓரம் வலித்தாலும் அதை மறைத்துக் கொண்டு..., "அதென்னவோ சரிதான். ஆனாலும்..., அண்ணி இந்த விஷயத்தில் அவனை போர்ஸ் பண்ணி இருக்க மாட்டாங்களே...", சிறு வயதில் இருந்தே அவர்களது புரிதலுக்கும்,

அதற்கான இடைவெளியையும் உணர்ந்தவனாக கேட்டான்.

அவன் அவ்வாறு உரைக்கவே..., 'ஒரு வேளை என் உடல்நிலையை காரணம் காட்டினாளோ....?' எண்ணிய தனா, உடனே அதை அழித்தார். அப்படி இருந்திருந்தால்..., ராஜா இவ்வளவு சாதாரணமாக வந்து உரையாடிச் செல்ல மாட்டான் என்பது அவருக்குத் தெரியும்.

"அவனுக்கு அவங்க அப்பா வேலைப்பழுவை தாங்கிக்கணும்னு தோணிச்சோ என்னவோ... இப்போ அவன் வரது சந்தோசம் தானே..., அப்போ விடுங்க..., போய் வேலையைப் பாருங்க...", விஷயத்தை உரைக்காமல் நழுவிச் செல்லும் மனைவியை எண்ணி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார் தனா.

"பாத்தீங்களாண்ணே..., அதென்னவோ அவங்க ரெண்டுபேருக்குள் இருக்கும் ரகசியத்தை, எப்பவுமே நமக்கு சொல்ல மாட்டாங்க...", சற்று பொறாமையாக உரைத்தானோ...

"ம்...", நெஞ்சு நிமிர அதை ஆமோதித்தார் தனா.

தன் அலுவலகத்துக்குள் நுழைந்த ராஜாவை..., வழக்கம்போல் விநாயக் வரவேற்றான்.

"டேய் மச்சான்..., புது ஆளை வேலைக்கு எடுக்கணும்னு சொன்னியே..., 'ஜென்னா... லேடியா..., சொல்லிட்டன்னா எனக்கு பில்ட்டர் பண்ண வசதியா இருக்கும்...", கையில் கத்தை காகிதத்தோடு அவன் முன்னால் அமர்ந்தான்.

"ம்..., எனக்கென்னவோ லேடியா இருந்தால் பரவாயில்லன்னு தோணுது. ஏன்னா..., இப்போதைக்கு ரேவதி மட்டும் தனியா இருக்காங்க. அவங்களுக்கு ஒரு கம்பெனி இருந்தால் நல்லா இருக்கும்...", அவன் தன் மடிக்கணினியை உயிர்ப்பித்தவாறே உரைத்தான்.

"அப்படின்னா கூட..." இழுத்தவன்..., "எப்படியும் ஒரு நூறு பேருக்கு

மேலே இருப்பாங்க போலடா. எல்லாருக்கும் கால் லெட்டர் அனுப்பவா...?", அவன் கேட்க, தன் ட்ரிம் செய்த தாடையை கைகளால் தடவியவாறு யோசித்தவன்,

"ஏண்டா மச்சான்..., மூளைன்ற வஸ்த்து உனக்கு கடுகளவு கூட கிடையாதா? இருக்குற ஒரு இடத்துக்கு பத்துபேருக்குள் போட்டி வைத்தால் பரவாயில்லை. அதைவிட..., நாம என்ன எம்என்ஸ் கம்பெனியா வச்சு நடத்தறோம்...? நூறுபேரில் ஆட்களை பில்ட்டர் பண்ண...?", சற்று கோபமாகவே வினவினான்.

"இல்லடா மச்சான்..., எப்பவுமே பெருசா யோசிக்கணும்னு நீதானே சொல்லுவ, அதான்...".

"பெருசா யோசிக்கணும்னு சொல்லி இருக்கேனே தவிர, கேணத்தனமா யோசிக்கணும்னு சொல்லி இருக்கேனா? அதிலும்..., எவ்வளவு பெருசா யோசிச்சு இருக்க..., அப்படியே புல்லரிக்குது...", கைகளை பரபரவென தேய்த்துக் கொள்ள..., விநாயக் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டான்.

அதைப் பார்த்தவன்..., "கோச்சுகிட்டியா மச்சான்...?", அவன் கேட்க...,

கடுப்பாக..., "ஆமா...", இறுக்கம் குறையாமலே உரைக்க, "கோச்சுக்கோ..., கோச்சுக்கோ..., அதுக்கு முன்னாடி..., இங்கே கேபின் போட சொன்ன விஷயம் என்ன ஆச்சு...?" கேட்டவன்..., இருக்கையில் இருந்து எழுந்த வாறே...,

"நீ யோசித்து வை..., அப்படியே..., அந்த அப்ளிகேஷன் எல்லாத்தையும் ஆல்பபெட் ஆடர்ல அடுக்கி என் டேபிள் மேல வை....", சொல்லிவிட்டு தாங்கள் கொடுப்பதாகச் சொல்லியிருந்த 'ஆட்' முடிந்துவிட்டதா என பார்க்கச் சென்றான்.

ஒரு அரைமணிநேரம் சென்று தன் இடத்துக்குத் திரும்பி வந்தவன்

முன்னால்..., தான் தேர்ந்தெடுத்த அப்ளிகேஷன்களைக் கொடுக்க, ஒவ்வொன்றாக அவற்றை பார்வையிட்டான்.

"இங்கே பாரேன்..., பிபிஏ...., முடிச்சுட்டு..., டிப்ளமோ இன் அனிமேஷன் பண்ணியிருக்கா..., அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்...? பேர் நல்ல ஸ்டைலா இருக்கு..., நிஹாசினி...., இதை பாக்கறியா...?", விநாயக் கேட்கும் முன்பே..., தன் கையில் இருந்த கத்தை பேப்பர்களை மேஜைமேல் போட்டுவிட்டு, அவன் கையில் இருந்த ஒற்றை காகிதத்தை பறித்திருந்தான்.

ராஜாவின் செய்கையை திகைப்பாய் விநாயக் பார்க்க, அந்த அப்ளிகேஷனில் இருந்த புகைப்படத்தில் தன் பார்வையை பதித்தவன், "ஹாசினி..." இதழ்களுக்குள் முனகி, தன் கட்டை விரலால் அந்த புகைப்படத்தை வருடினான்.

அவன் நினைவுகளோ..., ஐந்து வருடங்களுக்கு முன்னர்..., தங்கள் கடைக்குச் சென்றதில் போய் நிலைத்தது. எப்பொழுதும்..., தங்கள் கடைக்குச் சென்றால்..., தனக்குத் தேவையானதை எடுத்துவிட்டு கிளம்பிவிடும் அவன், அன்று அவனது கல்லூரித் தோழர், தோழியர் சிலர் வந்திருக்கவே..., அவர்களோடு..., பெண்கள் செக்ஷன் சென்றான்.

தன் தோழிகளை நாடிச் செல்ல..., அங்கே..., அவன் கவனத்தைக் கவர்ந்தது ஒரு குடும்பம். அவன் முதலில் சாதாரணமாகத்தான் அவர்களை கவனித்தான். ஆனால்..., சற்று நேரத்தில்..., குழந்தையும் அல்லாத..., குமரியும் அல்லாத ஒரு பெண் அவன் கவனத்தைக் கவர்ந்தாள்.

ராஜாவுக்கு ஆண் தோழர்களை விட, பெண் தோழிகள் அதிகம். அது கூட..., அவன்மேல் உள்ள நம்பிக்கையால் சேர்ந்த தோழிகளே. அவர்களுக்குள் ராஜாவைப் பற்றிய பேச்சு எழுந்தாலே..., முதலில் வரும் வார்த்தையே..., அவனோடு எங்கே வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் செல்லலாம் என்பதே.

அவ்வளவு நம்பிக்கையானவன். பெண்களின் கண்ணைத் தவிர, அவன் பார்வை தப்பித் தவறி கூட தடம் மாறுவது கிடையாது. பேசும் வார்த்தைகளில் கூட. . . , ஒரு கண்ணியம் வெளிப்படும். அப்படிப் பட்டவன். . . , எந்தப் பெண்ணையும் ஒரு நொடிக்கும் அதிகமாக தொடர்ந்து பார்க்க கூட மறுப்பவன், முதல் முறையாக ஒரு பெண்ணை மீண்டும் பார்த்தான்.

அவளது உருவத்தைவிட, அழகை விட. . . , அவள் செய்கை. . . , அதுதான் அவனை, அவளைக் காணத் தூண்டியது. அதுவும். . . , அவளைவிட வயது குறைந்த ஒரு சின்னவளிடம், அதற்கு இணையாக சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். அந்த குழந்தை எடுக்கும் ஆடை அனைத்தையும் தனக்கு வேண்டும் எனச் சொல்வதும். . . , அந்த சின்னவளோ. . . , பெரியவளுக்கு அந்த உடை சேராது எனச் சொல்லி கத்துவதும் அழுவதுமாக இருக்க,

பெரியவர்களோ. . . , அவர்களைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். . . , கடையில் வைத்து அவர்களை எதுவும் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டு இருந்தார்கள்.

அத்தோடு. . . , சின்னவளுக்காக அவர்களது தாய் இரண்டு மூன்று உடை எடுக்க, பெரியவளோ. . . , தனக்கும் அத்தனை உடை வேண்டும் என மல்லு கட்டிக் கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்தவனுக்கு. . . , சொந்த தங்கையிடம் போட்டிபோடும் அவள் குணத்தை எண்ணி சிரிப்பாக இருந்தது.

"நிஹாசினி கண்ணு. . . , சின்னவளை அழ வைக்காதே. . . . ", அவர்களது அப்பா பெரியவளை கடிந்து கொண்டார்.

'நிஹாசினி. . . . ' அவன் அனுமதி இன்றியே அவள் பெயர் அவன் மனதில் பதிந்து போனது.

"சும்மாப்பா. . . . ", பெரியவள் உடனே தந்தையின் அருகில் ஓடி வந்து

ஓட்டிக் கொண்டாள்.

"எல்லாம் நீங்க கொடுக்குற செல்லம் தான். எதுக்கெடுத்தாலும் சின்னவளோட போட்டி போட்டுகிட்டே இருக்குறது. இது எங்கே போய் நிக்கப் போகுதோ...?", அலுத்துக் கொண்டாள் பெற்றவள்.

"ம்ச்..., என்ன துளசி இது..., அவங்க சும்மா விளையாடறாங்க..., அதைப் போய் பெருசா பேசிகிட்டு...., சின்னவ வளரும்போது..., பெரியவதான் அவளை இன்னொரு அம்மாவா தாங்கிப்பா பார். என்ன கண்ணு..., அப்பா சொல்றது சரிதானே...", மகளை தோளோடு அணைத்துக் கொள்ள, இன்னும் சலுகையாக அவர் இடக்கையை பற்றிக் கொண்டாள்.

அந்த பிணைப்பு..., தனக்கும் சுஜாவுக்கும் இடையே இருப்பது போன்ற அந்த அன்னியோன்னியம்..., அதுதான் அவர்களை அவ்வளவு கவனிக்க வைத்ததா...? அவனுக்குத் தெரியவில்லை. ஆனால்...., அந்த தந்தையின் முகமும், அவரிடம் கொஞ்சிய அவள் முகமும் கல்வெட்டாய் மனதில் பதிந்து போனது.

அதே நேரம்..., சட்டென ஒரு ஆள் அங்கே வர, அவளது தந்தை வேகமாக வணக்கம் வைக்க, அவ்வளவு நேரம் மலர்ச்சியாக இருந்த நிஹாசினியின் முகம் சட்டென வாடிப் போனது.

"அது யார்ப்பா...? நீங்க ஏன் அவருக்கு வணக்கம் சொன்னீங்க...?", தந்தையிடம் கேட்க,

"அவர்தான் என்னோட மேனேஜர்மா..., சரி நீ ட்ரெஸ் எடுத்துட்டியா...? கிளம்பலாமா...? உனக்கு எது புடிச்சிருக்கோ அதை எடுத்துக்கோ...", அதற்குமேல் அவர் அதை பெரிதாக கவனிக்கவில்லை.

அவளோ...., "அப்பா..., நான் யாருக்கும் விஷ் பண்ற இடத்தில் இருக்க கூடாதுப்பா. நான் சொந்தமா பிசினஸ் பண்ணனும். நிறையபேருக்கு வேலை கொடுக்கணும்.... அவங்களை எல்லாம்

நல்லபடியா நடத்தணும்...", கண்களில் கனவு மின்ன உரைத்ததை அவனும் கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

"ஆமா..., இவ பில்கேட்ஸ் பொண்ணு..., பிசினஸ் பண்ணப்போறா..., முதல்ல ப்ளஸ்டூவை ஒழுங்கா எழுதுற வேலையைப் பார்...."", அவளை கடிந்து கொண்டார்.

"துளசி..., என் பொண்ணுக்கு என்ன செய்ய ஆசையோ அதைச் செய்யட்டும். அதுக்கு நான் முழு ஆதரவு கொடுப்பேன். நீ ஏன் அவளை டிஸ்கரேஜ் பண்ற..., விடு..., நமக்கெல்லாம் லட்சியமே இருந்ததில்லை, என் பொண்ணுக்கு..., அவளுக்குன்னு ஒரு கனவிருக்கே..., அதை நினைத்து சந்தோஷப்படு..., நீ நல்லா வருவம்மா...", ஒரு தந்தைக்கே உரிய கர்வம்..., பொறுப்பு..., அனைத்தும் அவர் வார்த்தைகளில் தொனித்தது.

"என்னவோ போங்க..., நான் சொன்னா கேக்கவா போறீங்க...., சரி வாங்க போகலாம்..."", தன் கணவனிடம் சொல்லி புரிய வைக்க முடியாது என்பதால், அதை விட்டுவிட்டு தன் வேலையைப் பார்க்க கிளம்பினார்.

"போங்கம்மா..., என்னைக்காவது ஒரு நாள்..., உங்க பொண்ணு பிசினஸ் செய்யிறதைப் பாத்துட்டு அசந்து போகப் போறீங்க பாருங்க... தாயின் நாடியைப் பிடித்து ஆட்டியவள்..., ஏய்..., முன்னாடி போடி குட்டிப் பிசாசே... எப்போ பார்..., என் அம்மாகூடவே ஒட்டிகிட்டு..."", சிறியவளை வம்புக்கு வளர்த்தாள்.

"போடி பெரிய பிசாசே..., வ...வ..வ..., அம்மா..., நீங்க வாங்கம்மா..."", தாயை இழுத்துக்கொண்டு முன்னால் செல்ல, "உனக்கு இருக்குடி..."", நிஹாசினி பின்னால் கத்த..., அதைக் கேட்டவனது இதழ்களில் அழகான புன்னகை ஒட்டிக் கொண்டது.

"அம்மணிக்கு பிசினஸ் பண்ணணுமா...? பண்ணலாமே..."", தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

“டேய் ராஜா..., என்னடா..., தனியா பேசிட்டு இருக்க..., இங்கே வாடா... எனக்கு இந்த கலர் சூட் ஆகுமா பார்...”, அவன் தோழி குரல் கொடுக்க, இவ்வளவு நேரமாக தன் கவனம் அவர்கள் மேல் இருந்ததையே அப்பொழுதுதான் உணர்ந்தான்.

‘டேய் ராஜா..., நீயா...?’, தன்னையே கேட்டுக் கொண்டவன், அவளைக் காண சென்றான். அதன் பிறகு..., நிஹாசினியை அவன் மறந்துவிட்டான் எனச் சொல்ல முடியா விட்டாலும், தன் கடைக்குச் செல்லும் வேளையில், அவன் கண்கள் அலை பாய்வதை அவனால் தடுக்க முடிந்ததில்லை.

‘அவ இப்போ என்ன செய்துட்டு இருப்பா? என்ன படிப்பா...?’ இப்படியான நினைவுகள் அவளைப் பற்றி எழுவதையும் அவன் தடுக்க முயன்றதில்லை. ஆனால்..., அவளைத் தேட வேண்டும் என்றோ..., காண வேண்டும் என்றோ முயன்றதில்லை.

முதல் விஷயம்..., அவன் நிஹாசினியை கண்டபொழுது அவள் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவி. அதேபோல்..., தன் மனதுக்குள் இருப்பது காதல் தானா என்பது அவனுக்கே உறுதியாகத் தெரியவில்லை. நினைவுகள் மட்டுமே காதல் என அவனால் அறுதியிட்டு உரைக்க முடியவில்லை.

அப்படிச் செய்வதற்கு அவனது வளர்ப்பு அனுமதிக்கவில்லை என்பதுதான் சரியாக இருக்கும். சுஜா அவனுக்கு கூறிய அறிவுரை ஒன்றுதான். ‘எந்த பெண்ணின் மனதையும் நீயாக கலைக்கக் கூடாது. அப்படி யார் மனதையாவது கலைத்தால்..., அவள் உன் மனைவியாக மட்டுமே இருக்க வேண்டும்...’’, அவள் கொடுத்த அறிவுரை..., அதை அவன் பிடிவாதமாக கடை பிடித்தான்.

எந்த பெண்ணையும் பார்த்த உடன்.., அவன் நினைவிற்கு வருவது சுஜாவின் அறிவுரையே..., எனவே..., பெண்களிடம் பேசும்பொழுது மிகுந்த கவனமுடன் இருப்பான். அந்த மனக் கட்டுப்பாடே..., நாடு விட்டு நாடு சென்ற பிறகும் அவனுக்குத் துணை இருந்தது.

கிட்டத்தட்ட அவளை மறந்துவிட்டோம் என எண்ணிக் கொண்டிருக்க, நிஹாசினி என்ற அவள் பெயர் தன்னை இவ்வளவு தாக்குகிறது என்றால், சுகமாக அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான்.

இதழ்களில் ஒரு புன்னகை ஒட்டிக்கொள்ள..., 'ஹாசினி....' மனம் தித்திப்பாய் அசை போட்டது.

அவன் கண்களில் மின்னிய ஒளியையும், இதழில் உறைந்த புன்னகையையும் பார்த்தவாறு அமர்ந்திருந்த விநாயக்..., "டேய் மச்சான்..., நம்ம கேண்டிடேட்டை முடிவு பண்ணிட்ட போல..", நம்ப முடியாமல் கேட்க, அவன் பதில்..., உச்ச அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பகுதி - 11.

விநாயக் என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டான். ஆனால்..., ராஜாவின் பதில்..., அதிர்ச்சி என்பதை விட, உச்ச அதிர்ச்சியைத்தான் அவனுக்கு கொடுத்தது.

"டேய்..., நிஜமாவா சொல்ற...?", திறந்தவாய் மூடாமல் கேட்டான்.

"ம்ச்..., இந்த விஷயத்தில் நான் விளையாடுவேனா...? ஹாசினிக்கு மட்டும் லெட்டர் அனுப்பு. அப்படியே அப்பாயின்மென்ட் லெட்டரை ரெடி பண்ணிடு. அவ்வளவுதான்....", அவள் போட்டோவை அப்ளிகேஷனில் இருந்து தனியாக பிய்த்து எடுத்தவன், தன் பர்சில் வைத்துக் கொண்டான்.

மனமோ..., 'படிச்சுட்டு பிசினஸ் பண்ணப்போறேன்னு சொன்னா..., இப்போ எதுக்கு டிகிரி முடிச்சுட்டு எம்பிஏ பண்ணாமல் டிப்ளமோ முடிச்சுட்டு வேலைக்கு வரா...?', மனம் அதிலேயே உழன்றது.

"ராஜா...., மச்சான்...", அவன் செய்கையை நம்ப முடியாமல் அழைக்க, "ம்...", மையமாக தலை அசைத்து அவன் நினைப்பை ஆமோதித்தான்.

“இதுக்கு என்னத்துக்குடா அவங்களுக்கு வேலை போட்டு கொடுத்துகிட்டு..., பேசாமல் உன் அம்மாவை கூட்டி போய் பொண்ணு கேட்டு கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே..., நீ இவதான் பொண்ணுன்னு சொன்னால், யார்டா மறுக்க போறா...?”, அவனுக்குப் புரியவே இல்லை.

“அந்த வெங்காயமெல்லாம் எனக்குத் தெரியும்..., நான் பாத்துக்கறேன்..., நீ முதல்ல போய் நான் சொன்ன வேலையைச் செய்... இந்தா..., அவளோட அட்ரஸ்..., முதல்ல போ...”, அட்ரஸ்ஸை ஒரு காகிதத்தில் எழுதி அவனை அனுப்பியவன், அவளது அப்ளிகேஷனில் பார்வையை செலுத்தினான்.

முதல் பார்வையில் அவள் அப்ளிகேஷனில் அவன் கண்கள் பதிந்த இடத்தில், அவன் பார்வை நிலைத்தது.

‘நிஹாசினி.., D/O late. Mr. குமரேசன்’.... அதைப் பார்த்த உடனே அனைத்தும் புரிந்து போனது.

‘அப்படின்னா..., அவளோட அப்பா இப்போ இல்லாததால்தான்..., அவ வேலைக்கு வராளா...?’ மனம் பாரமாகிப் போன உணர்வு.

அன்று தன் தந்தையிடம் அவள் காட்டிய ஒட்டுதல்..., நெருக்கம்..., சலுகை..., தன் எதிர்கால திட்டத்தை உரைத்தது..., அதை பெற்றுத்தர அவள் தந்தை முயல்வேன் என உரைத்தது..., அனைத்தும் நொடியில் கண்முன் நிழலாடியது.

‘அவளோட அப்பா தவறிய பொழுது மனதொடிந்து போயிருப்பாளே..., எப்படி சம்மாளித்திருப்பாள்...?’ அந்த நேரம் தான் அவள் அருகில் இல்லையே என இப்பொழுது தவித்துப் போனான்.

அதையும் மீறி..., அவள் லட்சியத்தையும், கனவையும் அவளுக்கு பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்ற உணர்வே அதிகம் எழுந்தது.

அவளை உடனே காண வேண்டும்..., அவள் தந்தைக்கு என்ன ஆயிற்று எனக் கேட்க வேண்டும்..., அவளுக்கு அனைத்துமாக தான் இருக்கிறோம் என உரைக்க வேண்டும்..., எழும் வேகத்தை கட்டுப்படுத்தவே அவனுக்கு சற்று சிரமமாகத்தான் இருந்தது.

ஒரே நாளில் தான் மாறிப்போனதை எண்ணி அவன் கவலையே படவில்லை. அவன் முடிவு செய்து விட்டான்..., அவன் வாழ்க்கைத் துணை அவள்தான் என்று. இத்தனை நாட்களில் எந்தப் பெண்ணையும் மீண்டும் காணவேண்டும் என்று கூட எண்ணியது கிடையாது.

அப்படி இருக்கையில், இத்தனை வருடங்கள் கழித்தும் அவள் நினைவு அப்பட்டமாக அட்ச்சரம் பிசகாமல் நினைவிருக்கிறது என்றால்..., இதற்குமேல் யோசிக்க அவனுக்கு எதுவும் இருக்கவில்லை.

விநாயக் கேட்டதுபோல்..., சுஜாவிடம் சொல்லி, அவளை திருமணம் செய்துகொள்ள ஒரு நொடி கூட ஆகாது. ஆனால்..., அவள் வேலைக்கு வருவதற்கான காரணம் அவனுக்கு தெரிய வேண்டி இருந்தது.

எடுத்த எடுப்பில் அவர்கள் முன்னால் நிற்பதை விட, சூழ்நிலை அறிந்து செயல்படுவதே முக்கியம் எனப் புரிந்தது. அவள் வேலைக்கு வருவது சாதாரணமாக என்றால்... பரவாயில்லை. ஏதாவது அத்தியாவசியமாக இருந்தால்...? ஏனோ அந்த நினைவே நெஞ்சை அடைத்தது.

கொடிது கொடிது இளமையில் வறுமை..., என முண்டாசுக் கவிஞன் சொல்லிச் சென்றது அசந்தர்ப்பமாக நினைவிற்கு வர, மூச்சடைக்கும் உணர்வு.

‘எதுவும் முழுதாகத் தெரியாமல் அவசரப்பட வேண்டாம்...’ என தனக்குத் தானே அறிவுறுத்தியவன், வேலையில் கவனம் செலுத்த முயன்றான். அதில் வெற்றியும் கண்டான்.

மறு நாள் முதல், தன் கடைக்குச் சென்றவன்..., தன் அண்ணனைக்

காணாமல், அங்கே இருக்கும் தேவாரத்தை போய் பார்த்து, சற்றுநேரம் உரையாடிவிட்டு சென்றான்.

அவன் வருகையையும்..., தேவாரத்திடம் பேசிச் சென்றதையும் அறிந்த தனா சந்தோஷமடைந்தார். ஆனால்..., இரண்டு நாட்களாக வருபவன்..., என்ன முடிவில் இருக்கிறான் என்பது தெரியாமல் குழம்பிப் போனார்.

ஆனால்..., மூன்றாம் நாள் அவன் வந்து செல்லும் காரணத்தை உணர்ந்தவருக்கு, வியபென்றால்..., அப்படி ஒரு திகைப்பு.

'எவ்வளவு நுணுக்கமாக..., வேலையில் இருக்கும் மிகப்பெரும் பகுதியை கையாண்டு விட்டான்...', அவரால் பிரமிக்காமல் இருக்க முடியவில்லை.

கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களாக..., தொழிலில் பங்கெடுக்கும் குணா கூட, முற்றாக ஒதுங்கிப் போகும் விஷயம் இது. அப்படி இருக்கையில்..., இவன் மட்டும் எப்படி தைரியமாக நுழைந்து விட்டான்...? நீ ராஜாதாண்டா...', மனம் பெருமிதத்தில் விம்மியது.

நான்காம் நாள்..., தன் அலுவலகத்தில் வேலையை முடித்தவன், தங்கள் கடைக்கு வர, அவன் வரவை எதிர்பார்த்திருந்த தேவாரம்..., "சார்..., நீங்க கேட்ட மாதிரி டீலர்ஸ் எல்லாம் வந்திருக்காங்க..., ஆனா சார்..., என்ன திடீர்ன்னு..., எதுவும் பிரச்சனையா....? நாங்க..., கவனிக்காமல் விட்டுட்டோமா?", சற்று பதட்டத்தோடு கேட்டார்.

"ஹையோ தேவாரம் சார்..., என் வயசு உங்க அனுபவம். அப்படி இருக்கையில்..., குறை என இருந்தால்..., அது உங்களுக்குத்தான் முதல்ல தெரிந்து இருக்கும். இது வேற..., பிசினஸ்ன்னா புதுப் புது ஐடியாஸ் இருந்தால் தானே சரியா இருக்கும். இது.. அதில் ஒன்றுதான்... வேற எதுவும் இல்லை. நீங்க வாங்க...", அவரோடு மீட்டிங் ஹாலுக்கு விரைந்தான்.

அவ்வளவு நேரமாக கலகலப்பாக இருந்த அறை, ராஜாவின் வருகையால் ஒரு

மயான அமைதிக்குத் திரும்பியது. அத்தோடு..., தனாவை எதிர்பார்த்திருந்த அனைவரும்..., அங்கே வந்த புதியவனைக் கண்டு சற்று குழம்பித்தான் போனார்கள்.

வேக நடையோடு தன் இருக்கைக்கு விரைந்தவன், அதில் அமர்ந்து, மேஜைமேல் இருந்த தண்ணீரை எடுத்து நிதானமாகப் பருகிவிட்டு, அனைவரையும் எடைபோடும் பார்வை பார்த்தான்.

அவனது அந்த செய்கையே..., தேவாரத்தை புருவம் உயர்த்தச் செய்தது. 'இவர் கண்டிப்பாக புதுமையை புகுத்துவார்...', தனக்குள் சொல்லிக் கொண்டவர், அவனுக்கு சற்று பின்பாக நின்று கொண்டார்.

சில நிமிடங்கள் அவர்களுக்கு தன்னைப்பற்றி சிந்திக்க அனுமதி வழங்கியவன், கையில் ஒரு பேனாவை சுழற்றியவாறு எழுந்து நின்றான். "ஹாய் கைய்ஸ்..., ஐ'ம் ராஜசேகர்..., இனிமேல் பர்ச்சேஸ் டீல் எல்லாம் நான்தான் பாத்துக்கப் போறேன். அதற்காகத்தான் இந்த மீட்... ஹோப் யூ ஆல் காட் மை பாயின்ட்...", நறுக்கு தெறித்தாற்போல் விஷயத்தை உரைத்தவன், அமைதியாக அவர்களை ஏறிட்டான்.

அவன் ராஜசேகர் என உரைத்த உடனேயே..., அவன் யார் என்பது அனைவருக்கும் விளங்கி விட்டது. அது புரியவே...,

"என்ன இது திடீர்ன்னு...", "இந்த டீல் எல்லாம் தனா சார்க்கு தானே தெரியும்..." "இப்போ நாம முதல்ல இருந்து துவங்க வேண்டுமா...?", அவன் உரைத்த வார்த்தைகளுக்கான விளைவு அலையலையாக அங்கே எழுந்தது.

சற்று நேரம் அவர்கள் தங்களுக்குள் முணுமுணுக்க அனுமதித்தவன்..., "நான் இப்போ உங்க டீலை கேன்சல் பண்ணப் போறேன்னு சொல்லவே இல்லையே. இனிமேல் டீலை என்கிட்டே பேசுங்கன்னுதான் சொல்ல வந்தேன். என் அப்பாகிட்டே பேசுவதை என்கிட்டே பேச என்ன தயக்கம்?".

“சார்...., பல வருடமா நாங்க உங்களோட தொழில் பண்ணிட்டு இருக்கோம். இது வரைக்கும் ஒரு குறை வந்தது கிடையாது. அப்படி இருக்கும்போது...., திடீர்ன்னு வந்து...., என்கிட்டே டீல் பேசுங்கன்னு சொன்னால்...”, ஒருவன் எழுந்து கேட்டான்.

“உங்க லாஜிக் எனக்கு புரியவே இல்லங்க. அதென்ன...., என் அப்பாகிட்டே பேசுவீங்க...., என்கிட்டே பேச மாட்டீங்களா? நீங்க பேசுவதைப் பார்த்தால்... என் அப்பாகிட்டே நீங்க ஏதோ கம்பர்ட்டபிளா பீல் பண்ற மாதிரி இருக்கு. அது என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?”, அவன் கேள்விக்கு, அவர் அமைதியாக அமர்ந்துவிட்டார்.

“பல வருஷமா ஒரே டீல் ஓடிட்டு இருக்கு. இப்போ இருக்க டிரெண்டுக்கு ஏத்த மாதிரி நீங்களும் மெட்டீரியல்ஸ் கொடுக்கறீங்க...., அதை நான் இல்லன்னு சொல்லலை...., என்ன...., இது வரைக்கும் மாதங்களில் இருந்த நம் சந்திப்பு, இனிமேல் வாரங்களில் நடக்கும் அவ்வளவுதான் வித்தியாசம்.

“எனக்கு இது தேவை என நானும் சொல்வேன்...., அதை நீங்களும் உடனே பரிசீலனை செய்யலாம். புது வரவுகளும், புதுமைகளும் இங்கே உடனுக்குடன் அரங்கேறும்...., கடையோட சேல் அதிகமாகும்...., வருஷத்துக்கு இரண்டு மூன்று முறை அறிமுகமாகும் புது வரவுகள், மாதத்துக்கு ஒன்றாக அதிகரித்தால் நல்லது தானே.

“இதற்கு ஏன் நீங்க இவ்வளவு எமோஷனல் ஆக வேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவே இல்லை. ஒரு வேளை...., எங்கள் வேகத்துக்கும், தேவைக்கும் ஏற்ற மாதிரி உங்களால் ரகங்களை கொண்டு வர முடியாது என்ற பயமா...?”, அவன் கேள்வியில்...., கேள்வி கேட்டவர் சற்று திணறித்தான் போனார்.

அவரது திணறலை கண்டு கொள்ளாமல்...., “நான் வாரம் ஒரு முறை உங்கள் எல்லோரையும் சந்திக்க விரும்பறேன். ஆனால்...., ஒரே நாள் கிடையாது. தினமும் மதியம் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் நான் இங்கே வருவேன். உங்களுக்கான நேரத்தை மிஸ்டர் தேவாரம் உங்களிடம்

தெரிவிப்பார்.

"அது மட்டும் இல்லை..., சில கம்பெனியின் ப்ராடெக்ட்களை நான் நேரடியாகவே கொள்முதல் செய்யலாம் என இருக்கிறேன். அவை எது என்பதை..., அந்த டீலர்களிடம் நான் பேசிக்கறேன். இனிமேல் தனா அப்பாவுக்கும், உங்களுக்கும் எந்தவிதமான பேச்சு வார்த்தைகளும் இருக்கப் போவதில்லை.

"அதற்காக அவரிடம் பேசிய டீல் இல்லை என ஆகாது..., அதைப்பற்றி யாரும் வொரி பண்ணிக்க வேண்டாம். அவங்க முடிவை மாற்றும் எந்த ஐடியாவும் எனக்கு இல்லை. சோ..., நீங்க தைரியமா இருக்கலாம்...."", அவன் உரைத்து முடிக்க, சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

"வாரம் ஒரு முறை உங்களை வந்து சந்திப்பது எங்களுக்கு சாத்தியமில்லை என்றால்..."", ஒருவன் கேட்க,

"உங்களுக்கு எங்களோட லிங்க் வைத்துக்கொள்ள விருப்பம் இல்லையென்றால் நான் எதுவும் செய்ய முடியாது. உங்க ப்ராடெக்ட் சேல் ஆக நாங்க வேணுமே தவிர..., உங்க பொருளை மட்டுமே நம்பி நாங்கள் இல்லை..."", அவனது அதிரடியான பதில், அவர்களை வாயடைக்கச் செய்தது.

"எனி கொஸ்டீன்...?"", அவன் கேட்க,

"இன்னைக்கு வந்த உங்களுக்கு எங்களைப் பற்றி என்ன தெரியும்...?"", மற்றவன் பொருமினான்.

"உங்களைப் பற்றியா...? நீங்க..., மிஸ்டர் விஜயன்..., ஸ்ரிங்கார் கம்பெனி ப்ராடெக்ட் டீலர் நீங்க. முன்னாடி எல்லாம் மெட்டீரியல் பியூர் காட்டன்ல இருந்தது..., இப்போ அதில் கொஞ்சம் பாலியஸ்டர் மிக்ஸ் பண்றீங்க. கேட்டால்..., பியூர் காட்டன் சீக்கிரம் கசங்கிடும்னு ரீசன் வேற..., என்ன நான் சொல்வது சரியா...?

“ஆனா..., இனிமேல் எனக்கு..., பியூர் கட்டன்னா..., அதை மட்டும் நீங்க சப்ளை செய்தால் போதும். இல்லையா..., நான் வேற கம்பெனி பாத்துக்கறேன்..., எப்படி வசதி...?”, அவனது நேரடித் தாக்குதல், மற்றவர்களையும் ஸ்தம்பிக்கச் செய்தது.

கேள்வி கேட்டவன்..., சத்தமில்லாமல் அமர்ந்துகொள்ள..., அங்கே ஊசி விழுந்தால் கூட ஓசை கேட்கும் அமைதி.

தேவாரம் கூட சற்று உறைந்துதான் போயிருந்தார். மூன்றே நாளில்..., கடையில் இவ்வளவு ஸ்டடி பண்ணிவிட்டானா? துணியின் தரம், அது எங்கிருந்து வருகிறது..., அவர்களது காண்டிராக்ட்.., எல்லாமுமா? திகைப்பின் உச்சத்தில் இருந்தார்.

பகுதி நேரத்துக்கே இப்படி என்றால்..., அவன் முழு மூச்சாக இதில் இறங்கினால்...? அடிமுதல் நுனி வரை மாற்றி விடுவான் என அவரால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

தனாவும் அனைத்திலும் கவனமாக இருப்பார் தான். அவரையும் மீறிய சில தவறுகள் நடப்பதையே ராஜாவின் பேச்சு நிரூபித்தது.

“வேறு ஏதாவது...?”, அவன் கேட்க..., இப்பொழுது யாரும் கேள்வி கேட்கவோ, முணுமுணுக்கவோ தயாராக இருக்கவில்லை.

அன்றைய பேச்சு முடிந்தது என உரைத்தவன்..., “தேவாரம்..., அப்பா எங்கே...? அவர்கிட்டே மீட்டிங் பத்தி சொல்லணுமே...”, கேட்டவன்..., அனைவரிடமும் விடைபெற்று கிளம்பி விட்டான்.

“சார்..., தனா சார்.. உங்க முடிவு எதுவோ..., அதுதான் தீர்மானம்னு சொல்லிட்டார். அத்தோட..., அவர் இப்போ இங்கே இல்லை..., பேரிஸ் கார்னர் கிளம்பி போய்ட்டார். நீங்க அவரைப் பாக்கணும்னா..., போன் பண்ணவா...”, வேகமாக தன் அலைபேசியை எடுத்தான்.

“ம்ச்..., இல்ல விடுங்க..., நான் வீட்ல போய் பேசிக்கறேன். நீங்க

உங்க வேலையைப் பாருங்க. நான் சுடிதார் செக்ஷன் பக்கம் போயிட்டு..., அப்படியே கிளம்பறேன். எனக்காக நீங்க உங்க வேலையை கெடுத்துக்க வேண்டாம்...", அவர் பதிலை எதிர்பாராமல் எஸ்க்கலேட்டர் பக்கம் நகர்ந்தான்.

அங்கே..., சுடிதார்களை அடுக்கி வைத்திருக்கும் விதம், டிஸ்பிளே பீஸ் போன்றவற்றை பார்வையிட்டவாறே வர, அவனை அடையாளம் தெரிந்த சில பெண்கள்..., அவனுக்கு மதிய வணக்கம் உரைக்க, சின்ன தலையசைப்பில் அதைப் பெற்றுக் கொண்டவன்..., ஒவ்வொரு பகுதியாக நகர்ந்தான்.

"அம்மா..., நம்ம வினோவையும் கூட்டி வந்திருக்கலாம். ஏம்மா வேண்டாம்னு சொன்னீங்க...? பாவம்... அவ முகமே மாறிப் போச்சு தெரியுமா?", ஒரு இளம் பெண்ணின் குரல், அவன் செவிகளைத் தீண்ட, அதைக் கண்டுகொள்ளாமல் நடந்தவனை...,

"என்ன பேசற நிஹா...", அந்த தாயின் அழைப்பு, அவன் காலை, அவர்கள் பக்கம் கட்டி இழுத்தது.

"இப்போ அவளை கூட்டி வந்தால் பேசாமல் இருப்பாளா? ஒரு சுடிதாரோடு கிளம்பிடலாம்னு பார்த்தாலும்..., ஸ்நாக்ஸ் வேணும்..., ஹோட்டல் போகணும்ன்னு அடுக்க ஆரம்பித்தால்..., நம்மளால் சம்மாளிக்க முடியாது. இப்போ இருக்க நிலைமையில்..., எனக்கே உன்னை வேலைக்கு அனுப்ப வேண்டி இருக்கேன்னு மனசு கிடந்தது தவிக்குது. இதில்...", அவர் குரல் கலங்கியது.

"ஐயோ அம்மா..., இதென்ன..., சின்னப்பிள்ளை மாதிரி கண்ணெல்லாம் கலங்கிட்டு..., என்னைக்கா இருந்தாலும் நான் வேலைக்கு தானே போக இருந்தேன். பிறகென்ன...", அடிக்குரலில் தாயை சமாதானப் படுத்தினாள்.

ஏற்கனவே இருந்த நிஹா என்ற அழைப்போடு..., இந்த பேச்சும் சேர்ந்து கொள்ள, ராஜாவின் இதயம் ஏனென்றே தெரியாமல் அடித்துக் கொண்டது.

தங்களது கடை என்பதால்..., சட்டென அவர்களை ஏறிட்டு பார்க்கவும் முடியாமல்..., ஆடைகளைப் பார்வையிடும் சாக்கில் அவர்கள் பக்கம் நகர்ந்தான்.

அவன் உள்ளுணர்வு பொய் உரைக்கவில்லை..., அவளது தாயைத்தான் முதலில் கண்டான். கண்டவன்..., அதிர்ந்து போனான். அன்று மங்களகரமாக பார்த்த அவரது மதிமுகம்..., இன்று நெற்றியில் சிறிய திருநீர் கோட்டோடு காட்சியளிக்க மனதுக்குள் சிறு பாரம்.

அதையும் மீறி..., நிஹாசினியை கண்டுவிடும் ஆவல் எழ, நடையை நகர்த்தினான். மனம் அதிர்ந்து கொண்டது. பெண்பார்க்கப் போகும் மணாளனின் நிலையை ஒத்திருந்தது அவன் நிலை.

"சரி..., சரி..., இதைப்பற்றி நாம லட்சம் தடவை பேசியாச்சு. இப்போ வெளியே வந்தும் துவங்க வேண்டாம். நீ செலெக்ட் செய்ததை டிரையல் பார்..., நாம கிளம்பலாம்..." , அவள் கையில் சில ஆடைகளைக் கொடுத்து அனுப்பினார்.

அவள் தன்னைத் தாண்டிதான் ட்ரயல் அறைக்குச் செல்லவேண்டும் என்பதால்..., அவளுக்கு முதுகு காட்டி நின்றவன், தன் எதிரில் இருந்த நிலைக் கண்ணாடியில் பார்வையை பதித்திருந்தான்.

அழகுப் புயலொன்று அந்த கண்ணாடியில் கடப்பதைக் கண்டான். இன்றைய காஜல் அகர்வாலை நினைவூட்டும் முக அமைப்பு, உயரம்..., நிறம்..., இமைக்க மறந்திருந்தான்.

"பியூட்டி...." , அவன் இதழ்கள், அவளைக் கண்டநொடி இதைத்தான் உச்சரித்தது.

'நானா இது...?' தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். எந்தப் பெண்ணையும் விமர்சிக்காத தான்..., முதல் முறையாக ஒரு பெண்ணை ரசித்து அழைத்திருக்கிறோம்... ஏனோ.., அந்த உணர்வு பிடித்தது. தன் கட்டுப்பாடுகள் அவளிடம் மட்டும் தகர்வதை விருப்பத்தோடு அனுமதித்தான்.

அவளால் மட்டுமே தன்னை ஆட்டுவிக்க முடியும் என்பதையும் அந்த நொடி உணர்ந்து கொண்டான்.

அன்று தன் தந்தையிடம் கொஞ்சிப் பேசிய குழந்தை முகம், இன்று..., அறிவு முதிர்ச்சியோடு காட்சி அளித்தது. ஆனால்..., அந்த குழந்தைத்தனத்தை காண அவன் மனம் ஏங்கியது.

அவள், அவனைக் கடந்து சென்றுவிட்ட பிறகும்..., கண்ணாடியில் நிலைத்திருந்த பார்வை, சில நொடிகள் அங்கேயே நிலைத்திருந்தது. அவன் அருகில் இருந்த சுடிதார் கூட்டத்தை சில பெண்கள் பார்வையிட வர, அந்த அசைவில், தன்னை மீட்டுக் கொண்டவன், அப்பொழுதுதான் தான் இருக்கும் இடத்தை உணர்ந்தான்.

நிஹாசினியின் தாயிடம் உரையாடச் சொல்லி அவன் மனம் கெஞ்ச, 'என்னவென்று உரையாடுவது...?' தயக்கம் அவனை கட்டிப் போட்டது.

அதைவிட..., அவள் வேலைக்கு வருவதில், அவள் தாய்க்கு விருப்பமில்லை என்பதை உணர்ந்தவனுக்கு..., அவர் தயக்கத்தை போக வைக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அவன் ஆசை, வேகம், விருப்பம், அனைத்தையும் சூழல் தடுக்க, நிஹாசினியின் வரவுக்காய் காத்திருந்தான்.

புதிதாக எடுத்த சுடிதாரில் ஒன்றை அணிந்து வந்தவள், தாயிடம் எப்படி என அபிப்பிராயம் கேட்க, 'சூப்பர்....' அவன் மனம் சான்றிதழ் வழங்கியது. அந்த டார்க் நீல வர்ண உடையில், மஞ்சள் வர்ண பூக்கள் தெளித்த மாதிரி இருப்பது, அதிக அழகை கொடுத்திருந்தது.

அதன் பிறகு அங்கே நடந்த நிகழ்வுகள் எதுவும் அவன் நினைவில் இல்லை. நிஹாசினி அந்த கடையை விட்டுச் செல்லும் வரைக்கும், ஏதோ ஒரு விதத்தில், அவர்கள் பின்னால்..., மற்றவர் கவனம் தன்மீது பதியாதவாறு நின்றிருந்தான்.

சூப்ரவைசரிடம் உரையாடுவது போல..., செக்ஷன் மேலாளரை

பார்ப்பதுபோல், பில்லிங் செக்ஷனில் சந்தேகம் கேட்பதுபோல்..., இவ்வாறாக அவன் தன்னை பிசியாக மறைத்துக் கொண்டாலும், கவனம் முழுவதும் அவளிடமே இருந்தது.

அவள் சென்றவுடன்..., அவன் செய்த முதல் வேலையே..., தானும் கடையில் இருந்து வெளியேறியவன், தன் அலைபேசியை எடுத்து சுஜாவுக்கு அழைத்தான்.

அவர் என்னவென்று கேட்கும் முன்பே..., "அம்மா..., உங்க மருமகளைப் பார்த்துட்டேன்...", அவன் உரைத்து முடிக்கும் முன்பு..., தாரிணியின் கையில் இருந்த அலைபேசி நழுவி கீழே விழுந்திருந்தது.

பகுதி - 12.

ராஜா பேசிக் கொண்டிருக்கும்பொழுதே... சுஜாவின் அலைபேசி அதன் இயக்கத்தை நிறுத்தியிருக்க, ஒரு நொடி அவனுக்கு எதுவுமே புரியவில்லை.

'அம்மா போனை இப்படி சொல்லாமல் வைக்க மாட்டாங்களே...' எண்ணியவன் மீண்டும் முயல, அதுவோ..., அதன் இயக்கத்தை நிறுத்தியிருப்பதாக வாய்ஸ் மெச்செஜ் உரைக்க, சற்று குழம்பிப் போனான்.

உடனே வீட்டுக்குச் செல்ல, செல்கள் அனைத்தும் பரபரத்தாலும்..., அலுவலகத்தில் இருக்கும் வேலை அவனை அனுமதிக்கவில்லை. தன் அலுவலகத்துக்குச் சென்று..., வேலையில் மூழ்கியவனை, அது முற்றாக இழுத்துக் கொண்டது.

வீட்டுக்கு சீக்கிரம் செல்லவேண்டும் என்பதையே மறந்துவிட்டவன், இரவில் நள்ளிரவைத் தாண்டிய நேரம் செல்ல..., தன் அலைபேசியில் அழைத்து, சுஜாவை கதவைத் திறக்கச் சொன்னவன்..., சுஜா வரவே..., "ம்மா..., டின்னர் வெளியிலேயே முடிச்சுட்டேன்..., செம வேலை..., ரொம்ப டயடா இருக்கு..., நான் தூங்க போறேன். குட் நைட்...", அரை விழி மூடிய நிலையிலேயே அவன் உரைக்க, அமைதியாக தலை அசைத்தார்.

அவர் செய்கையில் இருந்த வித்தியாசத்தை உணர்ந்தவன், "ம்மா..., உடம்பு சரியில்லையா...?", கேட்டவன்..., அவர் இரு கன்னங்களையும் தன் கைகளால் தாங்கினான்.

"அதெல்லாம் எதுவும் இல்லை. இப்போ போய் நிம்மதியா தூங்கு..., எதுவா இருந்தாலும் காலையில் பேசிக்கலாம்...", அவன் கரத்தை விலக்கினார்.

அவரை கேள்வியாக ஏறிட்டவன், அவர் பேச்சை மறுத்துப் பேச மனமின்றி படிகளில் ஏறினான். முதல் தளத்தை கடக்கும் வேளை..., அங்கே இருந்த ஹாலில்..., தாரிணியும், குணாவும் அமர்ந்திருப்பதைப் பார்த்தவனது கால்கள் ஒரு நொடி தயங்கி, பின்னர் விரைந்தது.

'ஏன் இவங்க தூங்காமல் இருக்காங்க...?', எண்ணியவன் அதை அவர்களிடம் கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

"பாத்தீங்களா..., இப்போ கூட எப்படிப் போறான் பாருங்க...? என்னன்னு கேட்டால் குறைஞ்சு போய்டுவானா...?", தாரிணி குணாவிடம் கோபப்படுவது கேட்க, 'இப்பொழுது என்ன...?', அவர்கள் குரல் அவனைத் தீண்ட..., மனதுக்குள் எண்ணியவன், அப்பொழுதும் அவர்களிடம் என்னவென்று கேட்கவில்லை.

மனதுக்குள் கேட்கும் ஆசை இருந்தாலும்..., அவர்களிடம் நேரடியாக, தனிமையில் உரையாடுவதே ஒருவித கடினத்தன்மையை கொடுப்பதை அவனும் என்னதான் செய்வான்?

'காலையில் பேசிக் கொள்ளலாம்...', முடிவெடுத்தவன், அடுத்த தளத்தில் இருந்த தன் அறைக்கு விரைந்தான்.

படுக்கையில் விழுந்தவன் இமைகளை மூட, மூடிய இமைகளுக்குள் நிஹாசினி ஊர்வலம் போனாள். கூடவே..., 'நாளைக்கு ஆபீஸ் வரா..., அவளைப் பார்க்கப் போகிறேன்...', மனம் தித்திப்பாக

உணர்ந்தது. நாளைக்குதான் காண முடியும் என அவன் எண்ணியிருக்க, இன்றே அவளை தனக்குக் காட்டிய விதியை நினைத்து சிலிர்த்துக் கொண்டான்.

'அவள் அருகில் வேண்டும்...' அவன் உணர்வுகள் முதல் முறையாக ஏங்கியது.

அதை ரசித்தவாறே விழி மூடினான். நிஹாசினியின் நினைவு வந்த மறு நிமிடம், 'சரி..., அம்மா ஏன் நான் மதியம் பேசியதைப் பற்றி எதுவுமே சொல்லலை...', திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தான்.

தாயின் மௌனம், தாரிணியின் பேச்சு..., முடிச்சிட்டவன்..., புருவம் சுருக்கினான்.

'அப்போ விஷயம் நாளைக்கு முடிஞ்சுடும்....', பயத்துக்கு பதிலாக, மென்மையாக சிரித்துக் கொண்டவன், நிம்மதியாகவே விழி மூடினான்.

காலையில் வழக்கம்போல் எழுந்தவன், தன் வழக்கமான யோகாவை முடித்தவன், இன்டர்காமில் லஷ்மியிடம் காபி கொண்டுவரச் சொல்லி அருந்திவிட்டு, உடை மாற்றி, உற்சாக மனநிலையோடு படிகளில் தாவி இறங்கினான்.

'ஹாசினி...', அவள் பெயரைச் சொல்லும் பொழுதே அடி நாக்கு தித்திக்கும் உணர்வு. முகம் விகசிக்க..., அவளைக் காணப் போகிறோம் என்ற உற்சாகம் குமிழியிட, கால்களோ..., குழந்தையின் குதூகலத்தோடு தரையில் நிற்க மறுத்தது.

"ம்மா...", அழைத்தவன் வார்த்தையை முடிக்கும் முன்பே.., அங்கே தன் குடும்பத்தவர் அனைவரும் குழுமி இருப்பதைக் கண்டு, அவர்கள் அருகில் வந்தான்.

"ம்மா..., என்னம்மா..., எல்லாரும் ஒண்ணா இருக்கீங்க? எதுவும் பிரச்சனையா...?", கேட்டவன் தாயின் அருகே சென்றான்.

"ம்..., உன்கிட்டே பேசத்தான் எல்லோரும் வெயிட் பண்ணிட்டு இருக்கோம். வாங்க ஆபீஸ் ரூம் போய்டலாம்...", வேலைக்காரர்கள் முன்னிலையில் எதுவும் பேச அவர்கள் தயாராக இருக்கவில்லை.

ஏற்கனவே இரண்டு மூன்றுபேர்..., இவர்கள் கூடியிருப்பதைப் பார்த்துவிட்டு, வேலையிருக்கும் சாக்கில், அங்கே உலவத் துவங்கி விட்டார்கள். அப்படியிருக்க..., முக்கியமான விஷயத்தை அங்கே வைத்து பேச முடியுமா என்ன?

அலுவலக அறைக்குள் நுழையவே..., அங்கே இருந்த ஸோபாவில் அனைவரும் அமர, சுஜாவின் அருகில் அமர்ந்தவன், அனைவரின் முகங்களையும் ஆராய்ந்தான்.

தாரிணி அழுது வீங்கிய முகத்தோடும், குணா சற்று கோபமாகவும், தனா என்னவென்று அறிந்துகொள்ளும் முகபாவத்தோடும், சுஜா தவிப்பும், சங்கடமுமாக இருக்க, அங்கே யார் முதலில் பேச்சை துவங்குவது என எண்ணியவாறு அமர்ந்திருந்தார்கள்.

"ம்மா..., நேத்து நான் போன் பண்ணப்போ நீங்க போனை எடுக்கலையா...?", விஷயம் இதுவாகத்தான் இருக்கும் என உணர்ந்தவன், தானே பேச்சைத் துவங்கினான்.

"என்ன பேசின...? உங்களுக்கு ஒரு மருமகளை பாத்திருக்கேன்னு தானே...? அப்போ... கார்த்திகா...? அவளை நான் நோக்கு பேசுறது, நோக்குத் தெரியாது...? தெரியாதுன்னு மட்டும் சொல்லாதே..., நோக்குத் தெரியும்னு நேக்கு நல்லாவே தெரியும்", உணர்ச்சி வேகத்தில் தாரிணிக்கு குரலே நடுங்கிற்று.

அவள் கேள்விக்கு ராஜா அமைதியாகவே இருக்க..., இடையில் புகுந்து எதுவும் சொல்ல முடியாமல் சுஜா அமைதியானாள். ராஜாவின் விருப்பத்துக்கு மீறி எதையும் செய்ய மாட்டேன் என ஒற்றை வார்த்தையில் அவரால் முடித்திருக்க முடியும்.

ஆனால்..., இது உணர்வுகளில், உறவுகளின், உரிமைப் போராட்டம். ராஜாவின் பதினைந்து வயதுவரை இவன் எனக்கு மட்டுமே பிள்ளை என அவரால் முழுமையாக அவனை தன்னோடு தக்கவைத்துக்கொள்ள முடிந்தது.

ஆனால்..., என்று தாரிணி ராஜாவை தனக்கும் பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டும் என எண்ணத் துவங்கினாளோ..., அன்றே ராஜாவை இருவருக்கும் பிள்ளையாகத்தான் அவரால் பார்க்க முடிந்தது. அது அவருக்கு மனதுக்குள் வலித்தாலும்..., பிள்ளை ஏக்கம் என்னவென்று முழுதாக உணர்ந்துகொண்ட அவருக்குத்தானே தாரிணியின் மனதில் இருக்கும் வலியையும் உணர்ந்துகொள்ள முடியும்.

சுஜாவுக்கு இருக்கும் பக்குவம் ராஜாவுக்கு இல்லை என்பதா..? இல்லையென்றால்..., அவனுக்கு ஒரு தாய்தான் வேண்டும்..., அது சுஜா மட்டுமே என்பதை அவன் பிள்ளைமனம் மனதில் செதுக்கி விட்டதாலா...? அந்த கல்வெட்டை தாரிணி என்ற நீரால் அழிக்க முடியவில்லை.

இரும்பு நீரால் துருப்பிடிக்கலாம்..., கல்வெட்டு துருப்பிடித்து அழிந்து போகுமா என்ன...? தாரிணியின் கேள்விக்கு, ராஜா கோபமாக எதையும் சொல்லிவிடக் கூடாதே என்ற பயம் மட்டும் அதிகரிக்க..., தன் அருகில் இருந்த அவன் கரத்தை மென்மையாக பற்றிக் கொண்டார்.

தாயின் மனம் புரிந்தவனாக..., 'நான் உன் பிள்ளைம்மா...' கண்களால் அவருக்கு ஆறுதல் அளித்தவன், தாரிணியின் கேள்விக்கு வாயைத் திறக்கவில்லை.

"என்மேல் நோக்கு என்ன கோபமா வேண்ணா இருந்துட்டு போகட்டும். அதுக்காக..., உன்னையே சுத்தி வர காத்திகாவை வேண்டாம்னு சொல்லிடுவியா? அவ மனசு உடைஞ்சு போய்டாது...? அவளைப் பிடிக்கலன்னா அதை முன்னமே சொல்லியிருக்க வேண்டியது தானே..., என்மேல் இருக்கும் கோபத்தில்..., அவ மனசை நீ நோகடிப்பியா...?

"இப்போ அவா ஆத்துக்காறவாவுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்?

கார்த்திகா முகத்தை நான் எப்படிப் பாப்பேன்...? அவகிட்டே நான் எப்படி இதைச் சொல்வேன்...? உன் மனசென்ன கல்லா...?", கோபத்தில் அவர் வார்த்தைகள் தடிப்பதை உணர்ந்த சுஜாவுக்கு கவலை தொற்றிக் கொண்டது.

அனைவரும் ராஜாவின் முகம் பார்க்க..., "நீங்க ஏன் என் அம்மாவோட போனை எடுத்தீங்க...?", அவனிடம் இந்தக் கேள்வியை அங்கே யாரும் எதிர்பார்க்கவில்லை என்பதை அவர்கள் முகங்கள் காட்டிக் கொடுக்க,

"ஒரு வேளை..., அவங்க வேலையா வெளியே போயிருந்தால் கூட நீங்க போனை எடுத்திருக்கலாம். எனக்கு அது தேவையில்லை..., விஷயத்தை கேள்விப்பட்டு என் அம்மாகிட்டே சத்தம் போட்டீங்களா...?", எனக்கு அதுதான் முக்கியம் என அவன் குரல் இறுகி வெளிவர, தாரிணியின் முகம் பயத்தில் வெளிறிப் போனது.

அவள் முகமே விஷயத்தை அவனுக்கு உணர்த்த..., சுள்ளென கிளர்ந்த கோபத்தை அடக்கவே அவன் மிகுந்த சிரமப்பட்டான்.

"ராஜா..., அப்படியெல்லாம் எதுவும் இல்லை. நீயேன் தேவையில்லாத விஷயத்தை கிளறுகிறாய்...?", அவனை அடக்கினார்.

அதைக் கண்டுகொள்ளாமல்..., இப்போ என்ன..., நான் கார்த்திகாவை கல்யாணம் பண்ணிக்கணும் அதானே..., சரி..., கார்த்திகா என்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னால்..., நான் அவளையே கட்டிக்கறேன். இப்போ உங்களுக்கு சந்தோஷமா...?", கேட்டவன்..., வேகமாக தன் பேண்ட் பக்கெட்டில் இருந்து அலைபேசியை எடுத்தான்.

சில எங்களை அழுத்தியவன், "கார்த்தி..., எங்க இருக்க..., காலேஜ் கிளம்பிட்டியா? ஓ..., இங்கேதான் வந்துட்டு இருக்கியா..., சரி வா..., நான் வெயிட் பண்றேன்...", அலைபேசியை வைத்தவன், தன் வாட்ஸ்ஆப் தகவல்களை கவனிக்கத் துவங்கினான்.

தாரிணி நம்ப முடியாத திகைப்பில் இருக்க, சுஜாவுக்கு மனம் அதிர்ந்து

கொண்டது. ஆண்கள் இருவரும்..., நடப்பதை வேடிக்கை பார்த்தவாறு அமர்ந்திருந்தனர்.

நொடிமுள் நகரவே இல்லையோ..., என சந்தேகப்படும்படி நகர்ந்த ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, கார்த்திகா வீட்டுக்குள் நுழைவது புரிந்தது.

"அத்தான்...., எங்கே இருக்கீங்க...? ஆர்வமா போன் பண்ணிட்டு..., ஆளையே காணோம்...? என்ன வெக்கமா...?", ஆர்ப்பாட்டமாக குரல் கொடுக்க, அலுவலக அறைக்குள் இருந்த அவன் பல்லைக் கடித்தான்.

"ஏய் எரும..., இங்கே வா...", அவன் அங்கிருந்தே கத்த,

"அட..., அங்கேயா இருக்கீங்க...", கேட்டவள்..., அலுவலக அறைக்கு விரைந்தாள்.

கதவைத் தள்ளி, உள்ளே நுழைந்தவள்..., "ஹங்..., என்ன..., என்னவோ மீட்டிங் மாதிரி இருக்கு..., நானும் ஜாயின்ட் பண்ணிக்கவா...?", அனைவரின் முகங்களிலும் பார்வையை ஓட்டினாள்.

'என்னவோ சரியில்லையே....' அவள் சிந்திக்க,

"ஏய் கார்த்தி..., என்னை கல்யாணம் பண்ணிக்கறியா...? உன் முடிவு என்னன்னு எனக்கு இப்போ சொல்லணும்...", ராஜா அவள் எதிரில் வந்து நின்று நேரடியாகக் கேட்டான்.

அவள் முகத்தில் அப்பட்டமான ஒரு அதிர்ச்சி..., அவன் கேள்வியை அவள் எதிர்பார்க்கவே இல்லை என்ற முகபாவம்..., "என்ன திடீர்ன்னு...?", எச்சில் கூட்டி விழுங்கினாள்.

"கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லு...", இப்பொழுது அனைவரின் பார்வையும் கார்த்திகாவிடமே நிலைத்தது. அவள் என்ன பதில் சொல்வாள்...? தாரிணியோ..., நிச்சயமாக அவனை கட்டிக்

கொள்கிறேன் எனச் சொல்வாள் என மலைபோல் நம்பியிருக்க..., அவள் பதிலில், தாரிணிக்கு மூச்சடைக்கும் உணர்வு.

சுஜாவின்..., முகம் பூவாய் மலர..., அவளை நம்ப முடியாமல் ஏறிட்டார்.

"இன்னொரு முறை சத்தமா சொல்லு..., அதுவும் உங்க அக்காவுக்கு புரியிற மாதிரி சொல்லு..", அவளை கைபிடித்து அழைத்து வந்து தாரிணியின் முன்னால் நிறுத்தினான்.

"என்னடி சொல்ற...?", தாரிணி நம்ப முடியாமல் கேட்டாள்.

"நீயும் என்னை ஏமாத்திட்டியேடி..., உன்னை எவ்வளவு நம்பினேன் தெரியுமா? என் நினைப்பில் இப்படி மண்ணள்ளி போட்டுட்டியே..", தாரிணி அழுதே விட்டாள்.

தாரிணியின் அழுகை அவன் மனதை என்னவோ செய்ய..., அவளுக்கு ஆறுதல் சொல்லச் சொல்லி, மனம் கெஞ்சினாலும், புதிதாகச் செய்யப்போகும் அந்த செய்கை..., என்னவோ அவனுக்கு வித்தியாசமாகத் தோன்றவே..., அவள் அழுகையையும் காண முடியாமல் அங்கிருந்து விலகிவிட்டான்.

தனாவும், குணாவும் அங்கிருந்து வெளியேறி விட்டார்கள். குணாவுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால்..., இப்பொழுது அனைத்தையும் ஏற்க அவன் பழகி விட்டிருந்தான்.

"என்னக்கா பேசுற...?", கார்த்திகா தாரிணியை சமாதானப்படுத்த துவங்கவே, "ம்மா..., கொஞ்சம் வாங்க..., உங்ககிட்டே பேசணும்..", அவன் சுஜாவை அழைக்க, தாரிணியால், தன் ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

சுஜா, தாரிணியைப் பார்த்தவாறே அசையாமல் இருக்க, "அவங்களுக்கு இப்போ தனிமைதான் முக்கியம். அவங்களை அப்படியே விடுங்க...",

தாயிடம் உரைத்தவன்,

"கார்த்தி..., காலேஜ்ல டிராப் பண்ணவா...? வரியா இல்லை நான் போகவா...?", எதுவுமே நடக்காததுபோல் அவன் மிகவும் சாதாரணமாக வினவ, சுஜாவும், கார்த்திகாவும் அவனை கடுமையாக முறைத்தார்கள்.

"என்னம்மா...?", அவன் குழந்தைபோல் வினவ, சுஜாவின் பார்வை தாரிணியை சுட்டிக் காட்டியது. கார்த்திகாவின் பார்வையும் அவனுக்கு அதையே உணர்த்த, ஒரு நிமிடம் என்ன செய்வது எனத் தெரியாமல் குழம்பித்தான் போனான்.

"என் பிள்ளையை நான் இப்படி வளக்கலையே ராஜா...", மிகவும் மெதுவாக சுஜா வினவ, அந்த வார்த்தை அவனை பலமாகத் தாக்கியது.

இதற்குமேல் யோசிக்க எதுவும் இல்லை என முடிவெடுத்தவன், தாரிணியை அணுகி..., கார்த்திகாவை விலக்கியவன், தாரிணியின் அருகில் அமர்ந்து..., "மன்னி...", அவன் மெல்லியதாக அழைக்க, தாரிணியின் அழுகை மேலும் அதிகரித்தது.

"ஏண்டாப்பா...., இப்போதான் நான் மன்னின்னு நோக்கு தெரிந்ததா...?", அழுகையினூடே அவள் வினவ,

"நீங்க என்னைக்கு என் குணாண்ணாவை கல்யாணம் பண்ணிகிட்டீங்களோ அன்னைக்கே என் மன்னித்தான்..., போதுமா...? இங்கே பாருங்க..., உங்க மனசு எனக்கு புரியுதுதான். ஆனா..., கட்டிக்கிறவங்க ரெண்டு பேருக்கும் அதில் விருப்பம் இருக்கணும். அட்லீஸ்ட் ஒரு ஆளுக்காவது மத்தவங்க மேலே காதல் இருந்தால், என்றைக்காவது ஒரு நாள் அதை புரிய வைக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கும்.

"இங்கே..., எங்க ரெண்டுபேருக்குமே அந்த நினைப்பு கொஞ்சம் கூட இல்லை. அப்படியிருக்கும்போது..., எப்படி கல்யாண பந்தத்தில் இணைய..., நீங்களும் காதலிச்சு கல்யாணம் பண்ணவங்க தானே..., நீங்களே சொல்லுங்க...", அவள் கைகளை மென்மையாக பற்றிக்

கொண்டான்.

இதற்கு அவள் என்ன பதில் சொல்வாள்...? அவன் கேட்பது நியாயம் தானே..., "அப்போ..., நீங்க ரெண்டுபேரும் நடந்துகொண்ட முறை..." , அவருக்குப் புரியவே இல்லை.

உரிமையாய்..., உணர்வாய்..., ஒட்டுதலோடு இருக்கும் அவர்கள் பேச்சு, விளையாட்டு..., அனைத்தும் அவர் கண்முன் விரிந்தது. இதற்கு நீயே பதில் சொல் என அவன் கார்த்திகாவைப் பார்த்தான். அது புரிந்தவளாக...

"அக்கா..., என்னால் இவர்கிட்டே உரிமையா சண்டை போட முடியும். பேச முடியும்..., எனக்கு ஒரு பிரச்சனை என்றால் அவர்கிட்டே சொல்லி, அதை தீர்த்துக்க முடியும்..., அவர் தோள் சாய முடியும். ஆனா..., என்னால் அவரோட ஒரே படுக்கையை பகிர்ந்துக்க முடியாதுக்கா..., ப்ளீஸ் புரிஞ்சுக்கோ..." , காரத்திகாவின் வார்த்தைகள் தாரிணியை அப்படியே புரட்டிப் போட்டது.

"நான் உன்னை ஏமாத்தலக்கா..., எங்க ரெண்டுபேருக்கு நடுவில்..., ஒரு புனிதமான நட்பும்..., ஒரு புரிதலான சகோதர உணர்வும்தான் அதிகமா இருக்கு. சுஜாக்கா கிட்டே நான் அதிகமா ஒட்டுதலா பேசினாலே அதை இவரால் தாங்கிக்க முடியாது.

"உடனே பொசசிவ் குணம் தலை தூக்கிடுது. அது எதனாலன்னு நீ யோசிக்கவே இல்லையா...? ஒரு பிள்ளைக்கு எப்பவுமே தான் மட்டுமே அம்மாவுக்கு செல்லப் பிள்ளையா இருக்கணும், அவங்க என்னை மட்டுமே கொஞ்சணும்..., எனக்கு மட்டுமே ப்ரியாரிட்டி கொடுக்கணும்னு நினைக்கும்.

"அதே மாதிரி..., அத்தானும்..., சுஜா அம்மாவுக்கு தான் மட்டுமே எல்லாமா இருக்கணும்னு நினைத்து..., என்கிட்டே சண்டை போடறார்ன்னா..., என்னையும் அவரோட உடன் பிறந்த பிறப்பா பார்க்கறார்..., அவரோட பாசத்தை பங்கு போட்டுக்க வந்த ஜீவனாக

என்னை எண்ணுகிறார் என்று தானே அர்த்தம்.

"அது மட்டும் இல்லை....., அவரை நீயும் உன் குழந்தையா நினைக்கற. அப்போ..., உன் தங்கை நான்..., அவரை எப்படி என் கணவனா....? நினைக்கவே அருவருப்பா இருக்குக்கா...? எங்க விளையாட்டு, சண்டை, என்னோட சீண்டல்..., அவரோட கோபம்..., ப்ரண்ட்ஸ்சோட கேலி, எல்லாம்..., ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் மட்டுமே அடங்கும்.

"அவர் மனசுக்குள் இருப்பதை நானும்..., என் மனசுக்குள் இருப்பதை அவரும் ரொம்ப தெளிவா புரிந்து வைத்திருக்கிறோம். இப்போ கூட என்னால் அவர் தோளில் சாஞ்சுக்க முடியும்..., ஆனா..., என்னால் அவரை அணைக்க முடியாது..., அவர் நெஞ்சில் சாஞ்சுக்க முடியாது.

"என்னோட எல்லை அவரோட தோள் வரைக்கும்தான். அதற்குமேல்..., அது அவராலும் முடியாது. என்னாலும் முடியாது. ப்ரண்ட்ஸ் முன்னாடி சீன் போடுவது கூட..., காலேஜ்ல படிக்கிறவங்களுக்கு பாய்ப்ரண்ட் இல்லன்னா கேலி பண்றாங்க.

"இதற்காக எல்லாம் என்னால் எவனையாவது பிடிச்சு தொங்க முடியாது. இவர் எனக்கு நல்ல ப்ரண்ட், அத்தோட பாய்..., அதனால் பாய் ப்ரண்ட்ன்னு சொல்லி வைத்திருக்கேன். அது இவருக்கும் தெரியும். முதல்ல சொன்னதையேதான் இப்பவும் சொல்றேன். எங்கேயாவது அண்ணனா நினைக்கறவங்களை கட்டிப்பாங்களா...?

"இப்போ சொல்லுக்கா..., நான் உன்னை ஏமாத்திட்டனா...? நீ நினைக்கலாம்..., இதெப்படி சரி வரும்னு...., கண்டிப்பா சரியா வரும்கா..., உன் கொழுந்தன் உனக்கு மகனா மாற முடியும்னா...., என் கசின் எனக்கு அண்ணாவா மாற முடியும்...", அழுத்தமாக தெளிவாக உரைக்க, அவள் பேச்சில்..., தானுமே திகைத்துபோய் அமர்ந்திருந்தான்.

"கார்த்தி..., தேங்க்ஸ்..", அவளிடம் உரைத்தவன், "இப்போ சொல்லுங்கோ மன்னி..., என்மேல் உங்களுக்கு கோபமா...?",

அவளிடம் கேட்க, தாரிணியின் தலை மறுப்பாக அசைந்தது.

"ஆமா..., யார்டா அது எங்க மருமக...?", தாரிணி இயல்புக்குத் திரும்பி கேட்க,

"ஹையோ..., இன்னைக்குதான் அவ என் ஆபீஸ்க்கு பஸ்ட்(first)டைம் வரா..., நான் என்னன்னா இங்கே இருக்கறேன்..., நான் எல்லாத்தையும் ஈவினிங் வந்து சொல்றேன். ம்மா..., எனக்காக சாமிகிட்டே வேண்டிக்கோங்க..., உங்க புள்ளையை அவளுக்கு பிடிக்கணும்னு...", எழுந்து ஓடினான்.

"கார்த்தி..., நீ ஆட்டோ புடிச்சு போய்க்கோ..., ம்மா...., அவளுக்கு என்ன வேணும்னு கேளுங்க...", நடந்தவாறே உரைத்தான்.

"எங்க குணா அத்திம்பேர் கிட்டேயும் கார் இருக்கு...", கார்த்திகா நொடித்துக் கொள்ள..., "ஓகே... ஓகே...".

"அத்தான்..., அவ பேர் என்ன....?", அவள் குரல் அவனைத் துரத்த, சொல்ல மாட்டேன் போ...", அலுவலகம் விரைந்தான்.

'சொல்ல மாட்டீங்களா...? இன்னைக்கு வச்சுக்கறேன்...', கருவிக் கொண்டாள்.

அவனோ..., காரை அதி விரைவாக செலுத்திக் கொண்டிருந்தான். நேரம் பத்துமணியை நெருங்க..., 'ச்சே..., வந்து காத்துட்டு இருப்பாளோ...' நினைப்பு முழுவதும் அவளிடம்.

காரை தன் அலுவலகத்தில்..., அதன் இடத்தில் நிறுத்தியவன், லிப்ட்டை நோக்கிச் செல்ல..., அப்பொழுதுதான் அதன் கதவுகள் மூடிக் கொண்டிருக்க, வேகமாக காலை இடையில் வைக்க, அதன் இயக்கம் தடை பட்டு, கதவு திறந்து கொண்டது.

உள்ளே செல்லப் போனவன்..., நிமிர்ந்து பார்க்க, இன்பமாய் அதிர்ந்து போனான். அன்று தங்கள் கடையில் ட்ரயல் பார்த்த சுடிதாரை அணிந்து,

கண்களில் சிறு மருட்சியும், நெஞ்சோடு அணைத்த ஃபயிலுமாக..., சற்று வியர்வை அரும்பிய முகத்தோடு நின்றிருந்தாள் நிஹாசினி.

அவனோ..., கொஞ்சம் கூட லட்ஜையே இல்லாமல் அவளை வெறிக்க, உள்ளே வராமல் என்ன செய்கிறான்...? என அவனை நிமிர்ந்து பார்த்தவள், அவன் கண்களில் வழிந்த ஆர்வத்தில் திகைத்துப் போனாள்.

முதல் முதலாக பார்க்கும், சந்திக்கும் ஒரு பெண்ணை..., எந்த ஆண்மகன் இப்படிப் பார்த்தாலும் அவர்களுக்குள் ஒரு தற்காப்பு மனப்பான்மையும், சிறு பயமும் எழுவது இயல்பு தானே. அவள் இன்னும் ஓரமாக ஒடுங்க..., லிப்ட் மீண்டும் மூடிகொள்ளப் போவதை உணர்ந்தவன், வேகமாக உள்ளே வந்தான்.

ஏனோ அவன் பார்வையும்..., அந்த தனிமையும்..., நிஹாசினியை அதிகமாய் மிரட்ட..., தனிமையில் இவனோடு பயணிப்பது பாதுகாப்பு இல்லை..., என அவள் மனம் அறிவுறுத்த..., அங்கிருந்து வெளியேற முயன்றாள்.

அதே நேரம்..., லிப்ட் கதவு மீண்டும் வேகமாக மூடிக்கொள்ள முயல, பதட்டத்தில் அதைக் கவனிக்காமல்..., வெளியேற முயன்றவள்..., நிச்சயமாக கதவுக்கு இடையில் சிக்கிக் கொள்வாள் என்பதையும், இல்லையேல்.., கதவில் முட்டிக் கொள்வாள் என்பதையும் நொடியில் உணர்ந்தவன், எதைபற்றியும் யோசிக்காமல்..., அவள் கை பிடித்து, சட்டென பின்னால் இழுத்தான்.

அவன் இழுத்த வேகத்தில்..., அதை எதிர்பாராத நிஹாசினி..., தடுமாறி விழப் போக..., சட்டென தன் நெஞ்சோடு அவளை சாய்த்துக் கொண்டான். தன் கையில் அவள் அணைவாக பிடித்திருந்த ஃபயில் நழுவி கீழே விழ, முற்றாக அவன்மேல் மோதிக் கொண்டாள்.

ஒரு அந்நிய ஆடவன்..., ஏற்கனவே மனம் முழுக்க பயம்..., வெளியேற முயன்றபொழுது கதவு மூடப் போன அதிர்ச்சி..., அவனது செய்கை..., அவன்மேல் தான் முற்றாக சாய்ந்த விதம்..., அவளை

பேரதிர்ச்சிக்கு உள்ளாக, அவன் நெஞ்சில் கை கொடுத்து தள்ளியவள், அதே வேகத்தில் தன் கரத்தை அவன் கன்னத்தில் வீசி இருந்தாள்.

ஏற்கனவே அவன் லிப்ட்டின் சுவரில் சாய்ந்திருந்ததால்..., அவனைத் தள்ள முயன்றவள்..., அது முடியாமல்..., அவள்தான் பின்னால் சரியப் போக..., மீண்டும் அவள் விழுந்துவிடப் போறாளே என்ற பதைப்பில்..., அவள் இடை தாங்கி அவன் நிறுத்த, அவளது வீசிய கரம்..., பேரிடியாக அவன் கன்னத்தில் இறங்கியது.

இவை அனைத்தும் ஒரு நிமிடத்துக்கும் குறைவான நிமிடத்தில் நடந்து முடிந்திருந்தன.

பகுதி - 13.

நிஹாசினிக்கு தன் செய்கையை அவளாலேயே நம்ப முடியவில்லை. ஆண்கள் என்றாலே முற்றாக ஒதுங்கிப் போய்விடும் தான்..., இன்று..., அதுவும் நேர்முகத்தேர்வுக்கு வந்திருக்கும் இந்த நேரத்தில்..., அதே கட்டிடத்தின் லிஃப்டுக்குள் வைத்து ஒரு அந்நியனை அடித்து விட்டோம் என்பதை நம்பவே முடியவில்லை.

அவளது தந்தை இறந்தவுடன்..., மனதளவில் ஒரு பாதுகாப்பற்ற தன்மையை அவள் உணரத் துவங்கி இருந்தாள். அதுவும் அவர்கள் தெரு முனையில்...., படித்துவிட்டு வேலையின்றி இருக்கும் சில வயசுப் பசங்கள்..., அவர்கள் தந்தை இருந்தவரை, அவர்களை கண்டுகொள்ளாமல் இருந்தவர்கள், அவர் மறைவிற்குப் பிறகு அவர்களோடு வாலாட்ட முயன்றதில் துவங்கிய பயம்...,

நாட்கள் செல்லச் செல்ல..., எந்த ஆணைக் கண்டாலும் ஒரு பாதுகாப்பற்ற நிலையை மனதுக்குள் உருவகம் செய்யத் துவங்கி இருந்தது. அது..., இப்படி ஒரு சூழலில் வெளிப்படும் என்பதை அவள் நம்பத்தான் இல்லை.

அவளிடம் அடி வாங்கிய ராஜாவோ..., திகைத்துப் போனான். அவள்

மனதில் நல்ல விதத்தில் இடம் பிடிக்க விரும்பினால்..., முதல் சந்திப்பிலேயே அவளிடம் அடி வாங்கி விட்டோமே..., ஒரு மாதிரி அவமான உணர்வு மனதைச் சூழ்ந்தது.

அவளை நிமிர்ந்து பார்க்கவே மனம் கூச..., தான் செய்யவிருந்த செய்கைக்கான உண்மையான காரணத்தை அவள் அறிந்துகொள்ளவே இல்லையே...' மனம் வேதனைப் பட்டது.

அதற்குள்ளாகவே அவர்கள் செல்லவேண்டிய தளம் வந்துவிட்டிருக்க..., வெளியேறும் முன்னர்..., அவளை தன்னை மீறி நிமிர்ந்து பார்த்தவன்..., லிப்ட்டின் மூலையில்..., முகத்தை கைகளால் மூடிக்கொண்டு, அழுது கொண்டிருந்த நிஹாசினியைப் பார்த்தவனது மனம் கனிந்து போனது.

நிச்சயமாக அவளால் இப்பொழுது வெளியேற முடியாது என்பதை எண்ணியவன், லிப்ட்டை ஸ்லீப் மோடில் போட்டுவிட்டு, மற்றவர் அழைக்காதவாறு, அங்கே இருந்த சுவிட்ச்சை அழுத்திவிட்டு, சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

அவளிடம் பேசி, சமாதானம் செய்ய அவனுக்கும் ஆசைதான். ஆனால்..., ஏற்கனவே பயத்தில் இருப்பவள், தான் நெருங்கினால்..., தான் தவறான நோக்கத்தில் அவளை நெருங்குவதாக எண்ணிவிடக் கூடாதே என்ற பயமே அவனை விலகிப் போகச் சொன்னது.

லிப்ட் திறந்ததையும், அவன் வெளியேறியதையும் கண்டவளுக்கு, அப்பொழுதுதான் கொஞ்சமாவது நிதானப்பட முடிந்தது.

லிப்ட் மூடிக் கொண்டதையும், அதன் இயக்கம் நின்றுபோனதையும் உணர்ந்தவளுக்கு, வெடவெடத்த தன் கை கால்களை அசைத்து, கீழே கிடந்த ஃபயிலைக் கூட எடுக்க முடியவில்லை.

'இப்பொழுது யாராவது உள்ளே வந்தால்..., என்ன நினைப்பார்கள்...', முயன்று தன்னை சீர்படுத்த முயல, மனமோ

ஒத்துழைக்க மறுத்தது. ஆனால்..., அவள் பயந்ததுபோல் எதுவும் நிகழாமல், லிப்ட் கதவு தாமாகவே மூடிக் கொண்டதைக் கண்டவள்..., லிப்ட் எந்த தளத்துக்குச் செல்கிறது என பார்வையை செலுத்தினாள்.

ஆனால்..., அவள் நினைப்பிற்கு மாறாக..., லிப்ட் எந்த தளத்துக்கும் செல்ல முடியாதவாறு, தற்காலிகமாக முடக்கப் பட்டிருப்பதை உணர்ந்தவள், தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியவில்லை.

அவன் நினைத்திருந்தால்..., இதற்குள்ளாகவே இருந்துகொண்டு என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம். ஆனால்..., அதைச் செய்யாமல்..., தான் இயல்புக்குத் திரும்ப வேண்டி..., இந்த ஏற்பாட்டை செய்துவிட்டுச் சென்றிருக்கிறானே..., அவன் நல்லெண்ணம் புரியாமல்..., அவனை அடித்து விட்டோமே..., வருந்தினாள்.

பார்வையை அவள் சுழற்ற..., அங்கே இருந்த கண்காணிப்புக் கேமரா அவள் பார்வையில் விழ, அந்த கட்டிடம் பாதுகாப்பானது..., லிப்டும் பாதுகாப்பானது என்ற எண்ணம் வலுப் பெற்றது.

அதன் பிறகுதான்..., அவன் செய்கைக்கான காரணத்தை..., தன் பதட்டத்தை உணர்ந்து, தான் லிப்டில் இடித்துகொள்ளக் கூடாது என்பதாலேயே அவன் அவ்வாறு நடந்திருக்கிறான் என்பதும் புரிந்தது.

ஆனால்..., காலம் கடந்த புரிதல்..., இதனால் என்ன பயன்...? அவனைப் பார்க்க முடிந்தால் நிச்சயம் மன்னிப்பு கேட்க வேண்டும்' முடிவெடுத்தாள்.

அவன் நல்லவனாக இருக்கப் போய்..., தான் அடித்ததையும் பொருட்படுத்தாமல், தனக்கு தெளிய நேரமளித்து, அதற்கான ஆயத்தத்தையும் செய்துவிட்டு போயிருக்கிறான்..., மனதுக்குள் ஒருவித இதம் குடி கொண்டது.

தன் கைக்குட்டையால் முகத்தை ஒற்றி எடுத்தவள், ஆழமாக மூச்செடுத்து தன்னை நிதானப் படுத்தினாள். அதன் பிறகு கீழ இருந்த ஃபயில், சிடி

அனைத்தையும் எடுத்தவள், லிப்ட்டின் ரிலீஸ் பட்டனை அழுத்தி, கதவைத் திறந்து வெளியேறினாள்.

நேராக உமாவிடம் வந்தவள்..., "இண்டர்வியூவுக்கு வந்திருக்கிறேன்...", தன் கையில் இருந்த கடிதத்தை அவளிடம் கொடுத்தாள்.

"ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க...", உரைத்தவள், இன்டர்க்காமில் ராஜாவைத் தொடர்பு கொள்ள, "அவங்களுக்கு ஏதாவது ஜூஸ் கொடுத்துட்டு பிறகு அனுப்புங்க...", உரைத்துவிட்டு வைத்துவிட்டான்.

'இதென்ன புதுசா...?' எண்ணியவள், அவன் சொன்னதைச் செய்யச் சென்றாள்.

நிஹாசினியின் கண்களோ..., அந்த கட்டிடத்தைச் சுற்றி அலைந்தது. அதன் நேர்த்தி, அலங்காரம்..., கண்காணிப்பு கேமரா..., என அனைத்தையும் பார்வையிட்டவள்..., 'இங்கே இன்டர்வியூ இருக்கு தானே..., நான் மட்டும்தான் வந்திருப்பதுபோல் இருக்கு. ஒரு வேளை..., ஒரு நாளைக்கு ஒருத்தரைத்தான் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பார்களோ....', மனதுக்குள் எண்ணியவள், கையில் இருந்த ஃபயிலில் கவனத்தை திருப்பினாள்.

தொண்டை வரண்டுபோன உணர்வு. தண்ணீர் இருக்குமா..? கண்களை மேயவிட, அது இருப்பதற்கான அறிகுறியே அங்கே இருக்கவில்லை. 'அவங்க வந்தால் கேட்டுப் பார்ப்போம்...' எண்ணினாள்.

அதே நேரம்..., உமா கையில் சிறிய டிரேயில்..., கோக் பாட்டிலை கொண்டுவந்து நிஹாசினியிடம் கொடுக்க, ஒரு நன்றியோடு அதைப் பெற்றுக் கொண்டாள். அப்பொழுது அது அவளுக்கு மிகவும் தேவையாக இருந்தது.

ஒரே மூச்சில் அவள் அதை காலி செய்ய..., 'ஹப்பா..., இவ்வளவு தாகமாக இருந்திருக்கிறாளே...', எண்ணியவள், அவளையே நோக்க,

“சாரி...., நிஜமாவே ரொம்ப தாகம்...”, ஒரு சங்கடச் சிரிப்பை உதிர்த்தாள்.

அவள் செய்கை அனைத்தையும், தன் மொபைல் வழியாக பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, மனதுக்குள் ஒரு நிம்மதி. அத்தோடு...., லிப்டில் அவள் கண்களில் தெரிந்த மிரட்சி...., ஒரு ஆணைத் தனியாக நேரிட முடியாமல் எழுந்த அவள் பயம்...., அவனுக்கு மனதுக்குள் பிசைந்தது.

‘அவள் தந்தை இறந்த பிறகு எதுவும் பாதுகாப்பின்மையை உணர்ந்திருப்பாளோ...? எங்கே...? எப்போ...? எப்படி...?’ அவன் யோசனை அங்கே ஓடியது.

‘இதற்கு ஏதாவது செய்ய முடியுமா...?’ மனம் சிந்திக்கத் துவங்கியது. அவள் பாதுகாப்பு முக்கியம் என அவன் மனம் உணர்த்தியது. இதற்குமேல் அவளை தவிக்க விட முடியாது. அவளுக்கு மனதளவில் ஒரு சப்போட் கொடுத்தே ஆக வேண்டும்....’, அவள் தந்தையிடம் உணர்ந்த அந்த பாதுகாப்பை கொடுக்கும் வேகம் அவனிடம்.

இனிமேல் அவள் தனக்கானவள்...., அவளுக்காக எதையும் செய்ய சித்தமாக இருந்தான். அவள் அடித்த அடி கூட இப்பொழுது வலிக்கவில்லை. மாறாக...., அவள் மனநிலையையே அவனுக்கு சுட்டிக் காட்டியது.

கூடவே...., ‘இப்போ என்னை இங்கே பார்த்தால் என்ன நினைப்பாள்..?’ யோசனை ஓடியது.

“என்னடா மச்சான்...., அதான் இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கேயே வந்துடப் போறாங்க. பிறகு ஏன் சிசிடிவி வழியா பாக்கணும்...? அநியாயத்துக்கு ஜொள்ளு விடுறடா. உனக்கு இந்தமாதிரி பீல் எல்லாம் கூட வருமாடா. ஆச்சரியம் தான்...”, விநாயக் வாரினான்.

“போடா...., போடா...”, அவனை விரட்டினாலும், முகத்தில் ஒரு பூரிப்பு.

"நீ அவகிட்டே தனியா பேசணும்னு சொல்லு...., அதுக்கு ஏண்டா விரட்டுற...?", கேட்டவன்.., எழுந்து சென்றான்.

உமாவோ...., "இட்ஸ் ஓகே...., நீங்க இப்போ போகலாம். அதுதான் சாரோட ரூம்...", அவள் உரைக்க, இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள்.

கதவைத் தட்டி அவள் அனுமதி வேண்ட...., "எஸ்...", அவன் குரல் அனுமதி அளிக்க, உள்ளே நுழைந்து, அவனைப் பார்த்தவளுக்கு, சட்டென தேகத்தில் மின்சாரம் தாக்கிய உணர்வு.

'இந்த வேலை நமக்கு கிடைக்கப் போவதில்லை...' அவள் மனம் உரைக்க, 'இப்படியே திரும்பி போய்டு. போய் அசிங்கப்படாதே....' அவள் மனம் குரல் கொடுத்தது.

அதை செயல்படுத்த முனைகையில்...., "எஸ்...., கெட் இன்....", ராஜாவின் குரல் அவளை உள்ளே அழைத்தது.

தயக்கமாக நடந்து வந்தவள், அவன் காட்டிய இருக்கையில் அமர்ந்து, அவன் நீட்டிய கரத்தில் தான் கொண்டுவந்த ஃபயிலைக் கொடுத்தாள்.

அதில் பார்வையை செலுத்தியவன்...., "நீங்க செய்த ஏதாவது ஆனிமேஷன்...., இல்ல மோஷன் பிச்சர் ஏதாவது இருக்கா...?", அவன் கேட்க, தான் கொண்டுவந்த சிடியைக் கொடுத்தாள்.

அதை, தன் மடிக்கணினியில் போட்டவன்...., அவற்றை பார்வையிட்டான். அதே நேரம்...., அவன் அறைக்குள் நுழைந்த விநாயக்...., அவன் அருகில் சென்று...., "என்னடா மச்சான்...., எப்படிப் போகுது...", ரகசியமாகக் கேட்டவன், அவன் மடிக்கணினியை எதேச்சையாகப் பார்க்க,

"என்னடா இது...? இதுக்கு நானே நல்லா வேலை பார்ப்பேன்

போல...", சிரிப்பை உள்ளடக்கிய குரலில் வினவ, அவளை முன்னால் வைத்துக் கொண்டு அவனால் எதுவும் சொல்ல முடியவில்லை.

"இப்போ போகல...", அவன் கண்டிப்பில்..., வேகமாக விலகிச் சென்றான்.

நிஹாசினியின் ப்ராஜெக்ட் கன கச்சிதமாக இல்லை என்றாலும், அவனுக்கு திருப்தியாகவே இருந்தது.

"வொர்க் நல்லா இருக்கு..., ஆனால்..., இன்னும் கொஞ்சம் பெர்பெக்ட்டா இருந்து இருக்கலாம்..", அவன் உரைக்க, நிச்சயம் இங்கே வேலை இல்லை என்ற முடிவிற்கே அவள் வந்துவிட்டாள்.

அவளுக்கோ..., அவன் இயல்பான பேச்சை எப்படி எடுத்துகொள்ள என்றே தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தாள். அவன் கண்களில் கோபத்தைக் கண்டிருந்தால் நிம்மதியாக உணர்ந்திருப்பாளோ என்னவோ..., அவன் வெகு இயல்பாக இருந்தது அவளை கலவரப் படுத்தியது.

ஒருவேளை..., நல்லவன்போல் நடித்து பழிவாங்கப் பார்க்கிறானா? மனம் அதன் போக்கில் சிந்தித்தது.

"இதற்கு முன்னாடி ஏதாவது எக்ஸ்பீரியன்ஸ் இருக்கா...?".

"இல்ல....", தயக்கமாக பதில் கொடுத்தாள்.

"உங்களுக்கு இந்த பீல்டில் எப்படி இன்ட்ரெஸ்ட் வந்தது...?".

"இப்போ ரொம்ப ஆஃபர் இருக்குற ஃபீல்ட் இதுதான்...., அதான்...", தான் சொல்வது சரியா தவறா என்றே தெரியாத பாவனை அவளிடம் வெளிப்பட்டது.

"ஓ..., குட்..., என்ன சேலரி எக்ஸ்பெக்ட் பண்றீங்க...?", அவனது கேள்வியில், தான் கேட்பது உண்மையா, பொய்யா என்று தெரியாத திகைப்பு அவளிடம்.

“அது..., நீங்க பேப்பர்லே போட்டிருந்தீங்களே...”, அவள் இழுக்க, “அப்போ..., பிப்ட்டீன் தவுசண்ட் ஓகே யா...?”, அவன் கேள்வியில், நிச்சயமாய் அவள் கண்கள் கலங்கியது.

பேப்பரில் பத்து முதல் பதினைந்துதான் போட்டிருந்தார்கள். அப்படி இருக்கையில், எண்டு சேலரியை கொடுப்பது என்றால்..., அது அவளுக்கு இன்றைய தேதிக்கு மிகப்பெரும் உபகாரமும், உபயோகமுமாக இருக்கும்.

அவளது தந்தை இருந்த வரைக்கும், அவரது வருமானத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தி அவளது தாய் குடும்பம் நடத்தினார். அவர்களுக்குச் சொந்தமாக இருந்த அரை கிரவுண்ட் நிலத்தில், அழகான..., சிறிய வீட்டையும் கட்டினார்கள்.

அதற்காக கூட..., அவளது தந்தையின் பிஃளப் பணத்தை அவர்கள் எடுத்தது கிடையாது. இருவரும் பெண் பிள்ளைகள் என்பதால்..., போனஸ்..., இன்கிரிமென்ட் என வரும் பணத்தில்..., தங்க நாணயங்களாக வாங்கிச் சேமிக்கும் பழக்கத்தை வைத்திருந்தார்கள்.

கேட்பவை அனைத்தும் இல்லையென்றாலும்..., அவசியமானவை அனைத்தும் அவர்கள் கேட்காமலேயே கிடைத்தது. அனைத்தும் ஒரு நாள் கலைந்து போனது. அவளது தந்தையின் விபத்து, அவர்கள் குடும்பத்தையே நிலை குலையச் செய்து விட்டது.

அப்பொழுது நிஹாசினி கல்லூரியில் முதல் வருடத்தில் இருந்தாள். வீடு கட்டுவதற்காக வாங்கிய லோன்னுக்காக..., அவளது தந்தையின் பிஃளப் பணத்தில் எண்பது சதவீதம் போய்விட..., மீதி இருந்த இருபது சதவீதத்தில்..., அவர்களது மீதி நாட்கள் கடந்தது.

நிஹாசினியின் அடுத்த இரண்டு வருட கல்லூரி படிப்பு, வீட்டு செலவு, என அவர்கள் சிக்கனமாக செலவழித்தாலும்..., மேற்படி வருமானம் இல்லாததால், கைக்கும் வாய்க்கும் போராட்டம் துவங்கியது.

துளசிக்கோ..., என்ன செய்வது என்று தெரியாத திகைப்பு..., கணவனின் நிழலிலேயே வாழ்ந்து விட்டவருக்கு..., எப்படி குடும்பத்தை நடத்தப் போகிறோம் என்ற நினைப்பே..., பெரும் கவலையை அளிக்கத் துவங்கியது.

அவர் ஏதாவது கடைக்கு, இல்லையென்றால் வேறு வேலைக்குச் செல்லலாம் என முயல, அதை இரு பெண்களும் விரும்பவில்லை. நிஹாசினி தன் கனவை மூட்டை கட்டிவிட்டு, அவள் படிப்புக்கு ஏற்ற வேலைக்கு முயல, அதுவோ..., ரிசப்சனிஸ்ட் லெவலுக்கே அமைந்தது.

தோழி ஒருத்தியின் அறிவுரைப்படி..., ஆனிமேஷன் டிப்ளமோ முடித்துவிட்டு இதோ..., அவன் முன்னால் இருக்கிறாள். பதினைந்தாயிரம் ரூபாய்..., நிச்சயம் அவர்கள் வாழ்க்கைக்கு பெரிய தொகைதான்.

"என்னங்க..., சேலரி உங்களுக்கு ஓகே இல்லையா...? பதிலே பேச மாட்டேங்கறீங்க...?", அவள் அமைதியைக் கலைத்தான்.

"நீங்க நிஜமாகத்தான் சொல்றீங்களா? இல்லன்னா..., என்னைப் பழிவாங்க..., சாரி..., என்னை அறியாமல்..., ஏதோ பயத்தில்..., தப்பு பண்ணிட்டேன்...", அவளுக்கு நடப்பவற்றை நம்பவே முடியவில்லை.

"ரொம்ப அழகான தவறு...", அவன் திருத்த, அவன் சொன்னதை நம்ப முடியாமல், திகைத்து விழித்தாள், கண்களில் மின்னல்போல் பயம் மின்னி மறைந்தது.

அவன் கரமோ..., அவள் அடித்த கன்னத்தை வருட, "தவறை திருத்த கண்டிப்பா ஒரு வாய்ப்பு கிடைக்கும்....", அவன் பார்வை, அவள் இதழ்களில் நிலைத்ததோ..., என அவள் சந்தேகப்படும் முன், அவன் பார்வை விலகி இருந்தது.

"ஹாங்...", அவள் திருதிருக்க, அவள் செய்கையைப் பார்த்தவன், "அழகான பெண் செய்யும் தவறும் அழகு தானே..., அதைத்தான்

சொன்னேன்...", அவள் கண்களுக்குள் மூழ்க முயன்று உரைத்தான்.

அவன் பார்வையும், வார்த்தைகளும்..., மிரள வைத்தாலும், அதையும் மீறி, அவன் பார்வையில் இருந்த நேர்மை, உண்மை, நிலைப்புத் தன்மை..., அவள் மனதை படபடக்கச் செய்தது.

"சார்...", அவள் வாய் தந்தியடிக்க, "அந்த இடத்தில்..., நீங்க இருந்த சூழ்நிலையில், உங்க பயமும், தற்காப்பும் நியாயமானதே. ஆனால்..., நான் எந்த இன்டன்ஷனோடும் எதையும் செய்யவில்லை என்பதை மட்டும் நீங்க புரிஞ்சுக்கணும்...

"உங்களை பேனிக் ஆக வைத்ததுக்கு நான்தான் சாரி சொல்லணும். சாரி..", அவன் இதைச் சொல்லி முடித்தபொழுது, அவளால் இமைக்க கூட முடியவில்லை.

"நான்தான்.., சாரி...", "நோ ப்ளீஸ்..., சரி..., என்னைக்கு வேலையில் ஜாயின்ட் பண்றீங்க? நாளைக்கே வந்துடுங்க...", அவன் தன் மேஜைமேல் இருந்த தொலைபேசியை எடுத்து, விநாயக்கை அழைத்து அப்பாயின்மென்ட் லெட்டரை கொண்டுவரச் சொல்ல, ஆனந்த அதிர்ச்சியில் உறைந்திருந்தாள்.

"வாழ்த்துக்கள் மேம்...", விநாயக் உரைக்க, சற்று இறுகிய முகத்தோடு நன்றி உரைத்தாள்.

'என்னடா மச்சான்...?', விநாயக் பார்வையால் ராஜாவிடம் வினவ, 'பிறகு சொல்கிறேன்...', என அவனும் பார்வையால் பதில் உரைத்தான்.

"ஒரு நிமிஷம்....", அவளை நிறுத்தியவன், "ரேவதி..., வாங்க...", இன்டர்காமில் அழைத்து, அவள் வரவே..., "இவங்க ரேவதி..., உங்க கோ ஒர்க்கர். இன்னும் ஸ்ரீதர், ரூபன்., உமா., இவன்., விநாயக், புகழேந்தி, கிருபாகரன் எல்லாம் இருக்காங்க. அவங்க ஃபஸ்ட் ப்ளோர்ல வொர்க் பண்றாங்க. உங்களுக்கு எப்போ என்ன ஹெல்ப் வேணும் என்றாலும்..., ரேவதி கிட்டே கேக்கலாம்...",

“ஹாய்...”, “ஹல்லோ...”, “வெல்கம் டூ அவர் வேர்ல்ட்...”, இருவரும் கை குலுக்கிக் கொள்ள, அவளிடம் முகம் முழுக்க புன்னகையோடு, கை குலுக்கினாள்.

ஆண்கள் இருவரும் பார்வையை பரிமாறிக் கொண்டார்கள்.

“நாளைக்கு பாக்கலாம்...”, ரேவதியிடம் விடை பெற்றவள், ஆண்களை நிமிர்ந்து பாராமல் சென்றாள்.

அவள் செல்லவே..., அவள் பார்வை தன்னை தீண்டாததை எண்ணி, சற்று சோர்ந்துதான் போனான். அவன் அறையின் வாயில் வரைச் சென்றவள், இறுதி நிமிடம்..., ராஜாவை ஓர விழியில் ஏறிட்டு, அவன் பார்வையை சந்திக்கும் முன்னர் விலகிச் சென்றாள்.

****நேர்முகத் தேர்வுக்குச் சென்றிருந்த மகளை நினைத்து தவித்துக் கொண்டிருந்தார் துளசி. சின்னவள் அளவுக்கு பெரியவள் தைரியசாலியில்லை என்பது அவரது எண்ணம்.
அதைவிட..., நிர்வாகத்துறையில் கால்பதிக்க வேண்டும் என அவள் விரும்ப, விதி..., அவளை ஒருவரது கீழே வேலை செய்ய பணிப்பதை என்ன செய்து நிறுத்த என்று அவருக்குத் தெரியவில்லை.

“அம்மா..., டிபன் செஞ்சதோட சரி..., லஞ்ச் ரெடி பண்றீங்களா இல்லையா? பூஜை அறையே கதின்னு இருக்கீங்க? அக்காவுக்கு அந்த வேலை கிடைக்கணும்னு இருந்தால் கண்டிப்பா கிடைக்கும். இல்லையா கிடைக்காது. அது புரியாமல்..., பசிக்குதும்மா...”, பரிதாபமாக கெஞ்சினாள்.

மகள் பசிக்கிறது எனச் சொன்னவுடன் அவருக்கு உருகிப் போயிற்று.
“அம்மா சாதம் வடிக்கறேன்..., தயிர் போட்டு சாப்பிடறியா செல்லம்...”, உடனடியாக எழுந்து கொண்டார்.

“வடகமாவது பொரிச்சுத் தாங்கம்மா. நீங்க வடகம் போட்டு ரொம்ப நாளாச்சும்மா....”, ஏக்கம்....

“வடகம்..., இருக்கான்னு பாக்கறேன்....”, அவர் எழுந்து கிச்சனுக்குச் செல்ல,

“அம்மா..., இப்போ ஸ்நாக்ஸ் கூட செய்ய மாட்டேங்கறீங்க..., என் ப்ரண்ட்ஸ் எல்லாம் கூட கேட்டாங்க...”, வீட்டின் நிலைமை தெரியாமல் பேசும் சிறியவளை கண்டிக்கவும் முடியாமல், அவள் கேட்பதை செய்து கொடுக்கவும் முடியாத நிலையையும் வெறுத்தவராக, தன் கண்ணீரை மறைக்க, திரும்பிக் கொண்டார்.

“அம்மா நாளைக்கு உனக்கு பக்கோடா செஞ்சு தரேன் கிருபா...”, அவளை சமாதானம் செய்தார்.

“இப்படித்தாம்மா ரெண்டு மாசமா சொல்றீங்க..., ஆனா செய்யவே மாட்டேங்கறீங்க....”, புகார் வாசிக்க, “இந்த வாட்டி அம்மா கண்டிப்பா செஞ்சு தரேன்...”, அவள் கன்னம் வழித்தார்.

கணவன் இருந்த வரைக்கும்..., தின்பண்டங்கள் முதல்..., சுவையான உணவு வகைகள் வரை..., அனைத்தையும் வீட்டிலேயே செய்து விடுவார். ஹோட்டல் போகலாமா என அவர்கள் தந்தை கேட்டால் கூட, “அம்மாவே நல்லா செய்வாங்கப்பா...., அவங்களே செய்யட்டும்...”, என கோரசாக சொல்லி விடுவார்கள்.

அப்படி இருந்த வீடு..., ரசம், தயிர்... என மாறிப் போனால்..., சுவையான உணவுக்கு ஏங்கும் நிலைக்கு வந்தால்..., அவருக்கும் மனம் கனத்துதான் போனது. ஆனால்..., வாய்க்கு ருசியாக உண்டால்..., பசிக்கு கூட உண்ண உணவில்லாமல் போய்விடுமோ என அவர் அச்சம் கொள்வது நியாயம் தானே.

மகள் கேட்ட வடகம் இல்லாமல்..., கடையில் வாங்கிய அப்பளத்தை பொரித்துக் கொடுக்க, முகம் சுருங்கினாலும், அமைதியாகவே உண்டாள்.

“அக்காவுக்கு அந்த வேலை கிடைத்தால் நல்லா இருக்கும்ல்லம்மா...?”, திடுமென அவள் கேட்க, நீர் நிறைந்த விழியோடு, அமைதியாக தலை

அசைத்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில்..., கையில் இனிப்புகளோடு..., அவள் வீட்டுக்குள் நுழைந்தவள்..., "அம்மா..., எனக்கு வேலை கிடைச்சுடுச்சு. மாசம் பதினைந்தாயிரம் சம்பளம்..." , உற்சாகமாக கூவ, அவ்வளவு நேரம் சோகமாக இருந்த அந்த சூழல் அடியோடு மாறிப் போனது.

"அப்பா படத்து முன்னாடி வைத்து வணங்கு நிஹா. இந்த வேலை கிடைக்க உன் அப்பாதான் காரணம்...." , தன் தாய் சொன்னவாறே செய்தாள்.

"நாளையில் இருந்து வேலைக்குப் போகணும்மா. எப்படி செய்யப் போறேன்னு தெரியலை, கொஞ்சம் பயம்மாதான் இருக்கு..." .

"அதெல்லாம் என் பொண்ணு சிறப்பா செய்வ. எனக்கு நம்பிக்கை இருக்கு..." , அவள் நெற்றியில் முத்தமிட்டார்.

அதே நேரம்... அவள் பின்னால்..., அவளைத் தொடர்ந்து வந்த ராஜா..., நிஹாசினி... அவர்கள் வீடு இருக்கும் தெருவுக்குள் நுழைந்தவுடன்..., குனிந்த தலையும், வேக நடையோடு செல்ல..., காரை மிகவும் நிதானமாக செலுத்திய ராஜா..., அந்த தெரு முனையில் இருந்த நான்கு இளைஞர்களைக் கண்டு புருவம் உயர்த்தினான்.

கூடவே..., நிஹாசினியைக் கண்டவுடன்..., அவர்கள் பேச்சு உயர்ந்ததையும், அதில் ஒருவன்..., தன் கையில் இருந்த குச்சியை, விருட்டென அவள் காலுக்கு குறுக்காக வீசியதையும் கண்ட ராஜாவின் ரத்தம் கொதி நிலையை அடைந்தது.

பகுதி - 14.

ராஜா..., எப்படி தன் கோபத்தை கட்டுப்படுத்திக்கொண்டு தன் அலுவலகம் வந்தான் என்றே தெரியவில்லை. அலுவலகத்தில்..., தன்

இருக்கையில் கூட அமர முடியாமல், குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

அவனை இப்படி ஒரு நிலையில் பார்த்தே இராத விநாயக், "என்னடா மச்சான்..., உன் பொண்டாட்டி பின்னாடியே போன..., போன வேகத்தில் இங்கே வந்து குறுக்கும் நெடுக்கும் நடக்கற...? என்ன..., ஏதும் பிரச்சனையா...?", விநாயக் கேட்க, அவன் கேட்ட விதத்தில்..., ராஜாவின் கோபம் கூட சற்று தணிந்து விட்டது.

பின்னே..., அவளை மனைவி எனச் சொன்னால் அவன் உள்ளம் குளிராதா என்ன? ராஜாவின் அமைதியை தவறாக புரிந்து கொண்ட விநாயக், "ஏன் ராஜா..., வெளியே..., உனக்கு பிடிக்காத ஏதாவது நடந்துச்சா? ஒரு வேளை.., நிஹாவுக்கு ஏதாவது அஃபயர் இருக்கா என்ன...?", அவன் கேட்டு முடிக்கும் முன்னர்..., ராஜாவின் கையில் இருந்த மொபைல், விநாயக்கின் தலையை பதம் பார்த்து, கீழே விழுந்து தன் உயிரை விட்டிருந்தது.

"ஸ்..., ஆ..." அலறியவன்..., ராஜாவின் கண்களில் தெரிந்த ரவுத்திரத்தில் மிரண்டே போனான்.

"சத்தியமாடா மச்சான்..., அப்படியே அவ மனசுக்குள் யாராவது இருந்தால் கூட, நீ விலகி இருப்பையே தவிர, இப்படி டென்ஷன் ஆக மாட்டன்னு எனக்குத் தெரியும். சும்மா விளையாட்டுக்கு...", அவன் இழுக்க,

"என்ன மயிரு விளையாட்டு வேண்டிக் கிடக்கு..., எதில் விளையாடுறதுன்னு கிடையாது. இருக்குற டென்ஷன்ல உன்னை கொன்னுடப் போறேன். என் கண்ணு முன்னாடி நிக்காதே..., முதல்ல போ...", விட்டால் அவனை கொன்றுவிடும் நிலையில் இருந்தான்.

"சாரிடா மச்சான்...", உரைத்தவன் அங்கிருந்து ஓடியே போனான். அதற்கு மேலும்..., என்னவென்று கேட்கும் தைரியம் அவனுக்கு இருக்கவில்லை.
வெறி..., நிஹாசினியை கேலி செய்தவர்களை கொன்று போட்டுவிடும்

வெறி. அவள் தைரியத்தை ஒடுக்கும் அவர்கள் செய்கைமேல் எழும் வெறி..., அதை அடக்க முடியவில்லை.

அவர்களை அடித்து, ஒடுக்கி, துவம்சம் செய்ய அவனுக்கு ஒரு நொடி போதாது. கராத்தேயும், குங்ஃபூவும், சிலம்பாட்டமும் முறையாகக் கற்று தேர்ந்தவன்..., பத்துபேர் வந்தாலும் அவனால் அனாயசமாக சம்மாளிக்க முடியும்.

ஆனால்..., அப்படி அவன் செய்திருந்தால்..., அடுத்த நிமிடம்..., சேகர் க்ரூப்ஸ் தொழிலதிபரின் இளைய மகன் ராஜா..., நடு ரோட்டில் சண்டை..., எனத் துவங்கி, கொட்டை எழுத்துக்களில் அடுத்த நாளிலேயே பத்திரிக்கைகளில் அவர்கள் குடும்ப மானம் ஏலம் விடப்படும்.

அதையும் தடுக்க அவர்கள் பண பலத்தால் முடியும் என்றாலும், இன்றைய கால கட்டத்தில் கையில் கேமரா மொபைலோடு இருக்கும் இளைய தலைமுறையினர் தான் சண்டை போடுவதை எடுத்து, சமூக வலைத்தளத்திலும், யூடியூபிலும் போட்டு விட்டால்..., அதைத் தடுக்க தன்னால் முடியுமா?

ஏன் சண்டை போட்டேன் என விளக்கம் கொடுக்க வேண்டி வந்தால்...? அதில் நிஹாசினியின் பெயரை உரைக்க வேண்டி வருமே..., சாதக பாதகங்களை ஒரு நொடியில் சிந்தித்தவன், முயன்று அங்கிருந்து கிளம்பி விட்டான்.

ஆனாலும்..., அவர்களை அப்படியே விட்டு விடுவதா...? ரத்தம் கொந்தளிக்கிறது என்பதை அவன் உணர்ந்த தருணமென்றால், அது இதுவாகத்தான் இருக்கும்.
தான் அமைதியாக இருந்தால்தான் எதையும் சிந்திக்க முடியும் என எண்ணியவன், தன் இருக்கையில் அமர்ந்தான். தன் மேஜைமேல் இருந்த பாட்டிலில் நீர் காலியாகிவிட்டதை உணர்ந்தவன், "உமா..., வாட்டர் ப்ளீஸ்...", குரல் கொடுத்துவிட்டு, இருக்கையில் சாய்ந்து கொண்டான்.

அவன் அறைக்குள் தண்ணீரோடு நுழைந்தவள், கீழே விழுந்து, நொறுங்கிக்

கிடந்த அவன் அலைபேசியின் பாகங்களையும் பொறுக்கி, அவன் மேஜைமேல் வைத்தாள்.
"சார்...", ஒரு குரல் கொடுத்துவிட்டு அங்கிருந்து அகன்றுவிட்டாள்.
'அப்படி என்ன கோபம்...? மொபைல் உடையிற அளவுக்கு...?' அவள் வந்த இரண்டு வருடங்களில், சற்று குரல் உயர்த்தி அவன் பேசி பார்த்திருக்கிறாளே தவிர, முகத்துக்கு அந்த கோபம் வர அவன் விட்டதில்லை. இப்படி ஒரு கோபத்தை கண்டதில்லை.

அதுவும்..., வேலையை குறித்த நேரத்தில் முடிக்கவில்லையே என்ற பொழுது வரும் கோபம்தான். ஆனால்..... இப்பொழுதோ..., முகம் கோபத்தில் சிவந்திருக்க..., அவன் கோபத்தை அடக்க சிரமப்படுவதை அவளே உணர்ந்தாள்.

தேவைக்கு தவிர, மற்றபடி அவன் உரையாடுவதில்லை என்பதால்..., அவனிடம் என்னவென்று கேட்க முடியாமல் சென்று விட்டாள்.

தன் மேஜைமேல் இருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தவன், இமைகளை மூடிக்கொண்டு தீவிரமாக சிந்தித்தான். அவன் சிந்தையின் வேகம், அவனது சுருங்கிய நெற்றியில் இருந்தே தெரிந்தது. சட்டென எதையோ கண்டு கொண்டவனாக, தன் அலைபேசியை தேடியவன், அதன் நிலையைப் பார்த்து தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

அடுத்த தீர்வாக..., டெலிபோன் டைரக்ட்டரியை தேடி எடுத்தவன், படபடவென தான் தேடிய போன் நம்பரை கண்டுகொண்டான்.
தன் மேஜைமேல் இருந்த தொலைபேசியில் எண்களை அழுத்தியவன், இணைப்பு கிடைக்க காத்திருந்தான்.

"ஏசி ஆபீஸ்..., உங்களுக்கு யார் வேணும்...?", ஒரு காவலரின் குரல் அவனை எட்ட,

"ஏசி சீனிவாசன் இருக்காரா...?".

"நீங்க...?".

"ராஜசேகர்ன்னு சொல்லுங்க அவருக்குத் தெரியும்...",

"ஒரு நிமிஷம்...", ராஜா காத்திருக்க, அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில், "டேய் ராஜா..., நிஜமாவே நீதானா...? என்னால் நம்பவே முடியலடா. எப்படி இருக்க? நானே உன்னை வந்து பாக்கணும்னு நினைத்தேன்..., ஆனா..., வேலை டென்ஷன்ல வர முடியவே இல்லை..., சொல்லுடா..., எப்படி இருக்க?", உற்சாகமாக ஒலித்தது அவன் குரல்.

"ரொம்ப நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க...? எனக்கு உன்னை பார்க்கணுமே...", அவன் இழுக்க,

"நீ வான்னு சொன்னால் வந்துட்டு போறேன். எப்போ வர..., இப்போவா? இல்ல காலையிலா?".

"உன் வேலை எனக்குத் தெரியாததா...? முடிந்தால் நாளைக்கு காலையில் வாயேன்...", என்ன விஷயம் என்று கேட்காத நண்பனின் தன்மையை மனதுக்குள் வியந்தவனாக, தொலைபேசியை வைத்தான்.

மறுநாள் காலையில்..., நண்பனை எதிர்கொண்டான் சீனிவாசன். "டேய்...", அவனைப் பார்த்தவுடன் தாவி அணைத்துக் கொண்டான். அவனை தன் அறைக்கு அழைத்துச் சென்றவன், இருக்கையில் அமர வைத்தான்.

"சரி சொல்லு..., ஆமா..., உன் போனுக்கு என்ன ஆச்சு? எதுக்கு என் மொபைல்க்கு வராமல், லேண்ட் லைன்க்கு போன் பண்ண? உனக்கு என்ன ஹெல்ப் வேணும்...?", நேரடியாக விஷயத்துக்கே வந்தான்.

"ஏண்டா..., கிரிமினல் கிட்டே பேசிப் பேசி..., ஒரே விசாரணையா இருக்கு. கொஞ்சம் நிதானமாடா...", விநாயக் அறைக்குள் நுழைந்தவாறே உரைத்தான்.

"ராஜா..., நான் வந்த உடனேயே கேக்கணும்னு நினைத்தேன். இந்த தறுதலையை உன் கூடவேயா வச்சிருக்க? இவனுக்கு ஒழுங்கா குப்பை

கொட்ட கூடத் தெரியாதேடா...", அவன் உரைக்க, நண்பர்கள் இருவரும் வெடித்துச் சிரிக்க, அவர்கள் நினைவு பள்ளி நாட்களுக்கே சென்றது.

"டேய்.., டேய்..., வேண்டாம்..., அதெல்லாம் அப்போடா..., இப்போ நான் இங்கே சூப்ரவைசர் தெரியுமா?", பெருமை பட்டுக் கொண்டான் விநாயக்.

"அப்படியா...?", சீனிவாசன் ராஜாவைப் பார்க்க, "ஆமா..., நாய்க்கு நிக்க நேரமும் இல்லை, செய்ய வேலையும் இல்லை..., அந்த கணக்குதான். அவரே சொல்லிக்கறார்..., நான் என்ன செய்ய...?", ராஜா சொல்ல, விநாயக் முறுக்கிக் கொண்டான்.

"சரி..., இவனோட பொம்பளை புத்தி எப்படி இருக்கு...?", சீனி விசாரிக்க,

"ஏண்டா..., நீ இவனைப் பாக்க வந்தியா..., இல்லை என்னை ஆராய வந்தியா...?", கடுப்பானான் விநாயக்.

"அதையேன் கேக்கற..., போன வாரம் கூட ஒரு ஆடியோ கேட்டுட்டு இருந்தார். செம இன்ட்ரெஸ்ட்டா இருந்தது. ஆனா என்ன..., பாவி..., என்னை முழுசாவே கேக்க விடலை...", ராஜா குறைபட, விநாயக் அழும் நிலைக்கே சென்றுவிட்டான்.

விநாயக்கிற்கு மிகப்பெரிய கெட்ட பழக்கம் இருந்தது. அதாவது..., எங்காவது இரண்டு பெண்கள் பேசினால்..., அப்படி அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்து கொள்வதில் அலாதி ஆர்வம் கொள்வான்.

எனவே..., தன் அலைபேசியில்..., ரெக்கார்டிங்கைஆன் செய்து, அவர்கள் பேசும் இடத்தில் விட்டுவிட்டு வந்து விடுவான். சற்று நேரம் கழித்து அதை போட்டு கேட்டு, விஷயத்தை அறிந்து கொள்வான்.

கல்லூரி நாட்களில் அவனது இந்த சேட்டை அரங்கேறியது. ஆனால்..., அதை வைத்து எந்த பெண்ணையும் தொல்லை செய்ய மாட்டான் என்றாலும்,

அது மிகப்பெரும் கெட்ட பழக்கம் என அறிவுறுத்தி, அவன் தன்னிடம் வேலைக்குச் சேர்கையில், அலுவலகத்தில் இந்த வேலையை வைத்துக்கொள்ளக் கூடாது என கண்டிப்பாக சொன்ன பிறகே அவனை வேலையில் சேர்த்துக் கொண்டான்.

அதை சீனிவாசனிடம் தெரிவிக்க, "நல்ல காரியம் பண்ணடா. இல்லன்னா.., இவனால் ஒரு பொண்ணுங்களையும் ஆபீஸ்ல பேசவே விட முடியாது. அதென்னடா..., ஆம்பளைங்க பேசுறதை விட்டுட்டு, பொண்ணுங்க பேசுறதை மட்டும் ஒட்டு கேக்குற புத்தி..., உனக்கே அசிங்கமா இல்லை..." , சீனி கடிந்து கொண்டான்.

"அட போங்கடா..., ஆம்பளைங்க பத்தி எனக்குத் தெரியாததா? பொண்ணுங்களை ஸ்டடி பண்ணா தானே..., அவங்களுக்கு ஏத்த மாதிரி நாம மாற முடியும் அதான். இப்போ என்னை கேலி பண்றீங்க. என்னைக்காவது ஒரு நாள்..., என் ரெக்கார்டிங் உன் கேசுக்கோ..., இவன் லைப்க்கோ.., யூஸ் ஆகும்போது தெரியும்..., என் அருமை..." .

"த்தூ..., ஆமா பெரிய ரீ ரிக்கார்டிங்..., யூஸ் ஆக..., போடா...., தூக்கி உள்ளே வச்சுடப் போறேன்..." , சீனி சொல்ல, ராஜாவும் அவனும், கையை உயர்த்தி ஹை-ஃபை கொடுத்துக் கொண்டார்கள்.

"போங்கடா..." , கடுப்பான விநாயக் வெளியேறிவிட்டான்.

"அவன் கிடக்கான்..., என்ன சாப்பிடற...? காபி..., டீ..." , ராஜா உபசரிக்க.

"எதுவுமே வேண்டாம். என் நண்பன் உதவி என அழைத்தான்..., அது என்னன்னு முதல்ல தெரியணும்..." , அவன் கேட்க,

நிஹாசினியின் வீட்டு தெருவின் பெயரை உரைத்தவன், "அந்த ஸ்ட்ரீர் கார்னர்ல நாலு எருமை மாடு போற வர, பொண்ணுங்களை டீஸ்

பண்றாங்க. அவனுங்க அங்கே இருக்கக் கூடாது....", முகம் கோபத்தில் கொப்பளிக்க உரைத்த அவனை வித்தியாசமாக நோக்கினான்.

"என்னடா புதுசா இருக்கேன்னு பாக்கறியா? ஒரு சாதாரண எஸ்ஐயை வைத்தே இதை முடித்திருக்க முடியும். ஆனா..., பெரிய ஆள் இதன் பின்னால் இருக்கான்னு அவங்களுக்குப் புரியணும். ஒரு பயம் இருக்கணும்...", அவன் மேலும் உரைக்க, வியப்பின் உச்சிக்கே சென்றான்.

அதை வெளிக்காட்டாமல்..., "இன்னைக்கு சாயங்காலம் இடம் கிளியரா இருக்கும் போதுமா...?", கேட்டவன் எழுந்து கொண்டான்.

"என்னடா..., ஏன்..., எதுக்குன்னு கேள்வியே கேக்கலை...?", இப்பொழுது வியப்பது ராஜாவின் முறை ஆயிற்று.

"என் கெரியரே கேள்விக்குறியாகி..., ஒரு பிரச்சனையில் என்மேல் எப்ஐஆர் போட்டு..., என் ஐபிஎஸ் கனவே தரைமட்டமாகப் பாத்தப்போ..., என்ன ஏதுன்னு கேக்காமல்..., ஐந்து லட்சத்தை தூக்கிக் கொடுத்து, என்னை அந்த கேசில் இருந்து விடுவித்தியே..., அதைவிடவா இது பெருசு...", அவன் திருப்பிக் கேட்க..., வாயடைத்துப் போனான்.

"அதில் நீ குற்றவாளியே கிடையாதே சீனி...".

"அது அந்த சட்டத்துக்கு தெரியாதே ராஜா..., இதென்ன..., நீ கேட்டால்..., கேள்வியே கேட்காமல் என் உயிரையும் கொடுப்பேன். ஏன்னா..., அவ்வளவு நன்றி இருக்கு என் மனசுக்குள்....", இருவரும் எழுந்து ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டார்கள்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில்..., மிகவும் பரபரப்பாக அலுவலகத்துக்குள் நுழைந்தாள் நிஹாசினி. முதல் நாளே தாமதமாக வருவதென்றால்..., அவளுக்கு சற்று உதறலாகத்தான் இருந்தது.

"குட் மார்னிங் உமா...., சாரி கொஞ்சம் லேட் ஆயிடுச்சு...", அவள்

பதட்டமாக உரைக்க,

"இட்ஸ் ஓகே..., நீங்க சார்ட்ட ஒரு வார்த்தை சொல்லிடுங்க..." , தாமதமாக வருவதை அவன் எப்பொழுதும் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்பதாலேயே அவ்வாறு உரைத்தாள்.

"ஓ..." , சற்று தயக்கத்தோடு அவன் அறையை நெருங்கியவள், அவன் அறையின் கதவைத் தட்டிவிட்டு, அவன் அனுமதி பெற்று, உள்ளே நுழைந்தாள்.

அவளைப் பார்த்தவன்..., "ஹாசினி..." , அந்த அழைப்பே அவளைத் தேக்க, சொல்ல வந்த விஷயம் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது.

அவள் மட்டுமல்ல..., அங்கே இருந்த சீனிவாசனுமே புருவம் நெரித்தான். அவன் ஒரு நொடி நிஹாசினியை கவனித்தவன், மீண்டும் தன் நண்பனை நோக்கினான்.

"நீங்க போங்க..., நான் இப்போ வரேன்...." , அவள் மௌனம் கண்டு, அவளை அனுப்ப, தான் சொல்ல வந்ததை சொல்லாமலே கிளம்பிவிட்டாள்.

அவள் செல்லவே..., "நண்பா..., நீதானா...?" , சீனிவாசன் கேட்க, "அதெப்படிடா எல்லாரும் உடனே கண்டு பிடிக்கறீங்க? என் மூஞ்சியில் எழுதியா ஒட்டி இருக்கு?" , ராஜா வியப்பாக கேட்டான்.

"உன்னோட ஒரு நாள் பழகினாலே உன்னைப் பற்றி புரிந்துகொள்ள முடியும். நான் இருபது வருஷமா உன்னைப் பார்க்கறேன்..., எனக்கா தெரியாது...., சரி நான் கிளம்பறேன்..., ஒரு கேஸ் பத்தி விசாரிக்க போகணும்..." , அவனிடம் விடை பெற்றான்.

"நான் கேட்டது...?" , ராஜா அவனைத் தேக்க,

"ஈவினிங் இடம் கிளீயரா இருக்கும் போதுமா...?" , சீனிவாசன் சிரிக்க, அப்பொழுதுதான் இறுக்கம் கலைந்து இயல்பானான் ராஜா. அதைப் பார்த்த

சீனிவாசனும்..., விஷயம் புரிந்தும் புரியாமல் கிளம்பி விட்டான்.

அவன் செல்லவே..., ரேவதி, நிஹாசினிக்கு என ஒதுக்கியிருந்த கேபினுக்குச் சென்றவன், இருவரின் காலை வணக்கத்தை பெற்றுக்கொண்டு, அவர்களை நெருங்கினான்.

ரேவதியின் இருக்கைக்கு எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தவன்,

"ரேவதி..., அந்த பெயின்ட் ஆட் அனுப்பிட்டீங்களா? நெக்ஸ்ட் அந்த லோக்கல் டிவி சேனல்ல இருந்து காமெடி ப்ரோகிராமுக்கு ஒரு இன்ட்ரோ கேட்டு இருந்தாங்களே..., பாத்தீங்களா?", அவளிடம் கேட்க,

"சார்..., அவங்க அந்த பென்டிரைவ் அனுப்பிட்டாங்க. அதில் எங்கே..., என்ன அனிமேஷன் பண்றதுன்னு பாத்துட்டு இருக்கேன்....".

"ம்..., ஓகே..., அதோட ஹால்ப் போஷனை இவங்க கிட்டே கொடுங்க. அப்படியே...", உரைத்தவன், நிஹாசினியின் முகம் பார்க்க, அதில் மெல்லியதாக வியர்வை அரும்பியிருப்பதையும், பதட்டத்தையும் பார்த்தவன்..., சட்டென தன் முடிவை மாற்றினான்.

"இல்ல..., நீங்களே அதை முடிங்க..., இவங்களை கூட வச்சுக்கோங்க..., ஒன் வீக் கழித்து..., இவங்களுக்கு தனி போஷன் கொடுக்கலாம்...", அவன் உரைக்க, நிஹாசினி வேகமாக அவன் முகம் நோக்கினாள்.

'ஆர் யூ ஓகே..., ரிலாக்ஸ்...' அவன் பார்வை அவளுக்கு தைரியம் அளிக்க, ரேவதியோ..., 'இதென்ன புதிதாக...?' இங்கே திறமையை நிரூபிப்பவர்களுக்கு மட்டுமே இடம் உண்டு. அதுவும்..., முதலிலேயே கடினமான பகுதிகளைக் கொடுத்து செய்யச் சொல்லி, அதில் எண்பது சதவீதம் தேறினால் மட்டுமே அவர்களை சேர்த்துக் கொள்வான். அப்படி இருக்கையில்..., அவள் பார்வை சந்தேகத்தோடு அவனை ஆராய்ந்தது.

அவனோ..., ரேவதியின் பார்வை தன்னைத் தொடும் முன்பு, தன் முகபாவத்தை மாற்றி இருந்தான்.

ராஜாவிடம் மறுக்க முடியாமல்..., சம்மதமாக தலை அசைத்தாள் ரேவதி.

"ஓகே..., யூ பீப்பிள் கேரியான்...", இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

அவன் செல்லவே..., ரேவதி தன் கணினியில் சற்று நேரம் வேலை செய்தவள், முழுமையாக அதில் ஈடுபட முடியாமல் கொஞ்சம் திணறித்தான் போனாள்.
'சார் என்ன திடீர்ன்னு இப்படி மாறிட்டார்...? ஏன் இப்படி...?', மனம் குழம்பித் தவித்தாள்.

அதே நேரம்..., நிஹாசினியும் வெடவெடத்துப் போயிருந்தாள். ராஜாவின் பார்வையும், பேச்சும்.., ஒரு சாதாரண அளவுக்கு மேல் போவதுபோன்ற எண்ணம்..., 'அவர் எல்லாரிடமும் இப்படித்தானா...? இல்லையென்றால் என்னிடம் மட்டுமா...? இவளிடம் கேட்டு விடுவோமா? முதல் நாளே இப்படிக் கேட்டால்..., ஏதாவது நினைத்துக் கொள்வாளோ...?', நிஹாசினியின் மனம் தத்தளித்தது.

ரேவதிக்கோ..., இதற்குமேல் அமைதியாக இருக்க முடியாது எனப் புரிய, நிஹாசினியிடமே கேட்டு விடுவது என்ற முடிவிற்கு வந்தாள்.

"ஏன் நிஹா.., ராஜா சாரை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமோ...?", நிஹாசினி அவளிடம் ராஜாவைப் பற்றி கேட்க முயன்ற அதே நிமிடம், ரேவதி அவளிடம் கேட்க, திகைத்து விழித்தவள்...,

"அப்படியெல்லாம் எதுவும் இல்லையே..., ஏன்...? ஏன் அப்படிக் கேட்டீங்க..?", ஒரு வேளை..., அவனது பார்வை மாற்றத்தை கண்டிருப்பாளோ என்ற எண்ணத்தில் படபடத்தாள்.

"இல்ல..., சும்மாதான்...", அதற்குமேல் வம்பு பேச ரேவதி தயாராக இருக்கவில்லை. அதுவும் ராஜா ஏதாவது செய்தால்..., அதில் நியாயம்

இருக்கும் என்பதால் அமைதியானாள்.

"ரேவதி..., நான் ஒண்ணு கேட்டால் நீங்க தப்பா நினைக்க மாட்டீங்களே..."

"இல்ல..., கேளுங்க..."

"நம்ம..., இங்கே..., அதாவது..., இங்கே வேலை செய்யும் ஆண்கள் எல்லாம் எப்படி...? எதுவும் பிரச்சனை இருக்காதே..." எடுத்த எடுப்பில் ராஜாவைப் பற்றி விசாரிப்பது அவ்வளவு சரியாக வராது என்பதால்..., உளறிக் கொட்டி, கிளறி மூடினாள்.

"இங்கே வேலை செய்யும் ஆம்பளைங்க எல்லாரும் நல்லவங்கதான். என்ன..., கொஞ்சம் கேலி பேசுவாங்க. அதுவே நம்ம ராஜா சார்க்கு பிடிக்காது. அவ்வளவு ஏன்..., நான் அங்கே ஒற்றை பெண்ணாக..., அவர்களோடு வேலை செய்கிறேன் என்பதாலேயே..., என் இடத்தை இங்கே மாற்றினார்.

"அது மட்டும் இல்லை..., நான் தனியாக இருக்கிறேன் என எண்ணக் கூடாது என்றே..., அடுத்த கேண்டிடேட் உன்னையும் பீமேலாவே செலெக்ட் செய்தார்ன்னு விநாயக் சொன்னார். பீமேல்ன்னு ஒரு சாப்ட் கார்னர் இருந்தாலும், வேலைன்னு வந்துட்டா..., எல்லாரும் ஒண்ணுதான்.

"வேலையில் ஒரு சின்ன மிஸ்டேக் இருந்தாலும் ஒத்துக்கவே மாட்டார். கொஞ்சம் லேட் ஆனாலும் பெர்ஃபெக்டா இருக்கணும்னு எதிர் பார்ப்பார். தேவைக்கு அதிகமா ஒரு வார்த்தை, ஒரு பேச்சு..., ஒரு பார்வை..., எதுவும் இருக்காது.

"சில நேரங்களில் நானே ஆச்சரியப் பட்டிருக்கிறேன். இவ்வளவு உயரத்தில் இருப்பவர்..., எப்படி இவ்வளவு கட்டுப்பாட்டோட இருக்கார்ன்னு. ரியல்லி ஹி இஸ் எ ஜெம்..." விட்டால் அவனுக்கு ரசிகர் மன்றமே துவங்கி விடுபவள் போல் அவள் இருக்க, மௌனமாக அனைத்தையும்

கேட்டுக் கொண்டாள்.

ஏனோ..., அவன் பார்வையும், அழைப்பும்..., நிஹாசினியின் மனதுக்குள் மெல்லிய படபடப்பை ஏற்படுத்தியது மட்டும் உண்மை.

பகுதி - 15.

ஒரு வாரம்..., மிகவும் எளிதாக கடந்து விட்டது. அன்று நிஹாசினிக்கான தனி ப்ராஜெக்ட் கொடுப்பதாகச் சொல்லியிருந்தான் ராஜா. சற்று ஆர்வமும், படபடப்புமாக காத்திருந்தாள்.
வழக்கமாக சீக்கிரமாக வந்துவிடும் அவன்..., அன்று தங்கள் கடையில் முக்கியமான ஸ்டாக் வெரிபிகேஷன் இருந்ததால்..., அங்கே சென்றுவிட்டான்.

அலுவலகத்துக்கு தாமதமாகவே..., சற்று வேகமாக வந்தவன்..., "விநாயக்..., ஸ்ரீதரையும், ரூபனையும் கொஞ்சம் வரச்சொல்..., அப்படியே ரேவதியை கூப்பிடு..." , தன் இருக்கையில் அயர்வாக அமர்ந்தவன், ஏசியின் சில்லிப்பை சற்று அதிகப்படுத்தினான்.

விநாயக் இன்டர்க்காமில் அவர்களை அழைத்தவன், ரேவதியை நேரில் சென்று அழைத்து வந்தான்.

அவர்கள் அனைவரும் அறைக்குள் நுழைய, ராஜா சற்று கோபமாக இருப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றியது. தன் மடிக்கணினியில் கவனமாக இருந்தவன், அவர்கள் வரவே...., "ரூபன்..., இந்த போஷன் நீங்க பண்ணதா..., கொஞ்சம் பாருங்க..." , கணினியை அவர்கள் பக்கம் திருப்பினான்.

அவன் வேலை செய்யும்பொழுது தெரியாத அந்த வித்தியாசம்..., ராஜா காட்டும்பொழுது தெரிய, "சார்..." , தடுமாறினான்.

"இந்த ப்ரசென்ஸ் ஆஃப் மைன்ட்ன்னு ஒரு விஷயம் சொல்லுவாங்க தெரியுமா? அதை கொஞ்சம் யூஸ் பண்ணியிருக்கலாம். இல்ல..., இதில்

உங்க சந்தேகம் நியாயமானதுதான். அதாவது இந்த போஷன்ல அந்த மைக் ஒரு வேளை இருக்கலாம்னு நீங்க நினைத்தது எனக்கும் புரியுது.

"ஆனால்..., இப்படி ஒரு ஆடில்(add) எதுக்காக மைக் வரப் போகுதுன்னு யோசித்திருந்தால்..., நான் உங்களை கூப்பிட்டு அனுப்பும் அவசியமே இருந்து இருக்காது. போங்க..., முதல்ல அதை கட் பண்ணி மெர்ஜ் பண்ணுங்க...."", அவனை அனுப்பியவன்...,

"ஏன் ஸ்ரீதர்..., இதோட மீதியை நீங்க முடிச்சுட்டு.., ஒண்ணா பார்த்துதானே எனக்கு அனுப்பினீங்க..., நீங்களும் அதை கவனிக்கலையா? இது என் வேலை இல்லைன்னு நீங்க ஒதுங்கிப் போவது டீம் வொர்க்குக்கு நல்லதில்லை. இது நான் உங்களுக்கு கொடுக்கும் இரண்டாவது வார்னிங்..., இன்னொரு முறை இதே தவறு நடந்தால்..."",

"வார்த்தைகளை அத்தோடு நிறுத்தியவன், "நீங்க போகலாம்..."",

"சாரி சார்..."", அவன் உரைக்க, "எனக்கு சாரி வேண்டாம்..."", பேச்சு நறுக்குத் தெறித்தாற்போல் இருந்தது. அவன் கோபத்தைப் பார்த்த ரேவதிக்கு சற்று உதறலாகத்தான் இருந்தது.

ஸ்ரீதர் அங்கிருந்து அகல, "ரேவதி..., நீங்க அந்த டிவி கம்பெனிக்கு செய்து கொடுத்த ப்ரோகிராம் ரொம்ப நல்லா இருந்ததுன்னு சொன்னாங்க. பட்..."", அவன் இழுக்க, இமை சிமிட்ட மறந்து அவனையே பார்த்திருந்தாள்.

"அதென்ன ரேவதி..., அந்த நகைச்சுவை நடிகரோட காதுக்குள் பொம்மை ஹெலிகாப்டர் போவதாக காட்ட வேண்டிய இடத்தில்..., அது அவரோட கன்னத்தில் போகுது. நொடியில் வந்துபோகும் சீன்தான் என்றாலும், பெர்பெக்ஷன் வேண்டாமா?

"உங்கமேல் இருக்கும் நம்பிக்கையில்..., நேரடியா அனுப்புங்கன்னு சொல்லிட்டேன். முதல் வியூ டிவியில் வந்ததை பாத்த பிறகுதான், நானே அதைப் பார்த்தேன். இனிமேல் நான் மாத்தி தரேன்னு சொல்லவும்

முடியாது....

"யாராவது பார்த்து கேட்டால்..., என்ன பதில் சொல்லுறது?", அவன் குரலில் சூடு ஏற..., சற்று நடுங்கித்தான் போனாள்.

ஆனிமேஷன்..., கிராபிக்ஸ் இவற்றில் இருக்கும் மிகப்பெரிய பொறுப்பே..., அதை வித்தியாசம் தெரியாமல் செய்வதில்தான் இருக்கிறது. சிறிய விஷயங்களில் கவனம் இல்லாமல் செய்யும் தவறுகள், பெரிய வாய்ப்புக்களை தடுக்கும் என்பது அவனது எண்ணம்.

எனவே..., எப்பொழுதும் மிகுந்த கவனமுடனே இருப்பான். ரேவதியோ..., இதற்கு என்ன பதில் கொடுப்பது எனப் புரியாமல் தடுமாற, "இனிமேல் இப்படி ஒரு தவறு நடக்காமல் பாத்துக்கோங்க..." உரைத்தவன்,

"ஹாசினியை வரச் சொல்லுங்க.... அந்த சிஎன்ஆர் பம்ப் விளம்பரத்தை அவங்ககிட்டே கொடுக்கலாம்னு இருக்கறேன்..., நீங்க என்ன சொல்றீங்க? இந்த ஒரு வாரத்தில்..., அவங்க பெர்பார்மென்ஸ் எப்படி இருக்கு? எனி சஜஷன்...?", அவளிடம் கேட்டான்.

ரேவதி கவனித்தவரைக்கும்..., நிஹாசினிக்கு கனெக்ட் செய்வதில் மிகப்பெரும் தடுமாற்றம் இருப்பதை அவள் உணர்ந்திருந்தாள். மற்றபடி..., ஒரு காட்சியை மொத்தமாக பின்புலம் அனைத்தையும் மாற்ற வேண்டும் என்றால்..., அதை அவளால் சுலபமாக செய்ய முடிந்தது.

அதை அப்படியே அவனிடம் உரைக்க..., "ஓ..., சரி நீங்க போங்க..., நான் பாத்துக்கறேன்...", தாடையில் இருந்த ட்ரிம் செய்த தாடியை வருடியவன், சற்று நேரம் எதையோ சிந்தித்தான்.

பின்னர்..., ஒரு முடிவிற்கு வந்தவனாக..., கணினியில், அந்த விளம்பரத்தை எடுத்திருக்கும் விதத்தை ஓட்டிப் பார்த்தான்.

"இந்த இடத்தை மட்டும் கொஞ்சம் கவனமா செய்யணும்..., மற்றபடி இது

ஓகே தான்...", தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன், விநாயக்கை ஏறிட்டான்.

"என்ன மாப்ள...., நிஹாசினியை கூப்பிடவா...?" அவன் கேட்க, சம்மதமாக தலை அசைத்தான்.

அவளை அழைத்து வந்து விட்ட விநாயக், அங்கிருந்து அகன்றான்.

"உக்காருங்க...." அவன் உரைக்கவே, அவன் மேஜைக்கு எதிரில் இருந்த இருக்கையில் தயக்கமாக அமர்ந்தாள்.

அவன் தன் கணினியை பார்வையிட, அவனை ஏறிடுவதும், அவன் மேஜையை பார்ப்பதுமாக நேரத்தை கடத்தினாள். மனமோ..., 'ரொம்ப கஷ்டமான வேலையா இருக்குமோ...? எப்படி செய்வது...?' அவள் சிந்தை முழுவதும் அதிலேயே இருந்தது.

"இப்போ நீ வர வழியில் பிரச்சனை எதுவும் இல்லையே...?" அவன் மெல்லியதாக வினவ, சிறு அதிர்ச்சியும், குழப்பமுமாக அவனை ஏறிட்டாள்.

அவள் கண்கள் வெளிப்படுத்திய பாவனையில் விழுந்தவன், "பியூட்டி..." கண்களை லேசாக சுருக்கி..., இதழை மெல்லியதாக அசைத்து..., அவள் கண்களை கூர்மையாக நோக்கியவன், சன்னமாக முனக, புருவம் உயர்த்தி, சற்று விதிர்த்துதான் போனாள்.

அவள் நிலை உணர்ந்தவன்..., "ரிலாக்ஸ்..., ஏன் இவ்வளவு பதட்டம்...? உண்மையைத் தானே சொன்னேன்..." உரைத்தவனின் கண்களிலோ, வார்த்தையிலோ பொய்யிருக்கவில்லை.

அதை உணர்ந்தவள்..., மேலும் தடுமாற..., "ஓகே லீவ் இட்..., நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லவே இல்லை...." அவளுக்கு நினைவூட்டினான்.

"எ..ன்..ன...?" அவன் கேட்டதே அவளுக்கு மறந்து விட்டிருந்தது.

"வீட்டுக்குப் போகும் வழியில் இப்போ எதுவும் பிரச்சனை இல்லையேன்னு கேட்டேன்....?" மீண்டும் அவன் கேட்க, வேகமாக தலையசைத்தவளுக்குள், 'இவனுக்கு எப்படித் தெரியும்?' என்ற யோசனை ஓடியது.

கூடவே..., 'இப்போ யாரும் அங்கே நிற்பதும் கிடையாதே..., ஒரு வேளை அது இவர் வேலையாக இருக்குமோ....?' கேள்வியோடு அவனை ஏறிட, இரு இமைகளையும் அழுத்தமாக மூடித் திறந்தவன், மென்னகை புரிய, அவளுக்குள் பல ரசாயன மாற்றங்கள்.

'இது நல்லதுக்கா கெட்டதுக்கா...?' அவசரமாக பார்வையை திருப்பிக் கொண்டாள்.

"நான் என்ன அவ்வளவு கஷ்டமான கேள்வியா கேட்டேன்...?" சீண்டல் குரலில் வினவ, விலக்கிய பார்வையை அவசரமாக அவன் பக்கம் திருப்பினாள்.

"இல்ல...., இப்போ..., எந்த தொல்லையும் இல்லை..." பதில் கொடுத்தவளுக்கு, 'இதற்கு நீங்கள்தான் காரணமா...?' மனதுக்குள் கேட்டுக் கொண்டதை வெளியே கேட்கும் தைரியம் இருக்கவில்லை.

மனமோ...., 'இவர் ஏன் இப்படிப் பார்க்கிறார்...? இப்படி பேசுகிறார்...? மற்ற யாரிடமும் இப்படி இல்லையே...., ரேவதி உமா..., இவர்களிடம் எல்லாம், அளவுக்கு மீறி ஒரு வார்த்தை உதிர்த்ததை கூட பார்த்ததில்லையே....' அவனை தவறாக எண்ணவும் முடியாமல் தடுமாறினாள்.

"எதையோ கேக்கணும்னு நினைக்கறே..., ஆனா தயங்கற..., என்கிட்டே என்ன தயக்கம்..., கேளு...." அவன் உரிமை கலந்த பேச்சும், ஒருமை அழைப்பும..., இதை எப்படி எடுத்துக்கொள்ள என்று தெரியாமல் தவித்தாள்.

அவள் கண்களில் கயமையை கண்டிருந்தால் விலகியிருப்பாளோ என்னவோ, அவள் தந்தை.. 'ஒருவரின் கண்கள் நிச்சயம் பொய் சொல்லாது என' உரைத்தது நினைவிற்கு வர, அவன் கண்களையே ஆராய்ந்தாள்.

ஏனோ அவனிடம் பேச்சை வளர்க்க தயங்கியவள்..., 'ஒண்ணும் இல்லை...' என்பதுபோல் தலை அசைக்க..., இதற்குமேல் அவளிடம் இன்று விளையாட வேண்டாம் என்பதால்..., வேலைக்குத் திரும்பினான்.

தன் மடிக் கணினியை அவள் பக்கம் திருப்பியவன்..., "இங்கே பார்..., இந்த ஆட் தான் நீ பண்ணப் போற..., நல்லா பாத்துக்கோ..., உன் சிஸ்டத்துக்கு இதை கனெக்ட் செய்துட்டேன்... இந்த போஷனை எப்படி மாத்தினால் நல்லா இருக்கும்னு நீயே டிசைட் பண்ணு...,

"ஏதாவது சந்தேகம்..., குழப்பம்ன்னா..., தயங்காமல் என்கிட்டே கேள்..." அவன் சொல்ல, அவன் கொடுத்த வேலைக்குள் தன் சிந்தையை செலுத்தியவளுக்கு..., மனதுக்குள் சற்று உதறலாகத்தான் இருந்தது.

அவள் முகத்திலேயே கவனமாக இருந்தவன்..., "யூ கேன் டூ இட்..., நம்பிக்கையா பண்ணு. ஐ'ம் ஹியர் ஃபார் யூ...." அவன் கொடுத்த நம்பிக்கையும் அவளைத் தேற்றவில்லை.

அவள் முகத்தில் தெரிந்த பாவனை..., அவனை வெகுவாக யோசிக்க வைத்தது. பிடிக்காத ஒரு வேலையை செய்யச் சொல்கையில்..., ஒருவர் முகம் ஒருவித பிடித்தமின்மையை வெளிப்படுத்துமே..., அவ்வாறாக இருந்தது அவள் முகம்.

"ஓகே சார்...." அவள் இருக்கையில் இருந்து எழ..., "ராஜா...." அவன் பெயரை எதற்காக அப்பொழுது அவன் சொன்னான் என்பதை..., அவளது அப்போதைய மனநிலையால் உணர்ந்துகொள்ளவே முடியவில்லை.

அவள் இருக்கைக்குச் சென்று தன் டெஸ்க்டாப்பை இயக்க..., தன் வேலையை கவனிக்க முயன்றாள்.

நிச்சயமாக அதை முடிக்க ஒரு வாரமாவது நேரம் இருக்கும் என்பது

அவளுக்குத் தெரியும். ஆனாலும்..., அதற்குள் தன்னால் முடிக்க முடியுமா என்ற தயக்கம்..., பயம்..., மனதை கவ்விக் கொண்டது.

பிடித்த வேலையை செய்வது என்பது வேறு...., கட்டாயத்துக்காக செய்வது வேறாயிற்றே..., அவளும் முடிந்த அளவு வேலையில் ஒன்றிபோகத்தான் விரும்புகிறாள். ஆனால்..., மனம் முரண்டு பிடிப்பதை அவளால் தடுக்க முடியாமல் திண்டாடிப் போனாள்.

'அப்பா இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்காதே....' தன்னிரக்கம் போட்டி போட..., இருக்கும் இடம் அழுகையை அடக்கச் செய்ய..., தொண்டைக்குழிக்குள் கசந்து வடிந்தது.

"என்னப்பா..., ஏதாவது உதவி வேணும்னா கேள்..., கண்டிப்பா சொல்லித் தரேன்..." அவள் முகம் பார்த்த ரேவதி, ஆதரவாக உரைத்தாள்.

அவள் கருணைக்காக முயன்று புன்னகைத்தவள்..., "நான் ரெஸ்ட் ரூம் போயிட்டு வரேன்..." ஏனோ அங்கே இருக்க முடியும் என்று தோன்றவில்லை, எனவே எழுந்து வேகமாக டாய்லெட் விரைந்தாள்.

அவள் செல்லவே..., அவள் முதுகையே யோசனையாக வெறித்தாள் ரேவதி.

நிஹாசினியோ..., டாய்லெட்டின் உள்ளே சென்றவள்..., தண்ணீரை திறந்து விட்டு..., தன் குரல் வெளியே வராத அளவுக்கு அழுகையில் தேம்பினாள்.

"அப்பா..., எனக்கு இது புடிக்கலப்பா..., எரிச்சலா வருது...., இது என்னோட வேலை இல்லன்னு மனசு முரண்டு புடிக்குதுப்பா...., என்னால் முடியலை. ஏன் என்னை விட்டு போனீங்க....?" சற்று உரக்கவே கதறிவிட்டாள்.

அவள் பின்னோடு வந்த ராஜாவுக்கு..., அவள் குரல் எட்ட..., புருவம்

நெரிய, யோசனையோடு நின்றுவிட்டான். உடனே அவளைத் தேற்ற மனம் விழைந்தாலும்....., சட்டென அவள் பெர்சனல் ஸ்பேசுக்குள் நுழைய ஒரு தயக்கம்..., அது சரியாகும் என்றும் தோன்றவில்லை. அங்கேயே நின்றிருந்தான்.

அங்கே..., ஆண் பெண் கழிவறை எதிரெதிரில் இருந்தது. அதே நேரம்..., ராஜாவின் அறைக்குள்..., அட்டாச்ட் பாத்ரூம்..., வெஸ்ட்டர்ன் டாய்லெட் வசதியோடு இருந்தது. அதை விடுத்து...., நிஹாசினி முகம் விம்ம வெளியேறியதைப் பார்த்தவன்..., அவளைக் கவனிக்க வேண்டியே அவள் பின்னல் வந்தான்.

அவளது அழுகையும், கதறலும..., உடனடியாக எதையாவது செய்தே ஆக வேண்டும் என்ற வேகத்தை அவனுக்கு கொடுத்தது.

சட்டென அங்கிருந்து வெளியேறியவன்..., தன் அலைபேசியை எடுத்துக்கொண்டு, மொட்டை மாடிக்கு விரைந்தான். அங்கே தன் ரசனைக்கு ஏற்ப மாடி தோட்டம் போட்டிருக்கவே..., அங்கே இருந்த இருக்கையில் சென்று அமர்ந்தவன், உடனடியாக சுஜாவுக்கு அழைத்தான்.

பொதுவாக இடைப்பட்ட நேரங்களில் அவன் பேசுவதாக இருந்தால்..., விஷயம் இல்லாமல் இருக்காது என்பதால்..., அவசரமாக அலைபேசியை உயிர்ப்பித்தார்.

"சொல்லு ராஜா..." அவர் வார்த்தைகளை முடிக்கும் முன்பே..., "அம்மா..., உடனே ஹாசினி வீட்டுக்குப் போகணும்..." அவன் வார்த்தைகள் தீவிரமாக வந்து விழ, புருவம் நெரித்தார்.

அவனது அழைப்பே.., அவன் நார்மல் மனநிலையில் இல்லை என்பதை உணர்த்த..., கூடவே..., ஹாசினி யாராக இருக்கும் என்ற யூகத்தையும் அளிக்க, "சரி போகலாம்..., எதுவா இருந்தாலும் நிதானமா முடிவெடுக்கலாம்..., நீ முதல்ல வீட்டுக்கு வா..." அவர் அழைக்க, மறுத்துப் பேசாமல் உடனே கிளம்பி விட்டான்.

செல்லும் முன்னர்..., நிஹாசினி இருக்கும் கேபினை எட்டிப் பார்த்துவிட்டே சென்றான். அவளது அழுது வீங்கிய முகம்..., ஒரு தீர்மானத்துக்கு அவனை வரத் தூண்டியது.

'அவளுக்குப் பிடிக்காததை இனிமேல் செய்யக் கூடாது..., அதற்கு நான் விட மாட்டேன்...' எண்ணியவனுக்கோ..., தன்னை நினைத்தே வியப்பாக இருந்தது.

ராஜா பெண்களையே அறியாதவன் கிடையாது..., எந்தப் பெண்ணைப் பார்த்தாலும்..., தோழி என்ற வரம்பை மீறி அவன் சிந்தை சென்றதே கிடையாது. அப்படிப்பட்ட தான்..., நிஹாசினிக்காக மொத்தமாக மாறிப் போனதாகவே அவனுக்குத் தோன்றியது.

இது பிரிக்க முடியாத பந்தம்..., என்பதை மனம் உடனே ஒப்புக் கொண்டது. எனவேதான்..., அதிரடியாக அவனை செயல்படத் தூண்டியது.

வீட்டுக்குச் சென்றவன்..., உணவு கூட அருந்தாமல்..., நிஹாசினியைப் பற்றி உரைத்தவன்..., கூடவே..., தன் மனம் அவளை முழுமையாக நாடுவதையும்..., அவளது இன்றைய நிலையையும் விளக்கியவன்..., இதற்குமேல் அவளை தவிக்க விட முடியாது என்பதையும் தெளிவாக உரைத்தான்.

அவன் பேசுவதையெல்லாம் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்த சுஜாவுக்கு..., ராஜாவின் மனநிலையை முழுதாக உணர்ந்துகொள்ள முடிந்தது.

"ப்ளீஸ்ம்மா..., அவ அழறதை என்னால் சும்மா வேடிக்கை பாத்துட்டு இருக்க முடியலை. ஏதாவது செய்தே ஆகணும். அவ வீட்டுக்கு போய் பேசுவோம்..., எனக்கு அவளை என்னோடவே வச்சுக்கணும்..., அவ ஆசையை நிறைவேற்றி வைக்கணும்..., ப்ளீஸ்..." அவர் கைகளை கெட்டியாக பற்றிக் கொண்டான்.

"நீ சொல்றது எனக்கு புரியுது ராஜா. ஆனா.., திருமண விஷயம் நாம

ரெண்டுபேர் மட்டும் சம்பத்தப்பட்டது கிடையாது. தனா கிட்டே பேசணும்..., அவர் சொல்வதையும் கேட்ட பிறகு பேசலாம்..." அவனுக்கு பொறுமையாக விளக்கினார்.

அவனுக்கும் அது புரியத்தான் செய்தது..., ஆனால்...., இன்னும் ஒரு நாள் கடத்துவதைக் கூட அவன் காதல் மனம் விரும்பவில்லை.

"சரி..., அவகிட்டே சொல்லிட்டியா...?" அவர் கேள்விக்கு...,

"இல்லம்மா..., ஏற்கனவே மனசளவில் பாதுகாப்பின்மையை உணரும் அவகிட்ட, என்னால் என் காதலை சொல்ல முடியலை. ஆனா..., நிச்சயம் என் காதலை அவளுக்கு உணர வைப்பேன். அவளுக்காக நான் இருக்கிறேன் என்ற நம்பிக்கையை அளிப்பேன்.... அதை...., உரிமையா செய்ய, எனக்கு பெரியவங்க சம்மதம் வேணும்..." ஒரு பெண்ணின் மனதை, மனநிலையை இவ்வளவு தெளிவாக உணர்ந்திருக்கும் அவனை பெருமிதம் போங்க ஏறிட்டார்.

"இந்த தெளிவு உன்கிட்டே இருக்கும்போது..., எல்லாம் நல்லபடியாவே நடக்கும். கண்டிப்பா பேசலாம்..., இன்னைக்கே நான் தனாகிட்டே பேசறேன். நிச்சயம் அவர் சம்மதிப்பார். அதே நேரம்..., குணாகிட்டேயும், தாரிணிகிட்டேயும் இதைப்பற்றி கலந்து பேசியே ஆகணும். நீ தனி மனுஷன் கிடையாது ராஜா..., எங்க எல்லோரின் ஒட்டுமொத்த எதிர்காலமும் நீதான்..., உனக்கு புரியுது தானே..." அவன் சிகை கோதினார்.

"புரியுதும்மா..., நான் காத்திருக்கேன்..." அரைமனதாகவே சம்மதித்தான்.

அவனிடமிருந்து நிஹாசினியின் வீட்டு முகவரியை பெற்றுக் கொண்டவர், அவனை அலுவலகம் செல்லப் பணித்தார்.

அவன் செல்லவே சுஜா செய்த முதல் வேலையே..., ராஜாவின் தோழன், சீனிவாசனுக்கு அழைத்தவர், அவர்கள் முகவரியைக் கொடுத்து விசாரிக்கச்

சொல்லவே..., அவர் கேட்கவே காத்திருந்தாற்போல், அவளைப் பற்றிய தகவல்கள் அனைத்தையும் ஒப்புவித்தான்.

"இதெப்படி சீனி உனக்குத் தெரியும்? உன்னிடம் நிஹாசினியைப் பற்றி சொன்னானா?" அவர் கேட்க,

"ஆண்ட்டி..., அவன் உங்ககிட்டே சொல்ல முன்னாடி என்கிட்டே ஏதாவது சொல்வான்னு நீங்க நினைக்கறீங்களா..., அவங்க போகும் வழியில் ஒரு சின்ன பிரச்சனை..., அதை சரிபண்ணச் சொல்லியிருந்தான். அப்போ..., நானே விசாரித்து தெரிந்த விஷயம்தான் இது.

"ராஜா ஒரு விஷயம் சொல்லி..., அதை ஜஸ்ட் லைக் தட்..., முடிக்க முடியுமா? அதான்...., அடிமுதல், நுனிவரை விசாரிச்சுட்டேன். உங்க பையன் செலக்ஷன் எப்பவுமே சோடை போகாது. நீங்க தைரியமா முன்னேறலாம்..." மேலும் சற்று நேரம் உரையாடிவிட்டு வைத்துவிட்டான்.

சுஜாவின் யோசனை முழுவதும்..., அடுத்து செய்ய வேண்டியவைப் பற்றி சிந்திக்கத் துவங்கியது. ராஜா ஒன்றை கேட்டு..., அதை இல்லையென மறுக்கும் வழக்கம் அவர்கள் வீட்டில் கிடையாதே...., அப்படியிருக்கையில், வாழ்க்கை துணை விஷயத்திலா மறுக்கப் போகிறார்கள்?

சுஜா அன்று இரவே குடும்ப அங்கத்தினரோடு இந்த விஷயத்தைப் பற்றி பேச முடிவெடுத்தார்.

ராஜாவுக்கோ..., சுஜாவிடம் சொல்லிவிட்ட பிறகும்..., நிஹாசினியின் கலங்கிய முகமே மனதில் தோன்றி இம்சித்தது.

உடனடியாக அவள் துன்பத்தை துடைக்க வேண்டும் என்ற வேகம்..., அலுவலகம் விரைந்தவன், அவர்கள் கேபினுக்கு விரைந்தான்.

அழுது வீங்கிய முகத்தை, முயன்ற அளவு சீர்படுத்திக் கொண்டு, தன் கணினியின் முன்னால் ஒட்டாத முகபாவத்தோடு அமர்ந்திருந்தாள் நிஹாசினி.

அவளோடு உரையாட, ரேவதி தடையாக இருக்கவே..., அவளை நெருங்கியவன், "ரேவதி.., ஸ்ரீதர்க்கு கொஞ்சம் ஹெல்ப் வேணுமாம்..., என்னன்னு பாத்துட்டு வாங்க..." அவளிடம் உரைக்க, இண்டர்காமை இயக்கப் போனவள்..., ராஜா தொண்டையை லேசாக கனைக்கவே, சட்டென அவன் முகம் நோக்கியவள், அவன் பார்வை, நிஹாசினியை தொட்டு மீள்வதை உணர்ந்தவள், எதிர் கேள்வி கேட்காமல் அங்கிருந்து விலகினாள்.

படிகளில் இறங்கியவளை எதிர்கொண்டான் விநாயக். "ரேவதி..., என்ன.. முகத்தில் ஒரு குழப்பம்...?"

"ம்ச்..., ராஜா சார் தான்..., அவர் கொஞ்சநாளா சரியே இல்லை. அதுவும்..., நிஹாசினியிடம் அவர் நடந்துகொள்ளும் முறை..." இழுத்தவள், பெரிய இடத்தை இதற்குமேல் விமர்சிப்பது சரியல்ல என்று பாதியிலேயே நிறுத்தி விட்டாள்.

"கட்டிக்கபோற பொண்ணுகிட்டே உரிமை எடுத்துகொள்வது தப்பா?" அவன் எதிர்கேள்வி கேட்க, நம்ப முடியாத ஆச்சரியத்தில் புருவம் உயர்த்தினாள்.

அவனது உயரம் எதுவென்று அவளுக்குத் தெரியும். அதே நேரம்..., நிஹாசினியின் நிலை..., அவள் குடும்பம் பற்றியும் அவள் குடும்ப நிலையும் அவள் அறிந்ததே. அப்படியிருக்கையில்..., இது எப்படி சாத்தியம்? என்பதே அவளது முதல் சிந்தையாக இருந்தது.

அவள் எண்ணத்தை உணர்ந்தவன் போன்று..., "நீங்க யோசிக்கிறது எனக்குப் புரியுது. நீங்க..., ராஜசேகரா அவனை நினைக்காமல், வெறும் ராஜாவா நினைச்சுப் பாருங்க..., உங்களுக்கே உண்மை புரியும்..." அவன் விளக்க, நிச்சயம் அவன் விளக்கத்தை அவளால் நூறு சதவீதம் ஏற்க முடிந்தது.

அதுதான் ராஜா...., ரேவதி இங்கே வந்த இத்தனை மாதங்களில்..., ஒரு நாள்..., ஒரு நொடி கூட, ராஜசேகராக அவன் நடந்து கொண்டது

கிடையாது. தன் பின் பலம் பற்றி, அவனாக யாரிடமும் பேசி கூட அவள் பார்த்ததில்லை.

யாராவது அவனைப் பற்றி தெரிந்து கேட்டால் கூட..., அந்த சாம்ராஜ்யத்தில் என் பங்களிப்பு எதுவும் கிடையாது. அப்படி இருக்கையில் எதன் அடிப்படையில் நான் அதில் உரிமை கொண்டாட? என்பதே அவனது பதிலாக இருக்கும்.

இவை எல்லாம் விட, ரேவதி இங்கே வந்த ஒரு வருடம் வரைக்கும், அவன் ராஜசேகர் என்பது அவளுக்குத் தெரியவே தெரியாது. வேலை விஷயத்தில் அவன் காட்டும் கெடுபிடியைக் கண்டு கோபம் கொண்டு, ஒரு முறை அவள் பொரும, அதைக் கேட்ட விநாயக் தான்..., அவனுக்கு இந்த தொழில் அவசியமே இல்லை என்பதையும்...,

அவன் சம்மதித்தால்..., அவனது லட்சியமான சினிமா துறைக்குள் அவனை நுழைக்க வேண்டி, அவனது அண்ணனே கோடிகள் கொட்டி படம் எடுக்க தயாராக இருந்த பொழுதும், தன் திறமையைக் கொண்டு மட்டுமே அதில் நுழைய வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பதையும் உரைக்க, வியந்துதான் போனார்கள்.

அதை எண்ணிப் பார்த்தவள்..., "சரி நான் ஸ்ரீதரைப் பாத்துட்டு வரேன்..., நீயும் அங்கே போகாதே...." அவன் பதிலை எதிர்பாராமல் இறங்கிச் சென்றாள்.

ரேவதி சென்றுவிட்டதைக் கூட உணராமல், தன் சிந்தையில் மூழ்கி, கணினித் திரையை வெறித்துக் கொண்டிருந்த நிஹாசினியின் அருகில், இருக்கையை இழுத்துப் போட்டு அமர்ந்தவன்,

"ஹேய் பியூட்டி..., வாட் ஹேப்பண்ட்...?" சட்டென அருகில் கேட்ட அவனது குரலில், பதறி விலகினாள் நிஹாசினி.

"ஹேய்..., கூல்..." அவளை அமைதிபடுத்த முயன்றான்.

கண்கள் சட்டென ரேவதியின் இருக்கையை ஆராய..., அவள் அங்கே இல்லை என்றவுடன்..., மனதுக்குள் ஒரு அதிர்வு வந்து போனது.

"நீங்க...., ரேவதி...." தடுமாறியவள், வாசலை நோக்க, அது திறந்திருப்பதை கண்ட பிறகே, சற்று நிம்மதி அடைந்தாள்.

"ரிலாக்ஸ்..., சிட்..." உரைத்தவன்..., மெல்லிய புன்னகையோடு அவளை ஏறிட்டான்.
அந்த புன்னகையும், அவன் வார்த்தைகளும் நிச்சயம் அவளை அமைதிப் படுத்தியது. மௌனமாக அவள் இருக்கையில் அமர, "என்ன..., வேலை கஷ்டமா இருக்கா...? பிடிக்கலையா...? வேற என்ன பிடிக்கும்...?" ஆதரவான அந்த வார்த்தைகள்..., அவள் மனதை தடம் புரளச் செய்தது.

அவன் வார்த்தைகள்..., தன் தந்தையை நினைவூட்ட..., கண்கள் பனித்தது.

"ஐ'ம் ஆல்வேஸ் ஹியர் ஃபார் யூ...." ஆழமான குரலில் அவன் உரைக்க, சட்டென அவன் முகம் நோக்கினாள்.

'இதை எப்படி எடுத்துக் கொள்ள....?' அவள் விழிகள் அலைபாய..., கண்ணீர் விழிகளை நிறைத்திருக்க..., அவனை ஏறிட, "ஐ ப்ராமிஸ்..., உன்னை கஷ்டப்பட விட மாட்டேன்..." அவள் விழிகளை உறுதியாக நோக்கி அவன் உரைத்த வார்த்தைகள்...., நிச்சயம் அவளை படபடக்கச் செய்தது.

இமைகளை படபடவென கொட்டி..., நம்ப முடியாமல் அவனை வெறிக்க, "பியூட்டி...." அவள் செய்கையில் கவரப்பட்டவனாக அவன் உரைக்க, அவன் கண்களுக்குள் எதையோ தேடியது அவள் பார்வை.

அவள் பார்வை தேடிய ஆதரவை..., தோழமையை அவனும் உணர்ந்து கொள்ள, பெரும் தயக்கத்துக்குப் பிறகு..., கீபோர்டின் மேலிருந்த அவள் இடக்கரத்தை, தன் வலக்கரத்தால் அழுந்த பற்றியவன்..., அவள் திகைத்து நோக்கும்பொழுதே அங்கிருந்து விலகிச் சென்றான்.

பகுதி - 16.

சுஜா கிளம்பிக் கொண்டிருக்க, தன் மனைவியை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார் தனா.

"தனா..., நீங்களும் கூட வாங்களேன்...., நான் மட்டும் எப்படிப் போறதாம்...?" ஆயிரம் முறையாக அழைத்துப் பார்த்துவிட்டார்.

"இல்ல சுஜா..., அவங்க வீட்டில் ஆம்பளைங்க யாருமில்லை. அப்படியிருக்கும்போது..., திடுதிப்புன்னு நாம எல்லாம் போய் நிற்பது சரியா வராது. நீ போய் பேசி...., முதல்ல ஜாதகத்தை வாங்கு..., மற்றவற்றை பிறகு பார்த்துக் கொள்ளலாம்...." அவரும் தன்மையாகவே மறுத்தார்.

"தாரிணியும் வரலன்னு சொல்லிட்டா...., அவளுக்கு கார்த்திகா விஷயத்தில் பெரும் ஏமாற்றம்..." சங்கடமாக உரைத்தார்.

"இதில் நாம எதுவுமே செய்வதற்கு இல்லை. சம்பந்தப்பட்ட ரெண்டுபேருக்குமே அதில் விருப்பமில்லை என்னும்போது..., அதை நாம மதித்தே ஆகணும். விருப்பமில்லாத அவர்களை நம்ம கட்டாயத்துக்காக சேர்த்துவிட்டு, பிறகு அவங்க வாழ்க்கை பாழாக போயிட்டேன்னு நாமதான் வருத்தப்படுவோம்.

"அதற்கு.., இந்த வருத்தம் எவ்வளவோ பரவாயில்லை. அவளும் ஒரு நாள் புரிஞ்சுப்பா. நீ இப்போ ராஜாவை மட்டும் நினை..." மனைவியை ஆறுதல் படுத்தினார்.

"சரி..., ராஜா உன்னோட வரானா...?" அவர் கேட்டு முடிக்கவே...,

"ம்மா..., நான் ரெடி..." ராஜாவின் குரல் அறைக்கு வெளியே கேட்க, கதவை லேசாக தட்டியவன் உள்ளே நுழைந்தான்.

"உங்க அம்மாவும் ரெடி..., வா..." தனா அழைக்க, அவர் அருகில் சென்று அமர்ந்தான்.

"அப்பா..., அம்மா இப்பவும் ரொம்ப அழகுல்ல...?" சுஜாவை பார்த்தவாறே அவன் வினவ..., "அப்படியா சொல்ற...?" கேலியாக கேட்டாலும்..., தனாவின் பார்வையோ..., அது நூறு சதவீதம் உண்மை என்பதை அவனுக்கு உணர்த்தியது.

ராஜாவின் மனமோ..., இப்படி ஒரு மனம் ஒத்த தம்பதிகளாக தாங்கள் வாழ வேண்டும் என விருப்பம் கொண்டது.

"அப்பா..., நீங்களும் வாங்களேன்..." தனாவின் பக்கம் திரும்ப, "முதல்ல அவங்க வீட்டு சூழலை தெரிஞ்சுட்டு வாங்க. சட்டுன்னு அவங்க முன்னாடி உக்காந்துட்டு, உங்க பொண்ணை கொடுங்கன்னு நாம கேக்க முடியாது ராஜா. சாதாரணமா பேசுங்க..., நீங்க ஜாதகம் கேட்டு..., அவங்க கொடுத்தால், நாம மேற்கொண்டு செய்யலாம்..." எல்லாம் உன் அவசரத்துக்காகத்தான் என்பதை அவர் சொல்லாமல் நிறுத்த, அதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

"நான் ரொம்ப அவசரப்படுறேனாப்பா....?" ராஜா கேட்டே விட்டான்.

"ராஜா...." பெரியவர்கள் இருவரும் ஒன்றுபோல் குரல் கொடுக்க, தன்னை இயல்பாக்கிக் கொண்டான்.

"கிளம்புற நேரத்தில் என்ன இது...? நல்லதையே நினைப்போம்..., முதல்ல கிளம்புங்க..." தனா எழுந்துகொள்ள..., தாங்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

டிரைவர் அவர்கள் வாங்கி வைத்திருந்த கூடையை எடுத்துக்கொள்ள, "போயிட்டு வரோம்..., நீங்களும் ஏதோ வேலை இருக்குன்னு சொன்னீங்களே..., முடிச்சுட்டு வாங்க..." சுஜா வார்த்தைகளில் விடைபெற, ராஜா தலையசைப்பில் விடை பெற்றான்.

காருக்குள் சற்று நேரம் அமைதி நிலவ..., "ம்மா..., அத்தை ஒத்துப்பாங்க தானே..." ராஜா சற்று பதட்டமாகத்தான் இருந்தான்.

"அதான் அத்தைன்னு முடிவே பண்ணிட்டியே பிறகென்ன...?" அவனை கேலி செய்தாலும், அவருக்கும் அந்த யோசனை இருக்கவே செய்தது. தங்கள் சம்பந்தத்தை அவர் எப்படி எதிர்கொள்வார் என்பது பெரும் யோசனையாகத்தான் இருந்தது.

இரண்டு பெரிய இடங்கள் சேர்வது என்றால் இந்த யோசனைக்கே இடமில்லை. ஆனால்..., தன் யோசனையை அத்தோடு நிறுத்திக் கொண்டார்.

"போங்கம்மா..." செல்லமாக கோபித்தவன் அமைதியானான்.

அதன்பிறகு நிஹாசினியின் வீட்டை அடையும்வரைக்கும் அங்கே மௌனமே ஆட்சி செய்தது.

"வேலு..., நீ இங்கேயே இரு...." தாங்கள் வாங்கியவற்றை ராஜா எடுத்துகொள்ள, கேட்டை திறந்து உள்ளே நுழைந்து, அழைப்புமணியை அடித்துவிட்டு காத்திருந்தார்கள்.

அந்த நேரம்தான்..., சின்ன மகளுக்காக ஏதாவது சிற்றுண்டி செய்யலாம் என கிச்சனுக்குள் நுழைந்த துளசி..., 'அதுக்குள்ளேயா வந்துட்டா...?' யோசனையோடு வாசலுக்கு விரைந்தார்.

கதவைத் திறந்தவர்..., அங்கே நின்ற புதியவர்களைப் பார்த்து சற்று குழம்பிப் போனார். "நீங்க....? உங்களுக்கு யார் வேணும்...?" ஒரு வேளை வீடு மாறி வந்துவிட்டார்களோ என்பதாலேயே அவ்வாறு வினவினார்.

"இது நிஹாசினியோட வீடு தானே..., கொஞ்சம் உள்ளே வந்து பேசலாமா...?" சுஜா வினவ..., அவசரமாக கிரில் கேட்டின் பூட்டைத்

திறந்து அவர்களை அனுமதித்தவர்...,
"உள்ளே வாங்க..." கேட்டை மறக்காமல் சாற்றிவிட்டு அவர்களைப் பின்தொடர்ந்தார்.

"மன்னிக்கணும்..., நீங்க யார்ன்னு..." ஒரு வேளை கணவனின் உறவினர்களாக இருப்பார்களோ என்பதால் வார்த்தையை முடிக்காமல் தயங்கினார்.

"ஏன் நிக்கறீங்க..., முதல்ல உக்காருங்க..." அவர்களை அமரச் சொன்னவர்..., "ஒரு நிமிஷம்..." உரைத்துவிட்டு..., கிச்சனுக்குச் சென்று தண்ணீர் எடுத்துவர விரைந்தார்.

'யாராக இருக்கும்...? பையனைப் பார்த்தால்..., ஆண்டவா....' வயதுப் பெண்ணை வீட்டில் வைத்திருக்கும் ஒரு தாய்க்கே உரிய எதிர்பார்ப்பும், தடுமாற்றமும் அது. இதயம் படபடத்தது.

யோசனை எதுவாக இருந்தாலும்..., தண்ணீரை அவர்களிடம் நீட்டினார்.

"ரொம்ப நன்றி..., நாங்க பேச வந்ததை பேசிட்டு..., டிபனே சாப்பிடுறோம்..." நீரை வாங்கிய சுஜா, அதை அங்கிருந்த டீபாயின்மேல் வைத்தார்.

"நீங்களும் உக்காருங்க...." தன் எதிரில் இருந்த சோபாவை சுஜா காட்ட, கேள்வியான பார்வையோடும்..., படபடக்கும் இதயத்தோடும் அதில் அமர்ந்தார்.

சுஜாவின் பேச்சே..., அவர்கள் பேசவந்த விஷயத்தை அவருக்கு உணர்த்த..., மனதுக்குள் சந்தோஷமும் துக்கமும் ஒருங்கே பொங்கியது.

ஒரு நிமிடம் அமைதி காத்தவர்..., "இவன் என் பையன் ராஜா. இவனுக்கு..., உங்க பெரிய பொண்ணு நிஹாசினியை கேக்கலாம்னு வந்திருக்கோம்..." சுஜா நிறுத்த..., ஓரளவு எதிர்பார்த்ததுதான் என்றாலும்..., திடுமென கேட்கையில் சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

தன் பெண்ணை கொடுக்கிறோம்..., இல்லை..., என்பது இரண்டாம் பட்சம். ஆனால்..., வந்திருப்பவர்கள் யாரென்றே தெரியாமல்..., இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? அவர் முகம்.., அவரது என்ன ஓட்டத்தை உரைக்க,

"உங்களுக்கு சேகர் குரூப்ஸ் பத்தி தெரியும்ன்னு நினைக்கறேன்..." சுஜா கேட்கவே..., துளசியின் முகம் நிச்சயமாக ஒரு அப்பட்டமான அதிர்ச்சிக்கு உள்ளானது.

"சேகர் ஜவுளிக்கடை..., எலக்ட்ரிக்கல்ஸ்..." நீங்க அதைப் பத்தியா கேக்கறீங்க?" வினவியவருக்கு நிச்சயம் குரல் அடைத்தது.

"ஆண்ட்டி..., முதல்ல நீங்க தண்ணியைக் குடிங்க..." தன் கையில் இருந்த கிளாசை அவர் கையில் திணிக்க, "இல்ல..., வேண்டாம்..." அவர் மறுக்க, பிடிவாதமாக அதை அருந்த வைத்தான்.

"ஆண்ட்டி..., ரிலாக்ஸ்..., நீங்க பதட்டப்படுற அளவுக்கு எதுவும் இல்லை. நிஹாசினி என்னோடதான் வொர்க் பண்றா..., எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு...., அவளை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுறேன்..., ப்ளீஸ்.., மறுத்து எதையும் சொல்லிடாதீங்க..." படபடத்தான்.

இப்பொழுது விழிப்பது அவரது முறை ஆயிற்று..., சுஜா ஒன்றைச் சொல்ல, ராஜா ஒன்றைச் சொல்ல..., குழப்பமாக அவர்களை ஏறிட,

"சேகர் குரூப்ஸின் கடைசி வாரிசுதான் ராஜா. அவனுக்கு கம்பியூட்டர் கிராபிக்ஸ் பீல்ட்ல இன்ட்ரெஸ்ட்..., சோ..., அவன் தனியா அந்த கம்பெனி வச்சிருக்கான்..., அங்கேதான், நம்ம நிஹாசினி வேலை செய்யறா..." சுஜா விளக்க..., தெளிந்தார்.

ஆனாலும்..., கேட்ட விஷயங்களை ஜீரணிக்க அவருக்கு சற்று நேரம் தேவைப்பட்டது. அவருக்கு அதற்கு அவகாசம் கொடுத்து, மற்றவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

“இது என் பொண்ணுக்குத் தெரியுமா....?” தன்னை சற்று மீட்டுக்கொண்டு கேட்டார்.

“ப்ளீஸ் ஆண்ட்டி..., என்னை ராஜாவா மட்டும் பாருங்க..., ராஜசேகரா இல்லை....” அந்த நிமிடம் தன் உயரத்தை அவன் வெறுத்தான்.

‘அதெப்படி முடியும்...?’ துளசி, கேள்வியாய் அவனை ஏறிட்டார்.

“ம்மா....” அவன் தாயை துணைக்கழைத்தான்.

‘கொஞ்சம் பொறுமையாய் இரு ராஜா....’ கண்களால் கட்டைளையிட, தன் இருக்கையில் வந்து அமர்ந்தான்.

துளசிக்கோ..., என்ன சொல்வது என்றே தெரியாத நிலை..., தன் மகளுக்கு தான் திருமணம் செய்து வைக்க வேண்டிய கடமை இருக்கிறது என நிச்சயம் அவருக்குத் தெரியும்.

ஆனால்..., கடந்த நிமிடம் வரைக்கும் அதைப்பற்றியே அவர் சிந்தித்திருக்கவில்லை. இன்னும் இரண்டு வருடங்கள் கழித்த பிறகுதான் அவளுக்கு வரன் பார்க்க எண்ணியிருந்தார். அப்படியிருக்கையில்..., திடுமென வீடு தேடி வந்து..., அதுவும் தான் கற்பனை கூட செய்திராத விதத்தில்..., இவ்வளவு பெரிய சம்பந்தம்..., அதுவும்..., விரும்பிக் கேட்கிறார்கள் என்னும்பொழுது..., வாயடைத்துத்தான் போயிருந்தார்.

ஒரு வேளை அனைத்தும் கனவோ..., அவர் எண்ண..., வீட்டு கடிகாரம் ஒலியெழுப்பி அவரை கலைத்து, நடப்பது நிஜம் என அறிவுறுத்தியது.

அவர்கள் இருவரும் தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தவருக்கு..., அவர்களுக்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் உறைந்து போயிருந்தார்.

‘இவர் விரும்புவது என் பொண்ணுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் என்னிடம் சொல்லாமல் இருக்க மாட்டாளே...’ சிந்தைகள்

சிதறியது.

"நீங்க எப்படியும் உங்க பொண்ணுக்கு மாப்பிள்ளை பாப்பீங்க தானே. யாரோ ஒருவனுக்கு உங்க பொண்ணை கட்டிக் கொடுப்பதுக்கு. அவளை நேசிக்கும் எங்க ராஜாவுக்கு கொடுத்தால்..., நிச்சயம் அவள் வாழ்க்கை நன்றாக இருக்கும்.

"நானும் அவளை என் பொண்ணாக பார்த்துக் கொள்வேன். திடீர்ன்னு நாங்க வந்தது உங்களுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும். ஆனாலும்..., கொஞ்சம் யோசனை பண்ணுங்கன்னுதான் சொல்றேன்..." சுஜா மெதுவாக உரைத்தார்.

சுஜா சொல்வது துளசிக்கும் புரியத்தான் செய்தது..., என்றாலும்..., பொன்னை வைக்கும் இடத்தில் பூவையாவது வைக்க வேண்டாமா? அவர்கள் எங்கே..., நான் எங்கே...' இதை வெளியிட முடியாமல் அமைதியானார்.

"எங்களுக்கு என்ன செய்வது..., எதைச் செய்வது என்பதைப் பற்றியெல்லாம் தயவு செய்து யோசிக்காதீங்க. ஆண்டவன் புண்ணியத்தில் எல்லா செல்வமும் எங்கள் வீட்டில் கொட்டிக் கிடக்கிறது..." 'ஒன்றைத் தவிர....' இதை மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

ஒரு மழலையின் கால்த்தடம் பதியாத அவர்கள் வீடு..., நிச்சயம் வெறுமையாகத்தான் சுஜாவுக்கு அந்த நேரம் தோன்றியது.

"ராஜாவுக்கு உங்க பொண்ணை கட்டிக் கொடுத்தால், அவ சந்தோஷமா இருப்பாளா...? இவன் நல்லவனா என்பதை மட்டும் பாருங்க. செல்வம் இன்னைக்கு வரும் நாளைக்கு போய்டும்..., சோ...." இதற்குமேல் பிடிவாதமாக எதையும் உரைக்க முடியாது என்பதால் அமைதியானார்.

சுஜா பேசுவதில் இருக்கும் உண்மை புரிய, "எனக்கு யோசிக்க கொஞ்சம் டைம் வேணும்..." ஒரு வாறு உரைத்து விட்டார். அவர் பதிலைக் கேட்ட ராஜாவின் முகம் நிச்சயமாக வாடியே விட்டது.

சுஜா ஓரளவு இந்த பதிலைத்தான் எதிர்பார்த்திருந்தார் என்பதால்..., பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

"கண்டிப்பா... யோசிச்சு... ஒரு நல்ல முடிவா சொல்லுங்க..., இதில் என்னோட போன் நம்பர் இருக்கு. எப்போ வேண்ணா..., எந்த நிமிஷம் வேண்ணா எனக்கு கால் பண்ணுங்க. உங்க போனுக்காக நாங்க காத்துட்டு இருக்கோம்...." தன் கையில் இருந்த பேப்பரை டீபாயின்மேல் வைத்தவர், இருக்கையில் இருந்து எழுந்து விட்டார்.

வாசல்வரை அவர் பின்னால் வந்தவன், "ம்மா..., நீங்க காருக்கு போங்க..., நான் இப்போ வரேன்..." அவன் உரைக்க, மறுக்காமல் சென்றார்.

அவன் உள்ளே வந்தபொழுதும்..., தன் இருக்கையை விட்டு அசையாமல் அமர்ந்திருந்தார். அவர்கள் செல்ல..., தான் வழியனுப்ப வேண்டும் என்பது புத்திக்கு உரைத்தாலும்..., உடல் ஒத்துழைக்க மறுத்தது.

திகைப்பாய் அமர்ந்திருந்த அவரை நெருங்கியவன்..., "ஆண்ட்டி..." அவன் அழைக்கவே..., சோபாவில் இருந்து எழுந்து நின்றார்.

"உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு தோணிச்சு..., அதான் வந்தேன். ஹாசினியை..., உங்களை எல்லாம் ஒரு நாலு அஞ்சு வருஷத்துக்கு முன்னாடியே எங்க கடையில் வைத்து பார்த்திருக்கிறேன். அப்போ..., எதேச்சையா ஹாசினி பேசியதை கூட கேட்டேன்.

"சொந்தமா தொழில் நிர்வகிக்கணும்னு அவ பேசிய பேச்சு..., அவங்க அப்பாவோட பதில்..., உங்களோட கண்டிப்பு..., இப்படி எல்லாம்..., அதே ஹாசினியை..., இப்போ..., ஒரு மாசத்துக்கு முன்னாடி..., என் ஆபீஸ்ல பாத்தப்போ..., அவ கண்ணில் தெரிந்த பாவனை..., அந்த வேலைக்கு வந்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் அவள் இருக்கும் நிலையை எனக்கு சொல்லிச்சு.

“இப்போ..., அவ வேலையிலும் ஒன்ற முடியாமல்..., பிடிச்சதையும் செய்ய முடியாமல்..., தவிக்கறதை பாக்கும்போது..., சத்தியமா என்னால் முடியலை. அவளை எப்படியாவது இந்த இக்கட்டில் இருந்து..., என்னை மன்னிச்சிடுங்க..., இப்படி பேசுறது சரியா தப்பான்னு எனக்குத் தெரியலை.

“ஆனா..., அவளோட அப்பா இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்காதுன்னு அவ வாய்விட்டு சொல்லி அழறதை பாத்த பிறகு..., அவளை என்னால் இப்படியே விட முடியும்னு தோணலை. அதான்..., என் அம்மாவை அழைச்சுட்டு உடனே வந்துட்டேன்.

“அவளுக்கு மேலே படிக்க ஆசை இருக்கு..., அதை ஏதோ ஒரு காரணம் சொல்லி என்னால் நிறைவேற்றிக் கொடுக்க முடியும். ஆனா..., மூன்றாம் மனிதனாக நான் அதைச் செய்தால்..., இந்த சமூகம் அதை ஏற்றுக் கொள்ளாது. அதே நேரம்..., அவளை என்னோடவே வச்சுக்கணும்னு எனக்குத் தோணுது....” இதைச் சொல்கையில் அவன் வெகுவாகத் தயங்க..., அவன் சொல்ல வருவதை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது.

“அவளுக்கு ஒரு நல்ல கணவனா மட்டும் இல்லை..., உங்களுக்கு ஒரு நல்ல மகனா..., உங்க சின்னப் பொண்ணுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியா, துணையா..., என்னால் இருக்க முடியும். ஐ ப்ராமிஸ்..., என்னை நீங்க நம்பறீங்க தானே...” அவர் தன்னை புரிந்துகொள்ள வேண்டுமே என்ற ஏக்கம், தவிப்பு..., அனைத்தும் ஒரு சேர அவன் நிற்க, முதல் முறையாக புன்னகைத்தார்.

அதன் பிறகுதான்..., தன் மகள் வேலைக்குச் சென்ற வாரமே..., வழியில் கேலி செய்த கூட்டம் தொலைந்திருப்பதை உணர்ந்தவருக்கு, அதை இவன்தான் செய்திருப்பான் என உறுதியானது. அவன்மேல் ஒரு நம்பிக்கை விதையை ஊன்றச் செய்தது.

“நான் போன் பண்றேன்...” அவர் உரைக்க..., அவ்வளவு நேரமாக வாடியிருந்த அவன் முகம் பிரகாசமானது.

“தேங்க்ஸ் அத்தை...” உரைத்தவன் வாயிலுக்கு விரைய..., “யா..., யா...” அவன் குதூகலிக்கும் குரல் துளசியைத் தீண்டி புன்னகையை விரியச் செய்தது.

அவர்கள் சென்றுவிட்ட பிறகு..., எதையுமே செய்யத் தோன்றாமல் அப்படியே அமர்ந்து விட்டார்.

ராஜா சொன்ன..., பிடிக்காத வேலையை தன் மகள் செய்கிறாள் என்பதும், தந்தையை நினைத்து ஏங்குகிறாள் என்பதும்..., அவரை வெகுவாக காயப்படுத்தியது.

அது ஏற்கனவே அவர் அறிந்ததுதான் என்றாலும்..., மகளின் அழுகை..., கலக்கம்..., இதை சாதாரணமாக எடுத்துகொள்ள முடியாதே. அவளது இந்த மனக் குழப்பங்கலால்தான்..., ராஜா தன்னை கவனிப்பதை கூட கவனிக்கவில்லையோ.... சிந்தையிலே மூழ்கி இருந்தார்.

சின்ன மகள் வினோதினி வந்ததைக் கூட அவர் கவனிக்கவில்லை.
“அம்மா..., என்னம்மா..., கிரில்லை லாக் பண்ணாமல் சாத்தி வச்சுட்டு, பேயறஞ்சா மாதிரி உக்காந்துட்டு இருக்கீங்க..., வீட்டுக்கு யாராச்சும் வந்தாங்களா என்ன...?” அங்கே இருந்த கவரை பார்வையால் வருடியவாறு, தாயை உலுக்கினாள்.

“ஹாங்..., வினோ..., நீ எப்போ வந்த...?” தன் சிந்தையில் இருந்து வெளி வந்தவர் வினவினார்.

“சரியா போச்சு போங்க..., அப்போ..., நான் இவ்வளவு நேரம் கேட்ட எதுவுமே உங்க காதுக்குள் விழலையா...? யாராவது வீட்டுக்கு வந்தாங்களான்னு கேட்டேன்....” தன் ஸ்கூல் பேகை கீழே வைத்தவள், அந்த கவரை ஆராய்ந்தாள்.

‘இதை இங்கேயே விட்டுட்டு போயிட்டாங்களா...?’ எண்ணியவர்..., “ஆமா..., சரி..., நீ போய் கை கால் எல்லாம் கழுவிட்டு, யூனிபாமை மாத்திட்டு வா. வந்த வேகத்தில் சாப்பிட உக்காந்துடாதே..., நான் டீ

போடறேன்...” கிச்சனுக்குள் நுழைந்தார்.

“ஐ..., கஜூரி ஸ்வீட்..., எவ்வளவு நாளாச்சு இதை சாப்ட்டு..., அம்மா..., டிபன் எதுவும் வேண்டாம்..., நான் இதையே சாப்ட்டுக்கறேன்...” குரல் கொடுத்தவள், தன் அறைக்கு சென்று மறைந்தாள்.

வினோதினிக்கு டீ கொடுத்து, அவள் படிக்க அமரவே..., இரவு உணவுக்காக இட்லி ஊத்த சென்றார்.

அவர் பின்னாலேயே வந்தவள் “அம்மா..., எனக்கு இந்த மேத்ஸ் மட்டும் புரியவே மாட்டேங்குது..., இதுக்கு மட்டும் டியூஷன் போறேனே..., இன்னும் ரெண்டு மாசத்தில் டென்த் போஷன் ஸ்டாட் பண்ணிடுவாங்க. மேத்ஸ் புரியலன்னா கஷ்டம்மா....” கெஞ்சினாள்.

‘இவவேற..., வீட்டு நிலைமை தெரியாமல்...’ மனதுக்குள் அலுத்தவர், “அக்கா இப்போ வருவா..., அவகிட்டே கேட்டுப் படி...” அவளை போகச் சொன்னார்.

“ஆமா..., வருவா..., வந்த உடனே ரெண்டு இட்லியைத் திம்பா..., அப்படியே போய் பெட்ல விழுவா..., அவளுக்கு அதுக்குத்தான் நேரமிருக்கு. இதில் எனக்கு எங்கே பாடம் சொல்லித் தருவா...?” கால்களை தங் தங்கென உதைத்தவாறு நடந்து சென்றாள்.

அவள் சொன்ன பிறகுதான்..., தன் பெரிய மகள் வீட்டில் மனம் விட்டு பேசியே நாட்களாயிற்று என்பதை உணர்ந்தார். ‘என் பொண்ணை நான் ஒழுங்கா கவனிக்கவே இல்லையோ...’ மனம் பதைத்தது.

‘ஏதோ வேலை களைப்பு என நினைத்தால்..., மனதுக்கு எதையேனும் வைத்து புளுங்குகிறாளா..., இன்று பேசியே ஆக வேண்டும்..., முடிவெடுத்தார்.

இரவு எட்டு முப்பது மணிக்கு வீட்டுக்குள் நிஹாசினி நுழைய..., அவள்

முகத்தையே ஆராய்ச்சியாக ஏறிட்டார் துளசி.

அங்கிருந்த இருவரையும் கண்டுகொள்ளாமல் தன் அறைக்குள் நுழைந்து, முகம் கைகால் கழுவி, உடை மாற்றி வந்தவள்..., "அம்மா..., டிபன்..." அவள் கேட்கவே..., மறுக்காமல் உணவு பரிமாறினார்.

தாய், தங்கையிடம் சாப்பிட்டீர்களா என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. 'இப்படித்தான் நடக்கிறதா...? நானும் என் கவலையில் மூழ்கி இதை கவனிக்காமல் விட்டு விட்டேனா...?' எண்ணியவர், மகளின் தலை கோதினார்.

ஒரு நொடி சாப்பிடுவதை நிறுத்தியவள்..., வேகமாக உண்டுவிட்டு, தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். மனதுக்குள் பெரும் போராட்டம். இன்றைய வேலையில்..., தான் செய்த குழப்பம்..., மனம் கனத்துக் கிடந்தது.

இன்று..., ஒரு அல்சேஷன் டாகை(dog)..., நடனமாட வைக்க வேண்டியதுதான் அவளது அசைன்மெண்ட்டாக இருந்தது. தான் கற்றுகொண்டதை வைத்து ஓரளவுக்கு அதை முடித்துவிட்டாள்தான். ஆனால்..., அதை ஓட்டிப் பார்த்த ரேவதி..., அந்த நாயின் உயரத்தை இவள் சரியாகச் செய்யாதது..., பின்புலத்துக்கு..., அது ஒட்டாமல் இருப்பது என சுட்டிக் காட்ட..., அவளுக்கு தலையிறக்கமாகப் போயிற்று.

'இதை ராஜா பார்த்திருந்தால்...?' நிச்சயம் தனக்கு திட்டு விழுந்திருக்கும் என்பது திண்ணம்.

'என் கவனம் எங்கே சிதறுகிறது....?' அவளால் அனுமானிக்கவே முடியவில்லை. ஒப்புக்கு வேலை செய்வதை எப்பொழுதும் அவள் விரும்புவது கிடையாது. ஆனாலும்..., இது...?' யோசிக்க யோசிக்க தலை வலித்தது.

தாயிடம் பேசினாலே..., இந்த வேலை பிடிக்கவில்லை என கதறிவிடுவோம் என்பதாலேயே இப்பொழுதெல்லாம் பேசுவதை தவிர்த்து

விடுகிறாள். இன்று தாயின் தலை கோதல்..., அவரிடம் கொட்டிவிடத் தூண்டியது.

விழிகளை இறுக மூடிக்கொண்டு..., இரவு விளக்கை அணைத்துவிட்டு, படுத்துக் கொண்டாள். வினோதினிக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு..., "நீ சாப்பிடு..., நான் இப்போ வரேன்..." நிஹாசினியின் அறைக்குச் சென்றார்.

மகள் படுத்துக் கிடந்த விதமே..., அவள் உறங்கவில்லை என்பதை உணர்த்த, விளக்கை ஒளிரவிட்டு, கதவை சாற்றிவிட்டு அவள் அருகில் நெருங்கினார்.

"நிஹா..." மென்மையாக அழைக்க..., "அம்மா..." அழைத்தவள்..., படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள்.

"வேலை எப்படிம்மா போகுது...?" அவள் அருகில் அமர்ந்தார்.

"அதுக்கென்னம்மா..., ரொம்ப நல்லா போகுது...." இதற்குமேல் என்ன சொல்ல என்ற தடுமாற்றம் அவளிடம்.

"அம்மாகிட்டே அதைப்பற்றி சொல்ல எதுவுமே இல்லையா கண்ணா..., வர வர வீட்டில் பேசவே மாட்டேங்குற..., ஆபீஸ்ல ரொம்ப வேலை ஜாஸ்த்தியோ..., உன்னால் முடியலன்னா விட்டுடும்மா..., ஏன் இவ்வளவு கஷ்டப்படணும்...? உன் அம்மாவால் சிக்கனமா குடும்பம் நடத்த முடியும்..." அவரது பேச்சு..., அவளை வெடித்து சிதற வைத்தது.

"அம்மா...." தாவி தாயின் கழுத்தை கட்டிக் கொண்டவள்..., 'ஓ..' வென கதறித் தீர்த்தாள். இவ்வளவு நாளாக அடக்கி வைத்த அழுத்தம் அனைத்தும் அந்த நேரம் வெடித்துச் சிதறியது.

மகளை ஆதரவாக தாங்கிக் கொண்டவருக்கு..., சுஜாவிடம் பேசவேண்டிய அவசியம் புரிந்தது.

பகுதி - 17.

அன்றைய டீலர்ஸ் மீட்டிங்கில் பிசியாக இருந்தான் ராஜா. புதிதாகத் துவங்கியிருக்கும் பொட்டிகில் பிராண்ட் ஐடங்கள் தெரிவு செய்வதற்கான மீட்டிங் அது.

நேரடியாக கம்பெனி டீலர்களே வந்திருப்பதால்..., சதவீதக் கணக்கீட்டில் சற்று இழுபறி நீடித்துக் கொண்டே இருந்தது. அவர்கள் சொல்லும் டீலுக்கு ஒத்துக் கொண்டால்..., கடையின் லாபம் எவ்வளவு இருக்கும் என்பதில் சிறு தயக்கம் தோன்றவே..., "ஓகே..., நான் யோசிச்சு சொல்றேன்..." அவர்களை அனுப்பினான்.

"விக்னேஷ்..., இந்த டீல் சரியாகும்னு தோணலை..., எதுக்கும் ஒரு ரெண்டு நாள் போகட்டும்..., அவங்களாகவே இறங்கி வருவாங்க. அது வரைக்கும்..., அவங்ககிட்டே எந்த காண்டெக்டும் வேண்டாம்..., எனக்கு ஆபீஸ்ல கொஞ்சம் வேலை இருக்கு. நீங்க விஷயத்தை அப்பாகிட்டே சொல்லிடுங்க..., நான் கிளம்பறேன்..." கார் கீயை எடுத்துக் கொண்டான்.

அலுவலகத்தைப் பற்றி நினைத்தாலே..., நிஹாசினியின் நினைவுதான் முதலில் அவனைத் தீண்டியது. கூடவே..., இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சியும்.

அன்று அவளது ப்ராஜெக்ட்டை அவன் பார்வையிடுவதாக சொல்லியிருக்கவே, சற்று பதட்டத்தோடுதான் காத்திருந்தாள். அதை உணர்ந்தார் போன்று..., அவர்கள் கேபின் நுழைந்து, அவள் இருக்கையில் அமரும் முன்னர்..., "ஹேய் பியூட்டி கூல்..., எதுக்கு இந்த பதட்டம்...." அவளுக்கு மட்டும் கேட்கும் விதத்தில்..., உரைத்தவன், இருக்கையில் அமர்ந்தான்.

நிஹாசினியோ..., ரேவதியை அவசரமாகத் திரும்பிப் பார்க்க..., அவள் தன் கணினியில் மூழ்கியிருப்பதை பார்த்த பிறகுதான்..., அவளால்

இயல்பாக முடிந்தது.

'என்னிடம் மட்டும் ஏன் இப்படி...?' அவன் தன்னிடம் நடந்துகொள்ளும் முறையில், அவள் மனதுக்குள் எழும் வினா..., அன்றும் அவளை துரத்தியது. ஆனால்..., அது தனக்கும் பிடித்திருப்பதையும் எண்ணும் பொழுதுதான்..., மனதுக்குள் ஒருவித நடுக்கம்.

"ஹாசினி..., நீங்க முடித்த ப்ரொஜெட் எங்கே...?" அவன் கேட்க..., வேகமாக அந்த டிரைவை ஓபன் செய்து கொடுத்தாள். அடுத்த கால்மணி நேரம்..., அவள் செய்த ப்ரொஜெக்டில் அவன் மூழ்கிப் போக..., நகம் கடித்து துப்பிக்கொண்டு காத்திருந்தாள்.

ரேவதியோ..., தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்து..., அவன் சீட்டுக்குப் பின்னால் நின்று கணினித் திரையை வெறிக்க..., 'இதை நிஹாசினியா செய்தாள்...?' வியந்துதான் போனாள்.

"நிஹா..., அட்டகாசம் போ...., பெர்பெக்ட்டா செய்திருக்க. இதுக்குப் போயா..., என்கிட்டே ஹெல்ப் கேட்ட...? நிறைகுடம் தழும்பாதுன்னு சொல்வாங்களே, இதுதானா...?" அவள் வியக்க, அவள் வார்த்தைகளை நம்ப முடியாமல்..., தானும் அவளோடு சென்று நின்று பார்த்தாள்.

பார்த்தவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. நிச்சயம் இது அவள் செய்ததுதான்...., ஆனாலும்..., அதில் இருந்த பெர்பெக்ஷன்...,அவள் வேலையை முடித்துவிட்டு..., அதை ஓட்டிப் பார்த்தபொழுது இருந்ததை விட, கச்சிதமாக இருந்ததை அவளால் உணர முடிந்தது.

"ரொம்ப அருமையா செய்திருக்கீங்க..., எந்த குறையும் இல்லை. இதை அப்படியே அனுப்பிடுறேன்..." ஒரு பேன்டிரைவில் அதை காப்பி செய்தவன்..., கையோடு எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

'இல்ல..., அதை நான் செய்யலை...' சொல்லப் போனவளுக்கு அந்த

அவகாசம் கிடைக்கவே இல்லை.

"நிஹா..., ராஜா சார்கிட்டே இருந்து இப்படி ஒரு பாராட்டை வாங்குறது ரொம்பவே கஷ்டம்..., என்னோட மூணாவது ப்ரொஜெக்ட்க்குதான் இந்த பாராட்டு கிடைத்தது. உனக்கு..., முதல் முறையே கிடைத்து இருக்கு. திறமைக்கு கிடைத்த பாராட்டு..." தானும் வாழ்த்தினாள்.

ரேவதி தன் சீட்டுக்குச் செல்ல..., தன் இருக்கையில் அமர்ந்து..., அடுத்த வேலையைத் துவங்கியவளுக்கு, அதைச் செய்யவே முடியவில்லை.

எழுந்து அவனது அறைக்குச் செல்ல ஒரு தயக்கம்...., ரேவதி என்ன நினைப்பாள்...? ஒரு தடுமாற்றம்..., முள்ளின்மேல் அமர்ந்திருக்கும் உணர்வில், இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

அதே நேரம்..., "நிஹா..., ஸ்ரீதர் கிட்டே ஒரு சின்ன கிளாரிபிகேஷன் வேணும், நான் அவனை பாத்துட்டு..., அப்படியே டீ குடிச்சுட்டு வரேன்..." ரேவதி கிளம்பினாள்.

அவள் சென்ற மறு நிமிடம்..., ராஜா அவர்கள் கேபினுக்குள் வர.., தயக்கமாக அவன் முகம் நோக்கினாள்.

"ஹாசினி..., ப்ராஜெக்ட் சக்சஸ் பண்ண சந்தோஷத்தையே முகத்தில் காணோம்..." தன் தலையை சற்று சரித்து, குறும்பாக அவளை நோக்கினான்.

"சார்..., அது..., அந்த ப்ராஜெக்ட்.., நான் பண்ணதுதான்..., ஆனா..., அந்த பெர்பெக்ஷன்..., அதை நான் செய்யலை..., எனக்கு என்னோட வேலை எப்படி இருக்கும்னு தெரியும். வேற யாரோதான்..." அவள் தயங்கி இழுத்தவாறு அவன் முகம் பார்த்தவள், அவன் பார்வையின் தீட்சண்யம் தாளாமல், பார்வையை தழைத்துக் கொண்டாள்.

"அப்படியா...., நீ செய்தால் என்ன..., நான் செய்தால் என்ன.., எல்லாம் ஒண்ணு தானே..." அவன் உரைக்க..., சட்டென அவனை ஏறிட்டாள்.

இமைக்காமல்..., பார்வையில் சுவாரசியம் கூட..., அடிமேல் அடி வைத்து அவளை நெருங்க..., தன்னை அறியாமலேயே இருக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.
இதயம் படபடக்க..., வார்த்தைகள் தடுமாற, "நீங்க ஏன்...?" கேள்வியாக அவனை ஏறிட்டாள்.

"ஏன்னு உனக்குத் தெரியாதா...?" அவளிடமே திருப்பிக் கேட்க, அவள் இமைகள் பட்டாம்பூச்சியின் சிறகாய் படபடத்தது. பதில் சொல்லவோ..., அடுத்த கேள்வியை கேட்கவோ மூளை வேலை செய்யவில்லை. தனக்காக இதைச் செய்திருக்கிறான்...., இதயம் நனையும் உணர்வு.

'இதை ஏற்கவா..? தவிர்க்கவா...?' மனதுக்குள் போராட்டம். ஆனால்..., அவனைக் காண அலைபாயும் கண்களையும்..., அவன் நடமாட்டத்தை உணரத் துடிக்கும் செவிகளையும்..., அவன் இருப்பை உணரும் புலன்களையும் எப்படி அடக்க?

மனதுக்குள் சிறு போராட்டம். அதைவிட..., பிடிக்காத வேலையிலும்..., மனதுக்கு பிடிக்கும் வேலை சூழல்..., இந்த விந்தையை எப்படி எடுக்க? அப்படியென்றால்..., அனைத்திற்கும் மனம்தான் காரணமா? பிடிக்காததையும் மனம் ஏற்க பழகினால் பிடித்துவிடுமா? வேலையில் தன் ஈடுபாட்டை வளர்க்க முயன்றாள். அது அவனுக்காகத்தான் என்பது மறுக்க முடியாத உண்மை.

"இப்போ எந்த வேலையை செய்யற...? நான் பாக்கவா....?" கேட்டவன் அவளை நெருங்கி..., அவள் தோள் வழியாக கணினியைப் பார்க்க, அவன் மூச்சுக் காற்று அவள் தோளைச் சுட்டது. அதன் தகிப்பு தாளாமல், பட்டென இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

அவள் உயரத்துக்கு மீண்டுமாக குனிந்தவன்..., "பியூட்டி..." அவள் காதுக்குள் கிசுகிசுக்க..., அந்த அழைப்பு அவளை உருகச் செய்துகொண்டிருப்பது மட்டும் உண்மை.

அவன் இதழுக்கும்..., அவள் காதுக்கும் இடைவெளி இருந்தாலும்..., இல்லாத ஒரு அவஸ்த்தை. அவன் அழுத்தமாக இதழ் பதித்திருந்தால் கூட இப்படி உணர்ந்திருக்க மாட்டாளோ...., கைகளில் இருந்த முடி சிலிர்ப்பதை அவளால் உணர முடிந்தது.

அவஸ்த்தையான ஒரு உணர்வு...., எச்சில் விழுங்கிக் கொண்டாள். அவன் நெருக்கத்தை விட்டு விலகலாம் என்றாலோ..., அவன் தாடை..., அவள் தோளுக்கு சற்று மேலாக தாங்கி இருந்தது. அவள் எழுந்தால்..., நிச்சயம் அவனை இடிக்க வேண்டி இருக்கும்.

அவள் சற்று முன்னால் நகர்ந்து கொள்ள முயல..., அவள் அசைவை உணர்ந்தவன்..., "நைஸ்...?" அவன் உரைக்க..., அவன் எதையோ கேட்க முயல்கிறான் என எண்ணியவள்..., சட்டென அவன் பக்கம் திரும்ப.., அவளுக்கு மிக நெருக்கமாக இருந்தவனது கன்னத்தில், அவள் இதழ்கள் தழுவி மீண்டது.

இப்படி ஒரு நிகழ்வை எதிர்பாராத இருவருமே பதறி விலக...., "சா..சா...சா...ரி சார்..., நான் தெரியாமல்.." தடுமாறியவள், துள்ளி விலகவே.., விழப் போனவளை..., நொடியில் தாங்கினான்.

"கோடி கொடுத்தால் கூட கிடைக்காத பரிசு..., அதுக்குப்போய் சாரி சொல்ற..." அவன் இமைகளை சிமிட்ட, விழி விரிய அவனை அதிர்ந்து நோக்கினாள்.

"தேங்க்ஸ்..." அவள் முகத்தை தனக்கு மிகவும் நெருக்கமாக இழுத்தவன்..., அவள் மூக்கோடு மூக்குரச உரைக்க, மூச்சு விடவும் மறந்து உறைந்திருந்தாள்.

அவனை விலக்கு... என மூளை கட்டளையிட்டதை செயல்படுத்த, அவள் கரங்களால் முடியவில்லை.

அதே நிலையில் அவளை விட்டவன்..., மெதுவாக விலகிச் செல்ல, அவளால் இயல்புக்குத் திரும்பவே முடியவில்லை. தெரியாமல்தான்

என்றாலும், நடந்துவிட்ட நிகழ்வின் தாக்கம் அவளை சுலபமாக விடவில்லை.

ராஜாவின் பார்வையும், பேச்சும்..., செய்கையும் அவளுக்கு அவன் மனதை உணர வைக்கிறதுதான். ஆனால்..., தன் குடும்ப சூழல்..., தாய், தங்கை..., இவர்களை நினைக்கையில், காதல், திருமணம் என்பதை அவளால் நினைத்து கூட பார்க்க முடியவில்லை.

எவ்வளவு நேரம் அதே நிலையில் நின்றாளோ..., "என்னப்பா..., என்னவோ பேயறஞ்சா மாதிரி நிகற..." ரேவதியின் குரலில் தெளிந்தவள், தன் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

"நிஹா..., அந்த திரிடி எஃபக்டுக்கு..., கேமரா டைமென்ஷன் எல்லாம் நோட் பண்ணிட்டியா...? இல்லன்னா அது கொஞ்சம் காம்ப்ளிகேட்டடா இருக்கும்" ரேவதி அவளை வேலைக்குள் இழுக்க..., அதற்குள் மூழ்கத் துவங்கினாள்.

மிகவும் நிதானமாகத்தான் அவளால் அதைச் செய்ய முடிந்தது. நேரம் போவது தெரியாமல் அவள் இருக்க, நேரம் இரவு எட்டுமணியை நெருங்கவே, "நிஹா..., இட்ஸ் லேட்..., மீதியை நாளைக்கு பாத்துக்கலாம்..., முதல்ல கிளம்பு..." அவள் உரைத்த பிறகுதான், கணினியில் இருந்து பார்வையை திருப்பினாள்.

"ஓ..., மணி எட்டாச்சா..., டைம் போனதே தெரியலை...." தன் கணினியை நிறுத்திவிட்டு, கைப்பையை எடுத்துக் கொண்டு, அவளோடு எழுந்து கொண்டாள்.

"இதை என்னைக்கு முடிக்கணும்...?".

"இன்னும் ரெண்டு நாள் டைம் இருக்கு. ஆனால்..., அதுக்குள்ளே முடிப்பேனான்னு தெரியலை. ரொம்ப டைம் ஆகுது..." கவலையானாள்.

"ஹையோ..., இந்த திரிடி விஷயமே எனக்கு கொஞ்சம் அலர்ஜிதான்..., கொஞ்சம் பிசகினாலும் நம்ம காலை வாரி விட்டுடும்..." அறையை விட்டு

வெளியேறினர்.

"ராஜா சார் இருக்கார் போல..., சொல்லிட்டு கிளம்பலாம்..." ரேவதி முன்னால் நடக்க, வேறு வழியின்றி அவளைப் பின்தொடர்ந்தாள்.

ஏனோ அவனை ஏறிட சற்று சங்கடமாக உணர்ந்தாள். அவன் அறைக்குள் நுழைந்த ரேவதி..., "சார்..., நாங்க கிளம்பறோம்..., குட் நைட்..." அவள் சுலபமாக விடைபெற, நிஹாசினிக்கோ..., அவனை நிமிர்ந்து பார்ப்பதற்குள் கைகள் சில்லிட்டு போன உணர்வு.

பார்வையை அறைக்குள் சுழலவிட..., "ரூம் நல்லா இருக்கா...?" திடுமென அவன் கேட்க, நொடியில் அவனை நோக்கினாள்.

"நான்..., குட் நைட்..." தடுமாறியவள்..., வேகமாக உரைத்தாள்.

"நிச்சயமா..." அவன் பதில் கொடுக்க, 'என்ன சொன்னால்..., எதைச் சொல்கிறான் பார்....' சட்டென அவள் முகம் சிவந்து போவதை அவளாலேயே உணர்ந்து கொள்ள முடிந்தது.

"ஸ்வீட் டிரீம்ஸ்..." அதை அவன் உரைத்த விதம்..., 'ஆண்டவா...' அவள் மனதுக்குள் அரற்றினாள்.

அங்கிருந்து வெளியேறிவிட ஒரு நொடி கூட ஆகாது..., ஆனால்..., கால்கள் நகர மறுப்பதை அவள் என்ன செய்ய?

"போ..., ரேவதி ரொம்பநேரம் கீழே வெயிட் பண்ணா நல்லா இருக்காது" அவன் சொன்ன பிறகுதான், ரேவதியின் நினைவே அவளுக்கு வந்தது.

அவள் பாய்ந்து வெளியேற..., "பாத்து..." அவன் குரல் அவளைத் தொடர்ந்தது.

அடுத்த இரு நாட்கள் கூட..., சுவாரசியமாகக் கழிய..., சில நுணுக்கங்களை கற்றுக் கொடுக்கிறேன் என..., அவளை சோதித்தான்

அந்த பொல்லாதவன். ஆனால்..., அவன் கற்றுகொடுத்த நுணுக்கம்..., அவளுக்கு பெரும் உதவி செய்தது என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

அன்று அப்படித்தான்..., அவளுக்கு நெருக்கமாக நின்று அவன் சொன்ன திருத்தங்களை கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு..., அவனிடமிருந்து வந்த பெர்பியூம் மணம் நாசியைத் தீண்டி இம்சித்துக் கொண்டிருந்தது.

அதைவிட..., எதிரில் ரேவதி இருக்கும் வேளையில்..., அவன் செய்கை..., அவள் எப்படி எடுத்துக் கொள்வாள்..., என்ன நினைப்பாள்..., என்ற சங்கடத்தை அளிக்க..., "கொஞ்சம் தள்ளி நில்லுங்க..." அவனிடம் மெதுவாக உரைக்க,

கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமல்..., "நான் ரெடி..., ஆனால் உன்மேல் இடிப்பேனே பரவாயில்லையா...?" திருப்பி அதே குரலில் கேட்க, 'இவனிடம் சொல்வது வீண்...' எண்ணியவளோ..., அவன் அருகாமையில் உருகிக் கொண்டிருந்தாள்.

ரேவதியோ..., ராஜா நுணுக்கங்களை கற்றுகொடுப்பது ஒரு இயல்பான விஷம்போல்..., அமைதியாக தன் வேலையை பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைப் பொறுத்த வரைக்கும்..., ராஜா ஒன்றை நினைத்துவிட்டால், அதில் இருந்து பின்வாங்க மாட்டான் என்பது தெரியும்.

எப்பொழுது விநாயக்..., நிஹாசினியை ராஜா விரும்புவதாக உரைத்தானோ, அப்பொழுதே..., அவர்கள் இருவரும் கணவன் மனைவி என முடிவே கட்டிவிட்டாள்.
எனவே..., ராஜா நிஹாசினியோடு நேரம் செலவிடுவதை அவள் சாதாரணமாகவே எடுத்துக் கொண்டாள்.

அவள் அங்கிருக்க சங்கடப்படும் அளவுக்கு ராஜா ஒன்றும் நிஹாசினியோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பேசுவது கூட, வேலை விஷயமாகத்தான் இருக்கும் என தன் வேலையைப் பார்த்தாள்.

ராஜா சென்றுவிட்ட பிறகு கூட..., நிஹாசினிக்கு படபடப்பு குறையவே

இல்லை.

ராஜாவுக்கோ..., நிஹசினியின் தாயிடமிருந்து கிடைத்த சம்மதம்..., அவளை தன்னவளாகவே உணரச் செய்தது. எனவே..., சற்று தைரியமாகவே அவளோடு உறவாட துடித்தான்.

அதே நேரம்..., அவளை முறையாக பெண் கேட்டுச் சென்று, அவள் முன்னால் நின்று சர்ப்ரைஸ் கொடுத்து..., அந்த நிமிடம், அவளிடம் தன் காதலை வெளியிட விரும்பியவன், தன் வாய் வார்த்தையால் காதலை அவளிடம் சொல்ல மறுத்தான்.

நிஹாசினியோ..., வேலையை முடிக்கும் பரபரப்பில் இருந்தாள். மறுநாள் காலையில் அவனிடம் வேலையை முடித்ததுக் கொடுக்க வேண்டும் என்பதால், இரவு எட்டுமணிக்கு அவளால் வீட்டுக்கு கிளம்ப முடியவில்லை.

அவளுக்கு பதிலாக அவனே அதைச் செய்துவிட முடியும் என்றாலும், இப்பொழுதுதான் வேலையில் முழு மூச்சோடு மூழ்கும் அவளை தடுக்க அவன் முயலவில்லை. அதே நேரம்..., ஒற்றை பெண்ணாக..., இரவில், அலுவலகத்தில் அவள் தனித்திருப்பதை விரும்பாதவன்,

தன்னிடம் வேலைபெற்றுச் செல்ல வந்த ரேவதியைத் தேக்கியவன், "ரேவதி, இந்த பேன்டிரைவில் இருக்கும் விளம்பரத்தை கொஞ்சம் பார்த்துட்டு, எனக்கு சொல்லிட்டு போங்க. லேட்டானால்..., விநாயக்கை வீட்டில் டிராப் பண்ண சொல்றேன்.

"நீங்க தனியா கூட போக வேண்டாம். உங்களோட ஹாசினியும் வருவாங்க.." அவன் உரைக்கவே, மறுக்காமல் அதை பெற்றுக் கொண்டாள்.

மனதுக்குள்ளோ..., 'அவர் ஆள் தனியா இருந்துடக் கூடாதாம்..., அதுக்கு என்னவெல்லாம் கதையளக்கறார் பார்...' மனதுக்குள் நக்கலடித்தவள், தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

ரேவதி திரும்பி வருவதைப் பார்த்த நிஹாசினி..., "என்ன ரேவதி...,

போன வேகத்தில் வந்துட்டீங்க...? எதையாவது விட்டுட்டு போயிட்டீங்களா?" நிஹாசினி கேட்க,

"சார் ஒரு சின்ன வொர்க் கொடுத்தார்..., அதை பாக்க சொன்னார். லேட்டானால்..., நம்மளை வீட்டிலேயே டிராப் பண்ண ஏற்பாடு பண்றாராம்..." தன் சிஸ்ட்டத்தை இயக்கினாள்.

அவன் தனக்காகத்தான் ரேவதியையும் நிறுத்திவிட்டான் என, அந்த நொடி...,
நிஹாசினிக்குப் புரிந்தது. அவன் தன்மேல் காட்டும் அந்த அக்கறை..., அவன்பால் அவள் மனதை கட்டி இழுத்துச் சென்றது.

பகுதி - 18.

நிஹாசினியின் வீட்டு அழைப்புமணியை அழுத்திவிட்டு, சற்று பரபரப்பாக காத்திருந்தான் ராஜா. திருமணத்துக்கு துளசி சம்மதித்த பிறகு, இன்றுதான் அவர்கள் வீட்டுக்கு வருகிறான்.

அவரை நேரடியாக எதிர்கொள்ள சற்று தயக்கமாக இருந்தபொழுதும், அதைக் கடந்து, கால்கள் ஒரு இடத்தில் நிற்காமல், சிறு பதட்டத்தில் இங்கும் அங்கும் உலாற்றினான்.
கதவைத் திறந்த துளசி, அங்கே நின்ற ராஜாவைப் பார்த்தவர், "தம்பி..., வாங்க..." , அவனை அழைத்துச் சென்றார்.

இந்த நேரம் நிஹாசினி அலுவலகத்தில்தான் இருப்பாள்...,
அப்படியிருக்க, அவன் வீடு தேடி வந்திருக்கிறான் என்றால்..., நிச்சயம் அவன் தன்னைக் காணத்தான் வந்திருக்கிறான் என்பது புரிந்தது.

அவனுக்கு வேகமாக காபி தயாரித்தவர்..., அவன் கையில் கொடுத்து, அவன் அதை குடித்து முடிக்கும் வரைக்கும் அங்கே சிறு அமைதி நிலவியது.

"சொல்லுங்க தம்பி..." ஏதும் விஷயமாக பார்க்க வந்திருப்பானோ என்பதால் அவனிடம் வினவினார்.

"இல்ல..., எங்க கல்யாண பேச்சுவார்த்தையை ஒரு மாசம் தள்ளி வச்சுட்டீங்க. எனக்கு அதில் ஒண்ணும் வருத்தமில்லை. ஆனா..." எங்கே அவர் தவறாக எண்ணி விடுவாரோ என தயங்கினான்.

"அதான் சொல்லணும்னு வந்துட்டீங்களே..., பிறகு ஏன் தயங்கறீங்க..., சும்மா சொல்லுங்க...".

"இனிமேல் இது என் வீடும் தான்..., இங்கே இருக்கும் கஷ்டம், நஷ்டம் எல்லாம் என்னையும் சார்ந்ததுதான்...", அவன் சுற்றி வளைக்க,

"தம்பி..., நீங்க நேரா விஷயத்துக்கு வாங்க...".

"ஹாசினிக்கு..., எம்பிஏ க்கு காலேஜ்ல இடம் கிடைக்கிற மாதிரி இருக்கு. சோ..., அவ வேலைக்கு வர வேண்டாமே..." வார்த்தைகள் ஒவ்வொன்றையும் கோர்த்தான்.

அவன் வார்த்தைகள் சற்று இடம் மாறினாலும்..., அவன் சொல்ல வந்த விஷயம் தவறாக புரியப்படும் அபாயம் இருந்ததால், கத்திமேல் நடக்கும் மனநிலையில் மென்மையாக உரைத்தான்.

அவளை படிக்க வைக்க வேண்டும் என்பது பெரிய காரணம் என்றால்..., இந்த ஒரு மாதத்தில்..., அவளை அருகில் வைத்துக்கொண்டு, மூன்றாம் மனிதன்போல் விலகி இருப்பது சற்று கடினம் என்பது அடுத்த காரணமாக இருந்தது.

அவன் சொன்னதோடு..., சொல்லாத காரணத்தையும் யூகித்த துளசி, "நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. கல்யாணம் உடனே நடந்தால் கூட, ஒரு வருஷத்துக்கு அவ படிக்கப் போக வேண்டாம். நான் சொல்ல வரது உங்களுக்கு புரியும்னு நினைக்கறேன்...

"அதே மாதிரி...., இப்போதான் அவ தன்னோட வேலையில் கொஞ்சம் முழு கவனம் செலுத்த துவங்கி இருக்கா. அதை தட்டிக் கழிக்க வேண்டாமேன்னு பாக்கறேன். அதோட..., வேலைக்கு போக

வேண்டாம்னு சொன்னால்..., நான் அதற்கான காரணத்தையும் சொல்ல வேண்டி இருக்கும்...., அது உங்களுக்கு பரவாயில்லையா...?"
தன் காதலை தான்தான் அவளிடம் சொல்ல வேண்டும் என்ற அவன் எண்ணம் புரிந்தவராக சீண்டினார்.

அவர் பேச்சு..., அந்த ஒரு வருட இடைவெளி..., அது ஏற்படுத்திய தாக்கம்..., மனதுக்குள் ஒரு இன்ப நீரூற்று.

"பரவாயில்லை அத்த..., நீங்க சொல்றது எனக்குப் புரியுது. நான் சொன்னதில் உங்களுக்கு வருத்தம் ஒன்றும் இல்லையே...?" அவன் கேட்க, மெல்லியதாக சிரித்தார்.

"உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்லும். இதை எப்படி எடுத்துப்பீங்கன்னு எனக்குப் புரியலை..., சுஜாம்மா....", அவன் துவங்கவே,

"எல்லாம் சுஜா சொன்னாங்க. இப்படி ஒரு அம்மாவும்..., பிள்ளையும்..., எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. அண்ணியை அம்மாவா பார்க்கும் பிள்ளை..., என் பொண்ணை நிச்சயம் நல்ல விதமா பாத்துப்பீங்க என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு..." அவர் சொல்லவே..., இப்பொழுது அவன் முகத்தில் ஒரு அழகான புன்னகை உதயமானது.

"நிஜமாவே..., ரொம்ப டென்ஷனா வந்தேன்..., இதை எப்படி உங்ககிட்டே சொல்லப் போறேன்னு..., ஆனா..., இப்போ..."
நிம்மதி பெருமூச்சு விட்டான்.

"சரி..., வினோதினி எப்போ வருவா...?" அவன் கேட்க,

"அவ வர நேரம்தான்..." கடிகாரத்தைப் பார்த்தவர் உரைக்க, அவர்கள் பேச்சுக்கு சொந்தக்காரியே அங்கே பிரசன்னமானாள்.

"அம்மா..." தாயை அழைத்தவாறே அங்கே வந்தவள்..., அங்கே

இருந்த ராஜாவைப் பார்த்தவள்..., "மாமா..., நீங்க எப்போ வந்தீங்க...? அக்காகிட்டே உங்க லவ்வ சொல்லிட்டீங்களா...? எங்கே அவ...?" அவளது பேச்சே..., அவர்கள் இருவரும் இதற்கு முன்பும் பரிட்சயமானவர்கள் என்பதை துளசிக்கு உணர்த்தியது.

"வினோ..., உனக்கெப்படி இவரைத் தெரியும்...?" ஆச்சரியம் காட்டினார்.

"நீங்க சொல்லலைன்னா என்ன..., எனக்குத் தெரியாதுன்னு நினைச்சீங்களா? மாமாவே என்னைப் பாத்து இன்ட்ரடியூஸ் பண்ணிகிட்டாங்க. அப்படியெல்லாம் சந்தேகமா பாக்காதீங்கம்மா...,

"யார் வந்து பேசினாலும் உடனே பேசிடுவனா? அக்கா ஏற்கனவே அவ மொபைல்ல எடுத்த செல்பியில் இவங்களை நான் பாத்திருக்கேன். கூடவே..., அன்னைக்கு நீங்க அக்கா ஜாதகம்..., ராஜா..., சம்பந்தம்னு போன்ல பேசினதை வேற கேட்டேன்.

"அதான்..., மாமா வந்து பேசவே ரொம்ப ஹேப்பியா போச்சு...." அவள் குரலில் சந்தோசம் குமிழியிட்டது.

"என்ன ப்ரண்ட்ஸ் கிட்டே எல்லாம் சொல்லிட்டேன். இவர்தான் எங்க மாமான்னு..., அவங்களுக்கெல்லாம் ஒரே பொறாமை..." ஆசையாக அவன் அருகில் சென்று அமர்ந்தாள்.

"ஹப்பா..., எனக்கு வீட்டுக்குள்ளே இவ்வளவு பெரிய ஆதரவா....?" அவன் சிலாகிக்க,
அவன் அருகில் அமர்ந்த செய்கையை கண்டிக்கும் விதமாக, துளசி அவளை அழைக்க, அதை உணர்ந்த ராஜா..., "அத்த..., உங்க பொண்ணுங்க ரெண்டுபேரும் அவங்க அப்பாவை ரொம்ப மிஸ் பண்றாங்க. அவங்க மிஸ் செய்வதை கொடுப்பதுதான் என் முதல் வேலை..., அதாவது..., உங்களுக்கு ஒரு மகனாகவும்..., இவளுக்கு நல்ல சகோதரனாகவும் இருக்கத்தான் விரும்பறேன்.

"நம்மைத் தாங்க ஒரு தோள் இருக்குன்னு தெரிய வரப்போ இருக்கும் மாரல் சப்போட் அலாதியானது. வினோதினி எனக்கு ஒரு குட்டி தங்கச்சிதான்...." அவள் தலையைப் பிடித்து செல்லமாக ஆட்டினான்.

"ஐ..., இது கூட நல்லா இருக்கே..., அப்போ எனக்கு மேத்ஸ் சொல்லிக் கொடுங்க அண்ணா..." அவள் கேலியாக வினவ,

"வினோ..." துளசி கண்டிக்க, அவனோ..., "உனக்கு மேத்ஸ் சொல்லிக் கொடுக்கணும்னா கண்டிப்பா சொல்லித் தரேன்..., அதில் என்ன இருக்கு..." அவன் உண்மையாக உரைக்க, அவன் பேச்சில் திகைத்துத்தான் போயிருந்தார் துளசி.

'எவ்வளவு உயரத்தில் இருப்பவன்..., மிகவும் சாதாரணமாக தங்களோடு பழகுவது..., உரையாடுவது...., அவருக்கு மிகவும் வியப்பாகத்தான் இருந்தது.

"அவ சும்மா விளையாட்டுக்கு பேசறா..., நீங்க ஒண்ணும் அதை பெருசா எடுத்துக்காதீங்க. வினோ..., முதல்ல போய் ட்ரெஸ் மாத்திட்டு வா. வந்த வேகத்தில் உக்காந்தாச்சு..." அவளை கிளப்ப முயன்றார்.

"அத்த..., நான் நிஜமாகத்தான் சொன்னேன்...., அவ முதன் முதலில், கொஞ்சம் கூட யோசிக்காமல் கேட்ட ஒரு விஷயம்..., அப்போ அது, அவளுக்கு எவ்வளவு அத்தியாவசியமா இருக்கணும். என்னால் முடியாதுன்னா நான் டியூஷனுக்கு ஏற்பாடு செய்திருப்பேன்.

"ஆனா..., இது என்னால் முடியும். தினமும் ஒரு அரைமணி நேரம் வந்து சொல்லித் தரேன். இல்லன்னா..., உங்க ஸ்கூல் பக்கத்தில் இருக்கும் பார்க்ல, தினமும் பார்க்கலாம்..., ம்ஹூம்..., அது கூட சரி வராது. நான் டெய்லி கார் அனுப்பறேன்.

"அதில் ஏறி நீ எங்க வீட்டுக்கு வந்துடு. அங்கே வைத்து நான் உனக்கு பாடம் சொல்லிக் கொடுக்கறேன்..., எப்படி என் ஐடியா...? என் அம்மா கூட உன்னை பாக்கணும்னு சொன்னாங்க..." அவன் வேகமாக ப்ளான் போட,

அவசரமாக அதற்கு தடை விதித்தார்.

"இல்ல தம்பி..., அதெல்லாம் சரி வராது...".

"அம்மா..." வினோதினி சிணுங்க, "ஏன் அத்த..., நான் சொல்லிக் கொடுக்கக் கூடாதா...?" அவன் வினவ,

"உங்களுக்கு ஏற்கனவே இருக்கும் வேலைகள் போதாதா...? இதில் இதை வேற இழுத்து வைக்கணுமா...?"

"அம்மா..., அவங்க ஆபீசை ஒரு அரைமணிநேரம் விட்டு வருவதில் அவங்களே பீல் பண்ணல..., பிறகு நீங்க ஏம்மா..." அலுத்துக் கொண்டாள்.

"ஏய்..., ஏண்டி புரியாமல் பேசற..." அவர் உண்மையைச் சொல்ல முயல, ராஜாவின் ஒற்றை தலையசைப்பு அவரை தேக்கியது. கூடவே அவனது கெஞ்சல் பார்வையும் சேர்ந்து கொள்ள,

"தம்பி..., வாரத்தில் ஒருநாள்..., இல்லன்னா ரெண்டு நாள்..., நீங்க இங்கேயே வந்து அவளுக்கு மேத்ஸ் சொல்லிக் கொடுங்க" ஒரேயடியாக மறுக்க முடியாமல் சம்மதித்தார்.

அடுத்து வந்த நாட்கள் மிகவும் அழகாகவே கடந்தது. திருமண ஏற்பாடுகள் ஒரு பக்கம் நடக்க, வீட்டில் ஒரு வித்தியாசத்தை உணர்ந்த நிஹாசினி அதைப்பற்றி தாயிடம் விசாரித்தாள்.

துளசி, "உனக்கு வரன் பார்க்கலாம்னு நினைக்கிறேன்..." வீட்டின் நிலவரம் தெரியுமாகையால், அந்த பதிலில் சற்று திடுக்கிட்டுத்தான் போனாள் ஹாசினி.

"என்னம்மா விளையாடுறீங்களா...? இப்போ எதுவும் வேண்டாம்..., எதுவாக இருந்தாலும் வினோ ப்ளஸ்டு முடிக்கட்டும் பிறகு பாத்துக்கலாம்...." அழுத்தமாக உரைத்துவிட்டு விலகிச் சென்றாள்.

அறைக்குள் வந்தவளுக்கு . . . , இதயம் ஏனென்றே தெரியாமல் படபடத்தது. இமைகளை மூடிக் கொள்ள . . . , மூடிய இமைகளுக்குள், ராஜாவின் பார்வையும், 'பியூட்டி . . . ' என்ற அவனது குழைந்த அழைப்பும் செவிகளையும் நிறைக்க, திடுக்கிட்டு இமைகளைப் பிரித்தாள்.

ராஜாவின் பார்வையும் பேச்சும் . . . , அவன் மனதுக்குள் தான் இருப்பதை நூறு சதவீதம் உணர்த்த, ஒரு பக்கம் பரவசத்தையும், மறு பக்கம் சிறு பயத்தையும் ஒருங்கே விளைவித்தது.

வரன் பார்க்கிறேன் . . . , என்பதற்கே ராஜாவின் முகம் நினைவிற்கு வருகிறது என்றால் . . , தன் வாழ்வின் பிற்பாதியை அவனோடு கழிக்க அவள் விரும்புகிறாள் என்பது தானே அர்த்தம்.

அவள் தன் மனதுக்குள் பாரமாக உணரும் வேளையில் . . . , அவன் ஏற்படுத்தும் அருகாமை . . . . , வேலையில் தடுமாறுகையில் அவனது பங்களிப்பு, தாமதமாகும் நேரத்தில் . . . , ரேவதியை உடனிருக்கச் செய்யும் கரிசனை, தினமும் அரைமணி நேரமாவது தன்னோடு நேரம் செலவழிக்கும் அவனது பாங்கு . . . . , இதயத்தின் மூலையில் இடம் பிடித்திருந்தவன், இதயம் முழுக்க ஆக்கிரமிக்கும் உணர்வு.

அவனது லட்சியம், கனவை தன்னிடம் உரைத்தபொழுது, 'இதை ஏன் தன்னிடம் சொல்கிறான் . . . ?' என அவளுக்குள் யோசனை ஓட, அதை உணர்ந்தார் போன்று . . . ,
"உன்கிட்டே ஷேர் பண்ணிக்கணும்னு தோணிச்சு . . . , ஏன் கூடாதா . . . ?" அவன் ஆழமாக குரலில் வினவ, அவனும் தானும் வேறாகவே அவளுக்குத் தோன்றவில்லை.

'நீ எனக்கானவள் . . . , உன் உணர்வுகள், சந்தோசம், துக்கம் . . . , அனைத்தும் எனக்கு முக்கியம் . . . ' என அவன் உணர்த்தும் பாங்கு . . . , வார்த்தைகளில் சொன்னால்தான் காதலா? அவன் செய்கைகள் புரிய வைக்காததையா வார்த்தைகள் புரிய வைத்துவிடும் . . . ?' அவளுக்குள் எண்ணம் ஓடியது.

அதைவிட..., 'சினிமாவில் சாதிக்க வேண்டும்...' என அவன் உரைத்த பொழுது, அவன் கண்களில் தெரிந்த லட்சிய தாகம்..., ஒரு வேளை அதற்காகத்தான் தன்னிடம் காதலைச் சொல்ல தயங்குகிறானோ? தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

ஒரு சதவீதம் கூட..., தன்னை அவன் ஏமாற்றி விடுவான் என அவளுக்குத் தோன்றவே இல்லை. அவன் கண்களில் தெரியும் உண்மையும், அவள்மேல் காட்டும் உரிமையும்..., தன்னை அவனுக்கு உடைமையானவளாகவே அவளுக்கு உணர்த்தியது.

தாய் தன் விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்ய மாட்டார் என்பதால்..., திருமணம் பற்றிய பேச்சை அவள் அத்தோடு தன் நினைப்பில் இருந்து ஒதுக்கி வைத்தாள். உரிய நேரம் வருகையில், ராஜாவே அதற்கான முயற்சியில் ஈடுபடுவான் என அவள் மனம் அடித்து உரைத்தது.

எனவே, அதை அப்படியே விட்டுவிட்டு வேலைக்கு கிளம்பிச் சென்றாள்.

"குட் மார்னிங் நிஹா..." அவர்கள் கேபினில் ரேவதி அவளை வரவேற்க, தானும் அவளுக்கு காலை வணக்கத்தை உரைத்தவள், தன் கணினியை இயக்கினாள்.

"நிஹா..., அக்கவுண்ட் செக் பண்ணியா...? சேலரி கிரெடிட் ஆகி இருக்கா? முதல் மாச சம்பளம்..., எங்களுக்கெல்லாம் ட்ரீட் எங்கே...?" ரேவதியின் குரல் உற்சாகமாக ஒலித்தது.

"என்னப்பா சொல்ற...? இன்னும் ஒரு மாசம் முடியவே இல்லையே..., இன்னும் டூ டேஸ் இருக்கே..." அதற்குள்ளாக தான் இங்கே வந்து ஒரு மாதம் கடந்து விட்டதா? நம்பவே முடியாத திகைப்பு அவளிடம்.

"லாஸ்ட் வொர்கிங் டேக்கு முதல் நாளே சேலரி கிரெடிட் பண்ணிடுவாங்க. அதெல்லாம் நம்ம விநாயக் கரெக்ட்டா பண்ணிடுவான். இல்லன்னா ராஜா சார் அவனை ஒரு வழி பண்ணிடுவாரே..., எதுக்கும் நீ செக் பண்ணு.

சரி..., பேங்கல இருந்து உனக்கு மெஸ்சேஜ் வரல...?" கேள்வியாக இழுத்தாள்.

"இல்லையே..., இரு செக் பண்றேன்..." வேகமாக தன் அலைபேசியை கையில் எடுத்தாள்.
செக் செய்தவளது முகம் பட்டென ஒரு பிரகாசத்துக்குப் போக,
"என்ன..., வந்துடுச்சா? ட்ரீட் எப்போ....?" ரேவதி காரியத்திலேயே கண்ணாக இருந்தாள்.

"ட்ரீட்..., உனக்கு மட்டும் லஞ்ச் வாங்கித் தரேன்..., ஓகேயா...? சார்க்கு வேண்ணா ஒரு பேக்கட் ஸ்வீட் கொடுத்துடலாம்..." அவள் வீட்டு நிலை, அவளை இவ்வாறு பேசத் தூண்டியது.

அதை உணர்ந்தவள் போன்று..., "அட..., நான் ஈவினிங் ஒரு பப்ஸ், டூ தான் எதிர்பார்த்தேன். நீ பிரியாணியே வாங்கித் தரன்னா..., வேண்டாம்னு சொல்லுவேனா என்ன? எனக்கு டபிள் ஓகே..." சுலபமாக ஏற்றுக் கொண்டாள்.

"ரேவதி..., ஈவ்னிங் என்னோட டூ நகர்க்கு வர முடியுமா? வினோவுக்கு ஒரு சுடிதார் வாங்கணும் அதான்..., ரொம்ப நாளா கேட்டுட்டு இருக்கா. அது மட்டும் இல்லை...., இன்னும் டூ டேஸ்ல அவளுக்கு பெர்த்டே வருது..., அதான்...", ரேவதிக்கு ஷாப்பிங் செல்வது மிகவும் பிடிக்கும் என்பதால், தயங்காமல் கேட்டாள்.

"கரும்பு திங்க கூலியா...? நம்ம ராஜா சார் கடைக்கே போகலாம்..., நம்ம ஐடியை காட்டினால், கூட பத்து பெர்சன்ட் டிஸ்கவுன்ட் கிடைக்கும்..." உற்சாகமானாள்.

"ராஜா சார் கடை...? நீ எதைச் சொல்ற...?" புருவம் சுருக்கினாள்.

"என்னப்பா இப்படி கேக்கற...? சேகர் டெக்ஸ் தான்..., உனக்குத் தெரியாது..?" இப்பொழுது வியப்பது அவளது முறை ஆயிற்று.

"சேகர் குரூப்ஸ் மொத்தமும் இவங்களோடதுதான்..., ஆனா சாரைப் பாத்தா அப்படித் தெரியலல்ல..., ரொம்ப சிம்பிள்..." அவள் சொல்லிக்கொண்டே போக, நிஹாசினிக்கோ மயக்கம் வராத குறைதான்.

தரைமட்டமாகும் உணர்வு. இதயத்துக்குள் சுரீர் என்ற வலி..., பயம்..., கைகை கூட சற்று நடுங்கியது.

"நிஹா..., நான் பேசிட்டே இருக்கேன்..., நீ என்ன சைலன்ட் ஆகிட்ட...?" அவளை உலுக்கினாள்.

"ஹங்..., என்ன சொன்ன...?" திடுக்கிட்டு கேட்க, கண்களில் கண்ணீர் அவளை மீறி சொட்டியது.

"ஏய்..., அழறியா...? எதுக்கு...?" சற்று பதறினாள்.

"இல்ல..., இது சேலரி வந்த சந்தோஷத்தில்..." தன் கண்ணீரை வேகமாகத் துடைத்துக் கொண்டாள்.

"ஹப்பா..., நானும் பயந்தே போயிட்டேன்..., சரி நாம வேலையைப் பார்ப்போம். சாயங்காலம் பெர்மிஷன்ல போய்டலாம். விநாயக் கிட்டே சொல்லிடலாம்..." வேகமாக ப்ளான் போட்டாள். அவளை தடுக்கக் கூட தோன்றாமல், மனதுக்குள் உறைந்து போயிருந்தாள் நிஹாசினி.

'சேகர் குரூப்ஸ்...' கண்கள் திரையை வெறித்தாலும்..., அங்கே தெரிந்தவை அனைத்தும், சேகர் கடைகளே...., சென்னைக்குள்ளே அவர்களுக்கு இருக்கும் கிளை கடைகள் துவங்கி, கோவை, திருச்சி, கன்னியாகுமரி வரைக்கும்..., அவளுக்கு மூச்சடைத்தது.

இத்தனை நாட்களாக..., காலையும் மாலையும் அவன் வெளியே செல்வதை வைத்து..., அவன் கிளைன்ட்களை பார்க்கப் போவதாகத்தான் அவள் எண்ணியிருந்தாள். ஆனால்..., ரேவதி சொன்ன பிறகுதான், அவன் கடைகளைப் போய் பார்க்கப் போயிருக்கிறான் என்பதே அவளுக்குப் புரிந்தது.

‘மறைத்து விட்டான்...’ இந்த எண்ணம்தான் முதலில் எழுந்தது. கூடவே..., சிறு கோபமும்..., வருத்தமும்..., பயமும்..., கீபோர்டில் விரல்களை பதிக்க முடியாத அளவுக்கு நடுக்கம்.

இவை அனைத்தையும் விட, இதயத்தைக் கசக்கிப் பிழியும் அந்த வலி..., தந்தை இறந்த அன்று உணர்ந்த அதே வலி..., அழுகை..., அழுகை..., அழுகை மட்டுமே தன்னை தேற்றும் எனப் புரிய, வேகமாக எழுந்து, ரெஸ்ட் ரூமுக்கு கிட்டத்தட்ட ஓடினாள்.

அறைக்குள் நுழைந்து கதவை அடைத்தவளுக்கு, நெஞ்சை முட்டிக்கொண்டு துக்கம் பொங்கியது. ‘பழிவாங்கி விட்டான்..., முதல்நாள் அவனை தான் அடித்ததற்கு, தன் மனதில் அறைந்து விட்டான். அவன் உயரத்தை மறைத்து, மனதில் சலனத்தை விதைத்து விட்டான்...’ ஆற்றவே முடியாமல், கலங்கிய மனம் கண்டதையும் நினைத்து கலங்கியது.

அந்த நேரம்..., அவன் கண்களில் இருந்த உண்மையும், நேர்மையும் சுத்தமாக நினைவிற்கு வரவே இல்லை. ‘இது நடக்கவே நடக்காது...’ என்பது மட்டுமே புத்திக்கு உறைத்தது.

அவன் உயரம்..., தான் நிமிர்ந்து கூட பார்க்க முடியாது எனப் புரிய, நெஞ்சை அடைத்தது. ‘அப்பா...’ அவள் மனம் அரற்றியது.

கடந்த சில நாட்களாக சொர்க்கமாகத் தெரிந்த இடம்..., அதுவே தனக்கு நரகமாகத் தெரிந்தது. கண்ணீர் ஆறாகப் பெருக, நீரை அள்ளி, முகத்தில் அறைந்து கொண்டவளுக்கு..., உள்ளத்தின் ரணத்தையும் இப்படி கழுவ முடிந்தால் நன்றாக இருக்குமே என்றானது.

அதைப் பார்த்த ரேவதிக்கு..., தான் அவசரப்பட்டுவிட்டோமோ...? கலக்கமாகப் போயிற்று.

அதே நேரம் அங்கே வந்த விநாயக்.., “ரேவதி..., நிஹாசினியை எங்கே?” அவன் கேட்க, “இல்ல..., அவ ஷாப்பிங் போகணும்னு சொன்னா..., நான் கேஷுவலா ராஜா சார் கடைக்கு போகலாம்னு

சொன்னேன்...” அவள் முடிக்கும் முன்பே..,

“உன்னை இப்போ யார் அதைச் சொல்லச் சொன்னா? அவனே இப்போதைக்கு தெரிய வேண்டாம்னு நினைத்திருந்தான்..., இப்படி..., எல்லாத்தையும் போட்டு உடச்சுட்டியே...” அவன் கோபத்தில் சற்று மிரண்டுதான் போனாள்.

“அவளுக்குத் தெரியாதுன்னு எனக்கு எப்படித் தெரியும்...?” அவளும் கோபிக்க,

“இப்போ அவங்க எங்கே....?” ஏனோ அவனால் நிஹாசினியை மரியாதைத்தன்மை இல்லாமல் அழைக்க முடியவில்லை.

“ரெஸ்ட் ரூமுக்கு...” அவள் இழுக்க, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

அடுத்த நிமிடம், தன் அலைபேசியில் அழைத்து, ராஜாவிடம் விஷயத்தை உரைக்க, தான் உடனே கிளம்பி வருவதாக உரைத்து அலைபேசியை வைத்து விட்டான்.

ராஜா, அலுவலகம் வந்தபொழுது..., நிஹாசினி அழுது வீங்கிய முகத்தோடு, அதை சரிசெய்ய எடுத்த பெரும் முயற்சியோடும் அமர்ந்திருப்பதைக் கண்டான்.

‘எதற்காக இவ்வளவு கலக்கம் ஹாசினி..., என்மேல் இவ்வளவுதான் உன் நம்பிக்கையா...?’ அவளோடு மானசீகமாக உரையாடியவன், ரேவதியை ஒரு வேலை கொடுத்து கீழே அனுப்பியவன், அவளைத் தேடிச் சென்றான்.

ரேவதி அங்கிருந்து அகன்ற உடனேயே..., நிச்சயம் ராஜா அங்கே வருவான் என்பதை உணர்ந்த நிஹாசினி, அவன் வரவுக்காக காத்திருந்தாள்.

“ஹேய் பியூட்டி..., முதல் மாச சேலரி வாங்கிய சந்தோஷத்தையே முகத்தில் காணோம்..., ம்...” கேட்டவன், அவள் டேபிள் அருகே

நெருங்கினான்.

எப்பொழுதும்போல் அவன் அழைப்பு அவளை நெகிழ வைக்க, குழைந்த மனதை கடிவாளம் கொண்டு நிறுத்தினாள்.

அவள் கவனத்தையும் மீறி..., இதழ் துடிக்க, அதைப் பார்த்த ராஜா தவித்துதான் போனான். "ஹாசினி..." அவள் தோளைத் தொட முயல, அவள் வாயில் இருந்து உதிர்த்த வார்த்தைகளைக் கேட்டவனது கரம், கீழே இறங்கியது.

"என்னை பழிவாங்கிட்டீங்கல்ல..., அன்னைக்கு தெரியாமல் உங்கள் கன்னத்தில் அறைந்ததற்கு..., என் நெஞ்சில் அறைஞ்சுட்டீங்க இல்ல..." தொண்டை அடைக்க அவள் உரைக்க, இப்பொழுதும், அவளால் அவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. தன் கோபத்தில் கூட, தன் விழிகளால் அதை வெளிப்படுத்த முடியாத அந்த துக்கம்..., தன்னையே வெறுக்கச் செய்தது.

ஒரு வேளை..., அவன் கண்களைப் பார்த்தால்.., தன்னால் பேச முடியாது என எண்ணினாளோ...?

அவனால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அப்படி ஒரு நிகழ்வு நடந்தபொழுது கூட, அவள்மேல் கோபம் கொள்ள முடியாமல், அவளது இந்த செய்கைக்குப் பின்னால் இருக்கும் காரணத்தை ஆராய முயன்ற தன்னைப் பார்த்து..., அவள் சாட்டிய குற்றச்சாட்டு..., அவனுக்கு அதிகம் வலித்தது.

அவன் கை உயர்ந்ததையும்..., தன் வார்த்தைகளால்..., அது தோய்ந்து இறங்கியதையும் காணாமல் கண்டவளுக்கு..., இன்னும் அதிகமாக வலித்தது.

"என்னை நிமிர்ந்து பார் ஹாசினி..." அவன் குரலில் இருந்த பாவனை, அவளை நிமிர்ந்து பார்க்கத் தூண்டியது.

அவனது ஆழமான பார்வை..., நேர்மையான பார்வை..., அதில்

தொங்கி நின்ற நேசம்..., அவள் வார்த்தைகள் கொடுத்த வலி..., என அனைத்தையும் கண்டவளது நெஞ்சம் தவித்தது.

ஆனாலும்..., அவனது உயரம்..., இது சரி வராது என அவளுக்கு அழுத்தி உரைக்க, தவிப்பும், பயமும் கலக்க, அவள் பார்வை அவனிடம் கெஞ்சிற்று.

"என்னைப் பார்த்தல் பழிவாங்குபவன் போலா இருக்கிறது...?" அவன் கேள்விக்கு, அவள் உள் மனம், இல்லை என்று கதற, அதைச் சொல்ல முடியாமல் மௌனமானாள்.

"பணக்காரனாக இருப்பது அவ்வளவு பெரிய தப்பா ஹாசினி...?" மீண்டும் கேட்க, அவளிடம் அதே மௌனம்.

"இது எப்பொழுதும் சரி வராது..., என்னை இப்படியே விட்டுடுங்க. எனக்கு வேண்டாம்..." கைகூப்பி மன்றாட, துவண்டுதான் போனான்.

"நான் சொல்வதை..." அவன் தன்னை விளக்க முயல, "ப்ளீஸ்..., போதும்..., இனிமேல்..., இதற்குமேல்..., ப்ளீஸ்..." அவளது கதறல்..., அவன் நாவையும், கையையும் கட்டிப் போட்டது.

"சரி..., இனிமேல் நீயாக என்னிடம் பேசாமல்..., நான் உன்னை தொல்லை செய்ய மாட்டேன்..." நெஞ்சம் கனக்க உறுதியளித்தவன், அடுத்த நொடி, அங்கிருந்து அகன்று போயிருந்தான்.

பகுதி - 19.

கொடுத்த வாக்கை மிகவும் கச்சிதமாகவும், கண்ணியமாகவும் நிறைவேற்றினான் ராஜா. அதற்காக, நிஹாசினியிடம் பேசாமலோ, பார்க்காமலோ, உரையாடாமலோ, நெருங்காமலோ இல்லை. ரேவதியிடம் எவ்வாறு உரையாடினானோ, அந்த பேச்சு நிஹசினியிடமும் பேசினான்.

மிகவும் அவசியமான பேச்சுக்கள். அதைவிட அத்தியாவசிய இடைவெளி, நிற்கையிலோ, அவளது சிஸ்டத்தில் வேலை விஷயமாக பார்க்கையிலோ, அவள் எதிரில் நின்று பேசினான், பார்த்தான்.

அவளை அழைக்க வேண்டி இருந்தால்....., 'நிஹாசினி...' என முழுப் பெயர் சொல்லி அழைத்தான். அவளை நேருக்கு நேர், பார்வையில் சந்திக்கையில், கொஞ்சம் கூட அசையாத பார்வை பார்த்தான். குழையும் பார்வையோ..., அவளை வசீகரிக்கும் பார்வையோ..., அவளைக் கொண்டாடும் பார்வையோ..., அவளை தொல்லை செய்யும் பார்வையோ, அவளை கலைக்கும் பார்வையோ எதுவும் இருக்கவில்லை.

ஒரு விதத்தில் அதை எண்ணி அவள் மகிழ்ந்துதான் போயிருக்க வேண்டும். ஆனால்..., மகிழ முடியாமல்..., எதையோ இழந்ததுபோல் ஏன் உள்ளுக்குள் வலிக்கிறது.

அவன் வெகு சாதாரணமாக உரையாடி விலகுகையில், உயிரே விலகிச் செல்வதுபோல் உள்ளம் துடிக்கிறதே. அவன் கண்களுக்குள் எதையோ தேடி, தன் கண்கள் துழாவ முயல்வதேன்...?

அவன் தன்னை அன்னியமாகக் காண்பதை தாங்கும் சக்தி அவள் மனதுக்கு இல்லாமல், அனலில் விழுந்த புழுவாக உள்ளம் துடித்தது.

நிஹாசினி என்ற அவனது அழைப்பு கூட, அவனை விட்டு தூரமாக இருக்கச் செய்வதை அவளால் தாங்க முடியவில்லை. 'இது ஒத்து வராது, என்னை விட்டுவிடு என கதறியவள் அவள்தான். அவளது உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்தே அவன் விலகி இருக்கிறான்...' என்பது மனதுக்குப் புரிந்தாலும், அதில் நிம்மதி காண முடியாமல் இருப்பதேன்...,

பாலும் கசந்ததடி, படுக்கையும் நொந்ததடி என்பதுபோல்..., எதுவுமே அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவன் முகம் காணவென்றே அலுவலகம் வந்தாள். அவன் பாராட்டை பெற வேண்டும் என்றே வேலையில் இன்னும் அதிக கவனம் செலுத்தினாள்.

தெரியாதவற்றை தயங்காமல் அவனிடம் கேட்டாள்..., அவனும் மறுக்காமல் அதை சொல்லிக் கொடுத்தான்..., அவன் கற்றுக் கொடுத்த நுணுக்கங்கள்.., அவள் வேலையை மிளிரச் செய்தது மட்டும் உண்மை.

அவன் வாயிலிருந்து வரும் பாராட்டு கூட..., ஒட்டாமல் ஒலிப்பது போன்ற பிரம்மை..., இப்பொழுதெல்லாம் அவள், அவனை அதிகம் கவனிக்கிறாள். முன்பு முகம் பார்க்க தடுமாறுபவள், இப்பொழுதெல்லாம் அவன், அருகில் வந்தால்..., தன்னை மறந்து அவனை ரசித்தாள்.

வாரத்தில் நான்கு நாட்கள் பார்மலில் வரும் அவன், வெள்ளிக் கிழமைகளில் டிஷர்டில் வரும் அழகை, அவள் அனுமதியின்றியே கண்கள் படம் பிடித்துக் கொள்ளும்.

அவள் தூரத்தில் இருந்து தன்னை நினைத்தாலே, அவளை உணர்ந்து கொள்ளும் அவனால்..., அவள் தன்னை பார்வையால் தீண்டுவதை புரிந்து கொள்ள முடியாதா என்ன? ஆனாலும்..., அவள் கேட்டுக் கொண்டதற்காக அவளை விட்டு விலகி இருந்தான்.

அவளது 'ராஜா...' என்ற ஒற்றை அழைப்பு போதும்..., அவனை, அவள் காலடியில் வீழ்த்த..., அந்த அழைப்புக்காக தவமிருந்தான் என்பதுதான் சரியாக இருக்கும்.

அவள்மேல் கோபம் என்பதை விட..., அவள்மேல் வருத்தம்தான் அதிகம் இருந்தது.

தன் மேல் அவளுக்கு நம்பிக்கை வரவேண்டும்..., தன் காதலை அவள் முழுமையாக, அவளாகவே உணர வேண்டும் என அமைதி காத்தான். இப்போதைய அவள் பார்வைகளே..., அவள் மனதுக்குள் தான் இருப்பதை அவனுக்கு உணர்த்துகிறதுதான்.

அவளது தவிப்பு, பயம்..., அனைத்தும் இன்னும் இரண்டு வாரங்களில் ஒரு முடிவிற்கு வரப் போகிறதே..., அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்..., நம்பிக்கையோடு காத்திருந்தான்.

அதே நேரம்..., வாரம் இரண்டு முறை அவர்கள் வீட்டுக்குச் சென்று, வினோதினிக்கு மேத்ஸ் சொல்லிக் கொடுப்பதையும் அவன் தவிர்க்கவில்லை. அன்று அப்படி அவள் வீட்டுக்குச் சென்று, பாடம் சொல்லிக் கொடுக்கையில்...,

சின்ன வயதில் நிஹாசினி எப்படி இருந்திருப்பாள்..., என அறிய ஆவல் கொண்டவன், அவளது ஆல்பம் ஏதாவது இருக்கிறதா என அவளிடம் வினவ, உடனடியாக இரண்டு சிறு ஆல்பத்தோடு திரும்பி வந்தவள், "எங்க டேடி எங்க ஒவ்வொரு பெர்த்டேக்கும் ஒரு போட்டோ எடுத்து இதில் வைப்பாங்க..., சோ..., அக்காவோட ஏஜ் வைஸ் இதில் போட்டோ இருக்கு, பாருங்க..." அவன் கையில் திணித்தவள், அவன் சொல்லிக் கொடுத்த கணக்கை போடுவதில் முனைந்தாள்.

ஒவ்வொரு புகைப்படமாக ராஜா நோக்க..., நிஹாசினியின் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியும், குறும்புத்தனம், குழந்தைத்தனம் என அனைத்தையும் ஒவ்வொரு கட்டமாக அவள் கடந்துவந்த நிலைகள்..., என ஒவ்வொன்றும் அவனை வசீகரித்தது.

அதிலும்.., கல்லூரியில் அவள் சேர்ந்த முதல் வருடம் எடுக்கப்பட்ட புகைப்படம்..., அவனை அதிகமாக கவர்ந்தது. சுடிதாரிலும், புடவையிலும் என இரண்டு புகைப்படங்கள் இருக்க, அந்த புடவை கட்டிய புகைப்படம் அவனை அதிகமாக வசீகரித்தது.

பார்வையை திருப்பிக்கொள்ளவே முடியாமல் அவன் போராட..., "ஹையோ மாமா..., போதும்..., நீங்க விடுற ஜொள்ளில் போட்டோவே அழிஞ்சுடும் போல..., அதான் அவளே கூடவே இருக்காளே..., அவளையே புடவை கட்டச்சொல்லி ரசிக்கிறதை விட்டுட்டு, போட்டோவிலேயே ப்ளாட் ஆகிட்டீங்க..." அவன் தோள் தொட்டு உலுக்கினாள்.

சற்று அசடு வழிய பார்வையை திருப்பிக் கொண்டவன், அழகாய் வெட்கம் வேறு பட்டான். "ஏய்..., வினோ..." தாயின் குரல் காட்டமாக

வெளிவர, சட்டென பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

அந்த புகைப்படம் தனக்கே வேண்டும் என ஆவல் எழுந்தாலும், அதை எப்படிக் கேட்கவென தயங்கியவன், "எல்லா போட்டோவிலும் ஹாசினி ரொம்ப அழகா இருக்கா..." ஆல்பத்தை வினோவின் கையில் கொடுத்தான்.

"கேட்டீங்களாம்மா..., போட்டோ அழகா இல்லையாம்..., போட்டோவில் அவ அழகா இருக்காளாம்..., ஆண்டவா..., என்னைய இந்த கொடுமையை எல்லாம் பாக்க வைக்கிறியே..., ம்கும்..., எங்களுக்கும் போட்டோ ஆல்பம் இருக்கு..." அவள் இடை புக,

"வாயாடி..." அவள் தலையை செல்லமாக பிடித்து ஆட்டினான்.

அவர்கள் செய்கை நிச்சயம் அவருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அதற்கு காரணமும் இருந்தது..., ஒரு முறை, வினோதினி, அவள் சொல்வது உணராமலேயே..., அவனை அப்பா என்று அழைத்திருக்க..., அதை அவன் கூட கவனித்திருக்கவில்லை.
ஆனால்..., இவர்கள் பக்கம் கவனமாக இருக்கும் துளசி அதைக் கேட்டு கண் கலங்கியே விட்டார்.

அன்றுமுதல்..., அவர்களை கண்காணிக்கும் வேலையைக் கூட கைவிட்டுவிட்டார் என்றே சொல்லலாம். மகளும் சரி, அவனும் சரி..., ஒரு மகள், தந்தை உறவுக்குள் தங்களை மீறி சென்றுவிட்டதாகவே அவருக்குத் தோன்றியது.

இப்படி ஒரு மாப்பிள்ளை யாருக்கு கிடைக்கும்...? தன் கணவனே அவனை அனுப்பியதாக எண்ணினார்.

"வினோ..., நீ கொஞ்சம் உள்ளே இரு..." தாய் உரைக்க, அவர், அவனோடு தனியாக பேச விரும்புவதை உணர்ந்தவள், தன் புத்தகத்தோடு அறைக்குள் நுழைந்தாள்.

“என்ன அத்த..., ஹாசினி ரொம்ப டல்லா இருக்கறாளா?” தான் கேட்கும் முன்பே, தன்னிடம் கேட்ட ராஜாவை ஆச்சரியத்தோடு நோக்கினார்.

“அது ஒண்ணும் இல்லை..., நான் ராஜஷேகர்ன்னு அவளுக்கு தெரிந்ததில் வந்த குழப்பம்..., எல்லாம் சீக்கிரமே சரியா போய்டும். நாங்க என்னைக்கு முறையா உங்க வீட்டுக்கு பொண்ணு கேட்டு வரணும்னு சொன்னீங்கன்னா..., அன்னைக்கே எல்லாம் சரியாயிடும்...” அவன் உரைக்க, நிம்மதியானார்.

“ஓ.., நான் கூட..., வேற என்னவோன்னு பயந்துட்டேன்...” அவர் முகத்தில் நிம்மதி.

“இன்னும் ரெண்டு வாரம் தான்..., அடுத்து வர நல்ல நாள்ல விசேஷத்தை வச்சுக்கலாம்...” அவர்கள் பெண் பார்க்க வரும் நாளே..., பூமுடித்து நிச்சயம் செய்வதாக ஏற்கனவே முடிவு செய்யப் பட்டிருந்தது.

“அப்போ நான் கிளம்பறேன் அத்த. வினோ கிட்டே சொல்லிடுங்க...” அவன் பார்வை அங்கிருந்த ஆல்பத்தில் பதிய, அதை உணர்ந்தவர், எதுவும் சொல்லாமல் அமைதியானாலும், மகளை ஒரு நாள் புடவை கட்டச் சொல்ல வேண்டும் என்பதை குறித்துக் கொண்டார்.

அன்று அலுவலகத்தில் வேலை பிசியில் அனைவரும் இருக்க, புயலென அங்கே வந்தாள் கார்த்திகா.

“ப்ப்ப்ப்பா...” திடுமென ராஜாவின் குரல் இவ்வாறு ஒலிக்க, நிஹாசினி புருவம் நெரிக்க, ரேவதியோ..., “அட..., கார்த்திகா வந்திருக்கா போல..., இன்னும் கொஞ்ச நேரம் ஆபீஸ் களை கட்டும்...” முகம் முழுக்க புன்னகை.

‘யார் இந்த கார்த்திகா...?’ நிஹாசினிக்குள் எண்ணம் ஓடியது.

“அத்தான்...” அதற்கு விடையாக, கார்த்திகாவின் அழைப்பு செவியைத் தீண்ட, சட்டென ஒரு படபடப்பு அவளுக்குள்.

“ஏய்...., ஏய்...., வந்ததும் வராததுமா என்ன பண்ற...? விடுடி...” ராஜாவின் போலி அலறல் அதற்கு தூபம் சேர்க்க, படபடப்பு இப்பொழுது பொறாமையாக உருவெடுக்கத் துவங்கியது.

“ஆரம்பிச்சுட்டா போல...” ரேவதி அதை சாதாரணமாக எடுக்க, நிஹாசினிக்கு அவ்வாறு முடியவில்லை.

“நான் கேட்டது என்ன ஆச்சு...? எத்தனை நாளா கேட்டுட்டு இருக்கேன்...., நீங்க கண்டுக்காமல் இருந்தா விட்டுடுவனா...? அதான் இன்னைக்கு உங்க ஆபீஸ்க்கே வந்துட்டேன் பாத்தீங்களா...?”.

“என்ன கேட்ட...?”

“என்னது...., என்ன கேட்டேனா...?” அவளது கோபக் குரலும்...., கூடவே...., “ஆ...., ராச்சசி...., காதை விடுடி...” அவனது அலறலும் தொடர...., நிஹாசினியின் கவனம் தன் வேலையில் செல்லவே இல்லை.

“போச்சு...., டாம் அண்ட் ஜெர்ரி ஆட்டம் ஆரம்பிச்சுட்டா...” ரேவதியின் கமெண்ட்ரி வேறு, நிஹாசினியை பற்றி எரியச் செய்தது.

“அத்தான்...., விளையாடாதீங்க...., இப்போவே நான் கேட்டது எனக்கு வேணும்...” அவள் பிடிவாதம் பிடித்தாள்.

“கார்த்தி...., நாளைக்கு பண்ணித் தரேன்...., இன்னைக்கு எனக்கு இம்பார்ட்டென்ட் வொர்க் இருக்கு...”

“அதெல்லாம் முடியாது. இன்னும் பத்து நிமிஷம்தான் உங்களுக்கு டைம். நான் கேட்டது கிடைக்கல...., உங்க லேப்டாப் உங்களுக்கு சொந்தமில்லை...” அப்பட்டமான மிரட்டல் அவளிடம்.

“அய்யய்யோ...., யாராவது இந்த பிசாசுகிட்டே இருந்து என்னை காப்பாத்துங்க...”, அவன் அலற,

"யாரும் வர மாட்டாங்க..., என்ன அந்த யானைமுகன் வேண்ணா வருவான்..." அவள் உரைத்து முடிக்கும் முன்பு, விநாயகக் அங்கே பிரசன்னமானான்.

"யார் என்னை அழைத்தது...?" அவன் கேட்டு முடிக்கும் முன்னர்..., அவன் தலையை படாரென ஒன்று தாக்க,

"ஐயோ..., என்னை யாரோ கொல்லப் பாக்குறாங்க..." அவனும் அலற, ரேவதி விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்கியிருந்தாள்.

"யானைமுகா போய்டு..., இல்ல..., உன் உயிருக்கு நான் கேரண்டி இல்லை..." கார்த்திகா முறைப்பாக உரைக்க,

"அம்மாடியோ நீயா...? ராஜா..., நான் ஒன் அவர் பெர்மிஷன்டா..." அவன் வந்த வேகத்தில் ஓடியே போனான்.

"புத்திசாலி பொளச்சுட்டான்..." கார்த்திகா கமென்ட் அடிக்க, "விநாயக்..." ராஜாவின் அழைப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

"அத்தான் சீக்கரம்..." "முடியாது...." "முடியாதா..., அப்போ நான் கீழே போய் பாத்துக்கறேன்..." அவள் இருக்கையை விட்டு எழ, இன்றைக்கு யாரையும் வேலை செய்ய விட மாட்டாள் என்பது அவனுக்கு புரிந்து போனது.

அவளை அப்படியே விட்டுவிடுவான் என நிஹாசினி எதிர்பார்க்க, அதற்கு மாறாக, "ஏய் கார்த்தி..., இப்போ உனக்கு என்ன வேணும்..., சொல்லு செய்யறேன்..." ராஜா இறங்கிப் போனான்.

"உங்க மெயில் பாருங்க..., ஏற்கனவே எனக்கு பண்ணிக் கொடுத்த மாதிரி, இதிலும் பண்ணனும் அவ்வளவுதான்...".

"பழைய மெயில் எல்லாம் நோண்ட முடியாது..., நீ பிரெஷ்ஷா

அனுப்பு..." அவன் கேட்டதைச் செய்தவள், அவன் அருகில் சென்று நின்று கொண்டாள்.

"இப்போ எதுக்கு இப்படி உரசிகிட்டு நிக்கற..., தள்ளிப் போய் உக்காருடி..."

"உங்க மடியில் வேண்ணா உக்காருவேனே தவிர தள்ளிஎல்லாம் போக முடியாது..."

"என்னவோ போ..." அவன் அலுத்துக்கொண்டு அமைதியாகிவிட, நிஹாசினிக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லை.

"சரி..., நீங்க உங்க வேலையைப் பாருங்க.., நான் இப்போ வரேன்..." அவனிடம் சத்தமாக உரைத்தவள், "உங்க ஆள் எங்கே...? எனக்குப் பாக்கணும்..." அவனிடம் ரகசியம் பேச, அவனோ.., கண்களால் பக்கத்து கேபினை சுட்டிக் காட்டினான்.

"பாத்துட்டு வரேன்..." அவள் விலக, "ஏய்..., அவகிட்டே நானே இன்னும் எதுவும் பேசலை..., நீ போய் குட்டையை குழப்பி வைக்காதே..." அவளை எச்சரித்தே அனுப்பினான்.

"நான் ஒண்ணும் அவளை கடிச்சு முழுங்கிட மாட்டேன்..." நொடித்துக் கொண்டவள், பெண்களின் கேபின் நோக்கி நடந்தாள்.

அவனது உள் அறைக் கதவு வழியாக அவள் நுழைய, அவளைக் கண்ட ரேவதி, அகலமாகப் புன்னகைக்க, நிஹாசினியோ அவளை அளவிடும் பார்வை பார்த்தாள்.

தன்னோடு அவளை ஒப்பிட, நிச்சயம் தன்னை விட அழகிதான் என்பதை அவள் ஒத்துகொள்ளத்தான் வேண்டி இருந்தது.

அவளது மஞ்சள் நிறமும், சிவந்த இதழ்களும், அளவான வளர்த்தியும், உடற்கட்டும்..., அவளுக்கு சற்று கீழாகவே தன்னை எண்ணியது.

ஆனால்..., காதலனின் கண்ணுக்கு அவள்தான் பேரழகி என்பதை அவளுக்கு யார் சொல்லி புரிய வைப்பது.

கார்த்திகாவும் அந்த நேரம் அதைத்தான் செய்து கொண்டிருந்தாள்..., நிஹாசினியின் சற்று சிவந்த நிறம், வசீகரிக்கும் முகம், துறுதுறுப்பான கண்கள், அமைதியான அந்த அழகை எடை போட்டவள், நிச்சயம் ராஜாவுக்கு ஏற்ற ஜோடி என்றே தோன்றியது.

"ஹாய் ரேவதி..., வேலையெல்லாம் எப்படிப் போகுது...? இவங்கதான் இங்கே புதுசா ஜாயின்ட் பண்ணியிருக்கும் ஹாசினியா...?" கேட்டவள், ரேவதியின் இருக்கைக்கு எதிரில் சென்று அமர்ந்தாள்.

"ஆமா..., இவதான்..., நிஹா..., இவங்க கார்த்திகா..., சாரோட அத்தை பொண்ணு..." ரேவதி அறிமுகப்படுத்த, "ஹல்லோ..." மரியாதை நிமித்தம் அவளோடு உரையாடினாள்.

"வந்த உடனேயே உன் வேலையை ஆரம்பிச்சுட்ட போல..." ரேவதி சிரிப்பை அடக்க முயல,

"எனக்கு இன்னைக்கு அவ்வளவு வேலை வைக்கலை..., அத்தான் உடனே வேலையை ஆரம்பிச்சுட்டார்...." இமைகளை சிமிட்டி உரைக்க, பெண்கள் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"அதானே..., இல்லன்னா மட்டும் நீ விட்டுடுவியாக்கும்...." ரேவதி நொடிக்க, மீண்டும் சிரிப்பலை.

நிஹாசினியோ..., அவர்கள் பேச்சில் கலந்து கொள்ளாமல், தன்னை இயல்பாக காட்ட முயன்றவளாக, கணினித் திரையை வெறித்தாள். நிச்சயம் அதில் இப்போழுது என்ன இருக்கிறது எனக் கேட்டால் அவளுக்குத் தெரியாது.

'என்னவாம்...' நிஹாசினியை பார்வையால் சுட்டி வினவ, 'எனக்குத் தெரியாது...' ரேவதியும் உதடு பிதுக்கினாள்.

‘ஊடலோ...?’ இமைகளை தூக்கி..., உதட்டசைவில் வினவ, தலைக்குமேல் கையெடுத்து கும்பிட்டாள் ரேவதி. அதில் பக்கென சிரித்துவைக்க, ரேவதி கணினியை பார்வையிடும் சாக்கில் குனிந்து கொள்ள, கார்த்திகாவோ..., அதே சிரிப்போடு நிஹாசினியை நோக்கினாள்.

முகத்துக்கு முன்பாக சிரிக்கும் அவளிடம் எப்படி முகத்தை திருப்ப, மென்மையாக புன்னகைக்க, “இப்போதான் அழகா இருக்கீங்க...” சட்டென உரைக்க, சற்று திகைத்தாலும், அவள் புன்னகை விரியவே செய்தது.

“கார்த்தி...” ராஜாவின் குரல் ஒங்கி ஒலிக்க..., “அதுக்குள்ளே வேலையை முடிச்சுட்டார் போல..., நான் வரேன்...” துள்ளலாக எழுந்து ஓடினாள்.

“இங்கே பார்..., இது ஓகேயா...” அவன் கேட்க, ஆர்வமாக அதைப் பார்த்தவள், கொலைவெறி கொண்டாள்.

“அத்தான்..., நான் என்ன சொன்னா..., நீங்க என்ன செஞ்சு வச்சுருக்கீங்க...?” கிட்டத்தட்ட கத்தியவள், “உங்கள...” அவனை அடிக்கப் பாய்ந்தாள்.

அவனோ..., அவளுக்கு சிக்காமல் இருக்கையில் இருந்து எழுந்தவன்..., “நீ கேட்டதை தானே செய்தேன்...” அப்பாவியாக உரைக்க, “நான் இப்படியா கேட்டேன்...” அவனை அடிக்கத் துரத்தினாள்.

“ஏய்..., வேண்டாம்..., இது ஆபீஸ்..., நம்ம வீடு இல்லை...” அவன் டேபிளுக்கு அந்தபக்கம் நின்று சமாதானமாக உரைக்க,

“அதை நீங்க யோசிச்சு இருக்கணும்...” அவன் டேபிள்மேல் இருந்த சிடி அனைத்தும் மொத்தமாக அவன்மேல் பாய்ந்து சென்றது.

லாவகமாக அதில் இருந்து தப்பியவன்..., “சிடி எல்லாம் உடைக்காத..., அது எனக்கு ரொம்ப இம்பார்ட்டென்ட்...” அவளை எச்சரிக்க,

"அதைபத்தி எனக்கு கவலை இல்லை..., உரைத்தவள்..., "இந்த லேப்டாப் இருக்கதால் தானே இவ்வளவு வம்பு பண்றீங்க..." அதைத் தூக்க, பாய்ந்தோடி வந்தான்.

"ஐயோ என் லேப்டாப்..." அவன் அலற, "அதானே பாத்தேன்..., ராஜா சாராவது அவளை வம்பிழுக்காமல் இருப்பதாவது..., இன்னும் அவளும் அவர்கிட்டே உதை வாங்காமல் போக மாட்டா..." ரேவதிக்கு சாதாரணமாக இருக்கும் விஷயம், நிஹாசினிக்கோ..., படு பயங்கரமாக எரிந்தது.

'அவர் எப்படி அவளோடு விளையாடலாம்...?' ஒரு மாதிரி பொசசிவ் தலை தூக்கியது. கார்த்திகாவை கன்னம் கன்னமாக அறையும் வெறியே கிளர்ந்தது.

அவன் அலறலில் லேப்டாப்பை கீழே வைத்துவிட்டு, திரையை வெறிக்க, அதில்..., கார்த்திகா படு ஸ்டையிலாக புகை பிடித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்க்கவே..., இன்னும் கோபம் அதிகரிக்க..., வேகமாக அதை டெலீட் செய்தவள்..., "அப்போ..., நான் கேட்டதை செய்யாமல்..., இதைத்தான் செய்தீங்களா...?" விட்டால் அழுதே விடுவாள் போல் இருந்தது அவள் குரல்.

அதைப் பார்த்தவன்..., "ஏய் லூசு..., இப்போ எதுக்கு எமோஷனல் ஆகுற..., நீ கேட்டு என்னைக்காவது நான் மறுத்து இருக்கேனா...? அடுத்த பார் பாரு..." அவன் வேகமாக அவள் அருகில் வந்தவன், அவள் கேட்டதுபோல்..., அவளது புகைப்படத்தை ஆனிமேஷன் செய்திருப்பதை காட்டினான்.

இந்த படத்திலோ..., அவன் மவுசை கிளிக் செய்ய..., அவளது இமைகள் இரண்டும் சிமிட்டு..., இதழ்களில் ஒரு அழகான புன்னகை உதயமானது.

"வாவ்..., சூப்பர் அத்தான்..., இதை செஞ்சுட்டுதான் என்னை டீஸ்

பண்ணீங்களா...? உங்கள..." அவன் மேஜைமேல் இருந்த தடிமனான புத்தகத்தை எடுத்து அவனை மொத்த,

"ஏய்..., அதான் நீ கேட்டதை பண்ணிட்டேனே..., பிறகு ஏண்டி அடிக்கற...? லூசு..." அவள் அடிகளை சற்று நேரம் பெற்றுக் கொண்டவன்,

அவளது கையைப் பிடித்து முறுக்க..., "ஐயோ..., அம்மா..." அவள் கத்த, ரேவதியும், நிஹாசினியும், உமாவும் கூட அவள் அலறலில் அங்கே விரைந்தார்கள்.

மற்றவர்களைக் காணவே..., அவன் தன் பிடியை சற்று தளர்த்த, "ஹி..,ஹி..., ஹி..., சும்மா..." அவள் அசடு வழிய, மற்றவர்கள் சின்ன சிரிப்போடு அகன்றுவிட, நிஹாசினி மட்டும், அவனை குற்றம்சாட்டும் பாவனையில் ஒரு நொடி நின்று அவனை முறைத்தவள், அதன் பிறகே திரும்பினாள்.

"அத்தான்..., உங்க ஆஞ பார்வையில் அனல் அடிக்குது..." அவனிடம் கிசுகிசுக்க, "நீ வந்த வேலை முடிந்ததா..., கிளம்பு..." அவன் செய்த ஆனிமேஷனை, அவள் மொபைலுக்கு மாற்றியவன், இருக்கையில் அமர்ந்தான்.

நிஹாசினிக்கோ..., அவர்களின் விளையாட்டே மூளையைக் குடைந்தது. கார்த்திகாவின் உரிமையான அழைப்பு, விளையாட்டு..., கேலி, உரிமை, மனதின் ஓரத்தில் பெரும் பள்ளத்தை ஏற்படுத்துவதாய்.

'இப்படி ஒரு அத்தை மகள் இருக்கையில்..., என்னிடம் ஏன் வழிந்தாராம்...?' மனம் பொருமியது. 'அவள் பின்னாடியே போக வேண்டியது தானே...' அவனைச் சாடியது.
அதைவிட..., மனதில் இருந்த ரணத்தை மேலும் இது அதிகரிக்க, அங்கே இருக்க முடியாமல், மனம் முரண்டியது.

வீட்டுக்கு போய்விட அவள் முடிவெடுத்த நேரம்..., விநாயக் வந்து, ராஜா

அனைவரையும் அழைப்பதாக உரைக்கவே, வேண்டா வெறுப்பாக எழுந்து சென்றாள்.
அவர்களுக்கு முன்பாகவே மற்றவர்கள் அனைவரும் அங்கே இருக்க, அவர்களோடு இணைந்தார்கள்.

"ஹாய் கைஸ்..., இப்போ எதுக்கு உங்க எல்லோரையும் வரச் சொன்னேன்னா..., வருஷம் வருஷம் நடக்கும் அந்த ஆனுவல் மீட், இந்த வருஷம் ஔம்ஆர் ரோட்ல இருக்கும் திலக் ஹோட்டல்ல ஆர்கனைஸ் பண்ணி இருக்காங்க.

"இது ரொம்பவே யூஸ்புல்லான மீட்ன்னு உங்க எல்லாருக்கும் தெரியும். வர்ற வெள்ளிக்கிழமை மதியம் டூவோகிளாக் ஷார்ப்பா மீட் ஸ்டார்ட் ஆகும். முடிய எப்படியும் நயன் ஆகும்னு நினைக்கறேன். அன்னைக்கு மார்னிங் ஆபீஸ் லீவ்..., சோ..., ஐ வில் மீட் யூ தேர்..." இத்தோடு முடிந்தது என அவன் உரைக்க, அனைவரும் கலைந்து சென்றார்கள்.

"ராஜா..., அப்போ இன்னும் ரெண்டு நாள் நீ ஆபீஸ் வரப்போவதில்லையா..." விநாயக்கின் கேள்விக்கு,

"ஆமாடா..., கடையில் கொஞ்சம் வேலை இருக்கு..., அதைப் பாக்கணும் அதான்..." அவன் பதில், நிஹாசினியை மேலும் துவளச் செய்தது.

அவன்மேல் இருந்த கோபத்தையும் மீறி..., இரண்டு நாட்கள் அவனைக் காணாமல் எப்படி முடியும் என்பதே இப்பொழுது பிரதானமாகப் பட்டது.

வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற எண்ணம் கூட இப்பொழுது சுத்தமாக மறந்தே போய்விட்டது. மாலை வரை அவள் நேரத்தை நெட்டித் தள்ள, ரேவதி வெளியே செல்லவே..., அவனிடம் ஒரு வார்த்தை இயல்பாக பேசிவிட மனம் தவித்தது.

என்னவென்று பேச..., தன் பெரிதாக நினைக்கும் காரணம் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. ஆனாலும்..., ஆசை கொண்ட மனது,

அடங்க மறுத்தது. இரண்டுநாள்... அவனைக் காணாமல், அவன் குரலைக் கேட்காமல், எப்படி முடியும்...? மனம் தவியாய் தவித்தது.

மனதில் இருப்பதை சட்டென அழித்துவிட, அதென்ன காப்பி செய்த பேன்ட்ரைவா...?
அவள் எண்ணம் உணர்ந்தவன் போன்று..., அறை வாயிலில் நிழலாட, குளம் கட்டிய விழிகளோடு, அவனை ஏறிட்டாள்.

"நிஹாசினி..., ரெண்டு நாள் நான் ஆபீஸ் வர மாட்டேன். உனக்கு வேலையில் ஏதாவது சந்தேகம் என்றால்..., தயங்காமல் என்னை அழைக்கலாம். அது மட்டும் இல்லை..., எந்த உதவியாக இருந்தாலும்..., எப்பொழுது வேண்டுமானாலும் செய்ய காத்துக் கொண்டிருப்பேன்..." பார்மல் பேச்சுதான் என்றாலும், தன்னிடம் தனியாக உரைத்ததில், அவன் அக்கறையில், அன்பில் மனம் நனைந்தது மட்டும் உண்மை.

அந்த பார்மல் பேச்சைக் கூட, அவன் பேசிய விதம்..., அவனது அசையாத பார்வை..., உள்ளுக்குள் சர்வத்தையும் தடம் புரளச் செய்கிறதே..., அவள் அமைதியாக கேட்டுக் கொள்ள, "என் நம்பர் உன்னிடம் இருக்கிறது தானே...?" அவளிடம் கேட்க, மையமாக தலை அசைத்தாள்.

"தென்..., ஓகே..., பாய்..." ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் அவன் ஏற்படுத்திய இடைவெளி..., அவன் நெஞ்சிலே ஒட்டிக்கொண்டு கதறும் வேகத்தைக் கொடுக்க, அந்த எண்ணத்தை கடிவாளம் போட்டு நிறுத்தினாள்.

விடைபெற்றவனுக்கோ..., விலகிச் செல்லும் எண்ணமே இருக்கவில்லை என்பதை..., தேங்கிய அவன் கால்கள் அவளுக்கு உணர்த்த, அவன்மேல் இருந்த பார்வையைக் கூட பிடிவாதமாக நகர்த்திக் கொண்டாள்.

"என்மேல் ஒரு சதவீதம் கூட நம்பிக்கை வரவே இல்லையா ஹாசினி..." தன்னை மீறி அவன் குரல் நடுங்க..., அவளுக்கோ..., சர்வாங்கமும் ஒடுங்கியது.

‘இவர்மேல் எனக்கு நம்பிக்கை இல்லையா..., யார் சொன்னது..?’ சரேலென அவள் நிமிர, அவனோ..., அவள் மௌனம் தாங்கும் சக்தி அற்றவனாய் விலகியிருந்தான்.

அவன் நின்ற இடத்தின் வெறுமை அவள் முகத்தில் அறைய..., கண்களில் வழியும் நீரைத் துடைக்கக் கூட மனமற்று, மேஜை மேலே கவிழ்ந்து கொண்டாள்.

அவனோ..., போயே விட்டான். இரவில்..., அவள் கிளம்பிச் செல்லும் வரைக்கும் அவன் அலுவலகம் வந்திருக்கவில்லை. அது தெரிந்தும்..., அவன் அறையில், அவன் இருக்கையில் தானாகவே பாயும் கண்களை அவள் என்ன செய்ய?

அடுத்து வந்த நாட்கள்..., வெள்ளிகிழமை பற்றிய எதிர்பார்ப்போடே நகர்த்தினாள். இறுதியாக அவன் பேசிய பேச்சு..., குரலின் தன்மை, அவளை தூங்கக் கூட அனுமதிக்கவில்லை.

அவன் அலைபேசியில் தொடர்புகொண்டு..., அவன் சாதாரணமான குரலை கேட்டுவிட துடிக்கும் மனதை சமாதானம் செய்வதே பெரும் பாடாக போயிற்று.

வெள்ளிக்கிழமையும் அழகாய் விடிய..., ரேவதியோடு தானும் கிளம்பி விட்டாள். ஹோட்டலை அடைந்த பிறகு..., அவள் கண்கள் ராஜாவைத் தேடி அலை பாய..., சரியாக மீட்டிங் துவங்கும் நேரத்தில் அங்கே பிரசன்னமானான் ராஜா.

வேகமாக தன் கண்களுக்குள் சிறை செய்தாள் அவனை. கோட் சூட்டில்..., ஆண்மை மிளிர, ட்ரிம் செய்த தாடையுடன்..., தன் ஆறடி உயரத்துக்கும் நிமிர்ந்து..., அனாயசமாக அவன் ஹாலுக்குள் நுழைய, அங்கிருந்த யாரும் அவள் கண்களுக்கு புலப்படவே இல்லை.

கூட்டத்தில்..., தங்கள் டீமை தேடியவன், அவர்களை கண்டுகொண்ட

உற்சாகத்தில், கையை உயர்த்தி ஹாய் சொன்னவாறே..., தனக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தான்.

ஸ்ரீதரோடு எதையோ உரையாடியவாறு நிமிர்ந்தவன், நிஹாசினி தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாலும், அவள் பக்கம் திரும்பவில்லை.

"நிஹா..., மீட்டிங்கை கவனி..." ரேவதி உரைத்த பிறகுதான்..., தான் இன்னுமே ராஜாவை கவனிப்பதை உணர்ந்தவள், ஒரு சங்கடமான முகபாவத்தோடு அங்கே நடப்பவற்றை கவனிக்கத் துவங்கினாள்.

அங்கே..., அவர்கள் டெக்னாலஜியில் நுழைந்திருக்கும் புதுப் புது விஷயங்கள், பரிமாணங்கள் என அனைத்தும் விளக்கப்பட..., அதில் அனைவரும் மூழ்கித்தான் போக வேண்டி இருந்தது.

இடையிடையே கொடுக்கப்பட்ட, ஜூஸ், டீ..., பிஸ்க்கட்..., என அனைத்தும், அங்கிருப்பவரை சோர்ந்து போகாமல் இருக்கச் செய்தது.

அதே நேரம்..., ரேவதியின் அலைபேசியில் ஒரு அவசர அழைப்பு வர, அங்கிருந்து வெளியேறியவள், எதிர்பக்கம் சொன்ன விஷயத்தில் சற்று திடுக்கிட்டுத்தான் போனாள். அவளது தாய் வழுக்கி விழுந்து, கால் பிராக்ச்சர் ஆகி..., மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாக அவளது அண்ணன் உரைக்கவே..., ராஜாவுக்கு ஒரு குறும்தகவலை அனுப்பிவிட்டு, உடனடியாக கிளம்பி விட்டாள்.

இருந்த பதட்டத்தில் விஷயத்தை நிஹாசினியிடம் உரைக்க வேண்டும் என்பதே அவளுக்கு மறந்து போனது. மீட்டிங்கோ..., குறித்த நேரத்தில் முடியாமல், இழுத்துக்கொண்டே போக..., நேரம் பத்துமணியைக் கடந்த பொழுதுதான் நிறைவுற்றது.

இரவு உணவும் அங்கேயே வழங்கப்பட..., ரேவதி அங்கே இல்லாததை உணர்ந்த நிஹாசினிக்குள் பெரும் பதற்றம். அவளை நம்பித்தான் இவள் உடன் வந்ததே. அப்படி இருக்கையில்..., அவள் இல்லாத தனிமை அவளை மிரட்டியது.

அவளது அலைபேசிக்கு முயல, அதுவோ..., எடுக்கப்படாமல் ரிங் போய்க்கொண்டே இருந்தது.

"நிஹாசினி..., டின்னர் சாப்பிடப் போகாமல் இங்கே என்ன பண்றீங்க..., வாங்க..." விநாயக் அவளை அழைக்க,

"ரேவதி..." அவள் பார்வை சுழல,

"அவங்க உங்ககிட்டே சொல்லையா.., அவங்க அம்மாவுக்கு கால்ல பிராக்ச்சர்.., ஹாஸ்பிட்டல்ல சேத்திருக்கதா மெஸ்சேஜ் வரவே கிளம்பிட்டா..., உங்ககிட்டே சொல்லையா..., பதட்டத்தில் சொல்ல மறந்துட்டா போல...., சரி நீங்க வாங்க..." அவளை அழைத்துச் செல்ல, உடன் சென்றவளுக்கோ, உணவு தொண்டையை விட்டு இறங்குவேனா என சண்டித்தனம் செய்தது.

கண்கள் ராஜாவைத் தேட..., அவன் இருக்கும் அறிகுறியே இருக்கவில்லை.

ஆண்கள் அனைவரும்..., அங்கே இருக்கும் பாருக்குச் செல்லவே..., விநாயக்கும் அவர்களோடு இணைந்து கொண்டான். சாப்பாட்டு அறையில் இருக்கும் யாரையும் அவளுக்குத் தெரியவில்லை.

மெயின்ரோட்டுக்குப் போகவே..., ஒரு கிலோமீட்டர் நடக்க வேண்டும். அதுவும் நேரம் நள்ளிரவை நெருங்குகையில்..., தனிமையில் நடப்பதை நினைத்தாலே இதயம் தொண்டைக்குழியில் துடித்தது.

கால் டேக்சிக்கு அழைத்தால் கூட..., உடனடியாக வருவானா என்ற சந்தேகம் வேறு. அதைவிட..., ஒற்றை ஆளாக..., அதில் தனியே பயணிப்பதை நினைத்தாலே..., செய்தித்தாளில் அடிக்கடி இடம்பெறும் செய்தி வேறு, அவள் முன் தோன்றி மிரட்டியது.
பின்பக்கம் இருந்த ஹாலில் இருந்து வெளியேறி..., ஹோட்டலின் முன்பக்கம் வர..., அதற்குள்ளாகவே இடமே வெறிச்சோடிப் போயிருக்கும்

உணர்வு.

'ராஜா எங்கே போனார்...?' மனம் அவனை மட்டுமே அந்த இக்கட்டில் தேடியது.
அதற்குள்ளாகவே செக்கியூரிட்டி யாரைப் பார்க்க வேண்டும் என இரண்டுமுறை கேட்டிருக்க..., அவளைக் கடந்து சென்ற ஒன்றிரண்டு ஆண்கள் வேறு, அவளைப் பார்ப்பது போன்ற பிரம்மை.

தேகம் மொத்தமும் நடுங்க..., கண்கள் அழுகைக்குத் தயாராக, இதற்குமேல் யோசிக்க எதுவும் இல்லை..., ராஜாவை அழைத்துவிட வேண்டியதுதான்..., முடிவெடுத்தவள், கைகள் நடுங்க..., அவன் அலைபேசிக்கு முயன்றாள்.

முதல் ரிங்கிலேயே போனை எடுத்தவன்..., "அழாதே..." அவன் உதிர்த்த அந்த ஒற்றை வார்த்தை..., அவள் மனநிலையை அடியோடு மாற்றியது.

பகுதி – 20.

ஆனுவல் மீட்டுக்காக வந்த இடத்தில், ரேவதி பாதியிலேயே சென்றிருக்க, தனிமையில் தவித்துப் போனாள் நிஹாசினி . அந்த இக்கட்டான சூழலில் அவள் நினைவுக்கு வந்தவன் ராஜா மட்டுமே.

தன் அலைபேசியில் இருந்து அவனை அழைக்க. . . , அவன் உரைத்த அந்த ஒரு வார்த்தை, அவளுக்கு யானை பலத்தைக் கொடுத்தது.

'அப்படியென்றால். . . , அவர் இங்கேதான் இருக்கிறாரா . . . ?' பார்வை சுழன்று அவனைத் தேட , ஹோட்டலின் முன்பாக பார்க் செய்திருந்த ஒரு காருக்குள் சட்டென விளக்கு ஒளிர, அதில் பார்வைக்கு கிடைத்தான் ராஜா.

அவள் தன்னை கண்டுவிட்டதை உணர்ந்த அவன் , காருக்குள் இருந்து இறங்கி நிற்க, அவன் அருகில் அவள் கால்கள் விரைந்தோடியது.

"ராஜ். . ." ஒரு மாதிரி கேவலாக அவள் அழைக்க. . . , அவளது அழைப்பு அவனை வானத்தில் பறக்கச் செய்தது.

அவனைத் தெரிந்த அனைவருக்குமே அவன் ராஜாதான் . . . , முதல் முறையாக, அவனை 'ராஜ்' என அவள் அழைக்க , அந்த நேரத்திலும் அவன் முகம் சூரியனாய் ஒளிர்ந்தது.

"முதல்ல உள்ளே உட்க்கார் . . ." கார்க் கதவைத் திறந்தவன் , அவளை உள்ளே அமர வைக்க , அவளுக்கோ. . . , அழுகை வெடித்துக் கிளம்பியது.

சில நிமிடங்கள் வெளியே தாமதித்தவன் , அவள் அழுகை குறையும் வழியைக் காணோம் என்பதால் . . . , தானும் ஒட்டுனர் இருக்கையில் அமர்ந்தான்.

"ம்ச். . . , இப்போ எதுக்கு அழற. . . ? உன்னை தனியா விட்டுவிட்டு நான் மட்டும் போய்டுவேனா? அதுக்கு இந்த ராஜா இல்லாமல் போகணும் . . ."

சற்று கோபம் கலந்து உரைக்க , அவன் காதலின் அளவில் , அவளுக்கு மெய் சிலிர்த்தது.

அவன் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கம் அதிகமாக இருக்க , சட்டென அவன் வாயை தன் கரத்தால் மூடினாள் . ' அவன் இல்லாமல் போவதா. . .?' இரண்டுநாள் பிரிவிற்கே தான் துவண்டு போயிருக்க . . . , என்ன வார்த்தை சொல்லிவிட்டான்.

'ஆனாலும். . .' இந்த வினா அவள் விழிகளில் தொங்கி நிற்க , அவனை பரிதாபமாக ஏறிட்டாள்.

அதை உணர்ந்தவனாக. . . , "அதான் உனக்கு ஒரு தேவைன்னு வந்தப்போ என்னைத்தானே நீ தேடினாய் . . . , அது போதும் எனக்கு . எனக்கு வேறு எதுவும் தேவையில்லை . . ." அவனது புரிதலில் , அவள் கண்கள் பனித்தது. அவள் கரத்தை தன் வாயில் இருந்து விலக்கியவன்,

அவள் அழுவதைப் பார்த்து . . . . , " உன்னை அழாதேன்னு சொன்னேன். . ." அவன் வார்த்தைகளில் , கண்ணீரை கட்டுப்படுத்தத்தான் நினைத்தாள் . . . , ஆனால். . . , அது தானாக வழிகையில் அவள் என்ன செய்வதாம்?

"யூ ஆர் மைன் . . ." அழுத்தி உரைத்தவன் , அவள் கரத்தை ஒரு மாதிரி அழுத்தி விடுவித்தான்.

அவன் வார்த்தையில் அவள் தேகம் சிலிர்க்க , மனமோ லேசாக . . . , இத்தனைநாள் தன் மனதில் இருந்த குழப்பங்கள் அனைத்தும் விலகி ஓடும் உணர்வு.

அதையும் மீறி. . . , "எனக்கு பயம்மா இருக்கு. . ." தன் உணர்வை எப்படி வடிக்கவென்று தெரியாமல் அவள் உரைக்க,

"என்மேல் நம்பிக்கை இருக்கு தானே. . ." அவன் கேள்விக்கு, தயங்காமல் தலை அசைத்தாள்.

"அப்போ . . . , அது போதும் . . ." உரைத்தவன் . . . , தன் கைக்குட்டையை எடுத்து , காரில் இருந்த பாட்டில் நீரின் கார் ஜன்னல் வழியாக நனைத்து, அவளிடம் நீட்டினான்.

அவள் கேள்வியாக நோக்கவே . . . , "நீ அழுதால் நல்லாவே இல்லை . . ." படு சீரியசாக உரைக்க . . . , அதில் இருந்த குறும்பை கண்டுகொண்டவளுக்கு, இதழ் ஓரம் புன்னகை அரும்பியது.

அத்தோடு . . . , தன்னை மாற்ற அவன் எடுக்கும் முயற்சியும் புரிய , ஒரு தாலாட்டும் உணர்வு.

அவன் கைக்குட்டையை வாங்கி முகத்தை அழுந்த துடைத்துக் கொள்ள , அவளை இமைக்காமல் பார்த்திருந்தான் . அதில் இருந்து வந்த ஒருவித வாசனை . . . , அவளுக்குள் இறங்கி இம்சித்தது . அதை அவன் உணர்ந்து விடாதவாறு, முகத்தை வெளிப்பக்கம் திருப்பிக் கொண்டாள்.

முகத்தை துடைத்தவள், கைக்குட்டையை தன் கைப்பையில் திணிக்க, "ஈர கர்ச்சீப்பை ஏன் பைக்குள் வைக்கிற . . . , கொடு . . " கை நீட்ட,

"இல்ல . . . , யூஸ் பண்ணிட்டேன் . . . , வாஷ் பண்ணிட்டு கொடுக்கறேன் . . ." குரல் வெளியேற சண்டித்தனம் செய்தது.

"அப்படிப் பார்த்தால் . . ." அவன் வார்த்தையை முடிக்காமல் நிறுத்த , அவள் முகம் ஏன் இப்படி சிவந்து போகிறது ? நல்ல வேளை . . . , காருக்குள் இருக்கும் இருள் . . . , தன் சிவப்பை அவனுக்கு காட்டாது என மனம் நிம்மதி கொள்கிறது.

"அதெப்படி விட முடியும் . . . ? இப்போ எனக்கும் வேர்க்கிறதே . . ." குறும்பு கொப்பளிக்கும் அவன் வார்த்தை . . . , இதழ் கடித்து தன் தவிப்பை குறைக்க முயன்றாள்.

தான் அணிந்திருந்த 'கோட்' டை . . . , தன் இருக்கைக்கு பின்பாக அவன் போட்டிருக்க, ஏற்றி விட்டிருந்த முழுக்கை சட்டையும் . . . , அவன் கரத்தில்

அடர்ந்திருந்த முடியும் . . . , சட்டை பட்டனை மேல் இரண்டு பட்டன் கழட்டி விட்டிருக்க . . . , வெகு இயல்பாக இருந்த அவன் செய்கை . . . , அவன் நெஞ்சுக்குள் தன்னை புதைத்துகொள்ளச் சொல்ல , தன் நினைப்பு போகும் திசையில், சற்று மிரண்டுதான் போனாள்.

அவனோ . . . , அவள் தவிப்பை சற்றும் கண்டு கொள்ளாமல் . . . , அவள் கையில் இருந்த கைப்பையை பறித்தவன் . . . , தன் கர்ச்சீப்பை கைப்பற்றினான். அவனை தடுக்க அவள் எடுத்த முயற்சியை அவன் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

"வேண்டாம் . . . , கொடுங்க . . ." அவனிடமிருந்து அதை பறிக்க முயல , தன் சட்டைப்பையில் அதைத் திணித்தவன் . . . , " உன்னால் முடிந்தால் எடுத்துக்கொள் . . ." அவன் சவால் விட . . . , அவனைத் தொட்டு, அதை எடுக்கும் துணிவற்றவளாய், கைகளை பின்னால் இழுத்துக் கொண்டாள்.

அவள் வெட்கம் உணர்ந்தவனாய் . . . , சற்று உரக்கவே அவன் சிரிக்க , அவள் மனம் செல்லமாய் சிணுங்கியது.

"போகலாமா . . . ?" அவன் கேட்ட பிறகுதான் . . . , தான் வீட்டுக்குப் போகும் எண்ணமே இன்றி மாயையில் இருந்ததை உணர்ந்து வெட்கினாள்

'அம்மா தேடுவாங்களே . . .' தாய்க்கு அழைக்காதது அப்பொழுதுதான் நினைவிற்கு வர, வேகமாக தன் அலைபேசியை தேடினாள்.

"என்ன தேடற . . . ?" அவள் தேடல் உணர்ந்து அவன் கேட்க , " என் மொபைல் . . " அவள் உரைக்கவே . . . , தன் மடியில் இருந்து அதை எடுத்துக் கொடுத்தான்.

'இதெப்படி . . . ?' அவனை கேள்வியாக நோக்க . . . , "அழற அவசரத்தில் மொபைல் கீழே விழுந்ததை கூட நீ கவனிக்கலை . . ." தண்ணீர் பாட்டிலை எடுத்த வேளையில், அதை அவன் கைப்பற்றியிருந்தான்.

முதல் வேலையாக தாய்க்கு அழைத்தவள் . . . , தான் ராஜாவோடு வருவதாக உரைக்கவே . . . , பத்திரமாக வரச் சொல்லிவிட்டு அலைபேசியை வைத்தார் துளசி.

தாயின் சாதாரண பேச்சு நிஹாசினியை சற்று குழப்ப . . . , அவளை அதற்குமேல் சிந்திக்க விடாமல் . . . , எதை எதையோ பேசியவாறு அவன் வர , அந்த சிந்தையே அவளுக்கு அற்றுப் போனது.

அவர்கள் வீட்டு வாசலிலேயே அவன் காரை நிறுத்த . . . , "தேங்க்ஸ் . . ." இறங்கிக் கொண்டவளுக்கு . . . , அவனுக்கு எப்படி தன் வீடு தெரியும் என்பதை சிந்திக்கும் நினைவே இருக்கவில்லை.

"குட் நைட் . . . , நாளைக்கு ஆபீஸ்க்கு லேட்டா வந்தால் போதும் . . ." காரை கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்.

அடுத்து வந்த நாட்கள் மிகவும் ரம்யமாக கடந்ததாகவே நிஹாசினிக்குத் தோன்றியது.

அன்று தன் வீட்டில் இறக்கி விட்டுச் சென்றவன் . . . , தன் வீட்டுக்குப் போனவுடன், " தூங்கி விட்டாயா . . .?" அலைபேசியில் முதல் வாட்ஸ்ஆப் மெஸ்சேஜ் அனுப்ப , அதைப் பார்த்தவளுக்கு . . . , அன்றைய தூக்கம் பறிபோனது மட்டும் உண்மை.

பதில் செய்தி அனுப்பவா . . . , வேண்டாமா . . . ? என்ற யோசனையிலேயே பத்து நிமிடங்கள் கடந்திருக்க . . . , "ம் . . ." என பதில் அனுப்ப . . . ,

"அப்போ சரி . . . , தூங்கு . . ." அவனது பதில் மெஸ்சேஜைப் பார்த்தவள் . . . ,

'தூங்குறவ எப்படி பதில் அனுப்புவாளாம் . . .' தனக்குள் கேட்டுக் கொண்டவள், அவன் ஆப் லைன் போனதைப் பார்த்துவிட்டு . . . , "நீங்க . . . ?" வேகமாக அவனை திரும்ப அழைத்தாள்.

"நான் தூங்கி ரொம்ப நேரமாச்சு . . ." பதில் அனுப்பியவன் அடக்கமாட்டாமல் அங்கே சிரித்துக் கொண்டிருக்க , இங்கே இவளது இதழிலும் ஒரு அழகான புன்னகை.

இதற்கு என்ன அனுப்ப . . .? அவள் சிந்திக்க , " சரி . . . , ரொம்ப நேரமாச்சு . . . , தூங்கு . . ." ஒரு தூங்கும் ஸ்மைலியோடு பேச்சை நிறுத்திக் கொண்டான்.

இருவரின் மனதுக்குள்ளும் ஒரு நிம்மதி . நீண்ட நாட்களுக்குப் பிறகு , இருவரும் நிம்மதியாகத் தூங்கினார்கள்.

அன்று துவங்கிய பேச்சு . . . , தொடர்ந்த நாட்களில் . . . , நள்ளிரவைத் தாண்டியும் நீடித்தது.

நாட்களும் அதற்குள் கடந்திருக்க . . . , மறுநாள் . . , அவளை பெண் பார்க்க போவதாக முடிவானது . தான் அவள் முன்னால் மணாளனாக சென்று நிற்கையில் . . . , அவளது ரியாக்ஷன் என்னவாக இருக்கும் . . .? சிந்திக்கவே தித்திப்பாக இருந்தது அவனுக்கு.

அன்று அலுவலகத்தில் . . . . , ராஜாவின் அறையில் அமர்ந்து , விநாயக் ஹெட் போனில் எதையோ கேட்டுக் கொண்டிருக்க , அதை வெடுக்கென பிடுங்கிய ராஜா . . . , தன் காதில் வைத்துக் கேட்டான்.

அவன் செய்கையை எதிர்பாராத விநாயக் . . . , " டேய் மச்சான் . . . , வேண்டாம் . . . " அவனைத் தடுக்க முயல , அவன் அலைபேசியையும் பறித்தவன், மீண்டும் அதை ப்ளே செய்தான்.

'அக்கா . . . , நேத்து நம்ம வள்ளி சீரியலைப் பாத்தீங்களா . . .? வள்ளி புருஷன் இப்படிச் செய்வான்னு நான் எதிர் பாக்கவே இல்லை . இப்படி ஆகிப் போச்சே . . . ' ஒரு குரல் ஒலிக்க . . . ,

'ஆமா . . . , எனக்கும் அதே நினைப்புதான் . . . , ராத்திரி தூக்கமே வரலன்னா பாத்துக்கோ . . .' இது விநாயக்கின் தாயின் குரல் என்பதை அவனால் அடையாளம் காண முடிந்தது.

இதற்குள்ளாக . . . , விநாயக் அவன் கையில் இருந்து அலைபேசியை பிடுங்க ஆனமட்டும் முயற்சிக்க . . . , அதற்கு இம்மி கூட அசைந்து கொடுக்கவில்லை ராஜா.

கூடவே . . . , தாடை இறுக . . . , கோபம் கொப்பளிக்க அவனை முறைக்க , இப்பொழுதோ . . . , அலைபேசியை பறிக்கும் முயற்சியை கைவிட்டுவிட்டு , " அப்படிப் பாக்காதடா மச்சான் . . . , இது சும்மா . . . " அவனை சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கினான் விநாயக்

அடுத்ததாக . . . , அந்த ஆடியோ இதேபோல் அடுத்த சீரியலுக்குத் தாவ . . . , " த்தூ . . . , இதெல்லாம் ஒரு பொழப்பு . . . , என்னடா இதெல்லாம் . . . " தன் காதில் இருந்து ஹெட்போனை கழட்டியவன் , அதை அவனை நோக்கி விசிறியடித்தான்.

"அது . . . , இல்லடா . . . , எங்க அம்மாவும் . . . , பக்கத்து வீட்டு ஆண்ட்டியும் எப்போ பாத்தாலும் பேசிகிட்டே இருப்பாங்களா . . . , அதான் . . . , அப்படி அவங்க என்னதான் பேசுவாங்கன்னு . . . , சும்மா தெரிஞ்சுக்கதாண்டா . . . , நீ சொன்ன பிறகு , நம்ம ஆபீஸ்குள்ளே இந்த வேலையை நான் செய்யிறதே இல்லடா . . . , என்னை நம்புடா . . . " தான் இப்படி செய்வது ராஜாவுக்கு சுத்தமாக பிடிக்காது என்பதால் . . . , பரிதாபமாக கெஞ்சினான்.

"அதுக்கு . . . , அவங்க பேசுறதை இப்படித்தான் ஒட்டு கேப்பாங்களா ?" கோபம் குறையாமல் கேட்டான்.

"இதை மட்டும் நம்ம ஆபீஸ்ல செஞ்சிருக்கணும் . . . " கடித்த பற்களுக்கிடையில் வார்த்தையை துப்பியவன் , " அப்படி இல்லை

என்பதால் உன்னை சும்மா விடுறேன் . . ." அவன் இதைச் சொன்ன பிறகுதான், விநாயக்குக்கு போன உயிர் திரும்பி வந்தது.

"பாத்ரூமில் இருக்கும் ஹீட்டர் ஷாக்அடிக்குது அதை உடனே மாத்தச் சொல்லி உன்கிட்டே சொல்லி எத்தனை நாள் ஆகுது . . .? தண்ணியில் தெரியாமல் கை வச்சாலே தூக்கி அடிக்குது . மழைக்காலம் வேற ஸ்டார்ட் ஆகிடுச்சு. . . , ஹீட்டர் இல்லாமல் முடியாது.

"சென்னையில் உலக அதிசயமா இந்த வருஷம் மழை கொஞ்சம் கொட்டுது. முதல்ல அதைப் பாருடா. . ." அவன் கத்த,

"இதோ. . . , இப்போவே மாத்த சொல்லிடுறேன் மச்சான் . நீ ஒண்ணும் டென்ஷன் ஆகாதே. . ." அவனை சமாதானப் படுத்தியவன், அவன் கண் முன்னால் இருந்து ஓடியே போனான்.

அன்று முழுவதும் . . . , ராஜாவின் பார்வையில் இருந்து தப்ப எண்ணியவன், ஹீட்டர் வேலையை நாளைக்குப் பார்க்கலாம் என ஒத்தி வைக்க முடிவெடுத்தான்.

எப்படியும் ஹீட்டரை பார்த்துவிட்டுத்தான் அதை ஆன் செய்வான் என்பதால், கொஞ்சம் அசட்டை செய்தான் . அதனால் ஏற்படப்போகும் விபாரீதத்தை அறிந்திருந்தால் அப்படி செய்திருக்க மாட்டானோ . . ?

அன்று மாலையில் நிஹாசினியை முறையாக பெண் பார்த்து நிச்சயம் செய்ய வரவிருந்தார்கள். மகளை அலுவலகம் அனுப்ப துளசிக்கு விருப்பமில்லை என்றாலும். . . , மதியம் தானே அவளை வீட்டில் கொண்டுவந்து விட்டுவிடுவதாக ராஜா சொல்லியிருக்கவே, அரை மனதாக சம்மதித்தார்.

கூடவே. . . , ராஜா ஒரு புடவையைக் கொடுத்து , அதை அவளை கட்டிக்கொண்டு வரச் சொல்லியிருக்க , அதை மறுக்க அவரால் முடியவில்லை.

அலுவலகத்துக்கு கிளம்பிக் கொண்டிருந்த மகளின் அருகில் வந்த துளசி , அவள் கையில் ஒரு புடவையைத் திணிக்க , தாயை கேள்வியாக ஏறிட்டாள்.

"இதென்னம்மா புதுசா . . . , எப்போ எடுத்தீங்க ? ரொம்ப அழகா இருக்கே. . ." ஆசையாக புடவையை கைகளில் வாங்கிக் கொண்டாள்.

"எப்போ எடுத்தா என்ன ? கட்டிக்கோ. . . ." அவள் கன்னம் வழித்தார் . கூடவே. . . , " இன்னைக்கு சாயங்காலமே வீட்டுக்கு வந்துடு . . . , கோவிலுக்குப் போகணும். . ." அவர் சொல்ல, புருவம் உயர்த்தினாள்.

"அம்மா. . . , வெளியே மழை கொட்டிகிட்டு இருக்கு . . . , இதில் புடவை வேற கட்டிக்கிட்டு எப்படி நான் போறதாம் . . . ?" புடவையின் அழகை ரசித்தவாறு செல்லமாக மறுத்தாள்.

"சென்னை மழை சீக்கிரமே விட்டுடும் . . . , நீ நம்பி கட்டிட்டு போகலாம். . ." தாயின் பேச்சில் இருந்த உண்மை புரிய , மறுக்காமல் கட்டிக் கொண்டாள்.

கூடவே. . . , தன்னை புடவையில் காண்கையில் ராஜாவின் முகம் காட்டும் வியப்பை காண ஆவல் கொள்ள , ஆசையாகவே அதை கட்டிக் கொண்டாள்.

அலுவலகத்துக்கு வருவதற்கு முன்பாகவே . . . , சற்று நனைந்துதான் போனாள். வெளியே மழை கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது . குளிர் உடலை வருத்தினாலும், அதையும் மீறி மனம் உற்சாகத்தில் திளைத்தது.

நினைவெல்லாம். . . , ராஜா எப்பொழுது வருவான் . . . , தன்னைக் காண்பான் என்பதிலேயே சுற்றி வந்தது.

ரேவதி வேறு ப்ரோஜைக்டை கொடுக்கச் சென்றிருக்க . . . , ராஜா வந்தவுடன் தன்னைக் காண வருவான் என , அவன் காலடியோசையில் கவனமானாள். மனமோ. . . , சற்று படபடத்தது.

அவள் எதிர்பார்த்த அந்த நிமிடம் வந்தே விட . . . , பார்வையோ. . . , தங்கள் அறைக்கும் , அவனது அறைக்கும் இடையே இருந்த பாதையில் பதிந்து மீண்டு கொண்டிருந்தது.

அறைக்குள் அவன் நடமாட்டத்தை உணரும்பொழுதெல்லாம் . . . , தேகத்தில் ஒரு மெல்லிய நடுக்கமும் , அதையும் மீறிய எதிர்பார்ப்பும் கிளர்ந்தது.

கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் கடந்த பின்பும் அவன் வராமல் போக , மெல்லிய கோபம் வேறு எழுந்தது.

வேலையிலும் மூழ்க முடியாமல், அதைச் செய்யாமல் இருக்கவும் முடியாமல் ஒரு அவஸ்த்தையான நிலையில் அவள் மூழ்கி இருக்க , முயன்று தன்னை வேலையில் மூழ்கடிக்கையில், யாரோ தன்னை பார்க்கும் உணர்வு.

சட்டென நிமிர்ந்தவள் , தலையை லேசாகத் திருப்பி வாசலைப் பார்க்க , கைகளை நெஞ்சுக்கு குறுக்காக கட்டிக்கொண்டு , ஆழமான பார்வையில் அவளை வெறித்துக் கொண்டிருந்தான் ராஜா.

விதம் விதமான சுடிதார்களில் அவளை ரசித்திருக்கிறான்தான் . ஆனால். . . , இந்தப் புடவையில் அவளைக் காண்கையில் . . . , தன் இளமை உணர்வுகள் தலை தூக்கும் உணர்வு.

இன்றுவரை இப்படி ஒரு உணர்வை அவன் தனக்குள் அனுமதித்ததே இல்லை. அவள் தன் மனதுக்குள் நுழைந்த பொழுது கூட , அவளுக்கு முதல் தேவையாக . . . , அக்கறை, பாதுக்காப்பு, அவள் நலன் . . . , இப்படித்தான் சிந்தனை போயிருக்கிறதே தவிர . . . , ஒரு ஆண்மகனாக , தன் சிந்தையை அவள்பால் செலுத்தியது கிடையாது.

ஆனால். . . , இப்பொழுதோ. . . , அவன் கண்கள் அவளை ரசிக்கத் தூண்டியது. ஒரு ஆணாக . . . , பெண்ணில் இருப்பவற்றை தேடத் தூண்டியது அவன் உணர்வு.

அவள் தன்னை பார்க்கவே . . . , கண்களை இமைக்க கூட மறந்தவனாய். . . . , பார்வையை அவள்மேல் அங்குலம் அங்குலமாக இறக்கினான்.

கண்களில் துவங்கிய அவன் பயணம் . . . . , அவள் இதழ்களில் நிலைத்து. . . , கழுத்தில் இறங்க , அவன் பார்வையில் கவனமாக இருந்தவள், தன் மேனியில் அவன் பார்வை நழுவியதைக் காணவே . . . , தன் இருக்கையில் இருந்து எழுந்தே விட்டாள்.

"என்னங்க. . ." இமைகள் படபடக்க, சற்று கலைக்கும் விதமாக அவனை அழுத்தி அழைக்கவே. . . ,

"பி. . . யூ. . . ட். . . டி. . . ." அவன் அழைப்பு . . . , ஆயிரம் பிரளயத்தை அவளுக்குள் விதைக்க , கால்களில் மெல்லிய நடுக்கம் . பிடிப்புக்காக மேஜை விளிம்பை பற்றிக் கொண்டாள்.

அப்படி அந்த வார்த்தைகளுக்குள் என்ன மாயத்தை ஒளித்து வைத்திருக்கிறான்?

அந்த நாலெழுத்து வார்த்தைகள் தனக்குள் ஏற்படுத்தும் மாயம். . . , அதைக் கேட்டாலே. . . , உள்ளங்கால்முதல், உச்சந்தலைவரை சரசரவென ஊரும் அந்த உணர்வுக்குப் பெயர்வைக்க அவளுக்கு எப்பொழுதுமே முடிந்ததில்லை.

முன்பாவது. . . , அவன்மேல் சிறு பயம் . . . , பெண்மைக்கே உரிய பாதுகாப்பு என அவள் மனம் அவனில் கவனம் பதிக்கும் . தனக்குள். . . , அவன்மீதான காதலை உணர்ந்த பிறகோ . . . , அவன்பால் நழுவிச் செல்லும் மனதை, அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தன் உணர்வுகள் அவனை எட்டிவிடக் கூடாதே என்ற தவிப்பில் . . . , சட்டென அவனுக்கு முதுகு காட்டி நின்றுகொள்ள , அவளது படபடப்பை, அவள் மூச்சுவிடும் வேகம் அவனுக்கு உணர்த்த, அவளை நெருங்கிச் செல்ல முயன்ற கால்களை மனம் கொண்டு கட்டி வைத்தான்.

"ஹாசினி . . . , ஐ பீல் லைக் கிஸ் யூ . . ." அவள் முதுகின் பின்னால் , ஏக்கமாக , தன் மனதை அவன் உரைக்க, தவித்துதான் போனாள்.

அவன், தன்னை நெருங்கி வந்து முத்தமிட்டால் , அதை மறுக்கும் எண்ணமோ, தடுக்கும் தைரியமோ தனக்கு இல்லை என்பதை அவள் உணர்ந்த நொடிஎன்றால் அது இதுதான்.

பதில் சொல்லாமல் இருக்க அவள் பெண்மை தயங்க , மறுப்பாக தலை அசைத்தாள்.

"ஐ நோ . . . , அதான் . . . , இங்கேயே நிக்கறேன் . . ." உன்னை நெருங்கினால், என் கட்டுப்பாட்டை இழந்துவிடுவேன் என அவன் சொல்லாமல் சொன்ன செய்தி . . . , ஏதோ சூறாவழிக்குள் தான் தவிக்கும் உணர்வு.

"ஒரே ஒரு ரிக்வஸ்ட் . . ." அவன் உரைத்து நிறுத்த , ' என்னவென்று அறிய அவனைத் திரும்பி பார்த்தாள்.

அவள் கண்களுக்குள் , தன் கண்களைக் கலந்தவன் , " இன்னைக்கு என் கிட்டே நெருங்கிவிடாதே . . ." அவன் குரல் ஏன் இப்படி மாறி ஒலிக்கிறது. அவன் நின்ற இடத்தை விட்டு ஒரு அடி கூட நகரவே இல்லைதான் . . . , ஆனாலும் அவள் மனம் ஏன் இப்படி தவித்துப் போகிறது . . ,

அவன் இதைச் சொன்னபொழுது . . . , அவன் நெஞ்சுக்குள் போய் புதைந்துகொள்ளச் சொல்லி , அவள் உணர்வுகள் ஏன் அவளை துரத்துகிறது . . . ?

"இப்போவே உன்னை என்னோட அழைச்சுட்டு போய்டணும் போல இருக்கு . . ." தன் தாடையை வருடியவாறு அவன் உரைக்க , 'வந்துவிடுகிறேன் . . . ' என சொல்லத்தான் அவளுக்கும் ஆசையாக இருந்தது.

வார்த்தைகள் வாயிலிருந்து வெளியேற மறுப்பதை அவள் என்ன செய்யி

ஒரு பெருமூச்சை வெளியேற்றியவன் . . . , அங்கிருந்து சென்றுவிட்டான் . அவன் சென்ற பிறகுதான் அவளால் இயல்பாக மூச்சு விடவே முடிந்தது

வெளியே கொட்டு மழைக்கு மாறாக . . . , உள்ளுக்குள் அவளுக்குள் வியர்வை பிரவாகம்.

அடுத்து வந்த மணித்துளிகள் எப்படி கடந்ததெனக் கேட்டால் அவளிடம் பதில் இல்லை . ஆனால் . . . , ஒரு மாதிரி . . . , அவஸ்த்தையும், சுகமும் கலந்த கலவையாக உணர்ந்தாள்.

ராஜாவின் பார்வையும் . . . , பேச்சும் ஏற்படுத்திய தாக்கம் . . . , மனதை விட்டு நீங்காமல் இம்சிக்க . . . , இதற்குமேல் இன்று வேலை செய்ய முடியாது என்பது அவளுக்குப் புரிந்து போனது.

இருக்கையில் இருந்து எழுந்தவள் , தயக்கமாக அவன் அறையை நெருங்க , இமைகளை மூடி , அவன் இருக்கையில் சாய்ந்திருப்பது அவள் பார்வையில் விழுந்து , புருவங்களை முடிச்சிட வைத்தது.

அவள் என்னவென்று கேட்கும் முன்பே . . . , " சொல்லு ஹாசினி . . . " இமைகளை பிரிக்காமலே தன் வரவை உணர்ந்த அவனை வியப்பாக ஏறிட்டவள் , அவனை நெருங்கிச் செல்வதா . . . , வேண்டாமா என்ற குழப்பத்தில் அங்கேயே தேங்கினாள்.

"என்ன ஆச்சு . . . ?" அவள் குரலில் சிறு தவிப்பை உணர்ந்தவன் , விழி திறந்து அவளை நோக்கினான்.

அவன் பார்வையில் களைப்பின் சாயல் இல்லை என்பதை அறிந்த பிறகே , அவள் இதயத்துடிப்பு சீரானது . அதை உணர்ந்தவளுக்கு , அவன்மேல் தனக்குள்ள நேசம் புரிவதாய். . . .

"கண்ணுக்குள்ளே ஒரு பியூட்டி வந்து இம்சை பண்றா . . , அதான் . . . , கண்ணை மூடி அவளை ரசிச்சுட்டு இருக்கேன் . . . " அவன் பதிலில் , தன் கீழிதழை பற்களால் கடித்தவள் . . . , ' இதற்கு என்ன பதில் சொல்ல . . . '

பார்வையை அவன்மேல் இருந்து விலக்கியவள் . . . , பக்கத்து சுவரில் பார்வையை பதித்தவள்,

"வீட்டுக்கு கிளம்பவா . . .?" கேட்கும் முன்பே . . . , குரல் தொண்டைக்குழியில் சிக்கி திணற , அவள் படபடப்பை ரசித்தவனாக , "வெளியே மழை கொட்டுதே . . . , எப்படிப் போவியாம் . . .?" சீண்டல் குரலில் வினவினான்.

"போய்டுவேன். . ." அவள் குரல் கெஞ்சிற்று.

"நானே ட்ராப் பண்றேன் . . ." தன் கார் கீயை எடுத்துக்கொண்டு எழ , அவனைத் தவிர்க்க மனமின்றி அமைதியானாள்.

அவள் முன்னால் செல்ல , அந்த நேரம் தனக்கு ஒரு அலைபேசி கால் வரவே, அதில் அவன் கவனம் செலுத்த , கீழே இறங்கியவள், வெளியே கொட்டும் மழையில் சற்று தேங்கினாள்.

ராஜா வர நேரமாகவே . . . , தன் குடையை விரித்தவள் , பஸ்ஸ்டாப் போய்விடலாம் என சாலையில் இறங்கி , நான்கு அடி எடுத்து வைத்திருப்பாள். எங்கிருந்தோ வேகமாக வந்த வாகனம் , ரோட்டில் தேங்கியிருந்த நீரில் படு வேகத்தில் இறங்கிச் செல்ல , அதில் இருந்த நீர் சொத்தென அவள் முகம், புடவை என அனைத்திலும் தெறித்து சிதறியது.

நிஹாசினியின் முகம் அருவருப்பில் சுழித்தது . அதற்குக் காரணம், மழை நீரோடு, அதில் இருந்த சாணியும் சேர்ந்து இருக்க , அதன் நாற்றத்தில் அவளுக்கு குடலைப் புரட்டிக்கொண்டு வாந்தியே வந்துவிடும்போல் இருந்தது.

மழையின் காரணமாக சாலை வேறு சற்று வெறிச்சென்று இருக்க , ஆனாலும் இப்படியே ராஜாவின் காரில் கூட ஏற முடியாது என உணர்ந்தவள், வேகமாக அலுவலக கட்டிடம் நோக்கி நடந்தாள்.

அதே நேரம் . . . , ராஜா காரோடு ரோட்டுக்கு வர , அவள் நிலையைப் பார்த்தவன், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் , வேகமாக காரில் இருந்து இறங்கி அவளை நோக்கி ஓடினான்.

"ஹாசினி . . , என்ன இது . . . ? ம்ச் . . . , இப்போ யார் உன்னை மழையில் இங்கே வரச் சொன்னா . . . ? அங்கேயே வெயிட் பண்ணியிருக்க வேண்டியது தானே . . . " மென்மையாக கடிந்தான்.

"சரி . . . , முதல்ல கார்ல ஏறு . . . " அவன் அவசரப்படுத்த , " இல்ல . . . " வேகமாக மறுத்தவள், அவன் நனைவதைப் பார்த்து, "நீங்க முதல்ல கார்ல ஏறுங்க, கோல்ட் ஆயிடப் போகுது . . . " அவனுக்கு குடை பிடிக்கலாம் என்றால், தன் நிலை அவளைத் தேக்க, அமைதியானாள்.

"நான் நனைந்தால் ஒண்ணும் ஆயிடாது. நீ ஏறு . . . ".

"முதல்ல இதையெல்லாம் கிளீன் பண்ணணும் . . . " புறம்கையால் தன் முகத்தை துடைக்க, அவள் முகமோ . . . , அருவருப்பில் சுருங்கியது.

"ஓகே . . . , என் ரூமில் இருக்கும் பாத்ரூமை யூஸ் பண்ணு . புடவையை மாத்திக்கிறதா இருந்தாலும் ஓகே . அங்கே என்னோட ஒரு செட் ட்ரெஸ் இருக்கும் . . . " அவள் தன் கார்ல் ஏற மறுப்பதால் , அவளை அறைக்கு அனுப்பினான்.

அவன் அறைக்குச் சென்றவள் . . . , தயக்கமாக அவன் பாத்ரூமுக்குள் புகுந்தாள். முதல் வேலையாக , நீரடித்து தன் முகத்தைக் கழுவியவள் , புடவையில் இருந்த அசிங்கத்தை சுத்தம் செய்ய , புதுப் புடவையில் கறை படிந்தால் போகாது என்பதால் , வேகமாக பார்வையை சுழற்றியவள் , அங்கே இருந்த சிறிய கபோடை திறக்க , உள்ளே இருந்த உடை , டவ்வலைப் பார்த்தவள் , தைரியம் கொண்டு , புடவையை அவிழ்த்து பக்கெட் நீரில் அமிழ்த்தினாள்.

புடவையை வேகமாக அலசியவள், கழுத்து, உடல் என சாணி நீர் இறங்கி இருப்பதைப் பார்த்தவள் , தானும் குளித்தால்தான் இந்த அருவருப்பு மறையும் என்பதால். . . , குளிக்க முடிவெடுத்தாள்.

பக்கெட் நீரில் நீர் எடுத்து சற்று கழுவியவள் , குளிர் நடுங்கவே , அங்கே இருந்த இன்ஸ்ட்டன்ட் ஹீட்டரைப் பார்த்தவள், அதை ஆன் செய்துவிட்டு, டேப்பை ஆன் செய்தது மட்டுமே அவள் நினைவில் இருந்தது.

அடுத்த நொடி. . . , அவள் ஷாக் அடித்து தூக்கி வீசப்பட, சுவற்றில் தலை மோத, மயங்கி சரிந்தாள்.

ராஜாவுக்கோ. . . , அவளை குளிக்க அனுப்பிவிட்டு , அங்கே இருந்த டவ்வலால் தன் தலையை துவட்டி முடிக்க , அப்பொழுதுதான், தன் அறையில் இருக்கும் ஹீட்டர் ஷாக் அடிக்கும் என்பதே நினைவிற்கு வர , காரை விட்டு இறங்கி அலுவலகம் நோக்கி ஓடினான்.

உமா அவள் இருக்கையில் இல்லாமல் போக , ஒருவித நிம்மதியில் தன் அறைக்குள் பாய்ந்தான். தன் பாத்ரும் கதவை மென்மையாக தட்டியவன் , "ஹாசினி. . ." பதட்டமாக குரல் கொடுக்க , அவள் பதில் குரல் கொடுக்கவில்லை என்கையிலே மொத்தமாக அரண்டு போனான்.

"ஹாசினி. . . , ஹாசினி. . ." சத்தமாக அழைக்க , அப்பொழுதும் அவளிடம் பதில் இருக்கவில்லை.

உதவிக்கு ஆட்களை அழைக்கலாம் என்றால் . . . , அவள் எந்த நிலையில் இருப்பாளோ. . .' என்ற எண்ணம் தேக்க , அவசரமாக தன் அறைக்கதவை தாழிட்டு வந்தவன் , ஒரே உதையில் அந்த பைபர் கதவைப் பிளந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

பார்வையைச் சுழற்ற , அவன் பயந்தது போலவே . . . , நிஹாசினி கீழே அலங்கோலமாக விழுந்து கிடக்க , " ஹாசினி. . ." பதறிபோய் அவளை நெருங்கினான்.

"ஹாசினி . . . , இங்கே பார் . . ." அவள் கன்னம் தட்ட , அவளிடம் அசைவே இருக்கவில்லை.

வேகமாக அவள் இதயம் துடிக்கிறதா என காதை அவள் நெஞ்சில் அழுத்தி பார்க்க, அது துடிப்பதை கேட்ட பிறகுதான், சற்று தெளிந்தான்.

வேகமாக அவளை கைகளில் அள்ளியவன் , தனக்கு ஓய்வுக்காக இருக்கும் அறையின் சோபாவில் சென்று அவளைக் கிடத்தியவன், அவள் கை காலை பரபரவென தேய்த்தான்.

அவனுக்கோ . . . , தன் உயிரே போய்விட்ட உணர்வு . . . , அவளுக்கு செயற்கை சுவாசம் அளிக்க , அவள் மூக்கை பிடித்தவாறு , அவள் இதழில் தன் வாயைப் பொருத்தி, தன் மூச்சுக்காற்றை அவளுக்கு அனுப்பினான்.

அவனுக்கு எந்தவித வேறு சிந்தைகளும் இருக்கவே இல்லை . அவளை காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற பதட்டம் . அவளுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதே என்ற தவிப்பு . . . , "ஹாசினி . . ." ஒவ்வொரு மூச்சுக் காற்றுக்கும் அவன், அவளை அழைத்தவாறு செயல்பட்டான்.

"இங்கே பாரும்மா . . . , கண்ணை முழிச்சுடு . . . , ஐயோ . . , என்னால் தாங்க முடியலையே . . ." உயிர் துடிக்க அலறினான்.

"ஹையோ . . . , எல்லாம் என் தப்புதான் . நான் உன்கிட்டே சொல்லி இருக்கணும் . . ." தன் உயிரே போய்விட்ட உணர்வு . ஆனாலும் முழு மூச்சாக அவளை விழிக்கச் செய்ய போராடினான்.

ஒரு கட்டத்தில் சிறு அசைவு அவளிடம் . அவள் அசைவை உணர்ந்தவன் , வேகமாக அவள் கன்னம் தட்ட , " ம் . . ." மெல்லிய முனகலோடு விழி மலர்த்த முயன்றாள்.

அவள் செய்கையைப் பார்த்த பிறகுதான் , அவனுக்கு போன உயிர் திரும்ப வந்தது. அவள் கழுத்தடியில் கை கொடுத்து , " ஹாசினி . . . , ஆர் யூ ஓகே . . ." பதட்டமும், தவிப்பும் போட்டிபோட அவன் வினவ , பதில்

சொல்லும் நிலையில் அவள் இல்லை என்றாலும் , அவனுக்கு பதில் கொடுக்க முயன்றாள்.

அவள் கண் விழிக்க முயன்ற பிறகே அவனது துடிக்கும் உயிர் நிலைக்குத் திரும்பியது. ஆவேசமாக அவள் முகம் முழுக்க முத்தமிட்டு தன் உயிர்ப்பை அவன் வெளிப்படுத்த , அவன் செய்கை அவளையும் உயிர்வரை தீண்டுவதாய். . . .

அவள் தெளிய முயலவே . . . , அதன் பிறகே . . . , அவ்வளவு நேரமாக அவன் கண்ணுக்குத் தெரியாத அவள் கோலம் , அவன் பார்வையில் விழ , சட்டென அவனுக்குள் ஒரு இமாலய மாற்றம்.

தன் கைகளுக்குள் இருந்த அவளது மதி முகம் . . . , காலைமுதல் தன்னை இம்சித்த அவள் அழகு . . . , எதையும் சிந்திக்காமல் , தன் இதழ்களை அவள் இதழில் புதைத்துக் கொண்டான்.

ஒரு முத்தத்தோடு விலகிவிட எண்ணிய அவனது உணர்வுகள் . . . , அது முடியாமல் அவளுக்குள் மூழ்கிவிடத் தூண்டியது.

அவன் கரங்கள் அவளை உணர , மெல்லிய மயக்கத்திலும் , அவன் தன்னிடம் நடக்கும் முறை அவளை விழிப்புக்கு கொண்டு செல்ல , "ம். . . , ம. ." மெல்லியதாக தன் மறுப்பை வெளிப்படுத்த , அதை உணரும் நிலையை அவன் கடந்திருந்தான்.

எந்த நொடி , அவளுக்குள் மூழ்க துவங்கினான் என்றே அவனுக்குத் தெரியவில்லை. அவன் இதழ்கள் அவள் முகம் முழுக்க தன் முத்திரையைப் பதிக்க, கரங்களோ. . . , தன்னவளை கொள்ளையிடத் துடித்தது.

"ஹாசினி. . . , ஹாசினி. . . , ஹாசினி. . ." அவன் இதழ் பிதற்ற , "ராஜ். . ." அவள் இதழ்கள் மறுப்பாக அழைக்க , அவனுக்கோ, அந்த அழைப்பு முன்னேறச் சொல்லியது.

"உன் ராஜ் தான் . . ." அவள் இதழ்களை கவ்விக் கொள்ள , அவள் பெண்மை விழித்துக் கொண்டது.

மயக்கமும் சற்று தெளிய , " தப்பு ராஜ் . . . . , வேண்டாம். . ." அவள் முனக ,

"ப்ளீஸ் ஹாசினி. . ." அவளிடம் கெஞ்சினான்.

அவன் தலைக்குள் நுழைந்துவிட்ட காமம் , அவனை அவ்வாறு பேசத் தூண்டியது .

அடுத்த கட்டத்துக்கு அவன் தாவ . . . , அசைய மறுத்த தன் கைகளை நகர்த்தி , தன்மேல் இருந்து அவனை தள்ளிவிட முயன்றாள் . அவளது பலவீனமான வலு , அவனை ஒரு இன்ச் கூட நகர்த்த உதவவில்லை என்பதை அறிந்து துவண்டு போனாள்.

'இது சரியில்லை . . . , முறையில்லை. . .' அவள் பெண்மனம் போராட , மனதின் வலு , உடலில் சேர , அவனை முழு மூச்சாக விலக்க முயன்றாள் . ஆம் . . , அவளால் முயலத்தான் முடிந்தது.

அதற்குள்ளாகவே. . . , அவன் தன் தடையைத் தகர்த்து முன்னேற . . . , "ஆ . . . , அம்மா . . . , ராஜ் . . . , நோ . . ." இப்பொழுது குரல் உயர்த்தி அவள் கத்த , எங்கே அவள் குரல் வெளியே கேட்டுவிடுமோ என அவன் காமம் கொண்ட மனம் முரண்ட , அவசரமாக அவள் இதழ்களை தன் இதழால் மூடினான்.

அவள் கண்ணீர் கடைவிழியோரம் வழிய , " ரா . . ஜ் . . . , த . . ப் . . பு ப . . ண்றீ . . . ங்க . . ." இறுதி முயற்சியாக அவள் தன் இதழ் அசைத்து கலைக்க முயல , கூடவே , தன் மொத்த வலுவையும் இணை சேர்க்க , இன்னும் தன் வேகம் கூட்டினான்.

அந்த நேரம் . . . , தன் செய்கை . . . , அதன் விளைவு . . . , பெண்மனத்தின் போராட்டம் . . . , தன் நிலை , எதுவும் அவன் மூளையில்

உறைக்கவே இல்லை . மொத்தமாக அவளை ஆண்டுவிடு . . . , அவன் பேய் மனம் கட்டளையிட , அந்த நொடி அவன் அதற்கு அடிமையாகிப் போனது விதியின் சதியன்றி வேறென்ன?

ஒரு கட்டத்தில் அவள் விடாமல் போராட . . . , அவள் கண்ணீர் . . . , புலம்பல் என அனைத்தும் அவனை தேக்கினாலும் , அவளை விட்டு விலகும் கட்டத்தை அவன் தாண்டியிருந்தான்.

"எனக்கு இப்போ நீ வேணும் ஹாசினி . . . , இப்படியே நான் செத்துப்போனால் கூட பரவாயில்லை . எனக்கு நீ வேணும் . . ." முற்றாக பிதற்றியவன், அவள் மத்தியில் தொலைந்து போக , அவன் வார்த்தைகள் கொடுத்த அதிர்வு , ' இதற்குமேல் தடுத்தும் பயனில்லையே . . .' என்ற அவள் விரக்தி , கன்கள் கண்ணீரைக் கொட்ட , அவனை விலக்க போராடியவாறே, தன் தோல்வியை அவள் ஒத்துகொள்ள வேண்டி இருந்தது.

தன் உணர்வுகள் மொத்தமும் வடிந்த பிறகுதான் . . . , தான் செய்துவிட்ட செயலின் வீரியம் புரிய, அவளை விட்டு விலகியவன், தன் தலையிலேயே ஓங்கி அடித்துக் கொண்டான்.

அவன் விலகி எழவே . . . , தன் உடலைக் குறுக்கியவள் , கதறி அழத் துவங்கினாள் நிஹாசினி. இனி . . . .

1. பகுதி - 21.

அழுகை அழுகை அழுகை. . . . , நிஹாசினி குமுறி அழுது கொண்டிருந்தாள். நடந்துவிட்ட செயலின் தாக்கம். . . , தன் பெண்மை பறிபோன அதிர்ச்சி. தன் பெண்மையை காக்க வேண்டியவனே அதை கொள்ளையிட்ட அவலம். . . , அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ராஜாவுக்கோ. . . , தான் செய்துவிட்ட இமாலயத் தவறு புரிய, தன்னையே மீண்டுமாக அடித்துக் கொண்டவனுக்கோ. . . , குமுறி அழும் அவளை நெருங்கி சமாதானம் சொல்லக் கூட முடியவில்லை.

சமாதானப்படுத்தும் தவறையா அவன் செய்திருக்கிறான். . . , ‘ஹையோ. . . , என்ன காரியம் செய்துவிட்டேன். . . ’ அவன் மனமும் துடித்துப் போனது.

ஆனால். . . , நடந்த தவறை சட்டென திருத்த முடியுமா என்ன? நிஹாசினியின் அழுகை வேறு அவனை கொன்று கூறுபோட, மனசாட்சியோ அவனை காறி உமிழ்ந்தது.

ஆனாலும் தன்னவளின் அழுகை. . . , அவளை நெருங்கியவன், “ஹாசினி. . . , அழாதே. . . ”அவன் சமாதானப்படுத்த, அவன் கன்னம் பழுக்கும் அளவுக்கு மாறி மாறி அறைந்தவள், “அழாமல். . . . , நீங்க செஞ்ச காரியத்துக்கு சிரிக்கவா முடியும். . . ” குமுறினாள்.

அவள் அடியை தயக்கமே இல்லாமல் பெற்றுக் கொண்டவன், “இன்னும் நாலு அடி வேண்ணா அடிச்சுடு. . . , ஆனால் அழாதே. . . , என்னால் தாங்க முடியாது. . . ” அவளுக்கு அதிகம் தவித்துப் போனான்.

“அடிச்சுட்டா மட்டும். . . , ஏன் இப்படி பண்ணீங்க. . . , உங்ககிட்டே கெஞ்சினேனே. . . ” ஹோ வென கதற, அவளை இழுத்து தன் நெஞ்சோடு அணைத்தான்.

"என்னைத் தொடாதீங்க..." அவனை உதறித் தள்ளினாள்.

அவளது உதறலை எதிர்பாராத ராஜா..., சற்று தடுமாறி கீழே விழுந்தவன், மீண்டுமாக எழுந்து அவளை நெருங்கினான்.

"சரி தொடலை.." அவளை சமாதானப்படுத்த, அது அவளை சமாதானப்படுத்தாமல், காயப்படுத்துவது ஏன்? அவன் விலகலும் துடிக்க வைக்கிறதே.

அவள் மனம், காயம் கொடுத்தவனிடமே ஆறுதல் தேட முயலுகிறது..., அந்த நினைப்பே இன்னும் துன்பம் தர, கண்ணீர் ஆறாகப் பெருகியது.

"இப்போவே வா..., இப்படியே போய் கல்யாணம் செய்து கொள்ளலாம்...." அவள் அமைதியடைய வேண்டும் என துடித்தான்... தன்னை அவள் நம்ப வேண்டுமே என்ற பதட்டம்..., துடிப்பு, பயம்.., அனைத்தும் அவன் மனதைக் கவ்வியது.

"கல்யாணமா..., உங்களையா...? எந்த நம்பிக்கையில்...?" கோபமாய் வெடித்தாள்.

"அப்படிச் சொல்லாதே ஹாசினி..." அவள் வாயை மூடியவனுக்கோ.., அவள் தொடக் கூடாது எனச் சொன்னது மனதுக்குள் ஊர்வலம் போனது.

"வேற எப்படிச் சொல்ல...? உங்க ஆசையை தீத்துகிட்டீங்க இல்ல. என்னைப்பற்றி, என் உணர்வுகள் பற்றி, என் மனசு பற்றி கொஞ்சம் கூட கவலையே பாடலையே..." அனலில் விழுந்த புழுவாக துடித்தாள்.

"அப்படி இல்லடா..., ஒரு நிமிஷத்தில் என்ன நடந்ததுனே தெரியலை. எந்த சாத்தான் எனக்குள் புகுந்தான்னு புரியலை. உன் அழகு..." அவள் கண்களில் தெரிந்த கனலில் வார்த்தைகள் தானாக நின்று போனது.

அவள் பார்வையின் தீட்சண்யம் தாளாமல்..., தலை தானாக கவிழ்ந்து போக, "என்னை தப்பா நினைக்காதே ஹாசினி..., என் உயிர் இருக்கும்வரை உன்னை நான் கைவிட மாட்டேன்..." அவள் நம்பிக்கையை பெறத் துடித்தது அவன் ஆண்மை.

"இப்போ நடந்ததுக்கு என்ன சமாதானம் சொல்லப் போறீங்க...? நான் எப்படி வீட்டுக்குப் போவேன்? எப்படி என் அம்மாவின் முகம் பார்ப்பேன்..., என் தங்கையை எப்படி எதிர்கொள்வேன்..." அவனை எதார்த்தத்துக்கு, நடப்புக்கு இழுத்தது அவள் வார்த்தைகள்.

'ஹையோ..., என்ன செய்ய...?' அவன் தாயின் முகம் மனதுக்குள் மின்ன, தன் ஒவ்வொரு செய்கையும் அவரது வளர்ப்பை சுட்டிக் காட்டுவதால் தானே இத்தனை கட்டுப்பாட்டோடு
வளர்ந்தான்.

தவறு செய்ய சந்தர்ப்பம், சூழ்நிலை என எல்லாம் அமைந்தாலும், அவருக்காகத்தானே ஒழுக்கத்தோடு கற்பை காப்பாற்றி வந்தான். அப்படிப்பட்ட தானே..., தன் மனதுக்கு இனியவளின் கற்பை சூறையாடிய அகோரம்..., தெளிவாக புரிகிறதே...,

"இல்லம்மா..., இன்னைக்கே..." பேசத்
துவங்கியவனுக்கு..., மாலையில் அவளை பெண்பார்க்கப் போக இருந்தோம் என்பது உறைக்க..., தலையிலேயே அடித்துக் கொண்டான்.

அவன் வார்த்தைகளைத் துவங்கி நிறுத்திய விதம்..., அடி வயிற்றில் கத்தியை சொருகிய வலியை ஏற்படுத்த, அவளுக்கு அழுகை வெடித்தது.

'எந்த முகத்தோடு அவள் வீட்டுக்குப் போய் பெண் கேட்பதாம்? குற்ற உணர்ச்சி இல்லாமல் அவனால் அங்கே போக முடியுமா? நடந்ததை மறைத்து..., இயல்பாக அதைச் செய்ய முடியுமா...?' துண்டு துண்டாக சிதறியது அவன் இதயம்.

ஒரு நிமிட தனது சறுக்கல்..., அவர்களை எங்கே கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது...ஆண்மகனான எனக்கே இப்படி என்றால்..., என் ஹாசினி..., காலச் சக்கரத்தை கடந்த மணித்துளிகளுக்கு சுழற்ற முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

அது இனிமேல் முடியாது என்ற உண்மை முகத்தில் அறைய, தன் கால்களுக்குள் முகம் புதைத்து பொங்கியழும் அவளை என்ன சொல்லித் தேற்ற..., தேற்றும் தவறையா செய்து இருக்கிறேன்... இதயம் நசுங்கும் உணர்வு.

எவ்வளவு நேரம் இதே நிலையில் கடந்ததோ...., வெளியே..., "ராஜா ரூமை பூட்டிட்டு என்ன செய்யறான்...? விநாயக்கின் குரல், இருவரையும் திடுக்கிடச் செய்ய..., வாய்விட்டு வெளியே வரத் துடித்த விம்மலை, தன் கை பொத்தி அதக்கியவள்..., ராஜாவை கொன்று கூறுபோடும் பார்வை பார்த்தாள்.

'நான் இப்பொழுது என்ன செய்ய? எப்படி செய்ய? உன் செய்கையின் வீரியம் புரிகிறதா...?கண்கள் அவனிடம் கேள்வி கேட்டது.

'இதற்குமேல் தான் கலங்கி நின்றால்..., அடுத்து என்ன என்பதை முடிவு செய்வதை விட, இப்பொழுது தன்னவளின் கௌரவம் முக்கியம் என அடித்துக் கொண்டது அவன் மனம்.

"இப்போ செய்வதற்கும் என்னை மன்னித்துவிடு ஹாசினி. ஆனால் எனக்கு வேறு வழி தெரியலை..." அவள் என்னவென்று உணரும் முன்பே, அவளை கொத்தாக கைகளில் அள்ளியவன், "விடுங்க..., என்னைத் தொடாதீங்கன்னு சொன்னேன்..." அவன் கைகளில் திமிறியவளின் வார்த்தைகள், எங்கே வெளியே யாருக்கும் கேட்டுவிடுமோ என்ற பயத்தில் அமிழ்ந்தே வந்தது.

கத்தி கூச்சல் போட்டு..., இவனை மற்றவர் முன்னால் குற்றவாளியாக காட்ட அவளால் முடியவில்லையே ஏன்...? எனக்கு எவ்வளவு பெரிய அநீதியை இளைத்திருக்கிறான்..., ஆனாலும்...

பாத்ரூமில் அவளை விட. . . , தன் நிலை கண்டு வேகமாக அவனுக்கு முதுகு காட்டி நின்றவள். . . , "வெளியே போங்க. . ." கோபமும், குமுறலுமாக வெளிவந்த அவள் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்தவன்,

"எல்லாத்தையும் நான் சரி பண்ணிடுவேன் ஹாசினி. . . , என்னை நம்பு. . ." என்ன செய்தாலும் நடந்த தவறு இல்லையென்று ஆகிவிடாது என அவனுக்கும் புரிந்தது.

இன்ஸ்ட்டன்ட் ஹீட்டர் உபயத்தால் நீர் சூடாக இருக்க, அதை முதலில் நிறுத்தியவன், "குளிச்சுட்டு இங்கே இருக்கும் டிரெஸ்ஸை மாத்திக்கோ. . ." வெளியேறியவன், தன் ஈர உடைகளையே அணிந்து கொண்டான்.

'வெளியே இருப்பவர்களை முதலில் சம்மாளிக்கணும். . .' அறையைத் திறந்து வெளியேறியவன், ரிசப்ஷனில் இருந்த உமாவைப் பார்த்து நெற்றியை தேய்த்துக் கொண்டான்.

தன் அலைபேசியை எடுத்து விநாயக்கை அழைக்க முயன்ற பொழுதுதான், அதை காரிலேயே விட்டுவிட்டு வந்தது புரிய, "உமா. . ." அவளை அழைக்கவே. . . , "சார். . ." சற்று வியந்த முகபாவத்தில் அவனை ஏறிட்டவள், அவன் அருகில் வந்தாள்.

"என்ன சார். . . , இப்படி நனைஞ்சு இருக்கீங்க. . . , முதல்ல டிரெஸ்ஸை மாத்துங்க. . ." அவனுக்கு மாற்றுடை இருப்பது அவளுக்கும் தெரியுமே.

"அதை விடுங்க. . . , ரெண்டு நாளா வேலை சரியாவே நடக்காத மாதிரி இருக்கு. கொஞ்சம் கீழே போய். . . , வேலை எல்லாம் ஒழுங்கா நடக்குதான்னு பாத்து ஒன்னவருக்கு ஒரு முறை எனக்கு அப்டேட் பண்ணுங்க.

"நான் இப்போ வீட்டுக்கு கிளம்பறேன். . . , சோ. . . , கூடவே. . . , அந்த விநாயாக்கை பாத்தீங்கன்னா. . . , அவன் சீட்ல உக்காந்து இந்த மந்த்

அக்கவுண்ட்ஸ் டீட்டெயில் எல்லாம் நான் கேட்டேன்னு சொல்லி ரெடி பண்ண சொல்லுங்க. . . , போங்க. . .” அவளை அனுப்பினான்.

அதன் பிறகே இப்போதைக்கு யாரும் இங்கே வரப்போவதில்லை என்பதை உறுதி செய்த பிறகு, ஹாசினியைத் தேடிச் சென்றவன், அடுத்த நிமிடமே அவளை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

கார் சாலையில் பயணிக்க. . . , கண்களில் பெருகும் கண்ணீரோடு அவள் இறுக்கமாக அமர்ந்திருக்கவே. . . , அவள் கையை ஆதரவாக பற்றத் துடித்த தன் கரத்தை அடக்கியவன், கொட்டும் மழையில் வண்டியை விரட்டினான்.

அவள் வீட்டின் முன்னால் சென்று வாகனத்தை நிறுத்தியவன். . . , அவளோடு இறங்க முயலவே. . . , அவள் பார்வை மறுப்பாக அவனைச் சுட, “நான். . .” அவன் விளக்கத்தை கேட்காமல். . . , காரில் இருந்து இறங்கியவள், அதை அறைந்து சாற்றினாள்.

அவள் வீட்டுக்குள் செல்லும் வரைக்கும் அங்கே இருந்தவன், மீண்டும் அசுர வேகத்தில் வண்டியை செலுத்தினான்.

‘பெண் பார்க்கும் படலத்தை உடனே நிறுத்த வேண்டுமே. . . இதே மனநிலையில் அவளை சட்டென நெருக்க அவனுக்கு மனம் வரவில்லை. அத்தோடு. . . , மனதில் எழுந்த அழுத்தம். . . , அவன் தாயிடம் விஷயத்தை கொட்டத் தவித்தது.

காலையில் புடவையில் சென்ற மகள். . . , தலையில் ஈரம் சொட்ட, இப்படி ஒரு உடையில் வந்ததைப் பார்த்த துளசி. . . , “நிஹா. . . , என்னடி இது மழையில் நனஞ்சுட்டியா. . .? தலையை ஏன் இப்படி வச்சிருக்க. . .?” அக்கறையாக வினவ, தாயின் தோள் சாய்ந்து கதறத் துடித்த மனதை அடக்கவே மிகுந்த சிரமப்பட்டுப் போனாள்.

“என்னடி முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு? அழுதியா. . .?” அவர் பதற,

“கொஞ்சம் பீவரா இருக்கும்மா. . .” எதையோ சொல்லி

சம்மாளித்தவள், தன் அறைக்குள் புகுந்து கதவைச் சாற்றியவள், கதவின் மீதே மடிந்து அமர்ந்து அழத் துவங்கினாள்.

சத்தம் வெளியே கேட்டுவிடக் கூடாதே என்ற கவலை வேறு..., 'ராஜ்..., ராஜ்...' மனம் அரற்றியது.

அவன் அருகில் கொஞ்சமாவது தைரியமாக இருந்த அவள் மனம்..., தனிமையில் துடித்துப் போனது. அவன் அருகில் இருந்தால் மட்டுமே தன்னால் இதை சம்மாளிக்க முடியும் என்ற எண்ணம்..., கூடவே..., அவனது செய்கை..., ஆறுதல் தேட முடியாமல்..., ஆறுதல் கொள்ள முடியாமல் புழுவாய் துடித்தாள்.

"ஹாசினி..." துளசி கதவைத் தட்ட..., வேகமாக தன் முகத்தை துடைத்தவள், மெதுவாக கதவைத் திறந்தாள்.

"என்னம்மா...? ஏன் அழற...?" மகளது முகம் பார்த்து பதறியவர், "முதல்ல இந்த சுக்கு கஷாயத்தை குடி..., இங்கே வா.., தலையை துவட்டி விடறேன். இன்னும் சின்னப் புள்ளையா நீ..." அவள் நெற்றியில் கை வைக்க, அதுவோ கொதித்துக் கொண்டிருந்தது.

"காய்ச்சல் இப்படி கொதிக்குது.." வேகமாக அவள் தலையைத் துவட்டியவர்,
"சாம்பிராணி எடுத்துட்டு வரேன்..., இப்படியே படுத்தால் முடியாது..., நீ இதைக் குடி..., ஏன் கையிலேயே வச்சுட்டு இருக்க...?" தாயின் வர்ப்புருத்தலில் அதைக் குடித்தவள், கட்டிலில் சென்று அமர்ந்து கொண்டாள்.

'இந்த நிலைமையில் எப்படி பெண் பார்க்க வரச் சொல்ல...?' துளசிக்கு எண்ணம் ஓடியது. மறுத்தால் என்ன நினைப்பார்களோ..., என்ற கவலை வேறு.

அதை மேலும் சிந்திக்க முடியாமல், மகளை கவனிப்பது ஒன்றே பிரதானமாகத் தோன்ற..., சாம்பிராணி புகை போடத் துவங்கினார்.

தன் வீட்டு போர்டிகோவில் காரை அதிக விசையோடு ராஜா காரை நிறுத்த, ஹாலில் இருந்த சுஜா நிச்சயம் பயந்துதான் போனார்.

"ஏன்..., என்ன ஆச்சு...?" தன் மகனைப் பற்றி முழுதாக தெரிந்தவராயிற்றே.

"அம்மா..., வீட்டுக்குள் பாய்ந்தவனின் அழைப்பு..., "ஏதோ சரியில்லை..." உடனே அவரை எண்ணத் தூண்டியது.

"அம்மா..." கிட்டத்தட்ட அலறத்தான் செய்தான்.

"ராஜா..." அவனை எதிர்கொண்டவர், அவன் கண்களில் பளபளத்த கண்ணீரின் திடுக்கிட்டார்.

"அம்மா..., பெரிய தப்பு பண்ணிட்டேன்..., என் ஹாசினியை..., நானே..." மேலே என்ன சொல்லியிருப்பானோ..., வேலைக்காரர்கள் அனைவரின் கவனம் இங்கே திரும்ப,

"ராஜா..., முதல்ல தண்ணி குடி..., பிறகு பேசலாம்..." எப்பொழுதும்போல் அவரது குரல், அவனை கட்டிப் போட்டது.

"லட்சுமி..., தண்ணி கொண்டு வா..." அவள் நீரோடு வர, அவனைப் பருகச் சொன்னவர்..., தங்கள் அறைக்குள் அவனை கிட்டத்தட்ட இழுத்துச் சென்றார்.

அதற்குள்ளாகவே அவர் மனம் அவன் சொல்ல வந்த செய்தியை யூகித்தவராக தவிக்கத் துவங்கியது. 'ஆண்டவா..., அப்படி எதுவும் இருக்கக் கூடாது...' வேண்டுதலையும் வைக்கத் தூண்டியது.

கதவை அடைத்தவர்..., அவன் பக்கம் திரும்ப, தாயை தாவி அணைத்தவன், "அம்மா..., நான்..." தன் செய்கையை இப்பொழுது

சொல்ல முடியாமல் துடித்தான்.

வெளியே சொல்ல முடியும் தவறையா அவன் செய்திருக்கிறான்?

"என்னப்பா..., என்னன்னு சொல்லு..." அவன் முதுகை ஆதரவாகத் தடவினார்.

"அம்மா..., இதை எப்படிம்மா என் வாயால் சொல்வேன்...? என் ஹாசினியை நானே நாசம் பண்ணிட்டேன்னு எப்படிச் சொல்ல...?" கதறலாய் அவன் உரைத்த விஷயம், இடியாய் அவர் மனதில் இறங்கியது.

"என்ன ராஜா சொல்ற...?" தன்னை ஆதரவுக்குக்காக அணைத்திருந்தவனை, தோள் தொட்டு பிரித்து, அதிர்வாக வினவினார்.

"அம்மா..." தாயின் முன்னால் மண்டியிட்டவன், அவர் காலை கட்டிக் கொண்டு கதறினான்.

இப்படி கட்டிக்கொண்டு கதறும் மகனை அவரும் என்ன செய்ய? அவன் செய்து வந்திருக்கும் விஷயத்தின் வீரியம்..., ஒரு பெண்ணாக அவரை பயங்கரமாக தாக்கியது மட்டும் உண்மை.

'ஹையோ..., இப்போ...' அடுத்து என்ன.., என்பதையே சிந்திக்க முடியாமல், அவர் உணர்வுகள் ஸ்தம்பித்து தான் போனது.

அவனை இழுத்து அறைந்துவிடும் வேகம் எழுந்தாலும்..., தன் தவறை..., இமாலய தவறை உணர்ந்து குலுங்கி அழும் அவனை என்ன செய்ய?

தினம் தினம் செய்தித்தாளை புரட்டும் வேளையில்..., இப்படியான செய்திகளை படிக்கும் பொழுதே துடித்துப் போயிருக்கிறார். அப்படி இருக்கையில்..., இன்று.., தன் வீட்டுக்குள்ளாகவே இப்படி ஒரு சூழ்நிலை வந்ததை எண்ணி..., துடித்துதான் போனார்.

ஆனாலும் இதில் ஒரு நல்ல விஷயமே..., நடந்த தவறை மூடி மறைக்காமல், தன் தவறை உணர்ந்து, தன்முன் மண்டியிட்டு கதறும் அவனது செய்கை..., கொஞ்சமே கொஞ்சம் ஆறுதல் பட்டுக்கொள்ள வேண்டி இருந்தது.

"ஏதாவது சொல்லுங்கம்மா.., என்னை நல்லா திட்டுங்க..., அடிங்க..., இப்படி அமைதியா இருக்காதீங்க? என்னால் தாங்க முடியாதும்மா..., நான் நல்லவனே இல்லையாம்மா..., அரக்கனா ஆகிட்டேனா? என் உயிரோட உணர்வுகளை நானே கொன்னுட்டேம்மா..."அவனால் தன்னை தானே மன்னிக்க முடியவில்லை.

"அந்த நேரம் எந்த சாத்தான் எனக்குள்ளே புகுந்தான்னு தெரியலம்மா..., அவ வேண்டாம்னு சொன்னப்போ கூட..." மேலே சொல்ல முடியாமல், தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மீறி கதறி அழ, சுஜாவின் கண்களும் தானாக கலங்கியது.

"எனக்கு என் ஹாசினி வேணும்மா..., இப்போ..., இங்கே..., அவளை இப்படி ஒரு ஈனத்தனம் செய்துட்டு, அவ வீட்டில் கொண்டுபோய் விட்டுட்டு வந்துட்டேம்மா..., என்னால் தாங்க முடியலையே..., அவ இப்போ எப்படி துடிப்பா..., அவங்க அம்மா..., ஹையோ..." அவர் காலை கட்டியிருந்த தன் கையை உருவி..., முகத்தை மூடிக்கொண்டு கதறினான்.

அப்பொழுதுதான்..., மாலையில் அவர்கள் வீட்டுக்கு பெண் பார்க்கப் போவதாக இருந்ததே அவர் நினைவிற்கு வந்தது.

'இப்போ எந்த முகத்தை வைத்துக்கொண்டு அங்கே செல்ல...? அவங்க அம்மா முகத்தை எப்படி ஏறிட..., ஆனால் அதை செய்துதான் ஆக வேண்டும். ஓடி ஒழிய முடியாது...'

அதற்கு முன்..., தன் முன்னால் கதறும் தன் மகனை தெளிய வைப்பதே முக்கியமாகப் பட்டது. அவன் தன் குற்ற உணர்வுக்குள் மூழ்கி விட்டால்..., அடுத்து நடக்க வேண்டியதை அவனால் திடனாகச் செய்ய முடியாது.

ஒரு பக்கம் நிஹாசினிக்காக அவர் மனம் துடிக்க. . . , மறு பக்கம் ராஜாவின் அழுகை அவன் பக்கம் சிந்திக்கத் தூண்டியது.

"ராஜா. . . , முதல்ல இந்த அழுகையை நிப்பாட்டு. இது நீ அழ வேண்டிய நேரம் கிடையாது. தைரியமாக அடுத்ததை எதிர்கொள்ள வேண்டிய நேரம். தவறு செய்தப்போ இருந்த தைரியத்தை விட, அதை எதிர்கொள்ள அதிக துணிவு வேணும். எழுந்திரி. . ." அவனை கை பிடித்து எழுப்பினார்.

தன் தாயின் முகம் காண நாணி. . . , தலையை குனிந்து கொள்ள, அவன் கன்னம் தொட்டு நிமிர்த்தியவர். . . , "என்னைப் பார் ராஜா. . ." அவரது குரல், அவனை அதை செய்யத் தூண்டியது.

அவர் முகம் ஏறிட. . . , "நீ செய்தது மாபெரும் தவறு. . . , அதில் எனக்கு உன்மேல் அடங்காத ஆத்திரமும் கோபமும் இருக்கு. ஆனா. . . , இப்படி கோழை மாதிரி என் முந்தானைக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முடியாது. போ. . . , அவளைத் தேடித் போ. . . , அவ என்ன தண்டனை கொடுக்கிறாளோ அதை ஏற்க தயாராகு. . . , இதில் என் தயவு உனக்குக் கிடைக்காது. . ." அழுத்தம் திருத்தமாக உரைக்க, பரிதவித்தான்.

"அம்மா. . . ." குரல் நடுங்க அவன் அழைக்க,

"இப்போ என்னை என்ன செய்யச் சொல்கிறாய். . . , என் மகன் எந்த தவறையும் செய்யவில்லை. . . , அவன் ஆசைபட்டான் எடுத்துக் கொண்டான். எனவே உங்க பொண்ணை இவனுக்கே கொடுங்கன்னு நான் கேக்கணுமா?" அவர் வார்த்தைகள் அவனை கிழித்து கூறு போட்டது.

"இல்லம்மா. . . , அப்படி இல்லம்மா. . ." அவர் கரங்களை பற்றிக் கொண்டான்.

"நான் அவங்களுக்கு போன் பண்ணி. . . , இன்னைக்கு வர முடியாது என சொல்லி விடுகிறேன். . . , அடுத்து என்ன செய்ய என்று நீதான் யோசிக்கணும். போ. . . , இப்படி கோழை மாதிரி அழுவதை

நிறுத்து. . .” கொஞ்சம் கூட இளக அவர் தயாராக இருக்கவில்லை.

“என்னை. . . , உங்க புள்ளையை வெறுத்துட்டீங்களாம்மா. . .? நான் உங்க புள்ளம்மா. . . , உங்க வளர்ப்பும்மா. . .” கெஞ்சினான்.

“என் வளர்ப்பு எங்கே தவறாகப் போயிற்று என எனக்கே தெரியலையே. . .” குரல் அடைக்க அவர் புலம்ப. . . , சர்வாங்கமும் அவனுக்கு ஒடுங்கிற்று.

“அப்படிச் சொல்லாதீங்கம்மா. . . , நான்தாம்மா புத்தி பேதலிச்சு பண்ணிட்டேன். நான் பாவிம்மா. . . , அவகிட்டே போறேன். அவ காலில் விழுந்து என்னை ஏற்றுக்கொள்ளச் சொல்கிறேன். . . , நான் செய்வேம்மா. . . , உங்க புள்ளை நடந்த தவறை நிச்சயம் மூடி மறைக்க மாட்டேன். . .” தன் கண்ணீரை துடைத்துக் கொண்டு வெளியேறினான்.

அவன் செல்லவே. . . , தன் விழியில் இருந்து வழிந்த கண்ணீரை துடைத்தவர், இன்று பெண்பார்க்க வர முடியாது என சொல்ல தன் அலைபேசியை எடுக்க, துளசியே அவரை அழைத்தார்.

ஒரு நிமிடம் தன் இதயம் நின்று துடிக்க. . . , வேகமாக அதை காதுக்கு கொடுத்தார். அவர் கேட்கப்போகும் கேள்விகளுக்கு சுஜா தன்னை தயார்ப்படுத்த, துளசியோ. . . , “சம்பந்தியம்மா. . . , ஒரு முக்கியமான விஷயம். . , அதைச் சொல்லத்தான் போன் பண்ணேன். அது. . .” பெண் பார்க்க வராதீர்கள் என சொல்ல அவர் நாவு எழவே இல்லை.

“சொல்லுங்க. . .” தடதடக்கும் தன் இதயத்தை தன் கையால் அடக்கியவராக வினவ,

“என்னன்னு தெரியலை. . . , நிஹாவுக்கு பயங்கர காய்ச்சல். மழையில் வேற நல்லா நனைஞ்சுட்டா போல. . . , மாப்பிள்ளை ஆபீஸ்ல அவர் துணியைத்தான் மாத்திட்டே வந்தா. . . , அது. . . , கண்ணே முழிக்காமல் கிடக்கா. . . , இப்போ நீங்க பெண் பார்க்க வந்தால். . . , அடுத்த நல்ல நாள் மூணு நாள்ல இருக்கு. . . , அன்னைக்கு வரீங்களா. . .?” எங்கே சுஜா

தவறாக எண்ணி விடுவாரோ என சற்று பதட்டத்தோடு பேசினார்.

"என்ன..., நிஹாவுக்கு ஜுரமா...? முதல்ல அவ உடம்பைப் பாருங்க. மிச்சத்தை பிறகு பார்க்கலாம்..." பேசிவிட்டு அழைப்பை துண்டிக்க,

'நிஹா நடந்த விஷயத்தை வீட்டில் சொல்லவில்லையா...? ஏன்...?' அவருக்கு ஏதோ புரிவதுபோல் இருந்தது. அதே நேரம்..., அவள் மன உளைச்சலையும்...

தன்னை சற்று தேற்றிக்கொண்டு வெளியே வர, ராஜா உடை மாற்றி.., கீழே வர,
அவனைத் தடுத்தவர்..., "நிஹாவுக்கு காய்ச்சலாம்.., இப்போ நீ போனாலும் பயன் ஒன்றும் இருக்கப் போவதில்லை..., காலையில் போ..." அவன் முகம் பாராமல் உரைத்து விலகிச் செல்ல, தாயின் செய்கையில் மனம் நொந்தான்.

அவர் வார்த்தையைத் தாண்டி செல்ல முடியாமல்..., அறைக்குத் திரும்பியவன், இரவு உணவை உண்ணக் கூட அறையை விட்டு வரவில்லை.

நிஹாசினிக்கு காய்ச்சல் என்ற விஷயத்திலேயே அவன் மனம் உழன்றது. இரவும் உறங்கா இரவாக..., காலை எட்டு மணிக்கு, நிஹாசினியின் வீட்டில் இருந்தான்.

"வாங்க மாப்ள..., நிஹாவுக்கு ஜுரம் குறையவே இல்லை.... வினோ..., அக்காவை எழுப்பு..., மாப்பிள்ளை வந்திருக்கார்ன்னு சொல்லு..." அவர்கள் செய்கையை தடுக்க முடியாமல், அவள் அறைக்குள் பாயத் துடித்த கால்களை அடக்கி..., துளசியின் முகம் காண வெட்கி, இருக்கையில் அமர்ந்திருந்தான்.

சற்று நேரத்தில்..., "எனக்கு யாரையும் பார்க்க வேண்டாம்...., பார்க்கப் பிடிக்கவும் இல்லை. முதல்ல நீ போ..." நிஹாசினியின் உச்சகட்ட கோபக்

குரல் அவனைத் தீண்ட, நொறுங்கிப் போனான் அவன்.

பகுதி - 22.

நிஹாசினியின் குரல் காதில் வந்து மோதியதை நம்பக் கூட முடியாமல் உறைந்துபோய் அமர்ந்திருந்தான் ராஜா.

அதே நேரம்..., துளசி தன்னைப்பற்றி என்ன நினைப்பார்? என்ன சொல்லுவார்...? அவரது கோபத்தை எதிர்கொள்ள அவன் தயாராக, அவரோ..., "தப்பா நினைக்காதீங்க மாப்ள..., அவளுக்கு ஜுர வேகத்தில் என்ன பேசுறோம்னே தெரியாமல் பேசறா...., நீங்க போயிட்டு நாளைக்கு வாங்க..." சமாதானப்படுத்தும் குரலில் உரைக்க, குற்ற உணர்வில் குறுகிப் போனான்.

அதற்குமேல் எதுவும் செய்ய முடியாமல்..., அவள் அறையை திரும்பிப் பார்த்தவாறே வீட்டை விட்டு வெளியேறினான்.

துளசிக்கோ..., அவனது முக வாட்டம் கவலையை அளிக்க..., கோபமாக மகளின் அறைக்குள் நுழைந்தார்.

அங்கே வினோ தமக்கையின் கோபத்துக்கான காரணம் புரியாமல் திகைத்து நிற்க, "ஏய்..., அவகிட்டே என்னடி சொன்ன? எதுக்கு இப்படி கத்துனா...? அவளுக்கு இன்னும் ஜுரம் சரியாகலையா...?" வேகமாக நிஹாசினியை நெருங்கியவர், போர்வைக்குள் சுருண்டிருந்த அவள் நெற்றியில் கை வைத்து பார்க்க, அதுவோ சூடு குறையாமல் கொதித்தது.

"நான்..., மாமா வந்திருக்காங்க..., வெளியே வான்னுதாம்மா சொன்னேன்..., அதுக்கு யாருடி மாமான்னு கேட்டா..., உன்னை கல்யாணம் பண்ணிக்கிறவர் எனக்கு மாமா தானேன்னு சொன்னேன். அவ்வளவுதான்.., கத்தி கூப்பாடு போட்டுட்டா..., நானே ஷாக் ஆகிட்டேன்..." அப்பாவியாக புலம்பினாள்.

வினோ சொன்னதிலோ கேட்டதிலோ தவறில்லை..., ஆனால் மாமாவை ராஜா மாமா என அவள் உரைத்திருந்தால் அனைத்தும் இங்கேயே சரியாகப் போயிருக்கும். ஆனால்..., அப்படிப் பெயரைச் சொல்லாமல் போனது யாரின் பிழை?

"சரி..., நீ ஸ்கூலுக்கு கிளம்பு..., நான் இவளை பாத்துக்கறேன்..." அவளை அனுப்பினார்.

நிஹாசினியின் மனமோ..., தங்கை சொன்ன வார்த்தையில் துடித்துக் கொண்டிருந்தது. 'மாமாவா..., யார் அது...? அம்மா எனக்கு கல்யாணம் செய்ய முடிவு பண்ணிட்டாங்களா...? ஹையோ..., ராஜா எங்கே...? ஏன் இன்னும் வரவில்லை...? என்னால் நிலைமையை சம்மாளிக்க முடியும்னு தோணலையே...' புழுவாய் துடித்தாள்.

அத்தோடு..., தன்னை இவ்வளவு நேரம் வந்து பார்க்காத அவன்மேல் கோபம் கிளர்ந்தது. 'தன் இச்சை தீர்ந்தவுடன் என்னை மறந்து விட்டாரா? இல்லை..., என் ராஜா அப்படிப் பட்டவர் இல்லை..., அவரோட பெற்றவர்களோடு நிச்சயம் இங்கே வருவார்...' மறு மனம் வாதாடியது.

ஆனாலும்..., அவன் வர தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் அவன்மேல் கோபம் கிளர்ந்து எழுந்தது. அவளுக்கு யார் சொல்லி புரிய வைப்பது...? வந்தது ராஜாதான் என? விதியின் விளையாட்டு இங்கே ஆரம்பம்....

துளசிக்கோ..., மகள்மேல் இருந்த கோபத்தை அவளது ஜுரம் துடைத்துப் போட, "நிஹா..., அம்மாடி..., ஜுரம் விடாமல் கொதிக்குதே..., ஹாஸ்பிட்டல் போலாமா..." அவர் கேட்க,

"இல்ல..., வேண்டாம்..., நான் எங்கேயும் வரலை..." அடித்துப் பிரண்டு எழுந்து அமர்ந்தவளது தேகம் தள்ளாடியது.

'ஹாஸ்பிட்டலுக்கா..., அங்கே எதையாவது கண்டுபிடித்து

விட்டால்...' இந்த எண்ணமே அவளை முழு மூச்சாக தவிர்க்கச் செய்தது.

"ஏய்..., பாத்துடி..., எதுக்கு இவ்வளவு பதட்டம். ஹாஸ்பிடல் வேண்டாம்னா போக வேண்டாம். இந்த ஊசிக்கு பயப்படறதை எப்போதான் நிறுத்தப் போறியோ..., இன்னும் சின்னப்புள்ளைன்னு நினைப்பு. கல்யாண வயசாகுது..." புலம்பியவர்,

"சரி எழுந்து ப்ரெஷ் பண்ணிட்டு வா..., ப்ரெட்டும், டீயும் எடுத்துட்டு வரேன்..." கிச்சனுக்குச் சென்றார்.

தாயிடம் அதற்கு வாதாட மனமின்றி, அவரது கட்டாயத்தில் ஒரு ப்ரெட் ஸ்லைஸ் சாப்பிட்டவள், டீயை குடித்துவிட்டு, ஒரு பேராசிட்டமாலை போட்டவள், தன் அறைக்குள் சென்று முடங்கினாள்.

மகள் ஜுரத்தால் தான் இவ்வாறு நடந்து கொள்கிறாள் என்பதால்..., துளசி அவளுக்கு தனிமை கொடுத்து விலகிச்
செல்ல, நிஹாசினியோ..., மனதுக்குள் துடித்துக் கொண்டிருந்தாள்.
'ராஜா..., ராஜா...' அவள் மனம் விடாமல் புலம்பிக் கொண்டிருந்தது.

ராஜாவோ..., அவளை விட அதிகம் பரிதவித்தான். அவளது கோபத்தை நிச்சயம் எதிர் பார்த்தான்தான். ஆனால்..., தன்னை பார்க்கப் பிடிக்கவில்லை என்ற அவளது வார்த்தைகள்..., 'ஹோ...' வென கதறி அழத் துடித்தான்.

அதைச் செய்ய முடியாமல்..., அவள் நிலையும்..., இப்போதைய இக்கட்டும் சேர..., அவளை எப்படி சமாதனப்படுத்த எனத் தெரியாமல் துவண்டான்.

தன் தோல்வியை தாங்க முடியாமல்..., துவண்டுபோய் வீட்டுக்குள் நுழைய, அவனை எதிர்கொண்டார் சுஜா. அவர் பார்வை அவனை கேள்வியாய் ஏறிட..

"என்னைப் பார்க்கவே பிடிக்கலன்னு சொல்லிட்டாம்மா..." குரல் அடைக்க

அவன் உரைக்க, வீட்டு மெம்பர்கள் அனைவரும் அங்கே கூடினர்.

"பின்ன..., கட்டிப்புடிச்சு கொஞ்சுவான்னு நினைத்தாயா...?" அவனிடம் கோபம் காட்டியவர், மற்றவர்களைப் பார்த்து, சட்டென தன்னை கட்டுப்படுத்தினார்.

"இங்கே என்ன நடக்குது சுஜா...? நேத்து பொண்ணுபார்க்கப் போறோம்னு சொல்லிட்டு, திடீர்ன்னு இல்லைன்னு சொல்லிட்ட. இவன் என்னன்னா..., எதையோ பறி கொடுத்தவன் மாதிரி நிக்கறான்..., என்ன ஏதாவது பிரச்சனையா?" தனா முதல் முறையாக கோபம் காட்டினார்.

ராஜாவின் பார்வை கெஞ்சலாக சுஜாவை ஏறிட, 'வெளியே சொல்லும் விஷயமா இது...?' அவனை சுட சுட பார்த்தவர்...,

"நிஹாவுக்கு ரொம்ப ஜுரமாம்..., சம்பந்தியம்மாவே போன் செய்து இன்னொரு நாள் வரீங்களான்னு கேட்டாங்க. அவங்க அப்படி கேட்கும்போது எப்படி மறுக்க..., அதான் போகலை..." அதுவும் ஒரு காரணம் தானே என தன்னையே சமாதானம் செய்தார்.

"டேய்..., இதுக்கா இப்படி அப்சட்டா இருக்க...? மிஞ்சிப்போனால் இன்னும் ஒரு வாரம்..., நிச்சயம் முடிஞ்ச ஒரே மாசத்தில் கல்யாணம்..., பிறகேன்...? வேண்ணா போய் அவளைப் பாத்துட்டு வா..." தனா உரைக்க, அப்படியே தன்னை நாலு அடி அடித்திருந்தால் கூட இவ்வளவு வலிக்காது என்றே தோன்றியது.

'எத்தனை பேரின் நம்பிக்கையை கொன்று புதைத்துவிட்டேன்....' மனம் ஊமையாய் அழுதது.

"ராஜா..., ரூமுக்கு போ..., டிபனை அங்கே கொடுத்து அனுப்பறேன்..." இங்கிருந்து போ..., என சுஜாவின் கண்கள் கட்டளையிட, தன் அறைக்குள் சென்று புகுந்து கொண்டான்.

ஆயிரம் முறையாக அவளது அலைபேசிக்கு முயற்சிக்க, அதுவோ சுவிச் ஆஃப் செய்யப்பட்டுள்ளதாகவே உரைக்க சோர்ந்துதான் போனான்.

அன்றைய அலுவல் எதையும் பார்க்கப் போகாமல்..., அறைக்குள்ளேயே முடங்க..., அவனை யாரும் தொல்லை செய்யவே இல்லை.

அவனது செய்கை தாரிணிக்கு வியப்பை அளிக்க..., கூடவே..., சுஜாவின் முகம் எதுவோ சரியில்லை எனவும் உரைக்க, தனக்குள் குழம்பிப் போனார்.

பெண்களுக்கே உரிய சூட்சும குணம் இது..., ஆண்கள் அனைவரும் தங்கள் அலுவலுக்குப் போய்விட, தாரிணி கேள்வியாக வீட்டை அளந்தார். சுஜா அன்றைய சமையலில் கூட ஈடுபடாமல் அறைக்குள் முடங்க..., நிச்சயம் எதுவோ இருக்கிறது..., தாரிணியின் மனம் அடித்து உரைத்தது.

ஒரு வேளை அக்காவுக்கு உடம்பு சரியில்லையோ...?' மனதுக்குள் கேள்வி எழ, வேகமாக அவர் அறை நோக்கிச் சென்றாள்.

"அக்கா..." சுஜாவின் அறைக்கதவை தட்ட, "கதவு திறந்துதான் இருக்கு தாரிணி..., உள்ளே வா..." சுஜாவின் குரல் கேட்கவே..., அறைக்கதவை திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள்.

சுஜா அவர்கள் அறையில் இருந்த சோபாவில் அமர்ந்திருக்க..., "என்னக்கா., ரூமை விட்டு நீங்க வெளியே வரலை என்றவுடன், உங்களுக்கு உடம்பு எதுவும் சரியில்லையோன்னு பாக்க வந்தேன்..., நீங்க என்னன்னா இங்கே உக்காந்து விட்டத்தை வெறிச்சுட்டு இருக்கீங்க..." அவர் அருகில் சென்று அமர்ந்தாள்.

"இன்னைக்கு எதுவுமே செய்யப் பிடிக்கலை..., அதான்..." ராஜாவின் விஷயத்தை நிச்சயம் தன்னால் வெளியே சொல்ல முடியாது என்றே தோன்றியது. பெருமையாக வெளியே சொல்லிக்கொள்ளும் விஷயமா இது?

"கேக்கறேன்னு தப்பா நினைக்காதேள்..., ராஜாவுக்கு எதுவும் பிரச்சனையா? தாரிணி கேட்க, சற்று திடுக்கிட்டாலும், சட்டென தன்னை மீட்டுக் கொண்டார்.

அவரது அதிர்வை கணக்கிட்ட தாரிணி..., "என்கிட்டே சொல்ல விருப்பம் இல்லன்னா வேண்டாம்..., எப்பவுமே நான் தனி தானே..., அப்படியே இருந்துட்டு போறேன்..."வேதனையாக உரைத்தாள்.

அவளது தன்னிலை விளக்கம் தாளாமல் அவள் கரத்தைப் பற்றியவர், "ஒரு பெரிய தப்பு நடந்துடுச்சு..., அதை உன்கிட்டே இப்போ சொல்ல எனக்கு தைரியம் இல்லை. ஒரு வாரம் போகட்டும் நான் சொல்றேன்..." சுஜாவின் குரலில் இருந்த வேதனை தாரிணியை திகைக்கச் செய்தது.

"என்னக்கா சொல்றீங்க...?" பதைப்பாய் வினவ, சுஜாவின் கண்கள் கலங்கியே விட்டது. நடந்துவிட்டது ஒன்றும் சின்ன விஷயமில்லையே..., ஒரு பெண்ணை..., அவளது விருப்பமின்றி தொடுவது என்றால்..., அவளை காதலிப்பதாக இருந்தாலுமே..., அது சரியென ஒத்துக்கொள்ள முடியுமா என்ன?

"நான் என்னன்னு சொல்ல..., வீட்டு ஆம்பளைங்களுக்கு விஷயம் தெரிந்தால் என்ன ஆகும்னு நினைக்கவே கலக்கமா இருக்கு. மறைப்பது.., அதைவிட வேதனையா இருக்கு..."தனக்குள் இருக்கும் உண்மை அவரை தகிக்கச் செய்தது.

ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அறிந்தால் போதாதா...? விஷயத்தை ஓரளவுக்கு தாரிணியால் யூகிக்க முடிந்தது.

நேற்று பெண்பார்க்க போகாதது..., நிஹாவின் திடீர் காய்ச்சல்..., ராஜாவின் நிலை..., ஒரு பெண்ணாக சட்டென விஷயத்தை புரிந்துகொள்ள முடிந்தது.

'அது' ஒன்றைத் தவிர வேறு எதற்காகவும் சுஜா இவ்வளவு கலங்கப் போவதில்லை. எத்தனையோ இக்கட்டான சூழல்களை அழகாய் கையாண்டவர். தனக்கே ஒரு இழப்பு வந்தபொழுது அதிலிருந்து மீள, ஆலோசனை வழங்கி..., பக்க பலமாக இருந்தவர்..., அப்படி இருக்கையில்...

1. "நம்ம ராஜாவா...?" தாரிணியால் அதையுமே ஏற்க முடியவில்லை. கார்த்திகாவே அவனிடம் நெருங்கிப் பழகினால் கூட..., ஒரு சதவீதம் கூட, பார்வையால் கூட அவன் தடுமாறி அவள் பார்த்ததில்லையே... அவனது கல்லூரித் தோழிகள் எத்தனை பேர் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

அதில் ஒருத்தி இவனை விரும்புவதாக தங்களிடமே சொன்னாளே..., அவளிடம் கூட, தன் மனதை எவ்வளவு தெளிவாக, அழுத்தமாக புரிய வைத்தான்... அப்படிப்பட்டவன்..., தவறு செய்துவிட்டான் என்றால்..., அவள் மேல் அவன் எந்த அளவுக்கு ஆசை, விருப்பம் கொண்டிருக்க வேண்டும்.

என்ன இருந்தாலும்..., ராஜாவின் செய்கையை சரியென அவளாலும் ஏற்க முடியவில்லை. இதை சரி செய்தே ஆக வேண்டும் என்ற வேகம்..., "நிஹா வீட்டுக்குப் போய் நாம் பார்க்கலாமா...?" கேட்டே விட்டாள்.

"நம் முதுகின் பின்னால் அவனை ஒளிஞ்சுக்க வைக்க முடியாது தாரிணி. அவனே செய்யட்டும்..., முடியாத பட்சத்தில் நாம் தலையிடலாம். இப்போதைக்கு இந்த விஷயம் ஆண்களுக்குத் தெரிய வேண்டாம். அவளது கௌரவத்தை காக்கும் பொறுப்பு இப்போ நமக்கு இருக்கு..." நிலையை விளக்க, மௌனமாக தலை அசைத்தாள்.

அடுத்த நாள்..., காலையிலும் ராஜா நிஹாசினியின் வீட்டுக்குச் செல்ல, வினோ பள்ளிக்குச் சென்றிருந்தாள்.

"அத்த..., ஹாசினிக்கு காய்ச்சல் எப்படி இருக்கு...? அவள் ஏதாவது சொன்னாளா...?" பெற்ற தாயிடம் மறைப்பது எவ்வளவு பெரிய கொடுமை.

அவர் மகளை நாசம் செய்துவிட்டு..., என்னவோ நல்லவன்போல்..., அவர் வீட்டிலேயே அமர்ந்திருக்கும் விதத்தை எண்ணி மறுகிப் போனான்.

"காய்ச்சல் இப்போ ஓரளவுக்கு பரவாயில்லை. ஆனால்..., படுக்கையை விட்டு எழவே மாட்டேன் என்கிறாள். இருங்க நான் அவளை அழைச்சுட்டு வரேன்..." அவனது அடுத்த கேள்வியை அவர் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

இப்படி ஒரு விஷயம் நடந்திருக்கும் என ஒரு தாயால் யூகிக்க முடியுமா என்ன? அதுவும் மகள் தன் வாயைத் திறந்து சொல்லாமல் இருக்கையில்...

இல்லையேல் அவள் குறிப்பால் உணர்த்தினாலோ..., தாயிடம் நின்று அழுதாலோ..., குமுறி இருந்தாலோ அவரால் என்னவென்று சிந்தித்திருக்க முடியும். ஆனால்..., மகள் காய்ச்சல் களைப்பில் இருக்கிறாள் என எண்ணும் அவரால்..., அதை யூகிக்கவே முடியவில்லை.

மகளைத் தேடிச் சென்றவர்..., அவள் படுக்கையில் எழுந்து அமர்ந்திருப்பதைப் பார்த்து..., சற்று நிம்மதியாக உணர்ந்தார். அவள் நெற்றியில் கைவைத்துப் பார்க்க..., சூடு இருந்தாலும்..., அனலாக கொதிக்கவில்லை என்பதை அவரால் உணர முடிந்தது.

"நிஹா..., முகம் கழுவி..., நல்லதா ஒரு சுடிதாரை எடுத்து போட்டுட்டு வா. மாப்பிள்ளை வந்திருக்கிறார்..." ராஜா எனச் அவர் சொல்லியிருந்தால் விஷயம் வேறாகப் போயிருக்கும். ஆனால்..., அவனை அப்படி அழைத்து பழகியிராத வாய்..., அவனை மாப்பிள்ளை என்றே உரைக்க, கொதித்துப் போனாள்.

"மாப்பிள்ளையா...? எனக்கு இதில் விருப்பம் இல்லை. முதல்ல அவனைப் போகச் சொல்லுங்க..." வெளியில் இருப்பவனுக்கு கேட்க வேண்டும் என்றே கத்தினாள்.

"ஏய்..., கொஞ்சம் மெதுவா பேசுடி..., அவர் ஹால்லதான் இருக்கார்..." கடிந்து கொண்டார்.
"அவனை வீட்டுக்குள் வேறு அழைத்து உக்கார வச்சிருக்கீங்களா? இது நடக்கவே செய்யாது. அவன் யாராக இருந்தாலும்..., அவன் முகத்தைக் கூட எனக்கு பார்க்க வேண்டாம்..." இதற்குமேல் அங்கே இருக்கும்

தைரியம் அவனுக்கு இருக்கவில்லை.

சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு கிளம்பிவிட..., நிஹாசினியின் அழுகை அவர் தாயை அதற்குமேல் பேச அனுமதிக்கவில்லை. ராஜாவிடம் என்னவென்று சொல்ல..., என தயங்கியவாறு அவர் வெளியே வர, அவருக்கு அப்படி ஒரு இக்கட்டை கொடுக்க அவன் அங்கே இருக்கவில்லை.

நிஹாசினிக்கோ..., இரண்டாம் நாளாக ஏமாற்றம்..., வலி..., ராஜா வரவே இல்லை என்ற அவளது மன அழுத்தம் கூடிகொண்டே செல்ல..., மீண்டும் அதீத காய்ச்சலுக்கு ஆளானாள்.

மறு நாள்..., அடுத்தநாள்...., அடுத்த வாரம்..., நிஹாசினியின் உடல் தேறுவதும், வீழ்வதும..., ராஜாவின் வருகை தொடர்வதும..., அவளது வார்த்தைகளை வாங்கிவிட்டு திரும்புவதும் என போராட..., துளசிக்கு முதல் முறையாக சந்தேகம் துளிர்விடத் துவங்கியது.

தனக்கு விருப்பமில்லை என்றால் தன்மையாக மறுக்கும் மகளது அதீத கோபம்..., ராஜாவின் ஒய்ந்த தோற்றம்..., மழிக்கப்படாத தாடை..., அவன் கண்களில் தெரியும் குற்ற உணர்வு.தன்னை நிமிர்ந்து பார்க்கத் தயங்கும் அவனது செய்கை..., அடி வயிற்றில் கத்தியைச் செருகிய பயத்தை, வேதனையை அளித்தது.

ஆனாலும்..., தன் இளைய மகளிடம் ஒரு தந்தையின் கண்ணியத்தில் பழகும் அவனை, சட்டென சந்தேகப்படவும் முடியவில்லை. நாளைக்கு ராஜா வந்தால் பேசிவிட வேண்டும்...முடிவெடுத்தார்.

நிஹாசினியோ..., ராஜாவை முற்றாக வெறுக்கத் துவங்கி இருந்தாள். அவளது எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாகிப் போன வலி..., அதை வெளியிட முடியாத தன் நிலை..., தன்னை இந்த நிலையில் நிறுத்திய ராஜா, ஓடி ஒளிந்த ஆத்திரம்...

அவன்தான் வருகிறான் என தெளிவாக அவளிடம் உரைக்காமல் போனது

யார் குற்றம்?

ராஜாவின் வீட்டிலோ..., முற்றாக ஒடுங்கிப் போன அவன் நிலை தனாவை சிந்திக்கத் தூண்டியது. நிஹாசினியின்மேல் அவன் கொண்டிருக்கும் நேசத்தின் அளவை அது பறை சாற்ற..., "சுஜா..., நிஹாவுக்கு இன்னுமா உடம்பு சரியாகவில்லை...? என்ன ஆனாலும் நாமாவது அங்கே போய் பேசி முடித்துவிட்டு வந்து விடலாமா...? ராஜா இப்படி இருப்பது மனசுக்கு ஒரு மாதிரி இருக்கு..." தன் மனம் திறந்தார்.

ஏற்கனவே கணவனின் இதயத்தில் இருக்கும் அடைப்பு நினைவிற்கு வர, "தனா..., நீங்க இதைப்பற்றி குழப்பிக்காதீங்க. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். அவங்களுக்குள் ஏதோ சண்டைபோல..., அதான் இப்படி நடந்து கொள்கிறான்...., விடுங்க..." கணவனைத் தேற்றினாள்.

"அப்போ சரி..., இதுதானா விஷயம்...? நீயே பார்..." மனைவியின் பேச்சை முற்றாக நம்பினார்.

மூன்றாம் வாரம்..., ராஜா அன்று மதியம் நிஹாசினியின் வீட்டுக்குச் செல்ல..., இறுக்கமான அவரது முகமே அவனை வரவேற்றது.

"அத்த..., ஹாசினி..., எனக்கு அவகிட்டே பேசியே ஆகணும். நான்..., அவளைப் பார்க்கட்டுமா...?" இத்தனை நாளாக அவரின் வார்த்தைக்கு கட்டுப் பட்டவன்..., நேரடியாக அவரிடம் கேட்டு விட்டான்.

"நீங்க அவளை தாராளமா பார்க்கலாம்..., ஆனால்..., என்ன நடந்தது என்று எனக்கு உண்மை தெரியணும்..." கூர்மையான அவர் விழிகளை சந்திக்க முடியாமல் தலை கவிழ்ந்தான்.

அவனது மௌனம்..., இதயத்தை வெடிக்கச்செய்யும் துன்பத்தை அளிக்க..., பதறும் இதயத்தோடு அவன் பதிலுக்காக காத்திருந்தார்.

'இதை எந்த நொடியும் எதிர்பார்த்திருந்தவன்

தானே..., ஆனால்..., அதை எதிர்கொள்ள மிகவும் பயங்கரமாகத்தான் இருந்தது.

இல்லை..., இதற்குமேல் இவர் முன்னால் நடிக்க முடியாது..., தான் செய்த தவறுக்கு..., அதைத் திருத்திக் கொள்ள, எந்த விஷயத்தையும் அவன் செய்யத் தயாராக இருந்தானே..., இருக்கையில் இருந்து எழுந்தவன்..., "நான் தப்பு பண்ணிட்டேன்..., என்னை மன்னிச்சிடுங்க..." சாஷ்ட்டாங்கமாக அவர் காலில் விழுந்தே விட்டான்.

அதற்குமேல் அவனிடம் எதையும் தெளிவுபடுத்திக் கொள்ள அவருக்கு அவசியம் இருக்கவில்லை. அவனை அப்படியே கொன்று புதைத்துவிடும் ஆக்ரோஷம் எழுந்தாலும்..., இப்படி ஒரு விஷயத்தை..., இத்தனை வாரமாக தன்னிடம் மறைத்த மகளின் செய்கை..., அந்த வேகத்தை தணிந்து போகச் செய்தது.

மகளது கோபமும்..., அவனைப் பார்க்க மறுப்பதும்..., அதற்கான காரணமும் தெளிவாகப் புரிய..., அப்படியே தோய்ந்து போய் தரையில் அமர்ந்து விட்டார்.

மன்னிப்பை வேண்டும் இவனைப் பார்க்கவா...? உயிரோடு தவிக்கும் மகளுக்காக பார்க்கவா? மகளின் கோபத்தில் இருக்கும் நியாயம் புரிகிறது..., அதே நேரம்..., அவளது வாழ்க்கை..., நினைக்கையிலேயே துடி துடித்துப் போனார்.

"அத்த..." அவரிடம் பதில் இல்லாமல் போகவே..., நிமிர்ந்து பார்த்தவன், அப்பொழுதுதான் அவர் நிலையை உணர்ந்தான்.

பதறி எழுந்தவன்..., அவர் கரத்தை பற்றிக் கொண்டான். "அத்த..., ஹாசினிதான் என் வாழ்க்கை. என்கிட்டே அவளைக் கொடுத்துடுங்க. அவளை நான் பாத்துக்கறேன். அவளோட கோபத்தை என்னால் தாங்கிக்கொள்ள முடியும்..." அவரிடம் மன்னிப்பை மட்டுமே வேண்டுவது எதற்கும் பயன்படாது என்பதால்..., அவருக்கு நம்பிக்கை அளிக்க முயன்றான்.

"என் மகளின் கற்பு போனது போனது தானே. . . , அதை உங்களால் திருப்பிக் கொடுக்க முடியுமா? உங்களை எவ்வளவு நம்பினேன். நானே என் மகளின் வாழ்வை கெடுத்து விட்டேனே. . ." தவித்தார்.

"அப்படிச் சொல்லாதீங்க அத்தை. . . , எல்லாம் என் தப்புதான். நீங்க இப்போ என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்க நான் தயாரா இருக்கிறேன். . ." அவரிடம் சரணடைந்தான்.

வேகமாக தன் கண்களைத் துடைத்துக் கொண்டவர். . . , "உங்க வீட்டு பெரியவங்களை அழைச்சுட்டு வாங்க. இந்த கல்யாணம் உடனே நடந்தாகணும். . ." அவர் உரைக்க. . . , நம்ப முடியாத திகைப்பும் ஆச்சரியமும் போட்டி போட. . . , தன் வீட்டுக்கு விரைந்தான்.

நினைப்பதெல்லாம் நடந்துவிடுமா என்ன. . .?

பகுதி - 23.

தன் வீட்டுக்கு வந்தவன். . . . , முதல் வேலையாக சுஜாவைத் தேடிச் சென்றான். கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் ஆகப் போகிறது. . . , அவர் இவனிடம் நேரடியாக உரையாடி.

சாப்பாடு கூட லட்சுமி கையால் தான். அதுவும் உயிர்வாழ மட்டுமே என்றாகிப் போயிருந்தான். சுஜாவை கண்களால் கூட காண முடியவில்லை. அவன் வரும் அரவம் கேட்டாலே தன் அறைக்குள் புகுந்து கொண்டார்.

தான் தூக்கி வளர்த்த மகன் தவறு செய்துவிட்டானே என்ற குமுறல் ஒரு பக்கம் என்றால். . . , செய்த தவறுக்கு மன்னிப்பை வேண்டி நிற்கும் அவனிடம் நேரடியாக அவரால் முகம் திருப்ப முடியாததே அதற்குக் காரணம்.

அதற்காக அவனை மன்னிக்கவும் முடியவில்லையே. . . , தனக்குள் மறுகிக் கொண்டிருந்தார்.

அவர் அறைக் கதவைத் தட்டிவிட்டு, உள்ளே நுழைய, படுக்கையில் அமர்ந்து தலையைத் தாங்கிக் கொண்டிருந்தவர், மெதுவாக நிமிர்ந்து பார்த்தார். தன் மகனின் காலடி சுவடு அவருக்குத் தெரியாதா என்ன?

"அம்மா..." பசுவைப் பிரிந்த கன்றாக அவனது குரல் ஒலிக்க, அதற்குமேல் தன்னை கட்டுப்படுத்த அவரால் முடியவில்லை.

"ராஜா..." நெகிழ்வாய் அழைக்க, ஓடிபோய் அவரை கழுத்தோடு கட்டிக் கொண்டான். அவன் தேகம் குலுங்கவே..., அவன் அழுகிறான் என்பது புரிய, "ம்ச்..., இப்படி அழுதுட்டே இருந்தால் ஆச்சா? நிஹா என்ன சொன்னாள்? உன்னை மன்னித்து விட்டாளா?" அவன் முதுகை ஆதரவாக தடவியவாறு வினவினார்.

"இல்லம்மா..., என்னைப் பார்க்கவே முடியாதுன்னு சொல்லிட்டா...., இன்னொரு முறை அங்கே போனால்..., அவளை உயிரோட பாக்கவே முடியாதுன்னு சொல்லிட்டாம்மா..." இறுதியாக அவள் வார்த்தைகள், அவன் காதில் இன்னும் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

"ஓ..." அவர் குரலிலும் ஏமாற்றம். அவனை தன்னிடமிருந்து விலக்கி, அவன் முகம் பார்த்தார்.

"ஆனா..., அத்த..., உங்களை அழைச்சுட்டு வந்து பேசச் சொன்னாங்க..." அவன் முகம் வேதனையில் கசங்கிப் போனது.

"அத்த துடிச்சுப் போய்ட்டாங்கம்மா..., என் ஒருத்தனால் எவ்வளவு பேருக்கு மனக் கஷ்டம். இந்த உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்றால்..., ஹாசினியை விட்டுட்டு..., இங்கே போராட விட்டுட்டு என்னால் போக முடியலம்மா..." முகத்தை அழுந்த துடைத்து, தன் வேதனையை குறைக்க முயன்றான்.

அவனது உயிரை மாய்க்கும் செய்கை..., அவர் உயிரையே ஆடச் செய்தது. மரணம் எதற்கும் ஒரு தீர்வாகாது என்றாலும்..., அவனை நம்பி எத்தனை ஜீவன்கள் இங்கே இருக்கின்றன. அவனை உயிருக்கு இணையாக நேசிக்கும்

நான்குபேர்..., அவன் தவறு செய்தவுடன் கைவிட்டு விட்டேனே..., அவனுக்கு பக்கபலமாக இருந்திருக்க வேண்டாமா? அப்படி செய்திருந்தால் அவனுக்கு இப்படி ஒரு எண்ணம் வந்திருக்காதே...

வேகமாக அவன் வாயை மூடியவர்..., "அப்போ..., இந்த வீட்டில் இருக்கும் நாங்க எல்லாம்...?" அவன் தாடையைப் பிடித்து நிமிர்த்தி ஆத்திரமாக வினவ,

"என்னால் உங்களுக்கு அவமானம் தானேம்மா..., தேவையில்லாத மனக் கஷ்டம்..., இதெல்லாம் இல்லாமல் போய்டுமே..., என்னை தவிர்க்கும் தர்ம சங்கடம் உங்களுக்கு நேராது..." அவரது பிரிவு தன்னை பெருமளவு பாதித்திருப்பதை வார்த்தைகளில் வடித்தான்.

"ராஜா... அப்படிச் சொல்லாதே..., இப்போ என்ன...., நிஹா இங்கே வர வேண்டும் அவ்வளவு தானே..., நான் போய் பேசறேன்..." செய்த தவறுக்கு மன்னிப்பையும், பிராயச்சித்தத்தையும் எதிர்பார்க்கும் அவனை தண்டிப்பது பெரும் தவறாகவே அவருக்குத் தோன்றியது.

"தேங்க்ஸ்ம்மா..." தன் முகத்தை வேகமாக துடைத்துக் கொண்டான். அவனது அழைப்பு...., இப்பொழுதுதான் அவர் மனதையும் கொஞ்சம் இலகுவாக்கியது.

தன் முந்தானையால் அவன் முகத்தை துடைத்தவர்..., "முதல்ல போய் ஷேவ் பண்ணு..., இதென்ன கோலம்..., இந்த கோலத்தில் அவ உன்னைப் பார்த்தால்..., அவளுக்கே உன்னை அடையாளம் தெரியாது...." அந்த நிமிடம்தான்..., அவன் மனது சற்று இலகுவானது.

"ஓகேம்மா..." உடனே இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

அவனைத் தடுத்தவர்..., "முதல்ல நாங்க போய் பேசிட்டு..., பிறகு..., முறையா சடங்கைச் செய்யலாம்...." துளசியின் மனநிலை இப்பொழுது எப்படி இருக்கும் என்பதை சுஜாவால் கற்பனை செய்யவே

முடியவில்லை.

கிட்டத்தட்ட ஒரு மாதம் முடியும் தருவாயில் கூட தன்னால் இதை ஜீரணிக்க முடியாத பொழுது..., இத்தனை நாள் கழித்து..., இப்பொழுது உண்மை தெரிந்த அவருக்கு எப்படி இருக்கும்....

அவன் அறையை விட்டு வெளியேற..., அவன் எதிரில் வந்தார் தாரிணி. ஒரு நிமிடம் அவரை ஏறிடவே தயங்கியவன்..., "மன்னி..., சுஜாம்மா கூட நீங்களும் நிஹா வீட்டுக்குப் போகணும்..." சிறு கோரிக்கையாகவே வைத்தான்.

அவன் சிகையை மெதுவாக கோதியவர்..., "எல்லாம் அந்த பகவான் பாத்துப்பான். நீ போ..." அவனை அனுப்பினார்.

அடுத்த நாளே...., அவர்கள் நிஹாசினி வீட்டுக்குச் செல்ல..., அங்கே சென்ற சற்று நேரத்துக்கு..., துளசியிடம் என்ன பேசுவது என்றே அவர்களுக்குத் தெரியவில்லை.

சமாதானம் சொல்லும் விஷயமா இது...? ஆறுதல் சொல்ல முடியுமா என்ன...? தயக்கம் அவர்கள் வாயைக் கட்டிப் போட, துளசியின் கையை பற்றிய சுஜா..., "ராஜா ரொம்ப நல்லவன்தான்...., ஆனால்..., ஒரு நொடி, அதில் இருந்து தவறிட்டான். அது மிகப்பெரும் இழப்பில் கொண்டு நிறுத்திடுச்சுன்னு எனக்கு நல்லா புரியுது.

"ஒண்ணு மட்டும் சொல்றேன்...., நிஹா எங்க வீட்டுப் பொண்ணு. அவளை அவன் என்னைக்கு விரும்புகிறேன்னு என்கிட்டே சொன்னானோ..., அந்த நிமிஷமே அவ எங்க குடும்பத்தில் ஒருத்தி ஆகிட்டா. நடந்த தவறை நிச்சயம் மாற்ற முடியாது..., ஆனா..., அதை திருத்திக்க முடியும். அப்படி ஒரு சந்தர்ப்பத்தைத்தான் உங்ககிட்டே நாங்க யாசிக்கறோம்..." அவர் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டார்.

"மாப்பிள்ளை உங்க வீட்டில் விஷயத்தை சொல்லிட்டார்..., என் பொண்ணு, இந்த நிமிஷம் வரைக்கும் வாயைத் தொறக்கலையே..., அப்போ அவ மனசுக்குள்ளே என்ன இருக்குன்னு நீங்களே புரிஞ்சுக்கோங்க.

ஆனால்..., அவ மனசுக்குள் நிறைய கோபம் இருக்கு...

"விஷயம் எனக்குத் தெரியாததாகவே இருக்கட்டும். எனக்கும் தெரிந்துவிட்டது என அவளுக்குத் தெரிந்தால்..., அவ படும் துன்பத்தை என்னால் தாங்க முடியாது. அதுதான் அவ ரூம்..." கை காட்டிவிட்டு..., அடுத்த அறைக்குள் சென்று அடைந்து கொண்டார்.

எந்த ஒரு தாயாலும் ஜீரணிக்கவே முடியாத விஷயம் இது. ஆனாலும்..., ராஜாவை காட்டிகொடுக்காத அவள் செய்கை..., அவள் மனதுக்குள் அவன் இருக்கும் அளவை காட்டுகிறது தானே..., ராஜாவும்..., தவறு செய்துவிட்டு ஓடி ஒளியாமல்..., விடாமல் அவளைக் காண முயன்ற விதம்..., நிச்சயம் தன் மகள் என்றாவது ஒருநாள் அவனை ஏற்றுக் கொள்வாள் என்றே எண்ணினார்.

நிஹாவின் அறைக்குள் கதவைத் தட்டிவிட்டு அவர்கள் நுழைய..., அங்கே இருந்த டேபிள் முன்னால் அமர்ந்திருந்தவள், கேள்வியாக அவர்களை ஏறிட்டாள்.

நிஹாவின் நலுங்கிய தோற்றமும், வாடிய முகமும், அழுது வீங்கிய கண்களும், காய்ச்சலால் துவண்டிருந்த தேகத்தையும் கண்ட சுஜாவுக்கு, அவள்பால் இரக்கம் பீறிட்டது.

'எப்படி தவித்திருப்பாள்...' உள்ளம் உருக, "நிஹா..." அழைத்த சுஜா..., வேகமாகச் சென்று அவளை தன் நெஞ்சோடு அணைத்தவர், அவள் தலையில் இதழ் பதித்தார்.

அவர் செய்கையில் திடுக்கிட்ட நிஹா..., "நீங்க...?" அவரை நிமிர்ந்து பார்த்தாள். ஓரளவுக்கு அவளால் யூகிக்க முடிகிறதுதானே...., 'ராஜாவின் உறவா இவர்கள்...?' கேள்வி மனதுக்குள் ஓடியது.

ராஜாவுக்கும் சுஜாவுக்கும் உருவ ஒற்றுமை இருந்திருந்தால் உடனே கண்டு பிடித்திருப்பாளோ என்னவோ...?

"நான் ராஜாவோட அம்மா..." அவர் தன்னை அறிமுகப்படுத்த, அவரது முகத்தின் கனிவும், அரவணைப்பும் அவளுக்கு ஆறுதலாக இருந்தாலும், அதையும் மீறி..., 'நடந்ததை இவர்களிடம் சொல்லி விட்டாரா? அவர் எப்படி இதைச் செய்யலாம்...?' கோபம் பீரிட்டு எழுந்தது.

அவள் கோபத்தையும் மீறி..., அவள் பார்வை அவர் முதுகின் பின்னால் ஒரு தேடலோடு துழாவியது. தான் தேடியது கிடைக்காத ஏமாற்றம் முகத்தில் அறைய..., மனம் இறுகிப் போனது.

அதைவிட, தாயின் பின்னால் ஒளிந்துகொண்ட அவனது கோழைத்தனம்.., மனதை எரியச் செய்தது. இத்தனை நாட்களாக அவன் வருவான்..., தன்னை வந்து சந்திப்பான்..., அனைத்தையும் எதிர்கொள்வான் என எண்ணியிருக்க, தன் நம்பிக்கையை பொய்யாக்கிவிட்டு, இவர்களை அனுப்பி இருக்கிறானா?

வேகமாக அவரை விட்டு விலகியவள்..., சூடாகவே அவரைப் பார்த்தாள்.

"உங்க பையன் செய்ததற்கு நியாயம் கற்பிக்க வந்தீங்களா? அப்படி என்ன நியாயத்தை உங்களால் சொல்ல முடியும்...?" வார்த்தைகள் அம்பாகத்தான் வெளி வந்தது.

"நாங்க எதையும் நியாயப்படுத்த வரலை. நடந்த தவறை சரி செய்ய வந்திருக்கிறோம்..." தன்மையாகவே உரைத்தார்.

"சரி செய்வதா? அது உங்களால் முடியுமா...? உங்கள் பொண்ணுக்கு இப்படி நடந்திருந்தால் இப்படித்தான் நடந்துப்பீங்களா?" வெட்டும் விழிகளால் கேட்டாள்.

"உன் வாயால் அப்படிச் சொல்லாதே நிஹா. ராஜா ரொம்ப நல்லவன்..."

"நல்லவன் செய்யும் காரியமா இது...? என் பெண்மையை நாசம் செய்துவிட்டு, இப்போ உங்களை அனுப்பி இருக்கிறாரா? என்னவொரு

நல்லவர்..., பாராட்டத்தான் வேணும்..." எள்ளலாக உரைத்தாலும், கண்களில் வழியும் கண்ணீர் எதனால்?

'இதற்கு என்ன பதில் சொல்வது...? சுஜா அமைதியாக...,

"இப்போ எதற்கு இங்கே வந்துருக்கீங்க...? நான் செத்துட்டனா? இல்ல உயிரோட இருக்கேனா என்று பார்த்துவிட்டு வரச் சொன்னாரா உங்கள் நல்லவர்...?" தன் விழி நீரை சுண்டியவளாக கேட்டாள்.

"நிஹா..., அப்படிச் சொல்லாதேம்மா...? அவன் அங்கே துடிப்பது எங்களுக்குத் தெரியும். உன்னை அவன் அருகில் பார்க்காமல் அவனால் உயிர்ப்போடு இருக்க முடியாது. தயவு செய்து நடந்த தவறை வைத்து அவனை எடை போட்டு விடாதே. உன்னை எங்க வீட்டுக்கு முறைப்படி அழைத்துச் செல்லத்தான் நாங்கள் வந்திருக்கிறோம்".

"இங்கே எல்லாம் முறைப்படிதான் நடக்கிறதா?" அவள் கேள்விக்கு பதில் சொல்ல அவர்களால் முடியவில்லை.

அவர்கள் அமைதியை கடைபிடிக்க, "உயிர்ப்போட இருக்குறதா...? இங்கே நான் செத்துகிட்டு இருக்கேன். அது தெரியலையா அவருக்கு...?" குரல் அடைத்தது.

"ராஜா ரொம்ப நல்லவன் நிஹா. உன்மேல் கொண்ட காதலால் தான், தன்னை மீறி தவறு செய்து விட்டான். திருமணம் முடிந்தால்.., உனக்கே அது புரியும்..." அவள் தவிப்பது தாங்காமல், அவளை சமாதானம் செய்ய முயன்றார்.

"அவர் நல்லவர் என்பதால் என்னை திருமணம் செய்யச் சொல்றீங்க..., இதுவே அவர் பொம்பளைப் பொறுக்கியாகவோ..., சேடிஸ்ட்டாகவோ இருந்திருந்தால்..., அப்பொழுதும் இதையேதான் சொல்வீங்களா? அப்போ..., எனக்கென்று ஒரு மனசு, அதற்குள் சில உணர்வுகள் இதெல்லாம் இருக்குன்னு உங்களுக்குப் புரியவே இல்லையா? அவர் செய்த காரியத்தை எந்த நல்லவனாவது செய்வானா...?" ஆத்திரமாக வினவினாள்.

“எங்களுக்கும் புரியுதும்மா...”.

“இல்ல..., உங்க யாருக்குமே என் மனசு புரியாது. அது படும் வேதனை புரியாது. அது நொறுங்கிப் போயிருப்பது தெரியாது. எனக்கு எதுவும் வேண்டாம். தயவு செய்து இங்கே இருந்து போய்டுங்க...” அவர்களை கையெடுத்துக் கும்பிட்டாள்.

“உன் கோபம் நியாயமானது நிஹா. ஆனால்..., ஒரு நிமிஷம் யோசித்துப் பார்..., உன் வாழ்க்கை இத்தோட நின்றுவிடாது. உன்னால் வேறு ஒருவனை திருமணம் செய்துகொண்டு, உறுத்தல் இல்லாமல் வாழ்ந்துவிடுவேன் என்று சொல்..., இப்படியே போய் விடுகிறேன்...” அவள் கையை பற்றி இறக்கினார்.

‘வேறு திருமணமா...?’ நெஞ்சு தகித்தது. அந்த வார்த்தையை கேட்கக் கூட பிடிக்கவில்லை.

“ஏன் உங்க நல்லவரையே நினைத்துக் கொண்டு இப்படியே இருந்து விடுவேன் என்ற எண்ணமா...? என்ன ஒரு குரூரம்...” அவர்களுக்கு வலிக்க வேண்டும் என்றே..., தன் நெஞ்சு வலிக்க வலிக்க அதை தாங்கிக்கொண்டு உரைத்தாள்.

“நீ அப்படி ஒரு முடிவுக்கு வந்தால்..., நிச்சயம் நானே உனக்கு நல்ல வரன் பார்க்கிறேன்...” அவர் பட்டென உரைக்க, உள்ளுக்குள் கொதித்துக் கொண்டு வந்தது.

“எனக்கு வரன் பார்க்க நீங்க யார்...? முதல்ல இங்கே இருந்து போங்க...” கூச்சல் போட்டாள்.

கோபத்தில் அவள் தேகம் மொத்தமும் நடுங்க..., படுக்கையில் தொப்பென அமர்ந்து
விட்டாள். வேகமாக அவளை நெருங்கியவர்..., அவள் தலையை பாசமாக வருடி...,

"உன்னை எங்க வீட்டுப் பொண்ணாகத்தான் நான் பார்க்கிறேன். உன் மன உணர்வுகளுக்கு நாங்க மதிப்பு கொடுத்தே ஆகணும்..." நிறுத்தினார்.

"எனக்கு இப்படி ஒரு தண்டனை என்றால்..., தப்பு செய்த அவருக்கு தண்டனையே கிடையாதா? அன்று நாலு சுவருக்குள் வரம்பு மீறி செய்ததை, உங்கள் அனைவரின் சம்மதத்தோடு செய்வதுதான் அவருக்கான தண்டனையா...?" உள்ளுக்குள் கொதிக்கிறது.
வேகமாக அவளைத் தாங்கியவர்...,

"நாசம் செய்தவனுக்கே அந்த பெண்ணை திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற குறுகிய மனம் படைத்தவர்கள் நாங்கள் இல்லை. இப்போ நீ கோபத்தில் பேசுறன்னு எனக்கு நல்லா தெரியுது. நிதானமா யோசி..., உன் முடிவு எதுவாக இருந்தாலும் அதை ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்..." அவள் நெற்றியில் இதழ் பதித்தவர்..., தாரிணியின் கண்களில் மறுப்பை உணர்ந்து, கண்களால் அவளை அடக்கியவராக அவள் அறையை விட்டு வெளியேறினார்.

நிஹாவின் வெடித்த அழுகை அவரின் முதுகின் பின்னால் ஒலிக்க, உள்ளே செல்லத் துடித்த கால்களை அடக்கி..., துளசியைத் தேடிச் சென்றார்.

துளசி முன்னறையில் அவர்களுக்காக காத்திருக்க..., "என்ன சொன்னா...? நீங்க என்ன முடிவு பண்ணி இருக்கீங்க...?" முகம் இறுக வினவினார்.

"நீங்க எப்போ சொல்றீங்களோ..., அப்போ நாங்க வந்து நிச்சயம் பண்றோம். நாம முடிவு செய்த நாளில் திருமணத்தை நடத்த எங்களுக்கு எந்த தடையும் இல்லை..., ஆனா..., நிஹா..., அவளோட காயம் பெருசு. அது ஆற நாள் ஆகும்..." தனக்குமே இது வேதனைதான் என்பதை உணர்த்த முயன்றார்.

"ம்..." சொல்வதற்குள் துளசியின் கண்கள் நீரில் பளபளத்தது.

"என்னதான் சொல்றா...?" குரல் தடுமாறியது.

“ராஜா நல்லவன் என்பதால் மட்டும் அவன் செய்ததை நியாயப்படுத்த முடியுமான்னு’ அவ கேட்பது சரி தானே. தவறு செய்தவனுக்கே கழுத்தை நீட்ட வேண்டிய கட்டாயம் தனக்கு இல்லைன்னு..., கோபத்தில் பேசறா..., நீங்க கலங்காதீங்க...” அவர் துவள்வது தாளாமல் தேற்றினார்.

“சம்பந்தியம்மா..., நடந்தது நிச்சயமா ஒரு விபத்து..., ஆனால் அதன் பின்விளைவுகள் இவ்வளவு பயங்கரமா இருக்கும் என்பதை ராஜா ஒரு நிமிஷம் யோசிக்காமல் செய்துட்டான். நாங்க உங்க கூடத்தான் இருக்கோம் என்பதை மட்டும் நீங்க புரிஞ்சுக்கணும். இதில் முழுக்க முழுக்க எல்லா தப்பும் எங்க பக்கம்தான்..., அதை நாங்க மறுக்கவும் இல்லை..., கூடிய சீக்கிரம் எல்லாம் நல்லபடியா நடக்கும்..., நாங்க வரோம்...” விடை பெற்றார்.

துளசிக்கோ..., மகளின் கோபம் புரிகிறது தானே..., அதற்காக அவள் சொல்வதுபோல், இன்னொருவனை மணம் முடிக்க அவள் நிச்சயம் சம்மதிக்க மாட்டாள். அவள் வார்த்தையைக் கொண்டுதான் அவளை மாற்ற வேண்டும்...’ அவள் எதிர்காலம் கண்முன்னால் மிரட்ட, ஒரு தாயாக முடிவெடுத்தார்.

ஆனால்..., அதன் விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக மாறப் போகிறது என்பதை அறிந்திருந்தால் இதைச் செய்திருக்க மாட்டாரோ?

ராஜாவுக்கோ..., அவள் கேட்ட கேள்விகள் அனைத்தும் சம்பட்டி அடியாய் மனதுக்குள் இறங்கியது. அவள் கேட்பது நியாயம் தானே..., எனக்கு என்ன தண்டனை...? அவன் இதயம் பாரமாய் கனக்கும் உணர்வு.

கடைக்குப் போகவில்லை..., அலுவலகம் செல்லவில்லை..., பித்துப் பிடித்த உணர்வில் தத்தளித்தான்.

அதே நேரம்..., அவனைத் தேடி அவன் அலுவலகம் வந்திருந்தான் சீனிவாசன். உமாவை அணுகியவன்..., “ராஜா எங்கே? போன் செய்தாலும் எடுக்கவில்லை. எங்கேயாவது வெளியூர் போயிருக்கானா?”

அவளிடம் கேட்டான்.

"சார் வெளியூர் எங்கேயும் போகவில்லை. ஆனா இங்கேயும் வந்து ஒரு மாசம் ஆகுது..., இதற்குமேல் ஏதாவது தெரிய வேண்டும் என்றால் விநாயகத்துக்குத் தெரியும். நான் அவரைக் கூப்பிடுறேன்..." மேஜைமேல் இருந்த தொலைபேசியில் இருந்து இன்டர்காமில் அவனை அழைத்தாள்.

அங்கே வந்த விநாயக்..., "வாடா..., என்ன இந்தப் பக்கம்...".

"ராஜாவை காண்டெக்ட் பண்ணவே முடியலை. அதான்..., நேரிலேயே வந்து பார்க்கலாம்னு வந்தேன். ஆனால்..., இங்கேயும் ஒரு மாசமா வரலன்னு சொல்றாங்க..." தாடையைத் தேய்த்தான்.

"நீ வா..., பேசலாம்..." அவனை அழைத்துக்கொண்டு, அருகில் இருந்த காபி ஷாப்புக்குச் சென்றான்.

ஆளுக்கொரு கோல்ட் காபியை ஆடர் செய்தவன், அதை வாங்கிக் கொண்டு அவன் எதிரில் அமர்ந்தான்.

"என்னடா..., ஏதாவது இஷ்யூவா..., உன் முகமே சரியில்லை..." காபியை மெதுவாக உறிஞ்சியவாறு கேட்டான்.

"எனக்கு சரியா சொல்லத் தெரியலை..., ஆனா..., நிஹாசினியும் ஒரு மாசமா ஆபீஸ் வரலை. நடுவில் அவன் வீட்டுக்குப் போய் அவனைப் பார்த்தால்..., தாடியெல்லாம் வச்சுட்டு..., எதையோ பறிகொடுத்தவன் மாதிரி இருந்தான்.

"அவளை பெண்கேட்டுப் போவதா வேற சொல்லிட்டு இருந்தான். அப்படியே நிஹாசினி மறுத்திருந்தால் கூட..., அவன் இப்படி இருக்க நியாயம் இல்லை. ஏன்னா..., அவனைப் பத்தி எனக்கு நல்லா தெரியும். இது வேற ஏதோ..., என்கிட்டே எதுவும் அவன் சொல்லலை..., நீ வேண்ணா அவன் வீட்டுக்குப் போய் பார்..., அங்கேதான் இருப்பான்..." வாங்கிய காபி சீண்டப்படாமல் அப்படியே இருந்தது.

"அப்படியா சொல்ற...? சரி நான் அவன் வீட்டுக்கே போய் பாக்கறேன்..." கிளம்பினான்.
அவன் வீட்டுக்குச் செல்ல..., "வாப்பா சீனி..., ராஜா ரூமில்தான் இருக்கான் போய் பார்..." அவன் யாரைப் பார்க்க வந்திருப்பான் என்பதால் அவனை மேலே அனுப்பினார்.

ராஜாவின் தளத்தில்..., அவன் அறை திறந்து கிடக்க..., உள்ளே நுழைந்தவன், அவனைப் பெயர் சொல்லி அழைக்க, அவன் குரலுக்கு எதிர்வினை இருக்கவில்லை.

'ஒரு வேளை இங்கே இல்லையோ...?' அவன் யோசிக்க..., அவன் அறையின் பாலக்கனி கதவு திறந்திருக்கவே..., அங்கே சென்றான்.

ராஜாவோ..., பார்வையை வானத்தில் நிலைக்கவிட்டு, அங்கே கவனம் இல்லாதவனாக இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டான்.

"ராஜா..." அவனை அழைக்க, தன் பார்வையைத் திருப்பியவன், சீனிவாசனைப் பார்த்து...,
"வாடா..., என்னை அரஸ் பண்ண வந்தியா..? ஆமா..., அதுவும் நல்லதுதான். வா போகலாம்..." என்ன பேசுகிறோம்..., எதைச் செய்கிறோம் எனத் தெரியாமல் பிதற்றினான்.

"தன்னைக் கடந்து போக முயன்றவனைத் தடுத்தவன்..., "அரஸ் பண்றதா? உன்னையா...? எதுக்குடா...? நீயென்ன கொலையா செய்தாய்..?" அவனை உலுக்கினான்.

"அதைவிட பெரிய தப்பு..., துரோகம் பண்ணிட்டேன்..., நம்பியவளுக்கு துரோகம் பண்ணிட்டேன்..." அவன் தோள் சாய்ந்து கதறிவிட்டான்.

"ம்ச்.., டேய்..., முதல்ல இங்கே பார்..., எதுவாக இருந்தாலும் பேசித் தீர்த்துக்கலாம். முதல்ல நீ உக்கார்..." அவனை அமர வைத்தவன்

அறைக்குள் செல்ல, சுஜா அவனுக்காக காபி கொண்டு வந்தார்.

அதை வாங்கியவன்..., "என்ன ஆண்ட்டி..., என்னென்னவோ உளர்றான்..." அவரிடம் கேட்க, "நீங்க பேசுங்க..." அவனுக்கு பதில் சொல்லாமல் கிளம்பி விட்டார்.

அதற்குள்ளாகவே ராஜா சற்று தெளிந்திருக்க..., அவன் கையில் அந்த காபியைக் கொடுத்தவன், "இப்போ உனக்குத்தான் இது தேவை..., குடி..." அவன் கரத்தில் திணித்தான்.

மறுக்காமல் அதைக் குடித்தவன்..., அமைதியாகவே இருந்தான். சீனியின் போலீஸ் மூளை அதற்குள்ளாக விஷயத்தை கிரகித்திருக்க, "நிஹாசினி கல்யாணத்துக்கு ஒத்துக்கலையா...? அதற்காகவா நீ இப்படி இருக்கிறாய்..., நான் பேசறேண்டா..., போலீஸ்காரன் சொன்னால் கண்டிப்பா கேட்டுப்பாங்க..." தன் நினைவை மறைத்து, அந்த சூழலை இயல்பாக்க முயன்றான்.

அதன் பிறகு..., நிஹாசினியின் பேச்சையே எடுக்காமல்..., சாதாரணமாக உரையாடிவிட்டு அங்கிருந்து கிளம்பி விட்டான்.

அவனது வேலைச் சூழல் உடனடியாக நிஹாசினியின் வீட்டுக்குப் போக முடியாமல் தடை போட..., சில நாட்கள் உருண்டது.

ராஜாவுக்கோ..., நிஹாசினியின் பேச்சைக் கேட்ட பிறகு, அவள் முன்னால் சென்று நிற்கும் தைரியம் எழவே இல்லை. அத்தோடு..., சுஜா அவர்கள் வீட்டுக்கு சென்று வர..., ஒரு நல்ல முடிவுக்காக காத்திருந்தான்.

ஆனால்..., நிஹாசினியின் கோபம் கூடியதே தவிர குறையவில்லை. துளசியும்..., அவளை திருமணத்துக்கு வற்புறுத்த..., மனதளவில் கனன்றுகொண்டே இருந்தாள். துளசி இரவு வேளைகளில் அவளோடு தன் உறக்கத்தை மாற்றிக்கொள்ள...., 'தாய்க்கு தெரிந்திருக்குமோ...' என்ற பயம் வேறு அவளை மிரளச் செய்து கொண்டிருந்தது.

துளசிக்கோ... மகளின் பிடிவாதத்தை தளர்த்தும் வித்தை கைகூடவே இல்லை. அதற்கு துணை வந்தான் சீனிவாசன்.

அவனது தோற்றமே அவன் ஒரு போலீஸ் என்பதை அவருக்கு உணர்த்த, அந்த நொடி..., அதீத பீதிக்கு உள்ளானார் என்பதுதான் சரியாக இருக்கும். 'ராஜா எதுவும் கிறுக்குத்தனமாக செய்து விட்டானோ...? என் மகளை விசாரிக்க வந்திருக்கிறாரா? மகளது வாழ்க்கை, கௌரவம்...' எண்ணம் தறிகெட்டு ஓட,

அவர் முகத்தில் இருந்தே அவர் பயத்தை உணர்ந்தவன்..., "நான் ராஜாவோட ப்ரண்ட்..." ஹப்பா..., அந்த வார்த்தைகள் அளித்த நிம்மதியை வேறு எதுவுமே அந்த நேரம் அவருக்கு கொடுத்திருக்க முடியாது.

கிரில்லைத் திறந்தவர்..., அந்த முன்னறையின் இருக்கையைச் சுட்ட, அதில் அமர்ந்தவன்..., "ராஜா ரொம்ப வெக்ஸ் ஆகி இருக்கிறான். அவனை இப்படி நான் பார்த்ததே இல்லை. அதான்..., அவன்மேல் என்ன கோபமாக இருந்தாலும், அவன் கூடவே இருந்து அவங்களை சண்டை போடச் சொல்லலாம்னு வந்தேன்..." தன் நண்பன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கை அதில் மின்னியது.

துளசிக்குமே..., ராஜா நல்லவன் என்பதில் மாற்றுக்கருத்து இல்லைதான். ஆனால்..., சூழ்நிலை எதிராக நிற்கையில்..., இவனுக்கு எந்த அளவு உண்மை தெரியுமோ..., என்ற உணர்வும் எழ, சட்டென அவருக்கு யோசனை மின்ன..., "அவ மாப்பிள்ளை மேலே சின்ன கோபத்தில் இருக்கா அவ்வளவுதான். கூடிய சீக்கிரம் கல்யாணத்துக்கு சம்மதிச்சுடுவா..., இப்போ நீங்க பேச எதுவும் இல்லை..." அவர்கள் சந்திப்பதை தவிர்த்தார்.

அதை உணர்ந்தவன்..., "அப்போ சரி..., நான் கிளம்பறேன்..." எழுந்து கொண்டான்.

அவன் செல்லவே..., தன் மகளிடம் வந்தவர்..., தன் யோசனையை செயல்படுத்த முனைந்தார். வீட்டின் அழைப்புமணி ஓசையிலேயே யாரோ

வந்திருப்பதை உணர்ந்த நிஹாசினி, தாயை கேள்வியாக ஏறிட, "நீ ராஜாவை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கற..., நானும் எவ்வளவு நாள்தான் பொறுப்பது..., அதான்..., நீங்களே வேற மாப்பிள்ளை பாருங்கன்னு அவங்க கிட்டே சொல்லியிருந்தேன்.

"அதான்..., ராஜாவே உனக்கு வேற மாப்பிள்ளை பாத்திருக்காராம். அவன்தான் இப்போ வந்திருக்கிறான்..., எழுந்து வந்து அவர்கிட்டே பேசு. இதற்குமேல் என்னால் பொறுமையாக இருக்க முடியாது..." அப்பட்டமான பொய்தான்..., மகள் எதைச் சொன்னால் குழம்பித் தவிப்பாள் என்பது ஒரு பெண்ணான அவருக்குத் தெரியாதா?

அது சிறப்பாக வேலை செய்தது. "ஓ..., அவரே வேற மாப்பிள்ளை பார்த்திருக்காரா...? அவ்வளவு தைரியம் அவருக்கு இருக்கா? பாத்துக்கறேன். நீங்க போங்க..., இப்போ என்னால் யாரையும் பாக்க முடியாதுன்னு போய் சொல்லுங்க..." தேகம் முழுவதும் பற்றி எரியும் உணர்வு.

எவ்வளவு சுலபமாக என்னை விலக்கிவிட முடிவு செய்து விட்டான். நான் காலம் முழுக்க குற்ற உணர்வில் தவிக்க..., அவர் மட்டும் சந்தோஷமா இருப்பாராமா..., விட மாட்டேன்..., எப்படி நிம்மதியா இருக்கார்ன்னு நானும் பாக்கறேன்...' அவளது அந்த கோபம்..., அவனோடான திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தது.

அவள் கோபத்தை ராஜாவால் தாங்க முடியுமா?

பகுதி - 24.

ராஜா மிகுந்த சந்தோஷத்தில் இருந்தான். நிஹாசினி திருமணத்துக்கு சம்மதித்துவிட்டாள் என துளசி போன் செய்ததால் வந்த சந்தோசம் அது. எவ்வளவு முடியுமோ..., அவ்வளவு சீக்கிரம் திருமணத்தை வைக்க முடிவெடுத்தார்கள்.

அதற்கு முன்பாக, நிஹாசினியை ஒரு முறை தனிமையில் சந்திக்க

விரும்பினான். எனவே..., அவள் வீட்டுக்கு கிளம்பிச் சென்றான். அவளைப் பார்த்து ஒரு மாதத்துக்கும் மேலாகி விட்டது என்பதை நினைக்கையிலேயே..., எப்பொழுது அவளைக் காண்போம் என தவித்துப் போனான்.

ஆனால்..., அவனது சந்தோஷத்துக்கு மாறாக.., நிஹாசினி வேதனையிலும் வெறுப்பிலும் வெந்து கொண்டிருந்தாள். இத்தனை நாளாக அவன் தன்னை வந்து காணவில்லையே என்பது ஒரு கோபமென்றால்..., தனக்காக அவன் மாப்பிள்ளை பார்த்தது..., அவன் கையில் கிடைத்தால் துவம்சம் செய்துவிடும் வேகம் எழுந்தது.

நிச்சயம் அவன் இன்று வருவான்..., அப்பொழுது அவனை ஒரு வழி செய்ய தருணம் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் இன்னுமொரு விஷயம் அவள் நெஞ்சில் இடியாய் இறங்கியது.

அன்று காலையில்..., பள்ளி செல்ல கிளம்பிக் கொண்டிருந்த வினோ..., "அம்மா..., இந்த டேர்ம் பீஸ் கட்ட இன்னைக்குதான் லாஸ்ட் டேட்..., ஸ்கூல்க்கு வரீங்களா இல்லையா...?" கோபமாக கத்திக் கொண்டிருந்தாள்.

பீஸ் கட்ட தாமதித்தால்..., கட்டாதவர்களின் லிஸ்ட்டை வகுப்பறையில் வாசிப்பார்கள் என்பதால்..., அந்த இக்கட்டில் இருந்து தப்பவே தாயை கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"அதுக்கு ஏண்டி கத்துற...? நீ போ..., நான் வந்து பே பண்றேன். இப்போ வந்தால் ரொம்ப ரஷ்ஷா இருக்கும்..." கைவேலையாய் இருந்தவர் குரல் கொடுத்தார்.

"அப்போ சரி..., அக்கா, நான் ஸ்கூல்க்கு கிளம்பறேன்..." அவள் அறை வாயிலில் இருந்து கத்தியவள் கிளம்பிவிட்டாள்.

தங்கை சென்ற பிறகுதான்..., காலண்டரைப் பார்த்தவள் அதிர்ந்து போனாள். 'இந்த மாதம் இன்னும் வீட்டுக்கு தூரமாகவில்லையே..' அவள் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது.

'அப்படியென்றால்...?' அவள் கைகள் தாமாகவே அவள் அடி வயிற்றை வருடியது.

'இதை எதிர்பார்த்திருக்க வேண்டுமோ...? எப்படி...? ஒரு நாள் உறவில் பிள்ளையா..?' அவளால் இதை எப்படி எடுக்கவென்றே தெரியவில்லை. 'அப்படி இருக்காது...' என தன்னைத் தானே சமாதானம் செய்ய வழியின்றி துடித்தாள்.

மாதம் தவறாமல் வீட்டு விலக்காக இருப்பவளாயிற்றே. இந்த மாதம் மட்டும் தள்ளிப் போயிருக்கிறது என்றால்....

தவறு செய்தவன் சுகமாய் சுற்ற, தண்டனை மொத்தத்தையும் தான் மட்டுமே சுமக்கும் உணர்வு. 'ஹையோ...' வாய் விட்டு கதறக் கூட முடியவில்லை.

'அம்மாவிடம் சொல்லி விடுவோமா...? இப்போ என்ன செய்ய...? ராஜ்...' அந்த நேரம் அவன் அருகாமை மட்டுமே அவளுக்கு தைரியம் கொடுக்கும் என்ற எண்ணம். அது எழவே..., அந்த நினைப்பை கூட வெறுத்தாள்.

கண்கள் தாமாக கண்ணீர் சிந்த..., வயிற்றை பற்றிக்கொண்டு சுருண்டு படுத்துவிட்டாள். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட, காலையில் இருந்த தலை சுற்றலும், வாந்தியும் காய்ச்சலின் தாக்கம் என நினைத்தாளே தவிர, இப்படி என எண்ணவில்லையே...

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ..., அவள் தாய் வந்து..., "நிஹா..., நான் வினோவோட ஸ்கூல்க்கு போய் பீஸ் கட்டிட்டு, அப்படியே கொஞ்சம் பூ பழம் எல்லாம் வாங்கிட்டு வரேன். நீ எழுந்து சாப்பிடு... கேட்டை பூட்டிக்கோ..." சென்றுவிட்டார்.

தாய் சொன்னதைக் கூட செய்ய முடியாமல்..., படுக்கையிலேயே உழன்றாள். 'இந்த திருமணம் நடந்தே ஆக வேண்டும்..., இல்லையென்றால்...' நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

தாய் இல்லை என்ற தைரியத்தில்..., வாய் விட்டு அவள் அழ, அந்த நேரம் அவள் வீட்டுக்கு வந்த ராஜாவை அந்த குரல் தீண்டி துடிக்கச் செய்தது.

'கிரில் லாக்ல இல்லாமல் இருக்கு..., அப்போ ஹாசினி மட்டும் தனியாக இருக்கிறாளா...?' எண்ணியவன், அடுத்த நிமிடம் வீட்டுக்குள் பாய்ந்திருந்தான்.

இத்தனை நாளாக..., துளசிக்கு மதிப்பு கொடுத்து..., நிஹாசினியின் அறைக்குள் செல்ல அவன் முயன்றதில்லை. ஆனால் இன்று..., அவளது அழுகை..., அவளது தனிமை..., எதையும் அவன் யோசிக்கவில்லை.

படாரென அவள் அறைக்கதவைத் தள்ளிவிட்டு, அவள் அறைக்குள் பாய்ந்தவன்..., "ஹாசினி..." அவன் அழைப்புக்குத்தான் எவ்வளவு பெரிய சக்தி.

ஒரு நொடி..., நிஹாசினிக்கு தன் கோபம், ஏமாற்றம் எதுவும் நினைவில் இல்லை. "ராஜ்..." படுக்கையில் இருந்து ஒரே தாவலில் எழுந்தவள், கேவலாக அழைத்தாள்.

அவ்வளவுதான்..., அடுத்த நொடி..., அவனது இறுகிய அணைப்புக்குள் இருந்தாள் நிஹாசினி. ஒரு நொடிக்குள் ஆயிரம் முத்தம்..., அவள் முகம் முழுக்க பதித்தான். அந்த இதழ் தீண்டல் அவளுக்கு தேவையாகத்தான் இருந்ததோ? தன் மனம் லேசாகிப் போனதை அவளால் உணர முடிந்தது.

அது தாளாமல்..., அவள் வெடித்து அழ, மொத்தமாக அவளை தனக்குள் இறுக்க முயன்றவனாக..., "இல்லம்மா..., அழாதே..., அதான் நான் வந்துட்டேன் இல்ல. எல்லாம் சரியாப் போய்டும். என் செல்லம் இல்ல..." அவளது கதறல் தாங்காமல்..., கலங்கிய குரலில் தானும் ஆறுதல் அளித்தான்.

அவளது அழுகை அதிகரிக்கவே..., என்ன செய்து அவள் அழுகையை

நிறுத்தவென்று தெரியாமல் தவித்துப் போனான்.

"என்னை மன்னிச்சுடும்மா..., இத்தனை நான் உன்னை தனியா தவிக்க விட்டுட்டேன் இல்ல...." அவ்வளவுதான்..., அவ்வளவு நேரமாக அவளைச் சுற்றியிருந்த மாயக் கயிறு அவிழ்ந்து விழ, ஒரே உதறலில் அவனைத் தள்ளி விட்டாள்.

இதை எதிர்பாராத ராஜா..., படுக்கையில் சென்று விழ, "ஹாசினி..." வேகமாக எழுந்தான்.
அவளை மீண்டும் தனக்குள் கொண்டுவர முயல, அவன் அணைப்பு தன்னை பலவீனமாக்குவதை உணர்ந்தவள், "என்னைத் தொடாதீங்க. என் கிட்டே வந்தால்..., நான் இல்லாமலே போய்டுவேன்..." அவ்வளவுதான்..., அடுத்த அடியை எடுத்து வைக்கும் தைரியம் அவனுக்கு வரவில்லை.

"ஒரு சந்தோஷமான விஷயம் சொல்லவா...? நீங்க அப்பா ஆகப் போறீங்க. உங்க புள்ளை என் வயிற்றில் வளருது. சந்தோஷமா...?" ஆங்காரமாக வினவ, அவள் கோபத்தை விட, அவள் வார்த்தைகள் கொடுத்த சிலிர்ப்புதான் அவனிடம் அதிகம் இருந்தது.

"ஹேய்..., பியூட்டி..." அவன் சந்தோசம் அப்பட்டமாக அவன் வார்த்தையிலும் முகத்திலும் தெரிய..., அவன் சந்தோசம் எரியும் கொள்ளியில் பெட்ரோலை ஊற்றிய உணர்வையே அவளுக்குக் கொடுத்தது.

அவனுக்கோ..., அவர்கள் வீட்டில் ஒரு மழலைச் செல்வத்தின் குரல் கேட்காதா என ஏங்கித் தவித்த தருணங்கள் கண்முன் நிழலாட, அந்த குறையைப் போக்க வந்த கடவுளாகவே நிஹாசினி தெரிந்தாள்.

"எனக்கு இந்த குழந்தை வேண்டாம்..." அவன் சந்தோசம் தாங்காமல், தன் வலியை அவன் உணராத வேகமும் சேர, கையை முஷ்ட்டியாக்கி தன் வயிற்றில் குத்த முயன்றாள்.

அவ்வளவுதான்..., அவள் தொடாதே எனச் சொன்னதுகூட மறந்து போக, ஒரே தாவலில் அவள் கைகளை கெட்டியாக பற்றிக் கொண்டான்.

"நோ..., ஹாசினி..., அப்படிச் சொல்லாதே. அது..., அது..., நம்ம குழந்தை..." , அவன் கண்கள் கலங்க...

"நம்ம குழந்தையா...? இல்லை..., இது ஒரு ஏமாற்றுக்காரனின் குழந்தை. என் சந்தோஷத்தை, நிம்மதியை அடியோட குழிதோண்டி புதைக்க வந்த குழந்தை..., இதை நான் என் வயிற்றில் சுமக்க மாட்டேன்..." இந்த நேரம் கூட, அவளது ஏமாற்றுக்காரன் என்ற வார்த்தைகள் அடிபட்டுப் போக, அவள் வயிற்றில் சுமக்க மாட்டேன் எனச் சொன்னது மட்டுமே நினைவில் நின்றது.

"இல்ல..., அந்த வார்த்தையை மட்டும் சொல்லாதே ஹாசினி... நான் தாங்க மாட்டேன். நம்ம குழந்தை..., அது எத்தனையோ பேரின் பாசத்துக்கு உரியது. எத்தனையோ பேரின் எதிர்பார்ப்பையும்..., ஏக்கத்தையும் பூர்த்தி செய்ய வந்திருக்கு..., எனக்கு நம்ம குழந்தை வேணும். இதை நான் செய்ய விட மாட்டேன்..." அவளிடம் உருகி நின்றான்.

"குழந்தை வேணுமா...? என்னை மீறி எப்படி நீங்க இதை செய்ய வைக்கறீங்கன்னு நானும் பாக்கத்தானே போறேன்..." அவனை காயப்படுத்திவிடும் வெறி..., அது மட்டுமே அவள் எண்ணமாக இருந்தது.

"உன்னால் இதை செய்ய முடியாது ஹாசினி..., எனக்குத் தெரியும்..."

"இந்த நினைப்புத்தானே..., என் மறுப்பையும் மீறி உங்களைத் தொடத் தூண்டியது. நீங்க சந்தோஷமா இருக்க..., நான் பாவத்தை சுமக்கணுமா?"

"பெரிய வார்த்தை எல்லாம் ஏன் பேசற...? நம்ம குழந்தை..., உனக்குப் பாவ சுமையா...?" அவள் வார்த்தைகள் அவனை குத்திக் கிழித்தது.

"ஆமா..., ஆமா..., ஆமா..., இங்கே இருந்து போங்க..." தன் கையை வாசலுக்கு நேராக நீட்டினாள்.

"இல்லை..., நான் உன்னை விட்டு போக மாட்டேன்..." அவளை இந்த நிலைமையில் விட்டுப் போக முடியாது என்ற அர்த்தத்தில் அவன் உரைக்க, அவன் குழந்தையை விட்டு போக முடியாது எனச் சொல்வதாக அவள் எண்ணிக் கொண்டாள்.

"ஓ..., பிள்ளைப்பாசம் துடிக்குதோ...? அப்போ நான்...?"

"நீ என் உயிர் ஹாசினி..."

"அப்படி நினைப்பவர்தான் இத்தனை நாள் ஓடி ஒளிஞ்ஜீங்களா...? அம்மா முதுகு பின்னாடி சவாரி செய்தீங்களா?" அவளுக்கு ஆறவே இல்லை.

"உன்னை விட்டு ஓடி ஒளிவதா? என்னால் அது முடியுமா?" தவித்தான்.

"நீங்க என்ன சொன்னாலும் என் முடிவில் இருந்து நான் மாறத் தயாரா இல்லை..." அவள் பிடிவாதத்தை தளர்த்த முடியாமல் சோர்ந்தான்.

அவளுக்கோ..., இந்த பிள்ளை இல்லையென்றால்...., தன்னை இன்னொருவனுக்கு தாரை வார்த்திருப்பான் என்றே தோன்றியது.

ராஜா..., உடனடியாக தன் தாயை அழைத்து விஷயத்தை உரைக்க, அதற்கும் அவளுக்கு கோபமே எழுந்தது. 'எவ்வளவு சுலபமாக தங்கள் பிரத்தியேக உணர்வுகளை, விஷயத்தை பகிர்ந்து கொள்கிறான்...' கோபம் கனன்றது.

"அவங்க வந்தால் மட்டும்..." ஆத்திரமாக வினவ, அடுத்த அரைமணி நேரத்தில் சுஜாவும், தாரிணியும் அங்கே இருந்தார்கள்.

"அம்மா..., எங்க குழந்தையை..., குழந்தை..., அவளுக்கு வேண்டாமாம்மா..., என்னால் இதை தாங்கவே முடியலம்மா..." தாயிடம் கதறினான்.

சுஜா, நிஹாசினியிடம் பேசும் முன்பாகவே..., அவளை அணுகியிருந்தார்

தாரிணி.

"நிஹா..." அவளை அழைக்க..., 'என் முடிவை மாற்ற முடியாது என்பதுபோல் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"அம்மாடி...., உன் வயிற்றுக்குள் இருப்பது ஒரு உயிர் மட்டுமில்லை..., ஒரு தலைமுறையாக நாங்கள் தவமிருக்கும் எங்கள் உலகம்..., எதிர்பார்ப்பு. அதை..., அழித்துவிடுவேன்னு ஒரு பேச்சுக்கு கூட சொல்லாதே. அதைத் தாங்கும் சக்தி எங்க யாருக்குமே இல்லை..." அவள் பேச்சைக் கேட்டு, ராஜாவும் சுஜாவும் நிஹாசினியின் அறைக்குள் நுழைந்தார்கள்.

"இப்போ கூட..., நீங்க..., உங்க உலகம்..., எதிபார்ப்பு..., இது மட்டும்தான் இல்ல. அப்போ நான்...? என் உணர்வுகள்..., இதற்கெல்லாம் மதிப்பே இல்லையா...? சுயநலம்..., சுயநலம்..." வெடித்தாள்.

"அப்படி இல்லை நிஹா..., இந்த ஒரு குழந்தைக்காக எங்கள் குடும்பம் பட்ட கஷ்ட்டம்..., ஊருக்கு வேண்ணா எங்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் தெரியலாம். ஆனா..., நிஜத்தில்..., ஒரு துரதிஷ்ட குடும்பம் எங்களது. அதை போக்க வந்த மகாலஷ்மி நீ..., நீ இல்லாமல்..." அவள் புரிந்து கொள்ள வேண்டுமே என்ற வேகம் அவளிடம்.

"அதற்காகவெல்லாம் என்னால் பலியாக முடியாது..." தன் இத்தனைநாள் துன்பத்துக்கு..., தன் ஈகோவுக்கு தீனி போட்டுக் கொண்டிருந்தாள் நிஹாசினி.

"நிஹா..., உன்கிட்டே மடிப்பிச்சை கேக்கறேன். எங்க குல விளக்கை எங்களுக்கு காப்பாத்திக் கொடுத்துடு..., உன் காலில் வேண்ணாலும் நான் விழறேன்..." நிஹாசினியின் காலில் விழப் போக..., வேகமாக நாலடி பின்னால் நகர்ந்தாள்.

"மன்னி..." "தாரிணி..." ராஜாவும் சுஜாவும் குரல் கொடுக்க..., "நீங்க சொல்லுங்க அக்கா..., நீங்க சொன்னால் நிச்சயம் அவ கேப்பா. குழந்தை..., ஹையோ..., என்னால் இதை யோசிக்கவே முடியலையே..." ஒரு குழந்தைக்காக தாரிணி படாத வலியா..., வேதனையா...?

நிஹாசினிக்கே ஒரு நொடி என்ன செய்வது..., சொல்வது என்ற குழப்பம்...? ராஜாவை வேதனைப்படுத்துவது மட்டுமே அவளது நோக்கம்..., ஆனால்..., இவர்கள்...? தானுமே மடிந்து அமர்ந்து அழுதாள்.

அவள் தலையை வருடிய சுஜா..., "நிஹா..., நீ ராஜாவை தண்டிக்க நினைப்பது புரியுது. ஆனால்..., இந்த குழந்தையை அழித்தால்..., உன்னாலேயே உன்னை மன்னிக்க முடியாது. ஒரு தப்புக்கு மிகப்பெரும் தண்டனையே மன்னிப்புதான்..., அதையேன் நீ யோசிக்க மறுக்கிறாய்?

"அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கணுமோ..., அதை அவனோட இருந்தே கொடு..." அவளைத் தேற்றினார்.

அதே நேரம்..., துளசி வீட்டுக்குள் வர..., "சம்பந்தியம்மா..., இன்னைக்கு சாயங்காலம் வரதா சொல்லி இருந்தீங்க..., இப்போ என்னன்னா...?" கேட்டுக் கொண்டிருந்தவருக்கு..., அங்கே இருந்த சூழல் சரியாகத் தோன்றவில்லை.

"என்ன...? எதுவும் பிரச்சனையா...?" தாய் அங்கே வரவே..., தவித்துப் போனாள் நிஹாசினி.

"அம்மா..." தன் இடத்தில் இருந்து எழுந்தவள், தாயின் கழுத்தை கட்டிக்கொள்ள, அவருக்கு உயிர் உதறியது.

சுஜா விஷயத்தை பக்குவமாக விளக்க..., துளசிக்கோ, மனதுக்குள் இடி இறங்கிய உணர்வு. தாய்க்கு விஷயம் தெரியவே..., நிஹாசினியின் தேகம் மொத்தமாக நடுங்கியது.

அதை உணர்ந்தவர்....., ஆறுதலாக அவளை வருடியவர்..., "நீங்க எல்லாம் இப்போ போயிட்டு வாங்க..., நான் கால் பண்றேன்..." துளசி உரைக்கவே..., அனைவரும் கிளம்பினார்கள்.

அவரை நெருங்கிய ராஜா..., "என் ஹாசினியை என்கிட்டேயே கொடுத்திடுங்க அத்த..., நான் இப்படியே அவளை கூட்டி போய்டுறேன். என்னால் அங்கே போனால் நிம்மதியா இருக்க முடியாது..." அவள் இல்லாமல் போக மாட்டேன் என்ற பிடிவாதம் அவனிடம்.
"சும்மா நடிக்காதீங்க..., போங்க..." நிஹா வெடிக்க, அவன் இதயத்தில் வலி.

"நிஹா..." மகளை அடக்கியவர், "நீங்க போயிட்டு வாங்க மாப்ள..." அவனிடம் தன்மையாகவே உரைக்க, அவளைத் திரும்பி பார்த்தவாறே சென்றான்.

அவர்கள் செல்லவே..., மகளிடம் திரும்ப..., "அம்மா..., சாரிம்மா..., உங்ககிட்டே பெரிய உண்மையை மறச்சுட்டேன். உங்களால் இதை தாங்க முடியாதுன்னு எனக்குத் தெரியும்மா..., நான் தப்பு பண்ணலம்மா..., என்னை நம்புங்க..., ஏதாவது சொல்லுங்கம்மா..." உண்மை அறிந்த பின்பும் தாயின் அமைதி அவளை கலங்கச் செய்தது. அவருக்கு ஏற்கனவே உண்மை தெரியும் என்ற விஷயம் அவளுக்குத் தெரியாதே.

"என் பொண்ணைப் பத்தி எனக்குத் தெரியாதா...?" அவளை இருக்கையில் அமரச் சொன்னவர்...,

"ராஜாவை கல்யாணம் செய்ய முடியாதுன்னு இப்போ முடிவா சொல்லிட்ட..., சரி..., குழந்தையையும் அழிக்கிறதா முடிவு பண்ணிட்ட..., எல்லாம் செய்த பிறகு..., அடுத்து உன் முடிவென்ன...? எனக்கு அதுதான் தெரியணும்..." மகளிடம் இப்பொழுது இளகினால் வேலைக்கு ஆகாது என்பது அவருக்குப் புரிந்தது.

"அம்மா..." அவள் திகைத்து நோக்க...,

"அம்மாதான் கேக்கறேன்..., பதில் சொல்லு..., நடந்த அனைத்தையும் மறந்து, உன்னால் வேறு ஒரு வாழ்க்கைக்கு தயாராக முடியுமா?" அவர் கேள்விக்கு..., பொய்யாகக் கூட அவளால் தலையாட்ட முடியவில்லை.

அவள் துடிக்கும் விழிகளால் அவரை ஏறிட, "அம்மா என்ன செய்தாலும் உன் நன்மைக்குதான் செய்வேன் என்று உனக்குத் தெரியும் தானே..., ராஜாவை கல்யாணம் பண்ணிக்கோ..., என் மகளின் வாழ்க்கையையும், கௌரவத்தையும் காக்க அதுதான் சரியான வழி..., இப்போ முகத்தைக் கழுவிட்டு, போய் படு..., சாயங்காலம் நிறைய வேலை இருக்கு..." அவளை அனுப்பினார்.

அவள் முகத்தில் மறுப்பைக் காணவே..., "உன் அம்மாவால் ஓரளவுக்குத்தான் பாரம் தாங்க முடியும் நிஹா. எனக்கு கொஞ்சமாவது நிம்மதியைக் கொடுக்க வேண்டும் என நீ விரும்பினால் நான் சொன்னதைச் செய்..." அழுத்தமாக உரைக்க...,

"அம்மா..., நீங்க..., சாரிம்மா..." தாய் படும் துன்பம் மகளுக்குத் தெரியாதா?

"என்னைப்பற்றி கவலைப் படாதே..., ராஜா ரொம்ப நல்லவன்..., அதை எப்பொழுதும் மறக்காதே..." துவக்கம் முதல் அவனை கவனிப்பவர் ஆயிற்றே..., எனவே மகளின் வெறுப்பையும் கோபத்தையும் குறைக்க முயன்றார்.

மௌனமாக தன் அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள். அடுத்து வந்த நாட்கள் வேகமாய் விரைய, விடிந்தால் அவர்களின் திருமணம்.

பகுதி - 25.

திருமண மண்டபம் களை கட்டி இருந்தது. ராஜா முத்தையா திருமண

மண்டபம்..., சென்னையின் பிரபலங்கள் மொத்தமும் தங்கள் விசேஷங்களை வைக்க விரும்பும் இடம். விடியக்காலை நாலரை ஆறு முகூர்த்தம். சொந்தங்களின் வருகையால் மண்டபம் நிறைந்து இருந்தது.

சேகர் பரம்பரையின் இறுதி வாரிசின் திருமணம் மட்டுமல்ல..., தனாவின் தத்துப் பிள்ளையும் அவன் தானே..., எனவே..., விடியக்காலையில் கூட நிறைய பிரபலங்களை அங்கே காண முடிந்தது.

ஹோமகுண்டத்தின் முன்னால் அமர்ந்திருந்த ராஜாவுக்கோ..., டென்ஷனையும் மீறிய ஒரு நிம்மதி. இன்னும் சற்று நேரத்தில் நிஹாசினியை தன்னவளாக மாற்றிகொள்ளப் போகும் தருணம்..., ஆவலாகவே எதிர்பார்த்தான்.

ஐயர் சொன்ன மந்திரங்களை அவன் இதழ்கள் உச்சரித்தாலும், செவியோ.., தன்னவளின் வருகையை ஆவலாக எதிர்பார்த்தது.

நிஹாசினியோ..., பட்டுப்புடவை மாற்றிய கையோடு..., அங்கே இருந்த ஓய்வறையில் குடலே வெளியே வந்துவிடும் அளவுக்கு வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள்.

எங்கே தன் சத்தம் வெளியே கேட்டுவிடக் கூடாதே என்ற கவலை வேறு அவளை பிடித்து ஆட்ட..., கண்களும் சேர்ந்து கலங்கியது.

'எப்படி நடந்திருக்க வேண்டிய நிகழ்வு...' அவளால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. ராஜாவின் அவசர செய்கை ஏற்படுத்திய விபரீதம்..., தன் கௌரவம் காக்க வேண்டிய கட்டாயம்...., தலை சுற்றலும்..., வாந்தியும் அவளை படுத்தியது.

கூடவே மனதின் குழப்பமும் சேர..., அதீத சோர்வை உணர்ந்தாள். "அக்கா..., மணமேடையில் பொண்ணை அழைச்சுட்டு வரச் சொல்றாங்க..., இன்னும் உள்ளே என்ன பண்ற...?" வினோதினியின் குரல் நிஹாசினியின் செவியைத் தீண்ட..., வேகமாக வாயைக் கழுவி விட்டு வெளியேறினாள்.

கெட்டதிலும் ஒரு பெரிய ஆறுதல்..., ராஜாவின் சொந்தங்களையோ..., நண்பர்களையோ மணமகளின் அறைக்குள் அவர்கள் அனுமதிக்கவே இல்லை. அழகுநிலைய பெண்கள் இருக்கிறார்கள்..., உடை மாற்றுகிறாள்..., இப்படியான காரணங்களைச் சொல்லி..., அனைவரையும் அழகாக தவிர்த்து விட்டார்கள்.

அத்தோடு..., அவர்கள் பேச்சைக் கேட்டு அனைவரும் ஒத்துக் கொண்டதுதான் பெரிய விஷயமே. இங்கிதம் தெரிந்தவர்களாக அனைவரும் நடந்து கொண்டார்கள்.

வெளியே வந்த நிஹாவின் முகத்தைப் பார்த்த வினோ..., "என்னக்கா..., மேக்கப்பை இப்படி கலைச்சு வச்சிருக்க..., கண்மை அப்படியே கலங்கி போயிருக்கு. இரு..., நீ கர்ச்சீப்பை வைக்காதே..., அவங்களையே சரிபண்ண சொல்லலாம்..." அழகு நிலைய பெண்களை வைத்து, அவள் முகத்தை திருத்திய பிறகு, மணமேடைக்கு அவளை அழைத்துச் சென்றனர்.

நிஹாசினியின் மனமோ கொந்தளிக்க..., அதற்கு மாறாக ராஜாவோ..., ஒருவித நிம்மதியில் ஆழ்ந்தான். ஆவலாக அவள் முகம் ஏறிட, அவளோ.., மறந்தும் அவனை ஏறிட்டுப் பார்க்கவில்லை.

அவன் தன்னை பார்ப்பதை உணர்ந்தாலும், பிடிவாதமாக தலையைக் குனிந்தே அமர்ந்திருந்தாள். ஓரளவுக்கு பொறுத்தவன்..., அவள் தன்னைக் காண மறுக்கவே..., மாலையின் மறைவில் அவள் கையை அழுத்தி, "பியூட்டி...." சன்னமாக அழைத்தான்.

அந்த அழைப்பு அடிமனதைத் தீண்டினாலும்..., தன் உடல்நிலை படுத்தும் பாட்டால்..., அவளை எரிச்சலுக்கே உள்ளாக்கியது. ஒரு பக்கம், அவனைப் பார்க்க எழும் வேகம்..., மறு பக்கம் கோபம்..., இரண்டுக்கு நடுவில் தவித்தவள், கனல் கக்கும் விழிகளால் அவனைச் சுட்டுவிட்டு, சட்டென விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவன் கண்களை சந்திக்கையில்..., அவன் கண்களில் கரை புரண்ட நேசம், அவளைத் தாக்கியது மட்டும் உண்மை. அவனுக்கோ..., அவள் கோபம் புரியத்தான் செய்தது.

உடனே அதைக் களைய உள்ளம் விரும்பினாலும்..., இருக்கும் சூழல் அதைச் செய்ய முடியாமல் தடுக்க, அவள் இடக்கரத்தை மாலையின் மறைவில் அழுத்தினான். அவன் கரங்களில் இருந்து வெடுக்கென தன் கரத்தை உருவிக் கொண்டாள்.

அவள் செய்கையில் அவன் மனம் காயப்பட்டது மட்டும் உண்மை. 'என் காதலின் வேகத்தில் நடந்துவிட்ட அந்த தவறை உன்னால் மன்னிக்கவே முடியாதா ஹாசினி. என் காதலின் உச்சத்தில் நேர்ந்துவிட்ட தவறு அது என்பதை எப்பொழுது நீ புரிந்து கொள்வாய்...' மனதுக்குள் அவளிடம் உரையாடினான்.

"கெட்டிமேளம்..., கெட்டிமேளம்..." ஐயரின் குரல் அவனை நடப்புக்கு இழுக்க, அவள் கழுத்தில் மங்கல நாண் பூட்டி..., முப்பத்து முக்கோடி தேவர்கள் முன்னிலையில் அவளை தன்னவளாக ஆக்கிக் கொண்டான்.

'இதற்குமேல் நிச்சயம் நான் பார்த்துக் கொள்வேன்...' அவன் மனதுக்குள் பெரும் ஆசுவாசம்.

நிஹாசினியின் கண்கள் உயர்ந்து தன் தாயைத் தேட..., மேடைக்கு எதிரில், நீர் நிறைந்த விழிகளோடு துளசி பார்வைக்குக் கிடைத்தார்.

'என் அம்மாவுக்கு இந்த திருமணத்தின் வாயிலாக நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொடுத்திருக்க வேண்டிய நான்..., இவரால்...' தாயின் கண்ணீர் அவள் கோபத்தை அதிகரித்தது.

மகளுக்குத் திருமணம் நடக்கையில் எந்த ஒரு தாய்க்கும் நேரும் நெகிழ்வான தருணம்தான் அது என்பதை ஏனோ அந்த நேரம் அவள் மனம் ஒத்துகொள்ள தயாராக இருக்கவில்லை.
பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கிய பிறகு..., துளசியிடம் ஆசீர்

வாங்க, தன் மகளை கட்டிக்கொண்டு கலங்கித்தான் போனார். அந்த இடத்தில் தாயிடம் எதையும் உரையாட முடியாமல் அவள் அமைதியாக..., அடுத்ததாக..., அங்கே இருந்த முருகன் கோவிலுக்குச் சென்றார்கள்.

நிஹாசினியின் முகத்தில் மருந்துக்கும் சிரிப்பு இருக்கவில்லை. ராஜாவின் பார்வை நொடிக்கொருதரம் அவளைத் தழுவி மீள..., அவளோ இறுக்கமாகவே இருந்து கொண்டாள்.

அதை உணர்ந்த சுஜா..., அவன் தலையில் இருக்கும் அட்ச்சதையை தட்டிவிடும் சாக்கில் அவனை நெருங்கியவர்..., "ஆக்கப் பொறுத்தவன், ஆறப் பொறுக்கணும் ராஜா..., இப்போ நடப்பதை கவனி..., மிச்சத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம்..." எதார்த்தத்தை புரிய வைத்தார்.

அவர் சொல்வதில் இருக்கும் நியாயம் புரிய, அதன் பிறகு நடப்பில் கவனம் செலுத்தினான்.

நிஹாசினியின் உடல் நிலையை கருத்தில் கொண்டு..., அடுத்தடுத்த நிகழ்வுகள் எதுவும் பெரிய அளவில் இல்லாமல்..., காலை ஒன்பது மணிக்கு, மணமக்கள் இருவரும் அவளது வீட்டில் இருந்தார்கள்.

மண்டபத்திலேயே இருக்கலாம் என ராஜா சொன்னதற்கும் இறுக்கமான முகத்தையே பதிலாக்க..., பெற்றவர்களிடம் சொல்லிவிட்டு அவளை அழைத்துக்கொண்டு அவள் வீட்டுக்கு வந்துவிட்டான்.

காலை உணவை மண்டபத்தில் அவளை உண்ணச் சொன்னதற்குக் கூட பிடிவாதமாக மறுத்து விட்டாள். சுஜா வந்து சொல்லிக் கூட அவள் கேட்கவில்லை.

ராஜாவுக்கு அதில் வருத்தம்தான் என்றாலும்..., அவளை எதிலும் கட்டாயப்படுத்த அவன் விரும்பவில்லை. அன்று மாலையிலேயே மிகப்பெரும் அளவில் வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்க, அதற்கான வேலைகளை பார்வையிடுவதில் பெரியவர்கள் முனைந்தார்கள்.

"நிஹா..., மாப்பிள்ளையை உன் ரூமுக்கு அழைச்சுட்டு போ..." காலை உணவாக ஒரு இட்லியை அவள் உண்டு முடிக்கவே, துளசி அவளிடம் உரைத்தார்.

"ஏன்..., இதோ இருக்கும் ரூம் அவருக்குத் தெரியாதா? அது மட்டுமில்லை..., எனக்குத் தூங்கணும்..." வெடுக்கென அவள் பதில் கொடுக்க, துளசி, ராஜாவின் முன்னால் என்ன பேச்சு இது என்பதுபோல் கைகளைப் பிசைந்தார்.

"நான் பாத்துக்கறேன் அத்த..., நீங்க இருக்கும் வேலையைப் பாருங்க..." சமாதானமாக உரைக்க, துளசி மகளை முறைப்பாக ஒரு பார்வை பார்த்துவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கப் போனார்.

துளசி செல்லவே..., வேகமாக தன் அறைக்குள் புகுந்தவள்..., முதல் வேலையாக புடவையை மாற்றினாள். முகம் கழுவி வந்தவள்..., மிகுந்த களைப்பாக இருக்கவே..., தன் படுக்கையில் படுத்து விழிகளை மூடிக் கொண்டாள்.

கதவு திறக்கும் ஓசையை வைத்து அவன் உள்ளே வருவதை உணர்ந்தாலும், விழிகளை திறக்கவில்லை. தனக்கு முதுகு காட்டி படுத்திருக்கும் அவளை நெருங்கியவன், தலையில் வைத்திருந்த ஜடையைக் கூட பிரிக்காமல் படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு...,

'இப்படியே படுத்தால் தலை வலிக்குமே...' எண்ணியவனாக..., கதவைத் தாழ்போட்டுவிட்டு அவளை நெருங்கியவன், அவள் தலையில் கை வைத்தான்.
அடுத்த நிமிடம்..., "ச்சீ..., மனுஷனா நீங்க...? பட்டப் பகல்ல..." சீறினாள்.

"என்ன ஆச்சு ஹாசினி...? எதுக்கு இப்போ இப்படி ஒரு கோபம்? தலையில் இருக்கும் ஜடை குத்துமேன்னுதான் அதை எடுக்க வந்தேன். மற்றபடி வேறு எதுவும் இல்லை..." அவள் வார்த்தைகள் கொடுத்த வலியை புறம் தள்ளியவனாக சாதாரணமாக உரைக்க, அவளுக்கே சற்று ஒரு

மாதிரியாகத்தான் போயிற்று.

அதை காட்டிக் கொள்ளாமல்..., "இதை என்னை நம்பச் சொல்றீங்களா?" முறைப்பாக கேட்க, அமைதியாக அவள் தலையில் இருந்த ஹேர் பின்களை அகற்றத் துவங்கினான்.
அவனது அந்த அமைதியே..., அவனை குத்திக் கிழிக்கும் வேகத்தை அவளுக்கு கொடுத்தது.

"என்னை உரசுவதுக்கு இது ஒரு சாக்கு..., அப்படித்தானே..." வார்த்தைகளில் விஷம் தோய்க்க முயன்றாள்.

"எனக்கு சாக்கு தேடவேண்டிய அவசியமே இல்லை ஹாசினி..., ஏன்னா..., இப்போ நீ என் மனைவி..." நிதானமாகவே பதில் கொடுக்க, தான் மட்டும் வெதும்பித் தவிக்க, அவனது அமைதி அவளை மூர்க்கமாக்கியது மட்டும் உண்மை.

தான் அவளோடு இருப்பது அவள் கோபத்தை அதிகரிப்பதை உணர்ந்தவன், அவள் தலை அலங்காரத்தை கலைத்து முடித்தவன், "நீ ரெஸ்ட் எடு..., எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு..., போயிட்டு வரேன்..." அவள் பதிலை எதிர்பாராமல் கிளம்பிவிட்டான்.

அவன், அவள் அறையை விட்டு வெளியேற..., "மாப்ள..., வெளியே போறீங்களா?" தயக்கமாக அவனைத் தடுத்தார் துளசி.

"வெளியே எங்கேயும் போகலை அத்த..., அம்மாகிட்டே கொஞ்சம் பேசணும்..., பேசிட்டு உடனே வந்துடுவேன்..." தன் அலைபேசியோடு வெளியேறி, மாடிக்கு விரைந்தான்.
அந்த நேரம் அவனது அழைப்பை எதிர்பாராத சுஜாதா..., "ராஜா..., என்னப்பா..., ரெஸ்ட் எடுக்காமல் கால் பண்ணியிருக்க? ஏதாவது சொல்லணுமா?.." விஷயம் எதுவுமில்லாமல் இப்பொழுது அழைக்க மாட்டான் என்பதால் வினவினார்.

"அம்மா..., மண்டபத்தில் எல்லாம் ஓகே தானே. எதுவும் சங்கடம்

ஆயிடலையே...” அவன் குரலில் கவலை மண்டிக் கிடந்தது.

சொந்தங்கள் வெளியேறும் முன்பே..., மணமக்கள் வெளியேறினால்..., கேட்பவரின் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியது சுஜா ஆயிற்றே..., எனவே கவலையாகவே கேட்டான்.

“ம்ச்..., அதையெல்லாம் நான் பாத்துக்கறேன். இங்கே எல்லாம் சரியாதான் போயிட்டு இருக்கு. நீ நிஹாவை பாத்துக்கோ. அவ இடத்தில் யார் இருந்தாலும் இப்போ இப்படித்தான் நடந்துப்பாங்க. சோ..., கொஞ்சம் பொறுமையா போப்பா...” அவர் உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

மதியம் கடந்து..., மாலை வர..., வரவேற்புக்கு தயாராகத் துவங்கினர். மதியம் மூன்று மணிக்கே அழகுநிலையப் பெண்கள் வந்துவிட, அடுத்த ஓட்டத்துக்கு தயாரானார்கள். நிஹாசினி நன்றாக ஓய்வு எடுத்திருக்க, ராஜாவோ..., மனதுக்குள் எழுந்த சிலபல கேள்விகள், குழப்பத்தோடு உறங்காமலே நேரத்தை நெட்டித் தள்ளியிருந்தான்.

அடர் நீலவர்ண கோட்..., சூட் என ராஜா தயாராகி வர, தகதக தங்க வர்ண உடையில் நிஹாசினி தயாராகி இருந்தாள். அவளது உடைக்கு போட்டியாக வைரங்கள் அவள் மேனியில் ஜொலிக்க, மனைவியின்மேல் இருந்த கண்களை திருப்ப முடியாமல் தடுமாறித்தான் போனான் ராஜா.

அவன் அறைக்குள் வரவே..., மற்றவர்கள் வெளியேறி இருக்க..., தன் முன்னால் இருந்த கண்ணாடியின் வழியாக தன்னை நெருங்கும் அவனைப் பார்த்தவாறு எழுந்து நின்றாள் நிஹாசினி.

“பியூட்டி...” தன் இடக்கரத்தை பேண்ட் பாக்கெட்டுக்குள் விட்டிருந்தவன்..., அவளது முதுகின் பின்னால் நெருங்கி நின்று..., கண்ணாடியில் தெரிந்த அவள் பிம்பத்தை இமைக்க மறந்து, ஆழ்ந்த குரலில்..., வருடும் பார்வையில் உரைக்க..., அவன் குரல் ஏற்படுத்திய மாயையில் ஒரு நொடி சொக்கித்தான் போனாள்.

அவளது கோபம் அந்த நேரம் இருந்த இடம் தெரியாமல் மறைந்திருக்க, அவன் தோற்றம் ஏற்படுத்திய மயக்கமும், கிளர்ச்சியும்..., அவன் ஆண்மை தோற்றத்தை தன்னை மறந்து ரசித்தாள்.

'இவன் என்னவன்...' அவன் தோளில் மென்மையாக சாய்ந்து கொண்டாள்.

அவள் பார்வையில் இருந்த மயக்கம் அவனுக்கு தைரியம் அளிக்க, தன் வலக்கரத்தால் அவள் இடையை வளைத்தவன், "யூ லுக் கார்ஜியஸ்..., வித் யுவர் பெர்மிஷன்..." அவன் இதழ் அவள் காதுமடலைத் தீண்ட...., 'அவன் எதற்கு அனுமதி வேண்டுகிறான்...?' அவள் பார்வை கேள்வியாக அவனை ஏறிட..., அவன் இதழ் அழுத்தமாக அவளது இடக் கன்னத்தில் பதிந்தது.

பதித்த இதழை மீட்டுக் கொள்ளாமல்..., இன்னும் அழுத்தமாக பதித்தவன், தன் கரத்தை அவள் இடையோடு அழுத்திக் கொண்டான். தன்னைச் சுற்றிய மாய வலையின் தாக்கத்தில் இருந்து மீள முடியாமல் அவள் சொக்கிப் போக,

"வினோ..., மண்டபத்துக்கு கிளம்பாமல் இன்னும் என்ன பண்ணிட்டு இருக்க? அக்கா ரெடியா? மாப்பிள்ளை எங்கே...?" தாயின் குரல் வெளியே கேட்க, தன் மாய வலையை கிழித்துக் கொண்டு வெளியேறியது நிஹாவின் கோபம்.

"வெல் ப்ளான்ட...., இப்போ மண்டபத்துக்குப் போறோமா...? இல்ல..., இப்படியே உங்கள் தேவையை கண்டினியூ பண்ணப் போறீங்களா?" அவள் தேகம் விரைக்க..., குரல் கடினமாக வெளியேற..., அதிர்ந்து போனான் ராஜா.

"ஹாசினி ப்ளீஸ்..." 'என்னைப் புரிந்துகொள்ளேன்...' என்ற ரீதியில் அவன் குரல் கெஞ்ச, "என் மனசு என்ன பாடுபட்டாலும் பரவாயில்லை..., உங்களுக்கு உங்க தேவையை சாதிச்சுக்கணும்..., அப்படித்தானே...." அவனைவிட்டு வேகமாக விலகி நின்றாள்.

"இது..., என் நேசம் ஹாசினி..." தன் செய்கையை விளக்கும் நிலைமையை தானே வெறுத்தான்.

"எது...? எது நேசம்...? இந்த உடம்பை உங்க கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதா...?" அவன் அருகாமை கொடுக்கும் மயக்கத்தை மறைக்க, அவனை காயப்படுத்தினாள்.

"ஹாசினி..." நிச்சயம் அவன் குரலில் அப்பட்டமான அதிர்ச்சி தெரிந்தது. நெஞ்சுக்குள் சுருக்கென்ற வலி...

அவள் அதற்கு பதில் கொடுக்கும் முன்பு..., "அக்கா..., லேட்டாகுது பார்..., மண்டபத்தில் இருந்து நாலுமுறை கால் பண்ணிட்டாங்க..." வினோவின் குரல் படபடப்பாக ஒலிக்க..., முதல் ஆளாக அறையில் இருந்து வெளியேறினான்.

அவன் நடையில் இருந்த தளர்ச்சி நிஹாசினியை பலமாகத் தாக்கினாலும், அறைக்குள் வந்த தாயின் முகம்..., அதை அடியோடு துடைத்துப் போட்டது.

மண்டபத்துக்குச் சென்ற அவர்களின் ஜோடிப் பொருத்தத்தை பார்த்து வியக்காதவர்கள் யாரும் இல்லை. நிஹாசினிக்கோ..., எதுவும் கவனத்தில் இருக்கவில்லை. அவள் முகத்தில் தெரிந்த கலக்கத்தை உணர்ந்தவன், ஆதரவாக அவள் கரத்தை கோர்த்துக் கொண்டான்.
அதன் பிறகு எதைபற்றியும் அவர்களுக்கு யோசிக்க நேரமே இருக்கவில்லை. அரசியல் பிரமுகர்கள் முதல்..., சினிமா பிரபலங்கள் துவங்கி, பிஸினஸ் ஆட்கள் என மண்டபம் நிரம்பி வழிந்தது.

தொடர்ச்சியாக இரண்டுமணி நேரம்..., நிற்க வேண்டிய கட்டாயம்..., அவள் ஒரு உயிராக இருந்திருந்தாலாவது சம்மாளித்திருப்பாள்..., ஆனால்..., இப்பொழுது அவள் ஈருயிராயிற்றே..., களைப்பு அவளை ஆட்கொள்ள...., இடையில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட எதையும் அவள் உண்ணவோ..., குடிக்கவோ இல்லை.

அந்த ஏசியில் கூட அவளுக்கு வியர்க்க..., கால்களோ தள்ளாடியது. 'இதற்குமேல் முடியவே முடியாது....' அவள் கால்கள் துவள, அதை உணர்ந்தவன், அவளை தன்மேல் சாய்த்துக் கொண்டான்.

மணமேடையில் மணப்பெண் மயங்கினால் என்ன ஆவது...? அது மிகப்பெரும் பேச்சுக்கு வழி வகுக்கும் என உணர்ந்தவள்..., "ராஜ்..., என்னால் முடியலை...." ஒரு கட்டத்தில் உரைத்தே விட்டாள்.

"ஓகே..., ரிலாக்ஸ்..., ஒரு நிமிஷம் உட்கார்..." அவளை இருக்கையில் அமர வைத்தவன், வேகமாக தன் தாயைத் தேடினான்.

"டூ மினிட்ஸ் ப்ளீஸ்..." அங்கே விரைந்த கார்த்திகா..., தன் கல்லூரித் தோழிகளின் துணையோடு..., டிஜே... அவர்களின் உதவியோடு..., ஒரு சிறு பார்ட்டி டேன்ஸ் ஏற்பாடு செய்ய..., மணமக்களுக்கு ரிலாக்ஸ் செய்ய சிறு நேரம் கிடைத்தது.

இன்னும் கூட்டமும் குறைந்த பாடாகத் தெரியவில்லை. சுஜா..., உடனடியாக ஜூஸ் டம்ப்ளரோடு மேடை ஏறினார். அதை அவள் கையில் கொடுக்க, ஒரு வாய் அதைக் குடித்தவள்..., அப்படியே ஒதுக்கி விட்டாள்.

"நிஹா..., முழுசா காலி பண்ணு..., இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்னு தெரியலை..." மற்றவர் கவனம் சிதறாதவாறு அவளை கட்டாயப்படுத்தினார். அந்த நேரம் அதை முழுமையாக குடித்தால், நிச்சயம் மேடையிலேயே தான் வாந்தி எடுத்துவிடுவோம் என அஞ்சியதாலேயே அவள் அதை குடிக்க மறுத்தாள்.

சுஜாவுக்கு அந்த நினைவு இல்லை என்பதால்..., அவள் மறுப்பை கண்டுகொள்ளாமல், அவளை குடிக்க வைக்க முயல..., "என் மானம் இங்கே போகணும்னு எதிர்பாக்கரீங்களா..?" கோபத்தில் சற்று எகிறி விட்டாள்.

பட்டென அவள் கண்கள் கலங்கிவிட..., சுஜாவுக்கோ..., நிலைமையை

சம்மாளிக்க முடியாத தடுமாற்றம். துளசியோ..., கலங்கிய கண்களோடு மேடையை விட்டு இறங்கிவிட, அவளை அணுகிய வினோ..., "அக்கா..., அம்மா இதை சாப்பிடச் சொன்னாங்க..." அவள் கையில் சில புளிப்பு மிட்டாய்களைத் திணிக்க, நிலைமை ஒருவாறாக சம்மாளிக்கப் பட்டது.

ராஜாவோ..., அந்த நொடி நிச்சயம் நொறுங்கித்தான் போனான். சுஜா, அவனை சமாதானப்படுத்தும் புன்னகையோடு இறங்கிச் செல்ல..., தாயை காயப்படுத்திய ஒரு ஆளை..., அதுவும் தன் உயிரில் பாதியை கண்டிக்கக் கூட முடியாமல் துடித்துப் போனான்.

ஒருவாறாக வரவேற்பு முடிய நள்ளிரவைத் தாண்டியும் ஒரு மணி நேரம் கடந்திருக்க, இரவு உணவை முடித்த கையோடு..., அவன் வீட்டுக்கு கிளம்பி விட்டார்கள். இரண்டு நாட்கள் நிஹாசினியின் வீட்டில் இருந்துவிட்டு வருமாறு உரைக்க, துளசியோ..., மணமக்களை ராஜாவின் வீட்டுக்குச் செல்லவே பணித்தார்.

ஏனோ மகளின் செய்கைகள் அனைத்தும் அவர் வயிற்றில் கலவரத்தையே மூட்டியது. எனவேதான் அவ்வாறு சொன்னார். ஆனால்..., நிஹாசினிக்கோ, தாய் தன்னை ஒதுக்கி விட்டதாகத் தோன்ற..., மனம் குமுறினாள்.

ராஜாவின் அறைக்குள் நுழைந்த நிஹாசினி கோபம் குறையாமல் இருக்க..., தன் தாயைத் தேடிச் சென்றான் ராஜா.

"இந்த நேரம், இங்கே என்ன பண்ற ராஜா...? முதல்ல நிஹா கிட்டே போ..., இங்கே அவ உன்னை நம்பித்தான் வந்திருக்கா. அவளை பார்த்துக் கொள்வது உன்னோட பொறுப்பு..., போ..." அவனை அனுப்புவதிலேயே முனைப்பாக இருந்தார்.

"சாரிம்மா..., என்னால் தானே..." மண்டபத்தில் நடந்ததற்கு அவன் மன்னிப்பை வேண்ட, அவன் தலை கோதியவர்..., "என் பொண்ணு என்னை ஏதாவது சொன்னால் குறைந்து போய்டுவேனா என்ன...?

அதுவும்..., என் பொண்ணு வாயும் வயிறுமா இருக்கும் போது..." நடந்தவை அனைத்தையும் ஈசியாக எடுத்துக் கொண்டார்.

"ம்மா..." அவரை அணைத்துக் கொள்ள..., "குழந்தை மாதிரி நடந்துக்காதே ராஜா. இந்த மாதிரி நேரத்தில் அவ மனசை சந்தோஷமா வச்சுக்கணும். கோபத்தில் அவள் பேசும் பேச்சுக்களை எப்பவும் பெருசா எடுத்துக்க கூடாது புரியுதா? போ..., போய் அவளைப் பார்..., அவளுக்கு வோமிட் வேற ஜாஸ்த்தியா இருக்கு போல..., நீதான் அவளை பாத்துக்கணும்..." அவனை சமாதானம் செய்து அனுப்பினார்.

அவன் தன் அறைக்குச் சென்றபொழுது நிஹாசினி டாய்லெட்டில் வாமிட் எடுத்துக் கொண்டிருந்தாள். அதைக் கேட்டவன்..., பதறியவனாக அவளைத் தேடிச் சென்றான்.
அவன் உள்ளே செல்ல..., அவளோ.., தன்னை சுத்தம் செய்துவிட்டு வெளியேறினாள்.

"என்னம்மா..., வோமிட் ரொம்ப இருக்கா...? ஏதாவது குடிக்கறியா...? ரொம்ப டயடா தெரியற..." அக்கறையாக கேட்டான்.

"ஏன்..., இப்போ எதுவும் செய்ய முடியாதேன்னு ரொம்ப ஏமாற்றமா இருக்கோ..?" குத்தலாக வினவ...,

"நீ சொல்றது புரியலை..." குழப்பம் விலகாமல் கேட்டான்.

"உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது..., இதை நான் நம்பணுமா...?" கையில் இருந்த சிறிய டவ்வலால் வாயைத் துடைத்தவாறே கேட்டாள்.

அவன் இன்னும் தெளியாமல் அவளை ஏறிட..., அன்னைக்கு உரிமை இல்லாமல் செய்ததை..., இந்த கையிற்றை என் கழுத்தில் கட்டிவிட்டோம் என்ற மிதப்பில் உரிமையோட நடத்தத்தானே என்னை இங்கே அழைச்சுட்டு வந்திருக்கீங்க..., வாங்க..., உங்க ஆசையை தீத்துக்கோங்க..., நான் ரெடி..." டவ்வலை அவன்மேல் வீசினாள்.

அவள் தன்மேல் வீசிய டவ்வலை பிடிக்கக் கூடத் தோன்றாமல் நின்றவன்,

"எனக்கு 'அது' மட்டும்தான் முக்கியம்ன்னா ஆயிரம்பேர் கிடைப்பாங்க. ஆனா..., நான் உன்னோட வாழணும்னு ஆசைப்படுறேன் ஹாசினி..." பொறுமையாகவே பதில் கொடுத்தான்.

படுக்கையில் சென்று அமர்ந்தவன்..., ஆழமாக மூச்செடுத்து தன்னை நிதானப்படுத்தினான். "ஹாசினி..., இங்கே வந்து உட்கார்..., ஏற்கனவே நீ டயடா இருக்க..., சோ..." அவன் அழைக்க..., அவளுக்கு நிற்க முடியாமல், அவன் காட்டிய இடத்தில் சென்று அமர்ந்தாள்.

"உனக்கு என்மேல் தானே கோபம்..., அதை என்கிட்டே மட்டும் காட்டு. என் அம்மாவோ..., என்னைச் சுற்றி இருப்பவர்கள் மேலோ அதைக் காட்டாதே. அதிலும்..., என் அம்மா..." அடைத்த குரலை சரி செய்தவன்...,

"ஒரு நிமிஷம்..., நான் சொல்வதை பொறுமையா கேள்..." உரைத்தவன், சுஜாவைப் பற்றி..., தனா..., குணா..., தாரிணி..., என அனைவரைப் பற்றி உரைக்க, தான் கேட்டதை நம்ப முடியாமல் திகைத்துபோய் அமர்ந்திருந்தாள்.

பகுதி - 26.

ராஜா சொன்னவற்றைக் கேட்ட நிஹாசினி, தன் காதையே நம்ப முடியாமல் அமர்ந்திருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ..., "ஏதாவது பேசு ஹாசினி..." அவளை உலுக்க, அப்பொழுதுதான் தன் திகைப்பில் இருந்து வெளியே வந்தாள்.

"அப்போ..., அவங்க உங்களோட அண்ணி..., அப்படித்தானே..." அவள் கேட்க, அவன் தலை சம்மதமாக ஆடியது.

"எங்களை ஏமாத்திட்டீங்க...? எவ்வளவு பெரிய உண்மை..., இதை எப்படி நீங்க மறைக்கலாம்...?" ஆத்திரமாக வினவினாள்.

"பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதே ஹாசினி. இது அத்தைக்குத் தெரியும்....., அவங்க உன்கிட்டே சொல்லியிருப்பாங்கன்னு நினைத்தேன்..." தன்மையாகவே உரைத்தான்.

"அம்மாவுக்குத் தெரியுமா...? என்னை இதை நம்பச் சொல்றீங்களா?".

"உங்க அம்மாகிட்டே எந்த உண்மையையும் நான் மறைத்ததில்லை ஹாசினி..." அழுத்தமாக உரைத்தான்.

"என்னை நாசம் செய்ததைக் கூடவா...?" கோபமாக வினவ,

'நாசம் செய்வதா...?' இதயத்தை பிசையும் வேதனை..., அதை மென்று விழுங்கியவனாக,
"அது ஒரு விபத்து ஹாசினி..., நான் எந்த இன்டன்ஷனோடும் அதைச் செய்யலை..." அவன் குரலில் கவலை அப்பிக் கிடந்தது.

"ஆனா..., அந்த விபத்தோட பாதிப்பு..., எனக்கும் என் குடும்பத்துக்கும் மட்டும்தானே..." அவள் வார்த்தைகளில், அவன் நெஞ்சம் வலித்தது.

"நீ இப்போ தனியா இல்லை ஹாசினி. உனக்கு நான் இருக்கிறேன்..." அவள் கரத்தை பற்ற முயன்றான். அவன் செய்கையை உணர்ந்தவளாக, கைகளை வேகமாக அவள் நகர்த்திக் கொள்ள, வேதனையாக அவள் முகம் பார்த்தான்.

அவன் முகம் பாராமல் திரும்பிக் கொண்டாள். அவன் வேதனை அவளைத் தாக்கி, தன்னை பலவீனப்படுத்துவதை அவளும் என்னதான் செய்ய?

"நேத்து வரைக்கும் நான் தனியாகத்தான் இருந்தேன். இந்த இரண்டு மாசமா நான் பட்ட கஷ்டம் உங்களுக்குத் தெரியுமா? எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டு..., ஒவ்வொரு விடியலையும் நான் எவ்வளவு துன்பத்தோடு சந்தித்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா?" கண்ணீர் சிதறியது.

அவள் அழுகை அவன் நெஞ்சை சுட..., "ப்ளீஸ் ஹாசினி..., அழாதே...., உன் அழுகையை தாங்கும் சக்தி எனக்கு இல்லை. உன் மனசுக்குப் பிடிக்காத எதையும், இனிமேல் நான் நினைக்கக் கூட மாட்டேன். என் நிழல் கூட உனக்கு துன்பம் தராது..., நடந்த எல்லாத்தையும் நாம மறந்துடலாம்..." அவன் குரல் கெஞ்சிற்று.

"மறக்குறதா...? எதை மறக்கச் சொல்றீங்க? என் வயிற்றுக்குள் இருக்கும் சுமையை என்னால் எப்படி மறக்க முடியும்...? ஒவ்வொரு நிமிஷமும், நொடியும்..., எனக்கு அது ஞாபகப் படுத்திட்டே இருக்கே..., அதை என்ன செய்ய...?" அவனுக்கு வலிக்கவேண்டும் என்றே சொன்னாள்.

"நம்ம குழந்தை உனக்கு சுமையா ஹாசினி...?" அடிபட்ட குழந்தையின் வலி அவன் வார்த்தைகளில்.

"இல்லையா...?" அவனிடமே கேட்க...,

"அது நம்ம காதலின் அடையாளம் ஹாசினி..." காதலை அவளிடம் யாசித்தான்.

"காதல்..." அவள் எள்ளி நகையாட..., உள்ளுக்குள் அவன் ஆவி துடித்தது.

"இந்த உலகத்தில் எந்த பெண்ணாலும் கலைக்க முடியாத என் மனதை, உறுதியை கலைக்கும் சக்தி உனக்கு மட்டும்தான் இருக்கிறது ஹாசினி. அதை ஏன் நீ புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய்...? அந்த நேரம்..., எங்கே என்னைவிட்டு நீ போய்விடுவாயோ என்ற என் பதட்டம்..., பயம்..., என் வாழ்க்கை என் கைகளுக்குள்ளேயே தொலைந்து போகுமோ என்ற என் பதட்டம்...

"அப்படி இல்லை..., நீ என் அருகில்தான் இருக்கிறாய் என்ற சந்தோசம்..., உன்னை தக்கவைக்க போராடிய என் மனம்..., என் காதலை உனக்கு உணர்த்திவிடும் வேகம்..., அந்த செய்கைதான் என் தவறுக்குப் பின்னால் இருந்தது. மற்றபடி..., உன்னை வேட்டையாடும்

வேட்கை இல்லை....

"அந்த நொடி..., உன்னை அப்படி ஒரு கோலத்தில் பார்த்த பிறகு, என்னால்..., என் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியவில்லை..., நீதான் என் வாழ்க்கை என்ற உறுதியோடுதான் உன்னை எடுத்துக் கொண்டேன்..." தன்னை உணர்த்திவிடும் வேகம் அவனிடம் வெளிப்பட்டது.

"அந்த கோலத்தில் என்றால்..., என் இடத்தில் உங்க அம்மா இருந்திருந்தால்..."

"ஹாசினி..." அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்பு..., வெடித்திருந்தான். அவன் கரம் ஓங்கியிருக்க..., கண்களோ ரத்தமென சிவந்திருந்தது.

"நோ..., நோ...., என் அம்மாவைப் பற்றி..., இன்னும் ஒரு வார்த்தை..., ஒரு வார்த்தை..." படுக்கையில் இருந்து எழுந்தவன், தன் கோபத்தையும், கொதிப்பையும் அடக்க..., நாசி வழியாக மூச்சை இழுத்தவன், வாய் வழியாக வேகமாக வெளியேற்றினான்.

அவள் இடத்தில்..., இந்த நேரம் வேறு யாராவது இருந்திருந்தால்..., இந்நேரம் அவன் கையால் உயிரை விட்டிருப்பார்கள் என்பது திண்ணம். ஆனால்..., உரைப்பவள்..., அவனில் பாதியாயிற்றே..., மேலும் தவறு தன பக்கம் மட்டுமே என்கையில்..., தன் கோபத்தை அடக்க போராடினான்.

அவன் பேச்சில், கோபத்தில்..., நிஹாசினியின் தேகம் நடுங்கியது. அந்த நேரம்..., அவளே எதிர்பாராத அதைச் செய்தே விட்டான்.

படுக்கையின் ஓரம் அமர்ந்திருந்த அவளது காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தவன்..., "உன்னை நாசம் செய்துவிட்டேன்னு நீ நினைத்தால்..., தயவு செய்து என்னை மன்னித்துவிடு. என் செய்கை உன்னை இவ்வளவு காயப்படுத்தி இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை.

"என்னை மன்னிச்சுடு ஹாசினி..., ஆனா..., இன்னொரு முறை...,

என் அம்மாவைப் பற்றி இப்படி பேசாதே. அவங்க தியாகத்தை..., என் மனதில் இருக்கும் அந்த தெய்வத்தை இப்படி சொல்லாதே. அதற்குப் பதிலாக என்னை கொன்னுடு..." அவள் காலை கெட்டியாக பற்றிக் கொண்டான்.

இதை எதிர்பாராத நிஹாசினி திகைத்துப் போனாள். சட்டென படுக்கையில் இருந்து எழ முயல..., உடல் ஒத்துழைக்காமல் அவள் கால்கள் தள்ளாடி, விழ முயன்றாள். அவளிடம் அசைவை உணர்ந்த ராஜா நிமிர்ந்து பார்த்தவன், அவள் தள்ளாடவே..., சட்டென எழுந்து அவளைத் தாங்கிக் கொண்டான்.

'அதிர்ச்சி' எனச் சொல்வது மிகவும் சாதாரணமான வார்த்தை...., பேரதிர்ச்சியாக இருந்தது அவளுக்கு. அவன் கோபத்தை கட்டுப்படுத்திய விதம்..., அதைவிட..., தன் காலில் விழுந்த அவன் செய்கை..., வாயடைத்துப் போனது.

அவன் கண்களை ஏறிடத் தயங்கியவளாக..., அவனை விட்டு விலகியவள், அவன் அறையில் உடை மாற்றுவதற்கு என இருந்த மூங்கில் தடுப்புக்கு பின்பாகச் சென்றவள்..., புடவையை மாற்றிவிட்டு..., படுக்கையில் வந்து படுத்துக் கொண்டாள்.

அவளது மௌனம் அதிர்வாக இருந்தாலும்..., படுக்கையில் படுக்க மனமற்று..., தன் அறையின் பால்க்கனியில் சென்று அமர்ந்து கொண்டான். மனம் முழுக்க ரணமாக இருந்தது.

அவள் காலில் விழவேண்டிய நிலை வந்துவிட்டதே என அவன் ஒரு சதவீதம் கூட வருந்தவில்லை. மாறாக.., அந்த நிலைக்கு தான் இறங்கிவிட்டோமே என்றுதான் அதிகம் வருந்தினான்.

அதுவும்..., நிஹாசினியின் பேச்சு..., தெய்வத்துக்கு இணையாக தான் மதிக்கும் தாயை..., அவள் பேசியதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஆனாலும்..., அவள் கோபத்தில் பேசும் பேச்சுக்களை கண்டுகொள்ளக் கூடாது என சுஜா சொன்னதை நினைவுக்கு கொண்டு வந்து

அமைதியடைய முயன்றான்.

முயல மட்டுமே அவனால் முடிந்தது. வாழ்க்கை இப்படியே போராட்டத்தோடுதான் கழியுமா? நினைக்கவே நெஞ்சம் கலங்கியது. மூச்சு விடுவதே சிரமமாவதுபோன்ற உணர்வு. கண்ணீர் விட்டுக் கதறினால் இந்த வலி போய்விடுமா?

ஆண்மகன் அழக் கூடாது என யார் சொல்லி வைத்தது...? நெஞ்சை அழுத்தும் வலியை என்ன செய்ய? 'அம்மாவிடம் பேசுவோமா...?' தன் தாயிடம் தஞ்சம்புக அவன் சேயுள்ளம் தவித்தது.

நடந்து முடிந்தது மிகப்பெரும் தவறு என்பதில் அவனுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதற்காக..., அதையே கிளறி..., காயப்படுத்திக் கொள்வதால் யாருக்கு என்ன லாபம்? அவளை ஏமாற்றிவிட்டேன்.., ஓடி ஒளிந்துகொண்டேன் என எதைச் சொல்கிறாள்?

ஒரு வேளை தன் கேள்விகளை அவள் தெளிவாக கேட்டிருந்தால் இப்படி கலங்கி தவித்திருக்க மாட்டானோ? அவளைத் தேடிச் சென்றதை அவளுக்கு விளக்கியிருப்பானோ என்னவோ..., ஆனால்..., அவனை காயப்படுத்துவது மட்டுமே குறியாக இருக்கும் அவளை என்ன செய்வது?

நேரம் நான்கு மணியைக் காட்ட..., தன் யோசனையை கை விட்டவனாக..., வெட்டவெளியை வெறித்தான். ஆனாலும்..., சண்டை போடவாவது அவள் தன்னோடு இருப்பதில் ஒரு சிறு சந்தோசம்..., நிம்மதி..., அதை மட்டுமே எண்ணியவனாக அமர்ந்து கொண்டான்.

எப்பொழுது அவன் விழிகள் மூடியது என்று அவனுக்கே தெரியவில்லை. உடல் அலுப்பில்..., சூரிய உதயத்தின் துவக்கத்தில் விழி மூடினான்.

நேரம் எட்டுமணியை கடந்த வேளையில்..., தூரத்தில் கேட்ட ஏதோ ஒரு சத்தத்தில் அவன் உறக்கம் கலைய, சட்டென கண் விழித்தவனுக்கு, அமர்ந்தவாறே உறங்கியதால்..., கை கால்கள் சற்று மரத்துப்

போயிருக்கவே, அவனால் வேகமாக எழ முடியவில்லை.

கழுத்து வேறு ஒரு பக்கமாக சாய்ந்திருந்ததால் வலியெடுக்க, கைகளால் கழுத்தை தேய்த்தவாறு அறைக்குள் எழுந்து வந்தான். நிஹாசினியின் ஓங்காரம் பாத்ரூம் கதவை மீறி அவனைத் தீண்ட, அவசரமாக அங்கே விரைந்தான்.

"ஹாசினி..., என்னம்மா..., கதவைத் திற..." படபடவென கதவைத் தட்டவே, சட்டென கதவைத் திறந்தவள், அவன் முகம் பாராமல் சென்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

அவளது சோர்ந்த தோற்றம் அவன் கோபம் அனைத்தையும் துடைத்துப் போட, அவள் அருகில் நெருங்கியவன்..., "டெய்லி இப்படித்தான் இருக்கா? காலையில் என்ன குடிப்ப...? அம்மாகிட்டே சொல்லி அதைக் கொண்டுவரச் சொல்றேன்..." அவள் அருகில் அமர்ந்தான்.

அவளை தன் தோளில் சாய்த்துக்கொள்ள மனமும், கைகளும் தவிக்க, அதைச் செய்தால் என்ன சொல்வாளோ என்ற தயக்கம் அவனை கட்டிப் போட்டது.
அவளுக்கோ..., ஆதரவுக்கு ஒரு தோள் தேவைப்பட..., நேற்றைய நிகழ்வுக்குப் பிறகு, தானாக அவன் தோள் சாய அவள் மனம் இடம் கொடுக்கவில்லை.

"அம்மாவைப் பாக்கணும்..." தாயின் மடி தேடியது.

"ஓ..., சரி..., காலையில் சாப்பிட்டுட்டு போகலாம். இப்போ என்ன குடிக்கற?" மீண்டும் கேட்டான்.

"எனக்கு எதுவும் வேண்டாம்..." வெடுக்கென உரைக்க, அடுத்த விவாதத்தை சந்திக்க மனமற்றவனாக..., "அப்போ..., கிளம்பு..., போகலாம்..." சுலபமாக சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

அவன் மனமோ..., 'அம்மாகிட்டே சாப்பாடு வேண்டாம்னு எப்படிச் சொல்வது...?' தவித்தது.

இருவரும் கிளம்பி கீழ வர. . . . , "ராஜா. . . , நிஹா. . . , வாங்க. காலையில் என்னம்மா குடிப்ப? ஹார்லிக்ஸ் கலக்கவா? வாங்க. . . , ஏன் நின்னுட்டே இருக்கீங்க. . .?" சுஜா கேள்வியாக அவர்களை ஏறிட, ராஜா என்ன சொல்வது எனத் தெரியாமல் அமைதியாக நின்றான்.

நிஹாசினியோ. . . , 'எப்படி நிக்கறார் பார். . .' மனதுக்குள் கருவினாள்.

சுஜாவுக்கு எதுவும் இன்னும் சரியாகவில்லை என்பது புரிய, நிஹாசினியை நெருங்கியவர், அவள் கையைப் பிடித்து அழைத்து வந்து சாப்பாட்டு மேஜையில் அமர வைத்தார். அவள் தலையை ஆதரவாக வருடியவர். . . ,

"இது உன்னோட வீடு நிஹா. . . , உனக்கு விருப்பமானதை நீ தைரியமா செய்யலாம். இப்படி தயங்கி நிற்க வேண்டிய அவசியமே இல்லை. என்கிட்டே கேட்க தயக்கமா இருந்தால். . . , லட்சுமி இருக்காங்க. . . , அவங்க கிட்டே கேக்கலாம். இப்போ சொல்லு. . . , என்ன சாப்பிடுற?" பாசத்தை மட்டுமே காட்டு அவரிடம் அவளால் முகம் திருப்ப முடியவில்லை.

"சுஜாம்மா. . . . , முதல்ல இதை குடிக்கக் கொடுங்க. . ." லட்சுமி ஒரு டம்ப்ளரை அவர் கையில் கொடுக்க, லட்சுமியை ஒரு பார்வை பார்த்தவர், எதுவும் கேட்காமல் அதை வாங்கி நிஹாசினியின் கரத்தில் கொடுத்தார்.

மறுக்காமல் அதை வாங்கி ஒரு மிடறு குடித்தவள், லட்சுமியை முகம் கசங்க ஏறிட, அவளோ. . . , சிரித்த முகமாகவே அங்கிருந்து விலகிச் சென்றாள். தன் உடல்நிலை அவளுக்குத் தெரியும். . . , என்ற நினைவே நிஹாவை அவஸ்த்தையாக உணர வைக்க, அவள் மனம் புரிந்தவராக,

"லட்சுமி ராஜாவை தூக்கி வளத்தவங்க. . . , இந்த வீட்டு ரகசியம் அவங்களத் தாண்டி எங்கேயும் போகாது. நீ சங்கடப்பட அவசியமே இல்லை. . ." ஆதரவாக அவள் கரத்தை பற்ற, தன் அருகில் நின்ற அவர் வயிற்றில் முகம் புதைத்து குலுங்கி விட்டாள்.

அந்த நேரம். . . , ராஜா இறுகிப் போனான். சுஜா அவனைப் பார்க்க,

வேகமாக அங்கிருந்து அகன்றான்.

அங்கே இப்பொழுது சுஜாவையும் அவளையும் தவிர யாரும் இருக்கவில்லை.

அவள் அழுது முடிக்கும் வரைக்கும் பொறுமையாக அவள் தலை வருடியவர், "நடந்து முடிந்ததை நம்மால் மாற்ற முடியாது. ஆனால்..., நடக்கப் போவதை நம்மால் நல்லதா மாற்ற முடியும். இங்கே உன்னை யாரும் தவறாக நினைக்கப் போவதில்லை..., அதை நீ முதல்ல புரிஞ்சுக்கணும்.

"அதே மாதிரி..., மத்தவங்களோட நினைப்புக்காக எல்லாம் நாம கவலைபட்டால்..., நம் வாழ்க்கையை நாம வாழ்வே முடியாது... அதனால்.., நடந்ததை எல்லாம் மறந்துட்டு சந்தோஷமா இருக்கணும் சரியா...?" கிளிப்பிள்ளைக்கு சொல்வதுபோல் புரிய வைத்தார்.

நடந்து முடிந்த தவறை மாற்ற முடியாது என்னும்பொழுது, அதை எண்ணி, தங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொள்ளக் கூடாதே என்ற கவலை அவருக்கு. வீட்டு பெரியவராக வாழ்க்கையை, எதார்த்தத்தை அவளுக்கு புரிய வைக்க, ஏற்க வைக்க முயன்றார்.

"என்ன..., மருமகளும் மாமியாரும் நடு வீட்டில் கொஞ்சிக்கறீங்க...? நம்ம ராஜா எங்கே...? நீங்க இவளை கொஞ்சுறதைப் பாத்தா பொறாமையில் வெந்திருப்பானே..." தாரிணி அங்கே வர, இருவரும் சட்டென இயல்புக்கு திரும்பினார்கள்.

"குட் மார்னிங் நிஹா..., என்ன இவ்வளவு சீக்கிரம் எழுந்து கீழே வந்திருக்க? ரூமில் ரெஸ்ட் எடுக்க வேண்டியது தானே..., மார்னிங் சிக்னஸ் எப்படி இருக்கு? நம்ம லஷ்மி அதுக்கு நன்னா வயித்தியம் பாப்பாளே..., காலையில் ஜூஸ் கொடுத்தாளா? அவ கையால் சாப்ட்டால் எந்த வாந்தியும் நம்மள எதுவும் செய்யாது..." அவள் அருகில் வந்து அமர்ந்தாள்.

'எப்படி இவர்களால் அனைத்தையும் சுலபமாக எடுத்துக்கொள்ள முடிகிறது?' என்ற வினா எப்பொழுதும்போல் நிஹாசினியின் மனதில் எழ,

அதே பார்வையாய் அவர்களைப் பார்த்தாள்.

"என்னக்கா இவ இப்படி பாக்கறா? என்னடா..., பெரியவாளா இருந்துட்டு நடந்த விஷயத்தை எப்படி இவ்வளவு ஈசியா எடுத்துக்கறான்னு பாக்கறியா?" அவள் எண்ணம் புரிந்தவளாக வினவ, நிஹாசினியின் அமைதியே அதுதான் உண்மை என அவர்களுக்கு உணர்த்தியது.

"இங்க பார் நிஹா..., இதுவொண்ணும் லோகத்தில் நடக்காத தப்பில்லை. எத்தனையோ ஜோடி..., நிச்சயம் முடிந்த தைரியத்தில் செய்துவிடும் தப்புதான். எத்தனையோ காதலர்கள் வரம்பு மீறாமல் இருக்காளா என்ன?

எல்லாம் நாம எடுத்துக்கற விதத்தில்தான் இருக்கு. அதுக்காக நடந்தது சரின்னு நான் சொல்ல வரலை. எங்களுக்கு எங்க புள்ளையைப் பத்தி நல்லா தெரியும். அவன்கூடவே இழையும் கார்த்திகாவை கூட தப்பா ஒரு பார்வை அவன் பாத்ததில்லை.

"அப்படிபட்டவன்..., உன்னை தொட்டிருக்கான்னா..., உன்மேல் எவ்வளவு ஆசை வச்சிருக்கான்னுதான் தோணுது. இதையெல்லாம் விட..., இந்த வீட்டுக்கு முதல் முதல்ல வரப்போகும் வாரிசு..., அதற்காக நாங்க தவமிருக்கோம்..., அப்படி இருக்கையில்..., எங்களால் எப்படி கோபப்பட முடியும்..., உன்னை தவறாக எண்ண முடியும்...?" அவளிடம் கேட்க, அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

அந்த நேரம் அவள் மனதுக்கு ஆறுதலாக இருந்தது மட்டும் உண்மை. சுஜா, ராஜாவை அழைக்க..., அனைவரும் அமர்ந்து உண்டார்கள். நிஹாசினி ஒரு இட்லி, தோசையோடு உணவை முடித்துக் கொள்ள, அவள் உண்டதை பார்த்த பிறகே ராஜா திருப்தியாக உண்டான்.

அவர்களிடம் சொல்லிவிட்டு நிஹாசினியின் வீட்டுக்கு கிளம்பிச் செல்ல, சற்று உற்சாகமான மனநிலையோடு கிளம்பினார்கள்.

அவள் வீட்டுக்குச் செல்ல, தாங்கள் வருவதாக ஒரு தகவல் கூட சொல்லாததால், சட்டென துளசிக்கு எதுவும் ஓடவில்லை. "வாங்க மாப்ள,

வா நிஹா...” இருவரையும் உள்ளே அழைத்துச் செல்ல, அவனுக்கு காபி தயாரிக்க துளசி கிச்சனுக்குள் நுழைய, தானும் தாயோடு சென்றாள்.

“ஏண்டி..., இப்போ வரோம்னு ஒரு போன் பண்ணி சொல்ல மாட்ட..., மதியத்துக்கு விருந்துக்கு ரெடி பண்ணி இருப்பேனே..., இப்படி திடுதிப்புன்னு வந்து நிக்கறீங்க? இங்கே வரும்ணும்னு மாப்பிள்ளையை தொல்லை பண்ணியா என்ன?

“இன்னைக்கு ஏதோ குலதெய்வ கோவிலுக்கு போகணும்னு சம்பந்தியம்மா சொல்லிட்டு இருந்தாங்க. நீ என்னன்னா இங்கே வந்து நிக்கற...?” மகள் என்ன குழப்பம் செய்கிறாளோ என்ற கவலை அவரிடம்.

“என்கிட்டே எதுவும் சொல்லலையே...” பதில் கொடுத்தவளுக்கு, ‘அவர்கள் ஏன் இதை தன்னிடம் சொல்லவில்லை என்ற யோசனை உள்ளுக்குள் ஓடியது. ‘அப்படியென்றால்..., காலையில் தான் இங்கே வர வேண்டும் என சொன்னபொழுது அவர் யோசித்ததன் காரணம் இதுவா? ஏன் இதை என்னிடம் சொன்னால் ஆகாதோ...?’ தேவையற்ற கோபம் வளர்த்தாள்.

அவனை தான் பேசவே அனுமதிக்கவில்லை என்பது அந்த நேரம் வசதியாக மறந்து போனாள்.

“வினோ எங்கம்மா..., ஸ்கூல்க்கு போயிட்டாளா...?” தாயை திசை திருப்ப முயன்றாள்.

“ஸ்கூல்க்கு போறதா...? நைட் வரவே ரெண்டு மணி ஆயிடுச்சு..., இன்னும் ரூமில் தூங்கிட்டுதான் இருக்கா..., நீ வா..., மாப்பிள்ளைக்கு இந்த காபியை கொடு...” அவள் கையில் கப்பை திணித்தார்.

இவர்கள் வந்த அரவம் கேட்ட வினோ..., “ஐ..., மாமா..., எப்போ வந்தீங்க...? நான் உங்க மேலே செம கோவத்தில் இருக்கேன்..., ஒரு மாசமா எனக்கு மேத்ஸ் சொல்லிக் கொடுக்கவே வரலை..., அப்படியே வந்தாலும் பேசாம போயிட்டீங்க. இப்போ எனக்கு டென்த் போஷன் வேற

ஸ்டார்ட் பண்ணிட்டாங்க தெரியுமா...” உறங்கி எழுந்து வந்த அதே கோலத்தில், அவன் அருகில் அமர்ந்தவள், உரிமையாக சண்டை போட்டாள்.

“ஏய் குட்டிப்பொண்ணு..., ஸ்கூல்க்கு போகாமல் மட்டம் போட்டியா? உனக்கு ஸ்பெஷல் டியூசனுக்கு ஏற்பாடு பண்றேன். அந்த மிஸ் உன் வீட்டுக்கே வந்து சொல்லிக் கொடுப்பாங்க போதுமா...?” அவள் தலையை செல்லமாக ஆட்டி உரைத்தான்.

அதைப் பார்த்தவாறே வந்த நிஹாசினிக்கு..., சட்டென ஒரு பொறாமையும் கோபமும் எழ, ‘என்கிட்டே சாதாரணமா பேச முடியலை..., இங்கே இவகிட்டே என்ன கொஞ்சல் வேண்டிக் கிடக்கு...’ மனதுக்குள் அவனோடு சண்டை போட்டாள்.

வினோவோ..., “எனக்கு மிஸ் எல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டாம். நீங்களே சொல்லிக் கொடுங்க...” சிறுமியாக நடந்து கொண்டாள்.

“ஐயோ..., உன் மாமாவுக்கு எக்கச்சக்க வேலை பெண்டிங் இருக்கே..., வேண்ணா ஒரு மாசம் அவங்க கிட்டே படி..., நான் அதுக்குப் பிறகு சொல்லித் தரேன்...” சமாதானப் படுத்தினான்.

“ம்ஹூம்..., முடியவே முடியாது..., நீங்கதான் சொல்லித் தரீங்க...” அவன் கரத்தைப் பிடித்து கெஞ்சினாள்.

அவர்களுக்குள் இருக்கும் பழக்கம் நிஹாசினிக்குத் தெரியாதே. ‘ஒரே நாளில் என்ன இது...?’ என்ற யோசனைதான் அவளுக்கு ஓடியது. கூடவே..., அவளது தோற்றமும்..., கெஞ்சலும்..., அவனது சமாதானமும் பொறாமையைத் தூண்ட,

என்ன செய்கிறோம் எனத் தெரியாமல்..., வேகமாகச் சென்றவள்..., “ஏய்.., அறிவில்ல..., ஒரு ஆம்பளையை இப்படித்தான் தொட்டுப் பேசுவியா...? எழுந்து உள்ளே போடி...” வெடுக்கென அவளைப் பிடித்து இழுக்க, அதே நேரம் கையில் இருந்த கப், பேலன்ஸ் இல்லாமல்

விழுந்து சிதறியது.

அக்காவின் கோபத்துக்கான காரணம் புரியாமல் வினோ திகைக்க, ராஜாவுக்கோ அதிர்ச்சியாகவும், அவமானமாகவும் இருந்தது.

"அக்கா..." வினோ அதிர்ச்சியாக அழைக்க, மகளது பேச்சைக் கேட்ட துளசிக்கு திகைப்பாக இருந்தது. ஒரு நிமிடம், யார் என்ன பேசுவது எனத் தெரியாத அமைதி...

"வினோ..., நீ உள்ளே போம்மா..." ராஜா உரைக்க, தன் அக்காவை வித்தியாசமாக பார்த்தவாறு தன் அறைக்குச் சென்றாள்.

துளசியோ..., "நிஹா..., என்னடி இது...?" அவளை கடிந்துகொள்ள, "நான் வெளியே போயிட்டு வரேன் அத்த..." அவரிடம் உரைத்தவன், நிஹாசினியை வேதனையான பார்வை பார்த்துவிட்டு வெளியேறினான்.

பகுதி - 27.

ராஜா வீட்டை விட்டு வெளியேறவே..., நிஹாசினியை கையைப் பிடித்து அவள் அறைக்கு இழுத்துச் சென்ற துளசி, அவளை முறைப்பாக ஒரு பார்வை பார்த்தார்.
தான் செய்தது சரியில்லை என அவளுக்கும் தெரியவே..., தலையை குனிந்து கொண்டாள்.

"இப்போ ஏண்டி தலையை குனிஞ்சுக்கற...? நீ செய்தது தப்புன்னு தெரியுதுல்ல, பிறகு ஏன்...? மனசுக்குள் எப்பவும் அழுக்கு சேர விடக் கூடாது நிஹா. அது உன் வாழ்க்கையையே அழிச்சிடும்..., புரிஞ்சு நடந்துக்க.

"ஒரு ஆள் செய்த தப்பை திருத்திக்க நினைக்கும்போது..., அதை புரிஞ்சுக்காமல், அதை குத்திக் காட்டுவது மிருகத்தனம்..., நான் சொல்றது

உனக்கு புரிஞ்சிருக்கும்னு நினைக்கறேன்...

"உன்னால் எப்படிடி மாப்பிள்ளை முகத்துக்கு நேரா இப்படி பேச முடிஞ்சது? எங்கே..., உன் மனசைத் தொட்டு சொல்லு..., மாப்பிள்ளை தப்பானவர்ன்னு" அவள் முகத்துக்கு நேராக கேட்க, பொய்யாகக் கூட அவளால் அதைச் சொல்ல முடியவில்லை.

"வாழ்க்கை என்பது ஒரு முறைதான்..., அதை பாலைவனமா மாத்திக்கிறதும், சோலைவனமா ஆக்கிக்கிறதும் உன் கையில்தான் இருக்கு. இனிமேல் இந்த அம்மா உனக்கு சொல்ல வேண்டியது எதுவும் இல்லை..., முதல்ல மாப்பிள்ளைக்கு போன் பண்ணி பேசு..." அங்கிருந்து வெளியேறி விட்டார்.

நொந்துபோய் படுக்கையில் அமர்ந்து விட்டாள் நிஹா. தான் நடந்து கொள்வது அவளுக்கே பிடிக்க வில்லைதான். ஆனால்..., மனதுக்குள் இருக்கும் கோபம்..., அதற்கு தீனிபோட்டே ஆகவேண்டிய கட்டாயத்துக்கு தான் தள்ளப்படுவதை வேதனையாய் உணர்ந்தாள்.

கடந்து சென்ற இரண்டு மாதங்கள்..., ஒவ்வொரு நாளும் தான் பட்ட துன்பம்..., மனதுக்குள் ரணமாய் வலிக்கையில் அவனோடு சாதாரணமாக உரையாட அவளால் முடியவில்லை.

காலம் அதற்கு ஒரு சிறந்த மருந்து என்பதை அந்த நேரம் அவளுக்கு யார் சொல்லி புரிய வைக்க?

நிஹாசினியின் வீட்டை விட்டு வெளியேறியவனுக்கோ இதயத்தை யாரோ கசக்கிப் பிழியும் வலி. 'எப்படி அவளால் இப்படி நினைக்க முடிந்தது...?' இதயத்தை வெட்டி வெளியே எறிந்தால் கூட இந்த வலி போகும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

கார் அவன் கையில் தடுமாற..., சாலையில் காரை ஓட்டுவது தனக்கு ஆபத்து என உணர்ந்தவனாக, அருகே தெரிந்த ஒரு பார்க்கில் காரை நிறுத்திவிட்டு, உள்ளே சென்று அமர்ந்து கொண்டான்.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தானோ . . . , ரவுன்ஸ் சென்ற சீனிவாசனின் கண்களில் ராஜாவின் கார் பட , டிரைவரை இனோவாவை அங்கே செலுத்தச் சொன்னான் .

தன் அருகில் யாரோ அமரும் உணர்வில் ராஜா திரும்பிப் பார்க்க , அந்த நேரம் சீனிவாசனை அங்கே எதிர்பாராத அவன் திகைத்துப் போனான் .

“என்னடா . . . , டியூட்டிக்கு போகலையா . . . ?” அவனிடம் கேட்க ,

“நான் டியூட்டியில் தான் இருக்கேன் . நீயென்ன இங்கே . . . , அதுவும் கல்யாணமான அடுத்த நாளே இப்படி ஒரு இடத்தில் . . .” பார்வையை சுழற்றினான் .

“சும்மா தாண்டா . . . , கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கலாம்னு வந்தேன் . . .” தன்னை சரி செய்ய முயன்றான் .

என்னதான் முயன்றாலும் , அவனது மனதின் வலி அவன் முகத்தில் தெரிய . . . , “என்னடா தங்கச்சியோட இன்னும் ராசியாகலையா . . . ? இதுக்கு போய் இப்படி வந்து உக்காந்தால் ஆச்சா . . . ? உன் காதலை அவளுக்கு புரிய வைடா . . . , எல்லாம் சரியா போய்டும் . . .” அவன் தோள் தட்டினான் .

“காதலை உணர வைக்கணும் சீனி . . , எப்போ புரிய வைக்க முயற்சி பண்றோமோ அப்போ நாம அதில் தோத்து போயிட்டோம்னு அர்த்தம் . . .” நண்பன் சொல்லும் உண்மையை புரிந்து கொண்டாலும் , அவனை மாற்றுவது மட்டுமே பிரதானமாக இருக்க ,

“உணர மறுப்பவர்களுக்கு புரிய வைக்கணும் . . . , சிம்பிள் . . , இப்படி உர்ருன்னு இருக்காமல் . . . , கடையில் இருந்து ஏதாவது கிப்ட் வாங்கிக் கொடு . . . , கண்டிப்பா ஹேப்பி ஆவாங்க . அவங்களுக்கு எது சந்தோஷம்னு முதல்ல தெரிஞ்சுக்கோடா . . . , அதை விட்டுட்டு . . . , முதல்ல எந்திரி . . , கடைக்குப் போ . . . , இப்படியே பிரச்சனைக்குள்

புதையாமல், வெளியே வா . . . , எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா சரி ஆயிடும் . . . ” அவனை கிளப்பி அனுப்பினான்.

ராஜாவுக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் . . . , நண்பன் சொல்கிறான் என்பதற்காக . . . , தங்கள் கடைக்குச் சென்றவன் . . . , அன்று அவள் கடையில் தேடிய டிசைன், கலரில் அவளுக்குப் பிடித்த விதத்தில் சுடிதார், இரண்டு சாரியை எடுத்துக் கொண்டு, கூடவே . . , வினோவுக்கும் சில உடைகளை வாங்கிக்கொண்டு கிளம்பினான்.

தன்னை சீராக்கிக் கொண்டு அவள் வீட்டுக்குச் செல்ல . . . , அனைத்தையும் அவள் கையில் கொடுக்க . . . , ‘இது என்ன . . . ?’ என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“உனக்குத்தான் . . . , வினோவுக்கும் . . . , அத்தைக்கும் கூட இருக்கு . . . ” உற்சாகமாக காட்டிக் கொண்டான்.

“இப்போதான் கல்யாணத்துக்கு அவ்வளவு வாங்கினோம் . . . , எதுக்கு இதெல்லாம் . . . ” துளசி தயங்க . . . ,

“இருக்கட்டும் அத்த . . , நான் பேஸ் வாஷ் பண்ணிட்டு வரேன் . . . ” அவன் நிஹாசினியின் பின்னால் சென்றான்.

“என்ன லஞ்சமா . . . ? இப்போ எதுக்கு இதெல்லாம் . . . ? என் மனசை மாத்தவா? இல்ல என் கோபத்தை குறைக்கவா . . . ?” அவளை மீறி வார்த்தைகள் சிதறியது. பின்னே . . . , அவள் கால் செய்தபொழுது அவன் எடுக்கவில்லையே என்ற கோபம் இவ்வாறு வெளிப்பட்டது.

‘நாம பேச நினைத்தால் பேச மாட்டார் . . . , இவர் சமாதானப்படுத்தினால் நாம பேசணுமா . . . ?’ சிறு ஈகோ . . . , அவள் வாழ்க்கையை பொசுக்கப் போவதை அப்பொழுது அவள் அறியவில்லை.

அவன் தன் அலைபேசியை அவர்கள் வீட்டிலேயே விட்டு வந்தது அவளுக்குத் தெரியாதே.

“பொண்டாட்டிக்கு வாங்கிக் கொடுக்க ஏதாவது காரணம் இருக்கணுமா

என்ன? காதலில் வாங்கிட்டு வந்திருக்க கூடாதா...?" நிலைமையை சம்மாளிக்க முயன்றான்.

"காதல் காதல்ன்னு சொல்றீங்களே..., எங்கே காட்டுங்க..." விதண்டாவாதம் புரிந்தாள்.
மென்மையாக சிரித்தவன்..., "காட்டிட்டா போச்சு..." தோளைக் குலுக்கியவன், தன் அருகில் நின்றவளின் இடையை வளைத்து, அவள் அதிர்ந்து நோக்கும்பொழுதே அவள் இதழில் தன் இதழைப் புதைத்தான்.

அவள் திமிறி விடுபட முயல..., அதை சுலபமாக அடக்கியவன், தன் காதலை உணர்த்திவிடும் வேகத்தில் செயல்பட, ஒரு கட்டத்தில் அவளும் அந்த முத்தத்தில் திளைக்க.., அவள் மூச்சுக்கு திணறும் வேளையில், மென்மையாக அவளை விட்டு தன் இதழைப் பிரித்துக் கொண்டவன், அவளைத் தன்மேல் சாய்த்துக் கொண்டான்.

தான் அவன் முத்தத்தில் குழைந்து போனதை நம்ப முடியாத திகைப்பில் அவள் இருக்க..., "இப்போ புரியுதா..., என் காதலின் ஆழம்..." அவள் காதுக்குள் குழைந்தான்.

அவனை விலக்கித்தள்ள மனதுக்கும், கைக்கும் பலமின்றி போக..., தன்னையே வெறுத்தவளாக..., பிடிவாதமாக தான் கொண்ட வலியை நினைவு படுத்திக் கொண்டு..., "இதுக்குப்பேர் காதல் இல்லை..., இச்சை..." மெதுவாக உரைக்க, அந்த வார்த்தை ஏற்படுத்திய வலியில்..., வேகமாக அவளை விட்டு விலகி நின்றான்.

"உனக்கு என்மேல் அப்படி என்ன கோபம் ஹாசினி. சொல்லு திருத்திக்கறேன்..."கெஞ்சினான்.

"உங்களுக்கு இன்னும் புரியலை இல்ல..., புரியவும் செய்யாது..." ஆத்திரமாக உரைத்துவிட்டு வெளியேறினாள்.

தலையை அழுத்தமாக கோதியவன்..., பாத்ரூமுக்குள் புகுந்து முகத்தில் குளிர்ந்த நீரை அடித்து தன்னை நிலைக்கு கொண்டுவர போராடி, அதில்

வெற்றியும் கண்டான்.

'இந்த வலிதான் எனக்கு நிரந்தரம்...' தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மதிய விருந்தை கூட ரசிக்கும் மனநிலையில் அவன் இருக்கவில்லை. துளசிக்காக என பிடிவாதமாக உண்டவன்..., வினோவிடம் சாதாரணமாக உரையாடிவிட்டு..., தங்கள் வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

அந்த சம்பவத்துக்குப் பிறகு, முடிந்த அளவு நிஹாசினியோடு பேசுவதையோ, அவள் முகம் பார்ப்பதையோ தவிர்த்து விட்டான் ராஜா.

தன்னை பிசியாக வைத்துக்கொள்ள முயன்றான். காலையில் எட்டு மணிக்கே தங்கள் கடைக்குச் செல்பவன்..., அன்று செய்யவேண்டிய வேலைகளை பட்டியலிட்டுவிட்டு, தன் அலுவலகம் விரைவான். அவன் அங்கே வேலைகளை முடித்துவிட்டு, மீண்டும் கடைக்குச் சென்றால்.., கடை அடைக்கும் வரைக்கும் அங்கேயே இருந்தான்.

அவனது அந்த பாராமுகத்தை நிஹாசினியால் தாங்கவே முடியவில்லை. 'அவர் எப்படி என்னைத் தவிர்க்கலாம்...?' நேசம் கொண்ட மனது கொஞ்சலாக முரண்டியது. அதை அவள் சாதாரணமாக வெளிப்படுத்தியிருந்தால் பரவாயில்லையோ...

அன்று இரவில் பத்து மணிக்கு களைத்துப்போய் தன் அறைக்கு வந்தவனை எதிர்கொண்டாள் நிஹாசினி. வழக்கமாக அவன் வரும் முன்பாகவே உறங்கி இருப்பவள்..., இன்று விழித்திருப்பதைப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

"தூங்கலையா ஹாசினி..., உடம்பு எதுவும் சரியில்லையா...?" அவளை நெருங்கியவன்..., அவள் நெற்றியில் கைவைக்க நீண்ட கரத்தை வேகமாக பின்னால் இழுத்துக் கொண்டான்.

எங்கே சாதாரணமாக தொட்டால் கூட அதற்கும் ஏதாவது சொல்வாளோ என்ற பயமே காரணம். அதைக் கவனித்த நிஹாசினியின் முகமும், மனமும் வாடிப் போனது. அது ஏன் என்பதை ஆராய்ந்திருக்கலாம்.

'ஏன்..., என்னைத் தொட மாட்டாராமா? இல்லை..., தொட்டதே இல்லையா?' அவள் மனம் சிணுங்கியது.

நினைத்துப் பார்க்கையில் கடந்த சில நாட்களாகவே அவன் தன்னை நேருக்கு நேர் பார்க்கக் கூட இல்லை என்பது புரியத்தான் செய்தது.

"உங்களுக்கு என்னைப் பற்றி கூட நினைப்பு இருக்கா...?" அவள் கேள்விக்கு, பதில் சொல்லாமல் அவளையே வெறித்தான்.

"சொல்லுங்க..." அவனை உலுக்கினாள்.

"சொல்லு ஹாசினி..., ஏதாவது சொல்லணுமா...? ஏதாவது வேணுமா?" தன்மையாகவே கேட்டான்.

"போன வாரம் வீட்டில் ஒரு விசேஷம் நடந்தது..., ஞாபகம் இருக்கா?" சற்று கோபமாக வினவினாள்.

அவன் அமைதியாக இருக்க..., "தாலி பிரிச்சு கோர்த்தாங்க..., அது தெரிந்தும் நீங்க வீட்டில் இருக்கலன்னா அதுக்கு என்ன அர்த்தம்? உங்களுக்கும் அதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லன்னா...?".

'போனவாரம் நடந்து முடிந்ததற்கு இந்த வாரம் சண்டை போடுகிறாளா?' தவிப்பாக இருந்தது. அதே நேரம்..., அவள் அதற்காகவாவது தன்னிடம் பேசுவது மனதுக்கு சந்தோஷமாகவே இருந்தது.

"வீட்டில் தான் இருந்தேன் ஹாசினி. பங்க்ஷன் முடிந்த பிறகுதான் வெளியே போயிருந்தேன்..." அவள் தன்னை தேடியிருக்கிறாள் என்பதில் மனதுக்குள் ஒரு ஆறுதல்.

முறைப்பாக அவனை ஏறிட்டவள்..., "ஹாஸ்பிடல் போகணும்னு நினைப்பு இருக்கா இல்லையா...? ஒவ்வொரு விஷயத்தையும் நான் சொன்னால்தான் செய்வீங்களா? இப்போ கூட..., கால் ரொம்ப வலிக்குது.., அது கூட நான் சொன்னால்தான் உங்களுக்குத் தெரியும்

இல்ல. என்னை நீங்க கவனிக்கும் லட்சணம் இதுதான்...” பொரிந்தாள்.

“அன்னைக்கு கேட்டப்போ..., ஓகே லீவ்இட்..., நாளைக்கு போகலாம். மார்னிங் அப்பாயின்மென்ட் வாங்கறேன். இப்போ இந்த வீக்கத்துக்கு என்ன பண்றதுன்னு அம்மாகிட்டே கேட்டுட்டு வரேன்...” அவள்மேல் இருக்கும் தவறை சுட்டிக் காட்டாமல் தவிர்த்தான்.

அதை உணர்ந்தவள்..., “அம்மாகிட்டே ஒண்ணும் கேக்க வேண்டாம்..., உங்களுக்கே ஏதாவது செய்ய முடியும்னா செய்ங்க...” முறுக்கிக் கொண்டாள்.

அவளது சிறுபிள்ளைத்தனமான கோபத்தை அந்த நேரத்திலும் ரசித்தவன், “சரி..., ஹீட்டர்ல வெந்நீர் புடிச்சுட்டு வரேன்..., ஒத்தடம் கொடுத்தால் சரியாகலாம்...” தன் உடையைக் கூட மாற்றாமல், அவளுக்காக வெந்நீர் கொண்டு வந்தவன்..., அவள் அருகில் அமர்ந்தான்.

அவள் தன் இரவு உடையை முழங்கால் வரைக்கும் உயர்த்த...., திருமணம் முடிந்த இத்தனை நாட்களில்..., முதல் முறையாக சலனம் கொண்டது அவன் மனம்.

கையில் வைத்திருந்த சிறிய டவ்வலை வெந்நீரில் முக்கியவன், அவள் காலில் மென்மையாக ஒற்றி எடுக்க, அவளோ..., அவன் முகத்திலேயே கவனமாக இருந்தாள். சற்று நேரம் அவன் செய்கையை ரசித்தவள்..., அவன் முகத்தில் வழிந்த வியர்வையின் காரணம் புரியாமல் திகைத்தாள்.

“ராஜ்..., ஏசி சில் பத்தலையா...? கூட்டவா...?” அவள் கேள்விக்கு, “இல்ல..., அதெல்லாம் ஒண்ணுமில்லை..., வேண்டாம்...” வேகமாக அங்கிருந்து அகன்றவன், பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டான்.

“உப்...” வேகமாக மூச்சு விட்டவன்..., அங்கிருந்த கண்ணாடியின் முன்னால் நின்று...,
“ஏண்டா ராஜா..., இத்தனை நாள் நல்லாத்தானே இருந்த..., வேண்டாம்..., வம்பா போய்டும்..., நல்ல பிள்ளையாவே

இரு . . .” தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன், குளித்து முடித்து அறையில் . . . , அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான்.

ஒரு மாதிரி அவஸ்த்தையான மனநிலையில் உறக்கம் கூட வர மறுத்தது. மறுநாள் காலையில் . . . , பத்து மணிக்கு தங்கள் குடும்ப மருத்துவரிடம் அவளை அழைத்துச் செல்வதாக உரைத்தவன் . . . , தங்கள் கடைக்கு கிளம்பிச் சென்றான்.

சரியாக பத்து மணிக்கு அவளை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல, மருத்துவர் ஜெயாவைக் காண பெரிய கூட்டமே காத்திருந்தது. ஆனால் . . . , ராஜாவின் பெயரைச் சொல்ல . . . , அடுத்த நிமிடமே அவர்கள் உள்ளே அழைக்கப் பட்டார்கள்.

சற்று பதட்டத்தோடு அவள் உள்ளே நுழைய . . . , அவள் கரத்தை அழுந்த பற்றிக் கொண்டான். டாக்டர் ஜெயா சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்கவராக இருந்தார்.

அவனைக் கண்டவுடன் . . . , “அடடே . . . , ராஜா . . . , வாப்பா . . . , பாத்து ரொம்ப நாள் ஆச்சு. தாரிணி எப்படி இருக்கா . . . ? இவதான் உன் மிஸ்ஸஸ்ஸா . . . ? வாம்மா . . . , வந்து உக்கார் . . . . , உடம்புக்கு என்ன பண்ணுது . . . ? யூஷுவல் செக்கப்பா . . . ?

“சாரி ராஜா . . . , உன் மேரேஜ் டைம் எனக்கு ஒரு டாக்ட்டர்ஸ் மீட்டிங்க்கு வேண்டி டெல்லி போக வேண்டி இருந்தது. அதான் வர முடியலை . . .

“சரி . . . , கல்யாணம் முடிந்த ரெண்டே வாரத்தில் என்னைத் தேடி வந்தாச்சு. ஒரு ரெண்டு மூணு மாசம் கூட பொறுக்க முடியலையா? உடனே வாரிசை பாக்கணும்னு அவ்வளவு வேகம். ஓகே . . . , உங்க ஆசை புரியுது. சொல்லும்மா . . . , உன்னோட லாஸ்ட் பீரியட் டேட் . . . ” அவர் ரயிட்டிங் பேடை எடுக்க, நிஹாசினி தன் தலையை குனிந்து கொண்டாள்.

அவள் செய்கை வித்தியாசமாக இருக்க . . . , ஜெயா, ராஜாவைப் பார்க்க, “சொல்லு ஹாசினி . . . ” அவளைத் தூண்டினான்.

அவள் தேதியையும்..., மாதத்தையும் உரைக்க..., பேனாவில் அதைக் குறித்தவர், "ராஜா..., செம ஸ்பீட் தான்..., சாதிச்சுட்டுதான் கல்யாணத்துக்கே ரெடி
ஆனியா..., படவா..., எனிவே..., கங்கிராட்ஸ்..." அவர் ஆர்ப்பாட்டமாக சிரிக்க, நிஹாசினியின் மனதிலோ எரிமலையே குமுறியது.

அதே கோபத்தோடு அவனைப் பார்க்க..., 'ப்ளீஸ்...' அவன் பார்வை அவளிடம் கெஞ்ச, அதைக் கண்டுகொள்ளும் மனநிலையில் அவள் இருக்கவில்லை.

அவர்கள் மன நிலையை உணராமல்..., "மூணு மாசம் ஆகப் போகுது. அடுத்த வாரம் வந்து முதல் ஸ்கேன் எடுத்துடுங்க..., இங்கே வர கஷ்ட்டமா இருந்தால் என்னோட கிளிக்கு வாங்க..., அங்கேயே யூஷுவல் செக்கப் வச்சுக்கலாம்...

"நான் எழுதித் தர டேப்லட்டை தொடர்ந்து சாப்பிடும்மா. உள்ளே வா..., செக் பண்ணிடலாம்..." அவர் சொல்ல, மறைவுக்குச் சென்று அவளை செக் செய்தார்.

அவர்கள் உள்ளே இருக்க..., ராஜாவுக்கோ..., மனம் பலமாக அடித்துக் கொண்டது. 'இன்னைக்கு என்ன ஆகப் போகுதோ...?' அப்பொழுதே கவலை அவனைப் பிடித்து ஆட்டியது.

வெளியே வந்தவர்..., "எல்லாம் நார்மலாகத்தான் இருக்கு..., ஸ்கேன் ரிப்போட் கொண்டு வாங்க..., பாத்துடலாம்..." ஸ்லிப் எழுதி அவனிடம் கொடுத்தார்.

அறையை விட்டு வெளியேறிய நிஹாசினி..., வேக நடையில் முன்னால் நடக்க, "ஹாசினி..., மெதுவா..." அவள் பின்னால் கிட்டத்தட்ட ஓடினான்.

அவள் நடையை குறைக்காமல் போகவே..., "மெதுவா போ ஹாசினி..." அவள் கையைப் பிடித்து தடுத்தான்.

"ஏன்..., வேகமா போனால் உள்ளே இருக்கும் குழந்தை வெளியே வந்து விழுந்துடுமா...?அப்போ நடக்கட்டும்..., இந்த அவமானங்களில் இருந்து எனக்கு விடுதலை கிடைக்கும் இல்ல..." அவன் கையை உதறியவள், அது மருத்துவமனை என்பதை மீறி வெடித்தாள்.

அங்கிருந்த அனைவரும் அவர்களைத் திரும்பிப் பார்க்க..., முகம் இறுக அவன் அங்கேயே நின்றுவிட, அவளோ சென்று விட்டாள். அவள் காரில் சென்று அமர்ந்ததை உறுதிபடுத்திவிட்டு, அவளுக்குத் தேவையான மருந்தை வாங்கியவன்..., காரை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

வீட்டில் கார் நின்றவுடன்..., வேக நடையில்..., கோபமாகச் சென்ற நிஹாசினியைப் பார்த்த சுஜா..., ராஜாவைப் பார்க்க, அவனோ..., "வந்து சொல்றேம்மா..." அவளுக்கு பதில் கொடுத்துவிட்டு நிஹாசினியின் பின்னால் சென்றான்.

அவன் அறைக்குள் வரவே..., "இப்போ உங்களுக்கு சந்தோஷமா...? நான் கெட்டுபோன பிறகுதான் கழுத்தில் தாலி வாங்கிகிட்டேன்னு எல்லோருக்கும் தெரிஞ்சு போச்சு..., எனக்கு அசிங்கமா இருக்கு..., ஆனா உங்களுக்கு..., வாரிசு வந்துடுச்சுன்னு பெருமை இல்ல..."அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

"ஹாசினி புரிஞ்சுக்கோ..., ஒவ்வொரு விஷயத்துக்கும் கவலைப் பட்டால் நம்ம நிம்மதிதான் பறி போய்டும்..., அவங்க எங்க பேமிலி டாக்டர்..., புரிஞ்சுப்பாங்க..." அவளை சமாதானப்படுத்த முயன்றான்.

"ஆமா..., டாக்டர் புரிஞ்சுப்பாங்க..., வேலைக்காரங்க புரிஞ்சுப்பாங்க..., அம்மா புரிஞ்சுப்பாங்க..., கேட்டுக் கேட்டு எனக்கு அலுத்துப் போச்சு. ஒவ்வொரு இடத்திலும் அவமானப்படுவது நான்தானே..., ஒரு பொண்ணா என்னோட கஷ்டம் உங்களுக்கு புரியவே இல்லல்ல...

"உங்களுக்கும் பொண்ணு பொறந்து..., அவளுக்கு இதே மாதிரி ஒரு

நிலைமை வந்தால்தான் உங்களுக்குப் புரியுமா...? உங்களுக்கு பொண்ணு பெத்து கொடுக்கறேன்..., ஒவ்வொரு நிமிஷமும் நீங்க அவளை பாதுகாக்க தவிக்கும்போது என் மனசு படும் வேதனை புரியுமா...?
சொல்லுங்க..." அவன் சட்டையை விடவே இல்லை.

"ஹாசினி..., வேண்டாம்..., உன் வாயால் அப்படிச் சொல்லாதே..." அவள் வாயை கையால் மூடினான்.

"என்ன வலிக்குதா...? பொறக்கப் போற பொண்ணைப் பத்தி பேசினாலே உங்களுக்கு இப்படி வலிக்குதே..., எங்க அம்மாவுக்கு எவ்வளவு வலிக்கும்...? எல்லாத்தையும் இப்படி நாசம் பண்ணிட்டீங்களே..." வாய்விட்டு கதற..., அவளைவிட அதிகமாக அவன் துடித்துப் போனான்.

பகுதி - 28.

ராஜாவின் இதயம் இரண்டாம் முறையாக சில்லு சில்லாக நொறுங்கிப் போனது. வாழ்க்கையில் இப்படி ஒரு சூழலில் தான் சிக்கிக் கொள்வோம் என மூன்று மாதங்களுக்கு முன்னால் யாராவது சொல்லியிருந்தால் நிச்சயம் வாய்விட்டு சிரித்திருப்பான்.

ஆனால் இன்று..., ஒரு பெண்ணை.., அதுவும் தன் உயிருக்கு மேலான தன்னவளை தொட்டுவிட்டு..., அது ஏற்படுத்தும் விளைவுகளை..., அவள் படும் துன்பத்தை..., கொடுக்கும் காயங்களை தாங்க முடியாமல் துவண்டு போனது அவன் மனம்.

அதிலும்..., பிறக்கப்போகும் தன் மகளை..., அது மகளா என்று கூட தெரியாத சூழலில்.., அவள் அள்ளி வீசும் வார்த்தைகள்..., ஐயோ..., தாங்க முடியாத வலியைக் கொடுத்தது.

"ஒவ்வொரு நாளும் நான் செத்துப் பிழைக்கிற மாதிரி பண்ணிட்டீங்களே..., என் வயிற்றில் உள்ள உங்க பொண்ணு வெளியே வந்து உங்களுக்குப் புரிய வைப்பா..., அப்போ தெரியும்..., யாரோட

முகத்தையும் நிமிந்து பாக்க முடியாத மாதிரி பண்ணிட்டீங்களே..., இதுதான் உங்க காதலா?" இதுவரை ஒரு சொல் கேட்காமல் வாழ்ந்துவிட்டு..., மற்றவர் முன்னால் எதிர்கொள்ளவேண்டிய உண்மை..., அவள் நெஞ்சை சுடுவதை அவளும் என்னதான் செய்ய?

ஆனால்..., கொண்டவன் துணை இருக்கையில்..., அனைத்தையும் அவள் தைரியமாக எதிர்கொண்டிருக்க வேண்டும். ஆனால்..., அவன் தன்னை தவிர்த்தான்..., தவிக்க விட்டுவிட்டான் என்ற அவளது முதல் கோபமே அனைத்தையும் பூதாகரமாக எடுக்கச் செய்ததோ?

"நம்ம பொண்ணைப் பற்றி பேச்சுக்கு கூட அப்படிச் சொல்லாதே ஹாசினி.., ஹையோ...,என்னால் தாங்க முடியலையே...., இப்படி ஒரு சூழல் வரும்னு நான் கனவில் கூட நினைக்கலையே..., எல்லாம் என் தப்புதான்..., அதுக்கு எனக்கு என்ன தண்டனை வேணாலும் கொடு..., ஆனா..., நம்ம குழந்தை...

"வேண்டாம் ஹாசினி..., என்னை உயிரோட கொல்லாதே..., இது நம்ம வாழ்க்கை ஹாசினி..., இதுதான் நமக்கு விதிக்கப் பட்டது என்றால்..., நாம அதை ஏத்துக்கத்தான் வேணும். நான் செய்த தவறுக்கு தண்டனையை நம் குழந்தைக்கு கொடுத்து விடாதே..." அவள் கையால் தன் கன்னத்தில் அறைந்து கொண்டவன்..., வெதும்பிப் போனான்.

"உங்களுக்கு தண்டனையா...? எது தண்டனை...? நீங்க செய்த செயலுக்கு சிலுவையை நான்தானே சுமக்கிறேன். உங்களுக்கு என்ன தண்டனை கிடைத்தது...? என் கழுத்தில் இந்த கயிறை கட்டிவிட்டால் எல்லாம் சரியாகிப் போய்டுமா...?" குமுறினாள்.

"அப்போ..., எனக்கு தண்டனை கிடைத்தால், உன்னோட கோபம் போய்டுமா ஹாசினி.என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாயா...?" எதிர்பார்ப்பு அவன் குரலில் வழிந்தது.

"அத்தைக்கு மீசை முளைக்கும்போது பார்க்கலாம்..." அவனை உதறினாள்.

"தண்டனையை அனுபவித்துவிட்டு உன்னிடம் வருகிறேன்..." வேகமாக அங்கிருந்து வெளியேறியவன், நேராகச் சென்றது தங்கள் ஏரியாவில் இருக்கும் காவல் நிலையத்துக்கே.

அங்கே காவல் நிலையமே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்க..., அங்கே இருந்த ரைட்டரிடம் சென்றவன்..., "இன்ஸ்பெக்ட்டரைப் பாக்கணும்..." அவர் எதிரில் தவிக்கும் இதயத்தோடு காத்திருந்தான்.

தான் செய்யப்போகும் செயலுக்கான பின்விளைவுகள் அவனை பூதாகரமாக மிரட்ட, தன் வாழ்க்கை..., குடும்ப கௌரவம்..., மானம் மரியாதை..., அடுத்தநாள் காலை செய்தித்தாளில் வரப்போகும் செய்தி..., அனைத்தும் கண்முன்னால் விரிந்தது.

இவை அனைத்தையும் விட..., நிஹாசினிக்கு நிம்மதி அளிக்கும் என்றால் தன் உயிரையே கொடுக்க சித்தமாக இருந்தான்.

"எதுக்குப் பாக்கணும்...?" தன் வேலையிலேயே கவனமாக இருந்தவர் அவனிடம் கேட்க,

"அதை அவர்கிட்டேதான் சொல்லணும்..." தயங்கினான்.

"ஓ..., ஐயா கொஞ்சம் பிஸியா இருக்கார்..., 'ஏசி' விசிட்டுக்கு வந்திருக்கார், கொஞ்ச நேரத்தில் அவர் கிளம்பிடுவார்..., அதுக்குப் பிறகுதான் பாக்க முடியும், அப்படிப் போய் உக்காருங்க..." அங்கே போடப்பட்டிருந்த பெஞ்ச்சை காட்டினார்.

"தேங்க்ஸ்..." உரைத்தவன்..., அதில் அமர மனமின்றி..., வெளியே வராண்டாவின் ஓராம் காத்திருந்தான்.

சற்று நேரத்தில், வாசலில் ஒரு பரபரப்பு காணப்பட, வாயிலை நோக்கியவன்.., காவல் நிலைய இன்ஸ்பெக்ட்டரோடு..., அவனது நண்பன், ஏசி சீனிவாசனும் உடன் வர..., அதிர்ந்துதான் போனான்.

அவன் பார்வையில் பட்டுவிடாமல் விலகிவிட எண்ணுகையில்..., சீனிவாசன் அவனை கவனித்துவிட, "ஒரு நிமிஷம்..." இன்ஸ்பெக்ட்டரிடம் உரைத்தவன், "ராஜா..., நீ என்னடா ஸ்டேஷன் பக்கம்...? ஏதாவது வேணும்னா என்கிட்டே கேட்டிருக்கலாமே..." அவனை நெருங்கினான்.

"இல்..ல..., எது..வும் வேண்டாம்..., இங்..க..., ஹாங்..., உன் இனோவாவை பாத்தேனா..., அதான்..., நான் பிறகு வரேன்..." வேகமாக கிளம்ப முயன்றான்.

அவன் செய்கை வித்தியாசமாக இருக்க..., அவனைத் தடுத்தவன், தன் பின்னால் நின்ற போலீசைப் பார்க்க, "சார்.., இவர் இன்ஸ்பெக்ட்டரைப் பாக்கணும்னு சொன்னார்..., நான்தான் வெயிட் பண்ணச் சொன்னேன்..." அந்த ரயிட்டர் உரைக்க, ராஜா பிடிபட்ட உணர்வில் விழித்தான்.

"ஓ..., இவர் என்னோட ப்ரண்ட் தான்..., நான் பாத்துக்கறேன்..., டிரைவர்..." குரல் கொடுக்க, அவனது கார் வர, ராஜாவையும் இழுத்துக்கொண்டு காரில் ஏறினான்.

சீனிவாசன் ராஜாவின் வீட்டு விலாசத்தை உரைக்க..., ராஜா அங்கே எதுவும் சொல்ல முடியாமல் அமைதியானான்.

கார் ராஜாவின் வீட்டின் முன்னால் நிற்கவே..., போலீஸ் ஜீப்பைப் பார்த்த செக்கியூரிட்டி உடனடியாக சுஜாவுக்கு தகவல் கொடுக்க, பதட்டத்தோடு வெளியே வந்தார்.

"என்னப்பா சீனி..., ராஜாவை நீ கூட்டி வர..., அதுவும் போலீஸ் கார்ல...? என்னப்பா..., ஏதாவது ஆக்சிடன்ட் பண்ணிட்டானா...?" வேகமாக ராஜாவை ஆராய்ந்தவாறு சீனிவாசனிடம் படபடத்தான்.

"ஆண்ட்டி..., முதல்ல வீட்டுக்குள் போய் பேசலாம்..., எல்லாரும் பாக்கறாங்க..." இதழ் அசையாமல், பார்வையை அங்கே இருக்கும்

வேலைக்காரர்கள் பக்கம் சுழற்றியவனாக உரைக்க,

"உள்ளே வா..." அங்கே இருந்த அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றாள்.

"இப்போ சொல்லு..., என் மனசு பதறுது..." தவித்தார்.

"நான் என்ன சொல்றது..., இவன்தான் சொல்லணும். இந்த ஏரியா போலீஸ் ஸ்டேஷன்ல..., எதையோ பறிகொடுத்தவன் மாதிரி நின்னுட்டு இருக்கான். எதேச்சையா நான் அங்கே போனதால் இவனைப் பாத்து கையோட கூட்டி வந்தேன். இல்லன்னா என்ன பண்ணி வச்சிருப்பானோ தெரியலை..." கோபமாக பொரிந்தான்.

"என்ன சீனி சொல்ற..., ராஜா..., ஸ்டேஷனுக்கு..., என்னதான் நடக்குது ராஜா. சீனி என்னவோ சொல்றான்..., நீ பாட்டுக்கு பேசாமல் இருக்க..." அவனை உலுக்கினார்.

"எனக்கு தண்டனை கிடைக்கணும்மா..., தப்பு பண்ணிட்டு..."

"லூசு மாதிரி உளறாதடா..., அப்படி என்ன பண்ண...? ப்ளான் பண்ணி..., கன்னிங்கா எதையாவது செய்தியா...? நடந்தது ஒரு ஆக்சிடன்ட்..., அதையும் இப்போ சரி பண்ணியாச்சு பிறகு ஏன்...? உன் வீட்டைபத்தி கொஞ்சமாவது யோசிச்சுப் பாத்தியா...?" அவனை சுஜாவின் கரத்தில் இருந்து உருவியவன்..., கோபம் குறையாமலே சீறினான்.

"ராஜா..., இதென்ன விபரீதம்...? நிஹா ஏதாவது சொன்னாளா...?" ராஜாவை தன் பக்கம் திருப்பினார்.

"அம்மா..." தாயை கட்டிக் கொண்டு கதறி விட்டான்.

முதல்நாள் அவன் அழுகைக்குப் பிறகு, இன்றுதான் அழுவதைப் பார்க்கிறார். காலையில் மருத்துவமனைக்கு சென்று வரும்பொழுதே இருவரின் முகமும் சரியில்லை..., ஏதோ சாதாரண மனஸ்தாபம் என

நினைத்தால்..., ராஜாவின் செய்கையைப் பார்க்கும்பொழுது அப்படித் தெரியவில்லையே..., பதறினார்.

"ஆண்ட்டி..., முதல்ல இவன் 'ஒய்ப்'பை கூப்பிடுங்க..., அவங்ககிட்டே பேசணும்..., இதை இப்படியே விட்டால்..., எங்கேயாவது போய் எதையாவது உளறி வச்சான்னா வம்பா போய்டும்..." கோபம் குறையவில்லை.

"ராஜா..., இப்படி அழுவதை முதல்ல நிறுத்து. அவ ஏதோ கோபத்தில் சொன்னால்..., அதை பெருசா எடுக்காதே என உன்னிடம் படிச்சு படிச்சு சொன்னேனே..., இப்போ இப்படி ஒரு காரியத்தை செய்யத் துணிஞ்சு இருக்கியே. இந்த விஷயம் நம்ம வீட்டு ஆம்பளைங்களுக்கே இன்னும் தெரியாது.

"ஆனா நீ..., இந்த ஊருக்கே வெளிச்சம் போட்டு காட்டத் துணிஞ்சுட்டியே. இப்போ அவ உன்னோட மனைவி..., அது உனக்கு ஞாபகம் இருக்கா...? எப்படி உன்னால் இதைச் செய்ய முடிந்தது...?" அவனை அங்கே இருந்த சோபாவில் அமர வைத்தார்.

அவன் எப்படிச் சொல்வான்..., தனக்கு பிறக்கப்போகும் குழந்தையை வைத்து அவள் பேசிய வார்த்தைகள்..., அவளது பேச்சு..., வெளியே சொல்லக் கூடியதா...?

"ப்ளீஸ்ம்மா..., என்கிட்டே எதையும் கேக்காதீங்க..." அவர் மடியில் படுத்துக் கொண்டான்.
அதே நேரம் அங்கே தாரிணி வர..., "ஆண்ட்டி..., நீங்க ராஜாவோட மனைவியை கொஞ்சம் வரச் சொல்லுங்க..." சீனிவாசன் உரைக்க, அங்கே இருந்த நிலைமையின் தாக்கம்..., அவளை கேள்வி கேட்காமல், அவன் சொன்னதைச் செய்யத் தூண்டியது.

தாரிணி இன்ட்டர்க்காமில் அழைக்கவே..., அழுது வீங்கிய முகத்தோடு அவள் கீழ வர..., போலீஸ் உடையில் இருந்த சீனிவாசனைப் பார்த்து திகைத்தாள்.

'இவர்..., அன்னைக்கு ஆபீஸ்ல பாத்த மாதிரி இருக்கே...' யோசனையோடு உள்ளே வர, அவள் முதுகின் பின்னால் கதவை தாழிட்டாள் தாரிணி.

அங்கிருந்த அனைவரும் அவளை கூர்மையாக நோக்க..., புரியாத பார்வையாக அனைவரையும் ஏறிட்டாள். ராஜாவை நோக்க..., அவனோ..., சுஜாவின் இடுப்பை கட்டிக்கொண்டு குழந்தையென கவிழ்ந்திருந்தான்.

"மிஸ்ஸஸ் ராஜா..., உங்ககிட்டே ஒரு கம்பிளெயின்ட் வாங்கிட்டு போகலாம்னு வந்திருக்கேன்..." ஒரு போலீஸ் அதிகாரியின் மிடுக்கு அவனிடம் வந்திருந்தது.

"கம்ப்ளெயின்ட்...?" அவள் கேள்வியாக இழுக்க...,

"உங்க கணவர்..., அதாவது மிஸ்ட்டர் ராஜா..., போலீஸ்ல சரண்டர் ஆக விரும்பறார். அவர் சரண்டர் ஆனாலும்..., கம்ப்ளெயின்ட் இல்லாமல் நாங்க கேஸ் எடுக்க முடியாது..., சோ..." அவன் வார்த்தையை நிறுத்த, அவள் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சியை உள்வாங்கியது.

ராஜாவை காயப்படுத்த அவள் எத்தனையோ பேசியிருக்கிறாள்தான்..., ஆனால்..., அவனை ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் பார்க்கும் தைரியம் அவளுக்குக் கிடையாதே. அவனை ஜெயிலுக்கு அனுப்பும் எண்ணம் அவளுக்கு என்றுமே இருந்ததில்லையே...

அவன் தன்னை தேடி வரவில்லை என்றபொழுது கூட, அப்படி ஒரு யோசனை கூட அவளுக்கு வந்தது கிடையாதே. அப்படி இருக்கையில்.., தன் கணவனை ஜெயிலுக்கு அனுப்புவதா...? அவருக்கு மூளை எதுவும் குழம்பி விட்டதா?

ஒரு விதத்தில் அவள் மனதுக்கு நிம்மதி அளித்த விஷயமே...,

சீனிக்கு எதுவும் உண்மை தெரியவில்லை என்பது மட்டுமே.

"என்னது...? சரண்டர்..., ஏன்...?" அதிர்ச்சியில் பேச்சும் தடுமாறியது.

"அது உங்களுக்குத்தான் தெரியும்னு சொன்னார்..., சொல்லுங்க..., கம்ப்ளெயின்ட் கொடுக்கறீங்களா...?" அவன் குரலின் கடுமை அவளை மிரட்டியது.

அவன் பேச்சு..., தன் சந்தேகத்தை உறுதிபடுத்த, "சார்..., என் ஹஸ்பெண்ட் மேலே நான் எதுக்கு கம்பிளெயின்ட் கொடுக்கப் போறேன். இது எங்கே பெர்சனல் விஷயம்..., சோ ப்ளீஸ்..." அவள் குரலில் கோபத்தை கலக்க, அவ்வளவு நேரமாக தாயின் மடியில் புதைந்திருந்த ராஜா..., வெடுக்கென நிமிர்ந்தான்.

"ஓ..., அப்போ..., நீங்க சொன்ன விஷயத்தை உங்க கணவர் கிட்டே கன்வே பண்ணிடுங்க. இப்போ நான் கிளம்பறேன்..." சுஜாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு கிளம்பிவிட்டான்.

அவன் செல்லவே..., அந்த அறைக்குள் கடுகு விழுந்தால் கூட ஓசை கேட்கும் அளவுக்கு அமைதி.

நிஹா ராஜாவை குற்றம்சாட்டும் பார்வை பார்க்க..., அவனோ தயங்காமல் அவளை ஏறிட்டான்.

நிஹா அறையை விட்டு வெளியேற முயல..., "நிஹா..., ஒரு நிமிஷம்..." சுஜாவின் குரல் அவளைத் தேக்கியது.

"உங்களுக்குள் என்ன சண்டை..., கோபம்..., எதையும் நான் கேட்க வரலை. ஆனா..., ஒரே ஒரு விஷயம்..., இந்த குடும்பத்தின் கௌரவத்தை காக்கும் பொறுப்பு உனக்கு இருக்கு.

அதே மாதிரி..., கணவன் மனைவி பிரச்சனை, அந்த நாலு சுவத்தை தவிர வெளியே வரக் கூடாது..., புரிஞ்சு நடந்துக்க..." அதற்குமேல் எதையும் சொல்லத் தயாராக இல்லை என பேச்சை அத்தோடு நிறுத்திக் கொண்டார்.

"நிஹா..., இருந்தாலும் உன்கிட்டே நான் இதை எதிர்பார்க்கலை. கல்யாணத்துக்கு முன்னாடியும் சரி..., இப்பவும் சரி..., ராஜா முகத்தில் கொஞ்சம் கூட சிரிப்பே இல்லை. உன் கோபம் நியாயமானது..., அதற்காக..., ஒருத்தரை ஒருத்தர் காயப்படுத்திட்டே இருப்பது சரியில்லை.

"உன் மனசு ஆரோக்கியமா இருந்தால்தான்..., குழந்தை ஆரோக்கியமா இருக்கும். பாத்துக்கோ..." தாரிணி உரைக்க, அதையும் அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

நடந்த சம்பவத்துக்கு யாரும் அவளை குற்றம் சொல்ல தயாராக இருக்கவில்லை. அதற்கு காரணம்..., அவள்பக்கம் நியாயம் இருந்ததே.

"ராஜா..., இனிமேல் இந்தமாதிரி பயித்தியக்காரத்தனமா எதையும் யோசிக்காதே..., ரெண்டுபேரும் முதல்ல மனசு விட்டு பேசுங்க..., பேசினால் தீராத பிரச்சனை எதுவுமே இல்லை. வா தாரிணி..." இருவரும் வெளியேறினர்.

அவர்கள் செல்லவே..., "ரொம்ப நல்ல நடிப்பு..., நான் அடிக்கிற மாதிரி அடிக்கறேன்..., நீ அழற மாதிரி அழுன்னு சொல்லி..., உங்க ப்ரண்டை சரியான நேரத்துக்கு அங்கே வரச் சொன்னீங்க போல..." குத்தலாக கேட்க, அவள் கம்பிளெயின்ட் கொடுக்க மாட்டேன் என சொன்னபொழுது ஏற்பட்ட சந்தோசம் பொசுங்கியே போனது.

"இப்படியெல்லாம் செய்தால்..., எனக்கு நேர்ந்தது இல்லைன்னு ஆயிடுமா? இனிமேல் இப்படி எதையும் செய்து

வைக்காதீங்க...” தன் மறுப்பையும் கோபமாகவே வெளிப்படுத்திச் செல்லும் அவளை என்ன செய்ய எனத் தெரியாமல் பார்த்திருந்தான்.

அவளுக்கு என்ன சொல்லி புரிய வைக்க..., நேர்ந்தவை அனைத்தும் எதேச்சையானது என்று..., ஒரு பெருமூச்சு எழுந்தது.

அதே நேரம்..., அவள் வார்த்தைகளில் இருந்த உண்மை..., அவள் தாய்க்கு தான் தீராத மன வருத்தத்தை கொடுத்து விட்டோமோ...., மனம் வலித்தது.

இந்த சந்தேகத்தை தீர்த்தே ஆக வேண்டும்..., தன்னை சீர்படுத்திக் கொண்டவன், தன் தாயைத் தேடிச் சென்றான்.

“அம்மா...” அவன் அழைக்க, தன் சோபாவின் அருகை காட்ட..., அவர் அருகில் வந்து அமர்ந்தான்.

“உன்னால் எப்படி ராஜா இதைச் செய்ய முடிந்தது...? ஒரு வேகத்தில் என்றாலும் இப்படியா...? குழந்தை பிறந்தால் எல்லாம் சரியா போய்டும். அது வரைக்கும்..., கொஞ்சம் பொறுமையா இரு ராஜா. அவ மனசில் ஏதோ ஆறாத காயம் இருக்கு..., அது என்னன்னு கண்டு பிடி..., எனக்கு இருக்கும் ஒரே குழந்தை நீதான்...” அவன் கன்னம் தடவினார்.

“சாரிம்மா..., இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்...” அவருக்கு உறுதி அளித்தவன், அவனது காரை டிரைவரை விட்டு எடுத்துவரச் சொல்லிவிட்டு, அதில் கிளம்பி நிஹாசினியின் வீட்டுக்குச் சென்றான்.

“வாங்க மாப்ள...” அழைத்தவரது பார்வை அவன் முதுகின் பின்னால் துழாவ,

“ஹாசினி வரலை..., நான் மட்டும்தான் வந்தேன்...” அவர்

தேடலுக்கு முற்றுபுள்ளி வைத்தான்.

அவர் அவன் முகத்தை ஆர்வமாக நோக்கி..., "இன்னைக்கு ஹாஸ்பிடல் போறதா
சொல்லியிருந்தா..." கேள்வியா பதிலா எனத் தெரியாத விதத்தில் உரைக்க,

"ம்..., போயிட்டு வந்துட்டோம்... பேபி நார்மலா இருக்குன்னு சொன்னாங்க. ஹாசினியும் நல்லா இருக்கா..." மேலும் எதையோ சொல்ல அவன் தயங்க, கொஞ்சம் படபடப்பாக உணர்ந்தார்.

"வேற எதுவும் பிரச்சனையா மாப்ள..., உங்க முகமே சரியில்லையே..."

"சாரி அத்த..., உங்களுக்கு தாங்க முடியாத மனக் கஷ்டத்தை கொடுத்துட்டேன் இல்ல. ஹாசினியை நான் நல்லா பாத்துப்பேன் அத்த. நீங்க என்னை நம்பறீங்க தானே..." தான் கேட்க வந்ததை எப்படி கேட்கவென்று தெரியாத தடுமாற்றம் அவனிடம்.

"என்ன மாப்ள திடீர்ன்னு...?" தன் மகள் எதையோ குழப்பி விட்டிருக்கிறாள் என அவருக்குப் புரிந்தது.

"உங்களுக்கு ஆறாத காயத்தை கொடுத்துட்டேனா அத்த..., சத்தியமா.., இப்படியெல்லாம் ஆகும்னு எனக்குத் தெரியாது. ஒவ்வொரு விஷயத்திலும் ஹாசினி ஏறிடும் கஷ்டத்தைப் பாக்குறப்போ..., எனக்கே என்னை பிடிக்கலை.

"மனசெல்லாம் பாரமா..., எதையாவது செய்து இதை சரிபண்ணிர மாட்டேனா என்ற வேகம்..., ஆனா..., இதில் எதையுமே செய்ய முடியாத என்னோட நிலை..., கஷ்டமா இருக்கு அத்த..., நீங்க என்னை மன்னிச்சுட்டீங்களா? உங்களால் மன்னிக்க முடியுமா...?" யாசிக்கும் குரலில்

கேட்க..., துளசிக்கு மனதைப் பிசைந்தது.

"என்ன மாப்ள..., இப்படியெல்லாம் பேசறீங்க...? ஒரு அம்மாவுக்கு என்ன வேணும்..., தன்னோட பொண்ணை கண்கலங்காமல் பார்த்துக் கொள்ளும் ஒருத்தனின் கையில் அவளை புடிச்சுக் கொடுக்கணும்..., அதுதானே..., அது எனக்கு நூறு சதவீதம் திருப்தியே.

"அதேபோல்..., மருமகன், மகனா இருக்கணும்..., அதுவும் எனக்கு இரநூறு சதவீதம் சந்தோஷமே. இதற்குமேல் என்ன வேணும்..." நடந்த தவறை சுட்டிக்காட்ட அவர் விரும்பவில்லை.

"அந்த..., அந்த தப்பு..." அவர் முகம் பார்க்க தயங்கினான்.

"மாப்ள..., அதை இன்னுமா மனசுக்குள் போட்டு குழப்பிட்டு இருக்கீங்க? உங்களுக்கு ஒண்ணு தெரியுமா...? நடந்த விஷயத்தை என் பொண்ணு என்கிட்டே சொல்லலை..., நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியும். அப்படிப் பார்த்தால்..., என் பொண்ணு, என்கிட்டேயே உங்களை விட்டுகொடுக்க தயாரா இருக்கலை. அப்படி இருக்கும்போது...,

"அதைவிட..., அவ உங்களோட மனைவி என ஆழமா உங்க மனசில் பதிந்து போனதால் நேர்ந்த விஷயம் அது. எனக்கு விஷயம் தெரிஞ்சப்போ..., ஒரு நொடி கூட என் பொண்ணோட எதிர்காலம் என்ன ஆகும்னு கவலையோ..., பயமோ ஏற்படவே இல்லை.

"இப்படி ஆகிடுச்சே..., என்ற வருத்தம்தான் இருந்தது. அவ கர்ப்பம்னு தெரிஞ்சப்போ கொஞ்சம் அதிர்ச்சியா இருந்தது. ஆனா..., என் பொண்ணோட கோபமும், பிடிவாதமும்தான் அதிர்ச்சியை அதிகப்படுத்தியதே தவிர..., நீங்க அவளை கைவிட்டுடுவீங்க என்ற பயம் இருக்கலை.

"நடக்கும் தவறு..., ஆளுக்கு ஆள் மாறுபடும். எல்லாரையும் ஒரே தராசால் நாம அளக்க முடியாது. இப்போ என் கவலை எல்லாம்..., என் பொண்ணு கிடைச்ச வாழ்க்கையை காப்பாத்திக்கணுமே என்ற விதத்தில்தான் இருக்கு.

"அதனால்..., என்னைப்பற்றி..., நான் என்ன நினைப்பேன் என்பதைப் பத்தி கவலைப் படாதீங்க. எனக்கு உங்கமேல் எந்த கோபமும் இல்லை..., கோபம் இருந்தால் தானே மன்னிக்க..., உங்களை என் மூத்த மகனாகத்தான் நான் பாக்கறேன்..., சோ மனசைப் போட்டு குழப்பிக்காதீங்க..." தன்னால் முடிந்த அளவு அவனுக்கு தைரியமும், நம்பிக்கையும் அளித்தார்.

அவரது வார்த்தைகள்..., அவனுக்கு பெரும் ஆறுதல் அளிக்க..., தன் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான். துளசியோ..., நிஹாசினியிடம் பேச வேண்டும் என குறித்துக் கொண்டார்.

பகுதி - 29.

நாட்கள் அதன் போக்கில் கடக்க..., நிஹாசினிக்கும், ராஜாவுக்குமான உறவு அதே நிலையில் நீடித்தது என்பதுதான் சரியாக இருக்கும். நிஹாவை அவன் வீட்டில் இருந்த அனைவரும் உள்ளங்கையில் வைத்து தாங்கிக் கொண்டார்கள்.

எல்லாம் இருந்தாலும்..., மனதில் விழும் வெற்றிடத்தின் காரணம் புரியாமல் திகைத்திருந்தாள் நிஹாசினி.

அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு, ராஜாவிடம் கோபம் காட்டுவதைக் கூட குறைத்துக் கொண்டாள். ஆனால்..., அவன் அருகாமையையும்..., ஆறுதலையும் தேடும் மனதை

என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அவனாக தன்னிடம் பேசாததை எண்ணி மனம் தவித்தது. ஆனால்..., தானாகச் சென்று அவனிடம் பேசவும் அவள் ஈகோ இடம் கொடுக்கவில்லை. அவளுக்குத் தெரியவில்லை..., அவன் முகம் பார்த்து ஒரு புன்னகை புரிந்திருந்தால்..., அவள்மேல் காதலைக் கொட்ட அவன் தயாராக இருக்கிறான் என்பதை அவள் உணரவே இல்லை.

அன்று தன் அறையில் ஏதோ யோசனையில் இருக்கவே..., இன்டர்க்காம் அவளை அழைத்தது.

அதை காது கொடுக்க..., "நிஹா..., ரேவதி வந்திருக்கா..., ரூமுக்கு அனுப்பவா..., இல்ல கீழே வரியாம்மா..." சுஜாவின் குரல் அழைத்தது.

"அவளை மேலே வரச் சொல்லுங்க அத்த..., கொஞ்சம் தலை சுத்தலா இருக்கு..." அவள் உரைத்த அடுத்த நிமிடம், பதறித்தான் போனார்.

"என்ன நிஹா சொல்ற...? தலை சுத்தலா இருக்கா...? அப்போ தனியா அங்கே இருந்து என்ன பண்ற..., என்கிட்டே சொல்லியிருந்தால் நான் வந்து துணைக்கு இருந்திருப்பேனே..., சரி இரு நான் வரேன்..." ரேவதியையும் அழைத்துக்கொண்டு மாடி ஏறினார்.

அவள் அறைக்குள் நுழைந்தவர்..., "நிஹா..., ரொம்ப முடியலையா...? ஹாஸ்பிடல் போகணுமா..?" அவள் நெற்றியில் கை வைத்து பார்த்தார்.

"ஹையோ அத்த..., நீங்க இவ்வளவு பதறுற அளவுக்கு எதுவும் இல்லை. எப்பவும் இருக்குறதுதான்..., இன்னைக்கு கொஞ்சம் அதிகமா இருக்கு... நான் சம்மாளிச்சுக்கறேன்...

நீங்க ஏன் இவ்வளவு தூரம் மாடி ஏறி வரீங்க..” அவள் உரைக்க...,

“ஆமா..., நூறு படி ஏறியா வரேன்.., லிப்ட்டில் ஏறினால் அது கொண்டுவந்து விட்டுட்டு போகுது. இரு..., லஷ்மிகிட்டே சொல்லி ஏதாவது ஜூஸ் கொடுத்து அனுப்பறேன்..., நீங்க பேசிட்டு இருங்க...” அவள் மறுப்பை கண்டுகொள்ளாமல் கிளம்பி விட்டார்.

அவர் செல்லவே..., “வா ரேவதி..., ஏன் வெளியவே நிக்கற..., உக்கார்...” அங்கே இருந்த ஹாலில் அவளோடு சென்று அமர்ந்து கொண்டாள்.

“சொல்லு..., என்னைத் தேடி இவ்வளவு தூரம் வந்திருக்க...?” அவள் அமைதியை நிஹாவே கலைத்தாள்.

“உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லத்தான் வந்தேன்...., ஆனா அதை எப்படிச் சொல்லன்னுதான் தெரியலை...” தயங்கினாள்.

“ம்ச்..., இவ்வளவு தூரம் வந்துட்டு தயங்கினால்..., சும்மா சொல்லு...” அவளைத் தூண்டினாள்.

“அது..., ராஜா சார் கம்பெனியை விக்கப்போறதா ஒரு பேச்சு அடிபடுது.., அது உனக்குத் தெரியுமா...? ஆபீஸ்ல யார் முகத்திலும் ஈயாடவே இல்லை. காம்பன்சேஷன் எல்லாம் தரேன்னுதான் சார் சொல்றாங்க. ஆனா..., இப்படி ஒரு அட்மோஸ்பியர் எங்கேயுமே கிடைக்காது.

“அதைவிட..., சாரோட எய்மே..., சினிமாவில் சாதிக்கணும் என்பதுதான். அதுக்கான ஆப்பர்ச்சூனிட்டி வர மாதிரி இருக்கு. இந்த நேரம் கம்பெனியை விக்கிறதுன்னா..., எங்களால் தாங்கிக்கவே முடியலை. இதையும் அவர் சந்தோஷமா செய்யிற மாதிரி தெரியலை அதான்...

“கண்டிப்பா உனக்கு விஷயம் தெரியாமல் இருக்காது. நீ சொன்னால் அவர் கண்டிப்பா கேட்பார்..., அதான்..., உன்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு போகலாம்னு வந்தேன்...” கவலை அவள் குரலில் மண்டிக் கிடந்தது.

நிஹாசினிக்கு தான் கேட்டதை நம்பவே முடியவில்லை. ராஜாவுக்கு அந்த கம்பெனி எவ்வளவு பிடிக்கும் என்பது அவளுக்குத் தெரியுமே. அதை விற்பது என்றால்...

“புதுசா எந்த வொர்க்கும் இப்போ கமிட் பண்றதில்லையா...?” நிஹா கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

“இல்ல..., அப்படி எதுவும் நடக்காது..., நான் அவர்கிட்டே பேசறேன். நீ காபியை குடி...” யோசனையில் மூழ்கினாள்.

அவள் விடைபெற்றுச் செல்லவே..., அவளோடு கீழே வந்தவள்..., சுஜாவைத் தேடிச் சென்றாள்.

“நிஹா..., இப்போ உடம்பு எப்படி இருக்கு? ஏதாவது வேணுமா...?” கிச்சனில் மேற்பார்வையிட்டவர் அவளிடம் கேட்டார்.

“இல்லத்த..., உங்ககிட்டே ஒண்ணு கேக்கணும்...” அவள் கேட்கவே..., அவளைத் திரும்பி பார்த்தவர், “கேளும்மா..., அதுக்கு ஏன் இவ்வளவு தயங்கற...?” ஹாலுக்கு விரைந்தார்.

“ராஜ், கம்பெனியை சேல் பண்ணப்போவதைப் பற்றி உங்ககிட்டே சொன்னாரா..?” அவள் கேட்க, “என்ன..., கம்பெனியை விக்கறதா? சான்சே இல்லை. அது அவனோட லட்சியம்..., கனவு..., அதை அவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுக்க மாட்டான். உன்கிட்டே யார் இந்த விஷயத்தை சொன்னது? ரேவதியா...?” அவர் புருவம் யோசனையாகச்

சுருங்கியது.

"ஆமா அத்த..., அதான் எனக்கும் அதிர்ச்சியா இருக்கு..."

"இல்லம்மா..., அவ்வளவு சீக்கிரம் இப்படி ஒரு முடிவெடுக்க மாட்டான். அவன்கிட்டே கேட்கலாம்..., நீ இதைபத்தி குழப்பிக்காதே..." அவளுக்கு சொல்லிவிட்டாலும்..., சுஜாவால் அதை சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

அந்த கம்பெனியை ஆரம்பிக்க அவன் பட்ட பாடு..., வேலைகள் பெற அவன் கொண்ட முயற்சி..., அவன் ஒற்றை ஆளாக பட்ட துன்பங்கள் அனைத்தையும் உடன் இருந்து பார்த்தவர் ஆயிற்றே.

நிஹாசினியும் அறைக்குச் செல்லாமல் அங்கேயே காத்திருந்தாள். சுஜா அவனை போன் செய்து அழைக்க..., உடனடியாக அங்கே வந்தான்.

"என்னம்மா..., உடனே வரச் சொன்னீங்க. ஹாசினிக்கு..." துவங்கியவன், அங்கே அவள் சாதாரணமாக இருப்பதைப் பார்த்த பிறகுதான் நிம்மதியாக மூச்சு விட்டான்.

"ராஜா..., முதல்ல உட்கார்..., காபி குடிக்கறியா...?" அவர் செய்கையே..., அவர் எதைபற்றியோ தன்னிடம் பேசப் போவதை உணர்த்த, அவர் அருகில் அமர்ந்தான்.

காபியைக் குடித்தவன் அவரை ஏறிட..., "கம்பெனியை விக்கப் போறியா...?" நேரடியாக விஷயத்துக்கே வந்தார்.

"ஆமா..." அவனும் நேரடியாகவே பதில் கொடுத்தான்.

"இவ்வளவு சாதாரணமா சொல்ற..., நீ இந்த முடிவுக்கு வரக் காரணம் என்ன? உன்னோட லட்சியம்..., கனவு...,

எல்லாத்துக்கும் ஆயுள் இவ்வளவு தானா? என் பையன் தனியா..., சுயமா ஒரு விஷயத்தை செய்யறான்னு நான் எவ்வளவு பெருமைப் பட்டேன். இப்போ என்னன்னா... உன்கிட்டே இருந்து நான் இதை எதிர்பார்க்கலை ராஜா..." வருத்தமாக உரைத்தார்.

அவன் அமைதியை விடாமல் போக..., "எனக்கு தெளிவான ஒரு காரணம் சொல்லு..., உன்கிட்டே நான் கேள்வியே கேட்க மாட்டேன்..." கண்டிக்கும் தோரணை அவரிடம்.

"என்னால் புதுசா எதையும் யோசிக்க முடியலம்மா..., நான் இப்போ இருக்கும் மனநிலையில்..., எதைச் செய்தாலும் தப்பாகத்தான் போய்டும்.., அதான்..., கொஞ்ச நாள் போகட்டும்னு..." தன் மனநிலையை இதற்குமேல் அவனால் விவரிக்க முடியவில்லை.

அது..., அவன் உயிரையே உருவி எடுக்கும் விபரீத முடிவு என்பது அவனுக்கே தெரியுமே..., வேதனையை மென்று முழுங்கினான்.

"அதான் நீயே சொல்றியே..., இப்போ எதைச் செய்தாலும் தப்பா போய்டும்னு. அப்போ..., கம்பெனியை விக்கிறது மட்டும் தெளிவான முடிவா?" அவர் கேட்க, அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

"எல்லாத்தையும் அம்மாகிட்டே கேட்டுத்தானே செய்வ..., இப்போ..., ஓ..., கல்யாணம் ஆன உடனே பெரிய மனுஷன் ஆகிட்டீங்களோ..., இல்ல..., இனிமேல் இவகிட்டே என்ன சொல்றதுன்னு முடிவு பண்ணிட்டியா...?"

"ஐயோ அம்மா..., என்னம்மா..., உங்ககிட்டே எப்படிச் சொல்லன்னு தெரியாமல்தான்..." தலையை கைகளில் தாங்கிக் கொண்டான்.

அவனது இந்த தோற்றத்தை காண்கையில்..., அவர் உள்ளம் பதறியது. 'நிஹா எதையாவது சொன்னால் பரவாயில்லை..., அவளால் மட்டுமே இவனை மாற்ற முடியும்...' அவரால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

முதல் முறையாக நிஹாசினியின்மேல் கோபம் கொண்டார். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்று சொல்வது சும்மா இல்லையே. அவனுக்கு நிம்மதியான மனநிலையைக் கொடுத்தால் தானே அவனால் சாதிக்க முடியும்...,

மனம் முழுவதும் ரணமாகக் கிடக்கையில்..., அவனால் எப்படி முழுதாக சிந்திக்க முடியும்? 'இப்பொழுது கூட எதையாவது சொல்கிறாளா பார்...' அவருக்கு ஆத்திரமாக வந்தது.

"அவன் எதையோ உளறிட்டே இருக்கான்..., நீயும் கேட்டுட்டு பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம் நிஹா. உன் கணவனை, நீ கவனிக்கும் விதம் இதுதானா...?" முதல் முறையாக அவளிடம் கோபம் காட்டினார்.

"அம்மா ப்ளீஸ்..." அவர் நிஹாவை கண்டிப்பது தாங்காமல், உடனே கெஞ்சினான்.

அங்கிருந்து வேகமாக அகன்று விட்டார். செல்லும் தாயை தடுக்க முடியாமல், சோர்ந்து போனான். அவரது கோபத்திலும்..., செய்கையிலும் திகைத்திருந்தவள்..., "இப்போ உங்களுக்கு சந்தோஷமா...? நான் உங்க மண்டைக்குள் உக்காந்து குடையிறேன்..., உங்களால் எதையும் யோசிக்க முடியலை..., அதானே நீங்க சொல்ல வந்தது...?" அவள் ஆத்திரமாக வினவ, நிஜமாகவே சோர்ந்து போனான்.

"நான் கம்பெனியை விக்கலை போதுமா...?" அவனுக்கு

பயித்தியமே பிடிக்கும்போல் இருந்தது. அதைவிட...,
அடிக்கடி நெஞ்சு வலிக்கும் உணர்வு..., அவனால் எந்த
வேலையிலும் ஈடுபட முடியவில்லை என்பது மட்டுமே உண்மை.

'எல்லாம் சரியாகப் போய்விடும்...' என தனக்குத் தானே
சொல்லிக் கொண்டான். நிஹாசினிக்கோ..., அவனது அந்த
தளர்வை தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றாலும்...,
பிடிவாதம் அவளைக் கட்டிப் போட்டது.

'நான் என்ன செய்தேன்...? இவர் செய்வதற்கு நான்
பழியா...?' ஈகோ அவளைப் பிடித்து ஆட்டியது. வெடுக்கென
அங்கிருந்து அவள் எழுந்து செல்ல..., அங்கேயே
படுத்துவிட்டான். மனதின் களைப்பா..., உடலின்
தளர்வா..., எதுவோ ஒன்று அவனைத் தாக்க..., அங்கேயே
உறங்கி விட்டான்.

நிஹாசினிக்கோ..., அவன் வாயாலேயே அவன் மனநிலையை
உணர்ந்த பிறகு, மனதுக்கு அதிர்ச்சியாக இருந்தது
என்பதால்..., முடிந்த அளவு அவனுக்கு மனக் கஷ்டம்
கொடுக்கக் கூடாது என முடிவெடுத்தாள்.

ஆனாலும்..., அவன்மேல் கொண்ட அதீத காதலால்...,
பொசசிவ் குணத்தால்.., அவனுக்கு கொடுத்த காயங்கள்
மிகவும் ஆழமானது. அதை அவளே அறியவில்லை என்பதுதான்
மிகவும் வேதனையான விஷயமே.

தொடர்ந்த நாட்கள்..., ராஜாவின் இதயத்தை மிகவும் பலமாக
தாக்கியது என்பது மட்டும் உண்மை.

அன்று அப்படித்தான்...., அவர்கள் மருத்துவமனைக்குச்
சென்றிருக்க..., அங்கே..., இரண்டு வயது மதிக்கத்தக்க
ஒரு ஆண் குழந்தை, அங்கே இருந்த கதவை, வேகமாக

திறப்பதும்..., மூடுவதுமாக விளையாடிக் கொண்டிருக்க, வழக்கமான செக்கப் முடிந்து..., அவர்கள் வெளியேறிய நேரம்..., கதவைத் தாண்டி நிஹாசினி செல்ல முயன்றாள்.

ஆனால்..., அந்த சிறுவன்..., கதவை வேகமாக மூட முயல, கூடவே.., பலமான காற்றும் சேர..., தன்முன்னால் கதவு திடீரென மூட முயலவே..., அதைத் தடுக்க அவள் முயல, நொடியில் நடக்கப்போகும் செயலை உணர்ந்த ராஜா..., தன் கரத்தை கதவுக்கும்..., கட்டளைக்கும் நடுவில் வைத்தான்.

அவனுமே முன்னெச்சரிக்கையோடு இல்லாத காரணத்தால்..., தவறுதலாக அவனது வலதுகை கட்டை விரல் கதவிடுக்கில் நசுங்க..., "ஸ்.. ஆ..." சன்னமாக அலறியே விட்டான்.

அவன் அதைச் செய்யவில்லை என்றால்..., நிச்சயம் நிஹாசினியின் மொத்த விரல்களும் நசுங்கி இருக்கும்.

"ராஜ்..., என்ன ஆச்சு..." நொடியில் பதறினாள்.

"இல்ல..., லேசாதான்..., வா போகலாம்..." கட்டைவிரலை, இடதுகை விரல்களால் பொதிந்தவன்..., அழுத்தமாக பற்றிக் கொண்டான். வலி பொறுக்க முடியாததாகத்தான் இருந்தது. அதை காட்ட மனமின்றி கிளம்பி விட்டான்.

கொஞ்சம் அழுத்திக் கேட்டிருந்தால் அவன் சொல்லியிருப்பானோ என்னவோ..., ஆனால்..., அவளும்..., கதவுதானே அடித்தது..., என சாதாரணமாக எடுத்துக் கொண்டு அப்படியே விட்டுவிட்டாள்.

இரவு உணவை உண்ண அமர..., தன் கட்டைவிரலை ஆட்ட முயல, அதுவோ வீங்கிப் போயிருந்ததை அப்பொழுதுதான் உணர்ந்தான். கூடவே..., அதீத வலியும் இருக்கவே...,

தோசையைப் பிய்க்க முடியாமல், கையை உதறிக் கொண்டான்.

அவன் செய்கையைப் பார்த்த சுஜா..., "என்ன ராஜா..., ஏன் கையை உதறிக்கற...?" கேட்டவர்..., அவன் விரலைப் பார்த்தவர், திகைத்தார்.

"ராஜா..., என்ன இது...? விரல் இப்படி வீங்கிபோய் இருக்கு..., எங்கே அடி பட்டது...?" நகத்துக்கு சற்று கீழாக ஒரு கருப்புக் கோடு உருவாகி இருக்க, விரல் மொத்தமும் வீங்கிப் போயிருந்தது.

"ம்மா..., காலையில் ஹாஸ்பிடல் போயிருந்தப்போ கதவில் நசுங்கிடுச்சு. இவ்வளவு சீரியஸா இருக்கும்னு எதிர்பாக்கலை..., இப்போதான்..., ரொம்ப வலிக்குது..." அவர் கரத்துக்குள் இருந்த தன் விரலை ஆராய்ச்சியாக பார்த்துக் கொண்டிருந்தான்.

"காலையிலேயே பட்டதா...? நிஹா..., உனக்குத் தெரியுமா...?" அவளைத் திரும்பிப் பார்க்க, அவளோ..., ராஜாவை முறைத்துக் கொண்டிருந்தாள்.

'நான் கேட்டப்போ ஒண்ணுமில்லன்னு சொல்லிட்டு..., இப்போ வலிக்குதாம்...' மனதுக்குள் அவனை கரித்துக் கொட்டினாள்.

"அப்போ எதுவும் தெரியலம்மா..., இப்போதான்..."

"இரு..., நம்ம டாக்ட்டரை வரச் சொல்றேன்..." அடுத்த அரைமணி நேரத்தில்..., அவன் விரலை பரிசோதித்த மருத்துவர்..., விரலில் ஏர்லைன் பிராக்ச்சர் இருப்பதாக உரைத்தவர்..., ஒரு மாதத்துக்கு அந்த விரலை அசைக்க வேண்டாம் எனச் சொல்லி கட்டு போட்டுவிட்டுப் போனார்.

பிராக்ச்சர் எனச் சொல்லவே..., வீட்டில் உள்ள அனைவருமே பதறித்தான் போனார்கள். தனா..., அவனை மென்மையாக கடிந்துகொள்ள, குணா கூட, அவன் என்ன சிறுவனா என கடிந்து கொண்டான்.

ஆனால் நிஹாசினி..., அவனிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவளது அமைதியே..., அடுத்த பிரளயத்தை அவன் மனதில் மூட்ட..., அவள் சொல்லம்புகளைத் தாங்க தன்னை தயார் படுத்திக் கொண்டான்.

"எப்படி இருக்கா பாருங்கக்கா..., ஒரு வார்த்தை என்னன்னு கேக்கறாளா பாருங்க...?" தாரிணி அப்பொழுதே, சுஜாவிடம் சாட..., தன் மனதுக்குள் அந்த எண்ணம் ஓடினாலும்..., "ம்ச்..., அதுக்கு..., பொதுவில் அவ என்ன செய்வா...?" அவளை அடக்கினாள்.

"என்னவோ போங்க..., எனக்கு எதுவுமே சரியா படலை..." புலம்பியவள் எழுந்து சென்றுவிட்டாள்.

தனா கூட தன் மனைவியிடம் அதைப் பற்றி கேட்க, "புருஷன் பொண்டாட்டிக்கு நடுவில் நாம போக முடியாது..., போங்க..." அவனையும் தடுத்தார்.

"என்னவோ.., நீ சொல்ற..., நான் கேட்டுக்கறேன்..." எனக்கு நடப்பது சரியாகத் தோன்றவில்லை என்பதை உணர்த்திவிட்டே தனா சென்றார். சுஜாவுக்கு அடி மனதில் பயம் பிடித்துக் கொண்டது. ஆனாலும்..., ஓரளவுக்குமேல் அவர்களுக்கு நடுவில் செல்ல அவராலும் முடியாதே.

ராஜா சிறு பயத்தோடு அறைக்குள் நுழைய..., "உங்களுக்கு அம்மாகிட்டே கொஞ்சிக்கணும்னா அதைச் சொல்ல வேண்டியது தானே. என்கிட்டே ஒண்ணுமில்லன்னு சொல்லிட்டு..., அவங்ககிட்டே வலிக்குதுன்னு சொன்னால் என்ன அர்த்தம்...?"

அவனை நிற்க வைத்து கேட்டாள்.

'உன்னிடம் சொல்ல முடியவில்லை..., அந்த அளவுக்கு நமக்குள் நெருக்கமில்லை என்று அர்த்தம்...' வெடிக்கத் துடித்த வார்த்தைகளை அப்படியே அடக்கினான்.

அதை அவன் செய்திருந்தால் ஏதாவது முடிவு ஏற்பட்டிருக்குமோ...?

"நானா அவங்ககிட்டே எதையும் சொல்லலை..., அவங்களாகத்தான் கண்டு பிடிச்சு கேட்டாங்க..." பரிதாபமாக உரைத்தான்.

"அப்போ..., நான் கேக்கலை..., கண்டு பிடிக்கலை..., அதைத்தானே சொல்ல வரீங்க... எல்லாம் அவங்க அவங்க நடந்துக்கற முறையில் இருக்கு..." வெடுக்கென உரைக்க, அவன் முகம் வேதனையில் சுருங்கியது.

"எனக்கு மயக்கமா இருக்கு..., நான் படுத்துக்கறேன்..." அவளிடம் விவாதிக்க முடியாமல்..., மருத்துவர் போட்ட ஊசியின் தாக்கம், உண்ட மருந்தின் தாக்கமும் சேர..., படுத்தவன் நொடியில் உறங்கி விட்டான்.

அவன் உறங்கி விடவே..., தன்னையே நொந்தவளாக அவன் அருகில் அமர்ந்தாள்.

'ஏன் அப்படிப் பண்ணீங்க...? என்னை ஏன் தவிக்க விட்டீங்க...? இப்படி ஒவ்வொரு நாளும் உங்களை காயப்படுத்தும்படி என்னை ஆக்கிட்டீங்களே..., உங்களால் எப்படி வேறு ஒருவனுக்கு என்னை இணை சேர்த்து பார்க்க முடிந்தது...' அடி மனதின் வலி கிளர்ந்து மேலேறி, அவள் கண்களை கலங்கச் செய்தது.

அதைவிட..., இப்பொழுது உறங்கும் பொழுது கூட..., வேதனையில் சுருங்கி இருந்த அவன் புருவம்..., அவளை அதிகம் தாக்க..., முதல் முறையாக, அவனை நெருங்கியவள்..., தன் விரல்களால் அவன் புருவத்தை தடவி விட்டாள்.

அவன் நெற்றியில் தன் இதழைப் பதித்தவள்..., அவனை நெருங்கி படுத்துக் கொண்டாள். இதற்குமேல் அவனைக் காயப்படுத்தக் கூடாது என எண்ணியவளுக்கு..., இனிமேல்தான் அவனை சாவின் விளிம்புக்குத் தள்ளப் போகிறோம் என்பது தெரியாமலே போனது.

பகுதி - 30.

ராஜாவுக்கு மாதங்கள் வலியாய் கடக்க, நிஹாவுக்கு சுமையாய் கடந்தது என்பதுதான் சரியாக இருக்கும்.

அவன்மேல் தான் கொள்ளும் நேசத்தை வெளிக்காட்ட முடியாமல்.., தாய்மைக்கே உரிய சில உபாதைகளைக் கடக்க ராஜாவை நாடினாள். ஐந்து மாதங்கள் முடிந்த பிறகும் குழந்தையின் அசைவை அவளால் அவ்வளவாக உணர முடியாமல் போனது.

மருத்துவர் கேட்கையில்..., அதை அவள் உரைக்க..., குழந்தையிடம் அவளை உரையாடவும்..., இனிய இசைகளை கேட்கவும் சொன்னார். ஆனால்..., அவற்றைச் செய்தாலும்..., ராஜாவின் குரலை கேட்கும் வேளையில்.., குழந்தை அசைவதை அவளால் உணர முடிந்தது.

அதை அவனிடம் சந்தோஷமாக வெளிப்படுத்தியிருந்தால் அவர்கள் நெருக்கம் அதிகரித்திருக்கலாம்..., மனதின் கசடுகள் அகன்று இருக்கலாம். அவளோ அதைச் செய்யாமல்..., அவன்

குரலைக் குழந்தை கேட்பதற்கு வேண்டி வம்பு வளர்த்தாள் என்பதுதான் உண்மை.

இரவில் அவன் எவ்வளவு தாமதமாக வந்தாலும் விழித்திருந்து அவனிடம் கோபம் காட்ட..., முடிந்த அளவு சீக்கிரம் வர முயன்றான். அதுவும்..., அவள் அப்படியாவது தன்னிடம் பேசுகிறாளே என்பதற்காகவே அதைச் செய்தான்.

மாலையில் அவள் நடைப்பயிற்சி செய்ய..., ஒரு மணிநேரம் அவளுக்காகவே வந்தான். எதைச் செய்தாலும்..., இருவருக்கும் இடையில் விழுந்த இடைவெளியை நிரப்பவே முடியவில்லை.

அவளுக்கு கால் வலிக்கிறது எனச் சொன்னால்..., கொஞ்சம் கூட தயங்காமல் அவள் காலை அமுக்கி விடுவது துவங்கி..., இரவில் அவளுக்கு உறக்கம் வரவில்லை என்றால்..., தானும் தன் ஓய்வை மறந்து அவளுக்கு துணை இருந்தான்.

அதில் சில இரவுகள் அவனுக்கு சோதனைகளைக் கொடுத்தது எனச் சொன்னால் மிகை இல்லை. ஏசி ஒத்துக்கொள்ளவில்லை எனச் சொல்லி, அதை நிறுத்திவிட்டு..., உடைகளை தளர்த்திக்கொண்டு அவள் உறங்கும் இரவுகள்..., ஒரு ஆண்மகனாக..., கணவனாக..., அவன் உணர்வுகள் கிளர்ந்து எழுந்து அவனை ஆட்டிப் படைத்தது.

தாய்மையில் மிளிர்ந்து..., நாளுக்கு நாள் அழகாகிகொண்டு போகும் தன் காதல் மனைவியின்மேல் அவன் ஆசை கொள்ளாமல் போனால்தான் விந்தை. அவனும்..., ஊனும், உயிரும், உணர்வும் கொண்ட சாதாரண மனிதன் தானே..., தன் ஆசையையும்..., அவன் செய்த இமாலயத் தவறு கட்டுப்படுத்தவே தூண்டியது.

அதையும் மீறி..., அவள் வயிற்றுக்குள் இருக்கும் தன்

குழந்தையை தொட்டு உணரத் தவித்தது அவனது தந்தையுள்ளம். சில நேரங்களில்..., அவன் பார்வை ஏக்கமாக அவள் வயிற்றில் பதிந்து மீள்கையில்..., அவன் கரத்தை தானாகவே தன் வயிற்றின்மேல் வைக்க அவள் உள்ளம் துடியாய் துடிக்கும்.

'இது அவர் குழந்தை தானே..., என்றைக்கு அவருக்கு தைரியம் வருகிறதோ...., அன்றைக்கு செய்யட்டும்...' வீம்பாக எண்ணிக் கொண்டாள். ஆனாலும்..., தன்னை கட்டுப்படுத்த அவன் மேற்கொள்ளும் முயற்சி...

அதை அவளும் உணர்ந்து கொண்டாள் என்பதுதான் அங்கே கவனிக்க வேண்டிய விஷயமே. அவன் கேட்டு..., அவனுக்கு எதையும் மறுத்துவிடும் தைரியம் அவளுக்கு இல்லை என்பதுதான் அப்பட்டமான உண்மை.

ஆனால்..., அவன் தன்னைக் கண்டு உருகினாலும்..., அதை பிடிவாதமாக மறைக்கும் விதம்..., சில இரவுகளில்..., அவன் படும் அவஸ்த்தையை உணர்பவளுக்கு...,
'அப்படியென்ன பிடிவாதம்...?' என்பதுதான் எண்ணமாக இருந்தது.

அன்று அப்படித்தான்..., மாலையில் குளித்து முடித்தவள்..., மூங்கில் தடுப்புக்கு பின்னால் உடை மாற்ற..., அவள் அங்கே இருக்கிறாள் என்பதை கவனிக்காத ராஜா..., தானும் அங்கே உடை மாற்ற வர..., ஒரு நொடியில் இருவரும் திகைத்தார்கள்.

தங்கள் அறைக்குள் யாரும் வரப்போவதில்லை என்பதால்..., அவளும் சற்று தாராளமாக உடை மாற்றிக் கொண்டிருக்க..., அவன் வரவை எதிர்பாராத அவளுக்கு, அந்த நிமிடம் என்ன செய்வது எனத் தெரியாத தடுமாற்றம்.

தன் உணர்வுக்கு வந்தவள்..., அவசரமாக டவ்வலை எடுக்க..., அதுவும் கை தவறி கீழே விழுந்தது.

ராஜாவோ..., தன்னை மீறி, அவளை வெறித்தான்.

நொடியில் அவளது மேடிட்ட வயிறும்..., தாய்மைக்கே உரிய செழுமையும் அவன் கவனத்தைக் கவர..., நிச்சயம் அவனால் பார்வையைத் திருப்ப முடியவில்லை என்பதே உண்மை.

ஒரு சாதாரண தம்பதிகளாக அவர்கள் இருந்திருந்தால்..., நிச்சயம் அவன் இறுகிய அணைப்புக்குள் அவள் இருந்திருப்பாள் என்பது மட்டும் உண்மை.

அதைச் செய்ய முடியாத அவனது ஏக்கம்..., அவன் கண்களில் வழிய, அவனது ஏக்கத்தை தீர்க்க முடியாத தன் நிலை, அவளை கோபம் கொள்ளச் செய்தது. அவன் அவளை நெருங்கியிருந்தால் என்ன செய்திருப்பாளோ..., ஆனால்..., அவனது விலகல்..., அவளை தவிக்கச் செய்தது.

அதே நேரம்..., வேகமாக நைட்டியை தன் மேல் அவள் போட்டுக்கொள்ள, அதன் பிறகே தன் நிலையில் இருந்து விடுபட்டான் ராஜா. அந்த நொடி..., நிஹாசினியின் வயிற்றுக்குள் இருந்த குழந்தை, முதல்முறையாக தன் இருப்பை அவளுக்கு உணர்த்த..., சிலிர்த்துத்தான் போனாள்.

அதன் அசைவை அவனுக்கு உணர்த்த எழுந்த வேகம்..., அதைச் செய்ய முடியாத தன் நிலை..., அவனது பார்வை..., தன் அனைத்து உணர்வுகளையும் மறைக்க..., சூடாக அவனை ஏறிட்டாள்.

அவள் பார்வையில் கோபத்தை உணர்ந்தவன்..., "சாரி..., நான் வேணும்னு செய்யலை..., நிஜம்..., என்னை நம்பு..." அவள் பார்வையில் கனல் கூடவே..., கெஞ்சினான்.

"இதற்கு மேலே உங்களை நம்பறதா...?" அந்த நம்பிக்கை

என்ற வார்த்தை..., அவளை வெறியாக்கியது.

'உன்னை நான் ஏமாற்றுவதா...? என்னை நீ நம்பவே இல்லையா...?' அவன் ஆவி துடித்தது.

கிளர்ந்த மெல்லிய உணர்வுகள்..., அந்த நேரம் பொசுங்கித்தான் போனது. கட்டிவைத்து அடிக்கும் விதமாக அவளது செய்கைகள்..., அடிமேல் விழும் அடியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அதே நேரம்..., தன் கோபத்தையோ..., வலியையோ..., அவளுக்கு காட்ட அவன் விரும்பவில்லை. அமைதியாக அங்கிருந்து அகன்றான்.

தொடர்ந்த நாட்கள்..., அவள்மேல் சலனம் கொள்ளக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தான். ஆனாலும்..., எல்லா நேரமும் அது சாத்தியமா என்ன? அவன் தன் நிலை இழக்கும் சூழ்நிலை ஒன்று உருவாகியே விட்டது.

அன்று ஏழாம் மாத ஸ்கேன் எடுக்க சென்றிருந்தார்கள். வழக்கமாக அறைக்கு வெளியே காத்திருக்கும் ராஜாவை..., மருத்துவர் உள்ளே அழைக்க, தயக்கமாகவே உள்ளே நுழைந்தான்.

அங்கே அவன் பார்வைக்கு பளிச்சென பட்டதே..., பொன்குடமாக பளிச்சிட்ட அவளது வயிறே. இத்தனை மாதங்களில் அவன் ஏங்கிக் காத்திருந்த விஷயம். கண்கள் கூட கலங்கும்போல் இருந்தது. கட்டிய மனைவியை..., அவள் வயிற்றில் இருக்கும் குழந்தையை..., ஒரு கணவனாக, தந்தையாக..., உரிமையாக உணர முடியாத கொடுமை..., யாருக்கும் வரக் கூடாது என எண்ணிக் கொண்டான்.

'இன்றைக்கு அவள் என்ன சொன்னாலும் பரவாயில்லை...,

தன் குழந்தையை உணர்ந்துவிட முடிவெடுத்தான். அவளை நெருங்கியவன்..., "ஹேய் பியூட்டி..., ரொம்ப அழகா இருக்க..." பல மாதங்களுக்குப் பிறகு, சற்று இலகுவாக இருந்தது அவன் மனம்.

அதை அவனது அழைப்பும் உறுதிபடுத்த..., தன்னை நெருங்கி நின்றவனின் கரத்தை பற்றிக் கொண்டாள். அந்த தொடுகை..., அவனை உலுக்க..., அவளை ஏறிட்டவனின் விழிகள் கலங்கி இருந்தது.

'ஏன்...?' அவள் கேட்க வர,

"மிஸ்டர் ராஜா..., உங்க குழந்தையைப் பாருங்க..." மருத்துவரின் குரல் இருவரையும் கலைக்க..., அவன் கவனம் அங்கே இருந்த திரையை வெறித்தது. கண்கள் கலங்கி இருக்கவே..., திரை மங்கலாகத் தெரிய..., நாசூக்காக விழிகளைத் துடைத்துக் கொண்டான்.

நிஹாசினியோ..., கணவனின் முகத்திலேயே கவனமாக இருந்தாள். அவன் கண்ணீர்..., அவள் இதயத்தை ஈரமாக்கியது.

"ராஜா..., உங்க குழந்தை ரொம்ப சமத்து..., தூங்கிட்டு இருக்கு பாருங்க..., இதுதான் தலை..., கை..., கால்..., ரொம்ப ஆரோக்கியமா இருக்கு. ஹார்ட் பீட் கேக்கறீங்களா...?" கேட்டவர்..., அங்கே இருந்த ஒரு சுவிட்சை அழுத்த.., அலை கடலின் ஓசைக்கு நடுவே..., திடும் திடுமென அதிரும் ஒலி..., நிஹாசினியின் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டான்.

குழந்தையின் இதயத்துடிப்பை கேட்ட அவனுக்கோ..., ஒரு தந்தையாக மனம் நெகிழ்ந்து போனது. குழந்தையை அவள் வயிற்றில் சுமந்தால், அவளோடு சேர்த்து குழந்தையையும் அவன்

நெஞ்சில் சுமப்பவன் ஆயிற்றே...

இப்பொழுது, அவனது முழு கவனமும் திரையில் இருக்க..., அவளது முழு கவனமும் அவனிடம் இருந்தது. அவனது விகசித்த முகமும், பூரிப்பும், நெகிழ்வும்..., அவள் மனதில் பெரும் ஆறுதலை விதைத்தது.

அவள் மணிவயிற்றை வருட அவன் கரங்கள் தவிக்க, மருத்துவரின் வேலைக்கு இடையூறாக இருக்கும் என்பதால், அதைச் செய்ய அவன் துணியவில்லை.

ஆனால்..., அவள் மணிவயிற்றை வருடி, தன் குழந்தையை உணரும் ஆவல் எழுந்ததை அவனால் தடுக்கவே முடியவில்லை.

பரிசோதனை முடிந்து அவர்கள் வீட்டுக்குச் செல்ல..., சுஜாவை கட்டிக் கொண்டவன்..., தன் குழந்தையைப் பற்றி சொல்லி பூரித்துப் போனான்.

"ம்மா..., என் குழந்தையை நான் பார்த்தேன்..., எப்படி இருந்தது தெரியுமா? அப்படியே..., என் கை முடி எல்லாம் சிலிர்த்து போயிற்று..., இப்போவே என் குழந்தையை கைகளில் தாங்க வேண்டும்போல்..., எப்போ வெளியே வரும்னு இருக்கும்மா..." தன் ஏக்கத்தை அவரிடம் பகிர்ந்து கொண்டான்.

அவன் சந்தோஷத்தை இமை கொட்டாமல் ரசித்தவர்..., "அதுக்கென்ன..., இன்னும் ரெண்டே மாசம்..., அவ்வளவுதான்..., நீ ஆசை தீர கொஞ்சலாம்..." அவருக்குமே எப்பொழுது குழந்தையை கைகளில் தாங்குவோம் என்ற ஆவல் இருக்கத்தானே செய்கிறது.

அவர்களது பேச்சைக் கேட்ட நிஹாவுக்கோ..., அவன் தன் உணர்வுகளை தன்னிடம் பகிராத நிலை சிறு கோபத்தை

அளித்தது.

'எதுவென்றாலும் அம்மா தானா...?' தன் கோபத்தை வெளியிடும் தைரியம் அவளுக்கு இருக்கவில்லை. என்றைக்கு அவன் தன் காலிலேயே விழுந்தானோ..., அதற்குமேல்..., அவர்கள் உறவைப் பற்றி கோபத்தில் கூட விமர்சிக்க அவள் தயாராக இருக்கவில்லை.

ஆனால்..., உள்ளுக்குள் எழும் பொறாமை உணர்வை அவளும் என்னதான் செய்ய...? சுஜாவிடம் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு அறைக்கு விரைந்தாள்.

மருத்துவமனைக்குச் செல்லும் முன்னர்..., கோவிலுக்குச் செல்லவேண்டி இருந்ததால்..., அன்று புடவை கட்டியிருந்தாள். அது வேறு கசகசப்பாக இருக்க, உடனடியாக அதை கழட்டி எறியும் எரிச்சல் வேறு...,

அறைக்குள் நுழைந்து..., புடவையில் குத்தியிருந்த பின்னைக் கழட்ட..., அடுத்த நொடி..., "பியூட்டி..." ராஜாவின் அழைப்பு அவள் செவியைத் தீண்டிய அதே நேரம்..., அவளை பின்னால் இருந்து அணைத்திருந்தான்.

அவனிடமிருந்து இப்படி ஒரு அணைப்பை எதிர்பாராத நிஹாசினியின் கரத்தில் இருந்து புடவை முந்தானை சரிந்து விழ, தன் அதிர்ச்சியை சரிகட்ட, அந்த மூங்கில் தடுப்பை விரல்களால் பற்றிக் கொண்டாள்.

ராஜாவுக்கோ..., தன் குழந்தையை உணரும் வேட்கை..., அவள் வெற்றிடையில் தன் இடக்கரத்தை தவழ விட்டவன், அவள் மேடிட்ட வயிற்றில் மென்மையாக வருடினான்.

தன் தந்தையின் தொடுகையை உணர்ந்த அவன் பிள்ளை..., அதன் காலால் உதைத்து அதை வெளிப்படுத்த...,

அவ்வளவுதான்..., ராஜா தன் சுய உணர்வையே மறந்து போனான். நிஹாசினிக்குமே..., குழந்தை இந்த அளவு தன் இருப்பை உணர்த்துவது புதுமையாக இருக்க..., மூங்கில் தடுப்பில் இருந்த தன் இடக்கரத்தை எடுத்து..., அவன் கரத்தின்மேல் வைத்தவள்..., வயிற்றோடு அழுத்திக் கொண்டாள்.

அவள் செய்கை அவனுக்கு தைரியமளிக்க..., "ஹாசினி..." கிசுகிசுப்பாக அழைத்தவன்..., அவள் வயிறு முழுமைக்கும் தன் கரத்தை ஓட விட்டான்.

சரிந்து விழுந்த முந்தானையைப் பற்றி அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தன் வலக்கரத்தால் அவள் கழுத்தை கட்டிக் கொண்டவன், இதழால் அவள் காதுமடலை அழுத்தமாக வருட, அவன் கரம் கொடுக்கும் வருடலும், இதழ் தீண்டலும்..., அவளை சிலிர்க்கச் செய்தது.

கால்கள் சற்று தள்ளாட..., சற்று பின்னால் சரிந்து..., அவன்மேல் மொத்தமாகச் சாய..., அவள் எதிரில் இருந்த கண்ணாடியில் விழுந்த அவள் உருவத்தை..., பாதி மூடிய அவள் இமைகளை..., இமைகளுக்குள் சுழலும் கருவிழிகளை..., அவள் சங்குக் கழுத்தை..., கழுத்தில் கீழே அவள் செழுமையை..., தாய்மையின் பூரிப்பை பார்த்தவனுக்கோ..., அவன் ஆண்மையை அடக்குவது பெரும் பாடாகப் போயிற்று.

அவளை தன்மேல் இன்னும் அழுத்தமாக சாய்த்தவன்..., சற்று முன்னால் எக்கி..., அவள் கன்னத்தில் இதழ் பதித்தான். அவள் விலகாதது அவனுக்கு தைரியமளிக்க..., அவளைத் தன்பக்கம் திருப்பியவன்..., இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

அவள் பின்னந்தலையில் கை கோர்த்தவன்..., அவள் முகம்

முழுவதும் ஆவேசமாக முத்தமிட்டவன்..., அவள் இதழ்களில் ஈரமாய் முத்தமிட்டான். முத்தத்தின் வேகத்தில் அவன் அணைப்பு இறுக, அவள் கரங்கள்..., அவன் முதுகில் சட்டையை அழுத்தமாக பற்றிக் கொண்டது.

அவர்களுக்கு இடையில் முதல் முத்தம் பகிரப்பட்டது என்பதுதான் உண்மை. அவன் கொடுக்கும் முத்தத்துக்கு அவள் இதழ்கள் ஒத்துழைக்க, அதுவே அவனது முத்தமிடும் வேகத்தை அதிகரித்தது.

இதழ்களை பிரிக்க முடியாமல் அவன் போராட..., "ஸ்..., ம்..." அவளது முனகல் அவனை போதை கொள்ளச் செய்தது. ஒரு நிலையில்..., அடுத்த கட்டத்துக்கு போகச்சொல்லி அவன் ஆண்மை தவிக்க..., அவள் இதழ்களில் இருந்து பிரிந்தவன்..., அவள் கழுத்தடியில் புதைந்து போனான்.

அவள் மார்புக்கு மத்தியில் புதைந்தவன்..., தன் தாடையை அவள்மேல் அழுத்தமாக உரச..., அவனது ட்ரிம் செய்த தாடை ஏற்படுத்திய தகிப்பை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவன் சிகைக்குள் கை கோர்த்தவள்..., அவன் முகத்தை புரட்டாதவாறு தன்மேல் அழுத்த..., அவனது அணைப்பு ஒரு மாதிரி மாறிப் போனது. ஒரு கணவனாக..., தன் மனைவியிடம்..., தன் நிலையை உணர்த்தும் விதமான அவனது அணைப்பு..., அதில் தெரிந்த ஏக்கம்..., தெறித்த தாபம்..., பெரும் அவஸ்த்தைக்கு உள்ளானாள்.

அவர்களது உணர்வுகள் பகிரப்பட்டிருந்தால் அதை அவளால் இயல்பாக ஏற்றிருக்க முடியுமோ என்னவோ..., ஆனால்..., இப்பொழுது..., என்ன செய்வது எனத் தெரியாத அவளது தடுமாற்றம்..., விலகவும் முடியாமல், ஏற்கவும் முடியாமல்..., பிடிக்கிறதா..., பிடிக்கலையா..., எனத் தெரியாத ஏகாந்தம்..., ஆனாலும்..., அவன் அணைப்பை

விட்டு விலக முயலவில்லை.

அவள் கால்கள் முழுவதுமாக தள்ளாடியது. "ஹாசினி..., என்னால்..., ஓ மை காட்..., ஐ கான்ட்..." அவள் வேண்டும்..., இப்பொழுதே வேண்டும்..., என அவனது ஒவ்வொரு செல்லும் கதற..., அதை அவளிடம் கொட்ட முடியாத அவனது தவிப்பு வார்த்தைகளில் தெறித்தது.

அவனது அந்த தவிப்பை காண முடியாமல்...., அவன் முகத்தை தன்மேல் அழுத்தமாக புதைத்துக் கொண்டாள். 'அப்பொழுதாவது அவனது தவிப்பு அடங்கிவிடாதா...?' ஒரு காதல் மனைவியாக..., அவள் உள்ளம் அவனுக்காக போராடியது.

அவனுக்கோ..., அவள் சம்மதமின்றி அடுத்த கட்டத்துக்கு போக முடியாத பயம் கலந்த தவிப்பு..., "ஹாசினி..., ப்ளீஸ் சே சம்திங்..." அணைப்பை ஒரு இன்ச் கூட பிரிக்காமல்..., யாசித்தான்.

"ஏன்..., அன்னைக்கு என் சம்மதம் கேட்டுத்தான் எல்லாம் நடந்ததா...?" அவளை மீறி தெறித்து விழுந்தன வார்த்தைகள். அவ்வளவுதான்..., அவ்வளவேதான்..., கிளர்ந்து எழுந்த அவன் உணர்வுகள் அனைத்தும், ஆசிட் வீசிய உணர்வில் கருகிப் போனது.

சரேலென அவளை விட்டு விலகியவனது முகம்..., வேதனையில் வெதும்பி, வெம்பி..., கசங்கிப் போனது. அவ்வளவு நேரம், வானத்தில் பறந்தவனை..., சிறகுகளை வெட்டி வீழ்த்தி, அந்தரத்தில் இருந்து வீசிய உணர்வு.

"ஹா...சி...னி..." வார்த்தைகளை உதிர்த்தவனது இதயம் தாங்க முடியாத வலியை உணர..., வலக்கையால் தன் நெஞ்சை அழுத்தியவன்..., வேகமாக அறையை விட்டு வெளியேற

முயன்றான்.

அந்த நிலையிலும், கீழே சுஜா இருப்பார்..., என்ற நினைவு எழ..., பல்க்கனிக்கு விரைந்தவன்..., தன் முதுகின் பின்னல் கதவை அழுந்த சாத்தியவன்..., வலிக்கும் இதயத்தை கரத்தால் அழுத்தினான்.

அவன் இதயத்தின் வலியையும் மீறி..., அவள் வார்த்தைகள் கொடுத்த காயம் அதிகம் வலித்தது.

'அன்று எப்படி ஒரு சூழலில் அது நடந்தது..., அதை அவள் மறக்கவே போவதில்லையா...? மன்னிக்கவே போவதில்லையா...?' அவன் இதயத்தை கழட்டி வெளியே வீசியிருந்தால்..., அப்பொழுது கூட அது புழுவாய் துடித்திருக்கும்.

அவன் அங்கே வேதனையில் துடிக்க..., நிஹாசினியோ..., நின்ற இடத்திலேயே கால் மடித்து அமர்ந்துவிட்டாள். வேதனையில் கசங்கியிருந்த அவன் முகம்..., நெஞ்சை விட்டு நீங்க மறுத்தது.

அதைவிட..., அவனது அணைப்பு உணர்த்திய செய்தி..., அதில் தெரிந்த அவன் தவிப்பு..., திருமணம் முடிந்த இத்தனை மாதங்களில்..., தன்மேல் எழும் உணர்வுகளைக் கூட சாமர்த்தியமாக மறைத்தவன், இன்று வெளிப்படுத்தியதை எண்ணி ஒரு மாதிரி நெகிழ்ந்து போயிருந்தாள்.

அத்தோடு..., வெளிப்படுத்திய அவன் உணர்வுகளை, தன் காலின் கீழே போட்டு மிதித்துவிட்டோம் என்பது புரிய..., தவித்தாள்.

அவள் உள்ளத்தில் இருக்கும் கோபத்தை..., மனஸ்தாபத்தை அவனிடம் வெளிப்படையாக பேசியிருந்தால் அனைத்தும் சுபமாக

முடிந்திருக்கும். அதை அவள் உள்ளத்தில் அமிழ்த்த..., அதுவோ சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவனை கிழித்து எறியத் தூண்டுவதை உணர்ந்தவளுக்கு, என்ன செய்து அதை தடுப்பது எனத் தெரியவில்லை.

பெரியவர்களிடமாவது பேசியிருந்தால்..., அதற்கான தீர்வு கிடைத்திருக்கும். எதையும் செய்யாமல் அவள் தடுமாற..., காயப்பட்டது என்னவோ ராஜா மட்டுமே.

'தன்னை விட்டு நீங்கிச் சென்றவன் என்ன நிலையில் இருப்பான்...? சரியாகி இருப்பாரா...?' தவித்தாள்.

ஆனால்..., அடுத்த நிமிடம்..., தன் செவியை மோதிய அவன் குரல்..., "கார்த்தி..., இரு நான் வரேன்..., ம்ச்..., இப்போ என்ன நடந்ததுன்னு..., கொஞ்சம் அமைதியா இரு..., ஐ'ம் ஆன் தி வே..., உன்னை பார்த்தே ஆகணும்..., வரேன்..." வேகமாக உரைத்தவன்..., அதே வேகத்தோடு வெளியேறினான்.

நிஹாசினியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. 'சற்று நேரத்துக்கு முன்னர் அவன் இருந்த நிலையென்ன..., இப்பொழுது அவளிடம் குழைவதென்ன..., அப்படியென்றால்...' பொறாமை..., ஒரு பெண்ணின் பொறாமை சாம்ராஜ்யத்தையே அளிக்கும் வல்லமை உள்ளதென்றால்..., நிஹாசினியின் பொறாமை என்ன செய்ய காத்திருக்கிறதோ?

கார்த்திகாவுக்கும்..., ராஜாவுக்கும் திருமணம் செய்துவைக்க விரும்பினார்கள் என அறிந்தது முதல்..., அடிமனதில் எழுந்த எரிச்சல்..., இப்பொழுது அதிகரித்தது.

அதைவிட..., தன்னை நாடியவன்..., அதை தவிர்த்து..., அவளுக்காக பதறி ஓடுவதைப் பார்க்கையில்..., அடிமனதில்

எழுந்த நெருப்பு..., கொழுந்துவிட்டு எரியச் செய்தது.

'இன்றைக்கு வரட்டும்..., அவருக்கு இருக்கிறது...'
கோபமாக காத்திருந்தாள்.

அவளது சாதாரணமான கோபத்தையே அவனால் தாங்க முடியாதபொழுது, அவளது காத்திருக்கும் கோபம்...., அவனை பொசுக்காமல் போகுமா...?

பகுதி - 31.

ராஜாவை களைப்பு ஆட்க்கொண்டிருந்தது. கார்த்திகாவை சென்று பார்த்துவிட்டு..., அவளது பிரச்சனையை தீர்க்கவே போதும் போதுமென்றாகிப் போனது.

'சீனிவாசன் ஏன் இப்படிச் செய்தான்...? எதுவாக இருந்தாலும் என்னிடம் பேசி இருக்கலாமே...' அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

கார்த்திகாவின் அழுகை வேறு அவனை பாடாய் படுத்தியது. சில மாதங்களாக தன்னைச்
சுற்றி அனைத்தும் தவறாகவே நடப்பது ஏன்...? தலையை வலித்தது.

ராஜா ஒன்றும் காதலுக்கு எதிரி கிடையாது. ஆனால்..., காதல் திருமணத்தில் முடிய ஏகப்பட்ட தடைகள் இருக்கிறதே. இரு குடும்பங்களுக்கு இடையே மதம் சார்ந்த பிரச்சனையையே சம்மாளிக்க முடியாது என்னும்போது..., ஜாதி....

எத்தனை தலைமுறை கடந்தாலும..., ஜாதியைக் கடக்க இந்த சமுதாயத்தால் முடியவில்லையே..., அலுப்பாக இருந்தது.

நடந்தது இதுதான்..., கார்த்திகாவைச் சந்தித்த சீனிவாசன்

அவளிடம் தன் காதலைச் சொல்லிவிட்டான். அந்த அதிர்ச்சியை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவர்கள் சமுதாயத்தில், வேறு கோத்திரத்தில் இருந்தாலே திருமணத்துக்கு சம்மதிக்க மாட்டார்கள் என்னும்போது..., வேறு ஜாதி என்பதை நிச்சயம் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

அதை தெளிவாக சீனிவாசனிடமும் சொல்லிவிட்டாள். அதை அவனுமே கேட்டுக் கொண்டான்தான். ஆனால்..., தெளிந்த ஓடையாக இருந்த அவள் மனதை, காதல் எனும் கல்லெறிந்து குழப்பி விட்டானே..., அந்த குழப்பம் அவளை உறங்க விடாமல் துரத்தியது.

வேறு எதுவாக இருந்தாலும் பெரியவர்களிடம் ஆலோசனை பெற முடியும் அவளால்..., இந்த விஷயத்தில் அவர்கள் உதவியை நாட முடியவில்லை.

சீனிவாசன் தன்னிடம் உரைத்ததை அப்படியே மறந்துவிடவேண்டும் என அவள் முயற்சி எடுக்க..., காலையில் செய்தித்தாளை புரட்டும்பொழுதே முதல் பக்கத்தில் விரியும் அவன் முகம்..., டிவியை ஆன் செய்வதில் தொடர..., மறக்க நினைக்கையில்..., அவன் நினைவு அதிகமாய் எழுந்தது.

அவர்கள் கல்லூரியின் கல்ச்சர் ப்ரோகிராமுக்கு அவன் சீஃப் கெஸ்ட்டாக அழைக்கப்பட..., தன்னை நேருக்குநேர் சந்தித்த பிறகும், தன்னைத் தெரிந்தவளாக கூட காட்டிக் கொள்ளாத அவனது செய்கை..., உள்ளுக்குள் அவளை உடையச் செய்தது.

'தன்னிடம் காதலைச் சொல்லி தன் மனதைக் கலைத்துவிட்டு, இப்பொழுது எதுவும் இல்லை..., அவரவர் வழியை பார்த்துக் கொள்ளலாம் என அவன் நடந்துகொண்ட விதம்..., கண்களைக் கலங்கச் செய்தது.

ப்ரோகிராம் முடிய இரவாகிவிட..., வீட்டுக்குச் செல்ல பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்தாள். அந்த நேரம்..., அவனும் தன் காரில் சாலையைக் கடக்க..., அவளைக் கண்டவன், அவள் அருகில் காரை நிறுத்தினான்.

அது அவனது கார்தான் என்பதை உணர்ந்தவள், அவன் பக்கமே பார்க்காமல், பேருந்து வருகிறதா..., என்பதில் கவனமாக இருக்க, கார் ஹாரனை அலறவிட, அவள் அருகில் நின்ற தோழி..., "ஏய்..., சார் உன்னைத்தான் பாக்கறார்..." அவளைச் சுரண்டினாள்.

'அது எனக்குத் தெரியாதா...?' மனதுக்குள் அவளை பொரிந்தவள், "இருக்காது..., எனக்கு அவரைத் தெரியாது..." இயல்பாக சொல்லிவிட்டு திரும்பிக் கொண்டாள்.

"கார்த்திகா..., வா..., நான் உன்னை ட்ராப் படறேன்..." அவன் அழைக்க,

"ஒண்ணும் தேவையில்லை..., எனக்கு இப்போ பஸ் வந்துடும்..." கல்லூரியில் அவன் தன்னை கண்டுகொள்ளாதது அவளை இவ்வாறு பேசத் தூண்டியது.

"ஓகே..." அவன் அத்தோடு விட்டுவிட்டு செல்ல..., அவளுக்கோ..., கண்கள் கலங்கும்போல் இருந்தது.

'போய்ட்டான்..., வரலன்னு சொன்ன உடனே..., அவன்பாட்டுக்கு போய்ட்டான்' அவள் ஒரு மனம் தவிக்க,

'அவன் அழைத்தபொழுதே போயிருக்க வேண்டியது தானே...' மற்றொரு மனம் குமுறியது.
சீனிவாசனுக்கோ..., அவன் பதவியின் கௌரவத்தை காக்க வேண்டி இருந்தது. நடு வழியில்..., அதுவும் பேருந்து

நிறுத்தத்தில்..., ஒரு பெண்ணிடம் அவன் கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தால்..., யாராவது பார்த்தால் என்ன ஆவது என்ற கவனமே அவனை அவ்வாறு செய்யத் தூண்டியது.

சீனிவாசனின் அந்த செய்கை..., கார்த்திகாவை மிகவும் தொல்லை செய்தது. அடுத்த வெள்ளிக் கிழமை அவள் கோவிலுக்குச் சென்றிருக்க, அங்கே வரவிருந்த மினிஸ்டரின் பாதுகாப்புக்காக பார்வையிடம் வந்திருந்தான் சீனிவாசன்.

அவனைப் பார்த்த கார்த்திகா..., அவனைக் கண்டுகொள்ளாமல் செல்ல, "என் காதலைத்தான் ஏத்துக்கலை..., அட்லீஸ்ட்..., என்னை உன் ப்ரண்டா கூட ஏத்துக்க மாட்டியா...?" கம்பீரம் குறையாமலே கேட்டான்.

"நீங்க வேண்ணா உங்க ட்ரஸ்ஸை மாதிரி மனசையும் விறைப்பா வச்சுக்க முடியும். ஆனால்..., என்னால் அது முடியாது.... சோ..." சட்டென கலங்கத் துவங்கிய தன் கண்ணை அவனுக்குத் தெரியாமல் மறைத்தவள், அங்கிருந்து விலகினாள்.

ஆனால்..., நொடியில் அவள் மனதை உணர்ந்து கொண்டவன்..., "ஒரு போலீஸ்காரன் மனசையும், உடம்பையும் அவன் கட்டுப்பாட்டுக்குள் வச்சிருக்கணும். இல்லன்னா..., அவனால் வேலை செய்ய முடியாது..." அவன் குரல் அவள் முதுகின் பின்னால் ஒலிக்க, சட்டென தன் நடையை நிறுத்தினாள்.

வேகமாக அவனை நெருங்கியவள்..., "இந்த எண்ணம் உங்களுக்கு முன்னாடியே இருந்திருந்தால்..., நான் நிம்மதியா இருந்திருப்பேனே..., பண்றதை எல்லாம் பண்ணிட்டு..., மனசும் உடம்பும் கண்ட்ரோல்ல இருக்கணுமாம்.

"இனிமேல் அது இருந்தா என்ன..., இல்லாமல் போனால் எனக்கென்ன..., நீங்க நிம்மதியா இருக்கேளா..., அது

போதும்..., போங்கோ...” அடக்கப்பட்ட தன் கோபத்தை அழுத்தமாக, அதே நேரம்..., இருக்கும் இடம் உணர்த்து வெளிப்படுத்தினாள்.

“ஏன்...? நீயும் தெளிவாகத்தான் உன் முடிவைச் சொன்னாய்..., பிறகேன்...?” அவளைச் சீண்டினானோ..

“என்னைப்பற்றி பேசாதேள்...” விடுவிடுவென நடந்துவிட்டாள்.

இந்த உடையோடு ஒரு பெண்ணின் பின்னால் ஓடுவது முடியாத காரியம் என்பதால்..., தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு தன் வேலையைப் பார்க்கப் போனான். அவன் தன் பின்னால் வருவான் என அவள் எதிர்பார்க்க, அது நடக்காமல் போனது..., அவளை மிகவும் படுத்தியது.

ஆனால்..., அவன் அதை அத்தோடு விடப் போவதில்லை என்பது..., அடுத்தநாள்..., கல்லூரி முதல்வரிடமே அனுமதி வாங்கி..., தன் முன்னால் நிற்கையில் அவளுக்குப் புரிந்தது.

எப்பொழுதும் யூனிஃபாமிலேயே அவனைப் பார்த்து பழகியவளுக்கு..., இன்று சாதாரணமாக..., ஒரு ஜீன்ஸ்..., டிஷர்ட்டில் தன் முன்னால் நின்றவனை, அவசரமாக படம் பிடித்தது அவள் விழிகள்.

‘இது நடக்கவே போவதில்லை...’ அவள் புத்திக்கு உறைத்த விஷயம், அவள் மனதுக்கு புரியவில்லையே.

“இப்போ எதுக்கு இங்கே வந்தேள்...?” தன் மனதை மறைத்து அவனிடம் கேட்டாள்.

“டூ யூ லவ் மீ...?” தன் கரத்தை பேண்ட் பாக்கெட்டுக்குள் விட்டவன், கால்களை சற்று அகட்டி..., அழுத்தமாக அவள்

முன்னால் நின்றான்.

"அதான் இல்லன்னு அன்னைக்கே சொல்லிட்டேனே..."

"நான் அன்னைக்கு விஷயத்தை கேக்கலை. இன்னைக்கு..., இப்போ..., உன் மனசுக்குள் நான் இருக்கிறேனா...?" அவன் செய்கையில் மாற்றம் இருக்கவில்லை.

"நீங்க நன்னா வருவேள்..." அவள் நிலை அவளை இவ்வாறே பேசத் தூண்டியது.

"லிசன் கார்த்தி..., நான் உன்னை விரும்பறேன்..., ஸ்டில்..., அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனா..., உன்னோட நிலை. ஓகே..., அன்னைக்கு நீ சொன்ன எந்த காரணமும் இன்னைக்கு இல்லாமல் போயிடலை..., ஆனா..., எனக்குத் தெரிய வேண்டியது..., உன்னோட மனசுதான்..." அவள் மனதுக்குள் தான் நுழைந்துவிட்டோம் என்ற பெரும் நம்பிக்கை அவனிடம்.

அவள் அமைதியைத் தொடர...., "ஏதாவது பேசு கார்த்தி..." அவளிடம் அதே அமைதி.

"எனக்குத் தெரியும்..., இந்த கல்யாணத்துக்கு நிச்சயம் உங்க வீட்டில் ஒத்துக்க மாட்டாங்க..., உனக்கு கல்யாணமே ஆகாமல்..., கன்னிப் பொண்ணா வீட்டிலேயே வச்சிருந்தாலும் வச்சிருப்பாங்களே தவிர, எனக்கு கட்டிக் கொடுக்க மாட்டாங்க..., இப்படி எல்லாம்...,

"எனக்கு யாரைப்பற்றியும்..., எதைப் பற்றியும் கவலை இல்லை. ஆனா..., உன் நிலை..., உன் மனசுக்குள் நான் இருக்கிறேனா...? இல்லையா...? இப்பகூட..., உன்னோட பதில் நோன்னா..., நான் இப்படியே போய்விடத் தயாராகத்தான் இருக்கிறேன்..." இந்த இடத்தில் அவன் குரல்

சற்று இடறியது.

அவளுக்கே இந்த காதலில் இருக்கும் சிக்கல் தெரியுமே..., அப்படி இருக்கையில், அவனிடம் எப்படி தன் காதலைச் சொல்வாள்...? அதற்காக அவனை விடுத்து..., வேறொருவனை கணவனாக நினைக்க கூட அவளால் முடியவில்லை.

அவளிடம் மௌனம் மட்டுமே பதிலாக..., "ஓகே..., ஐ அண்டர்ஷ்டன்ட்..., இதை இங்கே..., இப்போ..., நாம முடிச்சுக்கலாம். முதல்முறை நீ சொன்ன பிறகும், இரண்டாம் முறை நான் வந்தது தப்பு. ஐ தாட்..., விடு..., இனிமேல் அதைப்பற்றி பேசி ஆகப்போவது ஒண்ணுமில்லை.

"முதல் வேலையா நான் கல்யாணம் பண்ணிக்கறேன். அப்போதான்.., இதுக்கு சுபம் போட முடியும்..."
இப்பொழுது அவன் முழுமையாக தெளிந்திருந்தான்.

"ஓ..., அப்போ நீங்களா வருவீங்க..., ஒரு பொண்ணோட மனசைக் கலைப்பீங்க..., பிறகு..., ஒண்ணுமே நடக்காத மாதிரி வேற கல்யாணம் பண்ணிப்பீங்க..., உங்களுக்கெல்லாம் மனசாட்சின்னு ஒண்ணு இருக்கா...?" வெடித்தாள்.

"இப்போ என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்...? சரி..., இப்போவே என்னோட வந்துடு. நாம கல்யாணம் பண்ணிக்கலாம். நீ ரெடியா...?".

அது எப்படி அவளால் முடியும்...? பெற்றவர்களுக்கு ஒரு அவமானத்தை அவளால் கொடுக்க முடியுமா...? சமுதாயத்தில் ஒரு உயர்ந்த, பொறுப்பான பதவியில் இருப்பவன் அவன். அப்படி இருக்கையில்..., அவன் கௌரவத்துக்கு களங்கம் விளைவிக்கும் வகையில், அவளால் முடிவெடுக்க முடியாதே.

“என்னால் முடியாது...” மறுத்தாள்.

“தென்..., ஓகே..., ஃபைன்..., இந்த உறவை நாம தொடர முடியாது..., பாய்...” காதலியின் துணை இருந்தால் அனைத்தையும் எதிர்கொள்ளலாம். இங்கே..., காதலியே அதற்கு எதிராக இருக்கையில், அவனும் என்னதான் செய்ய? அவன் சென்றே விட்டான்.

அவன் செல்லவே..., தன் உயிரும் அவன் பின்னால் ஓடும் உணர்வு. அவளால் அந்த வலியைத் தாங்க முடியவில்லை. எனவேதான்..., உடனடியாக ராஜாவுக்கு அழைத்து விட்டாள். அவன் தலையிட்டால்..., நிச்சயம் நல்ல முடிவு கிடைக்கும் என்ற அவளது நம்பிக்கை..., அதை பொய்யாக்க அவன் விரும்பவில்லை.

அவளுக்கு சீனிவாசனை பிடித்திருக்கிறது என்றால்..., இந்த உலகே எதிர்த்து நின்றாலும் அதை அவளுக்கு நடத்திக் கொடுப்பான். ஆனால்..., அவளது அழுகையையும், பயத்தையும்தான் என்ன செய்வது என அவனுக்குத் தெரியவில்லை. அத்தோடு... சீனிவாசன் என்ன மனநிலையில் இருக்கிறான் என்ற கவலை வேறு.

தன் காதலி, தன்மேல் நம்பிக்கை வைக்காமல்..., அடுத்தவனது உதவியை நாடுகிறாள் என்றால்..., ஒரு காதலனுக்கு எப்படி இருக்கும் என அவனுக்குத் தெரியாதா என்ன? ஒரு வழியாக..., அனைத்தையும் தான் பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தால்..., அவனை எதிர்கொண்டாள் நிஹாசினி.

“என்ன...? எல்லாம் முடிந்ததா...?” அவளது குத்தலான கேள்வி..., ஒரு நிமிடம் புரியாமல் திகைத்தவன்..., அதில் இருந்த அர்த்தம் புரிய..., திகைத்து விழித்தான்.

அடுத்த நிமிடம்..., "வேண்டாம் ஹாசினி..., நீ கேட்டதில் தப்பான அர்த்தம் வருது..., நான் ஏற்கனவே உன்கிட்டே சொல்லியிருக்கேன். தவறு செய்தவன் நான்..., உனக்கு தண்டிக்கணுமா..., என்னை மட்டும் செய். என்னை சுற்றி இருப்பவர்களை எதுவும் சொல்லாதே. ஏன்னா..., என்னால் அதை தாங்கிக்க முடியாது..." இரண்டாம் முறையாக அவன் கோபத்தை சந்திக்கிறாள்.

"என்ன தாங்கிக்க முடியாது...? என்கிட்டே உருகிட்டு..., அது முடியலன்னு சொன்னதும்..., அவளைத் தேடிப் போனால்..., அதைப் பாத்துட்டு நான் சும்மா இருக்கணுமா...?" சீறினாள்.

அவளது பொறாமையை உணர்ந்தவன்..., "ம்ச்..., அவளுக்கு ஒரு சின்ன பிரச்சனை அதான்..."

"ஓ..., ஊருக்குள் எந்த பொண்ணுக்கு பிரச்சனை என்றாலும் ஐயா முன்னாடி போய் நிப்பீங்களோ...? இது எனக்கு தெரியாமல் போச்சே..." நக்கலாக உரைக்க, சற்று அலுத்துதான் போனான்.

"ஒரு விஷயம் ஹாசினி..., புரியாதவங்களுக்கு புரிய வைக்கலாம். ஆனா..., புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறவங்களை எதுவும் செய்ய முடியாது..., இதற்குமேல் உனக்கு என்னால் புரிய வைக்க முடியாது. என்னைக்கு உன் கோபம் தணியுதோ..., அன்னைக்கு பார்த்துக் கொள்ளலாம்..., நானும் உனக்கு புரிய வைக்க முயற்சி பண்ணி அலுத்து போயிட்டேன்..." சொன்னவன் குளிக்கச் சென்றான்.

குளியலறையில் நின்றவனுக்கு..., ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. தான் மனதளவில் படும் அழுத்தம்..., தன் இதயத்தை அழுத்தமாக பாதிக்கிறது என்பதை. எனவே..., முடிந்த அளவு, நிஹாசினியின் பேச்சுக்களை கண்டுகொள்ளக் கூடாது

என்ற முடிவிற்கு வந்தான்.

நாட்கள் கடக்க..., அவர்களது தலை தீபாவளி வந்தது. நிஹாசினியோடு பேசுவதை ராஜா அடியோடு முறித்துக் கொள்ள, அவளோ..., அவனோடு சண்டை போட்டு பேசுவதில் முனைப்பு காட்டினாள். பிறகு..., அவனோடு எப்படித்தான் அவள் பேசுவதாம்?

தலை தீபாவளிக்கு அவளது வீட்டுக்குச் சென்றவன்..., காலை உணவை முடித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பி விட்டான். அவ்வளவுதான்..., அதற்குமேல் மதியமும் சரி..., இரவிலும் சரி அவளது வீட்டுக்கு வரவே இல்லை.

அவனுக்காக தடபுடலாக விருந்து சமைத்திருந்த துளசி சற்று முகம் வாடித்தான் போனார். ராஜாவுக்குமே தன் செய்கையில் உடன்பாடு இல்லை என்றாலும..., எங்கே அவளது வீட்டில் வைத்து எதுவும் விவாதம் வந்துவிடுமோ..., என அஞ்சியதாலேயே அதை அவன் செய்யவில்லை.

"என்னடி மாப்பிள்ளைக்கு போன் பண்ணியா? இல்ல அவர் பண்ணாரா? அவங்க வீட்டுக்கு போயிட்டாரா? காலையில் போனவர்..., இன்னும் வரலை. வேலை அதிகமா...? ஏதாவது கேட்டியா இல்லையா...? ஏற்கனவே நான் சொல்லிட்டேன். மனசுக்குள் அழுக்கு சேர விடாதே.

"நடந்தவை நடந்து முடிந்ததாகவே இருக்கட்டும். அவர்தான் இனிமேல் உன் எதிர்காலம் புரிஞ்சு நடந்துக்கோ. சாப்ட்டாரா இல்லையான்னு வேற தெரியலையே..., உன் தங்கச்சி வேற..., ஒரு நூறு தடவ கேட்டுட்டா..., அவளை சம்மாளிக்கிறது பெரிய வேலையா இருக்கு..." புலம்பியவர் கவலையானார்.

"பொண்ணை கட்டிக் கொடுத்துட்டு..., மனசுக்குள் நெருப்பை

கட்டிக்கிட்டு இருக்க வேண்டி இருக்கு. கொஞ்சமாவது பொறுப்பா இருக்காளா பார். மாப்பிள்ளையை காணோமே..., உனக்கே போன் பண்ணணும்னு தெரிய வேண்டாம்..., என்ன பொண்ணோ போ..., வாயும் வயிறுமா இருக்க உன்னை எதுவும் சொல்ல வேண்டாம்னு பாக்கறேன்..." புலம்பியவாறு எழுந்து சென்றார்.

அது எப்படி அவளால் முடியும்...? பெற்றவர்களுக்கு ஒரு அவமானத்தை அவளால் கொடுக்க முடியுமா...? சமுதாயத்தில் ஒரு உயர்ந்த, பொறுப்பான பதவியில் இருப்பவன் அவன். அப்படி இருக்கையில்..., அவன் கௌரவத்துக்கு களங்கம் விளைவிக்கும் வகையில், அவளால் முடிவெடுக்க முடியாதே.

"என்னால் முடியாது..." மறுத்தாள்.

"தென்..., ஓகே..., ஃபைன்..., இந்த உறவை நாம தொடர முடியாது..., பாய்..." காதலியின் துணை இருந்தால் அனைத்தையும் எதிர்கொள்ளலாம். இங்கே..., காதலியே அதற்கு எதிராக இருக்கையில், அவனும் என்னதான் செய்ய? அவன் சென்றே விட்டான்.

அவன் செல்லவே..., தன் உயிரும் அவன் பின்னால் ஓடும் உணர்வு. அவளால் அந்த வலியைத் தாங்க முடியவில்லை. எனவேதான்..., உடனடியாக ராஜாவுக்கு அழைத்து விட்டாள். அவன் தலையிட்டால்..., நிச்சயம் நல்ல முடிவு கிடைக்கும் என்ற அவளது நம்பிக்கை..., அதை பொய்யாக்க அவன் விரும்பவில்லை.

அவளுக்கு சீனிவாசனை பிடித்திருக்கிறது என்றால்..., இந்த உலகே எதிர்த்து நின்றாலும் அதை அவளுக்கு நடத்திக் கொடுப்பான். ஆனால்..., அவளது அழுகையையும், பயத்தையும்தான் என்ன செய்வது என அவனுக்குத் தெரியவில்லை. அத்தோடு... சீனிவாசன் என்ன மனநிலையில்

இருக்கிறான் என்ற கவலை வேறு.

தன் காதலி, தன்மேல் நம்பிக்கை வைக்காமல்..., அடுத்தவனது உதவியை நாடுகிறாள் என்றால்..., ஒரு காதலனுக்கு எப்படி இருக்கும் என அவனுக்குத் தெரியாதா என்ன? ஒரு வழியாக..., அனைத்தையும் தான் பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தால்..., அவனை எதிர்கொண்டாள் நிஹாசினி.

"என்ன...? எல்லாம் முடிந்ததா...?" அவளது குத்தலான கேள்வி..., ஒரு நிமிடம் புரியாமல் திகைத்தவன்..., அதில் இருந்த அர்த்தம் புரிய..., திகைத்து விழித்தான்.

அடுத்த நிமிடம்..., "வேண்டாம் ஹாசினி..., நீ கேட்டதில் தப்பான அர்த்தம் வருது..., நான் ஏற்கனவே உன்கிட்டே சொல்லியிருக்கேன். தவறு செய்தவன் நான்..., உனக்கு தண்டிக்கணுமா..., என்னை மட்டும் செய். என்னை சுற்றி இருப்பவர்களை எதுவும் சொல்லாதே. ஏன்னா..., என்னால் அதை தாங்கிக்க முடியாது..." இரண்டாம் முறையாக அவன் கோபத்தை சந்திக்கிறாள்.

"என்ன தாங்கிக்க முடியாது...? என்கிட்டே உருகிட்டு..., அது முடியலன்னு சொன்னதும்..., அவளைத் தேடிப் போனால்..., அதைப் பாத்துட்டு நான் சும்மா இருக்கணுமா...?" சீறினாள்.

அவளது பொறாமையை உணர்ந்தவன்..., "ம்ச்..., அவளுக்கு ஒரு சின்ன பிரச்சனை அதான்...".

"ஓ..., ஊருக்குள் எந்த பொண்ணுக்கு பிரச்சனை என்றாலும் ஐயா முன்னாடி போய் நிப்பீங்களோ...? இது எனக்கு தெரியாமல் போச்சே..." நக்கலாக உரைக்க, சற்று அலுத்துதான் போனான்.

“ஒரு விஷயம் ஹாசினி..., புரியாதவங்களுக்கு புரிய வைக்கலாம். ஆனா..., புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறவங்களை எதுவும் செய்ய முடியாது..., இதற்குமேல் உனக்கு என்னால் புரிய வைக்க முடியாது. என்னைக்கு உன் கோபம் தணியுதோ..., அன்னைக்கு பார்த்துக் கொள்ளலாம்..., நானும் உனக்கு புரிய வைக்க முயற்சி பண்ணி அலுத்து போயிட்டேன்...” சொன்னவன் குளிக்கச் சென்றான்.

குளியலறையில் நின்றவனுக்கு..., ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. தான் மனதளவில் படும் அழுத்தம்..., தன் இதயத்தை அழுத்தமாக பாதிக்கிறது என்பதை. எனவே..., முடிந்த அளவு, நிஹாசினியின் பேச்சுக்களை கண்டுகொள்ளக் கூடாது என்ற முடிவிற்கு வந்தான்.

நாட்கள் கடக்க..., அவர்களது தலை தீபாவளி வந்தது. நிஹாசினியோடு பேசுவதை ராஜா அடியோடு முறித்துக் கொள்ள, அவளோ..., அவனோடு சண்டை போட்டு பேசுவதில் முனைப்பு காட்டினாள். பிறகு..., அவனோடு எப்படித்தான் அவள் பேசுவதாம்?

தலை தீபாவளிக்கு அவளது வீட்டுக்குச் சென்றவன்..., காலை உணவை முடித்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பி விட்டான். அவ்வளவுதான்..., அதற்குமேல் மதியமும் சரி..., இரவிலும் சரி அவளது வீட்டுக்கு வரவே இல்லை.

அவனுக்காக தடபுடலாக விருந்து சமைத்திருந்த துளசி சற்று முகம் வாடித்தான் போனார். ராஜாவுக்குமே தன் செய்கையில் உடன்பாடு இல்லை என்றாலும்..., எங்கே அவளது வீட்டில் வைத்து எதுவும் விவாதம் வந்துவிடுமோ..., என அஞ்சியதாலேயே அதை அவன் செய்யவில்லை.

“என்னடி மாப்பிள்ளைக்கு போன் பண்ணியா? இல்ல அவர்

பண்ணாரா? அவங்க வீட்டுக்கு போயிட்டாரா? காலையில் போனவர்..., இன்னும் வரலை. வேலை அதிகமா...? ஏதாவது கேட்டியா இல்லையா...? ஏற்கனவே நான் சொல்லிட்டேன். மனசுக்குள் அழுக்கு சேர விடாதே.

"நடந்தவை நடந்து முடிந்ததாகவே இருக்கட்டும். அவர்தான் இனிமேல் உன் எதிர்காலம் புரிஞ்சு நடந்துக்கோ. சாப்ட்டாரா இல்லையான்னு வேற தெரியலையே..., உன் தங்கச்சி வேற..., ஒரு நூறு தடவ கேட்டுட்டா..., அவளை சம்மாளிக்கிறது பெரிய வேலையா இருக்கு..." புலம்பியவர் கவலையானார்.

"பொண்ணை கட்டிக் கொடுத்துட்டு..., மனசுக்குள் நெருப்பை கட்டிக்கிட்டு இருக்க வேண்டி இருக்கு. கொஞ்சமாவது பொறுப்பா இருக்காளா பார். மாப்பிள்ளையை காணோமே..., உனக்கே போன் பண்ணணும்னு தெரிய வேண்டாம்..., என்ன பொண்ணோ போ..., வாயும் வயிறுமா இருக்க உன்னை எதுவும் சொல்ல வேண்டாம்னு பாக்கறேன்..." புலம்பியவாறு எழுந்து சென்றார்.

தாயின் கவலை அவளைத் தொற்ற..., கூடவே..., தலைதீபாவளிக்கு கூட தன்னோடு இல்லாமல் போன அவனை மனதுக்குள் சாடியவளாக.., தன் அலைபேசியை எடுத்தவள்..., அவனுக்கு அழைத்தாள்.

இரவு பத்து மணிக்கு அவளிடமிருந்து அழைப்பு எனவே..., அவசரமாக அவன் போனை எடுக்க..., "உங்க மனசில் நீங்க என்னதான் நினைச்சுட்டு இருக்கீங்க. எங்க அம்மாவுக்கு கொஞ்சம் கூட நிம்மதியைகொடுக்கவே கூடாதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா?

"நான் சொன்னேன்ல்ல..., உங்களுக்கும் ஒரு பொண்ணு பொறந்து..., அவ மாப்பிள்ளையும் இப்படி அநாதை மாதிரி

அவளை உங்க வீட்டில் தள்ளிட்டு போனால்தான் உங்களுக்குத் தெரியும்...” அவள் பொரிய..., ஏற்கனவே வேலைப் பழு, அத்தோடு அவளது பேச்சும் சேர..., அவனுக்கோ மண்டையைப் பிளக்கும் வலி.

கூடவே.., அவள் தன் குழந்தையை வைத்து பேசும் பேச்சு சேர..., அவள் பேச்சை கண்டுகொள்ளக் கூடாது என நினைத்தாலும் அவனால் முடியவில்லை.

அந்த நிமிடமே வேலையை உதவியாளரிடம் ஒப்படைத்துவிட்டு கிளம்பி விட்டான். அவள் வீட்டுக்குச் செல்ல..., நேரிலும் அவளிடம் வாங்கிக் கட்டிக் கொண்டான்.

அவள் கோபத்தை அமைதியாக வாங்கிக் கொண்டவன்..., “அது உனக்கும் குழந்தைதான் ஹாசினி...” இப்படிப் பேசாதே என்ற கெஞ்சல் குரலில் உரைக்க,

“ஏன் வலிக்குதோ..., இப்படித்தானே எங்களுக்கும் இருக்கும்...” அவள் கேட்க, அவளது அமைதி, பொறுமை..., பார்வையில் பேசும் விதம்..., அனைத்தும் எங்கே தொலைந்துபோனது.., என்ற கவலை அவனை தொற்றிக் கொண்டது.

“நான் தெரிந்தே எந்த தப்பும் செய்யலை..., என்னை இப்படி காயப்படுத்துவது உனக்கு சந்தோசம் என்றால் செய்...” உன் வார்த்தைகள் எனக்கு வலிக்கிறது என்பதைக் கூட பொறுமையாகவே உரைத்தான்.

அதைக் கேட்டவள்..., முறைப்பான பார்வையோடு படுத்துக் கொண்டாள். அதுவும்..., அவனை ஒட்டியே படுக்க..., அவள் பேச்சுக்கும் செய்கைக்குமான அர்த்தத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

‘வாழ்க்கை இப்படியே போய்விடுமா...?’ மனம் கனக்க..., வேலைப்பழுவும் சேர, அலுப்பில் தூங்கிப் போனான்.

மறுநாள் காலையில் அவனை எதிர்கொண்ட துளசி..., “மாப்ள..., அடுத்த வாரம் நிஹாவுக்கு ஒன்பதாம் மாசம் ஆரம்பிக்குது. வளைகாப்பை இதற்குமேல் தள்ளிப்போட முடியாது...” ஏற்கனவே ஏழாம் மாதமே அதைச் செய்யவேண்டும் என சுஜா உரைக்க, மற்றவருக்கு சந்தேகத்தை விதைக்க வேண்டாம் என்பதால்..., ராஜாதான் அதை தள்ளிப் போட்டிருந்தான்.

“செய்யலாம் அத்த..., அம்மாவும் நாள் பாத்துட்டாங்க..., அவங்களே பேசுவாங்க...” உரைத்தவன்..., “அத்த..., கடையில் ரொம்ப வேலை இருக்கு..” அவன் தயங்க..., “நீங்க கிளம்புங்க மாப்ள..., நான் சம்பந்தியம்மாகிட்டே பேசறேன்...” அவனை அனுப்பினார்.

ராஜாவுக்கோ..., அவள் வயிற்றில் இருக்கும் குழந்தை வளர வளர..., அவனது பயம் வளந்துகொண்டே சென்றது.

பிறக்கப்போகும் குழந்தை ஆணாக இருக்கவேண்டும் என்ற எந்த எதிர்பார்ப்பும் அவனுக்கு இல்லை. ஆனால்..., நிஹாவின் பேச்சுக்களை கேட்ட பிறகு..., ‘பெண்ணாக இருந்தால்...’ அந்த பயம் அவனை ஆட்டிப் படைத்தது.

அவன் கடையில் பெண் குழந்தைகளைப் பார்த்தால் கூட..., சட்டென எழும் பயம்..., அதை தவிர்க்கவே மிகுந்த பாடுபட்டான்.

அவளுக்கு வளைகாப்பு செய்யும் நாளும் வர..., மிகவும் நெருங்கிய சொந்தங்களை மட்டும் அழைத்து வீட்டிலேயே விழாவை ஏற்பாடு செய்தார்கள். நிஹாசினிக்கு ஒன்பதாம் மாதம் துவங்கிவிட்ட நிலையில்..., பெரிய அளவில் ஏற்பாடு

செய்து..., அவளுக்கு எதுவும் தொல்லை நேர்ந்துவிடக் கூடாது என்ற பயமே அதற்குக் காரணம்.

அத்தோடு..., மற்றவர் கணக்குக்கு அவளுக்கு ஏழாம் மாதம் என்பதே சொல்லப்பட..., ஒருவர் கண்போல் மற்றவர் கண் இருக்காதே என்பது மற்றொரு காரணம்.

நிஹாசினி முழு அலங்காரத்தில்..., தாய்மையின் பூரிப்பில் தேவதையாக ஜொலிக்க..., அவள் அழகை ரசிக்க முடியாமல் தடுமாறிப் போனான். எங்கே தன் பார்வையைப் பார்த்து..., அதற்கும் ஏதாவது சொல்லி, இருக்கும் மனநிலையை கெடுத்துகொள்ளக் கூடாதே என்ற அவனது கவனம், அவனை அவ்வாறு செய்யத் தூண்டியது.

அவன் தன்னை ரசிக்காதது நிஹாசினிக்கு பெரும் குறையாகவே இருந்தது. அத்தோடு..., இன்று அவள் தன் வீட்டுக்குச் செல்ல வேண்டுமே..., அவனை விட்டு தனியாக செல்வதை நினைத்தால்..., மனதுக்கு கஷ்டமாகத்தான் இருந்தது.

என்னதான் அவனை காயப்படுத்தினாலும்..., அவனது அருகாமை மட்டுமே அவளை அமைதியாக இருக்கச் செய்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அதே நேரம்..., அவன் குரலைக் கேட்டால் மட்டுமே அவள் வயிற்றில் இருக்கும் குழந்தை அசைவது அவள் மட்டுமே அறிந்த ரகசியம் ஆயிற்றே.

அதற்காகவும் தானே அவனை எதையாவது சொல்லி பேச வைக்கிறாள்.

அலங்காரம் முடித்து..., அவள் வெளியே செல்ல முயல..., "மாப்பிள்ளை கிட்டே பேசிட்டு வா..." அவனுக்குமே அவளை விட்டு இருக்கப் போவது துன்பத்தை கொடுக்க, அவள் இருக்கும் இடத்தில் இருக்க வேண்டி..., ஏதோ சாக்கு வைத்து அறையை சுற்றி வருவதை உணர்ந்த துளசி..., சற்று தனிமை கொடுத்து

விலகிச் சென்றார்.

தாய் செல்லவே..., அவன் முன்னால் வந்து நின்றவள்..., "ராஜ்..." அவனை அழைக்க.., அப்பொழுதுதான் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

பிரிவின் துயரில் அவன் கண்கள் சற்று கலங்கி இருக்க..., அதைக் கண்டுகொண்டவள்..., அவன் மனநிலையை மாற்ற விரும்பினாள்.

"நான் எப்படி இருக்கறேன்னு சொல்லவே இல்லையே...." முதல் முறையாக சற்று இயல்பாக பேச முயன்றாள். அவளுக்குமே..., நாளுக்குநாள் நலுங்கும் அவன் தோற்றம் கவலையை அளிக்கிறதுதானே.

கண்கள் மின்ன அவளை மொத்தமாக அளந்தவன்..., "பியூட்டி..." அவனது ட்ரேட்மார்க் குரலில் உரைத்தவன், தன்னை மீட்டு..., "அப்படியே..., தேவதை மாதிரி இருக்க..., என்னால் பார்வையை திருப்பிக்கவே முடியலை..." அவளை அணைத்துக்கொள்ளச் சொல்லி மனமும், கைகளும் பரபரத்தது. அதை அடக்கவே அவன் மிகுந்த சிரமப்பட்டான்.

தன் உணர்வை கட்டுப்படுத்த தலையை அழுத்தமாக கோதியவன்..., "ஐ லவ் யூ ஹாசினி..." தொட்டு அணைக்க துடிக்கும் கரத்தை அவனும் என்ன செய்ய...? அவள் நெற்றியில் இதழ்பதிக்கத் துடிக்கும் மனம்..., 'எனக்கு மட்டும் ஏன் இப்படி...?' கழிவிரக்கம் ஆட்கொண்டது.

அவன் முகமும், உடல்மொழியும் அவளுக்கு அவன் நிலையை உணர்த்த, தானாகவே அவன் நெஞ்சில் சாய முயல..., அதே நேரம்..., வெளியே அவளை அழைக்கும் குரல் கேட்கவே..., "வெளியே கூப்பிடறாங்க..." முதல் ஆளாக வெளியேறினான்.

தொடர்ந்த நேரம்..., வளைகாப்பு நடக்க..., வளையல்களை தங்கத்தில் செய்து அடுக்கியிருந்தான் ராஜா. நிகழ்ச்சி முடியும் வரைக்கும்..., அவள் மீது ஒரு கண்ணும்..., வந்தவர்களிடம் உரையாடுவதில் ஒரு கண்ணுமாக நேரத்தை கடத்தினான்.

அனைத்தும் சுபமாகத்தான் நடந்து முடிந்தது. சொந்தங்கள் சற்று கலைந்திருக்க, வினோதினிதான் அதைத் துவங்கினாள்...,

"மாமா..., உங்களுக்கு பையன் வேணுமா..., பொண்ணு வேணுமா...?" அவள் கேட்க..., அவனை மீறி உள்ளம் தடதடத்தது.

"ஏய் பெரிய மனுஷி..., நீ சொல்லு..., உன் ஆசை என்ன...?" சுஜா அவளை வினவினார்.

"ம்..., எங்க வீட்டில் நானும் அக்காவும் பொண்ணாவே போய்ட்டோம்..., சோ..., எனக்கு பையன்தான் வேணும்...." யோசித்தவள் பதில் உரைக்க,

"இப்போ நீங்க சொல்லுங்க...?" சுஜாவிடம் கேட்டாள்.

"எங்களுக்கு மகாலஷ்மிதான் வேணும்...., இங்கே எல்லாரும் ஆண் பிள்ளைகள் தானே..." சுஜா உரைத்து முடிக்க..., ராஜாவுக்கு எங்கிருந்துதான் அந்த வேகம் வந்ததோ...,

"இல்ல..., எனக்கு பொண்ணு வேண்டாம்..., பொண்ணு.... வேண்டவே வேண்டாம். பையன்தான் வேணும்..." கிட்டத்தட்ட அலறினான். அவன் தேகம் வியர்வையில் குளித்திருந்தது.

பெரியவர்கள் அவனைப் புரியாத பயத்தில் ஏறிட..., நிஹாசினி மனதுக்குள் முதல் முறையாக பூகம்பம். வினோவோ...,

"ஐயா..., என் கட்சிக்கு மாமா இருக்காங்க..."
குதூகலித்தாள்.

அவளையோ..., அங்கிருந்த யாரையும் கண்டு
கொள்ளாமல்..., "எனக்கு பொண்ணு வேண்டாம்..."
சொன்னதையே மீண்டும், மீண்டுமாக உரைத்தவன்...,
படிகளில் ஏறி தன் அறைக்குள் புகுந்தவன்..., நிஹாசினி
செல்லும் வேளையில் கூட இறங்கி வர மறுத்தான்.

பகுதி - 32.

இரண்டு நாட்களுக்கும் மேலாக தன் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் ராஜாவை என்ன செய்யவென்று தெரியாமல் தவித்துப் போனார் சுஜா.

அதைவிட..., பெண் குழந்தை வேண்டாம் என அவன் மறுத்த விதம்..., அவன் குரல், தோரணை..., பதட்டம்...,
இவற்றை கண்டவருக்கு, அடிவயிற்றில் மூளும் பயம் எதனால் என தெரியவே இல்லை.

'எல்லாம் சரியாகிவிடும்...' என நான் நினைப்பது தவறோ? எதுவும் சரியாகப்போவது இல்லையா? ஹாசினியின் கோபத்தில் நியாயம் இருந்தாலும், கொண்ட கணவன்மேல் இவ்வளவு வெறுப்பு காட்டுவது நியாயமா? ஒரு பெண்ணாக அவளுக்கு சாதகமாக யோசித்தாலும் ஒரு தாயாக அவர் மனம் பரிதவிப்பதை தவிர்க்க முடியாமல் தடுமாறினார்.

ராஜாவிடம் பேச முயல..., அதுவும் வெற்றிகரமாக தோல்வியையே தழுவியது. அவனிடம் பேச செல்ல...,
அவனோ..., "கொஞ்சம் தனியா இருக்கறேன்ம்மா..."
கெஞ்சல் குரலில் கேட்கையில்..., பிடிவாதமாக அவனிடம் பேச முடியவில்லை.

ஆனாலும்..., பெண்குழந்தை வேண்டாம் என அவன் சொல்வதை எப்படி சாதாரணமாக எடுத்துக் கொள்ள? இரண்டு நாட்களாக நிஹாசினியைக் காணக் கூட அவன் வெளியே செல்லவில்லையே..., 'அவளை வெறுத்து விட்டானா...?' இந்த நினைவே அவரை அலைக்கழித்தது.

தன் யோசனையிலேயே மூழ்கி இருந்தவர்..., தனா வீட்டுக்கு வந்ததையோ, தன்னை வித்தியாசமாக பார்த்துச் சென்றதையோ கூட உணரும் நிலையில் இருக்கவில்லை.

மனைவியின் நிலையைப் பார்த்தவர்..., அவர் தோளில் கை வைக்க.., தன் நினைவுகளில் இருந்து கலைந்தவர், "வாங்க..., இருங்க காபி எடுத்துட்டு வரேன்..." எழுந்து செல்ல முயல, அவர் தோளை அழுத்தி அமர வைத்தவர், தானும் உடன் அமர்ந்தார்.

"நான் வந்து அரைமணிநேரம் ஆச்சு..., அது கூட தெரியாமல், அப்படியென்ன பிள்ளையைப் பற்றிய யோசனை...? ம்...?" மனைவி எதற்கு எப்படி செயல்படுவார் என அவருக்குத் தெரியாதா என்ன?

"ரெண்டுநாளா அவன் எங்கேயும் வரக் காணோம்...? சரி..., மனைவியைப் பிரிந்த ஏக்கம் என்றாலும்..., அவளையாவது பார்க்கப் போனதாகக் கூட தெரியவில்லையே..., என்ன பிரச்சனை எனக் கேட்டால் அதையும் சொல்ல மாட்டேன் என்கிறாய்..., இப்போ என்னன்னா இப்படி உக்காந்து இருக்க..." மனைவியை ஆழமாக நோக்கினார்.

'இவரிடம் சொல்லி விடுவோமா...?' ஒரு நொடி சிந்தித்தவர், சொல்வதாக இருந்தால் அனைத்தயும் சொல்ல வேண்டி இருக்குமே..., வேண்டாம்..., முடிவெடுத்தவர், "ராஜா..., அவனோட கம்பெனியை விட்டு விலகி வர மாதிரி

ஒரு பீல்..., அதான்..., அதைபத்திதான் யோசிச்சுட்டு இருக்கேன்..., வேற எதுவும் இல்லை...'' இதைச் சொல்லி சம்மாளித்தார்.

''ம்..., நானும் யோசிச்சேன்..., அந்த விநாயக் கிட்டே போன் பண்ணி கேட்டேன். நடுவில் கம்பெனியை விக்கிற மாதிரி யோசித்தானாம்..., ஆனா.., இப்போ அதைபத்தி எதையும் பேசலைன்னு சொன்னானே..., ஒரு வேளை அதனால் இருக்குமோ...?

''அவனுக்கு பிடித்த விஷயத்தில் இருந்து இழுத்துட்டு வந்து, நம்ம தொழில்ல அவனை கட்டி வச்சுட்டமோன்னு நானே நினைத்தேன். அவனுக்குப் பிடிக்கலன்னா வேண்டாம்..., நாம ஆள் வச்சு பாத்துக்கலாம். ஆனாலும்..., அதற்கும் அவன் இப்படி இருப்பதற்கும் சம்பந்தம் இருக்கா என்ன...?'' அவரால் நம்ப முடியவில்லை.

தன் கணவனும் ராஜாவின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனிக்கிறார் என்பதை எண்ணி சந்தோஷப்படுவதா? துக்கப்படுவதா என்றே அவருக்குத் தெரியவில்லை.

''சரி விடுங்க..., நான் அவன்கிட்டே பேசறேன்..., நீங்க பிரெஷ் ஆகிட்டு கிளம்புங்க..., நான் வரேன்....'' கிட்டத்தட்ட தப்பித்து ஓடினார்.

மனைவியின் செய்கையை ஆராய்ச்சியாகப் பார்த்தவர், 'எத்தனை நாள் மறைக்கிறாய் என்று பார்க்கிறேன்...' தனக்குள் சொல்லிக் கொண்டார்.

வீட்டில் இருப்பவர்கள் தன்னைப்பற்றி கவலைப்படுவார்கள் எனத் தெரிந்தும், அதைப்பற்றி சிந்திக்க முடியாமல் தனக்குள் உழன்று கொண்டிருந்தான் ராஜா.

பிறக்கப்போகும் குழந்தையைப் பற்றிய அவனது பயம்..., ஆம்..., பயமேதான்..., அவனைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தது.

நிஹாசினி சொல்வதுபோல்..., குழந்தை பெண்ணாக இருந்து..., அதற்கு இப்படி ஒரு சூழல் வந்துவிடுமோ...? அவனால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.

குழந்தையை எப்படி பாதுகாக்கப் போகிறோம்...? எப்படி வளர்க்கப் போகிறோம்? இந்த யோசனையே அவனை அலைக்கழித்தது. அவன் ஒன்றை மறந்துவிட்டான்..., ஒரு பெண் நினைத்தால்..., பூட்டிய அறைக்குள் கூட கெட்டுப் போக முடியும் என்பதையும்..., அதேபோல்..., நூறு ஆண்களுக்கு மத்தியிலும் அவளால் கற்புள்ளவளாக வாழவும் முடியும் என்பதையும் தான்.

நிஹாசினிக்கு தான் செய்த செயல்..., எவ்வளவு பெரியது என்பதும்..., கூடவே..., அவளைத் தவிர வேறு பெண்ணை தான் கனவில் கூட தீண்டியதில்லை என்பதும் சேர்த்தே நினைவிற்கு வர, உள்ளம் தவித்தது.

'அவள் என் உயிர்..., என் மனைவி என முடிவு செய்த பிறகு நேர்ந்த செயல்..., ஏன் அவளால் தன்னை மன்னிக்கவே முடியவில்லை...? என் காதல் அவளுக்குத் தெரியவே இல்லையா...? அவளை ஏமாற்றிவிட்டேன் எனச் சொல்கிறாளே..., அப்படி இல்லை என அவளுக்குப் புரியவே இல்லையா...?' உள்ளம் நைந்தது.

அதே நேரம்..., ஒரு தவறுக்கான தண்டனை..., அவர்களை மீண்டும் தண்டிப்பதில் இல்லை..., அவர்களை மன்னிப்பதில்தான் இருக்கிறது என ஏன் அவளுக்குப் புரியவில்லை...?' எண்ணியவனுக்கு..., சட்டென தாரிணியின் முகம் மின்னி மறைந்தது.

அவர்கள் செய்த தவறுக்கு தான் கொடுத்த தண்டனை..., இப்பொழுது நினைக்க, அது எவ்வளவு பெரிய தவறு எனத் தெரிந்தது. ஒரு தவறின் அளவை, அது நடந்த சூழல்தான் தீர்மானிக்கிறது என்பதை உணர்ந்தவனுக்கு, அவர்கள் தன் சிறு வயதில் நடந்து கொண்டது தவறில்லை என்றே இப்பொழுது தோன்றியது.

'எனக்கு குழந்தை வரும் இந்த நேரத்தில்..., ஒரு தங்கையோ..., தம்பியோ வந்தால்...?' அந்த நினைவே சற்று கசந்தது. இப்படித்தானே குணா அண்ணாவுக்கும் இருந்திருக்கும். தனா அண்ணா ஓரளவுக்கு மெச்சூர் ஆகி இருந்ததால் அவரால் ஏற்க முடிந்தது.

குணா அண்ணாவும், தாரிணி அண்ணியும் அப்படி இல்லை..., அவ்வளவுதானே. இதற்காக..., நான் இத்தனை வருடங்கள் அவர்களை தண்டித்தது நியாயமா? அவர்களுக்கும் இப்படித்தானே வலிக்கும். அவர்களும் என்ன தெரிந்தா செய்தார்கள்?

உடனே தாரிணியைக் காணவேண்டும்போல் இருந்தது. தான் அணிந்திருந்த உள் பனியனின்மேல், ஒரு டிஷர்ட்டை எடுத்து மாட்டியவன், தடதடவென படிகளில் இறங்கி, அவர்கள் தளத்துக்கு விரைந்தான்.

இத்தனை வருடங்களில்..., அவர்கள் அறை பக்கம்..., ஒர விழியில் பார்த்த நினைவு கூட அவனுக்கு இல்லை. முதல் முறையாக, அவர்கள் அறைக் கதவை தட்டினான்.

பொதுவாக அவர்களாக அழைத்தால் தவிர, வேலைக்காரர்கள் கூட சுத்தம் செய்ய அங்கே வருவது கிடையாது. சுஜா வந்தால்..., பெயர் சொல்லிய அழைப்போடு கதவைத் தட்டுவார்..., இதென்ன..., யாரோ அவசரத்தில் தட்டுவதுபோல் இருக்கிறதே..., யோசனையோடு, வேகமாக

கதவைத் திறந்தாள் தாரிணி.

சத்தியமாக..., கதவுக்கு முன்னால் ராஜா நின்றிருப்பான் என அவர் கனவில் கூட நினைக்கவில்லை. "ராஜா..." அதிர்ச்சியும், ஆனந்தமும், நம்பமுடியாத தன்மையுமாக கலந்து அவள் குரல் ஒலிக்க,

"நான் உள்ளே வரவா...?" அவன் சிறுவனாக இருந்தபொழுது, சுஜாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு அந்த அறைக்குள் ஒரு முறையோ, இரண்டு முறையோ சென்ற நினைவு.

"என்ன இப்படி கேக்கற..., உள்ளே வா..." கதவை அகலத் திறந்தாள்.

அந்த அறையை ராஜாவின் பார்வை நிதானமாக ஒரு முறை அலசியது. அவன் நினைவடுக்கில் பதியாத அறை. முதல் முறையாக காண்கிறான்.

"இப்போதான் இங்கே வர வழி தெரிந்ததா...?" தாரிணியின் குரல் தேய்ந்து வெளியேற..., கண்கள் கலங்கியே விட்டது.

"மன்னி..." முதல் முறையாக ஒரு சொந்தத்தில் அழைக்க..., அந்த அழைப்பு அவன் அடி மனதில் இருந்து வந்தது என உணர்ந்தவருக்கு..., தன் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

"உன் மன்னிதாண்டா..., மன்னிக்கு என்ன கொண்டு வந்தியாம்...?" புடவை முந்தானையால் முகத்தை துடைத்துக் கொண்டார்.

"என்னை மன்னிச்சிடுங்க மன்னி..., இத்தனை வருஷம்..., கொஞ்சம் கூட நியாயமே இல்லாமல் உங்களை தண்டிச்சுட்டேன்

இல்ல...” தன் அருகில் நின்றவரது கரத்தை, முதல் முறையாக அழுத்தமாக பற்றிக் கொண்டான். அவனது நெஞ்சமும் தவித்தது.

“நீ ஏண்டாப்பா மன்னிப்பு கேக்கற...? உன் மன்னிப்பை ஏத்துக்கற அளவுக்கு என் பக்கம் நியாயம் இல்லையே....” தான் செய்த தவறு, அவர் கண்முன் நிழலாடியது.

“நீங்க பெரியவங்க..., நான் சின்னப்பையன் தானே..., எனக்கு இவ்வளவு பிடிவாதம் இருந்திருக்க வேண்டாம்...” எதை எப்படிச் சொல்ல..., அவனிடம் தடுமாற்றம்.

“நான் பெரியவாளா நடந்துக்கலையே...” அவரிடம் விசும்பல் வெளிப்பட்டது.

“மன்னி..., அழாதீங்க..., இனிமேல் நீங்க அழவே கூடாது. நடந்தது எல்லாத்தையும் நாம மறந்து, இனிமேலாவது ஒத்துமையா இருக்கணும். இனிமேல் நீங்க புது ராஜாவைப் பாப்பீங்க. உங்களுக்கு ஒண்ணுன்னா இந்த ராஜா முன்னாடி நிப்பான். உங்களுக்கு சம்மதமா...?” அவன் கேட்க,

“இந்த வார்த்தைக்காகத்தாண்டா இத்தனை வருஷம் தவம் இருக்கேன். என் வேண்டுதல் வீண் போகலை. நீ எனக்கு கிடைச்சுட்ட..., உங்க அண்ணா கேட்டால் ரொம்ப சந்தோஷப்படுவார். செத்த இரு..., அவருக்கு சொல்லிடறேன்...” குழந்தையென குதூகலித்தவள், தன் அலைபேசியில் குணாவை அழைக்க, அவனது அலைபேசி, அவர்கள் அறை வாயிலிலேயே ஒலிக்க, இருவரும் வாசலைப் பார்த்தார்கள்.

குணாவும..., சற்று சிவந்த விழிகளோடு அறை வாயிலில் நின்றிருந்தான். “அண்ணா...” ராஜா அழைக்க..., “ஏண்டி தாரு..., இதுயார் புதுசா..., உனக்கு தெரிஞ்சவரா...?

ரூமுக்குள்ளேயே விட்டிருக்க...” அடைத்த தொண்டையை சரி செய்தவாறு அறைக்குள் நுழைந்தான்.

“ஆமா..., ரொம்ப நாளா.., இல்ல ரொம்ப வருஷமா காணாமல் போயிருந்த உங்க தம்பி..., உங்களுக்கு அடையாளம் தெரியலையோ...” கேட்டவர்..., கணவனின் நெஞ்சில் விழுந்து கதறிவிட்டார்.

மனைவியை நெஞ்சில் சாய்த்தவர்..., அசையாமல் நின்றுகொண்டார். பெண் அவர் கண்ணீரில் தன் உள்ள உணர்வை வெளிப்படுத்த, ஆண்.., அவர், தொண்டைக்குழியில் அடக்கினார்.

இத்தனை வருடங்களாக..., கணவன் மனைவியும் மட்டுமாகவே தங்கள் உணர்வுகளை, சந்தோஷத்தை, துக்கத்தை பங்கிட்டவர்கள் ஆயிற்றே. ‘இவர்களை மிகவும் தவிக்க விட்டு விட்டோமோ...’ குற்ற உணர்வில் தத்தளித்தான் ராஜா.

“அண்ணா..., மன்னி..., என்னை மன்னிச்சுடுங்க..., இத்தனை நாளா..., எனக்கு நான் செய்யிற தப்பு தெரியவே இல்லை. ஆனா இப்போ..., நல்லா புரியுது...” சற்று நேரம் அவர்களுக்கு நடுவில் செல்லாமல் இருந்தவன், அவர்கள் தெளியும் வழியைக் காணோம் எனவே..., மெதுவாக குரல் கொடுத்தான்.

ராஜாவின் முன்னால் இப்படி செய்துவிட்டோமே..., என்ற சிறு சங்கடத்தோடு தாரிணி கணவனை விட்டு விலக, ராஜாவோ..., அவர் சங்கடத்தை கண்டுகொள்ளவே இல்லை.

“படவா..., என்னடா இது..., புதுசா மன்னிப்பு..., அது இதுன்னு..., நீ இங்கே வந்ததே எனக்குப் போதுண்டா..., எனக்கு கொள்ளி வைக்க ஒரு கை இருக்குன்னு புரிய வச்சுட்டியே..., அந்த சந்தோசம் போதுண்டா...” தாரிணி

நெகிழ,

“மன்னி..., என்ன இது...? நான் வந்தால் சந்தொஷப்படுவீங்கன்னு பாத்தா? இப்படி பேசறீங்க...? இப்படியெல்லாம் பேசினால் இனிமேல் உங்ககிட்டே நான் பேசவே மாட்டேன். இனிமேல்தான் நாம சந்தோஷமா இருக்கணும்னு நினைத்தால்..., இப்படி பேசறீங்க...?” மென்மையாக கடிந்து கொண்டான்.

“விடுப்பா..., இத்தனைநாள்..., இப்படியே அநாதை மாதிரி நாம ரெண்டுபேரும் இருந்துடுவோமோன்னு கேட்டுட்டே இருந்தா..., இது..., அவளோட சந்தோஷ வார்த்தை...” மனதளவில் அவர்கள் எவ்வளவு ஒடுங்கி இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தவனுக்கு..., தன்மேலேயே வெறுப்பாக வந்தது.

அதை மறைத்தவன்..., “உங்களை இப்படியே விட்டுடுவேனா? இனிமேல்தான் உங்களுக்கு வேலையே இருக்கு. பத்து பிள்ளை பெத்து, அத்தனையையும் உங்க கையில் கொடுத்து வளக்கச் சொல்லலாம்னு பார்த்தா..., உங்களுக்கு வயசாயிடுச்சு போலையே..., அப்போ சரி..., நான் வேற ஆள் பாத்துக்கறேன்...” முயன்று இயல்பாக பேசினான்.

“பத்து என்ன..., நூறு பெத்து கொடு..., ஒத்தை ஆளா வளக்கறேன்..., எனக்கென்ன..., உன்னைவிட இருபது வயசு தானே அதிகம்...” தானும் அவனோடு இணைந்தாள்.

“ஆமா..., ஆமா...” உடனே ஒத்துக் கொண்டவன், “நீங்க பாட்டி ஆகிட்டீங்கன்னு ஒத்துக்கோங்க...” அவளை வாரினான். அந்த இனிமை அவ்வளவு பிடித்தது.

குணா, ராஜாவை அணைக்க..., தானும் அவரை கட்டிக் கொண்டவன்..., “சாரிண்ணா...” அவர் காதில் உரைக்க, “அப்போ நானும் சொல்லணும்...” அவரும் சொல்ல...,

இறுகிய அவர்கள் அணைப்பு சொன்னது..., இனி எல்லாம் சுபமே என்று.

"ஹப்பா..., பாசமலர் சிவாஜி, சாவித்திரி கெட்டாங்க போங்க..., அதைவிட பிரம்மாதமா இங்கே ஒரு படம் ஓடுதே..." தன் அலைபேசியால் அவர்களது தருணத்தை அழகாக புகைப்படம் எடுத்த கார்த்திகா குரல் கொடுக்க, அனைவரது கவனமும் அவள் பக்கம் திரும்பியது.

"ப்பா..., நீ என்ன இம்புட்டு மேக்கப்போட இந்த நேரம் இங்கே வந்திருக்க? இப்படியேவா ரோட்டில் நடந்து வந்த? வழியில் இருக்கும் நாயெல்லாம் தற்கொலை செய்ய கிளம்பியிருக்குமே..." ராஜா அவளை கலாய்க்க...,

"அத்தான்..., வேண்டாம்..., சத்தியமா டென்ஷன் ஆயிடுவேன். இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசுனீங்களோ..., நேரா போய் உங்க ஆள்கிட்டே எதையாவது சொல்லி வத்தி வச்சிடுவேன் ஆமா..." அவள் மிரட்ட, நிச்சயம் மிரண்டுதான் போனான்.

அதை மறைத்தவன்..., "விடு கார்த்தி..., நாம என்ன அப்படியா பழகி இருக்கோம்...?" அவன் ஜகா வாங்க...,

"ஐய..., வழியுது..., பொண்டாட்டிக்கு எப்படி பயப்படுறார் பாருங்க..., அதையும் எப்படி சம்மாளிக்கறார் பாத்தீங்களா...?" அவள் கேலி செய்ய, அங்கே பாச மலர்கள் அரும்பியது.

"ஏய்..., வந்த உடனே அவன்கிட்டே என்னடி வம்பு..., உன்னை என்னைக்கு வரச் சொன்னா..., இன்னைக்கு வந்திருக்க...? முதல்ல நீ எடுத்த போட்டோ எல்லாத்தையும் எனக்கு அனுப்பு..., மிச்சத்தை பிறகு பேசிக்கலாம்..." தன் அலைபேசியை அவளிடம் கொடுத்தார்.

"அனுப்பறேன்..., அதுக்கு முன்னாடி..., மூணுபேரும் சேர்ந்து நில்லுங்க..., ஒரு போட்டோ எடுக்கறேன்..." அந்த தருணம்..., அழகான நிழல்படமாக அங்கே பதியப் பட்டது.

அனைவரும் சற்று நேரம் உரையாட..., தாரிணியும், குணாவும் எதையோ பேசுவதில் கவனமாக..., "ரொம்ப தேங்க்ஸ் அத்தான்..., சின்னத்தானும், அக்காவும் இவ்வளவு சந்தோஷமா..., நிம்மதியா இருந்து நான் பாத்தே இல்லை. இப்படி ஒரு நாள் எப்போ வரும்னு காத்துட்டு இருந்தேன். அது இன்னைக்கா இருக்கும்னு சத்தியமா நான் எதிர்பார்க்கலை. ரொம்ப தேங்க்ஸ்..." உள்ளார்ந்து உரைத்தாள்.

அவள் இங்கே வந்த நாள் முதல்..., இப்படி ஒரு நிகழ்வுக்காக காத்துக் கொண்டிருந்தவலாயிற்றே.

அவள் கேள்விக்கு, 'இதற்கு அவசியமே இல்லை கார்த்தி. அடி வாங்கியவனது வலி..., மற்றொரு அடி வாங்கியவனுக்கே தெரியும்...' மனதுக்குள் உரையாடியவன்..., அவர்களோடு சற்று நேரம் உரையாடிவிட்டுச் செல்ல..., நீண்ட மாதங்களுக்குப் பிறகு, மனம் நிம்மதியில் திளைத்தது.

இரவு உணவை முடித்தவன்..., 'கார்த்தி எதுக்கு வந்தான்னு கேக்கவே இல்லையே...' எண்ணியவன், "அம்மா..., நான் கொஞ்சம் கார்டன்ல இருந்துட்டு வரேன்..." கார்த்திகாவை பார்த்தவாறே உரைத்தவன் எழுந்து செல்ல, அவன் சொல்வதை புரிந்து கொண்டவள், உணவை முடித்துவிட்டு அவனைத் தேடிச் சென்றாள்.

"சாரி கார்த்தி..., என்கிட்டே எதையாவது சொல்ல வந்தியா...? நான் சீனியை இன்னும் பாக்கலை..." தன் குழப்பத்தால் அவர்கள் விஷயத்தை கண்டுகொள்ளாத குற்ற உணர்வு அவனிடம் எட்டிப் பார்த்தது.

"ம்ச்..., இப்போ நான் அதைப்பற்றி யோசிக்கிறதே இல்லை. அதான் நீங்க பாத்துக்கறேன்னு சொல்லிட்டீங்களே பிறகு என்ன...? வீட்டில் விசேஷம்..., தீபாவளி..., நீங்க பிஸின்னு எனக்குத் தெரியும்..., நிஹா எப்படி இருக்காங்க? என்னைக்கு டெலிவரி டேட்..." இலகுவாகவே பேசினாள்.

அவளது நம்பிக்கையைக் கண்டு வியந்தவனுக்கு..., 'இதை எப்படி செய்யப் போகிறோம்...?' என்ற பயம் வந்தது மட்டும் உண்மை.

"நெக்ஸ்ட் வீக் டேட் கொடுத்திருக்காங்க...." தன் பயத்தை மறைத்தவன், அவள் கேள்விக்கு பதில் கொடுத்தான்.

"தட்ஸ் கிரேட்..., இன்னும் ஒன் வீக்ல..., இந்த வீட்டில் ஒரு குழந்தையோட அழுகை சத்தம் கேக்கப் போகுது...." அவள் வார்த்தையை மெய்ப்பிப்பது போல், அந்த வீடே அதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தது.

ஆனால்..., அவர்களை நீண்ட நாள் காக்க வைக்காமல்..., இரண்டே நாளில், துளசியின் டெலிபோன் அழைப்பு அவனை சுகமாய் தாக்கியது.

"மாப்ள..., நிஹாவை ஹாஸ்பிட்டல்ல சேத்திருக்கேன்..., கொஞ்சம் உடனே வாங்க..." படுக்கையில் இருக்கையிலேயே வந்த அழைப்பால், அவன் தூக்கம் பறந்தே போனது.

அடுத்த நொடி..., "அம்மா..., மன்னி..." வீடு அதிர அழைத்தவன், அவர்களோடு மருத்துவமனையில் ஆஜராகி இருந்தான்.

நிஹாவின் சத்தம்..., அறைக்குள் இருந்து ஒலிக்க..., ராஜாவுக்கோ, அடிவாயிற்றை பயம் கவ்விக் கொண்டது.

‘என்ன குழந்தையாக இருக்கும்...?’ திடும் திடுமென அதிரும் மனதை அடக்கவே அவன் சிரமப்பாட்டால்..., நிஹாவின் அழுகை..., இதயத்தை பிளந்தது.

அவளை உடனே காணவேண்டும் என ஒரு மனம் தவித்தால், அவள் முகம் காணும் தைரியமே எழவில்லை. வராண்டாவில் நிற்கவோ, அமரவோ முடியாத அவஸ்த்தை.
உள்ளே போய் அவள் கரத்தை கெட்டியாக பற்றிக்கொள்ள மனம் போராட, அதை தைரியமாக செய்ய முடியாத தன் நிலையை அறவே வெறுத்தான்.

“சம்பந்தியம்மா..., நிஹாவுக்கு எப்போ வலி வந்தது? ஹாஸ்பிட்டலுக்கு எப்போ வந்தீங்க? இன்னும் நாள் இருக்கே..., டாக்டர் என்ன சொன்னாங்க..?” சுஜா துளசியிடம் வினவ,

“நிஹாவுக்கு விடியக்காலம் வலி வந்துடுச்சுபோல..., அவ என்கிட்டே சொல்லவே இல்லை. இன்னும் நாள் இருக்கேன்னு கொஞ்சம் அசால்ட்டா இருந்திருக்கா. கடைசியில் ரொம்ப முடியலன்னு சொன்ன உடனேதான் என்னை கூப்ட்டா. இங்கே வந்தால்..., பிரசவ வலிதான்னு சொல்லிட்டாங்க. எனக்கு ஒண்ணும் ஓடலை, அதான்..., உடனே மாப்பிள்ளைக்கு கூப்ட்டேன்....” படபடப்பாக உரைத்தார்.

ராஜாவின் மொத்த குடும்பமும் அங்கே குழுமி இருக்க..., நிஹாவுக்கு விஐபி அறையில் பிரசவம் நடக்க ஏற்பாடு செய்யப் பட்டது. அந்த தளத்தில் கூட்டம் சுத்தமாக இருக்கவில்லை..., இவர்களைத் தவிர.

நேரம் செல்லச் செல்ல..., நிஹாவின் குரல் ஓங்கி ஒலிக்க..., கூடவே..., “சார்..., இங்கே பேஷண்டோட ஹஸ்பன்ட் யாரு...? டெலிவரிக்கு கோஆப்பரேட் பண்ணவே மாட்டேங்கறாங்க..., உங்களை பார்த்தே ஆகணும்னு அடம்

பண்றாங்க...” பரபரப்பாக ஓடி வந்தாள் ஒரு செவிலி.

“ராஜா..., போ...” சுஜா உரைக்க..., அவள் அருகிலேயே இருக்க மலையளவு ஆசை இருந்தாலும்..., குழந்தையை எதிர்கொள்ளும் தைரியம் அவனுக்கு சுத்தமாக இருக்கவில்லை.

தன் தயக்கத்தை உடைத்து..., அவளோடு உள்ளே செல்ல..., அங்கே கண்ட காட்சியில்..., அவனுக்கு தேகம் மொத்தமும் படபடத்தது.

“ராஜ்...” அவன் உள்ளே வரவே..., உச்ச வலியிலும் அவள் முனக..., நீட்டிய அவள் கையை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

“டா..க்..ட..ர் ப்ளீ...ஸ்...” தன் கீழுதட்டை கடித்து..., அவர்களை வெளியே செல்லச் சொல்ல, “நோ..., போகாதீங்க...” அந்த சூழலை தனியாக எதிர்கொள்ளும் தைரியம் அவனுக்கு இருக்கவில்லை.

“ராஜா..., ஜஸ்ட் டூ மினிட்ஸ்..., டெல்ஹெர்...” அவன் தோளை தட்டிவிட்டு வெளியேறினார் ஜெயா.

“ஆ..., ஆ...” சன்னமாக குரலெழுப்பி அவன் கையை அழுத்த,

“ஹாசினி..., எதுவா இருந்தாலும் பிறகு பேசிக்கலாம்..., இப்போ...” வியர்வையில் குளித்திருந்த அவள் முகத்தை தன் கரத்தால் துடைத்தான்.

“ஏன் ராஜ்..., ஏன் எ..ன் தேவை..களுக்கு..., என் தவிப்..புக்கு என்னுடன் இரு..க்க மாட்டேங்...கறீங்க? ஆ.., ஆ..., ரெண்டு நாள்..., உங்களுக்குப் புரியலையா...? ஆ.., ஆ..., இல்ல..., அன்னைக்கு..., கடைசியா..., அப்படி

காயப்படுத்திட்டு..., ம்.. ஆ..., உங்க தேவைக்கு ஒரு பொண்ணு வேணும்..., கல்யாணம் பண்ணிக்க பொண்ணு வேணும்..., ஆனா..., பெண் குழந்தை வேண்டாமா...?

"உங்களால் எப்படி அப்படிச் சொல்ல முடிந்தது...? இப்போ நான் இந்த குழந்தையை பெத்துக்கவா..., இல்ல வேண்டாமா...? ஆ..." தன் கர்ப்பவாசலை மோதி.., வெளியேறத் துடிக்கும் தன் குழந்தையை எவ்வளவு நேரம்தான் அவள் தக்க வைக்க...? கடைவிழியோரம் கண்ணீர் வழிந்தது.

பெண் குழந்தையைப் பற்றி அவள் வீசிய வார்த்தைகள் அவளுக்கு மறந்து போயிருக்க..., இதயத்தில் இடியாக இறங்கிய அதன் வலியை அனுபவிக்கும் அவனால் எப்படி அதை மறக்க முடியும்?

தான் அவளது வளைகாப்பு அன்று பேசிய வார்த்தைகள், அவளை இவ்வளவு காயப்படுத்தியிருக்கும் என அவன் கனவிலும் நினைக்கவில்லையே. அதற்காக..., பிரசவத்துக்கே ஒத்துழைக்க மறுக்கும் அவள் செய்கை..., 'நான் எதையும் சரியாகவே செய்ய மாட்டேனா? என் குழப்பத்தில்..., அவளைக் காணாமல்...' அவனுக்கு துக்கம் பொங்கியது.

"ஹையோ..., ஹாசினி..., இல்லம்மா..., நம்ம குழந்தையை எப்படி என்னால் வெறுக்க முடியும்...? அதற்காக..., வேண்டாம்மா..., இந்த கஷ்டம் வேண்டாம்.., நம்ம குழந்தை எதுவாக இருந்தாலும் எனக்கு சந்தோஷம்தான்..." உரைத்தவன்..., அவள் முகத்தில் ஆவேசமாக முத்தமிட, அடுத்த நிமிடம்..., அவளது உச்ச அலறல் வெளிப்பட்டது.

"டாக்டர்..." கூடவே ராஜாவின் குரலும் ஒலிக்க, ஜெயா உள்ளே வருகையிலேயே, ராஜாவின் குட்டி தேவதை இந்த உலகுக்கு வந்திருந்தாள்.

குழந்தை பிறந்துவிட்டது..., எனத் தெரிந்த அடுத்த நொடி..., அவன் இதயம் வெளியே விழுந்துவிடும் வேகத்தில் துடிக்க..., கண்களின் நீர் நிறைய, ஜெயாவை ஏறிட்டான்.

"ராஜா..., பொண்ணு பொறந்திருக்கா..., வாழ்த்துக்கள்..." அவ்வளவுதான்..., ஒரு நொடியில், அவன் உலகம் தன் இயக்கத்தை நிறுத்திய பிரம்மை.

"தே..ங்..க்..ஸ்... டாக்டர்..." இயந்திரகதியில் உரைத்தவன், நிஹாசினியின் நெற்றியில் அழுந்த முத்தமிட, அவள் நெற்றியில் விழுந்து சிதறியது இரண்டு துளி கண்ணீர்.

பகுதி - 33.

தனக்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறது எனக் கேட்ட ராஜாவுக்கு, உலகம் தட்டாமலையாக சுற்றும் உணர்வு.

"சார்..., நீங்க கொஞ்சம் வெளியே இருங்க..." செவிலி உரைக்க, உள்ளே என்ன செய்தோம்..., எப்படிச் செய்தோம் எனத் தெரியாமல்..., அறைக்குள் இருந்து தோய்ந்துபோய் வெளியேறினான்.

"ராஜா..., வாழ்த்துக்கள்..., ரொம்ப சந்தோஷண்டா..., கன்கிடாட்ஸ்..." விதம் விதமான வாழ்த்துக்களுக்கு அவனிடம் எந்த ஒரு எதிர்வினையும் இருக்கவில்லை.

அவனுக்கோ..., சட்டென..., இடதுகை தோள்ப்பட்டையில் துவங்கிய வலி..., இதயத்தில் முடிய..., குப்பென வியர்வையில் குளித்திருந்தான். நொடியில் தனக்கு நேர்வது என்னவென்று அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

அதே நேரம்..., செவிலி..., வெண்ணிற துணியில், குட்டி

தேவதையை சுற்றி, "பேபி..." அவன் முன்னால் வந்து நிற்க, குழந்தையைக் காண முடியாமல், கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது.

இமை சிமிட்டி..., தன் வலி மறைத்து..., குழந்தையைப் பார்க்க..., இளம் ரோஜா வர்ணத்தில், சிப்பி விழி மூடி.., புது உலகுக்கு வந்த பதட்டத்தில், பயத்தில்..., வீறிட்டுக் கொண்டிருந்தாள்.

"குட்டிம்மா..." தகப்பனின் அழைப்பு புரிந்ததோ என்னவோ..., ஒரு நொடி அழுகையை நிறுத்தியவள், தன் வேலையைத் தொடர,

"அம்மா..." தாயை அழைக்க..., குழந்தையை கைகளில் வாங்கிக் கொண்டார் சுஜா.

"குழந்தையை பாத்துக்கங்கம்மா..., நீங்கதான்..., இவளுக்கு எல்லாம்..." இதற்குமேல் அங்கே ஒரு நொடி நின்றாலும்.., மயங்கி சரிந்துவிடுவோம் எனப் புரிய..., வேகமாக அங்கிருந்து அகன்றான்.

"ராஜா..., குழந்தையை தூக்கிக்க..." சுஜா அழைக்க, "ஸ்வீட் வாங்கிட்டு வரேம்மா..." வார்த்தையை உதிர்த்துவிட்டு, கிட்டத்தட்ட ஓடினான்.

அதே நேரம்..., அவன் எதிரில் விநாயக் வர..., "ராஜா..." அவனைத் தேக்க..., "வாடா..." அவனையும் இழுத்துக்கொண்டு லிப்ட்டுக்குள் புகுந்தான்.

"டேய்..., மச்சான்..., என்ன இது...? என்னடா பண்ணுது...?" அவன் நிலைமாறுபாட்டை சட்டென அவனால் உணர முடிந்தது.

“என்னை கார்டியாலஜி ப்ளாக்குக்கு கூட்டி போ...” அவன் முனக, அடுத்த நிமிடம்..., கார்டியாலஜிஸ்ட் கண்ணனின் அறிவுரைப்படி, அவசரசிகிச்சைப் பிரிவில் ராஜா அனுமதிக்கப் பட்டான்.

“மைல்ட் அட்டாக்...” கண்ணன் உரைக்க, விநாயக் செயல் இழந்து போனான்.

குழந்தை பிறந்திருக்கும் இந்த நேரத்தில்..., இந்த விஷயத்தை அவனது குடும்பத்தினரிடம் சொல்ல முடியாத நிலை..., நண்பனின் அட்டாக்.., ஐசியூ.., விநாயக்கால் அடுத்து என்ன செய்வது எனப் புரியவே இல்லை.

“டாக்டர்..., எதுவும் பெருசா இல்லையே...? எப்போ கண் முழிப்பான்..? அவங்க வீட்டுக்குச் சொல்லணும்...” நேரம் சென்றுகொண்டே இருக்க..., நண்பனைத் தேடும் குடும்பத்துக்கு அவன் என்ன பதில் சொல்வது?

“மைல்ட் அட்டாக்தான்..., இப்போதைக்கு இவ்வளவுதான் சொல்ல முடியும். மீதியை டெஸ்ட் எல்லாம் எடுத்த பிறகுதான் சொல்ல முடியும்...” அவர் சென்றுவிட்டார்.

“அவனுக்கு மயக்கம் எப்போ தெளியும்...?” அவரை விரட்டிச் சென்றான்.

“நாலுமணி நேரமாகலாம்.., ஐ திங்க் ஹீ நீட் சம் ரெஸ்ட்...” அவன் தோளை தட்டியவர் விரைய..., அங்கிருந்த இருக்கையில் தோய்ந்துபோய் அமர்ந்தான்.

ஏற்கனவே இரண்டு முறை அங்கே சென்றுவிட்டான்..., சுஜாவிடமாவது சொல்லி விடலாமா என அவன் சந்தர்ப்பம் பார்க்க..., ராஜாவின் குழந்தை வந்த சந்தோஷத்தில், தானும் ஒரு சிறுமியாக குதூகலிக்கும் அவரது சந்தோஷத்தை கெடுக்க

முடியாமல் திரும்பிவிட்டான்.

"ஸ்வீட் வாங்கிட்டு வரேன்னு போனான்..., இன்னும் காணோம்..., ஆபீஸ்ல எல்லாருக்கும் சொல்லப் போய்ட்டான் போல..., அப்படியே கடைக்கும் போயிட்டானா என்ன...? இவ்வளவு நேரமாகுது..." சுஜாவும், குடுபத்தவரும் இவ்வாறே பேச..., அப்படியே திரும்பி விட்டான்.

அலுவலக வரவு செலவு கணக்கை விநாயக்கே பார்ப்பதால்..., உடனடியாக பெரிய தொகையை டெப்பாசிட் கட்ட..., ஈசிஜி..., இத்தியாதி..., என அனைத்து பரிசோதனைகளும் அடுத்தடுத்து நடந்தது.

அதற்குள்ளாகவே இரவு ஆகியிருக்க..., ராஜாவை அனைவரும் தேடத் துவங்கி விட்டார்கள். 'அன்னைக்கே பெண் குழந்தை வேண்டாம்னு சொன்னானே..., ஒரு வேளை...' சுஜா தன் எண்ணத்தை அப்படியே நிறுத்திக் கொண்டார்.

பெண்கள் தங்கள் மனதில் இருப்பதை புலம்பித் தீர்க்க..., தனாவும், குணாவும், ஆத்திரத்தை தங்கள் மனைவியிடமே காட்டினார்கள்.

ராஜாவின் அலைபேசி வேறு சுஜாவிடம் இருக்க..., "இதை ஏன் நீ அவனிடம் கொடுக்கவில்லை..." ஆயிரம் முறையாக தனா கோபம் காட்டிவிட்டார்.

அந்த அலைபேசி அவரிடம் இருக்கப்போய்தான்..., எதேச்சையாக அவனுக்கு அழைத்த விநாயக்கின் அழைப்பை அவர் ஏற்று, தாங்கள் மருத்துவமனையில் இருப்பதை அவனுக்கு உரைக்க முடிந்தது.

அவன் வந்ததால் மட்டுமே..., ராஜா இப்பொழுது காப்பாற்றப் பட்டிருக்கிறான் என்பது அவர்களுக்கு எங்கே தெரியும்?

ராஜா கண் விழித்த உடனேயே..., படுக்கையில் இருந்து இறங்கி ஓடத்தான் முயன்றான். அங்கே அனைவரும் தன்னைத் தேடுவார்கள் என்பது அவனுக்குத் தெரியுமே...

கண்ணன் அவன் படுக்கையை விட்டு இறங்கவே கூடாது என உரைக்க..., அவன் விநாயக்கை காண விரும்பினான்.

'இவன் வேற அங்கே என்ன சொல்லித் தொலைத்தானோ...' எண்ணுகையிலேயே, அப்படி அவன் சொல்லியிருந்தால்..., இந்நேரம் அனைவரும் இங்கே இருந்திருப்பார்கள் என்பது புரிய, சற்று நிம்மதியானான்.

'இங்கே எவ்வளவு நேரமாக இருக்கிறேன்...? இப்பொழுது டைம் என்ன இருக்கும்...?' உள்ளுக்குள் யோசனை ஓடியது.

"டாக்டர்..., விநாயக்..." அவன் கண்கள் சுழல,

"இங்க தாண்டா இருக்கேன்..." ராஜாவின் ட்ரிப்ஸ் ஏறும் கரத்தை மெதுவாக வருடினான்.

"அம்மா..., ஹாசினி..." நிச்சயம் நிஹாசினி இப்பொழுது தன்னைத் தேடுவாள் என அவனுக்குத் தெரியுமே..., இரண்டு நாள் அவளை காணச் செல்லவில்லை என்று குழந்தையின் பிறப்பையே தவிர்க்கப் பார்த்தவள்..., இப்பொழுது அவன் அவளின் அருகில் இல்லையென்றால்..., என்னவெல்லாம் கற்பனை செய்து கொள்கிறாளோ..., தவிப்பாய் இருந்தது.

குழந்தை..., நினைக்கிலேயே நெஞ்சம் விம்மியது. அவள் சொன்னதைப்போல் பெண் குழந்தை..., அவள் எதிர்காலம்..., வளர்ப்பு..., நினைக்கையிலேயே நெஞ்சம் நடுங்கியது.

குழந்தையை கைகளால் அள்ளவோ..., கொஞ்சவோ முடியுமா?

அந்த தைரியம் தனக்கு இருக்கிறதா? கண்கள் கலங்கும் உணர்வு. முயன்று அடக்க, மீண்டும் இதயம் வலிக்குமோ என்ற உணர்வில் அதையும் கட்டுப்படுத்த வேண்டி இருந்தது.

அவன் யோசனையை உணர்ந்தவர்..., "மிஸ்டர் ராஜா..., உங்களுக்கு இதயத்தில் வியாதியே இல்லை. எல்லாம் மனசுலதான் இருக்கு. கொஞ்ச நாள் எதையும் யோசிக்காதீங்க..., மனசை பிரீயா வச்சுக்கோங்க...,

"பொண்ணுங்களை பாத்திருக்கீங்களா..., எதுவா இருந்தாலும் பட்டுன்னு பேசிடுவாங்க. இல்லையா..., அழுது ஆறுதல் பட்டுப்பாங்க. இந்த ஆம்பளைங்கதான்..., எல்லாத்தையும் மனசுக்குள்ளேயே போட்டு அழுத்தி, டிப்ரஷன்..., ஹார்ட்அட்டாக்...,

"இப்படி வியாதியில் கொண்டுபோய் நிப்பாட்டுறாங்க. சில நேரம், அழணும்னு தோணுதா..., அழுதுடணும்..., என்ன பிரஸ்டீஜ் பாத்தால், தனியா அழுங்க..., கத்தணுமா..., கத்திடுங்க..., கோபப்படணுமா..., செஞ்சுடுங்க. அப்படிச் செய்தாலே உங்க வியாதி ஓடியே போய்டும்.

"நம்ம ஊர்ல பொண்ணுங்களுக்கு ஹார்ட்அட்டாக் வரது ரொம்ப கம்மி. ஏன்..? ஏன்னா..., அவங்க எதையுமே வெளியே கொட்டிடுவாங்க..., மனசு தெளிவா இருக்கும். சோ..., இனிமேல் கொஞ்சம் வெளிப்படையா இருங்க. இன்னும் ரெண்டு நாளில் நீங்க வீட்டுக்கு போய்டலாம்...

"அப்படியே..., நான் தர மாத்திரையை தொடர்ந்து சாப்பிடுங்க. யூ வில் பீ பெர்பெக்ட்லி ஆல்ரைட்..., இப்போ உங்க ப்ரண்டை அனுப்பறேன். கொஞ்சமா பேசிட்டு ரெஸ்ட் எடுங்க..." அவனை பரிசோதித்தவர், இரவு ரவுன்சில் இருந்தார்.

"நோ டாக்டர்..., எனக்கு இப்போவே போகணும். என்னை

எல்லாரும் தேடுவாங்க. இந்த விஷயம் தெரிந்தால் ரொம்ப வருத்தப்படுவாங்க சோ..., ப்ளீஸ்..., என்னை டிச்சார்ஜ் பண்ணிடுங்க..." கிட்டத்தட்ட கெஞ்சினான்.

"என்ன விளையாடுறீங்களா? மைல்ட் அட்டாக்ன்னு சொல்றேன்..., ஈசியா டிச்சார்ஜ் பண்ணச் சொல்றீங்க..., பிபோர் டூ டேஸ்..., நோ..." கோபம் காட்டினார்.

"ப்ளீஸ் டாக்ட்டர்..., ட்ரை டு அண்டர்ஸ்டான்ட்..., நான் டெய்லி வந்து செக்கப் பண்ணிக்கறேன்..., ஆனா..., இப்போ என்னை விட்டுடுங்க..." படுக்கையில் இருந்து எழ முயன்றான்.

அவன் பிடிவாதம் கண்டவர்..., "ஓகே..., ஒரு டூ அவர்ஸ் மட்டும் இருங்க.." அவனை சமாதானப்படுத்தியவர், "சிஸ்டர்..., அந்த இன்ஜெக்ஷனை கொடுங்க..." கேட்டவர்..., அந்த மருந்தை செலுத்திவிட்டு, சற்று நேரம் உரையாட, அவனோ.., அப்படியே உறங்கிப் போனான்.

"சிஸ்டர்..., கேர்புல்லா பாத்துக்கோங்க..., இவருக்கு இப்போ ரெஸ்ட் மஸ்ட்.." உரைத்தவர் வெளியேறினார்.

"டாக்டர்..." விநாயக் அவர் பின்னால் செல்ல...

"கொஞ்சம் கூட புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பண்றார். இப்போதான் தூங்க மெடிசின் கொடுத்திருக்கேன். நாளைக்கு காலையில்தான் எழுந்திரிப்பார்..., அவர் கண்டிப்பா ரெண்டு நாள் இங்கே இருந்தே ஆகணும். அவங்க வீட்டுக்கு இன்பாம் பண்ணுங்க..." தன் 'கோட்'டை கழட்டியவாறே உரைத்தார்.

"டாக்டர்..., அவனுக்கு இன்னைக்கு காலையில்தான் குழந்தை பொறந்திருக்கு. இந்த நேரம்..., அவனுக்கு இப்படின்னா..., செண்டிமெண்டா.., குழந்தையால்தான்

இப்படி ஆச்சுன்னு சொல்லிடுவாங்க..., அதான்..., எப்படியும் அவங்க இன்னும் ரெண்டு நாள் இருப்பாங்க..., அதுவரைக்கும் அவனை உங்க கண்காணிப்பில் இருக்குற மாதிரி பாத்துக்கலாம். ஆனா.., இப்போ அவன் அங்கே இருந்தே ஆகணும்..." நிலைமை தீவிரமடைவதை கண்கூடாக கண்டுகொண்டு இருக்கிறானே.

"ஓ..., தென்..., மார்னிங் ஜஸ்ட் டூ அவர்ஸ் வேண்ணா அவர் வெளியே போயிட்டு வரட்டும். மற்ற நேரம் அவர் இங்கே இருந்தே ஆகணும்..." அரை மனதாக சம்மதித்தார்.

இரவு முழுக்க..., அங்கே வராண்டாவிலேயே காவல் இருந்தான். மறந்தும் நிஹாசினி இருக்கும் அறை பக்கம் செல்லவில்லை. மாலையில் சென்றபொழுதே அவனை துளைத்து எடுத்து விட்டார்கள்.

இரவிலும் அவன் வரவில்லை என்றால்..., தன் நிலை நிச்சயம் கவலைக்கிடமாகும் என்பது அவனுக்கு திண்ணமே. ஆனாலும்.., மாரடைப்பு வரும் அளவுக்கு அவனுக்கு என்ன பிரச்சனை...? யோசிக்க..., அவனுக்கு எதுவும் புரியவே இல்லை.

மறுநாள் காலை பத்து மணிவரைக்கும் அங்கே இருந்தவன்..., கண்ணன் வரவே..., அவரிடம் சொல்லிவிட்டு..., அங்கிருந்து விரைந்தான். கையில் இருந்த ட்ரிப்ஸ் போடும் ஊசியை நர்ஸ் சொல்லியும் கேளாமல் பிய்த்து எறிந்துவிட்டே சென்றான்.

அங்கே இருப்பவர்கள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்லப் போகிறோம் என அவனுக்குத் தெரியவில்லை. ஆனால்..., போய்தான் ஆக வேண்டும்..., சந்தித்துதான் தீர வேண்டும்..., முடிந்த அளவு தன்னை இயல்பாக்கிக் கொண்டான்.

“டேய் மச்சான்..., ப்ளீஸ்டா..., கொஞ்சம் ரெஸ்ட் எடுடா..., நான் எதையாவது சொல்லி சம்மாளிக்கறேண்டா...” விநாயகின் கெஞ்சலை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“விநாயக்..., எனக்கு ப்ராமிஸ் பண்ணு..., இதை யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்னு சொல்லு...” தன் கையை அவன் முன்னால் நீட்ட..., வேறு வழியின்றி சத்தியம் செய்தான்.

“நீ போ..., என்னோட உன்னையும் பார்த்தால்..., தேவையில்லாமல் கேள்வி கேப்பாங்க...” அவனை அனுப்ப முயல,

“இல்ல..., நான் உன்னோடவேதான் இருப்பேன்..., இன்னும் ரெண்டுமணி நேரத்தில் நாம அங்கே போகணும்..., நீ அதுக்கு சம்மதிக்கலைன்னா..., நான் இதை அவர்களிடம் சொல்லி விடுவேன்...” விநாயக்கின் தைரியம்.., முதல் முறையாக வியந்தான்.

“சரி வா...” “ராஜா..., ப்ளீஸ்..., உணர்ச்சிவசப்பட்டு எதையும் இழுத்து வைக்காதே...” கவலையாக உரைத்துவிட்டு அவனை பின்தொடர்ந்தான்.

அவர்கள் அறையை நெருங்கும்பொழுதே..., குழந்தையின் அழுகுரல் கேட்க, அவசரமாக உள்ளே நுழைந்தான். சுஜாவின் கையில் குழந்தை இருக்க, நிஹாசினி படுக்கையில் சாய்வாக அமர்ந்திருக்க, துளசி அங்கிருந்த இன்னொரு கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தார்.

“அம்மா...” அவன் குரலில்..., வேகமாக அவனை நிமிர்ந்து பார்த்த நிஹாசினி பட்டென முகத்தை திருப்பிக் கொள்ள, “ராஜா..., எங்கடா போயிருந்த...? நேத்து போனவன்...,

இப்போ வர..., உனக்கு ரொம்ப செல்லம் கொடுத்து கெடுத்து வச்சிருக்கேண்டா..., உங்க அப்பா என்னை திட்டுவதில் தப்பே இல்லை....

"உன் பொண்ணு என்னன்னா..., நேத்து ஆரம்பிச்ச அழுகையை இன்னும் நிறுத்தலை..., தாய்ப்பால் கூட குடிக்க மாட்டேன்னு ஒரே அடம்..., இங்கே நாலு பொம்பளைங்க அல்லாடுறோம்..., குழந்தையை முழுசா பாக்கக் கூட செய்யாமல்..." இன்னும் என்னவெல்லாம் சொல்லியிருப்பாரோ..., துளசியின் அசைவு பட்டென அவர் வாயை அடைத்தது.

"ஆண்ட்டி..., நம்ம ராஜா இப்படிச் செய்யிற ஆளா...? இப்படி ஒரு சூழலில் அவன் வரலன்னா..., அதுக்கு ஏதாவது பெரிய காரணம் இருக்கும்னு உங்களுக்கு தெரிய வேண்டாமா...?" அவன் நிலை புரியாமல் பேசுகிறாரே என்ற கவலை விநாயக்குக்கு.

அதைவிட..., குழந்தை பிறந்திருக்கும் இந்த சூழலில் அவனுக்கு இப்படி ஆகியிருக்கிறது என்றால்..., அவன் குடும்பத்துக்குள் எதுவோ சரியில்லை என்றுதானே அர்த்தம். அதுவும் கடந்த சில மாதங்களாக நண்பனின் முகத்தில் நிம்மதி என்பதே இல்லை என்னும்போது..., அவனும் என்னதான் செய்ய?

"வாடாப்பா..., நேத்து உன்கிட்டே கேட்டதுக்கு இவன் எங்கே இருக்கான்னே தெரியாதுன்னு அப்படி சாதிச்ச..., இப்போ என்னன்னா இவனோட வந்து நிக்கற...?" அவனிடம் சாட, சட்டென அடங்கிப் போனான்.

அவன் அமைதியை கண்டுகொள்ளாதவர், "அப்படி என்னடா பொல்லாத ரீசன்..." அவனிடம் சாட...,

"விடுங்க சம்பந்தியம்மா..., அதான் மாப்பிளை வந்துட்டாரே..." துளசி எழுந்து அமர்ந்தவர் உரைக்க, அவனை ஒரு முறைப்போடு, கப்பென அடங்கிப் போனார்.

நிஹாசினிக்கோ..., உள்ளுக்குள் நடுக்கம். 'இந்த நிலைமையில் என்னை விட்டு போவது என்றால்...?' மனம் அடித்துக் கொள்ள, இறுக்கமாகவே அமர்ந்து கொண்டாள்.

குழந்தையோ..., இன்னும் வீறிட்டுக் கொண்டிருக்க..., "சம்பந்தியம்மா..., இன்னுமா குழந்தை அழுகையை நிறுத்தலை..., அப்படி என்னதான் இன்செக்கியூர் பீலோ என்னமோ போங்க..." துளசி சலித்துக் கொள்ள, அதைக் கேட்ட ராஜாவுக்கு, தாய் கண்டித்ததை விட, இந்த வார்த்தைகள் மட்டுமே ஆழமாய் தாக்கியது.

"இவளுக்கு அம்மா வயித்துக்குள்ளேயே இருக்கணும் போல..., அதான்..." சுஜா குழந்தையைக் கொஞ்ச, ராஜாவின் பார்வை மனைவியிடம் தாவியது.

திருப்பிய தன் முகத்தை இன்னுமே அவள் நேராக்காமல் அமர்ந்திருக்க..., "நிஹா..., குழந்தைக்கு பீட் பண்ணு..., அதான் ராஜா வந்துட்டானே..., நாங்க ரெண்டுபேரும் வீட்டுக்கு போயிட்டு வரோம்..." குழந்தையை அவள் கையில் கொடுத்தார்.

விநாயக் அறையில் இருந்து வெளியேற..., சுஜாவும் அவன் பின்னால் சென்றார். ராஜா ஏன் வரவில்லை என்பதைப் பற்றி அவனிடம் விசாரிக்க வேண்டி இருக்கிறதே. தாயின் அடுத்த செய்கையை உணர்ந்த ராஜா..., தானும் அவர்கள் பின்னால் செல்ல முயல, அவர் பார்த்த பார்வையில் அப்படியே நின்றுவிட்டான்.

பக்குவமாக குழந்தையை வாங்கியவள்..., "அம்மா...,

குழந்தை வாயே வைக்க மாட்டேங்கறா..., ரொம்ப அடம் பண்றா..." பரிதாபமாக உரைக்க,

"ம்..., அம்மா குணம்தானே அவகிட்டேயும் இருக்கும்.." அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் முனகியவர்..., "பொண்ணுன்னா எல்லாத்தையும் சம்மாளிக்கத் தெரியணும்..." அவளால்தான் ராஜா இவ்வாறு நடந்து கொள்கிறான் என்ற கோபம் அவருக்கு.

அவர் செல்லவே..., தயக்கமாக அவள் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தவன்..., "சாரி ஹாசினி..." அவன் துவங்க..., குழந்தை சற்று அழுகையை நிறுத்துவதை அதிர்வாய் உள்வாங்கியவள்...,

"இப்போ உங்ககிட்டே நான் எதையும் கேக்கலையே..." அவனுக்கு முதுகு காட்டி அமர்ந்தவள்..., குழந்தைக்கு பசியாற்ற முயன்றாள்.

"நீ கேக்கலைன்னாலும் நான் சொல்லணுமே..., அதான்..." என்ன சொல்வது என்ற தயக்கம் அவனுக்கு என்றால்..., அவன் பேசத் துவங்கிய பிறகு.., தன் அழுகையை நிறுத்திய அவன் குழந்தை..., சமத்தாக பசியாறத் துவங்கினாள்.

நேற்று காலை முதல்..., இன்று காலை வரைக்கும்..., பசியாறும் வேளையில் கூட..., ஒரு நிமிடம் பசியாற முயல்பவள், அடுத்த நிமிடம்..., அழுகையைத் தொடர்ந்ததையும்..., இப்பொழுது.., ராஜாவின் குரலைக் கேட்ட பிறகு..., சமத்தாக பசியாறுவதையும் பார்த்தவளுக்கு...,

'உனக்கும் உங்க அப்பா எல்லாத்துக்கும் கூட இருக்கணுமா...?' மனதுக்குள் கேட்டவள், குழந்தையின் தலையை பாசமாக வருடினாள். மனதுக்குள் நினைப்பதை வெளியே

கொட்டியிருந்தால்..., ராஜா நிம்மதியடைந்து இருப்பானோ?

அதே நேரம்..., இதைப் புரிந்து கொள்ளாமல்..., இவ்வளவு நேரமாக காணாமல் போயிருந்த அவன்மேல் ஆத்திரம் வராமல் என்ன செய்யும்?

"நேத்து காலையில் போனவர்..., குழந்தை பெத்தவ எப்படி இருக்கா...? என்ன ஆனா...? ஏதாவது தோணிச்சா? சரி..., என்னை விடுங்க..., இதோ பெத்து வச்சிருக்கேனே..., இது உங்க ரத்தம் தானே..., குழந்தையை கையில் கூட வாங்கலையாம்...,

"கையில் வாங்காதது என்ன..., முழுசா..., ஆசையா பாக்கக் கூட இல்லையாம்..., இவ அப்படி என்ன பாவம் பண்ணா...? இவளுக்கும் ஏன் இந்த தண்டனை..., என்னைதான் எதிர்பார்க்க வைத்து, ஏங்க வைத்து ஏமாத்துனீங்க..., இப்போ..., இவளையும்..." குரல் கலங்கி..., அழுதே விட்டாள்.

பெற்ற குழந்தையை..., கணவன் கையில் தாங்கவில்லை என்றால் எந்த மனைவிக்குத்தான் வருத்தம் வராது?

அவள் பேசப் பேச..., 'நான் உன்னை ஏமாற்றுவதா...?' தனக்குள் வெடிக்கும் துன்பத்தை மனதுக்குள் அமிழ்த்தியவன், அவள் அழவே..., தான் அமர்ந்திருந்த இருக்கையில் இருந்து எழுந்தவன்..., கட்டிலைச் சுற்றிக்கொண்டு அவள் அருகே விரைந்தான்.

"இல்லம்மா..., நீ நினைக்கற மாதிரி எல்லாம் எதுவும் இல்லை. பிறந்த குழந்தையை எல்லாம் தூக்கி எனக்கு பழக்கம் இல்லை அதான்..." அவள் முகம் நோக்கினாலும்..., மனைவியின் மார்பில் முகம் பதித்திருக்கும் குழந்தையின் தோற்றம்..., அப்படியே அள்ளிக் கொள்ளத் தூண்டியது.

முயன்று தன் பார்வையை அவள் முகத்தில் நிலைக்க

விட்டவன்..., பரிதவிப்பாய் அவள் முகம் நோக்கினான். அவளுக்கோ..., தன் நெற்றியில் விழுந்த அந்த இரு துளிகளின் தாக்கத்தில் இருந்து மனம் வெளியேற முடியாமல் தவிக்க..., அவன் தோற்றத்தில் இருந்த சிறு மாறுதலும் பார்வைக்குத் தப்பவில்லை.

'என்ன ஆயிற்று..., ஏன் களைப்பாய் தெரிகிறார்...?' மனம் பரிதவிப்பதை வார்த்தையில் வெளியிட அவள் ஈகோ இடம் கொடுக்கவில்லையா? இல்லையென்றால் அவன்மேல் இருந்த கோபமா? எதுவோ அவளைத் தடுத்தது.

அதற்குள் குழந்தையை அடுத்த பக்கத்துக்கு மாற்ற..., அவசரமாக தன் விழிகளைத் திருப்பிக் கொண்டான். அப்படியே அவள் அருகில் அமர்ந்து..., குழந்தையின் வெண்பஞ்சு பாதங்களை பற்றி, அதில் இதழ் பதிக்க அவனுக்கு எழும் வேகத்தை..., எது தடுக்கிறது?

அதைவிட..., விழுந்து சிதறும் அவளது கண்ணீர்..., அதைத் தாங்கும் சக்தி அவனுக்கு இல்லையே. அவள் என்ன நினைத்தாலும், திட்டினாலும் பரவாயில்லை..., எண்ணியவன்..., அவளை நெருங்கி..., அவள் முகத்தை தன் நெஞ்சில் புதைத்துக் கொண்டான்.

இதற்காகத்தான் காத்திருந்தேன் என்பதுபோல்..., அவள் விம்ம..., "ஏன் இப்படிப் பண்றீங்க...?" மெல்லிய விம்மலாக அவள் வினவ, அவன் குழந்தை சிணுங்கத் துவங்கினாள்.

சற்று நேரம் அமைதி காத்தவன், தன் மகள் அழுகையை நிறுத்தாமல் போகவே..., "இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்..., ப்ராமிஸ்..." அவள் தலையில் தன் கன்னத்தை தாங்கிக் கொண்டான். அவனுக்குமே அந்த அணைப்பு ஆறுதலைக் கொடுத்தது.

சற்று நேரத்தில் அவன் விலக..., குழந்தையோ..., உறக்கத்துக்குச் சென்றிருந்தாள். "தூங்கிட்டா..., கொஞ்சம் வாங்கி தொட்டில்ல அவளை விடுங்க..." அவள் உரைக்க..., அவனுக்குள் பெரும் நடுக்கம்.

பகுதி - 34.

குழந்தையை கைகளில் அள்ளிக்கொள்ள நெஞ்சு நிறைய ஆசை இருந்தாலும், அவளை கைகளில் ஏந்தும் தைரியம் அவனுக்கு இன்னும் வந்திருக்கவில்லை. அப்படி இருக்கையில்..., அவனால் எப்படி அதைச் செய்ய முடியும்?

"நானா..., இல்ல..., வேண்டாம்..." தடுமாறிப் போனான்.

அவனது அந்த செய்கை அவள் மனதை காயப்படுத்த, அவன்மேல் கோபம் பெருகியது. அவ்வளவு நேரமாக இருந்த மனநிலையை அவனது செய்கை விரட்ட..., அவனை உறுத்து விழித்தாள்.

அவள் பார்வையையும் எதிர்கொள்ள முடியாமல்..., குழந்தையையும் கைகளில் ஏந்த முடியாமல் அவன் போராட..., சரியாக அந்த நேரம்..., அறைக்கதவு தட்டப்பட, அவர்கள் மனநிலையை கலைக்கவென்றே ஒலித்ததுபோல் இருந்தது.

அவன் வேகமாக விலகி நிற்க, அறைக்குள் நுழைந்த தாரிணி, "ராஜா..., வந்துட்டியா...? ஹப்பாடா இப்போதான் நிம்மதியா இருக்கு. குழந்தை தூங்கிட்டாளா...., அவளை தொட்டிலில் விடாமல், மடியிலேயே வச்சுண்டு இருக்கியா...? இங்கே கொடு..." அவள் மடியில் இருந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

இப்பொழுது நிஹாசினியின் பார்வை அவனைத் துளைக்க, "வாங்க மன்னி..." அவள் அருகாமையில் இருந்து விலகி, அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான்.
சில நிமிடங்கள் மௌனத்தில் கடக்க, அங்கே வேகமாக வந்தான் விநாயக்.

"ராஜா..." அவன் குரல் கொடுக்க, அவனை நிமிர்ந்து பார்த்தவன், அழுத்தமாகவும், அமைதியாகவும் அமர்ந்து கொண்டான்.

அவனது தோற்றமே விநாயக் மனதுக்குள் அபாய சங்கை ஊத, "மச்சான்..., கொஞ்சம் வெளியே வா..., உன்கிட்டே பேசணும்..." அழைப்பில் ஒரு பிடிவாதம் தெரிந்தது.

நிஹாசினியோ..., அவனை கேள்வியாக ஏறிட, மறந்தும் அவள் பக்கம் திரும்பவில்லை.

"ஏண்டாப்பா..., அவனே இப்போதான் வந்திருக்கான்..., இப்போ அவனை நீ எங்கே கூப்பிடுற...." தாரிணியின் குரலில் கோபம் எட்டிப் பார்த்தது.

'இவர்களிடம் என்ன சொல்லி புரிய வைப்பது...?' விநாயக் மனதுக்குள் மருகியவன்..., 'பாவி..., அப்போ அவ்வளவு சொல்லிட்டு..., இப்போ எதுவுமே தெரியாதவன் மாதிரி உக்காந்து இருக்கானே...' ராஜாவை மனதார கருவினான்.

"இல்ல ஆண்ட்டி..., ஒரு சின்ன வேலை..., அதான்..., கொஞ்ச நேரத்தில் வந்துடுவான்..." சம்மாளித்தவன்..., "ராஜா..." அழுத்தம் கூட்டி அழைத்தான்.

அவன் செய்கை வித்தியாசமாக இருக்க..., அலுவலகத்தில் ராஜாவின் முன்னால் தைரியமாக பேசவே தடுமாறும் விநாயக்...,

இங்கே கோபக் குரலில் அழைப்பதை நம்ப முடியாமல் பார்த்திருந்தாள்.

"நான் கேட்டுண்டே இருக்கேன்..., நீ பாட்டுக்கு கூப்பிட்டால் அதுக்கு என்ன அர்த்தம்...?" தாரிணி குரலை உயர்த்தவே..., குழந்தை கண்விழித்து வீறிடவே துவங்கி விட்டாள்.

"கடன்காரா..., இப்போ நோக்கு திருப்தியா...?" கத்தியவள், குழந்தையை சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கினாள்.

அவரது சமாதானங்களை கேட்கும் மனநிலையில் குழந்தை இருக்கவில்லை. நிஹாசினியோ..., அவன் மீதே கவனமாக இருக்க..., "விநாயக்.., அதான் போன்னு சொல்லிட்டானே..., இன்னும் ஏன் நிக்கற...?" ஆத்திரமாக கத்த, அவனது அந்த குரலுக்கே குழந்தை சற்று அமைதியானாள்.

'இப்பொழுதுமா...?' ஒரு வேளை தான் எண்ணுவது தவறாக இருக்குமோ, என அவள் மனதின் ஓரத்தில் இருந்த சிறு சந்தேகமும் அப்பொழுது நிவர்த்தியானது.

'இதற்கு சந்தோஷப்படுவதா? இல்லை வருத்தப்படுவதா...?' கேள்வியை தனக்குள் எழுப்ப..., ஆனால்..., அது ஒருவித மகிழ்வை கொடுத்தது மட்டும் உண்மை.

விநாயக்கால் தான் சொன்னதுபோல்..., அவன் வரவில்லை என்றாலும் உண்மையைச் சொல்ல முடியவில்லை. இந்த குடும்பமே அவன்மேல் பொழியும் பாசம் அவன் அறிந்தது ஆயிற்றே. அப்படி பாசமானவனுக்கு இப்படி ஒரு நிலை என சொல்ல முடியவும் இல்லையே..., இரண்டும் கெட்டான் நிலையில் தவித்தான்.

மீண்டும் ஒரு முறை அழைத்தும் அவன் வராமல் போகவே...,

வெளியே வராண்டாவில் சென்று அமர்ந்து கொண்டான். 'அடுத்து என்ன செய்ய...?' அவனுக்கு எதுவும் தெரியவில்லை.

ராஜாவுக்கு இப்போதைய தேவை ஓய்வு மட்டுமே என கண்ணன் வேறு அழுத்திச் சொன்னது மனதை பிசைந்தது. உள்ளே..., இருக்கையில் தளர்ந்துபோய் அமர்ந்திருக்கும் அவனை இதற்குமேல் எப்படி அங்கே அழைத்துச் செல்ல...? தலையை கைகளில் தாங்கிக் கொண்டான்.

விநாயக் இதற்குமுன் எந்த விஷயத்திலும் இவ்வளவு சீரியசாக இருந்ததே இல்லை. அனைத்தையும் மிகவும் எளிதாக எடுத்துக் கொள்பவன்..., இதை சாதாரணமாக எடுக்க முடியாமல் இருக்கையிலேயே இருந்து கொண்டான். அவனும் வீட்டுக்குபோய் முழுதாக இருபத்திநாலு மணிநேரம் கடந்து விட்டது. அதைபற்றிய கவலை அவனுக்கு இருக்கவில்லை.

அறைக்குள் இருந்த ராஜாவுக்கோ..., உடல் ஓய்வுக்காக கெஞ்சியது. காலையில் உண்ட மருந்தின் தாக்கமா..., இல்லை மனதின் களைப்பா என அவனுக்குப் புரியவில்லை. ஆனால்..., இதற்குமேல் நிஹாசினியை தனியாக விட்டுச் செல்ல முடியாது என தன் உடல்நிலையை மறுத்து அமர்ந்திருந்தான்.

"நிஹா..., நீ ஏன் உக்காந்தே இருக்க..., கொஞ்ச நேரம் படுத்துக்கோ..." தாரிணி உரைக்க, நிஹாவின் பார்வை வேகமாக ராஜாவைப் பார்த்தது.

'இங்கே இருந்து போய்விடுவாயா...?' அவள் பார்வை அவனிடம் கேட்க,

'இல்லம்மா...' அவனும் மௌனமாக தலையை மறுப்பாக அசைக்க, கொஞ்சம் நம்பிக்கை இல்லாமலேயே கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் களைப்பில் சட்டென உறங்கிவிட, அவள் உறங்கிவிட்டதை உறுதி செய்த தாரிணி..., 'வெளியே வா...' என்பதுபோல் செய்கை காட்டிவிட்டு, கைகளில் உறங்கிவிட்ட குழந்தையை அவள் அருகில் விட்டுவிட்டு வெளியே சென்றார்.

"சொல்லுங்க.. மன்..னி..." அவர் பின்னால் சென்றவன், அங்கே இருந்து விநாயக்கை நிச்சயம் எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் சென்றுவிட்டதாகவே அவன் கருதினான்.

"என்னப்பா..., ஏதாவது பிரச்சனையா...? முகமெல்லாம் வாடிபோய் கிடக்கு. நைட்டெல்லாம் தூங்கவே இல்லையா...? அது மட்டுமில்லை..., நேத்து போட்ட அதே ட்ரெஸ்ல இருக்க..., நேத்து சாப்ட்டியா இல்லையா...? காலையில் என்ன சாப்ட்ட...?" அவன் முகத்தை அங்குலம் அங்குலமாக அலசியது அவரது விழிகள்.

சுஜா குழந்தையில் லயிப்பில் தன்னை மறந்திருக்க..., அவரது பார்வையில் பட்டிருக்க வேண்டிய விஷயங்கள் அனைத்தும் தாரிணியில் பார்வையில் விழுந்தது.

அவர் கேள்வியில்..., விநாயகம் வேகமாக எழுந்து நிற்க, "அது.., வேற ஒண்ணும் இல்ல மன்னி..., ஒரு டைரெக்டர் சிஜி விஷயமா பேச வந்திருந்தார்..., அவர்கிட்டே பேசி..., அனுப்பிட்டு வர நேரமாயிடுச்சு..." சற்று நேரமாக யோசித்து வைத்திருந்ததை உரைத்தான்.

அடுத்த கேள்வியை அவர் கேட்கும் முன்னர்..., குழந்தை சிணுங்கும் சத்தம் கேட்கவே..., அவசரமாக அறைக்குள் நுழைந்தார்.

அவர் செல்லவே..., "என்ன முடிவு பண்ணியிருக்க ராஜா...? இப்போ வரப்போறியா இல்லையா...?" சற்று கோபமாகக் கேட்ட நண்பனை ஆழ்ந்த அமைதியோடு ஏறிட்டான்.

"என்னோட ஹெல்த்தை விட..., நான் இங்கே இருப்பதுதான் இப்போ முக்கியம் விநாயக்..."

"நீ இங்கே இருப்பது முக்கியம் இல்லன்னு நான் சொல்லவே இல்லை. ஆனா..., அதைவிட..., நீ முழுசா அவங்களோட இருக்கணும் என்பது முக்கியம் இல்லையா ராஜா. ஏதாவது விவகாரமா ஆகிப் போனால்..., உன்னாலேயே உன்னை மன்னிக்க முடியாது.

"தயவு செய்து நான் சொல்வதைக் கேள்..., ரெண்டு நாள்..., என் சொல்பேச்சைக் கேள்..., இல்லையென்றால்..., நிச்சயம் நான் சுஜா ஆண்ட்டி கிட்டே சொல்லிடத்தான் போறேன்..., என்னால் இந்த அழுத்தத்தை தாங்கிக்க முடியாது..." அவன் கைகளை பற்றிக்கொண்டு கெஞ்சினான்.

அவன் சொல்வதில் இருந்த உண்மை புரியத்தான் செய்கிறது..., ஆனாலும்..., அவன் பார்வை அறைக்குள் உறங்கும் மனைவியின்மேல் பதிய, அவளை விட்டுச் செல்லவும் அவனால் முடியவில்லை.

நண்பன் மறுக்காததே பெரிய விஷயமாக இருக்க, அவன் பார்வை சென்ற திக்கை பார்த்தவன், "இந்த ரெண்டு நாளைப் பார்த்தால்..., மிச்சமிருக்கும் மொத்த நாளும் கேள்விக்குறி ஆகிடும் ராஜா. ப்ளீஸ்..., என்னால்..., கண்ணு முன்னாடி சிதறப்போகும் உண்மையை தாங்க முடியாது..., ப்ளீஸ்..." கண் கலங்கியே விட்டான்.

"சரி..." அரை மனதாக சம்மதித்தவன், அறைக்குள் சென்று..., "மன்னி.., நான் வீட்டுக்குபோய் ப்ரெஷ் ஆகிட்டு வரேன். ஹாசினி கிட்டே சொல்லிடுங்க..." உரைத்தவன்..., மகளின்மேல் ஏக்கமாக ஒரு பார்வையை செலுத்திவிட்டு வெளியேறினான்.

நேராக கண்ணனிடம் செல்ல..., அவனுக்கு சிகிச்சையைத் தொடர்ந்தார். விநாயக்கின் வேண்டுகோளுக்கு இணங்க..., அவனை உறக்கத்திலேயே வைக்க, மறுநாள் காலை வரைக்கும் ராஜா தன்னை மறந்த நிலையிலேயே இருந்தான்.

ராஜா வீட்டுக்குப் போய்விட்டான் என அறிந்தே அவன்மேல் கோபமாக இருந்தவள், அவன் இரவிலும் வராமல் போகவே கடும் கோபத்துக்கு ஆளானாள். அதற்கு முக்கிய காரணமே.., குழந்தையை யாராலும் அவ்வளவு சீக்கிரம் சமாதானம் செய்ய முடியவில்லை என்பதே.

அவள் உறங்குவதே அபூர்வம் என்றால்..., உறங்கிய பிறகு..., காகம் கரையும் சத்தம் துவங்கி..., மற்றவர் உரக்க மூச்சு விட்டால் கூட கண்விழித்து வீறிடும் அவளை சமாதானம் செய்வது பெரும் பாடாகத்தான் இருந்தது.

ஒரு வேளை பசியில் அழுகிறாளோ என பால் கொடுக்க முனைந்தால், அவளிடம் பசியாற மறுத்து அதற்கும் அழ, தவித்துதான் போனாள். ராஜாவின் குரல் கேட்டால் அவள் சமாதானமாகிவிடுவாள்.., ஆனால்..., ஓடி ஒளியும் அவனை என்ன செய்ய...?

கண்மண் தெரியாத ஆத்திரம்..., கோபம்..., அவன் கையில் கிடைத்தால்..., அவனை கடித்துக் குதறும் வேகம்..., மற்றவரிடம் கூட ஒரு வார்த்தை பேச மறுத்தாள். அதைவிட..., தாய்ப்பால் கொடுக்க மறுத்தாள்.

அவளது செய்கையில்..., பெரியவர்கள் குழம்ப..., துளசி ஆத்திரத்தில் அவளை அடிக்கவே போய்விட்டார். அவரை சமாதானம் செய்வதற்குள் சுஜாவுக்கு உயிரே போய் வந்தது.

'இந்த ராஜா வேறு எங்கே போய்விட்டானோ..., இரண்டு

நாட்களாக அவன் நடவடிக்கையே சரியில்லை... பெண் குழந்தை என்பதால் இப்படி நடந்து கொள்கிறானா...?' கையில் இருக்கும் ரோஜாக்குவியலை ஆசையாக பார்வையிட்டன அவர் விழிகள்.

'இவளை அவனால் எப்படி வெறுக்க முடிகிறது...?' சிணுங்கிக் கொண்டே இருக்கும் அவளை கைகளுக்குள் அடை காக்க முயன்றார்.

ராஜாவோ..., இருதலைக்கொள்ளி எறும்பாக தவித்துக் கொண்டிருந்தான். விநாயக்கின் பிடிவாதத்துக்கும்..., அவன் உரைக்கும் உண்மைக்கும் இடையே சிக்கித் தவித்தன அவன் உணர்வுகள்.

குழந்தையின் உருவம் வேறு கண்ணுக்குள் உறைந்திருக்க, அங்கே இருந்தால்..., அவளை விட்டு தள்ளியிருக்கும் நிலை..., அதை நினைக்கையில், இந்த பிரிவு பரவாயில்லை என்றே தோன்றியது.

நிஹாசினியை நினைக்கையில்..., இன்னும் என்னவெல்லாம் சொல்வாளோ., மனம் பரிதவித்தது. 'அவள் சொல்வதைபோல்தானே நீயும் நடந்து கொள்கிறாய்...' அவன் மனசாட்சி இடித்துரைக்க இமைகளை அழுந்த மூடிக் கொண்டான்.

ராஜாவின் வீட்டில், விநாயக்கை பிடித்துக் கொள்ள, ராஜா சொன்ன அதே பொய்யை விடாமல் ஒலிபரப்பினான். 'தயாரிப்பாளர் துவங்கி..., இயக்குனர், ஒளிப்பதிவாளர்..., என அவன் மீட்டிங், வேலை என பிசியாக இருப்பதாக உரைக்க, இப்பொழுது பெரியவர்களுக்கே அவன்மேல் கோபமாக வந்தது.

அதே நேரம்..., "ஆண்ட்டி..., அவனுக்கு குழந்தை பிறந்த நேரம்..., இப்படி ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்குன்னு சந்தோஷப்படுவீங்களா.., அதை விட்டு.., எல்லோரும்

அவனை திட்டறீங்களே..” ஆதங்கமாக அவன் கேட்க, அதற்குமேல் யாரும் எதுவும் சொல்லவில்லை.

குழந்தை பிறந்த நேரம்..., அவன் தன் லட்சியத்தின் முதல் படியில் அடியெடுத்து வைத்து விட்டானே..., என பூரித்துதான் போனார்கள்.

சுஜாவுக்கோ..., ஒரு பக்கம் நிஹாசினி குழந்தையை பசியாற்ற மறுக்க..., “தாய்ப்பால் இல்லை...” என அவள் விடாமல் சொன்ன காரணத்தை, அவளை பரிசோதித்த ஜெயா ஆணித்தனமாக மறுத்ததை எந்த விதத்தில் எடுத்துக் கொள்ள, என அவர்களுக்கே தெரியவில்லை.

அன்று நிஹாசினி டிச்சார்ஜ் ஆக..., “சம்பந்தியம்மா..., ஒரு மூணு மாசம், இவ எங்க வீட்டில் இருக்கட்டும்...” துளசி உரைக்க, அந்த குட்டி தேவதையை விட்டு எப்படி இருப்பது...? என்ற தவிப்பில், சுஜா, தாரிணியின் முகம் உடனடியாக வாடியது.

அதைப் பார்த்த நிஹாசினி..., “அம்மா..., நான் எங்க வீட்டுக்கே போறேன்...” உரைக்க, அவருக்கோ ஆத்திரமாக வந்தது.

ஏற்கனவே ராஜாவை இந்தப் பக்கமே ஆளைக் காணோம்..., இதில் இவள் வேறு அங்கே போனால்..., அவர் வீட்டுக்கே வராமல் போய்விட்டால்..., தன் கவலையை அவரால் வாய்விட்டு கூட உரைக்க முடியவில்லை.

“சம்பந்தியம்மா..., நிஹாவை நாங்க பத்திரமா பாத்துக்கறோம். எங்களோடவே அனுப்பிடுங்க...” தாரிணி குரல் கொடுக்க, அவளை அடக்கும் பார்வை பார்த்த சுஜா,

“இல்ல..., அவளுக்கும் அம்மா வீட்டில் இருக்கணும்னு ஆசை

இருக்கும் தானே. அதே மாதிரி அவங்களுக்கும் பேரப்பிள்ளையோட தனியா இருக்கணும்னு இருக்கும் இல்ல...” ஒரு தாயின் மனம் புரிந்தவராக இடை புகுந்தார்.

“எனக்கு அப்படியெல்லாம் எதுவும் இல்லை...” நிஹா சட்டென உரைக்க, துளசி இப்பொழுது அவளை தாராளமாய் முறைத்தார்.

நிஹாவுக்கோ.., தன் வீட்டுக்குச் சென்றால்.., ராஜா தன்னை முற்றிலும் தவிர்த்து விடுவானோ என்ற பயமே..., அவளை அவன் வீட்டுக்குச் செல்லத் தூண்டியது.

அவன் இன்னும் தங்கள் குழந்தையை தூக்க வில்லை, கொஞ்சவில்லை, பார்க்கவில்லை என்ற உண்மை நெஞ்சை சுட, அவனுடனே இருக்கவேண்டும் என்ற வேகம் மேலும் அதிகரித்தது.

அதே நேரம்..., அவன்மேல் இருந்த கோபமும் உச்சத்தை எட்டியிருக்க, அவனோடு ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை என முடிவெடுத்தாள். அடுத்த நாள் அவள் வீட்டுக்குச் செல்ல..., அவளுக்கு முன்பே..., அவளுக்காக காத்திருந்தான் ராஜா.

ஆரத்தி சுற்றி வள்ளி அவளை வீட்டுக்குள் அழைக்க, ஹாலில் அவனைப் பார்த்தவள்..., குழந்தையை கைகளில் ஏந்திக்கொண்டு தங்கள் அறைக்கு விரைந்தாள்.

விநாயக் சொன்ன காரணம் அனைவருக்கும் புரிந்தாலும், அந்த விஷயத்தை ஏற்க மனம் ஒத்துழைக்கவில்லை என்பது மட்டும் உண்மை.

“எப்போ வந்த ராஜா..., ப்ரடியூசர் என்ன சொன்னார்...?” நிஹா சென்ற பாதையை கவலையாக பார்த்துக்கொண்டிருந்த அவனைக் கலைத்தார்.

“ஹாங்..., ம்மா..., மூவி ஸ்டார்ட் ஆகும்போது கூப்பிடுறதா சொன்னார்.., நான்...” அரைகுறையாக அவருக்கு பதில் அளித்தவன், தங்கள் அறைக்கு விரைந்தான்.

அறைக்குள் நுழையும் முன்பே..., குழந்தையின் அழுகுரல் அவனைத் தாக்க..., சட்டென கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

அங்கே.., தங்கள் படுக்கையின் மத்தியில், குழந்தை கிடத்தப் பட்டிருக்க, பசியினாலா என்ன என்று தெரியவில்லை..., கை கட்டை விரலை வாயில் வைக்க முயன்று, அது முடியாமல்..., மேலும் வீறிட்டாள்.

நாலுகால் பாய்ச்சலில் அவளை நெருங்கியவன்..., கண்களில் கண்ணீர் மறைக்க, குழந்தையை வெறித்தான். “குட்டிம்மா..., என்னடா...? ஏன் அழறீங்க...? அம்மா எங்கே...?” கட்டிலின் அருகில் மண்டியிட்டவன், குழந்தையிடம் உரையாட, அவன் குரல் கேட்டவள், சட்டென அழுகையை நிறுத்தியிருந்தாள்.

தன்னைத் தூக்குவானா என சற்று நேரம் பொறுத்தவள்..., அவன் தூக்கவில்லை எனவே அழுகையைக் கையில் எடுத்தாள்.

குழந்தை மீண்டும் அழத் துவங்கவே..., “ஹாசினி.. ஹாசினி..” பார்வையைச் சுழற்றியவன், அவளை அழைக்க, மூங்கில் தடுப்பின் பின்னால் இருந்தவள், இந்த நேரத்தில் கூட குழந்தையை தொட்டு தூக்காத அவன் செய்கை அவளைத் தாக்க, மௌனமாக கண்ணீர் வடித்தாள்.

“என்னடா..., பசிக்குதா...? குளிருதா...? அப்பா ஏசியை நிறுத்திடவா..?” அவள் கைகள் நடுங்குவதைக் கண்டவன் ஏசியை நிறுத்தினான். அப்பொழுது கூட, அவளை தொடும்

தைரியமும் எழவில்லை.

"அழாதீங்க..., சு.. சு..." என்னவெல்லாமோ செய்து பார்த்தான். முடிவில் முடியாமல் போகவே..., "அம்மா..." அங்கிருந்தே கத்த...,

இதற்குமேல் முடியாது என..., மறைவில் இருந்து வந்தவள்..., குழந்தையை கைகளில் அள்ளிக் கொண்டாள்.

"இப்போ கூட குழந்தையை தொட்டு தூக்கணும்னு தோணல இல்ல..., ஏன்? ஏன் என்னை இப்படி கொல்லாமல் கொல்றீங்க...? உங்களுக்கு நானும் என் பொண்ணும் அப்படி என்ன பாவம் பண்ணோம்...?" அவள் கத்தலில் குழந்தையின் அழுகை அதிகரிக்க, அவள் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திகைத்திருந்தான்.

பகுதி - 35.

குழந்தையைக் கொஞ்சியவாறு அறைக்குள் நுழைந்தான் ராஜா. அதைப் பாராமல் பார்த்த நிஹாசினியின் மனதுக்குள் அளவிட முடியாத நிம்மதி.

அவனை குழந்தையை கைகளில் ஏந்த வைக்க செய்த போராட்டம் கொஞ்சமா நஞ்சமா? அழும் குழந்தையை சமாதானப்படுத்த கூட தொடாத அவன் செய்கை..., அவளை ஆசையாக காணாத அவன் வெறுமை..., எத்தனை நாள் அவளை உறங்க விடாமல் செய்தது.

குழந்தைக்கு நான்கு மாதங்கள் முடிந்துவிட்டது எனச் சொன்னால்..., அதை நம்புவதற்கே சற்று கடினமாகத்தான் இருந்தது. குப்புற விழுந்து, மற்றவரின் முகம் பார்த்து சிரிக்கும் அளவுக்கு முன்னேறி விட்டாள். கட்டிலில் தனியாக விட்டுவிட்டு, ஒரு நொடி கூட நகர்ந்துவிட முடியாது.

அதற்குள்ளாக குப்புற விழுந்து..., கையை ஊன்றி.., வயிற்றால் தவழுகிறாள். முதல்நாள்..., நிஹாசினி கவனக்குறைவாக இருக்க, கட்டிலில் இருந்து விழுந்தே விட்டாள். நெற்றிப்பொட்டில் சற்று வீங்கிவிட, வீடே துடித்துதான் போய்விட்டது.

இப்பொழுதெல்லாம் அவள்மேல் சிறு கோபத்தை மற்றவர் வெளிப்படுத்த துவங்கி விட்டார்கள். அதற்கும் அவள்தான் காரணம்..., ராஜாவை.., குழந்தையை தூக்க வைக்க அவள் எடுத்த முயற்சி..., மற்றவர்கள் அவள்மேல் கோபம் கொள்ளச் செய்து விட்டது.

உண்மையான காரணம் அவள் மட்டுமே அறிந்த உண்மை. எத்தனை நாள்தான் அவன் விலகியிருப்பதை அவள் சகித்துக் கொண்டிருப்பாள்?

இரண்டு மாதங்களுக்கு முன்னர்..., அவள் குளித்துக் கொண்டிருக்கையில், குழந்தை விழித்துக்கொண்டு அழ, அவளைத் தூக்காமல்..., அவன் தொட்டிலை ஆட்டிக் கொண்டிருக்க..., அவசரமாக குளித்து முடித்தவள், வேகமாக வெளியே வந்தாள்.

அதைவிட..., அவன் முகத்தில் கவிழ்ந்திருந்த தவிப்பு..., விட்டால் அவனும் சேர்ந்து அழுதுவிடுவேன் என்ற முகபாவம்.., குழந்தையை ஏந்த முடியாத ஒருவித இயலாமை..., நொடிக்குள் அவனை கணித்திருந்தாள்.

அப்பொழுதுதான் அவளை உறங்க வைத்ததால்..., விழித்துக்கொள்ள மாட்டாள் என்ற நம்பிக்கையில் அவள் சென்றிருக்க.., இடையிலேயே விழித்தது அவள் எதிர்பாராதது.

இந்த நிலையிலும், அவன் கரங்கள் குழந்தையை ஏந்த மறுப்பது

ஏன்..? அவளுக்கு சுத்தமாக புரியவில்லை. குழந்தையை பற்றி தான் பேசிய பேச்சுக்களை அவள் மறந்து போயிருக்க..., அதைக் கேட்டவனுக்கு மறக்கவில்லையே.

இந்த இரண்டு மாதங்களில்..., அவனோடான பேச்சுக்கள் தொண்ணூறு சதவீதம் முறிந்துதான் போயிருந்தது. அவனது விலகல், அவளை தவிர்ப்பது, சிலநாள் இரவு நேரங்களில் கூட வீட்டுக்கு வராத அவன் செய்கை..., எல்லாமாக அவளை ஒடுங்கச் செய்திருந்தது.

அவனது நலுங்கிய தோற்றம்..., அவனிடம் தன் கோபத்தை வெளிப்படுத்தாமல் விலகி இருக்கச் செய்தது.

இன்று அப்படி விட முடியாது..., கோபம் கொப்பளிக்க..., ஏற்றிக்கட்டிய ஒற்றை உடையோடு அவனை நெருங்கியவள்..., "அவளை தூக்குங்க..." குரலில் அவ்வளவு கடுமை.

அவளை எதிர்பாராத ராஜா திகைத்து..., "நான்..." தடுமாற...

"ஆமா..., நீங்கதான் தூக்குங்க..." இப்போ நீ எடுத்தே ஆகவேண்டும் என்ற பிடிவாதம் கலந்த கோபத்தில் நின்றாள்.

"இல்ல.., வேண்டாம்.." அவளிடமிருந்து பார்வையை திருப்பிக் கொண்டான்.

"இவ உங்க பொண்ணுதானே..., அதில் உங்களுக்கு ஒண்ணும் சந்தேகம் இல்லையே..." அம்பாய் பாய்ந்தன வார்த்தைகள்.

"ஹாசினி..." அவ்வளவு கோபத்தை அவன் இதுவரை வெளிப்படுத்தியதே இல்லை.

அவன் கோபத்தில் சற்று மிரண்டாலும்..., அசராமல் நின்றாள்.

அவள் பார்வையில் தெரிந்த மிரட்சியில் தன்னை மீட்டவன்...,
"என்னால் முடியலை ஹாசினி..., அதுதான் உண்மை..."
தாடை இறுக, பார்வையை தூரத்தில் நிலைக்கவிட்டு...,
எதிலிருந்தோ தப்பிக்கப் போராடும் அவன் செய்கை...,
மனதுக்குள் பெரும் போராட்டத்தை உணர்ந்தாள்.

"ஏன்...?" குரல் நடுங்க அவள் கேட்க...,

"என்னால் ஒரு நல்ல அப்பாவா இருக்க முடியும்னு
தோணலை..., அது மட்டும் இல்லை..., எந்த முகத்தை
வச்சுட்டு..." அவ்வளவுதான்.., அதற்குமேல் ஒரு
வார்த்தையும் உரைக்காமல்..., அங்கிருந்து ஓடியே போனான்.

நின்ற இடத்திலேயே சிலையாகிப் போனாள் நிஹாசினி. அவன்
மனதுக்குள் ஓடும் எண்ணத்தை முதல் முறையாக
அறிந்தவளுக்கு..., தான் அவனை எவ்வளவு காயப்படுத்தி
இருக்கிறோம் என்பது புரிய, அழுகை முட்டியது.

அதே நேரம்..., அவன் குரலைக் கேட்டிருந்த குழந்தை...,
அழுகையை நிறுத்தியதை கூட உணராமல்..., குற்ற உணர்வில்
குறுகிப் போகும் அவனை என்ன செய்ய?

'என் பேச்சுத்தான் அவரை குழந்தையை நெருங்க விடாமல்
செய்கிறதா?' எண்ணியவளுக்கு துக்கம் பொங்கியது.

இரண்டு மாதங்களாக குழந்தையை கைகளில் ஏந்தி கொஞ்ச
முடியாமல், அவர் ஒவ்வொரு நொடியும் எப்படி
தவித்திருப்பார்..., எண்ணமே நெஞ்சை அறுத்தது.

'இல்லை..., இதை நான் தொடர விட மாட்டேன்...'
எண்ணியவள்.., உடை மாற்றிவிட்டு.., குழந்தையை
தட்டிகொடுத்து தூங்க வைத்தவள், குழந்தையை சுஜாவின்

அறையில் இருந்த தொட்டிலில் விட்டு வந்தாள்.

ராஜா வீட்டை விட்டு சென்றுவிட்டதை அறிந்தவளுக்கு..., இன்றே இதற்கு ஒரு முடிவு கட்டும் வேகம். அடுத்த இரண்டுமணி நேரத்தில்..., குழந்தையின் அழுகுரல் அவளை எட்டியபிறகும் கீழே செல்லவில்லை.

இன்டர்காமில் அழைத்தாலும் எடுக்கவில்லை..., தாரிணியே குழந்தையை தூக்கிவந்து பசியாற்ற சொன்ன பிறகும்.., மறுத்துவிட்டாள்.

"பால் இல்லை..." அவர் முகத்துக்கு நேராக தயவின்றி உரைத்தவள், கதவை சாற்றிக் கொண்டாள்.

தாரிணி அதிர்ந்துதான் போனார். மருத்துவமனையில் இருந்த ஒரு நாள் இப்படி பிடிவாதம் பிடித்தவள்..., குழந்தை பால் புட்டியை வாயில் கூட வாங்க மறுக்கவே..., வேறு வழியின்றி பால் ஊட்டினாள். அதற்குப் பிறகு இன்றுதான் இப்படி மறுக்கிறாள்.

என்ன செய்யவென்று தெரியாமல் குழந்தையோடு கீழே இறங்க.., அந்த நேரம் அங்கே வந்த துளசி..., "நிஹா வீட்டில் இல்லையா..? குழந்தை ஏன் இப்படி அழறா...?" கைகளில் வாங்க..., ஏற்கனவே.., ராஜா குழந்தையை கைகளில் ஏந்தாததற்கு இவள்தான் காரணம் என கோபத்தில் இருந்த தாரிணி...,

"என்னமோ ஊர் உலகத்தில் யாருமே பண்ணாத தப்பை எங்க புள்ளை பண்ணிட்ட மாதிரி..., உங்க பொண்ணு அவனை தண்டிக்கிறது போதாதுன்னு..., இப்போ இவளையும் பழிவாங்க ஆரம்பிச்சுட்டா.

"பால் இலையாம் அவகிட்டே..., அதனால் பால் கொடுக்க மாட்டாளாம். போன என்னை விரட்டிட்டா... இந்த பச்சை

மண்ணு அப்படி என்ன பாவம் பண்ணிச்சாம்...?" கோபமாய் பொரிந்தாள்.

"தாரிணி..." அவளை கண்டிக்கும் விதத்தில் அழைத்த சுஜா..., "வாங்க சம்பந்தியம்மா..., நீங்க இதையெல்லாம் பெருசா எடுத்துக்காதீங்க.." அவரை சமாதானப்படுத்தும் விதத்தில் உரைக்க,

'இதை பெருசா எடுக்காமல்...?' கேட்டுகொண்டிருந்த துளசிக்கு கோபம் பொங்கியது. ஏற்கனவே அவள் நடந்துகொள்ளும் முறை அவருக்கே பிடித்தம் இல்லை. தங்கள் வீட்டுக்கு வரச் சொன்னதற்கும் பிடிவாதமாக மறுத்துவிட்டு..., இங்கே இருந்துகொண்டு, இருப்பவர்கள் அனைவரையும் ஆட்டிவைக்கும் அவள் செய்கை...,

எத்தனை நாள்தான் பொறுத்துக்கொண்டு இருப்பார்கள்? இவர்களாக இருக்கப்போய் இன்னும் பொறுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதுவே.., இவர்கள் இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால்..., உங்கள் பொண்ணை அழைத்துக்கொண்டு போய்விடுங்கள் என சொல்லி இருப்பார்கள்.

இவள் ஏன் புரிந்துகொள்ளாமல் நடக்கிறாள்..., வரமாய் கிடைத்த வாழ்க்கையை, சந்தோஷமாக வாழ ஏன் இவளுக்குத் தெரியவில்லை. நடந்ததையே நினைத்து, மொத்த வாழ்க்கையையும் தொலைக்கிறாளே..., ஒரு பக்கம் கவலையாக வந்தது.

ஆத்திரமாக அவள் அறைப்பக்கம் சென்றவர்..., மகளை பிலுபிலுவென பிடித்துக் கொண்டார். அவர் கேட்டதற்கோ..., சொன்னதற்கோ எந்த விளக்கத்தையும், பதிலையும் அளிக்காதவள், இறுக்கமாகவே அமர்ந்து கொள்ள, அவர்தான் தோல்வியில் திரும்ப வேண்டி இருந்தது.

குழந்தைக்கு பசியாற்றச் சொல்லி கெஞ்சியும் பார்த்துவிட்டார். அதற்கும் அவள் மசியாமல் போகவே..., "உனக்கெல்லாம் இப்போ தெரியாதுடி..., இந்த வாழ்க்கை பறிபோகும்போது தெரியும்..." தன்னை மீறி அவர் உரைக்க, அது சீக்கிரமே பலிக்கப்போவதை அப்பொழுது அவர் உணர்ந்திருக்கவில்லை.

அதற்கு கூட அவளிடம் அசைவில்லாமல் போனதுதான் விந்தை. பெண்கள் அனைவரும் மன்றாடியும் அவள் கேட்காமல் போக, இறுதியாக பால் கலக்கிக் கொடுக்க.., தாயின் பிடிவாதத்தை கொண்டு பிறந்த மகள், அதை வாயில் கூட வாங்க மறுத்து வீறிட்டாள்.

வீடே அல்லோகலப்பட..., இறுதியாக சுஜா, ராஜாவுக்கு அழைத்தே விட்டார். தன் வேலைகள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு வந்தவன், வீட்டில் இருந்த சூழலில் சற்று திடுக்கிட்டுத்தான் போனான்.

"என்னம்மா..., குழந்தை ஏன் இப்படி அழறா...? ஹாசினி எங்கே...?" அவன் பார்வை அவளை ஹால் முழுக்க துழாவியது.

தாரிணி, சுஜாவின் பார்வையில் வாயை இறுக மூடி அமர்ந்திருக்க..., துளசியோ..., அவன் முகம் பார்க்கவே தயங்கினார்.

வீறிடும் குழந்தை..., அனைவரின் முகபாவம்..., சூழலின் இறுக்கம்..., நிலைமையை யூகிக்க அவனுக்கு ஒரு நொடிதான் தேவைப் பட்டது.

"குழந்தையை அவகிட்டே கொடுத்தீங்களா...?" தன் கேள்வியின் அபத்தம் அவனுக்கே புரிந்ததுதான்..., ஆனாலும் கேட்டான்.

"கொடுக்காமல் இருப்போமா...? குழந்தையை திரும்பிக் கூட பாக்கலை.." தாரிணி, சுஜாவின் கட்டையும் மீறி வாய் திறக்க, அவனுக்கோ.., மாலையில் தான் செய்ததற்கு எதிர்விளைவா இது...? சோர்ந்து போனான்.

'நான் குழந்தையை கையில் ஏந்தாமல்..., இனிமேல் அவள் எதுவும் செய்யப் போவதில்லை...' அவனுக்கு ஆணித்தனமாக புரிந்தது.

வீறிடும் குழந்தையா...? தன் பிடிவாதமா..? அவனுக்குள் பட்டிமன்றம் நடக்க, குழந்தைக்கு மீறி எதுவுமில்லை என தந்தையுள்ளம் குபீரென வெளியேற, "குழந்தையைக் கொடுங்க.." சுஜாவின் கைகளில் இருந்து குழந்தையை வாங்கிக் கொண்டான்.

இரண்டு மாதங்களாக உணர்ந்திராத கைகளின் வெம்மை அவளைத் தாக்க, தான் புதிய கைகளில் இருக்கிறோம் என்ற உணர்வில்.., இன்னும் அதிகம் அழுதாள்.

குழந்தையை முதல் முதலில் கைகளில் ஏந்திய தாக்கம்.., ஒரு பரவசம்.., சிலிர்ப்பு.., உவகை.., பெருமிதம்.., தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டான். எங்கே அவளுக்கு வலிக்குமோ என தன்னிடமிருந்து நகர்த்தியவன், அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

அந்த நிமிடம் அடைந்த நிம்மதியை அவனால் வார்த்தைகளால் வடிக்கவே முடியவில்லை. பெற்ற குழந்தையை கைகளில் ஏந்த முடியாத கொடுமை, அருகில் இருந்தும் விலகி இருக்கவேண்டிய கட்டாயம்.., உள்ளுக்குள் மருகிக் கொண்டிருந்தவனுக்கு..., அனைத்தில் இருந்தும் நொடியில் விடுதலை பெற்ற உணர்வு.

"ஏதாவது பேசுடா..., குரல் கொடு..., உன் பொண்ணுக்கு உன் குரல்தான் தெரியும்..." சுஜா நெகிழ்ந்த அதே

நேரம்..., குற்றம்சாட்டும் குரலில் உரைக்க,

"குட்டிம்மா.., அப்பாடா.." அவன் குரல் சற்று நடுங்கியது.

அவன் மகளுக்கு அதுவே போதும் என்பதுபோல்.., ஒரு நொடி அழுகையை நிறுத்த..., பார்த்துக் கொண்டிருந்த அனைவரின் கண்களும் கலங்கியது. எத்தனைநாள் ஏக்கம் இது, எத்தனைநாள் போராட்டம் இது.

ஆனால்.., அது ஒரு நொடிதான்.., அடுத்த நிமிடம் அவன் மகள் சிணுங்க, "முதல்ல போ ராஜா.." சுஜாதான் முதலில் கலைந்தார்.

அடுத்த நிமிடம்..., லிப்டுக்குள் நுழைந்தவன்.., தங்கள் அறைக்குள் வேகமாக நுழைந்தான். குழந்தையின் அழுகை அவளை தீண்டினாலும்.., படுக்கையில் இருந்து திரும்பாமலே இருந்தாள்.

"ஹாசினி.." அவளுக்கு முன்னால் வந்தவன் குரல்கொடுக்க, பட்டென கண்விழித்தவளது கன்னத்தில், ஈரத்தின் மினுமினுப்பு.

'இப்படி ஏங்கற.., பிறகு என்னடி பிடிவாதம்...?' மனதுக்குள் கடிந்தவன், குழந்தையை அவள் பக்கம் நீட்டினான்.

"இதுக்கு கூட என்னை போராட வைக்கறீங்க இல்ல..." அவள் குரலே.., அவள் எவ்வளவு நேரமாக அழுதிருக்கிறாள் என்பதை உணர்த்த, அவனுக்கு தன்னையே பிடிக்கவில்லை.

"குழந்தை ரொம்ப நேரமா அழறா.." அவளை திசை திருப்ப முயன்றான்.

"அவளாவது கொஞ்ச நேரமாதான் அழறா..., ஆனா நான்..., ரொம்ப மாசமா அழறேன்.." அப்பொழுதும் குழந்தையை

கைகளில் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால்..., பார்வையோ..., அவன் கைகளுக்குள் புதைந்திருக்கும் தன் மகள் மீதே நிலைத்திருந்தது.

அவன் அவளை தாங்கியிருந்த விதம்.., அதில் தெரிந்த ஒரு பாதுகாப்பு.., அணைப்பு, பாசம்.., உரிமை.., சிறு பொறாமையைக் கூட கொடுத்தது. அதையும் மீறி.., அவனைத் தன் குழந்தையை தூக்க வைத்துவிட்டோம் என்ற நிறைவு.., கண்ணீர் பெருகியது.

"ம்ச்.., எதுக்கு அழணும்.." குழந்தையை வைத்துக்கொண்டு அவனால் நிஹாசினியை சமாதானம் செய்யக் கூட முடியவில்லை.

குழந்தையோ.., என்னை கவனி.., என குரல் கொடுக்க, அவனிடமிருந்து குழந்தையை வாங்கியவள்.., அவன் முன்பாகவே அவளுக்கு பசியாற்றினாள். ராஜா, சற்று சங்கடமாக அங்கிருந்து நகர முயல..., அவன் கரம் பற்றி தடுத்தவள், தன் அருகில் அமர வைத்தாள்.

நடப்பதை நம்ப முடியாமல் அவளைப் பார்க்க.., அவளோ.., தன் அருகில் அமர்ந்தவனின் தோளில் சாய்ந்து கொண்டாள். அதற்கு காரணம்.., மாலையில் அவன் பேசிய பேச்சா.., என்பது அவள் மட்டுமே அறிந்த உண்மை.

குழந்தை தன் பிஞ்சுக் காலால், அவன் காலை எட்டி உதைக்க.., மனைவியிடமிருந்து கலைந்தவன், மகளது காலை மென்மையாக பற்றிக் கொண்டான். ஒரு நொடி, தாயிடம் பால் குடிப்பதை நிறுத்தியவள், அடுத்த நிமிடம்.., தன் செய்கையில் அதிக கவனமெடுக்க.., தன் மகளிடம் ஏற்படும் வித்தியாசத்தை உணர்ந்தவளுக்கு.., தாய்மை பெருக்கெடுத்தது.

ராஜா குழந்தையோடு கீழே இறங்கி வரவில்லை என்பது உறுதியான பிறகே பெரியவர்களால் நிம்மதியாக தங்கள்

வேலையைப் பார்க்க முடிந்தது.

அதன் பிறகு வந்த நாட்களிலும் இருவரின் உறவில் முன்னேற்றம் இல்லை என்றாலும்..., பெரிதாக குழப்பங்களோ..., புதிய காயங்களோ இடம்பெறவில்லை. அதுவும் ஒரு வாரமே நீடித்தது.

குழந்தைக்கு பெயர்சூட்டும் விழா பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்ய.., குழந்தையின் நட்ச்சத்திரத்தின்படி..., 'அ' அல்லது 'ஆ' என்ற எழுத்தில் பெயர் வைக்க ஜோசியர் உரைக்க..., சேகர் குடும்பத்தில் பெண் குழந்தைகளுக்கு 'அலை' என பெயர் விடுவது வழக்கம்.

அந்த வழக்கத்தை மெய்ப்பிப்பதுபோல் அவரும் உரைக்கவே.., அதையே குழந்தைக்கு வைக்க ஆண்கள் முடிவெடுத்தார்கள். ஆனால்.., நிஹாசினியோ.., 'ஆராதனா..' என வைக்க வேண்டும் என உரைக்க, ஆண்கள் திகைத்தார்கள்.

தனா தன் மனைவியை ஏறிட..., "அதுக்கென்ன..., ஆராதனா அலை அரசி'ன்னு வச்சுடலாம்.., உனக்கு சம்மதமா...?" அவளிடம் கேட்க, அதற்கு அவள் மறுக்கவில்லை.

எங்கே இது பெரும் குழப்பமாகுமோ என ராஜா பயப்பட.., அது ஒன்றும் இல்லாமல் போனது. ஆனாலும்.., ராஜா குழந்தையை கொண்டுவந்து கொடுக்காமல் அவள் பசியாற்ற மறுப்பதும், அவனை அருகிலேயே இருக்கச் சொல்லி போராடுவதும் ராஜாவை பெரிதும் காயப்படுத்தியது.

முதலில்.., குழந்தையை தான் தூக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவள் இப்படி செய்கிறாள் என எண்ணியவனுக்கு..., நாட்கள் செல்லச் செல்ல, அவள் பிடிவாதம் அதிகரிக்க.., தவித்துப் போனான்.

ஒரு பெண்ணாக..., கணவனின் உடனிருப்பும், மகளது சொல்லாத விருப்பமும் பெரிதென தோன்றிய அவளுக்கு..., ஒரு ஆண்மகனான அவனது உணர்வுகள் புரியாமல் போனது விந்தையே.

உயிராய் காதலித்த பெண்ணை, தொடாமல் இருப்பதே அவனுக்கு பெரும் துன்பமென்றால்..., தாய்மையின் பூரிப்பில்..., தாய்மையின் வனப்பில் மிளிரும் மனைவியை.., தோள் வளைவில் தாங்குகையில் அவன் உணர்வுகள் கொந்தளிக்காமல் என்ன செய்யும்?

சில நாட்களில்..., 'போகிறேன்..' எனச் சொல்லும் அவனை, பிடிவாதமாக பிடித்து வைக்கையில்.., கைகளை கட்டிக்கொண்டு, தன் உணர்வுகளை கொன்று அமர்ந்திருக்க அவன் படாத பாடு பட்டான்.

பார்வைகள் அவள் முகம்தாண்டி பயணிப்பதை தடுக்கவும் முடியாமல், பாராமல் பார்க்கும் விஷயம்.., சூடேற்றுவதை தடுக்கவும் முடியாமல், எங்கே தன்னையும் மீறி அவளைத் தீண்டிவிடுவோமோ என்ற பயமும் சேர, உள்ளுக்குள்ளே போராடி தோற்றுப் போனான்.

தன் உணர்வுகளைக் கொல்லவென்றே இவ்வாறு செய்கிறாளா...? சில நாள் மனதுக்குள் வெதும்பிப் போனான். இதற்கு முன்னர் வார்த்தைகளில் காயப்படுத்தினால்..., இப்பொழுதோ.., செய்கையில் அதைச் செய்தாள். ஆனால்.., இதை அவள் அறியாமலே செய்தாள் என்பதுதான் உண்மை.

ஆனால்.., அவள் செய்த முதல் தவறு.., அவனை, இதையும் அந்த கண்ணோட்டத்திலேயே காணச் செய்தது. ஆனால்.., அவன் அறியாத உண்மை என்னவென்றால்..., அவன் அருகில் இருக்கும் வேளையில், பாலூறும் உணர்வை அவள் அதிகம் உணர்ந்ததே காரணம்.

அவன் அருகாமை ஏற்படுத்தும் கிளர்ச்சி..., அந்த நிம்மதி..., நிறைவு..., அவள் உடல்நிலையில் அவள் உணர, அவன் அருகாமையை அதிகம் நாடினாள். அதை அவள் அவனிடம் சொல்லாமல் போனதே முழு முதல் தவறாகிப் போனது.

அன்று குழந்தைக்கு பெயர் சூட்டும் நாள். பெரிய திருமண மண்டபத்தில் விழா ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அனைவரும் மண்டபத்துக்குச் செல்ல.., இறுதியாக அவர்களை கிளம்பி வரச் சொல்லி இருந்தார்கள். முன்னரே சென்று.., குழந்தை அழத் துவங்கிவிட்டால் கஷ்டமாகிவிடும் என்பதால் அவ்வாறு ஒரு ஏற்பாடு.

குழந்தைக்கு பருத்தி துணியில், இலகுவான ஆடையையே அணிவித்து இருந்தார்கள். குழந்தையின் கழுத்தில் ஒற்றை வைர சங்கிலி டாலடித்தது. நிஹாசினியோ.., அவளுக்கு நேர் மாறாக.., அடர் பிங்க் வர்ண பட்டில் ஜொலிக்க.., தாய்மையின் பூரிப்பும் சேர, தன் பார்வையை அவள்மேல் இருந்து திருப்ப மிகுந்த சிரமப்பட்டான்.

"கிளம்பலாமா...?" அவள் கேள்வியில் தன்னை மீட்டவன், அவளோடு கிளம்ப தயாராக, அவனது கம்பீரத்தில் தானும் தடுமாறிப் போனாள். படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை அவள் தூக்க, சரியாக அந்த நேரம் கண் விழித்தவள் சிணுங்கத் துவங்கினாள்.

குழந்தையை அவள் சமாதானம் செய்ய, அதை ஏற்காமல்.., அழுகையை பெரிதாக்கினாள்.
"ம்ச்.., இந்த நேரம் இப்படி படுத்தறாளே.." நேரமின்மை அவளை இவ்வாறு உரைக்கத் தூண்டியது.

"அதான் நாம இன்னும் கீழே இறங்கலையே.., பால் கொடு.." குழந்தையை அவள் பேசுவது அவனுக்கு தாங்க முடியவில்லை.

"ஆமா..., நீங்க ஈசியா சொல்லிடுவீங்க..., இப்போ.."
முனகியவள்..., தான் போட்டிருந்த உடையை அவஸ்த்தையாக பார்த்துக் கொண்டாள்.

சோபாவில் அமர்ந்தவள்..., ஜாக்கெட் ஹூக்கை விடுவிக்க, பழக்கமில்லாத தன்மை அவளை தாமதிக்கச் செய்தது. அது புரியாத குழந்தை, மடியில் படுத்து, தன் தேடலைத் துவங்க, தான் தேடியது கிடைக்காமல் போகவே அழுகையை அதிகரித்தாள்.

'ஏன்..?' அவ்வளவு நேரமாக அவள் பக்கம் திரும்பாதவன், குழந்தையின் அழுகையில் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவளோ..., எதையோ செய்ய முயன்று தோற்றுக் கொண்டிருப்பது புரிந்தது.

அதற்குள் குழந்தை அவள் வேலையைக் காட்டத் துவங்க..., வேகமாக அவள் அருகில் வந்தான்.

"என்ன ஆச்சு...?" குழந்தையை அவள் மடியில் இருந்து அளிக்கொள்ளவும் தயக்கம் மேலிட, ஒரு மாதிரி கேட்டான்.

"ம்..., பின்னாடி 'பின்'னை கழட்டினால்தான் முடியும் போல.." அவனைப் பார்த்து பரிதாபமாக விழிக்க, அவளது மெல்லிய குரலும், அவள் பார்வையும், அவள் எதைச் சொல்கிறாள் என்பதை அவனுக்கு உணர்த்த, அவன் இதயத்துடிப்பு தாறுமாறானது.

தன் தயக்கம் அவளை கோபப்படுத்திவிடக் கூடாதே என்ற அவன் பயமும் சேர, "நான்..., என்ன செய்யட்டும்..?" அவளிடமே கேட்டான்.

'ஆண்டவா..' முதல் முறையாக அவள் முகத்தில் அப்பட்டமாக

வெட்கம் கவிழ்ந்தது.

"ம்ச்..., இதுக்கு மேலே நான் என்ன சொல்ல..?" முகத்தை சற்று திருப்பி, பார்வையை அறைக்குள் சுழற்றினாள்.

குழந்தையின் அழுகை..., அவளது செய்கை..., அவனை அதற்குமேல் எதையும் யோசிக்க விடவில்லை. அவள் அருகில் அமர்ந்தவன், கைகள் சற்று நடுங்க, அவள் கேட்டதைச் செய்தவன், அங்கிருந்து எழ முயன்றான்.

"ம்ஹூம்.." அவளது மறுப்பு குரலில், அப்படியே அடங்கி அமர்ந்துவிட்டான். அதே நேரம்..., அவள் அருகாமையில் பலமாக தடுமாறிப் போனான். இதற்குமேல் முடியவே முடியாது..., என்பதுபோல் அவன் உணர்வுகள் போராட, அவள் அருகாமை ஏற்படுத்திய கிளர்ச்சி, அவளிடமிருந்து வந்த தாய்மை கலந்த வாசனை, அவனை பித்துகொள்ளச் செய்தது.

நிஹாசினியுமே சற்று நெகிழ்ந்து போயிருந்தாள். ஒரு மாதிரி அவஸ்த்தையான நிலை..., அவன் செய்கை ஏற்படுத்திய குறுகுறுப்பு..., அதையும் மீறி..., தோள் வளைவில் விழுந்த அவனது சூடான மூச்சுக் காற்று..., குழந்தையை அழுந்த பற்றிக் கொண்டு, அமைதியாக அமர்ந்திருந்தாள்.

சற்று நேரத்தில் குழந்தை உறங்கிவிட்டிருக்க..., அவர்களுக்குத்தான் அந்த மோன நிலையில் இருந்து பிரிய முடியவில்லை. அதுவும் ராஜா..., "குழந்தை தூங்கிட்டாளா..?" அவள் காதில், தன் இதழ் பட்டும் படாமல் தீண்டி கேட்க, "ம்.." மெல்லிய முனகலாக அவள் பதில் வெளி வந்தது.

"ஹாசினி..., என்னால்.." நீண்ட பல மாதங்களுக்குப் பிறகு, தன் உணர்வை வெளிப்படுத்தும் அவனிடம் அவளால் மறுக்க முடியவில்லை. குழந்தையை அவள் மடியில் இருந்து வாங்கி,

தொட்டிலில் கிடத்தியவன், அவளை தன் பக்கம் திருப்பி அவள் முகம் நோக்கினான்.

அரை விழி மூடி.., எதையோ எதிர்பார்த்து அவள் இதழ் துடிக்க.., தன் இதழ்களால் அவள் இதழ்களை அழுந்த மூடி, அதன் துடிப்பை அடக்க முயன்றான். முதலில் மென்மையாகத் தீண்டிய அவன் இதழ்கள், பின்னர் அழுத்தமாக புதைய.., அவன் தீண்டலுக்கு முதல்முறையாக முழுதாக ஒத்துழைத்தாள்.

அவளது அந்த செய்கை.., அவனை மேலும் தூண்ட..., அவள் இதழ்களுக்குள் பெரும் ஆராய்ச்சியே நிகழ்த்த, கரங்களோ.., எதையோ தேடி பயணித்தது. அவன் கரத்தின் பயணத்தை உணர்ந்தவள், அவன் சட்டை காலரை இறுக பற்றிக்கொள்ள, அவன் கரங்களோ.., தன் தேடலை கண்டுகொண்டது.

"ம்.." அவன் இதழ்களுக்குள் அவள் முனக.., அவனுக்கோ.., அவளை உணரும் வேகம். பிரிய மனமின்றி அவர்கள் முத்த யுத்தம் நீள.., மெல்லியதாகச் சிணுங்கி, அவர்களை நடப்புக்கு இழுத்து வந்தாள் அவர்களது செல்ல மகள்.

பட்டென அவனை விட்டு விலகியவள் பாத்ரூமுக்குள் புகுந்து கொள்ள..., ராஜாவுக்கோ.., கைக்கெட்டிய சொர்க்கம் நழுவிப் போன உணர்வு. அந்த நிலையிலும், தொட்டிலை மெல்லியதாக ஆட்டி, மகளை தூங்க வைத்தான் ராஜா.

ஒரு வாறு தன்னை சம்மாளித்தவள், பாத்ரூம் கண்ணாடியில் தன்னை ஆராய, அந்த பட்டுப்புடவை சற்று கசங்கித்தான் போயிருந்தது.

'திருடா..., பண்ற வேலையை சாட்சி இல்லாமல் செய்ய மாட்டியாடா..?' கணவனை முதல் முதலாக மனதுக்குள் செல்லமாக திட்டிக் கொண்டாள்.

‘இப்படியே எப்படிப் போக..?’ அவளுக்கு பெரும் தயக்கமாக இருந்தது. அதே நேரம், அந்த புடவையை மாற்றவும் மனம் வரவில்லை. ஒரு மாதிரி கிளர்ச்சியான மனநிலையில் இருந்தாள்.

எவ்வளவு நேரம்தான் அங்கே நிற்க முடியும்..? முடிந்த அளவுக்கு கைகளால் நீவி சுருக்கத்தை சரி செய்தவள்..., ஆழ மூச்செடுத்து தன்னை நிதானித்துக்கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

ராஜாவுக்கோ..., அவள் அங்கிருந்து வெளியே வரும் முன்னர்.., இதயம் தடதடத்தது. அவள் வெளியே வர..., அவன் பார்வை அவளைத் துளைத்தது. அவன் தன்னையே பார்ப்பதை உணர்ந்தவளுக்கு.., இயல்பாக இருக்க முடியாத ஒரு தடுமாற்றம்.

அவன் நெஞ்சுக்குள் புதையும் வேகம்.., அதை செய்ய இயலாத தன் வெட்கம், கோபத்தை கையில் எடுத்தவள், “கிளம்புற நேரத்தில் என் ட்ரஸ்ஸ இப்படித்தான் குட்டிச்சுவர் ஆக்கணுமா? இப்போ மத்தவங்க முன்னாடி நான் எப்படி போய் நிக்க?” அவனுக்கு முதுகுகாட்டியவள், குரலில் காட்டிய கோபத்துக்கு மாறாக, முகமோ செவ்வானமாய் சிவந்தது.

அவள் முகச்சிவப்பை அவள் எதிரில் இருந்த கண்ணாடி வழியாகக் கண்டவன், அது அவளது அதீத கோபத்தால் என தவறாக புரிந்து கொண்டான்.

தன் வாழ்வின் அழகான தருணங்கள் அனைத்தும் துன்பத்தில் முடியும் துயரம்..., அவனுக்கு நெஞ்சை அடைத்தது.

“வேற புடவை வேண்ணா மாத்திக்கறயா..?” தன்னை சம்மாளித்துக்கொண்டு கேட்க, பட்டென அவன் பக்கம் திரும்பி முறைத்தவள், குழந்தையை தூக்கிக்கொண்டு முன்னால்

நடந்தாள்.

அதன் பிறகு, மண்டபத்தில் அவனுக்கு எதைபற்றியும் சிந்திக்க நேரம் இருக்கவில்லை. விழா சிறப்பாக நடந்து முடிய.., ஆசுவாசமாக உணர்ந்தவனுக்கு, நிம்மதியை உணர முடியவில்லை.

'என் இதழ் தீண்டலை அவள் அப்படியொன்றும் வெறுக்கவில்லையே..., பிறகு ஏன்..?' இந்த கேள்வி அவனை வண்டாய் குடைந்தது.

தன் உணர்வுகளை அவள் உதாசீனம் செய்வது அதிகம் வலித்தது. ஒரு அட்டாக்கிற்கு பிறகு எதையும் எண்ணி வருந்தக் கூடாது என எண்ணினாலும், தன்னை மீறி அவன் மனம் சோர்ந்து போவதை அவனால் தடுக்க முடியவில்லை.

தொடர்ந்த நாட்களில்.., நிஹாசினியோ அவனது நெருக்கத்தை விரும்பினாள். சில நாட்களாக ராஜாவின் உணர்வுகள் அவளைத் தீண்டுகிறது தானே. என்னதான் இல்லை என காட்டிக் கொண்டாலும்.., கொண்டவனின் எண்ணம் அவளுக்கு புரியாதா என்ன?

அதுவும் அன்றைய முத்தத்துக்குப் பிறகு.., அவனிடமிருந்து, தங்கள் உறவுக்கான முன்னேற்றத்தை அவள் எதிர்பார்க்க, அவனோ.., தனக்குள் மருகிக் கொண்டிருந்தான்.

அதே நேரம்.., சில நாட்களாக நிஹாசினியின் பார்வை தன்னிடம் எதையோ சொல்லத் துடிப்பதை உணர்ந்தவனுக்கு.., அதை எப்படி அறிய என்றுதான் தெரியவில்லை. ஒருவேளை அது தன் மனதின் எதிர்பார்ப்போ.., என அதை அசட்டை செய்தான்.

இந்த நிலையில்தான் அவன் குழந்தையோடு அவர்கள் அறைக்குள் நுழைந்தான்.
நிஹாசினியின் பார்வை தன்மேல் பதிவதை கண்டவன்,

இன்றைக்கு எதையாவது அறிய முடியுமா..?' தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அப்பொழுதுதான் அவனுக்கு சட்டென அந்த யோசனை பளிச்சிட்டது. குழந்தையை அவளுக்கான கூண்டு கட்டிலில் கிடத்தியவன்.., மனைவியை ஓர விழியில் பார்த்தவாறே.., "ஹேய் பியூட்டி..." நிதானமாக அழைத்தான்.

அவ்வளவுதான்.., நிஹாசினிக்கு எங்கிருந்துதான் அவ்வளவு ஆத்திரம் வந்ததோ..., 'அதெப்படி.., எனக்கான பிரத்தியேக அழைப்பை.., அது தங்கள் குழந்தையே என்றாலும் அவன் அழைக்கலாம்..' இந்த பொசசிவ் குணம் தாறுமாறாக தலை தூக்க, என்ன சொல்கிறோம்..., எப்படிச் சொல்கிறோம் எனத் தெரியாமல் ஆத்திரத்தில் வெடித்தாள்.

"அவ குழந்தை..., அவகிட்டே போய்.." ஆங்காரமாக கத்தியவள், அங்கிருந்து விலக முயன்றாள்.

அவ்வளவுதான்.., இந்த வார்த்தைகளைக் கேட்ட ராஜாவின் மனம் வெடித்து சிதறியது.

'என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்.., குழந்தையைபோய்..' அவள் என்னவோ சாதாரண அர்த்தத்தில்தான் உரைத்தாள். ஆனால்.., இத்தனை நாட்களாக அவள் குத்திக் கிழித்த அதே அர்த்தத்தில் அவன் மனம் அதை மொழிபெயர்க்க, அங்கே அனைத்தும் தவறாகிப் போனது.

பகுதி - 36.

தன் செவிகளைத் தீண்டிய வார்த்தைகளை அவனால் நம்பவே முடியவில்லை. இத்தனைநாள் அவள் கோபம் தணிந்துவிடும், தன்னை புரிந்துகொள்வாள் என எண்ணிக் கொண்டிருந்தவனுக்கு.., இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகு,

அது சுத்தமாக அற்றுப் போனது.

இதற்குமேல் முடியாது.., இதை தெரிந்தே ஆக வேண்டும்.., வெடித்த மனதை முயன்று சீராக்கியவன்.., அவள் செல்லப்போவதை உணர்ந்து.., "ஒரு நிமிஷம் ஹாசினி.., என்ன சொன்ன.., அவ குழந்தையா.., ஏன் எனக்கு அது தெரியாதா...?" அவன் குரலில் இருந்த நிதானம்..., அவன் வார்த்தைகள் வெளிவந்த விதத்தில் இருக்கவில்லை.

"நீ சொன்னதற்கு என்ன அர்த்தம்னு தெரிந்தான் சொன்னாயா..?" அவன் கேள்வியிலும், கோபத்திலும் திகைத்துப் போனவளுக்கு சத்தியமாக எதுவும் புரியவில்லை.

"அப்படியென்றால்.., என்னை எந்த அளவுக்கு மட்டமாக, கீழ்த்தரமாக நினைத்திருந்தால் இப்படி ஒரு வார்த்தையை சொல்லியிருப்பாய்.." அவனால் தாங்கவே முடியவில்லை.

'நான் சொன்னதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்...?' அவளுக்கு எதுவும் புரியவில்லை.

"இதே வார்த்தையை ஒரு வருடத்துக்கு முன்னால் சொல்லியிருந்தாலே தாங்கியிருக்க மாட்டேன். ஆனா இப்போ.., இங்கே.., ரொம்ப வலிக்குது ஹாசினி.., அப்படியே ரணமா..." தன் நெஞ்சைத் தொட்டுக் காட்ட..., அவளுக்குள் சர்வமும் ஆடியது.

"ராஜ்.., நான்..." அவன் எதையோ தவறாக உணர்ந்துகொண்டான் எனப் புரிந்தவள், விளக்க முயல,

அவனோ, அவளைக் கண்டுகொள்ளாமல், "அன்னைக்கு, உன் இடத்தில் என் அம்மாவை சம்பந்தப்படுத்தி சொன்னப்போ..., என்மேல் தீராத ஆத்திரத்தில் சொன்னன்னு அதை எடுத்துகிட்டேன். கார்த்தியோடு பழகியதை நீ தவறா

நினைத்தப்போ..., கோபம்னு என்னையே நான் சமாதானம் பண்ணிகிட்டேன்.

"உன் தங்கையை கைநீட்டி அடிச்சப்போ..., உன்னோட ரணம் அதை செய்யத் தூண்டியதுன்னு என்னையே நான் தேற்றிகிட்டேன். ஆனா, இது..., இப்போ..., ஐயோ ஆண்டவா..., என்னால் இதை ஜீரணிக்கவே முடியலையே..." அவன் கதற, துடித்துப் போனாள்.

கால்கள் அவனிடம் விரையத் துடிக்க..., அவன் கண்களில் தெரிந்த விலகல், அதைச் செய்ய முடியாமல் அவளைத் தடுத்தது. அதே நேரம்..., 'எதற்காக இந்த விளக்கம்...? ஏன் இப்படி..?' என தவித்தாள்.

"அவ பச்சை மண்..., என் ரத்தம்..., அவளைப்போய்..." அவன் தலையிலேயே அடித்துக் கொள்ள..., அப்பொழுதுதான், தன் வார்த்தைகளை அவன் புரிந்துகொண்ட அர்த்தமே அவளுக்கு விளங்கியது.

'ஆண்டவா...' இன்னும் தன் நினைவு தப்பவில்லையா..? இதைக் கேட்டும் இன்னுமா நான் இருக்கிறேன்...' அவனிடம் உண்மையை உரைத்துவிடு, அவள் உள் மனம் போராட..., அவன் பேசிய பேச்சு ஏற்படுத்திய அதிர்ச்சியில் அவள் நாக்கு எழவில்லை.

"நான் ஒண்ணும் 'ரோக்' கிடையாது ஹாசினி. நான்..., நான்..., காமவெறி பிடித்த மிருகம் கிடையாது. இதை எப்படி உனக்குச் சொல்லி புரிய வைக்கன்னு எனக்குத் தெரியலை. ஏன்னா..., நான் உன்னிடம் நடந்துகொண்ட முறை அப்படி.." தன் செய்கையை வெறுத்து, வெதும்பினான்.

"நிஹாசினி..., என்ற உன் பெயரை கேட்ட அந்த நிமிஷம்..., ஆறு வருஷத்துக்கு முன்னால் எனக்கு அறிமுகமான ஒரு டீனேஜ்

பெண்ணின் நினைவு எனக்கு வந்தப்போ..., என்னையே என்னால் நம்ப முடியலை.

"அது நீயாகத்தான் இருக்க முடியும்னு என் உள்ளுணர்வு அடித்து சொன்னப்போ..., என் மனதுக்குள், அப்படியா நீ உறைந்து போயிருக்கிறாய் என நானே திடுக்கிட்ட நிமிடம் அது. அந்த நிமிஷம் முதல்..., உன்னை மனசார காதலித்தேன் ஹாசினி.

"என்னை முதல்நாள் நீ பார்த்து..., தடுமாற்றத்திலும், பயத்திலும், என்னை கைநீட்டி அடிச்சப்போ கூட, எனக்கு உன்மேல் கோபம் வரலை, மாறாக..., உன்னை எது இப்படி மாற்றியதுன்னு ஆராயத்தான் தூண்டியது. உன்னை பின்தொடர்ந்து, அதை கண்டுபிடித்து சரி செய்யும் வரைக்கும், என்னால் நிதானமாகவே நடக்க முடியவில்லையே.

"என் நண்பர்கள் ஒரு மணி நேரத்தில் கணித்தார்களே..., நான் அந்த அளவு உன்மேல் பயித்தியமாக இருக்கேன்னு.." அவன் சொல்ல, 'அப்படியென்றால்..., அதைச் செய்தது இவர்தானா...? அந்த தெருவில் அதன்பிறகு என்னை யாரும் நிமிர்ந்து பார்க்கக் கூட துணிந்தது இல்லையே..., எல்லாம் இவராலா..?' அவனை ஓடிபோய் அணைத்துக்கொள்ள அவள் உள்ளம் தவித்தது.

"என் எதிர்காலம், இன்பம், துன்பம், எல்லாம் நீதான்னு முடிவு பண்ணிட்டேன்.

"அது ஏன்..., எப்படி..? இப்படி எந்த ஒரு ஆராய்ச்சியும் நான் செய்யவே இல்லையே..., என் கண் முன்னால் தெரிந்தது எல்லாம்..., ஆறு வருஷத்துக்கு முன்னால்..., நான் பார்த்த அந்த பியூட்டி மட்டும்தான்..." அவன் சொல்லச் சொல்ல, அவள் கண்களில் அப்பட்டமான அதிர்ச்சி.

"அதற்குப் பிறகு..., ஒவ்வொரு நாளும், உன்னை நம்ம

ஆபீஸ்ல பாக்கும்போது.., நீ என் அருகிலேயே இருக்கும்போது.., உன்னோட வாழவே ஆரம்பிச்சுட்டேன்.

"என் காதலை உன்கிட்டே சொல்ல முன்னாடியே.., உன் அம்மாவிடம் சொல்லி என் காதலில் ஜெயிக்க போராடியவன் நான். என்னைப்போய்.." வார்த்தைகள் அவன் தொண்டையில் சிக்கித் திணறியது.

அவ்வளவுதான்.., அவன் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கத்தில்.., கை கால் அனைத்தும் சில்லிட்டுத்தான் போனது. 'இவர் காதல்.., எனக்கு முன்பே என் அம்மாவுக்குத் தெரியுமா..?' இதயம் தடதடத்தது.

"என் அம்மாவுக்கு அடுத்தபடியாக, என் மனதில் இடம்பிடித்த பெண் நீ மட்டும்தானே. அது உனக்கு புரியவே இல்லையா..? என் பேச்சு, சொல், செயல், பார்வை அத்தனையிலும் என் காதலை மட்டும்தானே வெளிப்படுத்தினேன்.

"அது உனக்குப் புரியவே இல்லையா? என் காதலை, என் மனசை, அவ்வளவு ஏன்.., என்னையே உனக்கு புரிய வைத்துவிட்டேன்னு நான் நினைத்தால், நான் என் காதல்ல தோத்து போயிட்டேன் ஹாசினி..., அதுவும் மொத்தமா தோத்துப் போயிட்டேன்..." ஓ வென கதறினான்.

'இல்ல...' அவள் உரைக்கத் துடித்த வார்த்தைகள், தொண்டைக்குழியை விட்டு வெளியே வரவில்லை.

"உன்மேல் நான் வைத்திருந்த நேசத்தை, உன்னைச்சுற்றி இருந்த அத்தனைபேருக்கும் புரிந்தது. என் வீட்டில் இருந்த அனைவருக்கும் புரிந்தது..., ஆனா.., உனக்கு மட்டும் புரியவே இல்லையா? இல்ல.., புரிய முயற்சியே பண்ணலையா...?" வேதனை அவன் நெஞ்சை அறுத்தது.

தளர்ந்து, தகர்ந்துபோய் அமர்ந்தான். அவனது அந்த தோற்றம்..., அவள் மனதைபோட்டு பிசைய, அவன் அருகில் நெருங்க அவள் கால்கள் தவித்தது. ஆனால்.., வேரோடிப்போன கால்களை நகர்த்தவே அவளால் முடியவில்லை.

"உன் அனுமதி இல்லாமல் உன்னை எடுத்துக்கொண்டது தவறுதான்..., அதை நான் எப்பொழுதுமே நியாயப்படுத்த முடியாது.., கூடாது..., ஆனா.., இந்த ஆனா மட்டும்தான்..." குமுறிய அவன் உணர்வுகளை எச்சில் கூட்டி விழுங்கியவன்,

"ஹாசினி..., கிட்டத்தட்ட ஒரு வருஷமா மனதுக்குள் வாழ்க்கை நடத்திய பெண், அன்னைக்கு அவளை பெண் பார்க்கப் போகிறேன்.., அடுத்த மாதத்தில் அவள் என் மனைவி என்ற உரிமை கொடுத்த வேகம்..., அதன் தாக்கம்...

"காலைமுதல், என் மனம் பறந்த விதம்.., அன்னைக்கு.., 'தயவு செய்து என் பார்வையில் கூட விழாதேன்னு..' நான் சொல்லும் அளவுக்கு என் மனம் உன்னை நாடியது. அந்த நேரம்.., அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்வுகள்...

"ஒரு நிமிஷம்.., நீ என்னைவிட்டு மொத்தமாக போய்விட்டாயோ.., என் உயிர் பதறியதை வார்த்தையால் சொல்லவே முடியாது. நீ கண்விழித்து பார்த்த அந்த நிமிஷம்.., என் வாழ்வில் நான் பலவீனத்தில் வீழ்ந்து போனேன்.

"அதற்கு.., உன் அழகும் ஒரு காரணம் என்பதை நான் மறுக்க முடியாது. உன் அழகு என்னை நிலைகுலைய வைத்து விட்டது. என்னை அடிமைப்படுத்திவிட்டது. என்னை மீறி.., எனக்கு உடைமையானவள் என்ற எண்ணம் ஏற்படுத்திய தாக்கத்தில் மூழ்கித்தான் போனேன்.." ஒரு நொடி, அந்த காலத்துக்கே அவன் சென்றதுபோல் இருந்தது.

“அது எவ்வளவு பெரிய தப்புன்னு எனக்கு புரிய வந்தப்போ..., எல்லாமே கைமீறி போய்டுச்சு ஹாசினி...” அவனது கதறல் பலமடங்காகிப் போனது.

அவனை என்ன சொல்லி தடுப்பது, தேற்றுவது எனத் தெரியாமல் திகைத்தாள். “ராஜ்...” அவன் அழுகையை தாங்க முடியாமல் அவள் அழைக்க,

அவனோ.., அதைக் கண்டுகொள்ளாமல்..., தேகம் குலுங்க அழுதவன்.., அழுகையோடு அவளை ஏறிட்டான். “ஆனா.., ஒண்ணு மட்டும் உண்மை ஹாசினி.., நீ கேட்டியே, அந்த நேரம், அந்த இடத்தில், உன் இடத்தில் யாராக இருந்திருந்தாலும் இப்படித்தான் நடந்திருப்பாயா என்று.., என் தாயின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். அந்த இடத்தில் மட்டுமல்ல.., இந்த உலகத்தில் இருக்கும் ஒட்டுமொத்த பெண்களும், பிறந்த மேனியாக வந்தால் கூட, என் கண்கள் உன் அழகை மட்டும்தான் தேடும்.., ரசிக்கும்.

“ஏன்னா.., நான் உன்னை மட்டும்தான் விரும்பறேன் ஹாசினி. நான் உன்னிடம் மட்டும்தான் என் உணர்வுகளை என்னால் பகிர்ந்துகொள்ள முடியும். ஐ’ம் நாட் அ ஸ்ட்ரீட் டாக்...” இந்த இடத்தில் வெடித்திருந்தான்.

“ராஜ்...” அவனை அமைதிபடுத்த முயல, அதை உணரும் நிலையில் அவன் இருக்கவில்லை.

“அதே மாதிரி.., உன்னை நான் ஏமாற்றிவிட்டேன்னு நீ சொன்னப்போ.., அப்படி இல்லைன்னு கத்தணும் போல் இருக்கும். ஏன்னா...? நிஜமாகவே நான் உன்னை மனசால் கூட ஏமாற்ற நினைக்கலை ஹாசினி. அந்த நிகழ்வுக்கு பிறகு..., அடுத்தநாள் காலையில்..., பல் கூட விளக்காமல்.., உன் வீட்டு வாசலில் காவல் இருந்தேன்.

“உனக்கு ஜுரம்னு உங்க அம்மா சொன்னப்போ.., அறைக்குள் நுழைந்து உன்னை காணும் வேகத்தை கட்டுப்படுத்த நான் எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா? வினோ.., ‘அக்கா.., மாமா வந்திருக்காங்கன்னு..’ சொன்னதுக்கு.., நீ சொன்ன வார்த்தை.., எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கு ஹாசினி.

“அன்னைக்கு ஏதோ கோபத்தில் பேசுறன்னு நானும் நினைத்தேன். அடுத்தடுத்த நாட்களில்.., உன் வீட்டுப் படியேறியதை..., உன் வீட்டுப் படிகளிடம் கேட்டால் அது சொல்லும்..., எத்தனைநாள் போராட்டம்.., எத்தனைநாள் தவம்.., எதுவுமே முடியாமல் போனபோதுதான்.., என் அம்மா வந்தாங்க...” அடுக்கடுக்காக அவன் வாயில் இருந்து வந்த உண்மை.., தன் அடிப்படை கோபத்துக்கே காரணமின்றி போனதை உணர்ந்தவளுக்கு, நிம்மதியோடு.., பெரும் கலக்கமும் குடி கொண்டது.

‘அவன் தாயிடம் காதலைச் சொன்னது..., பெண் பார்க்கும் படலம்.., அடுத்தநாள் காலையிலேயே அவன் வந்த உண்மை.., முகத்தில் உண்மை அறைந்தது.

“இத்தனைநாள்.., உனக்கு என்னை புரியவைக்க முயற்சி செய்தேன். அது மொத்தமும் வீண்னு எனக்குப் புரிய வச்சுட்ட. இதற்குமேல் என்னால் முடியாது ஹாசினி.

“உன்னைவிட்டு சிலநாள் விலகியிருந்தால் உன் கோபம் சரியாகிவிடுமா..? நீ உரைதாற்போல்.., நான் தண்டனையை ஏற்றுகொண்டால் என் வாழ்க்கையில் வசந்தம் வீசிவிடுமா என்ற எதிர்பார்ப்பிலும், ஆசையிலும்தான், என்ன ஆனாலும் பரவாயில்லை என்று ஸ்டேஷன் போனேன்.

“ஆனா.., அங்கே சீனி இருப்பது எனக்கு சத்தியமா தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால், பிறகு நான் போயிருப்பேன். அதற்கும் நீ என்மேல் நம்பிக்கை இல்லாமல் சொன்னப்போ.., நான் கொஞ்சம் கொஞ்சமா

செத்துட்டேன் ஹாசினி...” முழு விரக்தியில் பேசியவன், உண்மையாகவே சிதறிப்போனது அவன் வார்த்தைகளில் தெரிந்தது.

“கவிப்பேரரசு வைரமுத்து சொல்வார்..., ‘ஆடைக்குள் நிர்வாணம் தேடுவது காமம்..., நிர்வாணத்துக்கு ஆடை தேடுவது காதல்ன்னு’ என்றைக்குமே உன் ஆடைக்குள் இருக்கும் நிர்வாணத்தை நான் தேட முயன்றது கிடையாது. அன்று.., உன் நிர்வாணத்துக்கு நான் ஆடையாக மாறினேன் என்பது மட்டும்தான் உண்மை ஹாசினி...” அவன் தொண்டை அடைத்தது.

அவன் வார்த்தைகள் அவளுக்குள் இறங்கி, பெரும் சிலிர்ப்பை ஏற்படுத்தியது. தன் காதலை, இதைவிட மேன்மையாக யாரும் உணர்த்திவிட முடியாது என்றே தோன்றியது.

“அன்னைக்குச் சொன்னியே.., உன் நம்பிக்கையை நான் கொன்னுட்டேன்னு இல்ல ஹாசினி.., இப்பவும் நான் அதே ராஜாதான். அதைவிட, ஒருபடி மேலாகத்தான் இருக்க ஆசைப்படறேன். ஆனா நீ..., என் தவறுக்குள் மட்டும் சிக்கிட்டு.., அதில் இருந்து வெளியேவர மாட்டேன்னு அடம் பிடிக்கற.

“இங்கே..,மனசு என்னமோ பண்ணுது ஹாசினி.., ரணமா.., பாரமா...” அவன் கண்களில் அப்பட்டமான வலியோடு அவளை ஏறிட.., பாய்ந்தோடி வந்தவள், அவன் அருகில் மண்டியிட்டு, அவன் கரத்தை பற்றிக் கொண்டாள்.

அவனை ஒரு கம்பீரமான ஆண்மகனாகவே பார்த்துப் பழகியவளுக்கு, அவன் உள்ளுக்குள் சிதறியிருப்பதை காண முடியவில்லை.

“நான் தரை மட்டத்துக்கு உன்கிட்டே இறங்கிப் போயாச்சு.., உன் காலில் கூட விழுந்துட்டேன்.. இதற்குமேல் என்ன செய்யன்னு எனக்குத் தெரியலை. என் மென்மையான உணர்வுகளை, உனக்கான தேடலை, தாபத்தை, ஆசையை, ஒவ்வொரு முறையும் உன்னிடம் கொட்டி, அதை நீ உதாசீனப்படுத்துவதை பார்க்கும்போது...,

"உன் அருகாமையை நீயே ஏற்படுத்துவதும், என் தடுமாற்றத்தை தவிப்பை அதிகரித்து..., என் மனசை கட்டிவச்சு அடிச்சு, அடிச்சு.., இப்போ என் உணர்வும் மரத்துப்போச்சு ஹாசினி..., ஆனா அந்த வலி மட்டும்..., பச்சைப் புண்ணா வலிக்குது..." தன் முன்னால் மண்டியிட்டவளிடம் அதீத வலியில் புலம்பினான்.

"ராஜ்.., நான் ஏதோ கோபத்தில்..., கொஞ்சம் அமைதியா இருங்களேன்.., நான் சொல்வதை ஒரு நிமிஷம் கேளுங்க.." அவன் கன்னம் தாங்க, அவன் அந்த உலகத்திலேயே இல்லை என்பதை அவனது அடுத்த வார்த்தைகள் அவளுக்கு நிரூபித்தது.

"உனக்கு என்னை பிடிக்கவே இல்லையா ஹாசினி.., என்னால் இதை நம்பவே முடியலை. உன் காதலை இந்த நிமிஷம் வரைக்கும் நீ சொல்லாதபோதும், உன் கண்களில் அந்த காதலை, என் அருகில் ஒரு பாதுகாப்பை நீ உணர்வதை நான் உணர்ந்திருக்கிறேன் ஹாசினி.

"ஆனா.., இப்போ..., நீ நடந்துகொள்ளும் முறையைப் பார்க்கும்போது.., நான் முழுசா தப்பு பண்ணிட்டேனா...? விருப்பமே இல்லாத பெண்ணை நான் தொட்டுவிட்டேனா? அப்படியென்றால்..., என் காதலை உனக்கு உணர்த்துவதற்கு பதிலா.., உன்னை வேட்டையாடிவிட்டேனா..." அவன் விடாமல் புலம்ப, பயந்தே போனாள்.

"இல்லம்மா.., அப்படியெல்லாம் இல்லை. நான் மறுத்திருந்தால் நீங்க என்னை தொட்டிருக்க மாட்டீங்க.., நான்தான் மறுக்கவே இல்லையே.." அவனை தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

அவன் கன்னம் தாங்கியவள், தன் இதழ்களால் அவன் முகம் முழுக்க ஒத்தடம் கொடுத்தாள். தன் செய்கை அவனை தேற்றிவிடாதா என்ற எதிர்பார்ப்பும், ஆசையும் அவளிடம் போட்டி போட்டது. தன் நேசத்தை அவனுக்கு உணர்த்திவிடும் வேகம்..,

அன்று எங்கே உன் காதலை காட்டு என சொன்னபொழுது, அவன் முத்தமிட்ட பொழுது, உன் இச்சையை தீர்த்துக் கொள்ள முயலுகிறாயா?' என கேட்டது எவ்வளவு பெரிய அபத்தம் என அவள் உணர்ந்த நொடி.., கண்களில் கண்ணீர் பெருக, மீண்டுமாய் அவனை முத்தமிட்டாள்.

'வாழ்க்கை உன் கையை விட்டு போகும்போது தெரியும்..' தாயின் வார்த்தைகள் காதுக்குள் ஒலிக்க, அதை தடுத்துவிடும் வேகத்தில் அவனை அணைத்துக் கொண்டாள்.

ஆனால்.., காலம் கடந்துவிட்டது என்பதை அவளுக்கு யார் சொல்லி புரிய வைக்க? அதை ராஜாவின் அடுத்த வார்த்தைகள் புரிய வைத்தது.

"இதற்குமேல் என்னால் போராட முடியாது ஹாசினி.., நான்.., நான் போறேன். ஒரேடியா.., இந்த உலகத்தை விட்டு, உன்னை விட்டு.., நம்ம.., பொண்ணை விட்டு.., ஆ.., ஆ.." அவன் கைகள் இதயத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டன.

"போய்டு.., இங்கே இருந்து போய்டு.., அவளை கைகளால் விலக்கித் தள்ளியவன்.., வேகமாக எழுந்து நின்றான். அந்த நேரம் கூட, அவள் இதழ் தீண்டல் அவனை சற்று ஆறுதல் படுத்துவதை உள்வாங்கியவன், தனக்கு நேரும் பெரும் தாக்கமும் புரிய, எங்கே அவள் தன்னோடு இருந்தால், தனக்கு ஏதாவது நேர்ந்து, அந்த பழி அவள்மேல் விழுந்துவிடுமோ என அஞ்சினான்.

அந்த நேரம், அவன் நினைப்பை சரியாக உணர்ந்து கொண்டவளுக்கு, அவன் காதலின் அளவு புரிய, 'இந்த காதலுக்காகவாவது இவரை நான் வதைக்காமல் இருந்திருக்க கூடாதா..?' மனதுக்குள் மருகியவள்,

"ராஜ்.., ராஜ்.., இல்ல.., இல்ல.., உங்களால் என்னை விட்டு போக முடியாது.." அவனை தெளிய வைக்க முயன்றாள். அவனுக்கோ அவள் பேச்சு எட்டவே இல்லை.

"கடைசியா..., முடிஞ்சால் என்னை மன்னிச்சுடு ஹாசினி.." அவளை

விட்டு விலகி, எழுந்தவனால் நிற்க முடியாமல், வேரறுந்த மரம்போல் தடாலென தரையில் விழுந்தான்.
அவ்வளவுதான்.., சர்வமும் துடிக்க.., "ராஜ்.." வீறிட்டவள்.., அவன் அருகில் ஓடி, அவன் தலையை மடியில் தாங்கினாள்.

அவள் கதறலை அவன் உணர்ந்ததாகவே இல்லை. "நான் ரோக் கிடையாது ஹாசினி.., நான் மனதாலும் உடலாலும் தீண்டிய ஒரே பெண்ணும், கடைசி பொண்ணும் நீதான்.., நான் ரோக் இல்லை.." சொன்னதையே திரும்பத் திரும்ப சொன்னவன்.., தரையில் விழுந்த மீனாக துடித்தான்.

அவனுக்கு அதிகமாக துடித்தவள்..., அவனது புலம்பலை நிறுத்தும் வழி தெரியாமல் பதறிப் போனாள்.

ஆனாலும்.., அவனை இப்படியே விட முடியாமல்.., அவனது இறுதி எண்ணத்தை மாற்றும் விதமாக, "ராஜ்.., ராஜ்.., ராஜ்.." அவன் கன்னத்தில் பலம் கொண்ட மட்டும் அறைந்து, அவனை தன் பக்கம் திருப்பியவள், அவன் பார்வை அவள் கண்களை சந்திக்கவே..,

அவசரமாக.., "இங்கே பாருங்க.., நீங்க என்னை விட்டுப் போனால்.., நானும் உங்களோடவே வந்துடுவேன். நீங்க இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லை...

"நம்ம பொண்ணை தொட்டு தூக்கலைன்னு வருத்தப்பட்ட நான் எப்படி இப்படி ஒரு அர்த்தத்தில் வார்த்தையை பேசுவேன்னு நீங்க நம்புனீங்க? சொல்லுங்க ராஜ்.." அவள் கேள்விக்கு அவன் பதில் சொல்லும் நிலையில் இல்லை.

அதே போல்.., அவள் வார்த்தைகள் அவனுக்குள் இறங்கியதா என்பதுவும் அவளுக்குப் புரியவில்லை. மாறாக.., புழுவாய் துடித்தவன், வியர்வையில் முக்குளிக்க.., அதுவே சொன்னது.., அவனுக்கு நேர்வது இன்னதென்று.

கண்களும் செருக.., தலை துவள அவன் சரிய.., இந்த உலகத்தில்

இருந்து தன் பயணத்தை முடிக்கத் துவங்கியிருந்தான் ராஜ்.

முதல்பாகம் நிறைவடைந்தது.....